பிள்ளைப்பிணி மருத்துவம்

ஆசிரியர்
மரு. அ. சுந்தர்ராசன். பி.ஐ.எம்.
ஆய்வு மருத்துவ அலுவலர்

இந்திய மருத்துவம்
மற்றும்
ஓமியோபதி இயக்ககம்
சென்னை – 106.

பிள்ளைப்பிணி மருத்துவம்

(பாகம்-1)

பதிப்பாசிரியர்
மரு. அ.சுந்தரராசன் பி.ஐ.எம்.,
ஆய்வு மருத்துவ அலுவலர்

இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதி இயக்ககம், சென்னை-106.

- 1993 -

முதற்பதிப்பு: 1993

மின் அச்சுக்கோர்ப்பு: சுமதி லேசர்ஸ், சென்னை-6. போன்: 8273427

அச்சிட்டோர்: டான்சி அச்சகம், கிண்டி, சென்னை-32.

முத்தமிழ்க் காவலர்
கி.ஆ.பெ.விசுவநாதம்
தலைவர்,
தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம்,
சென்னை - 600 106.

அணிந்துரை

சென்னை சித்த மருத்துவத்துறை ஆய்வு மருத்துவ அலுவலர் மரு.அ.சுந்தரராசன், பி.ஐ.எம்., அவர்களால் எழுதப்பெற்ற ''பிள்ளைப் பிணி மருத்துவம்'' என்ற நூல் என் பார்வைக்கு வந்தது. படித்து மகிழ்ந்தேன். நூல் முழுவதும் குழந்தைகளின் பிணிகளையும், அவற்றை ஆய்வு செய்யும் முறைகளையும், அவற்றிற்கு ஏற்ற மருத்துவ முறைகளையும் காணலாம்.

உலகத்தின் தொன்மையான மருத்துவம் சித்த மருத்துவம். மற்ற மருத்துவங்களுக்கு இன்ன காலத்தில் இன்னாரால் தோற்றுவிக்கப் பெற்றது என்ற வரலாறு உண்டு. நமது சித்த மருத்துவத்திற்கு வரலாறு இல்லை. வரலாற்றுக் காலத்திற்கு அப்பாற்பட்டது. ஏதேனும் கூறவேண்டுமானால், சித்த மருத்துவம் தோன்றிய காலம் தமிழகத்து மண்ணில் செடி கொடிகள் தோன்றிய காலம் என்றே கூறியாக வேண்டும்.

சித்த மருத்துவம் என்பது சித்தர் பெருமக்களால் கூறப்பெற்ற ஒன்று. சித்தர்கள் தமிழகத்துச் சான்றோர்களாகிய நம் முன்னோர்கள். அவர்கள் இவ்வுடலை யானையைப் போலப் பெருக்கிக் காட்டியும், எறும்பைப் போல சிறுத்துக் காட்டியும், இரும்பைப் போல் கனத்துக் காட்டியும், காற்றைப் போல் எளிதாக்கிக் காட்டியும், நீர்மேல் நடந்தும், நெருப்பின் மேல் துயின்றும், வானத்தில் பறந்தும், கூடு விட்டுக் கூடு பாய்ந்தும் வாழ்ந்த பெருமக்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னையே மக்களுக்கு வருகின்ற நோய்களையும், அவற்றைத் தீர்க்கும் மருந்துகளையும் எவ்விதக் கருவிகள் மூலமும் அறியாமல் ஞான மார்க்கத்தின் மூலமே அறிந்து கண்ட முறைகளே சித்த மருத்துவ முறைகளாகும்.

அவற்றிலும் பத்துப் பன்னிரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வரும் பிணிகளை (அச்சரம், வாந்தி, விக்கல், பொருமல், குடற்கிருமிகள், கோழைக்கட்டு, இருமல், கக்குவான், இளைப்பு, இரைப்பு, காமாலை, சுரம், சன்னி, அடிதள்ளல்) மிகவும் துருவி ஆராய்ந்து இவற்றையும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சித்தர் பெருமக்கள் தமிழ் மொழியில் கவிதைகளாக ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்து சென்றிருக்கிறார்கள்.

இவற்றில் அழிந்தனபோக எஞ்சிய சில சுவடிகளை இந்நூலா சிரியர் துருவி ஆராய்ந்து அவற்றை முதலில் உரைநடையாகவும், அடுத்துக் கவிதையாகவும் எடுத்துக்காட்டி எழுதி உதவிய நூலே இந்நூல். இதற்கு முன்பும் இத்துறையில் ''பாலவாகடம்'' என்னும் நூல் வெளிவந்துள்ளது. அப்பெயரைத் தமிழில் மொழிபெயர்த் தால் குழந்தை மருத்துவம் எனப் பெயர் பெறும்.

தமிழக அரசின் சித்த மருத்துவத் துறையில் 'குழந்தைப் பகுதி'' என்றும் ஒரு துறை உண்டு. அத்துறையில் உள்ள மருத்துவர் களுக்கும், மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் இந்நூல் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்நூலின் ஒவ்வொரு தலைப்பிலும் உள்ள செய்திகள் நம்மை வியப்படையச் செய்கின்றன. நடையில் எளிமையும், சொல்லில் இனிமையும், கருத்தில் ஆழத்தையும் கொண்டு திகழ் கின்றன.

ஆசிரியர் மரு. அ.சுந்தரராசன், பி.ஐ.எம்., அவர்கள் இன்னும் இதுபோன்ற நூல்கள் பலவற்றைத் துருவி ஆராய்ந்து எழுதி தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கி உதவ வேண்டுமெனவும் தமிழக மக்கள் அவற்றைப் பயன்படுத்திப் பலனடைய வேண்டுமெனவும் வேண்டிக் கொள்கிறேன்.

தி.வ.2025 தை 7
திருச்சிராப்பள்ளி-8

(கி.ஆ.பெ.விசுவநாதம்)

ச. அன்சர் அலி, இ.ஆ.ப.,
இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
இயக்ககம், அரும்பாக்கம்,
சென்னை-600 106.

வாழ்த்துரை

பிள்ளைப்பிணி மருத்துவம் என்னும் இந்நூல் தெள்ளு தமிழ் கவிதையாய் ஏட்டில் பொதிந்து இருந்த மருத்துவ கருத்து மலர்களைத் தொகுத்து, அள்ளிப் பருக ஆர்வமுடையோர் நெஞ்சங்களில் என்றும் நிலைபெறும் வண்ணம் இந்நூல் அமைந்துள்ளது. மருத்துவம் அறிந்தவர் மட்டுமின்றி மற்றோரும் அறியும் வகையில் விளக்கவுரையுடன் திகழ்வது இந்நூலுக்குக் கிடைத்திருக்கும் தனிச் சிறப்பாகும்.

இந்நூல் ஒரு புது முயற்சியின் விளைவு. பழந்தமிழ்ச் சித்தர்களின் புகழுக்குச் சூட்டப்படும் மற்றுமொரு மணி மகுடம்.

சித்த மருத்துவத்திற்கு என எண்ணில் அடங்கா சிறப்புகள் உண்டு. எனினும் முக்கியமாக மூன்று சிறப்புகளைக் கூறலாம். அவை,

1. உப்புக் கல்லைப்போன்ற எளிமையும்

2. கற்கண்டைப்போன்ற இனிமையும்

3. வைரக்கல்லைப்போன்ற உறுதியுமாகும்.

இந்நூலில் இத்தன்மைகளை ஆங்காங்கே பல்வேறு பகுதி களில் காணமுடிகிறது என்பது மட்டுமில்லாமல் அவசியம் கருதி அலோபதி (நவீன மருத்துவ) முறையையும் இணைத்து எழுதி இருப்பதையும் காணமுடிகிறது. இது பாராட்டுக்குரிய பணியே.

அச்சரம் முதல் அடித்தள்ளல் வரை ஒவ்வொரு நோயையும் அதன் வேறு பெயர்களுடன் குறிகுணங்கள் மற்றும் அவற்றிற்குரிய மருத்துவ முறைகள் என தனித்தனித் தலைப்புகளில் வகுத்தும் முறையாகத் தொகுத்தும் இந்நூலை உருவாக்கியிருப்பது பெரிதும் போற்றப்பட வேண்டியதாகும்.

தொன்மைமிக்க சித்த மருத்துவத்தின் சிறப்புகளில் சிறு துளிதான் இந்நூல். எனினும் வன்மை குன்றா வரலாற்று மருவலாக இது ஒளி விடுகின்றது எனக் கூறுதல் மிகையன்றோ.

இந்நூலில் கையாளப்பட்டிருக்கும் சொல்லாட்சி காலத்தை வென்று நின்று நிலைக்கும் என்பதற்கான சாட்சி. இத்தகைய அனைத்துப் புகழுக்கும் அடிப்படை சித்த மருத்துவத்தின் மாட்சி.

தடைகள் பல தாண்டி சுவடிகளிலும் கையெழுத்துப் படிகளி லும் முடங்கிக் கிடந்த மருத்துவ முறைகளை இந்நூல் வாயிலாக மக்களின் மனக் களஞ்சியத்தில் கொண்டு சேர்க்கும் இப்பணியை தொடங்கி வைத்திருக்கும் சீரிய முயற்சியை நான் வாழ்த்துகிறேன்.

தொய்வின்றி பணியாற்றும் இவ்வியக்கக ஆய்வு மருத்துவ அலுவலர் மரு. அ.சுந்தரராஜன், பி.ஐ.எம்., அவர்தம் அரிய முயற்சிக்குத் துணைநின்ற தமிழ்ப் புலவர்கள், சுவடி நகல் எடுப் போர், அரசு அலுவலர்கள் ஆகியோர் அனைவருக்கும் வாழ்த்து களை வழங்குவதில் நெகழ்வு அடைகிறேன்.

இந்நூலைக் கற்போர் பட்டியல் கணக்கிலடங்காது காலங்கால மாய் பெருகி வளரட்டும் என வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

ச. அன்சர் அலி, இ.ஆ.ப.,

மரு. அ. சுந்தரராஜன், பி.ஐ.எம்.,
ஆய்வு மருத்துவ அலுவலர்,
இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதி இயக்ககம், அரும்பாக்கம்,
சென்னை-600 106.

பதிப்புரை

பிள்ளைப்பிணி மருத்துவம் பாகம்-1 எனும் இந்த நூல் ஒரு தொகுப்பு நூலாகும். பலர் மனதில் கருத்தாயும் சிந்தனையாயும் இருந்து பல்வேறு முயற்சிக்குப் பின்னர் நூலாக்கம் பெற்றுள்ளது. இதில் குழந்தைப் பிணிகள் பற்றி கூறப்பெறுகிறது. பிறந்தது முதல் 12 வயது முடியவுள்ள குழந்தைகளின் நோய்கள், தோன்றுவதற் கான காரணம், நோய் பற்றிய விளக்கம், அதைத் தீர்ப்பதற்கான மருந்துகள் ஆகியன பற்றி விவரிக்கிறது இந்நூல்.

பிள்ளைப்பிணி பற்றிய பழம்பெரும் ஓலைச்சுவடிகள், அரிய கையெழுத்துப்படிகள், நூல்கள் ஆகியவற்றிலிருந்து இந்நூற் கருத் துக்கள் பெறப்பட்டுள்ளன. நமது இந்திய மருத்துவ இயக்கக நூல்கள், ஓலைச்சுவடிகள் மட்டுமின்றி வேறு சில நூலகச் சுவடி கள், நூல்கள் ஆகியனவும் இந்நூல் தொகுக்க உறுதுணையாய் நின்றன.

பாடல், உரைநடை இரண்டும் இந்நூலில் தரப்பட்டுள்ளன. கற்போரின் எளிமைக்காக முதலில் உரைநடையும் பின்னர் அதற் கான பாடல் பகுதியும் தரப்பட்டுள்ளது.

மருத்துவம் அறிய விரும்புவோர்க்கும், பொதுமக்கட்கும் உரைநடைப் பகுதி பயன்படும். சித்த மருத்துவ மாணவர்கட்கும், ஆய்வு செய்யும் மருத்துவர்க்கும் உரைநடைப் பகுதியோடு பாட லும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மனித செரிமனப் பாதை வழியாக இதில் பேசப்படும் குழந்தை நோய்கள் அமைக்கப்பட்டுள்ளன. அச்சரம், வாந்தி, விக்கல், பொருமல், குடற்கிருமிகள், கோழைக்கட்டு, இருமல், கக்குவான், இளைப்பு, இரைப்பு, காமாலை, சுரம், சன்னி, அடிதள்ளல் என்ற பதினான்கு நோய்கள் பற்றி இந்நூலில் பேசப் படுகின்றன. பிற நோய்களைப் பற்றியும், அதற்குரிய மருத்துவத் தைப் பற்றியும் வெளிவர இருக்கும் ஏனைய பகுதிகளில் காண லாம்.

ஒவ்வொரு நோயும் வேறு பெயர், இயல், நோய் வருவழி, குறிகுணம், மருத்துவம், மருந்து என்ற தலைப்புகளில் விளக்கப் பெற்றுள்ளது. மருந்துகள் பலவாக அமைவதால் அவை சாறு, குடிநீர், கற்கம், என்ற முறையில்,

உள்மருந் துசுரசஞ் சாறுகுடி நீர்கற்க
முக்கனி யடையோர் சாமம்
உயர்சூர ணம்பிட்டு வடகம்வெண் ணெய்நான்கி
னுயிர்மூன்று திங்க ளாகும்.

விள்மணப் பாகுநெய் ரசாயன மிளகுநால்
மேவுமறு திங்க ளெண்ணெய்
விரலிடுமு யர்ந்தமாத் திரைகடுகு பக்குவம்
மிளிருதே னூறல் தீநீர்

கொள்ளாறு மோராடுண்டு மெழுகொடு குழம்பைந்து
கொப்பதங் கம்பத் தாகும்
குருதிபொடி யெழுபானோ டைந்தாண்டு நீறுகட
டுருக்குக் களங்கு நானூ.

வெள்ளிடாச் சுண்ணம்ஐந் நூறுகற் பஞ்சத்து
குருகுளிகை மிக்கா யுளென்
றெவருமகிழ் சித்தர்முப் பத்திரன் டாகமருந்
திசைத்தவா யுள்ளன வரோ.

என்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்பு முறை குறிப்பிட்ட மருந்தின் ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. குறைந்த ஆயுட் காலமுடைய மருந்து தொடங்கி நீண்ட ஆயுட் காலமுடைய மருந்து முடிய வைக்கப்பட்டுள்ளது. இவ்வடிப்படை மருந்தமைவுக்குள் அமைக்க முடியாதவற்றை 'மருந்து' என தனித் தலைப்பிட்டு அந்த மருந்து முறையின் இறுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

நோய் வருமுன்னர் காப்பதே சாலச் சிறந்தது. **'வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்'** என்கிறார் திருவள்ளுவர். எனவே சில நோய்களின் இறுதியில் 'ஆகாப் பொருட்கள்' தரப்பெற்றுள்ளன.

சில நோய்கட்கு கற்றுத்துறை போய மருத்துவ வல்லுநர்கள் அளித்த கருத்துக்களும் அவ்வத் தலைப்புகளின் கீழ் தரப்பட்டுள்ளன.

சுவடிகள், சில கையெழுத்துப் படிகளில் இருந்த அளவுகள் முடிந்தவரை நவீன அளவு முறைகட்கேற்ப பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

துட்டெடை 25 மி.கி.

காசெடை 4.4 கி.

வராகன் 4 கி.

உச்சிக்கரண்டி 16 மி.லி.

சிறுகரண்டி 5-10 மி.லி.

சுண்டைக்காயளவு 390 மி.கி. (2 கி.)

வெருகடி - மூவிரலளவு

மிளகாயளவு - 5 மி.கி.

மாற்றி அமைக்க முடியாத சில அளவுகள் சுவடிகளில் இருந்தவாறே (புன்னைக்காயளவு, கழற்சிக்காயளவு, பாவட்டங் காயளவு என்பன) தரப்பட்டுள்ளன.

சுவடிகளிலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் சில முழுமையாக விளங்கவில்லை. அவ்விடங்களிலெல்லாம் சித்த மருத்துவ வல்லுநர்களைக் கொண்டு முடிந்தவரைச் சீராக்கி செப்பனிட்டு நூலில் அமைத்துள்ளோம். அப்படியும் விளக்கம் பெற முடியாதனவான குட்டத்தட்டு, கோத்திரி, முப்பால், முள்ளுக்குட்டிப்பிரா, வடகயிறு, நானாக்களி, நெபுட்டிவேலி என அவ்வாறே ஆனால் உடுக்குறி (★) இட்டுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. சுவடியில் இருப்பன பதிப்பிக்கப்படாமல் போனால் மறைந்து விடும் என்பதும், விளங்காதபோதும் பதிப்பித்தால் கற்று வல்லோர் சரியானவற்றை அறிவிப்பார் எனக் கருதியும் இப்பகுதிகள் நூலில் இடம் பெற்றுள்ளன.

ஆய்வு வல்லோர் கருதுகோள்களை மேற்கொள்ளவும், கற்போர் பல செய்திகளை உடன் கண்டு இனங்காணவும் பிற்சேர்க்கையாகக் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகள் பயன்படும்.

சுவடிகளிலிருந்து எடுத்தெழுதி முறையாக ஆய்வு செய்து பதிப்பிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. முதன் முதலில் அச்சேறும் சுவடிச் செய்திகளில் சில தவறுகள் நேர்ந்திருக்கலாம். அக்குறை நீக்கி நிறை கண்டு நூலைக் கற்று பயன்பெற வேண்டும். குறைகள் தக்க நிலையில் தெரிவுபடுத்தப்பட்டால் இனிவரும் பதிப்புகளில் அவற்றை நிறைவு செய்து வெளியிடலாம்.

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர். **செல்வி. ஜெயலலிதா** அவர்களின் தலைமையின் கீழ் செயல்பட்டு நம் துறையில் தனிக் கவனம் செலுத்தி வரும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு **சு.முத்துசாமி**, எம்.ஏ., அவர்கட்கு நம் நன்றி என்றுமுண்டு. மற்றும் நூல் வெளியிடுவதில் முன்னோடியாகத் திகழ்ந்த **து.முருகராஜ்**, இ.ஆ.ப., அவர்கட்கும் நம் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

எமது பணி பாராட்டி என்னை விரைவு படுத்திவரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் திரு. **ச.அன்சர் அலி**, இ.ஆ.ப., அவர்கட்கும், அலுவல் சிக்கல்களைப் போக்கி நடைமுறையை எளிமையாக்கித் தந்த நம் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இணைச் செயலாளர் **அ.ஜ.கிருஷ்ணசாமி**, பி.ஏ., அவர்கட்கும் நம் நன்றி.

இந்நூலில் பல திருத்தங்கள் செய்ய துணையாய் நின்றவரும் என் ஆசிரியப் பெருந்தகையுமான பேராசிரியர் மரு. ஆர். தியாகரா ஜன் அவர்கட்கு என் நன்றிகள் பற்பல.

நூல் முழுமையும் பலமுறை கற்றறிந்து பயனுள்ள கருத்துக் களை வழங்கி முறைப்படுத்தி நெறிப்படுத்திய அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை மருத்துவர்கள்; எனது நண்பர்கள் **மரு. கே.பரமேஸ்வரன்**, பி.ஐ.எம்., **மரு. க.பழனிச்சாமி**, பி.ஐ.எம்., **மரு. கோவிந்தசாமி**, பி.ஐ.எம்., **மரு. அ.ரஞ்சித் சிங்**, பி.ஐ.எம்., **மரு.லலிதாபாய்**, பி.ஐ.எம்., ஆகியோருக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

சில நோய்கட்கு ஆங்கில மருத்துவத்தார் கூறும் முறைகளைத் தொகுத்துத் தந்த கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி துணைப் பேராசிரியர் **மரு. ஆர்.பிரின்ஸ், ஜே.எம்.பிரபாகர்**, எம்.பி.பி.எஸ்., டி.பி.எச்., அவர்களுக்கும் கொடைக்கானல் நகரிய நல அலுவலர், மருத்துவர் **பி.சிவனேசன்**, எம்.டி., அவர்களுக்கும் மற்றும் மைய மலேரியா அலுவலக சீனியர் எண்டோமாலஜிஸ்ட் **திரு. கே. கோபாலகிருஷ்ணன்**, பி.எஸ்.ஸி., டி.பி.எச்.இ., எப்.ஐ.சி.டி., எப்.இ.எஸ்.ஐ., அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துறையில் பணிகளை என்னோடு கவனித்து வரும் தமிழ்ப் புலவர்கள் திரு. த.அழகப்பராசு, எம்.ஏ., பி.எட்., திருமதி. செ.இரா.பிரசன்னா எம்.ஏ., பி.எட்., அவர்கட்கும், சுவடி நகலெ டுப்போர் திரு. வெ.சாரங்கபாணி, திருமதி. க.லலிதா, திருமதி. த.நாகம்மா, திருமதி. த.லட்சுமி, திருமதி. நா.பாக்கியசுந்தரி ஆகியோர்க்கும் எனது பாராட்டுதல்களும் நன்றியும் உரித்தாகட் டும். மற்றும் பல வழிகளில் துணை நின்ற அனைத்துத் தரப்பு அரசு ஊழியர்க்கும் என் மனமார்ந்த நன்றி.

உரிய நேரத்தில் முறையாக அச்சிட்டளித்த டான்சி அச்சகத் தார்க்கும் என் நன்றிகள்.

மரு. அ.சுந்தரராஜன், பி.ஐ.எம்.,

பொருளடக்கம்

அச்சரம்	1-39
வாந்தி	40-57
விக்கல்	58-72
பொருமல்	73-87
குடற்கிருமிகள்	88-104
கோழைக்கட்டு	105-110
இருமல்	111-151
கக்குவான்	152-167
இளைப்பு	168-193
இரைப்பு	194-206
காமாலை	207-237
சுரம்	238-347
சன்னி	348-395
அடிதள்ளல்	396-403

பின்னிணைப்புகள்

I முதன்மை நூற்பட்டியல்	405-406
II துணை நூற்பட்டியல்	407-408
I நோய்கள் - அகரமுதலி	409-412
II மருந்து பொருட்கள் - அகரமுதலி	413-425
III செய்யுள் முதற்குறிப்பகராதி -	427-234

நூல்

அச்சரம்

வேறு பெயர்: அச்சரம், வாய்வேக்காடு, வாய்வேக்காளம்.

நோய் வரும்வழி:-

குழந்தைக்குத் தேவையான சத்துகள் சரி விகிதத்தில் இல்லாமை, தூய்மையின்மை ஆகியன இந்நோய் ஏற்பட காரணமாகும். சுண்ணாம்பு முதலியவற்றின் காரமிகுதியும் இரசம் போன்ற மருந்துகளின் வேக்காடும் வாய்ப்புண்ணை ஏற்படுத்த வாய்ப்புள்ளன. வயிறு வெந்து அது வாய்வழி வெளிப்பட்டு புண்ணை ஏற்படுத்துவது இவ்வகையினதாகும்.

இயல்:-

இந்நோயானது மூலாதாரத்தில் கிளம்பும் ஆவியின் சூடானது நாவிற்கு ஏறி அந்நாவிற்கு வேக்காட்டை உண்டாக்கி மாவைப் போல் நீறு பூத்து குழந்தைக்குப் பல துன்பங்கள் உண்டாக்கி பாலை உண்ண முடியாதபடி வெறுப்பை விளைவிக்கும். இந்நோய் மட்டுமின்றி வேறு இரண்டு நோய்களும் நாவில் உண்டாகும். அவை நாமுள் நோய், நாநாற்ற நோய்.

அச்சரத்தின் குறிகுணம்:-

வாய் வெந்து சிவப்பாகிப் புண்ணாகும். சிலபோழ்து சிறு சிறு கொப்புளங்கள் கூடக் காணப்படும். இதனால் பால், சோறு முதலியன உண்ணவியலாது குழந்தை துன்புறும். நாவெளுத்தல், நாவெந்து போயிருத்தல், நாவில் மிளகு போல் கொப்பளங் காணுதல், தலைவலி, தாது அதிகமாகத் துடித்தல், ஈரல் தாபிதமடைதல், வாய்நீர் பெறுதல், குரல்வளை தாபிதமடைதல், சொள்ளு நீர் அதிகமாக வடிதல் ஆகியன அச்சரத்தின் குறிகுணங்களாகும்.

அச்சரத்தின் வகைகள்:-

நாமுள் நோய், நாநாற்ற நோய் ஆகியவை நாவிலுண்டாவன. சூலியச்சரம், நீதியச்சரம், சோதியச்சரம் வீழி அச்சரம், குண்டியச்சரம், கபாலியச்சரம், குமரியச்சரம், உள்அச்சரம் ஆக அச்சரம் எட்டு வகைப்படும்.

மருத்துவம்:-

இந்நோய் அழல் குற்றம் மிகுந்து வருவதால் அதைத் தன்னிலைப்ப டுத்த இனிப்பு, துவர்ப்புச் செய்கையுடைய உணவுப் பொருட்களையும் மருந்துகளையும் வழங்குதல் வேண்டும். காரம், புளிப்புச் சுவையு டைய உணவுப் பொருட்களை மிகுதியும் உண்பதைத் தவிர்க்க வேண்டும். அதிக சூடுண்டாக்கும் உணவாதிச் செயல்களைத் தவிர்த் தல் வேண்டும். இந்நோய் வருவதற்கு முதற்காரணமான கிருமி, செரியாமை, சுரம் ஆகியவற்றிற்கும் சேர்த்து மருத்துவம் செய்ய வேண்டும். வாயினுள் புண்ணை துவர்ப்பிச் செய்கையுடைய மருந்துக ளைக் கொண்டு கழுவ வேண்டும். புண்ணை ஆற்றுவதற்கு மருத்துவம் செய்ய வேண்டும்.

சாறு:- 1

மாசிக்காய், சாத்திரபேதி, சீரகம், அரத்தை ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுத்துக் கொள்க. கிராம்பு, ஏலம், அதிமதுரம் ஆகிய மூன்றை வகைக்கு 10 கி. வீதம் எடுத்து இடித்துத் தூளாய் செய்து அதில் நீர் ஊற்றி ஊற வைத்து ஊறிய பிறகு வடிகட்டியெடுத்துக் கொள்க. அதனைக் குழந்தையின் வன்மை மென்மையறிந்து கொடுக்க குழந் தைக்கு வரும் வாய்ப்புண் நீங்கி நலமாகும்.

சாறு:- 2

ஒரு கொத்து மிளகு தக்காளியிலையைத் துவைத்து அதில் 4 ஈர வெங்காயம் போட்டு இரண்டையும் துவைத்து 165 மி.லி. சாறு கொடுக்கவும்.

சாறு:- 3

மணிதக்காளியிலையையும். நீருள்ளியையும் நறுக்கிப் பிழிந்து 30 மி.லி. முதல் 60 மி.லி. அளவு வரை புகட்டவும், அச்சரம் குணமாகும்.

கற்கம்:- 1

165 மி.லி. வெள்ளாட்டுப் பாலை எடுத்து அதே அளவு தண்ணீரை உடன் சேர்க்க. சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, மாசிக்காய், மாதுளம் பிஞ்சு ஆகியவற்றைச் சம அளவாக எடுத்து அவற்றை வெள்ளாட்டுப் பால் விட்டரைத்து அப்பாலிலேயே கலக்கிக் கொடுக்கவும். இவ்வாறு மூன்று நாட்கள் ஆறுவேளை கொடுக்க வாய்ப்புண் நீங்கும்.

கற்கம்:- 2

அகத்திப் பட்டை, சீரகம், நீருள்ளி இவற்றைச் சமன் சேர்த்து அரைத்துக் கொடுக்க குறையும்.

மணப்பாகு:-

தென்னை மரத்தின் இளைய குரும்பையை மேல்தோல் நீக்கி நன்றாயிடித்துச் சாறு பிழிந்து கொள்ள வேண்டும். அதனுடன் சர்க்கரை போட்டு உருக்கிக் காய்ச்ச வேண்டும். காய்ச்சி சுருக்கியதில் சீரகத் தூள் தூவிப்போட்டு கிண்டி இறக்கிக் கொள்க. ஆறியபின் அக்கூழை நாக்கில் தடவி விட குழந்தைக்கு வரும் அச்சரம் நீங்கிப் போகும்.

(கடுக்காய்) நெய்:-

கருஞ்சீரகம், கடுகு ரோகணி, கடுக்காய்தோல், காட்டு மல்லிவேர் ஆகிய நான்கையும் வகைக்கு 4 கி. எடுத்து இடித்து ஒருபடி ஈயக்கொழுந்தினை அரைத்து 70 கி. ஆமணக்கெண்ணையில் கலந்து 85 மி.லி. தாய்ப்பால் ஊற்றி அடுப்பேற்றிச் சிறிது எரிக்க வேண்டும். நீர்த்தன்மை வற்றிய பக்குவத்தில் எடுத்து அதில் 8 கிராம் கோரோச னைப் பொடியினைத் தூவி காலை மட்டும் உச்சிக்கரண்டியளவு (15 மி.லி.) வீதம் 15 நாட்கள் கொடுக்க வயிற்றில் உண்டாகும் வேக்காடு, சுரம் இவை தணியும்.

(பூவரசு) நெய்:- 2

பூவந்திப்பூ, அதிமதுரம் வகைக்கு 4 கி. எடுத்து தாய்ப்பால் வார்த்து அரைத்து 325 மி.லி. பசுவின் நெய்யில் கலந்து மெழுகுபதமாகக் காய்ச்சி 4 கி. நெய் கொடுக்க அச்சரம் நீங்கும்.

நெய்:- 3

புளியன் விதைத் தோல் ஒரு கையளவு எடுத்துப் பொடித்துக் கொள்க. பத்து தேங்காயைத்துருவி அத்தூளை வெய்யிலில் காய வைத்து எண்ணெயைப் பிழிந்தெடுத்துக் கொள்க. பசு நெய்யை 1.3 லி. எடுக்க. இரண்டையும் ஒன்று சேர்த்துக் கொள்க. தெற்றிப்பூ, தெற்றிப்பட்டை, வேர்ப்பட்டை காக்கணம் வேர்ப்பட்டை, சுண்டை, சிறு சுண்டை, தூதுவளை, நன்னாரி, மலைதாங்கிவேர், தோல், விரிசந்தோல், அத்திப்பட்டை, சிறுபீளை, ஒடுவடக்கி (பெருந்தும்பை) குப்பைமேனி, துளசிமுறி, குட்டித் தக்காளி, முருக்கு, பொடுதலை, தென்னம்பூ, மாதளையின் பிஞ்சு, ஈருள்ளி ஆகிய சரக்குகளைச்

சமமாக எடுத்து கழுநீர் வார்த்து அரைத்துக் கொள்க. அதனை நன்றாக பிழிந்திறுத்துக் கொள்க.

செவ்விளநீர், பசுவின் பால், விளக்கெண்ணெய், நெய் இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்து சேர்த்துக் கொள்க. சாறனைத்தையும் சமமாக எடுத்து சேர்த்துக் கொள்க. சாத்திரபேதி, கத்தூரி மஞ்சள், அக்கிரா, வால்மிளகு, நன்னாரி, சந்தம், மகிழம்பூ, அதிமதுரம், வசம்பு, தேற் றான் ஆகிய சரக்குகளை வகைக்கு 4 கி. எடுக்க.

கச்சோலம், நெல்லி, கடுக்காய், கூகை நீறு, குருசாணி ஓமம், அரத்தை, சந்தனம், இருசீரகம் (நற்சீரகம், கருஞ்சீரகம்), விலாமிச்சம் வேர், செண்பகப்பூ (அரிசியாறு), வெட்பாலையரிசி, மூங்கிலரிசி, ஏலரிசி, கார்போகவரிசி, வாலுளுவையரிசி, திப்பிலியரிசி, பூலாவிருட் சம், கோரோசினை ஆகியவற்றை வகைக்கு 4 கி. எடுத்து பசுவின் பால் விட்டரைத்துக் கொள்க. அனைத்தையும் ஒன்று சேர்த்து காய்ச்சி மெழுகு பதமாக வடித்திறுத்துக் கொள்க. அதனைக் காசெடை (4.4 கி.) காலை, மாலை கொடுக்க குழந்தைகட்கு வரும் அச்சரம் நீங்கிப் போகும்.

இளகம்:-

பொன்னாங்காணி வேர், சிறுகீரை வேர், பண்ணை வேர், ஒரு கொட்டைப் பூடு, தொய்யில் வேர், இலாமிச்சம் வேர், அம்மான் பச்சரிசி சமூலம், ஆலங்குமிழ், நாவல் கொழுந்து இவற்றைச் சமனாய் எடுத்து வெந்நீர் வார்த்து அரைக்கவும். அதில் மூன்றில் ஒரு பங்கு நல்ல வெல்லம் இடித்துப் போட்டு பசுவின் நெய் ஊற்றி இலேகிய பதமாகக் குழப்பி விழுங்கவும். வெந்நீர் வார்த்து வாய்கொப்பளிக்க வும். தாகமும் அக்கரமுந் தீரும்.

(பாலசஞ்சீவி) எண்ணெய்:- 1

இம்பூரல், சிறுகீரை, முசுமுசுக்கை, கோவை, எலிச்செவிக்கீரை, குரும்பை, பொன்னாங்காணி, ஈயக்கொழுந்து, குப்பைமேனி, அவுரி, பொடுதலை, ஆடாதோடை, வல்லாரை, துளசி, குதிரைவாலி, தூது வளை, கோழியவரை, கொன்றை, தகரை, கரிசாலை, முருங்கையிலை, முருங்கைப்பட்டை, விட்டுணுகிரந்தி, ஓரிதழ்த்தாமரை, பற்பாடகம், வேம்பு, ஆனைநெருஞ்சில், நரிப்பயிறு, வெங்காயம், நறுவிலியிலை ஆகிய 30 பொருட்களையும் எடுத்து அவற்றின் சாற்றைச் சம அளவு எடுத்து மண் சட்டியிலூற்ற வேண்டும். பிறகு சுக்கு, செவ்வியம், பேரரத்தை, சித்திரமூலம், சிறு தேக்கு, சாதிக்காய், கருஞ்சீரகம்,

சாதிபத்திரி, மிளகு, கோட்டம், அகில், தக்கோலம் குங்குமப்பூ, உள்ளி, துத்தம், கோரோசனை, காசுக்கட்டி, கம்பிப்பிசின் (கும்பை மரத்தின் பிசின்) ஆகிய இப்பதினெட்டுப் பொருட்களையும் வகைக்கு 5 கி. எடுத்துக் கொள்க.

அதனைத் தண்ணீரில் அரைத்து மண் சட்டியில் விட்டு கலக்கி அடுப்பேற்றிச் சிறுக எரித்துக் காய்ச்சி பக்குவத்தில் வடித்துக் கொள்க. வேளைக்கு உச்சிக்கரண்டி (15 மி.லி.) வீதம் காலையில் மட்டும் கொடுக்க வேண்டும். இதைக் கொடுக்க அச்சரம் நீங்கும். தாய் பத்தியம் இருக்க வேண்டும். ஈருள்ளி, முருங்கைக்கீரை இவற்றைச் சேர்க்கலாம்.

எண்ணெய் 2:-

சிற்றாமணக்கெண்ணெய், தாழை இலைச் சாறு, வெங்காயச் சாறு இவற்றைச் சம அளவு எடுத்துச் சேர்த்து கொதிக்க வைத்து பதமாய் இறக்கிக் கொடுக்க அட்சரம் தீரும்.

எண்ணெய்:- 3

ஆமணக்கெண்ணெய் 1.3 லி., முடக்கொத்தான், கலியாண முருக் கிலை வகைக்கு ஒரு பிடி, கற்றாழைச் சோறு ஒரு எலுமிச்சங் காயளவு, ஈர வெங்காயச் சாறு 2.6 லி. எடுத்து சேர்த்து கொதிக்க வைத்து பத்திரப் படுத்திக் கொள்க. அதனை 1 மி.கி. கொடுக்க அட்சரம் நீங்கும்.

எண்ணெய்:- 4

கருஞ்சீரகம், கடுகுரோகிணி, கடுக்காய்த்தோல், காட்டு மல்லிகை வேர், ஆகியவற்றை வகைக்கு 4 கி. இண்டங் கொழுந்து ஒரு பிடி, உள்ளி 70 கி. தாய்ப்பால் 375 மி.லி., விளக்கெண்ணெய் 375 மி.லி. ஆகியவற்றை எடுத்துக் கொள்க. மேற்சொன்ன மருந்துச் சரக்குகளை நறுக்கி இடித்து எண்ணெயில் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சிக் கொடுக்க அச்சரம் நீங்கும். உச்சிக் கரண்டியளவு (16 மி.லி.) 5 - 7 நாட்களுக்குக் கொடுக்க வேண்டும். வயிற்றில் வேக்காடு, நாவேக்காடு, சுரம் முதலியவை நீங்கும்.

எண்ணெய் 5:-

மணித்தக்காளியிலை, துளசி, துத்தி, பிரமியிலை, வில்வம், வல் லாரை, கையாந்தகரை, பொடுதலை, நுணா, புங்கிலை, சங்கு ஆகிய மூலிகைகளை எடுத்து சாறு பிழிந்து கொள்க. பிறகு தான்றிக்காய், சுக்கு, கடுக்காய், திப்பிலி, அரத்தை, ஓமம், வசம்பு, கத்தூரி, மஞ்சள்

ஆகிய மருந்துச் சரக்குகளை 17 ½ கி. எடுக்க. சாதிக்காயைச் சாற்றிலிட்டுக் கொள்க. விளக்கெண்ணெய் 1.3. லி. எடுத்து அத்துடன் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்ள வேண்டும். அதனைக் குழந்தைக்கு 1 கரண்டி, பெரியவர்கட்கு 2 கரண்டி (15 மி.லி.) வீதம் 5 - 7 நாட்களுக்குக் கொடுக்க அச்சரம் நீங்கும்.

எண்ணெய்:- 6

தாய்ப்பால், தேன் வகைக்கு 4 கி. எடுத்துக் கொண்டு இவ்விரண்டையும் நன்றாகக் கலந்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு காலை, மாலை இருவேளையும் உள்ளுக்குக் கொடுத்து நாவிலும் பூசி வந்தால் அனைத்து வகை அச்சர நோய்களும் நீங்கிப் போகும்.

எண்ணெய்:- 7

சிற்றாமணக்கெண்ணெய், தாய்ப்பால் வகைக்கு 165 மி.லி., வெள்ளைப்பூண்டிதழ் 70 கி. இண்டங்கொழுந்து 1.3. லி. எடுக்க. கருஞ்சீரகம், கடுகுரோகிணி, மஞ்சள், கடுக்காய்த் தோல், காட்டுமல்லிகை வேர்த்தோல், கோரோசினை ஆகியவற்றை வகைக்கு 4 கி. எடுத்துக் கொள்க.

மேற்சொன்ன எண்ணெயையும் பாலையும் ஒன்றாகக் கலந்து கொள்க. கோரோசனையைத் தவிர மற்ற மருந்துச் சரக்குகளை அம்மியில் வைத்து வெண்ணெய் போல நன்கரைத்துக் கொள்க. அதனைத் திரவத்தில் சேர்த்து கலக்கி சிறுதீயாக எரித்துக் காய்ச்சிக் கொள்க. அதனைக் கடுகுத்திரள் பதத்திலிறக்கி வடிகட்டிக் கொண்டு அதில் கோரோசனையைத் தூள் செய்து போட்டுக் கலந்து பத்திரப்படுத்திக் கொள்க.

தாய்ப்பால் (அல்லது) வாதுமை எண்ணெயைச் சமமாய் எடுத்து அனுபானமாகக் கொண்டு உள்ளுக்குக் கொடுத்து நாவிலும் பூசி வந்தால் அனைத்து வகை அச்சரங்களும் நீங்கிப்போகும்.

எண்ணெய்:- 8

பொடுதலை, துளசி, வட்டக்கிலு கிலுப்பை, கொட்டைக் கரந்தை, சங்கம், காட்டு அவரை, சிற்றாவரை இவற்றின் கொழுந்துகளை எடுக்க. இவற்றை விளக்கெண்ணெயில் காய்ச்சி அளவறிந்து குழந்தைக்குக் கொடுக்க அச்சரம் நீங்கும்.

எண்ணெய்:- 9

சிற்றாமணக்கெண்ணெய், தாழையிலைச் சாறு, வெங்காயச் சாறு இவற்றைச் சம அளவெடுத்து ஒன்று சேர்த்துக் கொதிக்க வைத்துப் பதமாய் இறக்கி அளவறிந்து கொடுக்க அச்சரம் தீரும்.

எண்ணெய்:- 10

வெள்ளறுகுச் சம்பா, தாளி, பொன்னெரிஞ்சில், கையாந்தகரை, தலைச்சுருளி, வெற்றிலை, தகரை, தெற்றி, செம்பருத்தி, நீலி, துளசி ஆகிய மூலிகைகளின் சாறுகளை வகைக்கு 335 மி.லி. எடுக்க. தென்னையின் குரும்பைச் சாற்றை 1.3 லி. எடுத்துக் கொள்க. நற்சீரகம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், சந்தனம், திப்பிலி, வெட்பாலை, வசம்பு, கார்கோல், அதிமதுரம், அக்கிரா ஆகிய சரக்குகளை வகைக்கு 5 கி. எடுத்துக் கொள்க. இவற்றை மேற்கூறிய சாறு விட்டாட்டி எடுத்து வைத்துக் கொள்க. பசுநெய், விளக்கெண்ணெய், தேங்காயெண்ணெய் ஆகியவற்றை வகைக்கு 675 மி.லி. எடுத்து அதில் சேர்த்துக் காய்ச்சி பதத்துடன் வடித்துக் கொள்க.

அதனைக் காசெடை (5 கி.) எடுத்து மூன்று நாட்களுக்கு மேலுக்குப் பூசிட வேண்டும். பூசிய பிறகு தண்ணீர் விட்டு வேது பிடித்துக்கொள்க. இவ்வாறு செய்ய அச்சரம் அனைத்தும் நீங்கிப் போகும்.

(பூவரசு) எண்ணெய்:- 11

பூவரசு இலை, அதன் காய், பூ ஆகிய மூன்றையும் தனித்தனியாக அரைத்து 35 கிராம் எடுத்து ஒன்று கூட்டி அடை தட்டி 280 மி.லி. சிற்றாமணக்கு நெய்யில் காய்ச்சி அடை சிவந்து மிதக்கும் போது அடையை நீக்கி விட்டு ஏலம் சாதிக்காய், சாதிபத்திரி ஆகிய மூன்றையும் வகைக்கு 2 கி. எடுத்து பொடித்துக் கலக்கி காலை, மாலை 4.4 கி. அளவு வீதம் கொடுக்க அச்சரம், காய்ச்சல் இவை குணமாகும்

(சஞ்சீவி) மாத்திரை:-

சீரகம், கருஞ்சீரகம், ஏலம், கூகை நீறு, அதிமதுரம், கல்நார், சாத்திரவேதி ஆகியவற்றைச் சமன் கூட்டி சீந்தில் பழச்சாற்றில் அரைத்து சுண்டைக்காய் அளவு (390 மி.கி.) செய்து கொண்டு சர்க்கரையில் பசுவின் வெண்ணெயில் கொடுக்கவும். பத்தியம் - கீரை, துவரம் பருப்பு கூட்டவும்.

உருண்டை:-

நல்ல சந்தனம், மான் கொம்பு, நற்சீரகம், ஏலம், கருஞ்சீரகம், நற்பவளம், அதிமதுரம், ருத்திராட்சம், நல்ல வெல்லம் இவற்றைச் சமன் எடுத்து பச்சரிசி கழுவின நீரில் அரைத்து துவரம் பருப்பு அளவு உருண்டை செய்து கொண்டு தண்ணீரில் கொடுக்கவும். நாக்கு அச்சரம், குண்டி அச்சரம் இவையெல்லாம் தீரும்.

இரத்த அச்சரம் - குறிகுணம்:-

நாக்கு, வாய், தொண்டையனைத்தும் சிவப்பாகிப் புண்ணாகி விடும். தொண்டை வழியும் அடைத்துக் கொள்ளும். நாற்றமும் ஏற்படும். குழந்தை தூங்காது, தாய்ப்பாலைக் குடிக்காது. காய்ச்சல் வரும். புண்ணிலிருந்து இரத்தம் சிந்தும். மயக்கம் வரும். இக்குறி குணங்கள் கண்டால் அது இரத்த அச்சரமாகும்.

நெய்:-

அத்திக்காய், பருத்திப்பிஞ்சு, ஆலின் விழுது, தென்னம்பூ, நாவல் மரத்தின் பட்டை, துளசி, பிச்சிச்சாறு, ஆதளம்பால், முத்து ஆகிய வற்றை வகைக்கு 335 மி.லி. எடுக்க. மூன்று சாதி (இலவங்கம், இவலங்கப்பட்டடை, சாதிக்காய்) கெருடப் பச்சை, ஏலம், சீரகம், மாசிக்காய், வசம்பு, திருநீற்றுப் பச்சை ஆகியவற்றை வகைக்கு 4 கி. எடுக்கவும். பசுவின் நெய் 1.3. லி. தேங்காயெண்ணெய் 335 மி.லி. எடுத்து இவை எல்லாவற்றையுமொன்று சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாக வடித்துக் கொள்க. அதனைக் குழந்தையின் வன்மை, மென்மைக்குத் தக்கவாறு கொடுக்க இரத்த அச்சரம் நீங்கும்.

இளைப்பக்கரம் - குறிகுணம்:-

இருமல், இளைப்பு ஏற்படும், நாக்கில் புண் தோன்றும். மலமும் சிறுநீரும் அருகி விடும். காய்ச்சல் வரும். மூக்கில் நீர் தோன்றும். செரிப்புத் தன்மை குறையும். பார்வையும் மங்கி விடும். அரிப்புடன் சொரியும் ஏற்படும். பால் குடிக்காது. இக்குறிகுணங்கள் கண்டால் அதை இளைப்பக்கரம் என்பர்.

அணிலெண்ணெய்:-

தேங்காய் இரண்டு எடுத்து பால் பிழிந்து கொள்ள வேண்டும். திரிசாதி (இலவங்கம், ஏலம், இலவங்கப்பட்டை) அதிமதுரம், சீரகம், அக்கிரா, ஈருள்ளி ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுத்துக் கொள்க.

இவற்றை ஈருள்ளிச் சாறு ஊற்றி அரைத்துக் கலந்து கொள்க. அணில் ஒன்றை அறுத்து இரத்தத்தை அதில் ஊற்றுக.

பிறகு அதிலேயே தசையையும் அரிந்து போடுக. உடனே அதைக் காய்ச்சி பக்குவத்துடன் பதமாக வடித்துக் கலசத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்க. அதனைக் காசளவு (5 கி.) எடுத்து 3 நாட்கள் உட்கொள்ள இளைப்பக்கரம் நீங்கும்.

பூசை:-

இளநீர், பாக்கு, வெற்றிலை, பழம், பொரி, கழுநீர், வெல்லம், புண்ணாக்குநீர், மது, ஐந்து நிறச் சோறு, பலகாரம் ஆகிய அனைத்தையும் வைத்து தூப தீபம் காட்டி அவற்றைக் கொண்டு குழந்தையைச் சுற்றி வணங்க இளைப்பக்கரம் சரியாகும்.

உதட்டக்கரம் - குறிகுணம்:-

மேல், கீழ் உதடுகள் புண்ணாகி தடிப்பாயிருக்கும். நாக்கின் முன் பகுதி முள் போன்று ஆகிவிடும். பாலைக் குடிக்காது. குழந்தை நடுங்கும். இவையே உதட்டக்கரத்தின் குறிகுணங்கள்.

நெய்:-

335 மி.லி. நெய்_மாசிக்காய் 15 கி. எடுத்துக் கொள்க. அதனைக் கதம்பைச் சாறு விட்டரைத்து அதனுடன் ஆதளம்பால் 165 மி.லி. சேர்த்து அனைத்தையும் கலந்து காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும். அதனை உட்கொள்ள உதட்டக்கரம் நீங்கும்.

பூசை:-

கறிச் சோறு, அரளியின் பூ, மஞ்சள் நிறமாயிருக்கும் இளநீர், அப்பம், பொரி ஆகியவற்றை எடுத்துக் கொண்டு தூபதீபங் காட்டி பின் அவற்றைக் கொண்டு குழந்தையைச் சுற்றி விட்டு முச்சந்தியில் அவற்றைப்போட்டு விட வேண்டும்.

உள் அச்சரம் - குறிகுணம்:-

உள் அச்சரம் உந்தியின் உட்பக்கம் தாபிதமடைந்து புண்ணாகி அதனின்றும் ஆவி தோன்றி மேலுக்குக் கிளம்பி தலையில் முட்டி நீராகி அந்நீர் மூக்கின் வழியாய் ஒழுகும். அந்நீர் முகம் முதலிய மேல்நோக்குறுப்புகளில் கோர்த்துக் கொள்வதனால் குருதி கெட்டு முகம் முதலியவற்றில் செந்நிறம் நீங்கி வெளுக்கும். நாக்கும் வெளுத்து

அதில் வெண்ணீறு பூத்திருக்கும். தூக்கம் உண்டாகும். சுரமடிக்கும். திடீரென்று தண்ணீர் வேட்கையுண்டாகும். இவையே உள் அச்சரக் குறிகுணங்கள்.

நெய்:-

அதிமதுரம், பூவந்திப்பழம் இரண்டையும் வகைக்கு 4. கி எடுக்க. அதனை முப்பால் (காய்ச்சுப்பால், குழம்புப்பால், திரட்டுப்பால்) சேர்த்தரைத்து, தாய்ப்பாலில் கரைத்து அதனுடன் பசுநெய்யை 335 மி.லி. சேர்த்துக் காய்ச்சுக. கடுகு மெழுகுப் பதத்தில் இறக்கி வைத்து 4 கி. நெய்யைக் குழந்தைக்கு கொடுக்க உள் அச்சரம் நீங்கும்.

கடவாயக்கரம் - குறிகுணம்:-

கடவாயில் வடுவும் புண்ணும் வரும். கருமுள் போல சொர சொரப்பாகி விடும். துடிக்கும்; தாய்ப்பாலைக் குடிக்காது. கழிச்சலேற்ப டும். தலையும் கனமாக ஆகி நீரொழுகும். கையில் குழந்தை தங்காது. இக்குறி குணங்கள் கடவாயக்கரத்திற்கு ஏற்படும்.

குடிநீர்:-

வடலி பட்டை, நற்சீரகம், கருஞ்சீரகம், மல்லி, கெருடப் பச்சை, மாசிக்காய், சீனக்காரம், பலாப்பழுப்பு, தொட்டால் வாடி வேர் ஆகிய சரக்குகளை எடுத்து நசுக்கிப் போட்டு தண்ணீர் விட்டு எட்டொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சி கொடுக்க கடவாயக்கரம் நீங்கும்.

எண்ணெய்:-

தேங்காய் ஐந்தைத் திருகிப் பால் எடுக்கவும். செம்பருத்திப் பூ, ஈருள்ளி, தெற்றிப்பூ, புன்னை, கற்பூரவள்ளி ஆகியவற்றின் சாறு வகைக்கு 1.3 லி. எடுத்துக் கொள்க. சின்ன மாசிக்காய், ஏலம், சீரகம், கார்கோல், சந்தனம், சித்தரத்தை, சடாமாஞ்சில், சாதிக்காய், கிராம்பு, சாதிபத்திரி ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுக்க. இவற்றை அரைத்துக் கலந்து காய்ச்சிக் கொள்க. அதனை வடித்து அளவுடன் குழந்தைக்கு உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூச கடவாயக்கரம் நீங்கிப் போகும்.

பூசை:-

சர்க்கரை, அடைக்காய் (பாக்கு), தாம்பூலம், சந்தனம், ஐந்து நிற மலர்கள், உளுந்துச் சோறு, வெண்பொரி ஆகியவற்றை எடுத்து குழந்தையைச் சுற்றி முச்சந்தியில் வைத்துவிட கடவாயக்கரம் நீங்கிப் போகும்.

கபாலியச்சரம் - குறிகுணம்:-

கபாலியச்சரம் நாவில் உண்டானால் குடலும், ஈரலும் வெந்து நோகும். தொண்டையில் காடிச் சோறு பொங்குவது போல் பொங்கும். அபாயகரமாக நாக்கு வேகும். ஐந்தாம் நாளில் வெடித்த நாக்கிலிருந்து இரத்தம் வடியும். தலை வலிக்கும். உடல் வலிக்கும். பருவாய்த் தோன்றும். சுரம் விடாது அடிக்கும். நெஞ்சுவலி உண்டாகும். வயிறு நொந்து இரைச்சலுடன் கழியும். இவை கண்டால் அது கபாலியச்சரமா கும்.

குண்டியச்சரம் - குறிகுணம்:-

இடுப்புக்கு மேலே அதிகமாகச் சுரங்காயும். உடம்பு மீனைப் போல் வெளுக்கும். சிறுநீர் மஞ்சள் நிறமாய்ப் போகும். வாயில் எப்போதும் எச்சில் இருக்கும். திடீரென்று சுருக்கெனக் குத்தும். உடம்பு இளைத்து பேச முடியாதபடி வலிக்கும். உடம்பு கடுக்கும். குரலும் எடுபடாது வலிக்கும். இவை குண்டியச்சரக் குறிகுணங்களாகும்

குண்டியச்சரம் நாவிலுண்டானால் ஈரல் வெந்து போகும். நா மிகக் கொதிப்படைந்து மிகவும் சிவந்திருக்கும். வாய் கூசதல், இருமுதல், வயிறு கழிதல், உடல் மிகக் கடுத்தல் நெஞ்சு கரித்து எதிரெடுத்தல், விலாவில் ஒரு பக்கம் வலித்தல், நீர்வேட்கை ஆகிய இக்குறிகள் காணின் அது குண்டியக்கரம் என்றறிக.

கற்கம்:- 1

சுண்டைவேர், வேப்பங்காய், இவற்றைச் சமமாக அரைத்து ஆவின் வெண்ணெயில் கலந்து கொடுத்தாலும், அல்லது கரிசாலையும், சீரக மும் அரைத்து 10 கிராம் கொடுத்தாலும் குண்டி அச்சரம் தீரும்.

கற்கம்:- 2

சுண்டை வேரை எலுமிச்சங் காயளவு எடுத்து நன்றாயரைத்து பசுவின் வெண்ணெயுடன் சேர்த்துக் குடிக்க குண்டியக்கரம் நீங்கிப் போகும்.

நெய்:-

கலப்படமற்ற தூய பசுவின் நெய் 1.3 லி. எடுக்க. சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், அதிமதுரம், கடுகுரோகிணி, நிலப்பனைக் கிழங்கு,

தேத்தான் பழம், கண்டங் கத்திரிவேர், பழம், சிவந்த நாயுருவி, பிரண்டைவேர், பழம், புளியரணைக் கிழங்கு, செப்பு நெருஞ்சி இவற்றை வகைக்கு 8.8. கி. எடுத்துக் கொள்க. மணித்தக்காளி, உத்தாமணி, கற்பூரவள்ளி, சிலந்தி நாயகன், கலியாண முருக்கு, கொட்டைக் கரந்தை, செருப்படி இவற்றின் இலையை வகைக்கு ஒரு பிடி எடுக்கவும். சர்க்கரை 1.3 லி., ஈர வெங்காயச் சாறு 2.6. லி. எடுத்து அனைத்தையும் பக்குவப்படுத்தி ஒன்று சேர்த்து காய்ச்சி இறக்கும் வேளையில் பனைவெல்லம் கூட்டி உள்ளுக்கு 4.4. கி. கொடுக்கவும். துவரைப்பருப்பு, அகத்தி, முருங்கை, தண்டுக்கீரை, பசுவின்பால், மோர் கூட்டவும்.

இலேகியம்:-

வல்லாரைச்சாறு, அகத்திப் பழுப்புச் சாறு, கற்பூர வள்ளி இலைச் சாறு, முடக்கொத்தான் சாறு கூட்டி சீரகத்தைப் பொடி செய்து போட்டு நெய் சேர்த்துக் காய்ச்சி கலந்து கொடுக்கவும்.

எண்ணெய்:

முசுமுசுக்கை வேரை நன்றாய் பஞ்சும்பால் நறுக்கி விளக்கெண்ணை யில் போட்டு சாதிக்காய், குங்குமப்பூ, கோரோசனம், வசம்பு, பூண்டு இவற்றைப் போட்டு சூரியபுடம் (வெய்யிலில்) வைத்துக் கொண்டு குழந்தைகளுக்கு அளவறிந்து வார்க்கவும். குண்டியச்சரம் நீங்கும்.

உள்ளுக்கும், மேலுக்கும் எண்ணெய்:-

திரிபுரத்தானிலையை (சிவனார் வேம்பு) நன்கு அரைத்தெடுத்து அடை செய்து கொள்ள வேண்டும். அவ்வடையை சிற்றாமணக்கெண் ணெயில் போட்டு காய்ச்சி இறக்கி வடிகட்டிக் கொள்ளவும். அந்த எண்ணெயைத் தொண்டை, மார்பு, தலை உச்சிக்குழி போன்ற இடத்தில் தடவி 4.4 கி. அளவு உட்கொண்டால் குண்டியக்கரம் குணமடையும்.

மருந்து:-

கரிசலாங் கண்ணியிலையை 1.1 கி. அளவு எடுத்து அதனுடன் சீரகத்தைச் சேர்த்து சாப்பிட இவ்வக்கரம் நீங்கும். இதற்குப் பச்சரிசிச் சோறு, பசுவின்பால் மட்டும் பத்தியமாகக் கொள்ள இவ்வக்கரம் நீங்கும்.

குமரி அச்சரம் - குறிகுணம்:-

இது நாவிலுண்டானால் ஐந்தாம் நாளில் எந்தப் பொருளையும் உண்ண முடியாமலும் குடிக்க முடியாமலும் நாகூசும். நா தடிக்கும், வெடிக்கும், இரத்தம் வடியும், உடம்பில் சதை நோகும். வயிறு கழியும். அதனால் துன்பம் மிகும். இரண்டு கண்களும் நோகும். சுரமடிக்கும். வாய் கைக்கும்; வேகமாய் அடிக்கடி வாந்தியெடுக்கும். உள் நாக்கு வளரும். பல் மஞ்சள் நிறமாகவும் தலையிலிருந்து மூக்கின் வழியாக மூன்று நாட்கள் வரைக்கும் செந்நீர் வடியும். இவையே குமரி அச்சரத்தின் குறிகுணங்கள்.

சிங்நவு அக்கரக்குணம்:-

தங்கம் போல் உடம்பு மினுமினுக்கும். நாக்கு,தொண்டை இவை இரண்டும் சூடாகும். தாய்ப்பாலைக் குடிக்காது, வாந்தி அதிகமுண்டா கும். கடல் பஞ்சு போல் நாக்கு வெளுத்துப் புண்ணாகி விடும்.

உள்ளுக்கும் மேலுக்கும் எண்ணெய்:-

உருக்கிய ஆமணக்கெண்ணெய் 1.3 லி., சீரகம், கார்கோல், சந்தனம், அதிமதுரம், சாதிபத்திரி, கிராம்பு, ஏலம் ஆகியவற்றை வகைக்குச் சமஎடை எடுத்துக் கொள்க. அவற்றைத் தெற்றிப்பூச்சாறு 1.3 லி. எடுத்து விட்டரைத்து குழம்பாகக் கலந்து காய்ச்சி கொள்க. காய்ச்சி யதை மெழுகு பதமாக வடித்துக் கொண்டு காலை, மாலை மூன்று நாட்கள் காசெடை (5 கி.) அளவு கொடுக்க நன்றாம்.

ஒன்று விட்டொரு நாள் அவ்வெண்ணையைத் தேய்த்து முழுக சிங்நவு அச்சரம் நீங்கிப் போகும். உடலும் நன்றாக ஆகும்.

மருந்து:-

சீனக்காரம், மாசிக்காய், ஆகியவற்றைத் தாய்ப்பாலில், உரைத்து அதனைத் தாயின் மார்பில் பூசி வைக்க வேண்டும். அவ்வாறு செய்து அதனைக் குழந்தைக்கு ஊட்ட புண்ணும் நீங்கும். சிங்நவு அச்சரமும் போகும்.

பூசை:-

ஐந்து வாசமுள்ள மலர்களை எடுத்து கொள்ளவும். இளநீர், செங்க ருங் கோழி முட்டை ஆகியவற்றை எடுத்துக் கொள்க. மூல மந்திரத் தைக் கூறி குழந்தையின் தலையைச் சுற்றி முச்சந்தியில் வைக்க நலமாகும்.

சூலியச்சரம் எனும் மூலி அச்சரம், குறிகுணம்:-

இந்நோய் நாவேக்காடுடன் சூலத்தால் குத்துவது போல் குத்தலையுடையது. சூலி அச்சரம் என்பது நாவில் உண்டானால், நாவானது வெந்து மாப்போல் வெளுத்து அடையாகப் பற்றுதல், வழுவழுப்பான வெண்மையான நீர் சுரத்தல், வெள்ளாவியின் போது வீசும் உவர் மண்ணின் நாற்றம் போன்ற நாற்றம் நாவிலிருந்து வெளியே வீசுதல், வாந்தியாதல், வெள்ளைக் கோழை, வெளிவரக்கூடிய வெள்ளோக்காளம். நீர் வேட்கை, கை, கால், உடம்பு இவற்றில் கருமை நிறமுண்டாதல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும். தலை வலித்தலோடு தாகம். கொடிய சுரங்காய்தல், காதுகுத்தல், இடுப்பு கடுத்தல் போன்ற குறிகுணங்கள் கண்டால் அது சூலியச் சரமாகும்.

சோதியக்கரம் - குறிகுணம்:-

இது நாவிலுண்டானால் இப்பெயருக்கேற்ப நாக்கு வெந்து காணல், அதைத் தொடர்ந்து நாக்கின் நிறமானது பல்லழுக்கு நிறம் போலிருத்தல், நாக்கு சிவத்தல், நாக்கும் பல்லும் அழுக்காதல், வளியழல் நாடிகள் உடலிலிருக்கும் நோயின் துன்பத்தால் துடிதுடித்த நாடியாக நடத்தல், தலை கடுமையாக இடித்தலோடு தலை வலித்தல், காலின் கீல்கள், கால், கணைக்கால் இவைகள் மிகவும் துளைத்ததலாலுண்டாவது போன்று நோதல், சுரமடித்தல், அதிவேகத்துடன் வயிறு கழிதல், வாந்தியாதல், வயிற்றின் உள்ளிலும் வெளியிலும் ஓய்வின்றி எரிதல், முதுகு எரிதல் ஆகிய குறிகுணங்கள் சோதியக்கரத்தினுடையவை.

தொந்த அச்சரம் - குறிகுணம்:-

வாய்க்குள்ளே பூப்போல் வெந்து புண்ணாகும். நாக்கை அசைக்க முடியாது. சுரம் காயும். குழந்தை விரும்பி பாலைக்குடியாது. மூக்கு அடைத்துக் கொள்ளும். தண்ணீர் மூக்கு வழியாக ஒழுகும். முகமனைத்திலும் முள் போல ஆகி எழுச்சி குறையும். இவையே தொந்த அச்சரத்தின் குறிகுணங்கள்.

குடிநீர்:

தென்னையினுடைய பாளையின் சாறு, சீரகம், வெங்காயம், நெல்லி முள்ளி, மாசிக்காய், சாத்திரபேதி ஆகியவற்றை ஒன்று சேர்த்து குடிநீராகக் காய்ச்சிக் கொண்டு அதனுடன் தாய்ப்பாலைச் சேர்த்து கொடுக்க குழந்தையின் தொந்த அச்சரம் நீங்கும்.

நெய்:-

335 மி.லி. நெய்யை எடுத்துக் கொள்க. அதில் சாதிக்காய், கிராம்பு சாதிபத்திரி, சந்தனத்தூள், மாசிக்காய் ஆகியவற்றைச் சமமாய் எடுத்த ரைத்து சேர்க்க. பிறகு தென்னையின் குரும்பைச் சாற்றையும் தேனை யும் சேர்த்து காய்ச்சி பக்குவத்துடன் வடித்தெடுத்துக் கொள்க. அதனைக் குழந்தைக்கு ஊட்ட தொந்த அச்சரம் நீங்கும்.

குழம்பு:-

தென்னையின் குரும்பையை எடுத்து மேல் தோலை சீவி நீக்கி விட்டு அதனை நன்றாயிடித்து சாறெடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் சர்க்கரையைச் சேர்த்து போட்டு உருகக் காய்ச்சுக. காசுக்கட் டியைத் தூவி கிளறி குழம்பு போலக் காய்ச்சிக் கொண்டு அதனை நாக்கிலே தேய்த்துவிட குழந்தைக்கு வரும் தொந்த அச்சரம் ஒழிந்து போகும்.

(நீலி) நீதியச்சரம் - குறிகுணம்:

நாவில் உண்டானால் அதிகமாகாமலும் குறையாமலும் நடுத்தரமாய் உட்பக்கம் வேக்காட்டால் சிவந்து அதன் மேல் வெண்மையான மாவைப்போல் ஒரு பொருள் படர்ந்திருக்கும். நெஞ்செரிந்து வறளும். அதுவும் ஈரப்பசையில்லாமல் உலர்ந்திருக்கும். வாய் வரளும். சுரம், இடைகடுப்பு, வாய் கைத்தல், குளிர்தல், தலை வலித்தல், அதிகமாகச் சுரம் அடித்தல் எனும் இக்குறிகுணங்கள் ஏற்பட அது நீதியக்கரமாகும்.

பில்லி அச்சரம் - குறிகுணம்:-

காது, கண் முகமனைத்திடத்திலும் அதிகமாக அரிப்பேற்படும். சொறியும் உண்டாகும். குழந்தை கையிலே நில்லாது துடி துடிக்கும். உடல் முழுவதும் சிவந்து புண்ணாகும். இவையே பில்லி அச்சரத்தின் குறிகுணங்கள்.

குடிநீர்:-

அதிமதுரம், வெங்காயம், சாதிபத்திரி, செம்பொன்னெரிஞ்சி, மூக்க ரைச்சாரணை, நல்ல துளசி, தென்னங்குரும்பை, பனையின் சாறு, பச்சைக்கடுக்காய், ஆகிய மூலிகைகளை எடுத்து இடித்துக் குடிநீராக ஆக்கிக் கொள்க. அதனை ஒரு நாளைக்கு மூன்று நேரமாக ஆறு நேரங் குடிக்க குழந்தைக்கு வரும் பில்லியக்கரம் நிற்கும்.

பூசை:-

ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி பூசை செய்து கொள்க. அரளிப்பூ, இளநீர், கறிச்சோறு, பனங்கள், கருவாடு ஆகியவற்றைக் கொண்டு குழந்தையைச் சுற்றி சுடுகாட்டில் வைத்து விட்டால் பில்லியக்கரம் நீங்கும்.

வீழி அச்சரம் - குறிகுணம்:-

இவ்வச்சரம் நாவிலுண்டானால் நாக்கு தடித்தல், தாழைக் குருத்தை மென்றால் உண்டாகும் செந்நிறம் போல் நாக்கு சிவத்தல். வாய் வெந்து போதல், உடல் கருமை நிறமடைதல், அதிகமான தாகம், நெஞ்ச டைப்பு, ஈரல் வெந்து நோதல், மிகவும் குளிர்தல், தலை மிகுதியாக வலித்தல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும். வெப்பமாய் கழிச்சலுண் டாகும். வாந்தியாகும். முதுகும் வயிறும் எரியும். நாக்கு நிறம் மாறியிருக்கும்.

நடை முறை வழக்கிலுள்ள எளிய அனுபவ முறைகள்:-

1. முற்றின தேங்காயின் பாலெடுத்துக் கொண்டு அதனை இரு வேளை கொடுக்க அச்சரம் நலமாகும்.
2. மாசிக்காயைத் தூள் செய்து வயதிற்குத் தக்க அளவெடுத்து தேனில் கலந்து கொடுக்கவும். மாசிக்காயைத் தேனில் இழைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.
3. மணத்தக்காளிக் கீரையைப் பருப்பு போட்டு கடைந்து தனியா கவோ சோற்றுடன் சேர்த்தோ கொடுக்கவும்.
4. சீரகத்தைத் தூள் செய்து சம பங்கு நாட்டுச் சர்க்கரை சேர்த்து சாப்பிடவும்.
5. நல்ல சுத்தமான பசு வெண்ணையை வாயில் தடவவும்.
6. திரிபலா சூரணத்தைத் தண்ணீரிலோ தேனிலோ கலந்து கொடுக்கலாம்
7. மாசிக்காய்த்தூள் 34 கி. நீர் 700 மி. இரண்டையும் 10 நிமிடம் காய்ச்சி வடிகட்டி 17-34 கி. எடுத்து வாய்கொப்பளிக்க அச்சரம் தீரும்.
8. திரிபலா சூரணத்தைக் குடிநீரிட்டு வாய் கொப்பளிக்கலாம்.

9. தகுந்த அளவு சங்கு பற்பம், குங்கிலிய பற்பம், பவளபற்பம், மான் கொம்புப் பற்பம் இவற்றையும் வழங்கலாம்.

10. 4.2 கி. பொரித்த வெங்காரத்தைக் காய்ச்சி முறித்துத் தேன் 35 கி. கலந்து அச்சரத்திற்குப் பூசவும்.

11. வெங்காரத்தைப் பொடித்து நீரில் கலந்து வாய்க் கொப்பளிக்கலாம்.

12. படிகாரத்தை நீரில் கலந்து வாய்கொப்பளிக்கலாம்.

உணவு முறை:-

முளைகட்டின தானியம், பயிறு விதைகள், பச்சைக் காய்கறி, கீரைகள், பால், பழம், வெண்ணெய், நெய் சேர்ந்த உணவுகளும் சிறப்பாக அகத்திக் கீரை, மணத்தக்காளிக் கீரை, வெந்தயக் கீரை, பொன்னாங்காணிக் கீரை முதலியவையும், எளிமையாக செரிக்கக்கூடிய உணவு, காரமில்லாத உணவும் நல்லது.

அத்திக்காய், வாழைப்பூ இவற்றை வழங்கலாம். இனிப்புச் சுவையானது வெப்பத்தைத் தணிக்குமாதலால் புளிக்காத இனிக்கின்ற பழங்களை வழங்கலாம்.

புளிப்பும் காரமும் புண்ணை அதிகப்படுத்தும். எனவே புளிக்காத மோர் தயிர் சேர்க்கவும். பாலூட்டும் தாய்மார்கள் பத்தியத்தைக் கடைபிடிக்க வேண்டும். இளநீர் நுங்கு இவற்றைப் பயன்படுத்தலாம்.

வெட்டிவேர், விலாமிச்சுவேர், நன்னாரி இவற்றின் ஊறல் குடிநீரையும் வழங்கலாம். பொதுவாக எளிதில் செரிக்கும் ஆவியில் வெந்த உணவுகளை வழங்குதல் நல்லது.

அச்சரம் - பாடல்

நோய் வரும் வழி, நோய் வருமிடம்:

அச்சரமென் றொருநோயுண்டக் கரமு மாகும்
    அவைவிளக்கு முள்ளாவிச் சூட்டா னாவில்
நிச்சயமாய் வேக்காட்டைத் தந்து மாப்போல்
    நீறுபூத் துத்துன்ப நிலைக்கச் செய்து
சச்சரவுண் டாக்குமென வன்றி யந்நாச்
    சார்ந்துவரு முள்ளினோய் நாற்ற நோயும்

வைச்சுநா நோய்மூன்றா வகுத்தோர் முன்னோர்
மருத்துவர்க ளறியுமா றுலகி லன்றே

(477-265)

அச்சரம் - குறிகுணம்:-

தலையில் வலியுந் தானுண்டாம்
தாது மிகவுந் துடித்து நிற்கும்
குலையும் வெந்து நாவெந்து
குளிர்ந்து தானே வரும்பிள்ளை
கலையும் பொசியு நாவெளுத்துக்
கலங்கிக் கண்டந் தான்வெந்து
மலையின் மிளகு கொளவொண்ணா
வகுத்துச் சொன்னோ மக்கரமே.

(477-265)

அச்சரத்தின் தொகையும் பேர்களும்:-

உலகி னச்சர மோதி னேழதாம்
இலகு சூலியு மியன்ற நீதியும்
அலகில் சோதியும் வீழி குண்டியும்
சூலக பாலியும் குமரி யும்மரோ.

(477-265)

ஒன்றான அட்சரங்கள் ஏழுநீ சொல்வோம்
உயர்சூலி அக்கரமுடன் நீதி அக்கரம்
மன்றான சோதிஅக்கரம் வீழி அக்கரம்
மகத்தான குண்டியக்கரம் கபாலி யக்கரம்
தன்றான குமரிஅக்கர மேழுஞ் செய்யும்
சதியான விவரத்தைச் சாக்கக் கேளு
குன்றான சூலிஅக்க ரத்தைச் சொல்வோம்
கொடியதலை நோயாகிச் சுரம்உண் டாமே.

(476-151)

வாய் புண்ணுக்குச் சாறு:-

பாரப்பா ஊறல்வகை கஷாயந் தன்னைப்
பகருகிறேன் சிசுக்களதில் பலநோய்க் கெல்லாம்

சேரப்பா மாயக்காய் சாத்திர பேதி
 சீரகத்தோ டரத்தை சந்தம் வகைக்கோ ரொன்று
வாரப்பா கிராம்பேலம் மதிரம் மூன்றும்
 வகையொன்றுக் கிருகளஞ்சி பொடித்துத் தூளாய்
நீரப்பா விட்டதனை யூற வைத்து
 நினைவாக வடிகட்டி யெடுத்துக் கொள்ளே.

எடுத்ததனைச் சிசுதரங்கண் டறிந்து தாக்கு
 இடமான தேகத்தில் வெதுப்புக் காய்ச்சல்
அடுத்துவந்த கழிச்சலொடு வேகம் வாய்ப்புண்
 அரோசிமுத லணுகாது தேகம் நன்றாம்
கொடுத்து வந்த தோஷமதுக் கூட்டும் போது
 தூபமொடு சற்பஅங்கம் தூள தாக்கி
தடுத்ததைநல் லுடைவிறகாம் தழலில் போட்டு
 தான்புகைக்க தீர்ந்துவிடும் தப்பா தென்னே.

(கை.பி.98-15)

மணப்பாகு:-

மாறுகின்ற அச்சரத்தால் மெலிந்து மைந்தர்
 மாதர்முலை யுண்ணாமல் வருந்து மானால்
நீறுகின்ற தென்னையினங் குரும்பை மேல்தோல்
 நீக்கி நன்றா யிடித்துச்சார் பிழிந்து கொண்டு
கூறுகின்ற சர்க்கரையிட் டுருக்கிக் காய்ச்சி
 குறுக்கியதில் சீரகத்தூள் தூவிக் கிண்டி
ஆறுகின்ற கூழைப்போல் நாவதனில் தேய்க்க
 அக்கரமுந் தீர்ந்தன்னை மூலையருந்தும் பாரே.

(கை.பி. 98-14)

நெய்:- 3

கருவான பாலகருக் குள்ள ரோகம்
 கணைப்புடனே அக்கரம் செங்கரப்பன் வாய்ப்புண்
பொருளாகத் தீருதற்கு நெய்தா னொன்று
 புளியன்விதைத் தோல்சிறங்கை பொடிய தாக்கி
தெரியான தேங்காய்பத் துடைத்து லேசாய்
 திருவியதில் தூள் கலந்து ரவியில் காய்ந்து
உருவான எண்ணெய்தனைப் பிழிந்துக் கொண்டு
 உற்றபசு நெய்யதிலோர் படிதான் சேரே.

சேர்த்திடுவாய் தெற்றிப்பூ தெற்றிப் பட்டை
சிறந்தவேர்ப் பட்டை.காக் கணம்வேர்ப் பட்டை
வார்த்திடுவாய் சுண்டைசிறு சுண்டை தூது
வளையுடன்நன் னாரிமலை தாங்கி வேர்த்தோல்
தீர்த்திடுவாய் விரிசந்தோ லத்திப் பட்டை
சிறுபூளை ஒடுவடக்கி குப்பை மேனி
சாத்திடுவாய் துளசிமுறி பொருத்தி கூட்டி
தக்காளி முருக்குபொரு தலையுங் கூட்டே.

கூட்டடா தென்னம்பூ மாதளையின் பிஞ்சு
குளமான ஈருள்ளி சமன்கழுநீர் வார்த்து
தீட்டடா துவைத்துநன்றாய்ப் புளிந்தி றுத்து
செவ்விளநீர் நாழிபசு வின்பால் நாழி
வாட்டடா எண்ணயொடு நெய்யுங் கூட
வருமளவு சாறுவகை யெல்லாம் நேராய்
காட்டடா இதனோடு இளநீர் பாலும்
கலந்ததிலே மருந்துவகை கருதிக் கேளே.

கேளப்பா திரிசாதி யேலமி லவங்கம்
கெருடப்பச்சை மாயக்காய் சாத்திர பேதி
ஆளப்பா கஸ்தூரி மஞ்ச ளோமம்
அதிவிடையம் திரிகடுகு அக்கி றாவும்
வாளப்பா வால்மிளகு நன்னாரி சந்தம்
மகிழம்பூ வதிமதுரம் வசம்பு தேற்றான்
மீளப்பா இராமிச்சத் திருக்கச் சோலம்
நெல்லி கடுக்காய் கூகைநீறுங் கூட்டே.

நீறுடனே குராசாணி யரத்தை சந்தம்
நேர்மையிரு சீரகம் ராமிச்சம் வேரும்
வீறுடனே செண்பகப்பூ வரிசி யாறும்
வகைபூலா விருட்சம்கோ ரோசினையுங் கூட
வேருடனே வகையொன்று விராக னெடை
பிசகாமல் பசுவின்பால் வார்த்த ரைத்து
வீறுடனே முன்மருந்தில் கலக்கிக் காய்ச்சி
மெழுகுபதம் வடித்திறுத்து விளம்பு வேனே.

விளம்புவேன் காசிடைதா னந்தி சந்தி
விருதான பத்தியமாய்க் கொடுத்தா யானால்
கிளம்பவே ஓடிவிடு முள்ளு ரோகம்
கிரந்திகணை யுள்காச்சல் கரப்பன் வெட்டை

கிளம்பவே செங்கழுவாய்ப் புழுவு செவ்வாய்
புழுவுதா னப்புழுவு அச்சரம் கிராணி
தளம்பவே மூலத்தில் கடுப்புச் சூடு
சகலவித நோயுமிதில் சாந்த மாமே.

(கை.பி. 98-40-43)

பாலசஞ்சீவி எண்ணெய்:- 1

இம்பூரல் சிறுகீரை முசுக்கை கொவ்வை
எலிச்செவியுங் குரும்பைபொன் னாங்காணி யிண்டு
அம்பான குப்பையுட மேனி தானும்
அவுரியுடன்பொடுதலைநல் லாடா தோடை
வம்பான வல்லாரைத் துளசி வாலி
வளர்துது வளைகோழி யவரை கொன்றை
முன்பான தகரைகையாந் தகரை யோடு
முருங்கையிலைப் பட்டைவிட்ணு காந்தி கூட்டே,

கூட்டுமோ ரிதழ்வசனம் படகம் நிம்பம்
கொள்ளானை நெருஞ்சில்நரிப் பயறீருள்ளி
வாட்டுநறு விலியினிலை சுரச மெல்லாம்
வாங்கியெண்ணெய் கொன்றிரட்டி வகையாய்ச் சேர்த்துப்
பூட்டுகற்கம் பஞ்சமூ லஞ்சா திக்காய்
புதியகருஞ் சீரகமும் சாதிப் பத்திரி
நாட்டுபஞ்ச திரவியமோ டுள்ளி துத்தம்
நற்கோரோ சனைகாய்ச்சுக் கட்டி தானே.

சட்டிக்கம்பிப் பிசினியொரு கழஞ்சு கூட்டிக்
கலந்தரைத்து மெழுகுபதம் வடித்துக் கொண்டு
திட்டமுட னருந்திவிட அச்சரங்கள் காய்ச்சல்
சேர்ந்தபதி னெண்கணமும் திசைகெட்டோடும்
வட்டதனப் பெண்ணரசே பத்தி யங்கேள்
வகையான யீருள்ளி முருங்கைக் கீரை
சட்டமுட னேயுண்ணச் சொன்னேன் பால
சஞ்சீவி இந்தஎண்ணெய் சபலந் தானே.

(477-167) 476-104-105)

எண்ணெய்:- 4

கருஞ்சீ ரகரோ கணிடுக்காய்
    காட்டு மல்லி வேர்வ கைக்கே
ஒருவ ரானிண் டங்கொழுந்து
    மொருபிடி யுள்ளி பலமிரண்டு
முருவிளக் கெண்ணெய் படியரைக்கால்
    முலைப்பால் வீசம் படியாக
மருந்தை யிடித்தே யெண்ணெயினில்
    மயன பதங்கோ ரோசனையே.

சினையே யிரண்டு வராகனெடை
    சேரப் பொடித்தெண் ணெயிலிட்டுத்
தனையே வடித்துண் ணக்கேளாய்
    சதுரா வயிற்று வேக்காடும்
வினைய மாக வேநாக்கு
    வெந்து புண்ணா யிருக்கிறதும்
பணியக் காய்ச்ச லுந்தீரும்
    பத்திய மிதற்கு நலமாமே.

(477-268)

எண்ணெய்:- 5

மணித்தக் காளியிலைத் துளசி
    வளருந் துத்திப் பிரமியிலை
கணித்த வில்வம் வல்லாரைக்
    கையாந் தகரைப் பொடுதலையும்
தணித்த நுணாபுங் கிலைச்சங்குச்
    சமனிலை யிடித்துச் சாறுபடி
துணித்த ஒன்று தான்றிக்காய்ச்
    சுக்கு கடுக்காய்த் திப்பிலியே

திப்பிலி பொத்தோ டரத்தை
    திகழும் ஓமம் வசம்புடனே
மப்பிலி யான கஸ்தூரி
    மஞ்சள் வகைக்குப் பலமரையாய்
இப்பிலி சாதிக்கா யொன்று
    இவைகளிடத்துச் சாற்றிலிடு
எப்ப விளக்கெண் ணைப்படியொன்
    றிட்டு யெரித்தும் பதமெழுகே.

மெழுகுப் பதறிதி லெண்ணெய்வடி
விடுமொரு கரண்டி தயிர்க்கு
அழகு பெரியோர்க் கிருகரண்டி
ஐந்து ஏழுநா ளிடவே
கழகு மாந்தம் அட்சரமும்
கணங்கள் கரிய கிரந்தியொடு
விழுகுங் கொடியப் படர்மேக
வெட்டைத் தீரும் பைங்கொடியே.

(476-38)

மேலுக்குப் பூச எண்ணெய்:- 10

அக்கரஞ் சகலத் துக்கு
மறைகிறேன் தயில மொன்று
தக்கவெள் ளருகு சம்பா
தாளிபொன் னெரிஞ்சி கையால்
மிக்கவே தலைச் சுருளி
வெற்றிலை தகரை தெற்றி
தொக்கசெம் பருத்தி நீலி
துளசிதென் குரும்பைச் சாறே.

குரும்பையின் சாறு நாழி
கூறுமுன் சார்வ கைக்கு
திரும்பவே வகைக்கு ழக்கு
சீரக மூன்று சந்தம்
விரும்பியே ரெண்டு திப்பிலி
வெட்பாலை வசம்பு கார்கோல்
அரும்பியேமதிர மக்கிறா
அசுவனோர் கழஞ்சி வாங்கே.

வாங்கியேசாற்றா லாட்டி
வளராவின் நெய்யே ரண்டம்
தாங்கியே தேங்கா யெண்ணெய்
சமன்வகை படியில் பாதி
பாங்குடன் கலந்து காய்ச்சு
பதம்வடி காசு வீதம்
நீங்கிடு மூன்று நாளும்
நீட்டியே மேலும் பூசே

பூசிடும் பாலகர் மேல்
புதியநீர் வேது விட்டு
ஆசுடன் நாலுக் கொன்று
அவ்வித மாகும் போது
பேசிடு மக்கரந் தான்
பேரது ஏழும் தீரும்
வாசிடும் கரப்பன் தீரும்
வருபிணி யகலு மென்னே'

(கை.பி.98-91)

இரத்த அச்சரம் - குறிகுணம்:-

நாக்குவாய் தொண்டை யெல்லாம்
நையவே சிவந்து புண்ணாய்
நீக்கிடுங் கால டைத்து
நீறியே நாற்ற முண்டாம்
தூக்கமு முலையுண்ணாது
சுரமுடன்ரெத்தஞ் சாயு
மாக்கமு மயக்க ரெத்த
மக்கரம் சாத்திய மென்னே.

(கை.பி.98-88)

நெய்:-

அத்திக்காய் பருத்திப் பிஞ்சு
ஆலின்வீழிறு தென்னம் பூவு
சுத்திய நவ்வல் பட்டை
துளசி பிச்சிச் சாறாத ளம்பால்
முத்துமே வகைக்கு ழக்கு
முச்சாதி கெருடப் பச்சை
மத்திய ஏலஞ் சீரம்
மாயக்காய் வசம்பு பச்சை.

பச்சையுங் கழஞ்சோ ரொன்று
பசுவின்நெய் யுரிதெங் கெண்ணெய்
யிச்சையா முழக்கி னோடு
யிவையெல்லா மொன்று சேர்த்து
மிச்சமாங் கலந்து காய்ச்சி
மெழுகுபதம் வடித்துக் கொண்டு

அச்சுத னருளால் ரெத்த
அக்கர மகன்று போமே.

(கை.பி.98-89)

இளைப்பக்கரம் - குறிகுணம்:-

இருமலு மிளைப்பு முண்டாய்
இசைவுடன் நாவும் பூத்துக்
கருகிடு மலமும் நீரும்
காய்ச்சலு மூக்கில் நீரும்
செருமலு முழியு மாறி
தினவுடன் சொறியுண் டாகும்
அருமையாய்ப் பால்கொள் ளாது
அக்கரமிளைப்ப தாமே.

(கை.பி.98-85)

அணிலெண்ணெய்:-

தேங்காய் ரெண்டு பால்பி ழிந்து
திறிசாதி யதிமதுர முடன்
பாங்கா யேலஞ்சீ ரகமும்
பகரு மக்கிறா யீருள்ளி
ஏங்கும் வகைக் கோர்களஞ்சி
ஈருள்ளிச் சார்விட் டரைத்து
ஆங்காய்க் கலந்து தான்காச்சு
அணிலொன் றருத் துதிரம் விடே
விட்டுத் தசையு மரிந்திட்டு
விரைவாய்க் காய்ச்சி முதிர்பதத்தில்
மட்டாய் வடித்துக் கலசமடை
மதலைக் கந்தி சந்தியுந்தான்
திட்டத் துடனே காசளவு
திடமாய் மூன்று நாள்கொள்ள
தொட்ட இளைப்பு அக்கரமும்
தூர வழிபோம் தோகையரே

(கை.பி.98-86)

பூசை:-

இளநீர் பாக்கு வெற்றிலையு
மிசைந்த பழமும் பொரிவகையும்
களுநீர் வெல்லம் புண்ணாக்கு
களபந் தீபம் தூபமுடன்
அழநீர் மதுவும் பொதிசோறும்
அஞ்சு வகையாம் பலகாரம்
மறையுந் தட்டுங் கோத்திரியும்
மகவைச் சுற்றிக் கோத்திரியே

(கை.பி.98-85)

உதட்டக்கரம் - குறிகுணம்:-

கீழ்மே லுதடு ரெண்டும்
கிளறியே தடிப்புண் டாகி
நீருமே சக்கை முள்போல்
நின்றுமுன் னாக்கி லேகி
நாளுமே பாலுண் ணாது
நடுங்கிடும் பால கன்றான்
ஊருமே முனக்க முண்டாம்
உதட் டக்கர மிதென்றே.

(கை.பி.98-87)

நெய்:-

வைத்திடு முழக்கு நெய்யில்
மாயக்காய் கழஞ்சி மூன்று
உற்றிடும் கதம்பைச் சாறு
ஊட்டி அரைத்து நன்றாய்
பற்றிய ஆத எம்பால்
படியரைக்கால் கலந்து
சுற்றியே வடித்துக் கொள்ள
சுண்டி லக்கரமும் போமே.

(கை.பி.98-88)

பூசை:-

அன்றிடுங் கறியுஞ் சோறும்
அரளியின் பூவு மஞ்சள்
துன்றிடு மிளநீ ரப்பம்
தூபமும் பொரியுங் கூட்டி
குன்றிய குட்டத் தட்டு
கோத்திரி யிருவத்தி னாலும்
கன்றிய மகவைச் சுற்றி
கடுத்த முச்சந்தி வையே.

(கை.பி.98-87)

உள் அக்கரம் - குறிகுணம்:-

மூக்குநீர் பாய்ச்ச லாகும்
முகமிக வெளிறிப் போகும்
நாக்குமே வெளுத்துப் பூக்கும்
நாபிவா யாவி தோன்றும்
தூக்கமுஞ் சுரமு மெத்தத்
துணுக்கெனத் தண்ணீர் வாங்கும்
தீர்க்கவிக் குணங்கள் கண்டால்
திகமுள்ளச் சுரமு மாமே

(477-267-268)

நெய்:- 1

அதிமதுரம் பூவந்திப் பழமி ரண்டும்
அவை வகைக்கு விராகன்ஒன் றறிந்து மேலும்
நிதிமுப்பால் வார்த்தரைத்து முலைப்பால் தன்னில்
நினைவாக கரைத்துபசு நெய்உ ழக்கு
சதியாக வேகலந் தொன்றாய் எரித்து
கடுகுமெழுகுப் பதத்தில் இறக்கி வைத்து
துதியாக விராகனெடை நெய்க்கொ டுக்க
சூர் அச்சரம் உட்காய்ச்சல் கூனமும் போமே.

(476-153-154

கடவாயக்கரம் - குறிகுணம்:-

கடவாயக் குவடும் புண்ணாகி
கருமுள் போலே சரசரத்து
அடவாய் முழிக்குந் துடிதுடிக்கும்
அன்னை முலையு மருந்தாது
தடமாய் வயிறும் கழிந்து வரும்
தலையுங் கனத்து நீரொழுகும்
மடவார் கையில் தரியாது
மைந்தர் கடவா யக்கரமே

(கை.பி.98-86)

குடிநீர்:-

நல்லதோர் வடலி மட்டை
நல்சீரங் கிஷ்ணசீரம்
மல்லியுங் கெருடப் பச்சை
மாயக்காய் சீகை காரம்
தொல்லைதீர் பிலாம்ப முப்பு
தொட்டாக்கால் வாடி வேரும்
ஒல்லையில் கிஷாய மிட்டு
ஊட்டிடத் தீரும் பாரே.

(கை.பி.98-87)

எண்ணெய்:-

தென்னையின் கனிதா னைந்து
திருகியேபால்பி ழிந்து
இன்னும்செம் பருத்திப் பூவு
ஈருள்ளி தெற்றிப் பூவு
மன்னங்கற் பூர வள்ளி
வகைவகைச் சாறு நாழி
சின்னமா யக்கா யேலம்
சீரகம் கார்கோல் சந்தம்.

சந்தம்சித் தரத்தை மாஞ்சி
சாதிக்காய் கிராம்பு பத்திரி
சிந்தையாய்க் கழஞ்சி வீதம்
சேர்த்தரை கலந்து காய்ச்சி

உந்தவே வடித்துக் கொண்டு
ஊட்டிடு மேலும் பூசு
விந்தையாய்க் கடவா யக்கரம்
வேருட னிளகிப் போமே.

(கை.பி.98-87)

பூசை:-

அக்கர மதுதான் தீர
அறையிறேன் கிரிகை கேளு
சர்க்கரை யடைக்காய் பூலம்
சந்தனம் பஞ்ச புஷ்ப
மிக்கதோ ருளுந்தன் சோறு
வெண்பொரி குட்டத் தட்டு
தக்ககோத் திரியி னோடு
சந்தியில் வைக்க நன்றாம்.

(கை.பி.98-86)

கபாலியச்சரம் - குறிகுணம்:-

கபாலியது நாவில்வரின் குடலீரல் னோய்
கனநெஞ்சு காடிச்சோ றதுபோற் பொங்கல்
அபாயநா வெந்தைந்தா நாள்வெ டித்தே
யதிலிருந்து குருதிநீர் வடிதல் தலைநோய்
உபாயமா யுடல்வலித்தல் கனமு நீங்கா
துறுசுரமாய் வரனெஞ்சு நோதல் வயிறும்
விபாகமாய் நொந்திரைந்து பேதி யாதல்
வெகுண்டுவகு மௌனமுனிவர் விளம்பி னாரே.

(477-267)

உடலுங் கனக்கும் வலிப்பெடுக்கும்
ஒழியாச் சுரமுந் தோன்றி நிற்கும்
திடலும் நெஞ்சு தலைநோ யாம்
சிறந்த நாவும் வேக்கா டாம்
குடலும் ஈரல் நொந்து விடும்
குமரி வயிறு பேதி யுமாம்
மிடறுங் காடிச் சோறது (ஆறு) போல்
வேகும் விதங்கள் பார்த்த றியே

(476-152)

குண்டியச்சரம் - குறிகுணம்:-

அச்சரத்தின் குணங் கேளீர்
அரைக்கு மேலே சுரங்காணும்
மச்சம் போல வெளுத்துடல்
மஞ்சள் நிறச்சிறு நீர்விழும்
எச்சவாயிற் சுருக்கென்று
மிளைத்தே யுடம்பு கடுப்பாகும்
கொச்சைக் குரலுங் கடுப்பெய்தும்
குண்டி யக்கர குணமாமே.

(477-267) (476 - 153)

குண்டியது நாவில்வரி னீரலது
வெந்துநாக் கொதித்தெ ழுந்து
மண்டுநாச் செம்மையாய் வாய்கூச
லிருமுதல் வயிறு கழிதல்
விண்டுடல் கடுத்தனெஞ் சிற்கரித்
தெதிரெழல் விலாளி வோர்சார்
கண்டுநோ தலினுடன் னீர்வேட்கை
யிவைவந்து கதிக்கு மன்றே.

(477-267)

நாவுஞ் சிவந்து வாய்க்கூசும்
நலியாக் கடுக்கும் உடலெல்லாம்
மேவும் வயிறு தான்கழியும்
மிடுக்காய் நெஞ்சுங் கரித்தெடுக்கும்
தாவும் இருமும் ஈரல்விலா
தளர்வாய் நோகுந் தாகமிகும்
நீவுங் கபாலி அட்சரத்தை
நிகழ்த்துங் கேளு உடல்சனவே.

(476-152)

கற்கம்:-

சுண்டைவேர் நிம்பக்கா யளவ ரைத்து
துலங்காவின் வெண்ணெயுட னருந்தத் தீரும்

(476-153) (477-268)

உள்ளுக்கும் மேலுக்கும் எண்ணெய்:-

திரிபுரத் தானிலை கொண்டு
திரிந்த வரைத்து அடையாக்கி
வருந்தி யேரண்ட எண்ணெய்விட்டு
மகிழ்ந்து காய்ச்சிக் குடுப்பீராய்
அறிந்து பக்கம் நெஞ்சுதொண்டை
ஆன உச்சிக் குழலிலிட்டுப்
பரிந்தகா சத்தனை கொள்ள
பாடுங் குண்டி அச்சரமே.

(ஏடு.329-187)

மருந்து:-

கொண்டகரிப் பான்அரைப் பாக்கள வரைத்துக்
குறுகவே சீரமுட னருந்தத் தீரும்
வண்டணியுங் குழலாய் பச்சரிசிச் சோறும்
வயங்காவின் பாலும் பத்தியமாய்க் கூட்ட
குண்டியட்ச (ர) மான வியாதிவிட்டுக்
குடிபோகு மென்றுசிவன் கூறினாரே.

(476-153) (477 - 268)

குமரி அச்சரம் - குறிகுணம்:-

குமரியது நாவில்வரி னாகூசல்
தடிப்பேறல் கூறுஞ் சதைநோய்
அமர்துயர்கண் ணோதல்சுரம் வாய்கைத்தல்
வாந்திமிகல் ஆர்ந்த வுண்ணா
அமர்மிக்க வளர்தல்பல் மஞ்சளூறல்
தலைத்தோன்றி வளரு மூக்கில்
குமுறிரத்த மூன்றுநாள் வடிதலா
மெனமுனிவர் கூறி னாரால்

(477-267)

அறியக் கேளு ஐந்தா நாள்
அழன்றே நாவும் வெடிப்புற்று
தெறியும் ரத்தமாய் வயிறு
தெறித்தே போகும் குமரி அச்சரம்
நெறியாய்க் கேளு நாவதுதான்
நிறுவர்கூசும் தடிப்பேறும்

கறியும் நொந்து விசனமுறும்
கசித்த இருகண் நொந்திடுமே

நொந்தே சுரமுமு மேற்காயும்
நுவலும் வாயுங் கசப்பருத்தும்
தந்தை வாந்தி மிகபெருகும்
தாய்க்கு வளரும் உண்ணாக்கும்
தந்தே எயிறு பசுமையுறும்
தயங்கு மூக்கு கபாலமதால்
வந்தே இரத்தங் கொப்பளிக்கும்
மருவு மூன்று நாளாறே.

(476 - 152)

சிங்ஙவு அச்சரக்குணம்:-

சிங்ஙவு அக்க ரந்தான்
செய்குணம் புகலக் கேளு
தங்கம்போல் மின்னுந் தேகம்
தணத்திடும் நாக்கும் தொண்டை
மங்கையர் முலையுண் ணாது
வாந்தியு மதிக முண்டாம்
வெங்கயல் பஞ்சு போலே
வெளுத்திடும் நாவும் புண்ணாம்.

(கை.பி.98-83)

உள்ளுக்கும் மேலுக்கும் எண்ணெய்:-

சீருருக் கெண்ணெய் நாழி
சீரகம் கார்கோல் சந்தம்
பாரதி மதுரஞ் சாதி
பத்திரி கிராம்பு ஏலம்
சேர்வகை சமனதாக
தெற்றிப்பூச் சாறு நாழி
கூர்மையா யரைத்த தெல்லாம்
குழம்பிவை கலந்து காச்சே

காச்சு மெழுகு பதம் வடித்துக்
காசி னிடையாய் நாள் மூன்று
வாய்ச்ச எண்ணெய் தான் கொடுப்பாய்
வகையா யந்தி சந்தியுந்தான்

பாய்ச்சு முழுகு வெண்ணீரில்
    பரிவாய் ஒன்று விட்டொருநாள்
தேச்சு முழுக அக்கரமும்
    தீரு முடலும் நன்றாமே.

(கை.பி.98-84)

மருந்து:-

வைத்திடு சீனக் காரம்
    மாயக்காய் முலைப்பால் தன்னில்
சத்தற வுரைத்து நன்றாய்
    தாய்முலை பூசி யூட்ட
சித்தறப் பண்ணுந் தீரும்
    சிங்கவு அக்க ரம்போம்
கொத்தற பொதிகை வாழும்
    குறுமுனி யருளிச் செய்தார்.

(கை.பி. 98-84)

பூசை:-

புண்ணொடு தோஷந் தீரப்
    புஷ்பங்கள் பஞ்ச வாசம்
தென்னியகன்னித் தேங்காய்
    செங்கருங் கோழி முட்டை
தண்ணிய மூல மந்திரம்
    சலமதி லோதிப் பிள்ளை
மண்ணிய தலையைச் சுத்தி
    மடையருக் கடியில் வையே.

(கை.பி.98-83)

சூலியச்சரம் - குறிகுணம்:-

சூலியது நாவில்வரி நாதான் வெந்து
    சூழுமேய டையாக வெளுத்து மாப்போல்
சூலியெனும் பேர்க்கொக்கச் சூலத் தாலே
    சூட்டலென வந்நாவிற் குத்த லாதல்
மேலுமதில் வழுவழுத்த வெண்ணீ ரூறல்
    வெள்ளாவி [illegible] மண்ணின் நாற்ற மாதல்
காலூதல்வெள் ளோக்காளம் தண்ணீர் வேட்கை
    கால்கைக் குடலமெலாங் கருமை யாமே.

ஆத லன்றியு மாகுந்த தலைவி
தீத தாகநோய் தீயசு ரம்வரும்
காது மேயிடைக் கடுப்ப தாமென
ஓதி னார்முன்னரே யுள்ள நூலரே

(477-266)

சுரமுண்டாம் இடைகடுக்கும் நாவேக் காடாம்
துடிநாவும் வெளுப்பேறி மாபோ லாகும்
திறமான வெள்ளாவிப் போல்வாய் நாறும்
திரண்டுஅடை வெளுத்திரசம் வாய்நீர் ஊறு
உறமான வாந்தியம் வெள்ளோக்கா ளந்தான்
ஒழியாமல் தண்ணீர்மேல் தவனங் கொள்ளும்
கரபாத உடலமெல்லாங் கருமை தோன்றும்
கழல்நீதி யக்கரத்தைக் கருதிக் கேளே

(476-151)

சோதியக்கரம் - குறிகுணம்:-

சோதியது நாவில்வரி னாவும் வேதல்
தொடர்நிறமும் பல்லழுக் குறுமுந் நாடி
வேதனையாய்த் துடிதுடித்தல் தலையு மிடிபோல்
வேகமா யிடித்தல்வரி கணுக்கால் கணைக்கால்
தீதுபுரிந் துளைதல்சுரம் வீசலுடன் கழிதல்
திகழ்வாந்தி மிகவெடுத்தல் வயிற்றி னுள்ளும்
ஓதுகின்ற மேற்புறமு மோய்வின்றி யெரிதல்
மேவலென மருந்துநூல் விளம்புகின்ற தன்றே

(477-266)

கருவென்ன குளிர்ந்து தலைவலித்துக் காணும்
கதித்துசுரம் மேல்வீசும் வாய்க், சக்கும்
உருவென்ன நாவதுஞ் சிவந்து மாபோல்
உலந்து நிற்கும் நெஞ்செரித்து வரளும் வாயும்
துருவென்ன சோதி அட்சரத்தைச் சொல்வோம்
துடிதுடிக்கும் இடியுமே தலைவ லிக்கும்
பருவென்ன கணுக்கால் நோம்சுரமும் வீசும்
பகர்நாக்குப் பல்லழுக்கு நிறமுண்டாமே.

(476-151)

தொந்த அக்கரம் - குறிகுணம்:-

வாய்க்குள் ளெங்கும் பூப்போல
    வந்து படர்ந்து புண்ணாகி
நாக்கு மசையா துடல்காயும்
    நவ்வி முலையு முண்ணாது
மூக்கு மடைத்து நீரொழுகு
    முள்ளுப் போலே முகமெங்கும்
ஆக்கங் குறையுங் குழல்மடவீர்
    அக்கரத் தொந்தக் குணமிதுமே.

(கை.பி.98-89)

குடிநீர்:-

தெங்குதா லந்தின் காரம்
    சீரக மீர வுள்ளி
மங்கையே நெல்லி முள்ளி
    மாயக்காய் சாத்திர பேதி
சங்கையாங் கிஷாய மிட்டு
    தாய்முலைப் பாலுஞ் சேர்த்து
தொங்கலாய்க் கொள்ளும் போது
    தொந்த வக்கரமும் போமே.

(கை.பி.98-90)

நெய்:-

சாற்றிடு முழக்கு நெய்யில்
    சாதிக்காய் கிராம்பு பத்திரி
மாற்றிடுஞ் சந்தனத் தூள்
    மாயக்காய் சமன தாக
கூற்றுதேன் குரும்பைச் சாறு
    குளம்பவிட் டரைத்துக் காய்ச்சி
ஆற்றியே வடித்து வூட்ட
    அக்கரந் தீர்ந்து போமே

(கை.பி. 98-90)

குழம்பு:-

தென்னையின் குரும்பை மேல்தோல்
  சீவியே யிடித்து நன்றாய்
நன்னயச் சாறு பிழிந்து
  நல்லசர்க் கரையு மிட்டு
வன்னியிட் டுருகக் காய்ச்சி
  வணிகன்தூள் தூவிக் கிண்டி
நன்னயக் கூழம் போலே
  நாவதிற் தேய்க்கப் போமே.

(கை.பி.98-89)

மேலுக்கு பூச எண்ணெய்:-

போக்கிடுங் கையான் சாறு
  பொடுதலை பருத்திச் சாறு
ஆக்கிடு மிஞ்சிச் சாறு
  அவரிச்சா றுள்ளிச் சாறு
பாக்கிலா துழக்குச் சாறுவீதம்
  பச்சையாந் தேங்கா யெண்ணெய்
வாக்கிலா நாழி சந்தம்
  வசம்பிரு சீரம் கார்கோல்

கோலதி மதுரம் வெள்ளைக்
  குங்கிலிய மிளக ரத்தை
ஏலமும் கழஞ்சி வீதம்
  யிடித்தரைச் சாறு விட்டு
சாலவே யெரித்து நல்ல
  தருபதம் வடித்துக் கொண்டு
மேலெங்கும் பூசி வெண்ணீர்
  விட்டொரு நாளை விட்டே.

(கை.பி.98-90)

நீதி (நீலி) யச்சரக் குறிகுணம்:-

நீதிநா வில்வரிளோ வுயர்தாழ்வு
  மின்றிநடு நிலையாய் நாவும்
கோதின்றி யுட்சிவந்து வெளியில் மாப்
  போலுற்றுக் கூறு மாவும்

தீத்தா யுலர்ந்து வாய் வரளலொடு
கைத்தனெஞ் செரிவுகுளிரல்
ஓதுதலை வலித்தல் சுர மிகுந்துமேல்
வீசலிவை யோதி னாரே.

(477-266)

கருவென்ன குளிந்துதலை வலித்துக் காணும்
கதித்துசுரம் மேல்வீசும் வாய்க்க சக்கும்
உருவென்ன நாவதுஞ் சிவந்து மாப்போல்
உலந்து நிற்கும் நெஞ்செரித்து வரளும்வாயும்
துருவென்ன சோதிஅட் சரத்தைச் சொல்வோம்
துடிதுடிக்கும் இடியுமே தலைவ லிக்கும்
பருவென்ன கணுக்கால்நோம் சுரமும் வீசும்
பகர்நாக்குப் பல்லழுக்கு நிறமுண்டாமே.

(476-151)

பில்லி அக்கரம் - குறிகுணம்:-

காதுங் கண்ணு முகமெங்கும்
கதிக்க ஊருந் தான்சொறியும்
பார்த்து மடவார் கையதிலே
பாலன் தரியா துடிதுடிக்கும்
மேதும் சிவந்து புண்ணாகி
விரும்பிக் கொண்டா லுடன்தட்டும்
தாதும் பில்லி யக்கரந் தான்
தீரக் கிரிகை யதுகேளே.

(கை.பி.98-84)

குடிநீர்:-

அதிக மதுர மீருள்ளி
அழகாம் சாதிப் பத்திரியும்
முதியும் செம்பொன் னெருஞ்சியுடன்
மூக்கறச் சாறனை நல்துளசி
புதியுந்த தென்னங் குரும்பலுடன்
பனையின் காரம் பரிதிக்காய்
விதியின் படியட கஷாயம்
விட்டுக் காய்ச்சி யெட்டொன்றே.

எட்டொன் றாக்கிநாள் மூன்று
யிசல்வா யாறு நேரமுந்தான்
மட்ட யாருந்த பாலருக்கு
வந்த பில்லி யக்கரமும்
கஷ்டப் படுத்தும் புன்பொடியும்
கடிய பறங்கி சொறியூர்தல்
திட்டத் துடனே தீருமென்று
திறமா யுரைத்தார் சேயிழையே.

(கை.பி.98-85)

பூசை:-

கிரிகையது தான்பாணி யிலை
கொட்டும் பஞ்சாட்சர மொட்டி
அறியச் செவித்து முகத்தெறிந்து
அரளிப் பூவு மிளநீரும்
கறியும் சோறும் பனங்கள்ளும்
கருவா டுறட்டிக் கோத்திரியும்
அறியச் சுற்றிச் சுடு காட்டில்
அகமே வைத்து முறிப்பதுவே.

(கை.பி.98-85)

வீழி அச்சரம் - குறிகுணம்:-

நன்றான வீழியது நாவில்வரி
னதுபரும னற்றா ழையின்
கன்றான் குரத்தைமெல் நிறமாதல்
வேதல்வாய் கருமை மேனி
முன்றாவு தலைநோத லிவையென்று
முன்னோர்கள் சொன்ன
வன்றாக நெஞ்சடைப் பீரலதி னோதல்
குளிர்வாய்தல் மிகவேதாமே.

(477-267)

நிறமுந் தோன்றி வேக்காடாய்
நின்றே கழியும் மிகயெடுக்கும்

புறமும் வயிறு தான்எரியும்
புகல்வோம் வீழி அட்சரத்தை
திறம தாக சொல்லக்கேள்
தியக்கங் குளிர்ந்து தலைநோவாம்
மறமுமிகுந்த நாக்கதுதான்
மடலின் தாழைக் குருத்தெனவே.

(476-151-152)

தாழங் குருத்தைத் தின்றதுபோல்
தானே தோன்றும் வாயதனில்
சூழ மேனி கறுப்பேறும்
துருத்து நெஞ்சில் இருப்புறத்தும்
நீழல் மிகுந்த தாகமுமாம்
நெருங்கு மீரல் நொந்துவிடும்
ஈழ மிகுந்த குண்டியக்கரம்
என்னும் இயல்பு நாசிவப்பே

(476-152)

வாந்தி

வேறு பெயர்:-

வாயாலெடுத்தல், சர்த்தி, வமனம்

இயல்:-

உண்ட உணவு, குடித்த நீர் இவை செரித்தோ செரியாமலோ விரைவாக மேல் நோக்கி வெளியாவது 'வாந்தி' எனப்படும்.

நோய் வரும்வழி:-

மாப்பண்டம் , ஊசிய பொருட்கள், கொழுப்பு நிறைந்த ஊன் பொருட்கள், நத்தை, நண்டு, மீன் முதலிய செரியாப் பொருட்கள், எண்ணெய் பொருட்கள் ஆகியவற்றை மிகுதியாய் உண்பதாலும் நஞ்சுப் பொருட்களாகிய வெள்ளைப்பாடாணம், மருக்காரை, எட்டி முதலியவற்றை உட்கொள்வதாலும் குன்மம் போன்ற வயிற்று நோய்க ளில் உண்ட உணவு செரிக்குந் தன்மையிழந்து வயிற்றில் தங்கிய பொருள் புளித்தலால் வாந்தியுண்டாகும். உணவுக்கும் வயிற்றுக்கும் ஒரு தொடர்புமின்றி வேறு பல காரணங்களாலும் வாந்தி எழுவதுண்டு.

குழந்தைகள் சாப்பிடும்போது பிறர் பார்க்க கண் ஏறு ஏற்படும். அதனால் வாந்தியேற்படும். வயிற்றில் குழந்தைகளுக்குப் பூச்சி இருப்பதாலும் வாந்தி வரும். ஒற்றைத் தலைவலி, பித்தப் பெருக்கு, வெறிநோய் (பைத்தியம்) இருமல், குடல் பிடிப்பு, கல்லடைப்பு, வயிற்றிலுண்டாகும் கட்டிகள் ஆகிய நோய்கட்கு குறியாயும் வாந்தி யேற்படும். சுற்றிச் சுழன்று ஓடல், கப்பலில் போதல், விமானத்தில் போதல், தனக்காகாப் பொருளைத் தொடல் (அல்) பார்த்தல் ஆகிய மனத்தின் வேற்றுமையாலும் வாந்தி உண்டாகும். ஊழி (வாந்திபேதி) நோயிலும் ஏற்படும்.

குறிகுணங்கள்:-

வாய்நீர் ஊறல், வாய்குமட்டல், மயக்கம், ஓக்காளம், நாத்தடுமாறல், வயிறு இரைந்து நோதல், புரட்டல், ஏப்பம், விக்கல், மார்பு படபடத்தல் என்னும் குறிகுணங்கள் வாந்தி வருமுன் நிகழும்.

வாந்தியின் வகைகள்:-

இத்தகைய வாந்தி, சாதாரண வாந்தி மற்றும் **ஆபத்தான நோய்களின்** அறிகுறி வாந்தி என 2 வகைப்படும். குழந்தைகளுக்கு வாந்தியுடன் வயிற்றுக் கோளாறு ஏற்படலாம். இரைப்பை மற்றும் குடலில் சிறிது வலியுடனோ, சுரத்துடனோ இருக்கலாம். இப்படிப்பட்ட நோய் மருந்தின்றி குணமாகிவிடும்.

வாந்தி

சாதாரண வாந்தி, நோய்களின் அறிகுறியாக வரும் வாந்தி

நோய்களின் அறிகுறியாக வரும் வாந்தி:-

மூளைச்சவ்வு அழற்சி, காதுவலி, அடி நா தசை அழற்சி, இரைப்பை, குடல் வயிற்றுப் போக்கு, கெட்டுப் போன நச்சால் ஏற்படும் வாந்தி, குடல் வால் அல்லது குடல் அடைப்பு, கடுமையான சுரம், மலேரியா, ஈரல் அழற்சி, ஒற்றைத் தலைவலி, சிறுநீர் மண்டல தொற்றுநோய், பித்தப்பை தாபிதம் ஆகிய நோய்களின் அறிகுறியாக வரும் வாந்தியா கும்.

வளி, அழல், ஐயம், முக்குற்றம், வெறுப்பு, புழு என்ற காரணங்க ளால் ஆறு வகை வாந்தி வரும் என சிலர் கூறுகின்றனர். இவற்றுடன் கண்ணேறு, எரு, குருதி ஆகியவற்றையும் இணைத்துக் கூறுவர்.

வளிவாந்தி:-

வாய் குமட்டல், வாய் நீரூறல், வெள்ளோக்காளம், வாய் கைத்தல் என்னும் குறிகுணங்களைக் காட்டி, அடி வயிறு, அடி முதுகு, வயிற்றின் இரு பக்கம் ஆகிய இடங்களில் வலி, குடல் புரட்டல், இரைதல், நோதல் ஆகிய குறி குணங்களைக் காட்டி இடைவிடாமல் வாந்தியா கும். தொண்டையைக் குத்தி மிகுந்த ஒலியுடன் விரைவாக வெளிப்ப டும். ஏப்பம், விக்கல், மார்பு நோய், மார்பு படபடத்தல், இளைப்பு, களைப்பு, குரல் கம்மல் ஆகிய குறிகுணங்கள் வளி வாந்தியினுடை யவை.

அழல் வாந்தி:-

நீர் வேட்கை, வாய் கைத்தல், உவர்த்தல், தலை நோதல் (சுழற்றல்) மூர்ச்சை, மயக்கம், உடல் எரிதல் முதலிய குறி குணங்களைக் காட்டி வாந்தியேற்படும்.

இவ்வகை வாந்தியில் வாந்தி, மஞ்சள், இலைப்பச்சை, சிவப்பு நிறங்கள் இவை கலந்த நீர் போன்று காணப்படும். சுவையில் கைப்பு, கார்ப்பு அல்லது உவர்ப்பு கலந்தாற்போல் தோன்றும்.

ஐயவாந்தி:-

வாயில் அதிகமான நீர்ச்சுரப்பு, வாயில் நெய் பூசியது போல் குழகுழத்தல், தொண்டையில் கோழை கட்டல், வாய் நாற்றமடித்தல், வாய்நீர் இனித்தல் அல்லது துவர்த்தல் ஆகிய இக்குறிகளைக் காட்டி இடைவிடால் வாந்தியை ஏற்படுத்தும். வாந்தி வரும்போதே மார்பு நொந்து துடித்து முகம் வியர்த்துக் கண் பஞ்சடையும்.

முக்குற்ற வாந்தி:-

வாய் சுரந்து நீர் வடிதல், அந்நீர் பலவகைப் பட்ட சுவைகளாய்த் தோன்றல், தொண்டையடைத்தது போன்றிருத்தல், அதிகமாக தாகம், மூர்ச்சை, உடல் நடுக்கம் முதலிய குறிகுணங்களைக் காட்டி மிகுந்த கோழையுடன் கூடிய வாந்தியை உண்டாக்கும். வாந்தியெடுத்தபின் உடல் வியர்த்து தலை நொந்து அறிவற்றிருக்கச் செய்யும். இரு விலாப் பக்கங்களும் புடைத்தெழும்.

வெறுப்பு வாந்தி:-

தனக்குப் பிடிக்காத ஒத்துக் கொள்ளாத பொருட்களைப் பார்த்தல், தொடுதல், மனதினால் நினைத்தல் இவற்றால் வாய் நீரூறி வாய் குமட்டி வாந்தியை யுண்டாக்கும். சில நேரங்களில் மயக்கமுண்டாகும்.

புழு வாந்தி:-

வயிற்றில் பல வகைப்பட்ட பூச்சிகள், புழுக்கள் அதிகமாகச் சேர்ந்து கீழ் நோக்கி வெளியாகி விடும். சில நேரங்களில் அவை வயிற்றில் தங்கி மேல் நோக்கி வரும். அப்போது வாய் குமட்டி உமிழ் நீர் பெருகி வாந்தியை ஏற்படுத்தும். புழுக்கள் வெளியாகும்.

கண்ணேறு வாந்தி:-

கண்ணேறு (திருஷ்டி) படுவதால் உண்டாகும் வாந்தி. குழந்தை உண்ணும் உணவின் தரம், அளவு இவற்றைக் காணும் ஒருவர் அல்லது மற்றொரு குழந்தை அத்தகு உணவு தனக்கில்லையே என்று மனதிற் குள் நினைக்கும் அளவில் உண்டாவது இந்நோய்.

மருத்துவம்:-

கண்ணேறு வாந்திக்கு மனம் குளிரத்தக்க சாந்திகள் செய்ய வேண் டும். எரியெண்ணெய் இட்டு காய்ந்து உமிழ்தல் நாட்டு வழக்கு. மூன்று நிறமான உருண்டைகளைச் சோற்றில் செய்து வைத்துக் கொண்டு பகல் 12 மணி உச்சி நேரத்தில் அச்சோற்றுருண்டைகளைக் கொண்டு குழந்தையைச் சுற்றி முத்திசையில் அவற்றைத் தூக்கி எறிய வேண்டும். இதுவும் நாட்டு நடப்பில் உள்ள வழக்கு.

எரு (மல) வாந்தி:-

இயற்கையாகக் கீழ்நோக்கி வெளியேற வேண்டிய எரு இயற்கைக்கு மாறாக மேல் நோக்கி வெளியாவதே இந்நோய்.

பெருங்குடலிலுள்ள எரு அழலால் வறண்டு குடலில் செயலிழந்த போது அழலின் பெருக்கால் முக்குற்றங்களைக் கேடடையச் செய்து மேல் நோக்குங்கால் தூண்டப்படுகிறது. வயிறு கடுத்தல், புரட்டல், வயிற்றில் தாங்க முடியாத வேதனை, மூச்சுத் தடுமாறல் கை கால் சில்லிடல், வயிறு உப்பல், வயிற்றைத் தொட முடியாத அளவுக்கு நோதல், நீர் வேட்கை, சுரம், தலை நோய், மயக்கம், வாய் நீரூறல் முதலிய குறிகுணங்களைக் காட்டி வாந்தியுடன் மலத்தையும் வெளி யாக்கும்.

குடற்பிடிப்பு நோய், குடலண்டநோய், வயிற்றில் அதிக அடிபடுதல் என்னும் இவற்றிலும் எரு (மல) வாந்தி பிறக்கும்.

குருதி (இரத்த) வாந்தி:-

இளைப்பு நோயில் நுரையீரல் கேடடைந்து அங்குள்ள குருதி மாறுதலின்றி நுரையுடன் கலந்து வாந்தியெழும். குன்ம நோயில் வயிறு புண்ணாகி அதனின்று கசிந்த இரத்தம் உணவுடன் கூடிக் கறுத்து வெளியாகும். வலப்பாட்டீரல், இடப்பாட்டீரல், இவ்விரண்டும் கேட டைந்த நிலையில் குருதி வெளியாகும். இவையன்றி குருதியழல் நோயிலும், தமரக நோயிலும் குருதி வாந்தியாகும்.

தீருவன, தீராதன:-

முக்குற்ற வாந்தியும் மலவாந்தியும் தீராதன. பிற வாந்தி வகைகள் தக்குந்த மருத்துவத்தால் நீங்கும்.

மலமும் நீரும் அடைபட்டு உடல் முழுமையும் வியர்வையுடன் கையும் காலும் வீங்கிக் காணல், வயிறு பொருமல், நாவறளல், மூச்சுத்தடைபடல், இளைப்பு, விக்கல், மயக்கம் ஆகிய குறி குணங்களுடன் இடைவிடாத வாந்தியானால் மரணம் நிகழும்.

மருத்துவம்:-

தன்னிலையில் வேறுபட்ட தீக்குற்றத்தை ஒழுங்குபடுத்தவும் பசித்தீயைப் பெருக்கவும், தன்னளவின் மிகுந்த மேல்நோக்குங்கால், பரவுங் காலைத் தன்னிலைப் படுத்த முதலில் கழிச்சல் உண்டாக்குதல் நன்று. வாந்தி வருவதற்கு முதற்காரணமானவற்றை அறிந்து அவற்றிற்குரிய மருத்துவத்தைச் செய்ய வேண்டும்.

கழிச்சலுண்டாக்க மருந்து:-

பன்னீர்ப் பூ, கொத்துமல்லி, சரக்கொன்றைப்புளி, காக்கட்டான்வேர் இவற்றை வகைக்கு 18 கி. எடுத்து முறைப்படி குடிநீராக்கிக் கொடுக்க ஓரிரு முறை கழிச்சலாகும்.

கொட்டைத் திராட்சை, அத்திப் பழம் இவற்றை வகைக்கு 35 கி. எடுக்க. அதிமதுரம், சீரகம், குரோசாணிஓமம் வகைக்கு 35 கி. எடுத்து குடிநீராக்கிக் கொடுக்க கழிச்சலாகும். அதன் பின்னர் வாந்திக்குரிய மருத்துவத்தைச் செய்யலாம்.

மருத்துவம்:-

மலவாந்தியில் கீழ்வாய் வழியே பீச்சுக் குழலால் தேன், சிற்றாமணக் கெண்ணெய், பால் இவற்றை ஓரளவாய்க் கட்டி உட் செலுத்துக. கழிச்சலானால் குணம் தரும். அறுவை மருத்துவத்தாலும் பயனளிக்கும். இன்றேல் நோய் கடுமையாகும்.

குடிநீர்:- 1

ஆலங்கொழுந்தும் பட்டையும் ஆவாரம் கொழுந்தும் பட்டையும் விடதாரிக் கொழுந்தும் பட்டையும், நாவல் கொழுந்தும் பட்டையும், கருவேலங் கொழுந்தும் பட்டையும் அத்திப்பட்டை, தென்னைமொக்கு ஆகிய ஏழு பொருட்களையும் வகைக்கு 9 கி. எடுத்திடித்து ஒரு

மண் சட்டியிலிட்டு 650 மிலி தண்ணீர் விட்டு 170 மி.லியாகக் காய்ச்சி வடித்து அதில் சீரகம், அதிவிடயம், மாசிக்காய், கிராம்பு, சாதிக்காய், விளாம்பிசின் ஆகிய இவ்வேழு பொருட்களையும் வகைக்கு 1 கி. எடுத்துப் பொடி செய்து தூவி வேளைக்கு 20 மி.லி.யாக இரண்டு வேளையும் 3 (அல்) 5 நாள் கொடுக்க வாந்தி நின்று போகும்.

குடிநீர்:- 2

திப்பிலி, அக்கராகாரம், சீரகம் இவற்றைச் சமமாயெடுத்து தேன் விட்டு வறுத்து நீர் விட்டுக் காய்ச்சிய குடிநீரைக் கொ்டுக்க வாந்தி போகும்.

குடிநீர்:- 3

மக்காச் சோளக் கதிரின் சடையையும் பட்டுக்கந்தையையும் கருக்கி சீரகத்தை வெடிக்கவிட்டு நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி குடிக்க நிற்கும்.

குடிநீர்:- 4

சீரகத்தைச் சீலையிலே முடிந்து புடம் வைத்து அந்த சீலையுடனே அரைத்து இள வெந்நீரில் சாரித்துக் கொடுக்க மிகுந்த களைப்பும், வாந்தியும் தீரும்.

குடிநீர்:- 5

காடிச்சோறு, வசம்பு, மிளகு, அசமதாகம் ஆகியவற்றை எடுத்து குடிநீராய்ச் செய்து கொடுக்க வாந்தி நிற்கும்.

அப்படியும் நிற்கவில்லையென்றால் நன்னாரி பட்டையைக் குடிநீரில் அரைத்துக் கொடுக்க வாந்தியும் ஓக்காளமும் நிற்கும்.

(காடிச்சோற்றுக்) குடிநீர்:- 6

காடிச்சோறு, ஓமம், வசம்பு, நுணாயிலை, மிளகு ஆகிய மருந்து களைச் சட்டியிலிட்டு சாம்பலாக்கி 335 மி.லி. தண்ணீர் விட்டு 85 மி.லி.யாகச் சுருக்கிக் காய்ச்சி மூன்று வேளை கொடுக்க வாந்தி நிற்கும்.

குடிநீர்:- 7

வெற்றிலையில் நரம்பெடுத்து, வேண்டும் அளவு சுண்ணாம்பு பூசி மடித்து சட்டியிற் போட்டு நன்றாய் வறுத்துக் கொள்க. அதில்

1.3 லி. தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து கொடுக்க தீரும்.

குடிநீர்:- 8

நண்டு வளைத் தண்ணீர், செவியம், சுக்கு, விலாமிச்சம், ஏலம், அதிமதுரம், கொத்துமல்லி மனுப்பாலைவேர் இவற்றைப் பொடியாய் நறுக்கி நீர் விட்டு குடிநீராக்கிக் கொள்க. அதனை அளவறிந்து கொடுக்க வாந்தி நிற்கும்.

குடிநீர்:- 9

கோட்டம், ஏலம், சீரகம், சுக்கு, கூவிளை வேர், அதிமதுரம், ஆமையோடு, சந்தனம், கலைமான் கொம்பு, வாசப்புல், பொரி இவற்றை ஒன்றாய்ச் சேர்த்துக் கொள்க. இவற்றைக் குடிநீராய்க் காய்ச்சிக் கொள்க. அதன் தெளிவைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வாந்தி நின்று போகும்.

குடிநீர்:- 10

வால்மிளகு, ஏலம் இவற்றைச் சமபாகமாக எடுத்து 3 பங்கு நீர் 1 1/2 பங்காக வற்றும் வரை காய்ச்சிக் கொடுக்கவும்.

கற்கம்:- 1

சயந்தலவணம், சீரகத்தூள், சித்து விளாயிலை இவற்றை அரைத்துத் தேனில் குழப்பிக் கொடுக்கவும்.

கற்கம்:- 2

வில்வம் விதையை அரைத்து இள வெந்நீரில் கொடுக்கவும்.

கற்கம்:- 3

ஏலம், வெற்றிலைக்காம்பு, வேப்பங்கொட்டை ஆகிய சரக்குகளைப் பழச்சாற்றில் அரைத்துக் கொள்க. அவ்விழுதைத் தாய்ப்பாலில் கலந்து கொள்க. அதில் சீரகத்தைப் போட்டு காய்ச்சிக் கொடுக்க வாந்தி நிற்கும்.

கற்கம்:- 4

சந்தனம், நெற்பொரி, இலாமிச்சம், தேவதாரம், கூவிளைவேர், ஏலம் ஆகிய சரக்குகளை, இளநீர் விட்டாட்டுக. அவ்விழுதை ஊட்டி விட வாந்தியும் வாந்தியுடன் கூடிய அரோசிகமும் போகும்.

சூரணம்:- 1

நெல் வைக்கோலைச் சுட்டு சாம்பலாக்கி எலுமிச்சம் பழச்சாற்றில் கொடுக்க வாந்தி நிற்கும்.

சூரணம்:- 2

கமுகம்பட்டையைச் சுட்டு தண்ணீரில் கரைத்து ஒரு துளி நல்லெண் ணெய் விட்டுக் கொடுக்கவும். வாந்தி நிற்கும்.

சூரணம்:- 3

சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், நெற்பொரி, இவற்றை வகைக்கு 20 கி எடுத்து பொடித்து சர்க்கரை சேர்த்துக் கொள்க. 20 கி தூளைத் தேனில் குழைத்து காலை, மாலை மூன்று நாட்கள் உட்கொள்ள வாந்தி குறையும்.

சூரணம்:- 4

கிராம்பு, சீரகம், ஏலம், மயிலிறகுச் சாம்பல் ஆகிய இந்நான்கையும் தூளாக்கி அதனைத் தேனிலிட்டுக் கொடுக்க வாந்தி ஒழியும்.

சூரணம்:- 5

அதிமதுரத்தை எடுத்து பொடித்து அதைப் பாலில் போடுக. நன்றாக ஊறிய பிறகு வடிகட்டிக் கொள்க. அதனைப் பஞ்சில் தோய்த்து வாயில் விட வாந்தி நிற்கும்.

சூரணம்:- 6

பருத்திப்பருப்பு, ஏலம், திப்பிலி, நெற்பொரி இவற்றைச் சம அளவெடுத்து அவ்வளவு சர்க்கரை ஒன்று சேர்த்துப் பொடித்து அதனை மூவிரலளவு தேனில் உட்கொண்டால் வாந்தி ஒழியும்.

(இலவங்கச்) சூரணம்:- 7

பொட்டு நீக்கின இலவங்கம், அதிவிடையம், சிறுதிப்பிலி, மயிலிறகு சுட்ட சாம்பல் ஆகிய நான்கு பொருட்களையும் சமவெடை எடுத்துச் தேனிலிழைத்துக் கொடுத்தால் வாந்தி நின்றுவிடும்.

சூரணம்:- 8

மயிலிறகு சுட்ட கரி, அதிமதுரம், திப்பிலி இவற்றைப் பொடித்து சீனி, தேன் சேர்த்துக் கொடுக்க வாந்தி, தாகம், நாவறட்சி, வெள்ளோக் காளம் நிற்கும்.

சூரணம்:- 9

வில்வவேர், நெற்பொரி, திப்பிலி இவற்றைப் பொடித்து சர்க்கரையைச் சேர்த்து தேனில் குழைத்துக் கொடுக்க வாந்தி, வெள்ளோக்காளம் குறையும்.

சூரணம்:- 10

அதிமதுரம், சீரகம், கோட்டம், திப்பிலி, வங்காளப் பச்சை இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் கொடுக்க நிற்கும்.

சூரணம்:- 11

கண்டங்கத்திரி விதை, அமுக்கரா, சிறுதிப்பிலி, ஏலம், எலுமிச்சம்ப ழம், சுக்கு ஆகிய இந்த ஆறு மருந்துப் பொருட்களைப் பொடித்துப் போட்டு தேனில் கலந்து கொடுக்க வாந்தி நிற்கும்.

சூரணம்:- 12

மயிலிறகு, தேங்காய்க்குடுமி, மண்புழு இவற்றைச் சாம்பலாக்கி திப்பிலி, சீரகம், சுக்கு இவற்றை ஓரெடையாய்க் கூட்டி தேனில் இரண்டு சிட்டிகை அளவு குழைத்தூட்ட வாந்தி நீங்கும்.

சூரணம்:- 13

சமத்தாரமதை (அப்பிரகபாடாணத்தை) நன்கு தூளாக்கி, வெந்நீரி லும், தாய்ப்பாலிலும் கலந்துண்ண வாந்தி நிற்கும்.

(மாதளைச்) சூரணம்:- 14

மாதளம்பூ, நெற்பொரி, நாட்டுச் சர்க்கரை, திப்பிலி ஆகிய மேற் சொல்லப்பட்ட பொருட்களைச் சரி எடை எடுத்துப் பொடித்து தேனில் கலந்து நோயின் வன்மை, மென்மை, குழந்தையின் தன்மை ஆகியன கண்டு தேனில் கொடுக்க வாந்தி நிற்கும்.

மணப்பாகு:-

கடுக்காய்த்தோல், தோல் சீவின சுக்கு, தூய்மை செய்த வெங்காரம், படிகாரம், வெள்ளைச் சர்க்கரை ஆகியவற்றை வகைக்கு 4 கி. எடுத்துக் கொள்க. 175 கி. எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்துக் குழம்பாக்கி அடுப்பிலிட்டு பக்குவமாக வரும்போது சிறிதளவு தேன் கலந்து இறக்கிக் கொள்க. அதைக் குழந்தையின் நாக்கில் தடவ வாந்தி நிற்கும்.

நெய்:-

பருத்திக்காய், சிறுகீரை, பொன்னாங்காணி ஆகியவற்றின் சாறு களை வகைக்கு 325 மிலி எடுத்துக் கொள்ளவும். அதிமதுரம், சம்மங்கிப்பூ, நற்சீரகம், மோதகம் ஆகியவற்றைக் காசெடை (5 கிராம்) எடுத்துப் பொடித்து சாற்றில் சேர்க்கவும். பசுவின் நெய்யை 1.3 லி. எடுக்க. அனைத்தையும் ஒன்று சேர்த்து அடுப்பிலேற்றி காய்ச்சிக் கொள்க. அதனைக் குழந்தையின் தன்மை, நோயின் வன்மை, மென் மைக்குத் தக்கவாறு கொடுக்க வாந்தி ஒழியும்.

இரசாயணம்:-

குரோசாணி ஓம அரிசியைப் பொரிமா செய்து சர்க்கரை கலந்து நெய்யில் குழைத்து கொடுக்கவும்.

இந்துப்பு, பொரி இவற்றைப் பொடித்து சர்க்கரை கலந்து நெய்யில் குழைத்து மாதுளம்பழச்சாற்றில் புகட்ட குறையும்.

(கத்தூரி) மாத்திரை:- 1

கத்தூரி ஒரு பங்கு, குங்குமப்பூ இரண்டு பங்கு, கோரோசனை மூன்று பங்கு வீதமெடுத்து இம்மூன்று பொருட்களையும் தாய்ப்பால் விட்டு அரைத்து அதை 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். அதைத் தாய்ப்பாலில் உரைத்து கொடுக்க வேண்டும்.

(இரசசெந்தூர) மாத்திரை:- 2

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், குங்குமப்பூ, இரசசிந்தூரம், கத்தூரி, ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோரோசனை ஆகிய சரக்குகளை வகைக்கு 35 கி. எடுத்துக் கொள்க. கிராம்பு 4 கி. எடுக்க. இவையனைத்தையும் கருநொச்சிச் சாறுவிட்டு 3 மணி நேரம் ஆட்டுக. அவ்விழுதையெடுத்து சிறு பயறளவு (65 மி.கி.) உருண்டை செய்து கொள்க. அதனைத் துளசிச் சாற்றில் உரைத்துக் கொடுக்க வாந்தி நன்றாகும்.

(பாலசஞ்சீவி) மாத்திரை:- 3

தோல் சீவின சுக்கு, மிளகு, சிறு திப்பிலி, வெங்காரம் ஆகிய இவற்றைச் சரி எடை எடுத்துக் கொண்டு இடித்துத் துணியில் வடிகட்டி சாதிலிங்கத்தூள் கூட்டிக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 3

மணி நேரம் அரைத்து அரைப் பயறளவு (32 மி.கி.) மாத்திரையாக உருட்டி நிழலிலுர்த்தி வைத்துக் கொள்க. துளசியிலை, செம்முள்ளி, ஆடாதோடை, தூதுவளை விட்டுணுகிரந்தி, கண்டங்கத்திரி, வெதுப் படக்கி, பேய்ப்புடல், சங்கிலை, நொச்சியிலை ஆகியவற்றைச் சரி எடை எடுத்து கூட்டிப்பிட்டவித்துச் சாறு பிழிந்து கொள்க. அதனை வேளைக்கொரு உச்சிக் கரண்டியளவில் திரிகடுகுத்தூள் 165 மி.கி. கூட்டி அதில் வேளைக்கு ஒரு மாத்திரையும் சேர்த்து 3 நாட்கள் கொடுக்க வேண்டும். இதைக் கொடுத்தால் வாந்தி ஒழிந்து போகும்.

(கலைக்கோட்டுப்) பற்பம்:-

கலைமான்கொம்பு, திப்பிலி, அதிவிடையம் ஆகிய சரக்குகளைச் சமமாய் எடுத்து பொடி செய்து தேனில் சேர்த்து கொடுக்க வாந்தி நிற்கும்.

வேப்பீர்க்குப்பால்:-

வேப்பம் ஈர்க்கில் தாய்ப்பால் வார்த்து நறுக்கிப் பிழிந்தபால் உச்சிக்கரண்டி (16 மிலி) எடுத்துக் கொள்க. அதில் வசம்புச் சாம்பல், மயிலிறகுச் சாம்பல் வகைக்கு 260 மி.கி. எடுத்து அதில் தூவுக. ஒரு துளி தேனை அதில் சேர்க்க. சீரகம், கிராம்பு, வேப்பம் விதை ஆகிய இவற்றைக் கலந்து கொடுக்க வாந்தி நிற்கும்.

மருந்து:- 1

பச்சைத் திராட்சைப்பழம் சாப்பிடவும். வாந்தி நிற்கும்.

மருந்து:- 2

நாரத்தை, கொடார நாரத்தை காய்க்கு செம்மண் பூசி புடம் போட்டுக் கொள்க. சீரகத் தூளையும் சேர்க்க. தேவையான அளவு தேன் சேர்த்துக் கொடுக்க வாந்தி குறையும்.

மருந்து:- 3

பால் கலக்காத தேநீரில் சர்க்கரை கூட்டிக் கொடுக்கலாம். இஞ்சி, எலுமிச்சம் பழச்சாறு சேர்த்துக் கொள்வது நல்லது.

வாந்தி - பாடல்

குடிநீர்:- 1

ஆலா வாரை விடத்தேர் நாவலாகிய கரிவேலின்
ஆனகொழுந்துப் பட்டையுநல் லத்திப் பட்டையுடன்
சேலாத் தெங்கின் மொக்குட வேசமன்தேடிக் குடிநீராய்
சீரகம் விடய மாசிகி ராம்பு தின்னுஞ் சாதிக்காய்
மேலாந் தீயில் வாட்டி விளாவின் மேவு நீ தன்பிசினும்
மேலு மிதைப் பொடியாக்கிய நீரில் மெத்தனவேகரையாய்
பாலாய்ப் பேதி மூல கனத்துடன் பாரிய கக்குல்சுரம்
பாறிடு மேமறு சட்டியில் மாற்றிப்
பாலர்க் கீந்திடவே.

(477-159)

குடிநீர்:- 5

காடிச் சோறு வசம்புடனே
கனத்த மிளகு பற்பமதாய்
ஆடிச் செய்து கியாழமிட்டு
அன்றி வாந்தி யானாக்கால்
கேடில் நன்னாரிப் பட்டைக்
கிழாயத் தரைத்து நல்கிடவே
ஓடிப் போகும் வாந்தியுடன்
ஒக்கா ளந்தான் போமென்றே

(476-168)

(காடிச் சோற்றுக்) குடிநீர்:- 6

சோறுட னசம தாகம்
துய்யதோர் வசம்பு தானும்
பாரிய நுணாத மாலம்
பகுமிள குடனே கூட்டி
வேறு வேறாய் நறுக்கி
விதங் கொட்டாங் கச்சி ஓடும்
நாரியே காய்ச்சிக் கொள்ள
நடுக்கல் வாந்தியுந்தான் போமே

(470-370)

குடிநீர்:- 8

சேந்த நண்டு வளைதண்ணீர்
செவ்வியம் சுக்கு விலாமிச்சம்
சாந்த மேல மதிமதுரம்
சரியாம் கொத்த மல்லிகையும்
போந்த மனுப்பாலையுடன்
பொடியாய் நறுக்கி காய்ந்தநீர்
வாந்தி விக்கல் சுரந்தீரும்
வடிவேல் விழியாய் பாராயே.

(ஏடு எண். 400-69)

குடிநீர்:- 9

கோட்டமுட னேலஞ் சீரகமுஞ் சுக்கு
கூவிளைவே ரதிமதுரம் கூர்மத் தோடு
வாட்டமுடன் சந்தனமுங் கலைமான் கொம்பும்
வாசப்புல் லொடுபொரியும் வாகாய்க் கூட்டி
தேட்டமுடன் குடிநீரைக் குடிக்க வேதான்
தேசத்துச் சிறுவோர்க்குத் தேனே கேளீர்
நாட்டமுடனே மயக்கந் தாப சோபம்
நாவறட்சி யுந்தீரும் நாட்டுள் ளோர்க்கே.

(ஏடு 362-16) ஏடு 4552-16)

கற்கம்:- 3

வாந்தினைக் கேலம்வரும் வெத்திலைக் காம்பு
ஆயந்தநின்ப வித்துடனே அச்சாத்தில் - போந்த
அரைத்துமுலைப் பாலிடு ஆனந்த சீரகத்தை
உரைத்தபடி காச்சியதை யுண்.

(ஏடு 362-50)

கற்கம்:- 4

வன்னமென்ற சந்தனம் நெற்பொரி லாமிச்சம்
வளர்தேவ தாரமுங் கூவினாவே ரோடு
அன்னமென்ற ஏலமிள நீர்விட் டாட்டி
அனைத்தியிறுத் தூட்டிடவே அரோசி போமே.

(கை.பி.98-16)

சூரணம்:- 4

பேசும் கிராம்புடனே பின்சீ ரகமேலம்
வீசும் மயிலிறகு சாம்பல் - தேசுபிற
நாலைத் துளாக்கி நன்றாக தேனிலிட
வாலைவாந்தி விக்கல் மாறும்

(ஏடு 6218-38) (477-372) (476-168)

சூரணம்:- 5

என்னவென்றா லதிமதுரம் பொடித்துப் பாலில்
யிட்டு நன்றாய் யூறிவடி கட்டிக் கொண்டு
மின்னவெனற் பஞ்சதனில் தோய்த்து வாயில்
விட்டிடவே வாந்திபோம்....

(கை.பி.98-16)

சூரணம்:- 6

பருத்திவிரைப் பருப்பும் பகரேலந் திப்பிலியும்
தரித்ததொரு நெற்பொறியுஞ் சர்க்கரையும் திருத்தமுடன்
கொண்டால் வெள்வாந்திக் கூறுபித்தம் விக்கல் சர்த்தி
கண்டால் விரைந்தோடுங் காண்.

(476-168)

பருத்திவிதைப் பருப்பு பகரேலந் திப்பிலியுந்
தரித்ததொரு நெல்பொரியுஞ் சர்க்கரையுந் திருத்தமுடன்
கொண்டிட வெள்-வாந்தி கூறும் பித்தவாந்தி
கண்டால் விரைந்தோடுங் காண்.

(ஏடு 362-51)

போகவே சர்த்திக்குப் பருத்தி வித்துப்
புகழேலம் நெற்பொரி திப்பிலியுங் கூட்டு
யேகமுடன் சமனாகத் தூள தாக்கி
யேற்கவே சர்க்கரையும் சரியாய்ச் சேர்த்து
வேகமுடன் வெருகடிதான் தேனில் கொள்ள
விட்டேகுஞ் சர்த்திவிக்கல் குடல் பிரட்ட
லாகமுடன் நெஞ்செரிப்பு யிவைக ளெல்லாம்
அப்பனே தீர்ந்துபோ மதற்குச் செய்யே.

(ஏடு 67-172)

காரிவிரை யசுவம் காங்காரு திப்பிலியும்
கூறும் பொடிசமனாய் குழவிநோ யாறும்
வாந்தி சுரமிருமல் வாராது காணும்
சேர்ந்து மதுவதனில் திண்.

(ஆர்.6218-36)

(இலவங்கச்) சூரணம்:- 7

பூட்டுகிறேன் குழந்தைகட்கு வாந்தி கண்டால்
பூவென்ற கிராம்பு மதிவிடயந் திப்பிலி
நாட்டுகிறேன் மயிலிறகு சுட்ட சாம்பல்
நன்றாகப் பொடில் செய்து தேனிந்சேர்த்தே
ஊட்டவே வாந்திய தொழிந்து போகும்
உண்மையது தவறாதிங் குறுதி மெத்த
ஆட்டமிகும் போகருட கடாட்சத் தாலே
அன்பாகப் புலிப்பாணி யறைந்திட் டேனே.

(477-77)

சூரணம்:- 11

காரிவிரை யசுவங் காறுசிறு திப்பியுண்ண
கூறுகின்ற யேலம்நிம்ப விரைசுக்கும் - ஆறும்
வாந்தி - சுர மிருமல் வாராது காணும்
சேர்ந்த மதுவதனில் திண்.

(ஏடு 362 - 49)

சூரணம்:- 13

திண்ணச் சமத் தாரமதை செவ்வருட்டியாய் தூளாக்கி
வெண்ணீர் முலைப்பாலில் மேல்பொடியாய் - உண்ண
.... வாந்தி
ஒரு நொடியில் போமென்று உரை.

(ஏடு 6218-37)

(மாதுளைச்) சூரணம்:- 14

நீடு மாதளை நெற்பொரி சர்க்கரை
கோடு திப்பிலி தேனிற் குழைத்திடப்
.........பெருத்ததோ சர்த்தியும்
ஓட ஓட ஒருத்துவ துண்மையே.

(477-371)

மணப்பாகு:-

கடுக்காய் சுக்கு வெங்காரம்
கடிய சீனக் காரமுடன்
அடுக்காய் சீனி தேன் கூட்டி
யரிதா மிச்சஞ் சாற்றரைத்துக்
கொடுக்க வாந்தி விட்டோடும்
கூறுநாக்கிற் றேய்த்து விட்டார்
தடுக்கா ரிந்தக் கிரியைதனைச்
சதுராய்ச் செய்து முடிப்பீரே.

(477,77)

(கத்தூரி) மாத்திரை:- 1

எய்தாமல் கஸ்தூரி கழஞ்சு ஒன்று
இனிதான குங்குமப்பூ சுழஞ்சு ரண்டு
எய்தாமல் ரோசினையும் கழஞ்சு மூன்று
இவைமூன்றுங் கல்வத்தி லிட்டுக் கொண்டு
எய்தாமல் அமுர்தமென்று முலைப்பால் விட்டு
இனியதொரு சாமம்ஒன் றரைத்துக் கொண்டு
எய்தாமல் குன்றிபோல் நிழலு லர்த்தி
எடுத்துநீ செப்புதனி லடைத்தி டாயே.

அடைத்திட்ட மாத்திரைதான் ஒன்றெ டுத்து
அந்தெடைக்கு முலைப்பால்விட் டிழைத்துக் கொண்டு
விடைந்திட்ட முனைநாவில் தீட்டிட் டாக்கால்
கடந்தெழுந்த சுரம்வாந்தி தீரும் தீரும்
கடைமருந்தின் போக்கறியார் கழுதை மாண்பர்
குடைத்தெழுந்த குடங்கில் மானே கேளாய்
குருவருளால் கஸ்தூரி குளிகை யாமே.

(477-318) (476-135) (572-37)

(இரச செந்தூர) மாத்திரை:- 2

தாமேரச செந்தூரம் திரிப லாதி
தருகுங்கு மப்பூ கஸ்தூரி ஏலம்
வாமேதான் திரிகடுகு ரோசி னைத்தான்
வளமாகப் பலங்காலாய் நிறுத்துக் கொண்டு

காமேதான் கிராம்பெடையும் விராக னொன்று
கருநொச்சிச் சாறுவிட்டு சாமம் ஆட்டி
நாமேசிறு பயறுபோல் உண்டை செய்து
நல்துளசிச் சாற்றிலிட நயந்து கேளே.

நயந்துகேள் வாந்தி
நாடாது இவ்வுண்டை நளின மெத்த
நயந்துகேள் எங்குருவின் செயலால் சொன்னேன்
நமசிவய மென்றருளை நாவிற் போற்று
நயந்துகேள் ரிஷியென்றும் பேருண் டாகி
நாம்கண்ட பலனெல்லாம் நவின்றிட் டோமே.

(572-37-38) (476-123)

(பாலசஞ்சீவி) மாத்திரை:- 3

திரிகடுகு வெங்காரம் சாதி லிங்கம்
சிறந்திடவே யைமருந்துஞ் சமன தாக
நெறிபடவே யெலுமிச்சம் பழத்தின் சாற்றால்
நெடுவரைத்தே ஒருசாம நிறைய தாக
குறியுடனே யுண்டதனைப் பயற்றிற் பாதி
குளிர்ந்தநிழல் தனிலுலர்த்தி குழவிக் கீய
மறிபடவே பாலசஞ் சீவி யென்று
வகுத்துரைத்தார் மலையின்முனி மண்ணுள் ளோர்க்கே.

மலையின்முனி தானுரைத்த வகையே தென்னின்
....

கொலைசெய்யும் பித்தமுதி..... வாந்தி
குலைத்திடுநோ யுள்ளதுவுங் குடிதான் போக
நிலைபெறவே பத்திரியை பிட்ட தாக்கி
நீர்வாங்கித் திரிகடுகு கற்க மாக்கி
உலையுயர்ந்த பிழிநீரில் கற்கத் தோடே
உண்டையொன்று தானெடுத் துரைத்தி டாயே.

வகுக்குங்கால் பத்திரிதன் வகையைக் கேளாய்
மணித்துளசி செம்முள்ளி ஆடா தோடை
பகுத்திடுவாய் தூதுவளை விட்ணு காந்தி
பண்புநெறி கண்டங் கத்திரியி னோடு

நிகழ்த்திடுமே வெதுப்படக்கி பேய்ப்பு டோலும்
நின்றசங்கின் இலைநொச்சி நிறைதான் கூட்டிச்.
....
தெரிந்துரைத்தார் மாமுனிசஞ் சீவி யென்றே.

(கலைக்கோட்டுப்) பற்பம்:-

தினமான குழந்தைகட்கு வாந்தி கண்டால்
சிங்கியென்ற கலைக்கொம்பு திப்பிலியுங் கூட்டி
இனமாக அதிவிடயங் கூடச் சேர்த்தே
இன்பமுடன் பொடிசெய்து தேனி லிட்டால்
கனமான வாந்தியெல்லாம் விட்டுப்போகும்.
கைகண்ட மருந்துதான் கருதிப் பாரு
மனமான மனதறிவா யிருந்து கொண்டு
மகத்தான சுருதியிலே மனத்தை நாட்டே

(477-371) (476-168)

(வேப்பீர்க்குப்) பால்:-

வசம்புடனே மயிலிறகு சாம்ப லாக்கி
வசமாக வேப்பீர்க்கில் முலைப்பால் வார்த்து
கசமாக நறுக்கியதைப் பிழிந்து சற்றே
காதலுடன் தேனுமொரு துளியே குத்தி
நிசமாக சீரகமுங் கிராம்பு சேர்த்து
நிண்ணயமாய் நிம்பவிரை பொடிமேல் தூவி
வசமாக வேயருந்து மருந்தில்.............
................வாந்தி போமே...........

(ஏடு. 6218, 14) (477-57)

விக்கல்

வேறு பெயர்:- இக்மா

இயல்:-

வாயுப்பெருக்கம் வயிற்றின் மேல் பகுதியில் ஏற்படுவதனுடைய வாய்வழி வெளிப்பாடே விக்கலாம். இது ''விக்'' ''விக்'' எனும் ஒலியுடன் வெளிவருவதால் விக்கல் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

நோய் வரும் வழி:-

அதிகமாக காரம், இனிப்பு, உப்புச் சுவையுள்ள பொருட்களை உண்பதாலும், மாப்பண்டத்தை மிகுதியாகச் சாப்பிடுவதாலும், மூச்சை அடக்கிக் கொள்வதாலும் இப்பிணி ஏற்படும். மேற்கூறப்பெற்றவற்றால் வயிற்றில் ஐயம் மிகுந்து இது மேல்நோக்கி உதானவாயுவைத் தூண்டுவதால் இந்த விக்கல் ஏற்படும்.

மேலும் இந்நோய், நோய்வாய்ப்பட்டு நெடுநாள் படுக்கையிலிருப்போர், முக்குற்றத்தால் நோயுற்றோர், பசியால் வாடுவோர், நீரிழிவு நோயினர், மூல நோயுள்ளோர் ஆகியோர்க்கும் துணை நோயாக வரும்.

சிறுகுழந்தைகட்கு வயிறு பருக்கும். இதனால் விக்கல் வரும். குழந்தை பால் குடித்து முடித்தவுடன் விக்கல் வரும். இதற்காக மருத்துவம் செய்ய வேண்டியதில்லை. இது இயல்பான ஒன்று.

குறிகுணங்கள்:-

தொண்டை, நாக்கு வறண்டு போதல், வயிற்றில் ஏதோ உலாவுவது போன்ற தோற்றம், வாய் கைத்தல், நீர் வேட்கை, கண் சிவத்தல் என்னும் குறிகுணங்களைக் காட்டும்.

வகைகள்:-

வளி, தீ, ஐயம், முக்குற்றம், செரியாமை இவற்றால் உண்டாக, விக்கல் ஐந்தாகும்.

உணவால் உண்டாவது 'அன்ன விக்கல்'. செரியாமையால் ஏற்படுவது 'சூத்ர விக்கல்', உணவு செரிக்கும் பொழுதுண்டாவது 'யமன்

விக்கல்', கொடுமையாக வரும் விக்கல் 'மகாவிக்கல்', உந்தியிலிருந்து மிகுந்த ஒலியுடன் எழும் விக்கல் 'கம்பீர விக்கல்' என்று வகைப்படுத்தியும் கூறுவர்.

வளி விக்கல் காரணம், குறிகுணம்:-

பெருமகிழ்ச்சியைத் திடீரெனக் கொள்ளல், வெயிலில் திரிதல், வறண்டு திரிந்த பின் நீர் பருகல், தண்ணீரில் மூழ்குதல், கடுமையாக ஓடல் முதலிய காரணங்களால் உதான வாயுவானது மிகுந்து மேல் நோக்கி விக்கல் அடுத்தடுத்துண்டாகும். கண் படபடவென அடித்துக் கொள்ளும். மிகுதியான காரப்பொருள்களைச் சாப்பிடுவதால் இவ் வகை விக்கல்நோய் வரும்.

அழல் விக்கல் - காரணம், குறிகுணம்:-

மிகுந்த பசி, இளைப்பு, கவலை தீக்குற்றத்தைப் பெருக்கக் கூடிய உணவு வகைகள் ஆகியவற்றால் இவ்வகை விக்கல் நோய் வரும். இந்நோயில் நாடி படபடத்தல், மேனி கன்றிப்போதல், உடல் அனல் வீசுவது போல் தோன்றுதல், கொட்டாவி, அடிக்கடி சினம் உண்டாதல், அறிவு மயங்கல், விக்கல் ஒலி நெஞ்சுக்குழியிலிருந்து எழுவது போலத் தோன்றுதல் ஆகிய குணங்களைக் தோற்றுவித்து விக்கலையுண்டாக்கும்.

ஐய விக்கல் காரணம், குறிகுணம்:-

ஐயக்குற்றத்தைப் பெருகச் செய்யும் உணவு வகைகளால் வயிற்றில் செரியாமையையுண்டாககி மார்பில் கோழையைக் கட்டி விக்கலைப் பிறப்பிக்கும். மூக்கும், கண்ணும் வெளுத்துப் போகும். கண் நொந்து தெறித்து விழுவது போன்ற தோற்றம் தரும். கண்ணீர் வடியும்; கண் கலங்கிக் காணும்; உணவில் வெறுப்பு, விழுங்கமுடியாமை, நெஞ்சுலர் தல், முகம் வெளுத்தல் போன்ற குறிகுணங்களைக் காட்டி விக்கலைப் பிறப்பிக்கும்.

முக்குற்ற விக்கல்:- காரணம், குறிகுணம்:-

நீண்ட நாட்களாய் சுரம் முதலிய நோய்களால் உடல் வன்மை குறைந்து முக்குற்றங்களும் ஒன்று கூடிய நிலையில் இவ்விக்கல் நோய் பிறக்கும். தோளோடு தலை கறுக்கும். உந்தியை அதிரச் செய்து இடைவிடாது அடுக்கடுக்காய் விக்கல் வரும். அத்துடன் மார்பு வலி, மூச்சுத் திணறல், களைப்பு, உடல் ஓய்ச்சல் முதலிய குறி குணங்களும் வரும்.

செரியா விக்கல் காரணம் - குறிகுணம்:-

காரம் அதிகமுள்ள பொருட்கள், எளிதில் செரிக்காத பொருட்கள், வறண்ட பொருட்கள் என்னும் இவைகளைப் புசிப்பதால் இவ்வகை விக்கல் உண்டாகும். விக்கல் எழுமுன்னே தொண்டை வறண்டு குரலோசை குறைந்து ஈனசத்தம் ஏற்பட்டு இருமலுண்டாய்ப் பின்பு விக்கல் எழும். இவ்வகை விக்கல் உண்டவுணவு செரிக்கு மட்டும் நிற்காது.

தீருவன - தீராதன:-

வாத விக்கல், அழல் விக்கல் இவை இரண்டு எளிதில் தீரும். ஐயவிக்கல் தகுந்த மருத்துவம் கையாண்ட பிறகு சில நாட்கள் சென்று தீரும். முக்குற்ற விக்கல் மரணக்குறியாய் வருமாதலால் கொல்லுகின்ற தீராத நோயாகும்.

மற்றும் நீரினை அருக்கல், பெருக்கல் என்னுமிரு வினை நோய்களி லும் நாட்பட்ட சுரத்திலும் குன்மம் முதலிய வயிற்று நோய்களிலும் விக்கல் வந்தால் தீராது. சன்னி, வாந்தி பேதி, மிகு கழிச்சல், நாட்பட்ட கழிச்சல், இளைப்புநோய் என்னும் நோய்களில் விக்கல்வரின் கொல் லும்.

மருத்துவம்:-

தன்னிலை திரிந்த ஐயத்தைத் தன்னிலைப்படுத்த வெப்பவீரிய மருந்துகளை வழங்க வேண்டும். தன்னிலை திரிந்த கால்களைத் தன்னிலைப்படுத்த கழிச்சலுக்குரிய மருந்துகளை வழங்க வேண்டும்.

விக்கல் நோய் வருவதற்கு முதற்காரணமாய் அமையும் நீர்வேட்கை நோய், நீரிழிவு, முக்குற்றநோய் ஆகிய முதல் நோய்களுக்குரிய மருத்துவத்தையும் சேர்த்து செய்ய வேண்டும். ஈதன்றியும் உணவின் அடிப்படையிலும் விக்கல் நோய் வருவதால், இந்நோயுற்ற காலத்து காரம், இனிப்பு, கைப்புச் சுவையுள்ள பொருட்களை மிகுதியாக உண்பதைத் தவிர்க்க வேண்டும். வறட்சியையும் வாயுவையும் பெருக் குகின்ற உணவுப் பொருட்களை உண்பதையும் தவிர்க்க வேண்டும்.

சாறு:-

வரப்புகளிலுள்ள நண்டு வளை நீரைக் கொடுக்கலாம். (அல்) வரப்பு நண்டை இடித்துப் பிழிந்த சாறு (16 மி.லி. - 326 மி.லி.) அளவு எடுத்து ஒரு சிட்டிகை மிளகுப்பொடி கூட்டிக் கொடுக்க விக்கல் போகும்.

குடிநீர்:- 1

நண்டுவளைத்தண்ணீர், செவியம், சுக்கு, விலாமிச்சம்'ஏலம், அதிமதுரம், கொத்துமல்லி இவற்றைப் பொடியாய் நறுக்கி நீர்விட்டு குடிநீராக்கிக் கொள்க. அதனை அளவறிந்து கொடுக்க விக்கல் நிற்கும்.

குடிநீர்:- 2

நெல்பொரி, விலாமிச்சம் வேர் எடுத்து 1.3. லி நீர் விட்டு காய்ச்சிப் பக்குவத்துடன் இறக்கிக் கொடுக்க விக்கல் குறையும்.

குடிநீர்:- 3

மக்காச்சோளக் கதிரின் சடையும் பட்டுக் கந்தையும் கருக்கி சீரகத்தை வெடிக்க விட்டு நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சிக் குடிக்க நிற்கும்.

(முருவிலிக்) குடிநீர்:- 4

வாதமடக்கி, நன்னாரி வேர், வெங்காயம், வசம்பு, இந்துப்பு, கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், நாரத்தை வேர், எலுமிச்சம்வேர், வேளை வேர், பங்கம்பாளை, மலை தாங்கிவேர், கீழ்க்காய் நெல்லி வேர், நிலப்பூசனை வேர், பாச்சொற்றி வேர், குறட்டை காக்கணான் வேர், விட்டுணுகிரந்தி ஆகிய 16 பொருட்களையும் வகைக்கு 9கி எடுத்து இடித்து ஒரு மண்சட்டியில் போட்டு 1.3 லி. தண்ணீர் விட்டு 625 மி.லி யாகச் சுருக்கிக் காய்ச்சிக் கொள்க. அதனை இருவேளை மூன்று நாட்கள் கொடுத்தால் விடமாந்த கணத்தால் வரும் விக்கல் ஒழிந்து போகும்.

குடிநீர்:- 5

தேங்காய்க்குடுமி, கம்பளம் இவ்விரண்டையும் கருக்கி எடுத்த பொடி வகைக்கு 35 கி., ஏலக்காய்த்தோல், திப்பிலி வகைக்கு $17^1/_2$ கி. எடுத்து சேர்த்து குடிநீராக்கிக் கொடுக்க விக்கல் நீங்கும்.

குடிநீர்:- 6

ஆல், மா, நாவல் இவற்றின் துளிர்களை எடுத்து தண்ணீர் விட்டு காய்ச்சி அந்தி சந்தி கொடுக்க விக்கல் நீங்கும் (476-130).

குடிநீர்:- 7

தூய்மை செய்த மண்புழு (பூநாகம்) 20 ஐ எடுத்து கருக்கி, அதனுடன் மிளகு $17^1/_2$கி. சேர்த்து வறுத்து 675 மி.லி. நீர் விட்டு 100 மி.லி.யாகச் காய்ச்சி வடித்துக் கொடுக்க விக்கல் நோய் போகும்.

குடிநீர்:- 8

ஒரு அடித்துண்டு கரும்பை இரண்டாகப் பிளந்து நடுவில் ஏலரிசி யைப் பரப்பிக் கயிற்றால் கட்டி செம்மண் சீலை செய்து அடுப்பிலிட்டுச் சுட்டு நசுக்கிப் பிழிந்த சாற்றைக் கொடுக்கலாம்.

குடிநீர்:- 9

குளவியின் அரக்குக் கூட்டின் குடிநீர் கொடுக்கலாம்.

(தேற்றான்) கற்கம் 1:-

தேற்றாங்கொட்டை, சந்தனம், மான் கொம்பு ஆகிய மூன்றையும் தாய்ப்பால் விட்டரைத்து கொட்டைப் பாக்களவு (2.2.கி) எடுத்து வெல்லம் கூட்டி கொடுக்கவும்.

கற்கம்:- 2

வெங்காரத்தைப் பொரித்து 1 கி அளவு எடுத்து இளநீரில் கலந்து கொடுக்க விக்கல் நீங்கும்.

சூரணம்:- 1

மயிலிறகு சுட்டகரி, அதிமதுரம், திப்பிலி இவற்றைப் பொடித்து சீனி, தேன் சேர்த்துக் கொடுக்க விக்கல் சரியாகும்.

சூரணம்:- 2

வில்வவேர், நெற்பொரி, திப்பிலி இவற்றைப் பொடித்து சர்க்கரை யைச் சேர்த்து தேனில் குழைத்துக் கொடுக்க விக்கல் நீங்கும்.

சூரணம்:- 3

அதிமதுரம், சீரகம், கோட்டம், திப்பிலி, வங்காளப் பச்சை இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் கொடுக்க விக்கல் குறையும்.

(ஏடு 299-88)

(மயிலிறகுச்) சூரணம்:- 4

எட்டு பங்கு திப்பிலி, 16 பங்கு சீரகம் ஆகியவற்றைப் பொடி செய்து தேனில் குழைத்துண்ண விக்கல் நீங்கும். இதில் நீங்காவிடில் மேற்படி சூரணத்திற்குச் சமன் மயிலிறகு சுட்ட சாம்பல் பொடியைக் கூட்டி, தேனில் குழைத்துண்ண நீங்கும்.

மயிலிறகுக் கரி, திப்பிலி, சீரகம் இவற்றை முறையே 3, 8, 10 பங்கு சேர்த்து ஒரு சிட்டிகை தேனில் கொடுக்கலாம்.

சூரணம்:- 5

நெல் வைக்கோலைச் சுட்டு சாம்பலாக்கி எலுமிச்சம் பழச்சாற்றில் கொடுக்க விக்கல் நிற்கும்.

கமுகம் பட்டையைச் சுட்டு தண்ணீரில் கரைத்து 1 துளி நல்லெண் ணெய் விட்டு கொடுக்கவும். விக்கல் நிற்கும்.

(திப்பிலிச்) சூரணம்:- 6

சிறுதிப்பிலி, கடுகுரோகிணி, மயிலிறகுச் சாம்பல் ஆகிய இம்மூன் றையும் சமவெடை எடுத்துக் கொள்க. சிறுதிப்பிலியையும் கடுகுரோக ணியையும் வறுத்துப் பொடித்து அத்துடன் மயிலிறகுச் சாம்பலையும் சேர்த்துக் கலந்து வேளைக்கு 975 மி.கி. எடுத்து தேனிலிழைத்து அளவறிந்து கொடுக்க விக்கல் தீரும்.

சூரணம்:- 7

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, திப்பிலி, நற்சீரகம், வில்வவேர், வெள்ளைப்பூண்டு இவற்றைச் சமஅளவு எடுத்து நறுக்கி, வறுத்து தேனில் குழைத்து கொடுக்கவும் விக்கல் நிற்கும்.

(மாதுளைச்) சூரணம்:- 8

மாதளம்பூ, நெற்பொரி, நாட்டுச் சர்க்கரை, திப்பிலி ஆகிய பொருட் களைச் சரி எடை எடுத்துப் பொடித்து தேனில் கலந்து நோய் வன்மைக்குத்தக்க அளவு தேனில் கொடுக்க விக்கல் நீங்கும்.

சூரணம்:- 9

பட்டுத் துண்டு சுட்ட கரி, ஏலரிசிப்பொடி, சீரகப் பொடி, குங்கிலியப் பொடி, மயிலிறகுச் சாம்பல், தேங்காய்க்குடுமி, காட்டுக்கரி இவற்றைச் சம அளவு கலந்து 1-2கி. அளவெடுத்து தேனிலிழைத்து பாதாம் நெய்யில் கலந்து அடிக்கடி கொடுக்க விக்கல் தீரும்.

சூரணம்:- 10

சுக்கு, மிளகு, திப்பிலி, நெற்பொரி, அதிமதுரம் இவற்றை வகைக்கு 20 கி. எடுத்து பொடித்துக் கொள்க. சர்க்கரையைச் சேர்க்க. 20 கி.

தூளைத் தேனில் குழைத்து காலை, மாலை 3 நாட்கள் உட்கொள்ள வாந்தி, விக்கல் நிற்கும்

சூரணம்:- 11

கருப்புத்துணி சுட்டு கருக்கிக் கொள்க. மிளகினைப் பொடித்து ஒன்று சேர்த்து நெய்யில் கொடுக்கவும்.

சூரணம்:- 12

நீர்முள்ளி வேர், சீரகம், சர்க்கரை இவற்றைச் சம அளவு எடுத்து பொடித்து வெந்நீரில் கொடுக்கவும்.

(இலவங்கச்) சூரணம்:- 13

மொட்டு நீக்கின கிராம்பு, சீரகம், ஏலம், மயிலிறகுச் சாம்பல் ஆகியவற்றைச் சமமாக எடுத்துக் கொள்க. கிராம்பு, சீரகம், ஏலம் ஆகிய இம்மூன்றையும் பொடித்து அத்துடன் மயிலிறகுச் சாம்பலையும் சேர்த்து வேளை ஒன்றுக்கு 975 மி.கி. அளவு குழந்தையின் தன்மை, நோயின் வன்மையை அறிந்து கொடுக்க விக்கல் நின்றுவிடும். வாந்தியுடன் கூடிய விக்கலும் நின்றுவிடும்.

(பருத்திச்) சூரணம்:- 14

பருத்தி விதைப்பருப்பு, திப்பிலி, ஏலரிசி, நெற்பொரி ஆகிய நான்கு பொருட்களைச் சரி எடை எடுத்து பொடித்துக் கொள்க. அதற்குச் சமவெடையாக நாட்டுச் சர்க்கரை சேர்த்து இருவேளையும் மூன்று விரற்கடையளவாக குழந்தையின் தன்மை, நோயின் வன்மை, மென் மையை அறிந்து கொடுக்க விக்கல் நின்று போகும்.

சூரணம்:- 15

விளாம்பிசினை வெதுப்பி பொடி செய்து கொள்க. கருப்புக் கட்டி, திப்பிலி இவற்றை வெதுப்பின பொடியும் அதனுடன் கலந்து தேனில் கொடுக்க விக்கல் நிற்கும்.

விக்கல், வாய் ஓயாது தூக்கத்தைக் கெடுக்குமாயின் கஞ்சா அல்லது அபின் சேர்ந்த மருந்துகளில் ஏதேனுமொன்றைக் கொடுக்கலாம்.

சூரணம்:- 16

அதிமதுரம் 9 கி, கிராம்பு 26 கி எடுத்து பொடித்து பசுவின் வெண்ணெய் கலந்து கொடுக்க விக்கல் தீரும்.

சூரணம்:- 17

தோலினால் செய்யப்பட்ட பழைய செருப்பைச் சுட்டு கரியாக்கி 2 சிட்டிகை தேனில் குழைத்து 2-3 வேளை கொடுக்க விக்கல் உடனே நிற்கும்.

நெய்:-

ஏலம், இலவங்கம், நன்னாரிவேர், வசம்பு, கடுக்காய் இவற்றைச் சமனெடுத்து அரைத்து பசுவின் நெய்யில் காய்ச்சி வடித்து பதத்துடன் இறக்கி அளவறிந்து கொடுக்க விக்கல் குறையும்.

இரசாயணம்:-

குரோசாணி ஓம அரிசியைப் பொரிமா செய்து சர்க்கரை கலந்து நெய்யில் குழைத்துக் கொடுக்கவும்.

இந்துப்பு, பொரியைப் பொடித்து சர்க்கரை சேர்த்து நெய்யில் குழைத்து மாதுளம்பழச்சாற்றில் புகட்ட விக்கல் குறையும்.

(ஏலாதி) மாத்திரை:-

சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், கிராம்பு, ஏலம், கடுகுரோகணி, மஞ்சள், நாபி (குறிப்பிட்ட அளவு) ஆகிய ஏழு பொருட்களையும் வகைக்கு 5 கி வீதமெடுத்துக் கொள்க. இப்பொருட்களை எடுத்துப் பொடித்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு 6 மணி நேரமரைத்து 65 மி.கி. அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலிலுலர்த்திக் கொள்க. அதை வேளைக் கொன்றாக மாசிப் பத்திரிக் குடிநீரில் கரைத்துக் கொடுக்க விக்கல் நீங்கும்.

வேறு மாத்திரை:-

கத்தூரிக் கருப்பு 135 மி.கி. - 270 மி.கி. அளவு கருப்பஞ்சாற்றில் கொடுக்கலாம்.

பற்பம்:- 1

தங்க பற்பத்தை அளவறிந்து குழந்தையின் வன்மை, மென்மை யறிந்து தேனில் கொடுக்க விக்கல் நிற்கும்.

பற்பம்:- 2

சிலாசத்து பற்பத்தை 1 சிட்டிகை அளவெடுத்து இளநீரில் கொடுக்க விக்கல் உடனே நிற்கும்.

மருந்து:- 1

தாமரைக் கொட்டையை தேனில் இழைத்துக் கொடுக்கலாம்.

மருந்து:- 2

திப்பிலி, கூவிளைவேர், பழவெல்லம் இவற்றை மாதுளைப் பழச் சாற்றில் அரைத்து விழுங்க விக்கல் குறையும்.

மருந்து:- 3

கழுதை விட்டையைப் பிழிந்து கொண்டு அதில் திப்பிலி பொடியைச் சேர்த்து கொடுக்க விக்கல் குறையும்.

பச்சைத் திராட்சைப் பழம் சாப்பிடவும். விக்கல் குறையும்.

விக்கல் வந்தவுடன் தண்ணீர் குடிக்கலாம்.

விக்கல் வந்தவுடன் 1/2 டம்ளர் தண்ணீரில் 1 தேக்கரண்டி தேன் கலந்து கொடுக்கலாம். இனிப்பு வகைகளான சர்க்கரை அல்லது வாழைப்பழம் ஒன்றைப் புசிக்கலாம். ஆப்ப சோடாவை 1 சிட்டிகை அளவெடுத்து தேனில் கொடுக்கலாம்.

புகை:- 1

தும்பைச் சாற்றைத் துணியில் துவைத்து துவைத்து உலர்த்தி திரியாக்கி புகையை மூக்கிலிட விக்கல் சரியாகும்.

மூக்கிற்கும் பொடியாக்கி நசியம் செய்யலாம்.

புகை:- 2

கொம்பரக்கு, மஞ்சள், சடாமாஞ்சி மனோசிலை, தேவதாரம் அகிற் கட்டை, அமுக்கிரா வேர் இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து சிற்றாமணக்கிலைச் சாறு விட்டு அரைத்து சீலையிலூட்டிப் புகையிடவும். விக்கல் நிற்கும்.

புகை:- 3

சுக்கு, மஞ்சள், குங்கிலியம், இவற்றைச் சம அளவு எடுத்து அரைத்து கறுப்புத் துணியில் திரித்து கொளுத்தி மூக்கிலும் வாயிலும் புகை பிடித்து விழுங்கவும். விக்கல் நிமிடத்தில் குறையும்.

தளம்:- 1

வெருகங் கிழங்கு, கோட்டம், சந்தனம், நல்லெண்ணெய், விளக் கெண்ணெய், தாய்ப்பால், பசுவின் நெய், தலைமயிர், மயிலிறகு, இவற்றைக் கூட்டியரைத்து தொப்புளுக்கு மேல் நெஞ்சு வரைக்குந் தளம் போடவும். விக்கல் நிற்கும்.

தளம்:- 2

சுரண்டை வித்து, தாய்ப்பால், ஆவின் நெய்யும் கலந்து தலைமுடி யின் சாம்பல் மயிலிறகுச் சாம்பல், கரியை அதில் சேர்த்து நாடி முதல் தொப்புள் வரை தளம் போட விக்கல் தீரும்.

பாலூட்டும் தாய்க்கு மருந்து:-

சிறுதேக்கும் திப்பிலியையும் பொடித்தோ திப்பிலியையும் கடுகுரோ கணியையும் பொடித்தோ தேன் அல்லது பசு நெய்யில் மத்தித்து கொங்கையிற் பூசி குழந்தைக்குப் பால் புகட்ட விக்கல் நீங்கும்.

விக்கல் - பாடல்

வளி விக்கல்:- காரணம், குறிகுணம்:-

''அடுத்திட்ட மன மகிழ்ச்சி மிகுதியாலும்
அந்திசந்தி கனப்புகள்தான் காய்த லாலும்
படுத்திட்ட கைகால்கள் பிடித்த லாலும்
பதறியே தண்ணீரில் மூழ்க லாலும்
விடுத்திட்ட கடுவோட்ட மோட லாலும்
விரைந்துமே நாகனென்ற வாய்வு தானும்
கடுத்திட்டு அதிகரித்து விக்க லுண்டாம்
களராகி மார்கனத்துக் கதிப்பாங் காணே''

''கதிப்பித்துக் கண்ணிரண்டும் மிகத்து டிக்கும்
கனமான மிகுதுவர்ப்பு வாயி லுண்டாம்
மதிப்புற்று வாதவிக்கல் தானு மாகும்'

(சித். ம. 262-263)

அழல் விக்கல் - காரணம், குறிகுணம்

'மதித்ததோர் பித்தவிக்கல் மார்க்கங் கேளாய்
விதிப்புற்று விக்கலுண்டா மேனி கன்றும்

மிகவுண்டாங் கொட்டாவி வெதும்ப லுண்டாம்
நதிப்புற்று நாடிமிகப் படப டக்கும்
நல்லறிவு குன்றிவிடுங் கோப மாமே'

(சித். ம. - 263)

ஐயவிக்கல்:- காரணம், குறிகுணம்:-

'கோபமாஞ் சிலேட்மவிக்கல் குறிப்புக் கேளாய்
கோழையொடு விக்கலது தானு முண்டாம்
சோபமா முகமெங்கும் வெளிறிக் காணும்
துடிப்புண்டாந் தேகமெங்குந் நிறைந்து காணும்.

(சித். ம. 263)

முக்குற்ற விக்கல்:- காரணம், குறிகுணம்,

சோபமாந்த தொந்தவிக்கல் குணத்தைக் கேளாய்
தோளோடு தலைகறுத்து சோர வாங்கும்
ஆபமாந்த தொப்புளொடு மிகக்கு லுங்கி
அடிநாபி தனில்நின்று விக்கும் பாரே'

(சித். ம. 264)

செரியா விக்கல் - காரணம், குறிகுணம்:-

தானான காரங்கள் மிஞ்ச லாலும்
தாக்கான மந்தமாந்த தீட்சணத் தாலும்
வேறான பதார்த்த பேதங்க ளாலும்
விரைவான கண்டத்தி லீன சத்தம்
கோனான சுட்கலா மிரும லோடு
கொடிதாக வன்னத்தின் பேதந் தன்னால்
தேனான விக்கலது மேலே தாக்கித்
திரைந்துமே யெந்நேரம் திகைக்கும் பாரே.

(சித். ம. - 264)

தீரும் தீராதன:-

வாருமே வாதவிக்கல் பித்த விக்கல்
மாளவுந்தா னொட்டாது மருந்திற் தீரும்

தீருமே சிலேட்மவிக்கல் சீவன் தன்னைச்
சிறிது நாள் வயிற்றிற்றான் சீர ணிக்கும்
ஊருமே தொந்தவிக்க லுடனே கொல்லும்
உயிர்கின்ற தொந்தவிக்கல் குணமி தாமே'

(சித்.ம. 265)

குடிநீர்:-

சேர்ந்த நண்டு வளைத் தண்ணீர்
செவ்வியம் சுக்கு விலா மிச்சம்
சாந்த மேல மதி மதுரம்
சரியாம் கொத்த மல்லிகையும்
போந்த மனுப்பா லையுடன்
பொடியாய் நறுக்கி காய்ந்த நீர்
வாந்தி விக்கல் சுரந்தீரும்
வடிவேல் விழியாய் பாராயே

(ஏடு. 400-69)

(முருவிலிக்) குடிநீர்:- 4

முருவிலி நன்னாரியொடு வெங்கா யந்தான்
முதிர்வசம்பு இந்துப்புக் கடுக்காய் முள்ளி
மருவிய நாரத்தை எலுமிச்சி வேளை
வாகான மலைதாங்கிக் கீழ்காய் நெல்லி
மருவியதோர் பூசனியு மேபாச் சோற்றி
வளர்குறட்டை மால்கரந்தை வகையொன் றாக்கி
பெருகுநல்ல நீர்விட்டுக் காச்சிக் கொள்ளப்
பிலத்தவிஷ மாந்தகனம் விக்கல் போமே.

(476-68) (477-179, 181)

குடிநீர்:- 6

தங்கிய ஆல்மா நாவல்துளி தன்னோட
தான் காய்ச்சி அந்திசந்தி கொடுப்பீராகில்
அங்கியெனுஞ் சுரதாப விக்க லோடு
அதிசார காகமவை அகலுந் தானே.

(476-130)

(தேற்றான்) கற்கம்:- 1

தேற்றான் கொட்டை சந்தனமும்
திகழுங் கலைமான் கொம்புடனே
கூற்றாம் விழிப்பென் முலைப்பாலில்
கொட்டைப் பாக்கின் அளவரைத்தே
ஆற்றா வெல்லங் கூட்டியிட
அகலும் வெங்கா ரம் பொரித்து
போற்றா இளநீ ரிற்கொடுக்கப்
போகும் விக்கல் ஆமென்றே

(476-167) (477-370)

(மயிலிறகுச்) சூரணம்:- 4

எட்டுத் திப்பிலி யீரெட்டு சீரகம்
கட்டுத் தேனில் கலந்துண விக்கலும்
விட்டுப் போகும் விடாவிடிற் பொத்தகம்
சுட்டுப் போடுநான் தேரனும் மல்லனே.

(ஏ 622-20-21) (477-371) (476-167)

(திப்பிலிச்) சூரணம்:- 6

திப்பிலியும் ரோகணியும் சேரவறுத்துப் பொடித்தோர்
துப்பா மயிலிறகுச் சுட்டுத்தான் - தப்பாமல்
செந்தேன் கலந்திழைத்துச் செய்நாவிற் றடவ
பைந்தொடியே விக்கல்அறும் பார்

(476-168) (477-371)

(மாதளைச்) சூரணம்:- 8

நீடு மாதளை நெற்பொரி சர்க்கரை
கோடு திப்பிலி தேனிற் குழைத்திடப்
பீடு விக்கல் பெருத்ததோர் சர்த்தியும்
ஓட ஓட ஒருத்துவ துண்மையே

நேடு மாதளை நெல்பொரி சர்க்கரை
கூடு திப்பிலி தேனில் குழைத்திட
பீடை செய்யும் பெருத்ததோர் விக்கலை
யோட யோட துரத்துவ துண்மையே

(476-168) (477-371)

(இலவங்கச்) சூரணம்:- 13

பேசுங் கிராம்புடனே பேர்சீரக மேலம்
வீசு மயிலிறகு மேற்சாம்பல் - தேசுபெற
நாலையுந் தூளாக்கி நன்றாகத் தேனிலிட
வாலர்தன் வாந்திவிக்கல் மாறும்

(ஏடு 6218-38), (ஏடு 362-50) (476-168) (477-372)

பருத்திப் பருப்பும் பகர்ணையு மேலும்
தரித்தொரு நெற்பொரியுஞ் சாரச் - சருக்கரை
கொண்டால் வெள்வாந்தி கொடும்பித்தம் விக்கல்
கண்டால் விரைந்தோடுங் காண்.

(ஏடு 6218-38), (ஏடு 362-51) (477,372)

(பருத்திச்) சூரணம்:- 14

போகவே சர்த்திக்குப் பருத்தி வித்துப்
புகழேலம் நெற்பொரி திப்பிலியுங் கூட்டு
யேகமுடன் சமனாகத் தூள தாக்கி
யேற்கவே சர்க்கரையும் சரியாய்ச் சேர்த்து
வேகமுடன் வெருகடிதான் தேனில் கொள்ள
விட்டேகுஞ் சர்த்திவிக்கல் குடல்பி ரட்டல்
லாகமுடன் நெஞ்செரிப்பு யிவைக ளெல்லாம்
அப்பனே தீர்ந்துபோ மதற்குச் செய்யே.

(ஏடு 67 - 172)

(ஏலாதி) மாத்திரை:-

ஈந்திடாய் விலாடியுண்டை விரும்பிக் கேளு
இனிதான திரிகடுகு சாதிக் காயும்

ஈந்திடாய் கிராம்பேலம் ரோகணி மஞ்சள்
இதன்நாபி சரக்குவரை கழஞ்ச தாக
ஈந்திடாய் கல்வத்தில் பிடியா யிட்டு
இயல்பாக பழச்சாற்றில் சாமம்ரண் டாட்டி
ஈந்திடாய்ப் பயறளவு உண்டை செய்து
எழில்மாசிப் பத்திரியின் கியாழத் தூட்டே

(572-36)

ஊட்டவே விக்கல் உடன் கெட்டோடும்

....

ஈந்திட்டா லேலாதி யுண்டை கேளா
யினிதான திரிகடுகு சாதிக் காயும்
ஈந்திட்ட கிராம்பேலம் ரோணி மஞ்ச
ளெழில்நாபி சரக்குவரை கழஞ்ச தாக
ஈந்திட்ட கல்வத்தில் பொடியாய்ச் செய்திங்
கிருசாமம் பழச்சாறு தன்னாலாட்டி
ஈந்திட்ட பயற்றளவி லுண்டை செய்திங்
கினிமாசிப் பத்திரியின் கியாழத் தூட்டே
ஊட்டவே விடசந்நி சுரமும் விக்க
லுறவான குளிர்சந்நி யூர்விட் டோடும்.

(477-318)

புகை:- 1

பின்புகேள் விக்கலுக்குத் திரிபுகை யப்பா
பேசுரோங் கொம்பரக்கு மஞ்சள் சடமாஞ்சி
பின்பு மனோசிலை தேவதார மகில்கட்டை
யமுக்கிறாவேர் சமனாமணக் கினிலையதன் சாற்றில்
யின்ப முடனே யரைத்துத் துணியில் சேர்த்து
யியல்பாகத் திரி பிடித்து யுலத்திக் கொண்டு
முன்பு திரிப் புகையேத்த விக்கல் தீரும்

தளம்:- 2

வகை கேளு சுரண்டை வித்துத் தயிலம்
மங்கையர்கள் முலைப்பாலு மாவின்நெய்யுங் கலந்து
பகையாமற் சாரித்துத் தலைமயிரின் கரியும்
பசுந்தோகை மயிலிறகு ஆடுங்கரியுங் கூட்டி
நகையாமல் ரேகிச்சுபி நாடி முதல் நாபி
நற்சீலைப் பாளத்திற் தளம் போடு நன்றாய்த்
திகையாதே விக்கல் விழுந்தோடுங் கண்டாய்
சீர்கண்டு யிவ்வணஞ் சிறந்து செய்யே.

(770-379)

பொருமல்

இயல்:-

உண்ட உணவு செரிக்காது வயிற்றில் தங்கி, விக்கல், ஏப்பம், வயிறு ஊதல் ஆகிய குறிகுணங்களைக் காட்டி வயிறு பொருமிக் கொண்டிருக்கும் இந் நோய்க்குப் பொருமல் என்று பெயர்.

நோய் வரும் வழி:-

எளிதில் செரிக்காத உணவாகிய கொழுப்பு, மீன், கறி, கீரை வகைகள் முதலியவற்றை அளவுக்கு மீறி உண்பதாலும் ஊசிய பண்டம், மாப்பண்டம், வாயுப்பண்டங்களை அதிகமாகப் புசிப்பதாலும் வயிற்றில் புளிப்பு மிகுந்து பசி குறைந்து உண்ட உணவைச் செரிக்காதபடி செய்யும். நேரம் தவறி சாப்பிடுதல், நிலம் குளிர்ச்சியடைவதால் வயிறு மந்தப்படுதல், தூக்கமின்மை, மனக்கலக்கம், பயம், வெகுளி இவற்றால் செரியாமையும் பொருமலும் உண்டாகும்.

வயிறு உப்பல், வயிற்று வலி, வயிற்றில் காற்று சேர்ந்திரைதல், அடிக்கடி ஏப்பம் விடுதல், தொண்டை உப்பு கரித்தல், வயிற்றிலுள்ள நீர் எதிரெடுத்தல், விக்கல் ஆகிய குறிகுணங்களை முன்னர் காட்டும்.

சிறு குழந்தையாயின் பொருமி வாந்தியேற்படும். சில நேரங்களில் கழிச்சலுமுண்டாகும். கழிச்சலுக்குப் பிறகு மறுபடி பொருமிக் கொள்ளும். குழந்தை தன் இடுப்பில் நிலை கொள்ளாது. அடிக்கடி நீர் வேட்கையுண்டாகும்.

நோயின் வகை:-

பொருமல், வளிச் செரியாமை, அழல் செரியாமை, ஐயச்செரியாமை, முக்குற்றச் செரியாமை என நான்கு வகைப்படும்.

வளிச் செரியாமை - குறிகுணம்:-

உண்டவுணவு செரிக்காது உண்டபடியே வாந்தியாகும். சில நேரங்களில் உணவு வயற்றில் தங்கி புளித்து அழுகிய நாற்றத்துடன் வாந்தியாகும். வயிறு உப்பல், கழிச்சலாதல், வயிறிரைந்து கழிதல், முகம் கறுத்தல், உடல் வாடல், மயக்கம், அறிவு மயங்கல், அடிக்கடி காற்று பரிதல், எருவாய் நோதல், சில நேரங்களில் காற்று குடலில்

தடைப்பட்டு மூச்சு வாங்கல் ஆகிய குறிகுணங்களைக் கொண்டதாக வளிச் செரியாமை அமையும்.

அழல் செரியாமை - குறிகுணம்:-

உண்டது உண்டபடி வாந்தியாகும். அடிக்கடி வாந்தியாதல், புளித் தேப்பம் எடுத்தல், எதிர்த்து வரும் நீர், வாயில் எரிச்சலையுண்டாக்கல், கழுத்து வியர்த்தல், உதடும் நாக்கும் துடித்தல், கை, கால், உடல் எரிதல், உடல் வற்றல், தோல் சுருங்குதல் ஆகிய பல தீக்குறி குணங்களைக் கொண்டதாக அமையும்.

ஐய செரியாமை:-

வாய் நீருறல், வாய் குழகுழத்தல், தொண்டையில் கோழை கட்டல், வயிறு மந்தமாக இருத்தல், உடல் வெளுத்தல், கண் பார்வை கீழ் நோக்கி காணல் என்னும் குறிகுணங்களைக் காட்டி வெண்கோழை கூட்டி வாந்தியை எழச் செய்யும். பொய்ப்பசி, அடிக்கடி நுரைத்துக் கழிதல், இருமல், மேல்மூச்சு, தலைநோய் இவற்றை உண்டாக்கும்.

முக்குற்றச் செரியாமை:

உண்டவுணவை வாந்தியாக்கும்: மயக்கம், மூர்ச்சை, வசமிழத்தல், நா, மூக்கு, கண் இவை உலர்ந்து கருத்துக் காணுதல், உணவில் வெறுப்பு, அடிக்கடி நீர் கொள்ளல், கருத்த நிறத்துடன் வெள்ளத்தைப் போல் கழிதல், கண்ணை உருட்டிப் பார்த்தல் என்னும் குறிகுணங்களை யுண்டாக்கும்.

மருத்துவம்:-

இந்த நோயில் வாயு அதிகரித்து வயிறு உப்பிக் கொண்டு வாந்தி, கழிச்சல், பசிமந்தம் போன்ற குறி குணங்கள் உண்டாவதால் தன்னிலை திரிந்த வளிக்குற்றத்தைத் தன்னிலைப் படுத்துவதற்கு அகற்றுவாய் வகற்றி, பசித்தீத்தூண்டி, பித்த சமனி போன்ற செய்கைகளையுடைய மருந்துகளை வழங்குவதுடன் வாந்தியையும் கழிச்சலையும் நிறுத்துவ தற்குரிய மருத்துவமும் செய்ய வேண்டும்.

(ஓமத்) தெளிநீர்:-

ஓமத்தை வறுத்து கோவையிலைச் சாற்றை விட்டு சற்றே காய்ச்சி இறக்கித் தெளிவுத் தண்ணீரைக் கொடுக்கவும். வாயு வெளிப்பட்டு வயிற்று வலி குறைந்து கழிச்சல் நீங்கும்.

சாறு:-

துளசி, செம்முள்ளி, புள்ளிகளையுடைய தும்பையிலை, நற்சீரகம், கஞ்சாங்கோரை, தைவேளை ஆகிய மூலிகைகளை நறுக்கி வெதுப்பி சாறுகளை ஒன்று சேர்த்து குழந்தைகளுக்குப் புகட்ட பொருமல் நிற்கும்.

குடிநீர்:- 1

சுக்கு, நாரிவேர், தும்பை, முருங்கை, விளாத்தி, வெள்ளையுள்ளி, வெந்தயம், மஞ்சள், திப்பிலி ஆகியவற்றை வகைக்கு 5கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துக் கொள்க. தண்ணீர் சேர்த்து மூன்றிலொரு பங்காகச் சுருக்கிக் காய்ச்சிக் கொண்டு குழந்தையின் வன்மை, மென்மை, நோயின் தன்மை அறிந்து கொடுக்க பொருமல் சரியாகும்.

குடிநீர்:- 2

வெற்றிலையெடுத்து சுண்ணாம்பு பூசிக் கொள்க. அடுப்பில் சட்டியை வைத்து வெற்றிலையைப் போட்டு நன்கு வறுத்து 1.3 லி. தண்ணீரை ஊற்றி எட்டொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சுக. அக்குடிநீரைக் குழந்தைகளின் வயது, நோயின் தன்மையறிந்து கொடுக்க பொருமல், செரியாமை நீங்கும்.

குடிநீர்:- 3

சாரணை வேர்ப்பட்டை, தேசாவரம் எனும் கண்டதிப்பிலி, ஆகிய வற்றைச் சமமாய் எடுத்துக் குடிநீர் செய்து குழந்தைகட்குக் கொடுக்க பொருமல் ஒழியும்.

(ஓமக்) குடிநீர்:- 4

ஓமம். சாதிக்கோட்டம், கோரைக்கிழங்கு, சுட்ட வசம்பு ஆகிய நான்கு பொருட்களையும் வகைக்கு 8 கி. எடுத்து வறுத்துப் பொடித்துக் கொள்க. அதில் 170 மி.லி. தண்ணீர் விட்டு 20 மி.லி. யாகச் சுருக்கிக் குடிநீர் செய்து 30 மி.லி. காலை, மாலை இரண்டு, மூன்று நாட்கள் கொடுக்க வயிற்றில் பொருமல் நீங்கும்.

குடிநீர்:- 5

சங்கு, நெருஞ்சில், சாரணை கொவ்வை, நீர்முள்ளி, தான்றி, கடுக்காய், புளியிலை, நெல்லி, வேப்பந்தோல், இரும்பின்பொடி, மஞ்சள், நன்னாரி, வழுதலை, கொன்றை, விழுதி, குமரி, மணலிக் கீரைக்கொடி, பங்கம்பாளை, செங்கத்தாரி, பாதிரி, குறிஞ்சான் ஆகிய

மூலிகைகளை எடுத்து காடி, கோமியம் ஆகியவற்றை விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்க. குடிநீரைக் குழந்தைகட்குக் கொடுக்க வயிற்றுப்பிசம் ஒழியும்.

குடிநீர்:- 6

காவட்டம்புல் ஒரு பிடி, கேழ்வரகு 165 மி.கி., சீவிய கொட்டைப் பாக்கு மூன்றையும் எடுத்து 3.9 லி தண்ணீர் வார்த்து 325 மி.லியாகக் காய்ச்சி குடிக்க குணமாகும்.

குடிநீர்:- 7

கழற்சிக் கொடிக்கொழுந்து, கழற்சிப்பருப்பு, முடக்கொத்தான் வேர் வகைக்கு 175 கி, உள்ளி 1 சேர்த்து இடித்து குடிநீராகச் செய்து வடிகட்டிக் கொள்க. 200 மி.லி, குடிநீருக்கு 165 மி.லி. விளக்கெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி ஊற்றிக் கொடுக்கவும். வாயு குறைந்து வயிறு கழியும்.

(குப்பைமேனிக்) கற்கம்:-

குப்பைமேனிச் சாறெடுத்து அதில் போதுமான உப்பை அரைத்துக் குழைத்துக் குழப்பிச் சிறிது வேப்பெண்ணெயைக் கூட்டிக் கலந்து கொள்க. அதை 520 மி.கி. அளவு இருவேளை மூன்று நாட்கள் கொடுக்க வயிற்றுப்பிசம் நீங்கும்.

(அன்னப் பொடி) சூரணம்:- 1

சுக்கு, மிளகு, திப்பிலி, கறிவேப்பிலை, உப்பு இவற்றை ஓரளவாய் எடுத்து இளவறுப்பாக வறுத்துப் பொடித்து அவ்வெடையுடன் ஒரு பங்கு பொரித்த பெருங்காயம் சேர்த்து ஒன்று கலந்து வைத்துக் கொள்க. அதில் ஒரு கரண்டி அளவெடுத்து சுடுசோற்றிலிட்டு நெய் ஊற்றிப் பிசைந்து ஒரு பிடி சாப்பிட்ட பின் வழக்கம் போல் உணவுண்க. பசித்தீ அதிகமாய் உடல் நலமாகும்.

(திரிகடுகுச்) சூரணம்:- 2

சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றைச் சம அளவெடுத்து தனித்தனியே இடித்துச் சலித்து ஒன்று சேர்க்க. அதனை 1-2 கி அளவு கொடுக்க வயிற்றுப் பொருமல் சரியாகும்.

சூரணம்:- 3

சாரணைவேர், தேசாவரம் எனும் கண்ட திப்பிலி இரண்டையும் சம அளவில் எடுத்துப் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்க பொருமல் குணமாகும்.

(தயிர்ச்சுண்டிச்) சூரணம்:- 4

இந்துப்பு, வெங்காரம், வெடியுப்பு, பூநீறு, சோற்றுப்பு, சுக்கு இவற்றைச் சம அளவு எடுக்க. வெங்காரத்தைப் பொரித்து மற்றவற்றைச் சுத்தி செய்தெடுக்க. சுக்கைத் தோல் நீக்கி சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்க. ஒரு அகன்ற வட்டிலில் புளித்த தயிரை விட்டு அதில் மேற்சொன்ன ஆறு சரக்குகளையும் போட்டு வெய்யிலில் வைத்து விட வேண்டும். தயிர் முழுவதும் வற்றியதும் சரக்குகளை நன்குலர்த்தி இடித்துச் சலித்துக் சூரணமாக்கிக் கொள்ள வேண்டும். $^{1}/_{2}$ கி. அளவெடுத்து நீரில் அல்லது மோரில் கொடுக்க செரியாமை தீரும். கழிச்சல் நின்று வயிற்றுப் பொருமல் நீங்கும்.

(பஞ்சீதீபாக்கினிச்) சூரணம்:- 5

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம் இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து அதற்கு ஐந்து பங்களவு சர்க்கரை எடுக்க. சரக்குகளை இளவறுப்பாய் வறுத்துப் பொடித்து சலித்து சர்க்கரையைக் கலந்து கொள்க. அதனை 1-2 கி. அளவு தேன் அல்லது நெய் சேர்த்துக் கொடுக்க பொருமல் தீரும்.

சூரணம்:- 6

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம் ஆகிய இவற்றைச் சம அளவு எடுத்து பொடித்துக் கூட்டி அதனைத் தேனில் உட்கொள்ள செரியாமை நீங்கும்.

சூரணம்:- 7

அசமதாகம் எனும் ஓமத்தை இளவறுப்பாய் வறுத்துத் தூளாக்கி வெந்நீர் அல்லது தாய்ப்பாலில் கலந்து கொடுக்க பொருமல் நீங்கும்.

(அமுக்கிராச்) சூரணம்:- 8

அமுக்கிராக்கிழங்கு 64 பங்கு, சுக்கு 32 பங்கு, திப்பிலி 16 பங்கு, மிளகு 8 பங்கு, ஏலக்காய் 4 பங்கு, சிறுநாகப்பூ 2 பங்கு, இலவங்கம் 1 பங்கு எடுத்துக் கொள்க. இச்சரக்குகளைப் பொன் வறுவலாக வறுத்து

இடித்துச் சலித்துக் கொள்க. சூரணத்துக்குச் சம அளவு கற்கண்டுப் பொடி சேர்த்துக் கொள்க. 500 மி.கி. - 1 கி. அளவு தேன் அல்லது வெந்நீரில் கொடுக்க செரியாமை, பொருமல் நீங்கும்.

(அட்டாதிச்) சூரணம்:- 9

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, ஓமம் இவற்றை வகைக்கு 35 கி, பெருங்காயத்தை 8.75 கி எடுக்க. இவற்றைத் தனித்தனியே வறுத்து இடித்து தூள் செய்து கலந்து வைத்துக் கொள்க. 500 மி.கி. 1 கி. அளவெடுத்து சர்க்கரையுடன் கலந்து இருவேளை உட்கொள்ளுமாறு செய்ய பொருமல் நீங்கும்.

(சுண்டை வற்றல்) சூரணம்:- 10

சுண்டை வற்றல், கருவேப்பிலை, மாம்பருப்பு, ஓமம், நெல்லிவற்றல், மாதுளம் பழத்தோல், வெந்தயம் ஆகிய சரக்குகளைச் சம அளவெடுத்து காய வைத்து இளவறுப்பாய் வறுத்திடித்து சூரணமாகக் கொள்ளவும். 1-2 கி. அளவெடுத்து எருமைத் தயிரில் கலந்து கொடுக்க பொருமல் நீங்கும்.

நெய்:-

முருக்கிலை, வேலிப்பருத்தியிலை, பொடுதலை, பெருந்தும்பை, ஆகியவற்றை வகைக்கு ஒரு பிடி எடுத்துக் கொள்க. மிளகு, ஈருள்ளியை எடுக்க. இவையனைத்தையும் சிதைத்து எருமை வெண்ணெயில் போட்டு காய்ச்சி வடித்துக் கொடுக்கவும். 4.4 கி. உள்ளுக்குக் கொடுக்க குழந்தைகளுக்கு வரும் வயிற்றுப் பொருமல் சரியாய் விடும்.

இளகம்:-

இஞ்சி இளகம், தாளிச இளகம், குன்மகுடோரி ஆகிய இளகங்களைக் கொடுக்க செரியாமை நீங்கும்.

(கத்தூரி) எண்ணெய்:- 1

கோரோசினை, கோட்டம், அதிமதுரம், சீரகம், திப்பிலி, தேவதாரம், சந்தனம், ஏலம், மாசிக்காய், வெந்தயம், சுக்கு, வெள்ளுள்ளி, கத்தூரி, வசம்பு, கடுகுரோகணி, மூங்கிலின் பச்சைத் தோல் ஆகியவற்றை வகைக்கு 4 கி. எடுக்க. இளவறுப்பாய் வறுத்தெடுத்து அதனை எருமூட்டை பீநாரி என்ற வெதுப்படக்கியின் சாற்றில் அரைத்துக் கொள்க. அரைத்த விழுதை 1.3 லி விளக்கெண்ணெய் விட்டெரித்துக்

கொள்க. அதனைக் குழந்தையின் வன்மை, மென்மை, நோயின் தன்மையறிந்து கொடுக்க வயிற்றுப்பிசம் நீங்கும்.

எண்ணெய்:- 2

கருநொச்சி, செம்முள்ளி, கோழியவரை, கருமுள்ளி, இவற்றின் சாறு, துத்தி, வெதுப்படக்கி ஆகியவற்றைச் சமமாக எடுத்து 1.3 லி. ஆமணக்கெண்ணெயில் கலந்து கொள்க. வலம்புரிக்காய், கடுகுரோகணி இவற்றை வகைக்கு $17^1/_2$ கி., நேர்வாளம் $4^1/_2$ கி. எடுக்கவும். மிருதார்சிங்கி, குடசப்பாலையின் பட்டை, கோட்டம் ஆகியவற்றை வகைக்கு 9 கி. எடுக்க. இம்மருந்துப் பொருட்களைப் பொடித்து எண்ணெயில் கலந்து காய்ச்சி பதமானவுடன் வடித்திறக்கிக் கொள்க. அதைக் குழந்தைகளின் பொருமல்களுக்குக் கொடுக்க சரியாகும்.

எண்ணெய்:- 3

மஞ்சணாத்தி, பழம்பாசி, வல்லாரை, தகரை, பருத்திப்பிஞ்சு, குட்டித்தக்காளி, துளசி, வஞ்சி, கற்பூரவள்ளி, கற்றாழை, கருவேல் வேர்ப்பலா, சிறுபுள்ளடி ஆகிய மூலிகைகளை எடுத்து வகைக்கு 335 மி.லி. சாறு எடுக்க. அதனுடன் ஆமணக்கெண்ணெயும் சேர்க்க.

ஏலம், கோட்டம், அதிமதுரம், நற்சீரகம், பெருஞ்சீரகம், சந்தனம், கடுகுரோகணி, கடுக்காய், மாசிக்காய், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, வெள்வெங்காயம், கெருடப்பச்சை ஆகிய மருந்துப் பொருட்களைச் சமமாய் எடுத்துப் பொடித்து அவ்வெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி வடித்துக் கொடுக்க குழந்தைகளின் பொருமல் ஒழியும்.

எண்ணெய்:- 4

பொடுதலை, வெண்ணொச்சி, இசங்கு, வேலிப்பருத்தியிலைச் சாறு இவற்றை வகைக்கு 335 மி.லி., நல்லெண்ணெய் 335 மி.லி. எடுத்து ஒன்று சேர்த்து காய்ச்சிக் கொள்க. காய்ச்சியதில் வெள்ளுள்ளி, வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம் ஆகிய இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து பொடித்துப் போடுக. இக்கலவையைக் காய்ச்சி பதமானவுடன் பக்குவமாக இறக்கிக் கொள்க. அதனை 4.4. கி. அளவு கொடுக்க குழந்தைகளின் வயிறூதல் நலமாகும்.

உருண்டை:- 1

சாதிக்காய், வெங்காரம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, கத்தூரி, மஞ்சள், வசம்பு, பெருங்காயம், வெள்ளைக்காக்கணான் வேர்ப்பட்டை

ஆகியவற்றைச் சமமாக எடுத்து வெந்நீரிலரைத்து 390 மி.கி. அளவு உள்ள உருண்டைகளாகச் செய்து கொள்க. அதனை வெந்நீரில் உரைத்து 3 நாட்களுக்கு கொடுக்க வயிற்றுப் பொருமல் நீங்கி கழிச்சலாகும். கழிச்சல் அதிகமானால் வசம்பைச் சுட்டு தண்ணீரில் கலக்கிக் கொடுக்க கழிச்சல் நிற்கும்.

(பாலசஞ்சீவி) மாத்திரை:- 2

வெள்ளைத் துத்தம், வெங்காரம், கோரோசினை, கொள்ளுக்காய் வேளை, கடுகுரோகணி ஆகியவற்றை வகைக்கு 15 கி. எடுக்க. அவற்றை அகத்தியிலைச் சாறு விட்டு 3 மணி நேரமரைத்துக் கொள்க. அவ்விழுதை 65 மி.கி. அளவு உருண்டை செய்து, நன்கு கொதிக்க வைத்து வடிகட்டிய வெந்நீரை அநுபானமாகக் கொண்டு கொடுக்க பொருமல் நிற்கும். தாய்ப்பாலிலும் அவ்வுண்டையைக் கொடுக்க பொருமல் நிற்கும்.

(இரசசிந்தூர) மத்திரை:- 3

இரசசிந்தூரம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், குங்குமப்பூ, கத்தூரி, ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோரோசினை ஆகியவற்றை வகைக்கு 9 கி. எடுத்துக் கொள்க. கிராம்பு 4 கி எடுக்க. இவற்றைக் கருநொச்சிச் சாறுவிட்டு 3 மணி நேரமரைத்து (65 மி.கி) உருண்டை செய்து துளசிச் சாற்றில் கொடுக்க குழந்தைகட்கு வரும் வயிறுப்பல் நீங்கி விடும்.

மருந்து:- 1

பசுவின் பாலைச் சிவக்கக் காய்ச்சி பிரை குத்தி அதில் திரண்ட சுக்கைப் பொடித்து மேலே தூவி வைத்து அந்தத் தயிரைக் கொடுக்கவும்.

மருந்து:- 2

உத்தமதாளி, பாவட்டை, இசங்கு, நாய்வேளை, முருங்கை, நாய் விறகு ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்க. பொடுதலையையும் உடன் சேர்க்க. அனைத்தையும் ஒன்றாக அரைத்து காய்ச்சி பதமான பிறகு இறக்கிக் கொள்ளவும். குழந்தையின் வன்மை மென்மையறிந்து கொடுக்க வயிறூதல் நிற்கும்.

பொருமல் - பாடல்

வளிச் செரியாமை:-

'உண்டதோ ரன்னமெல்லாம் வாந்தி யாகும்
உறுதியா யகலாய்ப் புளித்தேப் பாகும்
வண்டதோர் வயிற்றுப்பிப் பேதி யாகும்
மகத்தான விரைச்சலோடு புளிப்புப் பேதி
முண்டதோர் முகங்கறுக்கு முடலும் வாடும்
மதிமயக்கப் புத்தியது முன்பின் னாகும்
விண்டதோர் மிகவாதை கள்பிறக்கும்
மிகத்தண்ணீர் தவிப்பெய்த மீது வளியே'.

(சித். ம.258)

அழல் செரியாமை:-

எய்தியதோர் பதார்த்தமதை உண்ணுங் காலை
யெடுக்குமே யடிக்கடிக்கும் வாந்தி தானும்
பெய்தியதோர் புளித்தேப்பம் வாயெ ரிக்கும்
பேரான உதடோடு புரட்டும் நாக்கு
கைதியதோர் கால்கையு முடலெ ரிக்கும்
கண்டத்தில் வியர்வையுமாய்க் காயம் வற்றும்
சைதியதோல் அல்லிபோற் றளர்ச்சி யாகும்
சைத்தியமா மிதுவழல் சீரணம தாமே'.

(சித். ம.259)

ஐயச் செரியாமை:-

சயித்தியமா மிகவகற்றுங் கோழை தானே
சடமெங்கு வண்மையாய்க் கண்ணுந் தாழும்
பயித்தியமாய் வாந்தியது வெளுப்பு மாகும்
பசிக்குமே யடிக்கடிக்கு நுரையாம் பேதி
உயித்தியமா யிருமலுடன் சுவாசந் தோணும்
உருகுகின்ற துயரமாய்த் தலைப்பி ரட்டும்
வயித்தியந்தான் செய்தாலும் வசப்படாது
மறுக்குமையத் திற்பட்ட வசீரணந் தானே'.

(சித். ம. 259)

முக்குற்ற செரியாமை:

மறுக்குமே மனமருண்டு வாந்தி யாகும்
  மயக்கமாய் மூர்ச்சையாய் வசக்கே டாகும்
கறுக்குமே நாக்கோடு கண்கள் மூக்கு
  காய்ந்துலர்ந் தென்றென்றும் கருத்துப் போகும்
வெறுக்குமே யன்னத்தைத் தண்ணீர் தேடும்
  வெளுப்போடு கருப்பாகப் பேதி யாகும்
உருக்குமே கண்கள்தனை யுருட்டிப் பார்க்கும்
  உதறுமே திமிர்த்திது சன்னிவசீரண தாமே'

வயிற்றுப் பொருமலுக்குச் சாறு

இடுமே துளசிச் செம்புள்ளித்தும்பை இலையுடனே
  வெடுமே நற்சீரகமுங் கஞ்சாங்கோரைதை வேளையுடன்
கொடுமே நறுக்கிப் புகட்டிடச்சாற்றை குழவிகட்கு
  விடுமே பொருமல்மாந்த கணங்கள் விட்டோடிடுமே.

(476-66)

குடிநீர்:- 1

சுக்கொடு நாரி வேரும்
  தும்பையும் முருங்கை நெட்டு
மிக்கநல் விளாத்தி வெள்ளை
  யுள்ளி வெந்தய மோமந்
தக்கதோர் மஞ்சள் திப்பிலி
  தான்வகைக்கு கழஞ்சாய் கூட்டி
ஒக்கவே வறுத்து ஒன்றாய்
  உறுதியாய் வைத்துக் கொள்ளே

கொண்டிடும் கசாயம் மூன்று
  நாளாறு பொழுது கொள்ளில்
உந்தியில் பொருமல் மாந்த
  முரத்தெழும் தாகம் தீரும்.

(ஏடு. 601-86)

குடிநீர்:- 2

வெற்றிலைப் பதக்கெ டுத்து வேண்டுஞ்சுண் ணாம்பு பூசி
  வைத்திடு அடுப்பில் சட்டி மடிக்கும் வெற்றி லையைப் போட்டு

ஒத்துடன் வறுத்து நன்றாய் ஒருபடி நீரை வார்த்து
பற்றற எட்டொன் றாக்கிப் பாங்குடன் இறுத்துக் கொள்ளே.
இப்படிக் கொள்ள வேதான் இதமுடன் அசீர ணங்கள்
தப்பிய தாது சன்னி சயித்தியஞ் வாந்தி பிராந்தி
செப்பிய வயிற்றின் நோவு சீதமுங் கடுப்புத் தாகம்
அப்பொழு தோடுமே அறு அகத்தியர் உரைசெய் தாரே''

(பு. 476-167)

(ஓமக்) குடிநீர்:- 4

ஓமமுடன் கனகோட்டங் காசு தானும்
உயர்வசம்பும் கருக்கிட்டுக் கியாழ மாக்கிக்
காமமுடன் அருந்திடவே செரியா மாந்தம்
கழிச்சலுமே போமென்று கருதிச் சொன்னோம்
சாமமுட னுப்பலும்போம் வலியுந்தீர்ந்து
சதிருடனே யுண்டதெல்லாம் செரிக்கும் பிள்ளை
நாமுள்ள சொற்கேட்டு நாமுஞ் சொன்னோம்
நலமாகும் புவியோர்க்கு நன்மை தானே''

(477-64)

குடிநீர்:- 5

சங்கு நெருஞ்சில் சாரணைகொவ்வைத் தன்னுடன் வீரமுள்ள தான்றி
கடுக்காய் புளியிலை நெல்லித் தாரெனும் வேப்பந் தோல்
மங்கிய கிட்டம் இரும்பின் அரைப்பொடி மஞ்சளும் நன்னாரி
வழுதலைக் கொன்றை விழுதிக்குமரி மணலிக்கீரைக் கொடியும்
பங்கம் பாளைச் செங்கத்தாரி பாதிரி குறிஞ்சானும்
பழகியகாடி கோசலம் விட்டே பாகமும் எட்டொன்றாய்
பொங்கியக் குடிநீ ரானதைப் பருகப் பொருமலும் வீக்கமுடன்
போதவயிற்றிற்கட்டியும் உப்பலும் பொடியாகுந் தானே.

(பு476-167)

(குப்பைமேனி) கற்கம்:-

குப்பைமேனிச் சாற்றில் உப்பைக் கூடக்கலந்து வேப்பெண்ணெய்
செப்பமாக மத்தித்து தேனேமூன்று நாட்புகட்ட
தப்பில்லாமலே இளைப்புதானே சுழிகணம் உப்பிசமும்
துப்புநெஞ்சிற் கோழையுடன் துயரங்கெட்டு ஓடுமென்றே.

(பு 477-145) (பு 476-80)

சூரணம்:- 3

விட்டிடுஞ் சாறணைவேர் பட்டைதட்டி விதமுடனே
கிட்டிடுந்த தேசாபுரஞ் சமன்கூட்டிக் கிதைப் பொடியாய்
மட்டிடுந் தேனி லேகிய மாக்கி மதலைப்புள்ளப்
பொட்டண மாதவ கணத்தின் பொருமலும் போய்விடுமே.

(ஏடு. 362-27)

சூரணம்:- 7

திண்ணச் சுமதாகமதை செவ்வருப்பாய்த் தூளாக்கி
வெந்நீர் முலைப்பாலில் மேல் பொடியா - யுண்ண
பொருமல் களிச்சல் போர்மாந்தம் வாந்தி
ஒருநொடியில் போமென் றுரை.

(ஏடு.362-49)

(கத்தூரி) எண்ணெய்:- 1

ஏகநாயகன்றன் இணையடியைப் போற்றி செய்து
வாகுடனே எண்ணெய் வசனிப்பேன் யோகமுள்ள
காரோசினையும் கோஷ்டியும் அதிமதுரம்
சீரந் திப்பிலி தேவதாரமுடன் - பேரான

சந்தனமும் ஏலம் தன்னுடனே மாசிக்காய்
வெந்தயமும் சுக்கு வெள்ளுள்ளி அந்தமுள்ள
பேரான கஸ்தூரிப் பெருவசம்பு ரோகணியும்
பாரமுள்ள மூங்கில் பச்சைத்தோல் - சீராய்

வகைக்கு விராகனெடை வாடநிறுத்து வருத்துத்
தொலையாய் அரைப்பதற்கு சொல்லக்கேள் - தகமையுடன்
எருமுட்டைப் பீநாரி இசைந்தொரு சாற்றில்
வருந்தி அரைத்து வழித்தனைத் திரும்ப
விளக்கெண்ணை ஓர்படியும் விட்டெரித்துத் தான்இறுத்து
மலைக்கமல் நோய்க்கெல்லாம் வைப்பாய்க் கலக்கமற
பிள்ளைப் பிணிக்குப் பேராகத் தான்கொடுக்க
உள்நோய்ப் போகும் ஓதக்கேள் கள்ள
மாந்த வயிற்றுப்பிசமும் வடிவாய் இளந்தேகம்
சோர்ந்து கிடக்கும் சுழிமாந்தம் கார்ந்தும்
நாவரடசிக் கணமும் நளிர்க்காய்ச்சலுங் குளிரும்

தூவியிரிரத்த தொந்தசுர மேவும்
முக்குக் குணமும் முதிப்பால் கிறிச்சனமு
பக்கியின் தோஷம் பழங்காய்ச்சல் - அக்கணமே
இத்தனை நோயெல்லாம் இருப்பிடத்தை விட்டுவிட்டு
கத்தி விழுந்தோடுங் கான்

(பு.476-56)

எண்ணெய்:- 2

கருநொச்சி செம்முள்ளி கோழி யவரை
கருமுள்ளி சாறத்துக்கியும்
கருதும் வெதுப்படக்கிலை சமனாய்
கண்ட சாற்படியே
பருவத்தில் வாழ்கின்ற ஆமணக்கெண்ணை
படியதிலே கலந்து
பகரத்தோணி வலம்புரி ரோகணியும்
பலமரை நேர்வாளமும்
சுருவத்துட ரைக்கால் மிருதாரி
சொல்குட பாலையின் பட்டை
சுகமாய்க் கோஷ்டம் கால்பலமென்று
துதியொன் பதமாக்கி
சிறுகுழவியர்கள் கிடும்பிணியுள்ள
துஞ்சிக்கு மலங்கழிந்து சேர்ந்த
சுழி கண மாந்தம் பொருமலும்
வாராது சேரவோ டிடுமே.

(ஏடு. 362-59-60)

எண்ணெய்:- 3

மஞ்சணத்திப் பழம்பாசி வல்லாரைத் தகரைவளர்
பருத்திப் பிஞ்சும்குட்டித் தக்காளி துளசி
வஞ்சிக் கற்பூர வள்ளி வேர்பூலா சிறு
புள்ளடி கற்றாழைக் கருவேல்
பஞ்சாகவே இடித்து வகைக்குழக்குச் சாறு
பதத்திலுட னாமணக் கெண்ணையுடன்
தஞ்சமுடன் மேல் மருந்து செப்பக் கேளாய்
தனயருக்கு செய்வதற்கு திண்ணமது தானே.

யேலம் கோட்டம் அதிரம்
மிருசீரகமும் நற்சந்தனமும்
ஞாலம் புகலும் ரோகணியும்
நல்கடுக்காய் மாயக்காய்
மேலும் கிராம்பு சாதிரண்டு
வெள்வெங்காயம் கெருடப்பச்சை
கோனா னீர்உள்ளியுடன்
கூட்டி வடித்துக் கொள்வீரே.

கொண்டெழும் கணைச் சுரமும்
கொடிய இருமல் வயிறுளைவு
முண்டார் இழைக்கு இருமலுட
லுந்திமரியும் நோய்களையும்
கண்டார் இந்த நெய்யதற்கு
காத்திலெழுந்த வியாதியெல்லா
முண்டார் தீர்க்கு மென்று சொல்லி
அறிந்தே முனிவர் சொன்னாரே.

(ஏடு. 601-84, 85)

எண்ணெய்:- 4

அறையிறேன் பொடுதலை வெண்ணொச் சிசங்கு
அதில் வேலிப் பருத்தியிலைச் சாறு ழக்கு
மறை புகழும் நல்லெண்ண சமன தாக
வார்த்ததனில் வெள்ளுள்ளி வசம்ட; சுக்கு
நிறைபெரிய மிளகு திப்பிலி யிந்தோமம்
நேராக விராகனிடை சேர்த்துக் காய்ச்சி
குறையுமோர் காசளவு கொடுத்தா யானால்
குடலேற்றம் வயிறூதல் குணம தாமே.

(கை.பி.98-93)

(பாலசஞ்சீவி) மாத்திரை:- 2

சீர்கொண்ட துத்தம் வெண்காரமொடு ரோசினைத்
திகழ்கின்ற நற்கொழுஞ்சி சிக்குமலம்
வீழ்கடுகுரோகணி காஞ்சுதிரி சேரவே சேர்த்து நன்றாய்
வேர்கொண்டகத்தியிலை நீர்விட்டரைத்துமே

மெள்ள சாமம் மட்டும் விசைகொண்டமுத்தி அரைசிறுபயறு
போலவே மேன்மைபெற உண்டைசெய்து
கார்கொண்ட குழலழகு பெண்ணனங்கே யழற்காய்ந்தநீர் அனுபானமும்
கற்கம்அறி நல்லதொருபத்திரிப் புட்டிலுங்கன்னி இளமாது சித்ர
வார்கொண்ட மென்முலைப்பாலிலும் இடுவதிது
வல்பிணிச் சகல சுரமும்
வயிறுளைவு பொருமல் கணமாந்தமும் வராது
வாலசஞ்சீவி யென்றே

(பு.476-74,75)

(இரதசிந்தூர) மாத்திரை:- 3

தாமேரசச் சிந்தூரம் திரிப லாதி
குங்குமப்பூ கஸ்தூரி யேலம்
வாமேதான் திரிகடுகு ரோசினைதான்
வளமாக பலங்காலாய் நிறுத்துக் கொண்டு
காமேதான் கிராம்பெடையும் விராக னொன்று
கருநொச்சில் சாறுவிட்டு சாமமாட்டி
நாமேசிறுபயறளவு உண்டைசெய்து
நல்துளசிச் சாற்றிலிட நயந்து கேளே
நயந்துகேள் கணமாந்தம் கணசுரங்கள்
நற்பெரிய வயிற்றுப்பல் மாந்தம் போகும்
நயந்துகேள் வாந்தி வயிற்றுப்பிசங்கள்
நாடாது இவ்வுண்டை நளினமேற்ற

(பு.572-37, 38) (பு.476-123)

மருந்து:- 2

உத்தம தாளிபா வட்டை
யுசந்த யிசங்கு நாயிவேளை
யுத்த முருங்கை நாய்விறகு
முச்சிதமாய்க் கூட்டிப் பொடுதலையும்
அரைத்தே மிளகு ஆமையோடு
ஓமம் திப்பிலி வசம்புள்ளி
சுத்த வெளுத்த பிசினோடு
சுகமாய்க் காய்ச்சிக் குடுக்கவுமே.

(ஏடு 601-83)

குடற்கிருமிகள்

இயல்:

குடலில் மிகுந்த அளவில் கிருமிகள் உண்டாவதால், வயிற்றுவலி, இசிவு, மலக்கட்டு அல்லது கழிச்சல், சருமத்தில் அரிப்பு, வாந்தி, சுரம், உடல் காங்கை போன்றவைகளை உண்டாக்கும் நோய்.

நோய்வரும் வழி:-

தூய்மையற்ற, மலம் கலந்த மண்ணில் விளையாடுவதாலும், மண்ணைத் தின்பதாலும், ஈ மொய்த்த பண்டங்கள், தூய்மையற்ற உணவு, காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை உண்பதாலும் மிகுதியான இனிப்பு வகைகளை உண்பதாலும், கெட்டுப் போன தயிர், பழைய சாதம், அழுகிய காய்கறிகள், பழங்கள் இவற்றை உண்பதாலும், பன்றி இறைச்சி, மாட்டு இறைச்சியாலும், சில மீன் வகைகளை உண்பதாலும், நாயுடன் நெருக்கமாகப் பழகுவதாலும், குடல் கிருமிகள் உண்டாகின்றன. மேலும் சில பூச்சிகள் ஆசன பகுதியில் முட்டை இடுகின்றன. குழந்தையானது ஆசன பகுதியில் அரிக்கும்போது கையினை வைத்துச் சுரண்டுகிறது. பிறகு அதே விரலை வாயில் வைத்து சூப்புவதால், நகக் கண்ணிலுள்ள முட்டையானது குழந்தையின் உணவுப் பாதையில் சென்று பரவுகிறது.

நோயின் குறிகுணம்:-

இந்நோயில், தொப்புளைச் சுற்றி வலி, வயிறு உப்புசம், தூக்கத்தில் பல்கடித்தல், இசிவு (வலிப்பு), மூக்கில் புண் உண்டாதல், மூக்கிலும், ஆசன பகுதியிலும் அரிப்பு, வாந்தி, சுரம், மார்பு நோய், சுவையின்மை, செரியாமை, கழிச்சல் ஆகிய குறிகுணங்கள் காணும். சில வேளை, பெரிய நாக்குப்பூச்சிகள் உணவுக்குழல் வழியாக மேல் நோக்கி தொண்டைவரை சென்று வாந்தி செய்யமுடியாதவாறு சுவாசக் குழல், நாசித்துவாரங்கள் இவற்றில் நுழைந்து அடைத்து குழந்தைகளுக்கு மரணத்தை உண்டாக்கும். இவ்வித மரணங்கள் பெரும்பாலும் குழந்தை தூக்கத்தில் இருக்கும்போது நேரும். குழந்தை உண்ணுகின்ற ஆகாரத்தில் உள்ள சத்துக்களை இவை தின்று வளர்வதால், குழந்தைகளுக்கு வன்மை குறைந்து வெளுப்பு (பாண்டு) நோயும், அதனைத் தொடர்ந்து ஊதல் நோயும் வரும். தோலில் வெண் புள்ளிகள் ஏற்பட்டு தோலின் நிறம்மாறல், தடிப்பு, அரிப்பு, தினவு, சொரி, சிறங்கு

முதலியன உண்டாகும். தூக்கத்தில் பற்களைக் கடிக்கும். தூங்கும்போது கண்கள் முழுமையாக மூடி இருக்காது. கண்களில் அதிக பீளை தோன்றும். சிலநேரம் உணவை விரும்பி உண்ணாது.

குடற் கிருமிகளின் வகை:-

1. நாகப்பூச்சி, 2. பெரும்பூநாகம், 3. நீர்ப்பாம்புக்கிருமி, 4. நெல்முளைக்கிருமி, 5. சன்னிநீர்க்கிருமி, 6. அனுக்கிருமி, 7 வெண்கி ருமி, 8. செல் கிருமி, 9. அந்தர்மலக்கிருமி, 10. வட்டக்கிருமி, கால் இல்லாக் கிருமி, 11. சூட்சம கிருமி, 12. தோன்றாக்கிருமி, 13. நீர்க்கிருமி, 14. மஞ்சள் கிருமி, 15. கருங்கிருமி, 16. வாய்க்கிருமி, 17. வயிற்றுக்கிருமி, 18. குடல் கிருமி, 19. ஈரல் கிருமி, 20. கீரிப்பூச்சி, 21. திமிர்ப்பூச்சி, 22. கணைக்கிருமி 23. பட்டைப் பூச்சி, 24. நூல் பூச்சி 25. சாட்டைப்புழு, 26. தானப்புழு, 27. மசரைப்புழு.

மருத்துவம்:-

முதலில், குடலில் மிகுந்த அளவு பெருகி வளர்ந்துள்ள புழுக்களை வெளியேற்றுவதற்கும், பிறகு அதன் காரணமாக வருகின்ற துணை நோய்களுக்கும் மருத்துவம் செய்ய வேண்டும். அத்துடன் மேலும், குடலில் புழுக்கள் உண்டாகாமல் இருக்க மருந்துகளும் தக்க ஆலோச னையும் வழங்க வேண்டும்.

குடல் புழுக்களை அகற்ற புழுக்கொல்லி செய்கையும், மலமிளக்கி செய்கையும் கொண்ட மருந்துகளைக் கொடுத்து புழுக்களையும் அதன் முட்டைகளையும் மலத்துடன் வெறியேற்ற வேண்டும்.

(தானப்புழுவுக்கு) எண்ணெய்:- 1

புகையிலை, கடுக்காய் சுட்டகரி இவற்றை 675 மி.லி. வேப்பெண் ணெயிற் போட்டு காய்ச்சி அவ்வெண்ணெயைக் கொடுக்க தானவாய்ப் புழு வெளியேறும்.

எண்ணெய்:- 2

ஏலம் பொடி செய்து ஆமணக்கெண்ணெயிலே போடுக. சூரிய புடம் (வெய்யிலில்) வைத்தெடுத்து 4.4. கி. அளவு எண்ணெயை உள்ளுக் குக் கொடுக்கவும். கழிச்சல் உண்டாகி மலத்துடன் கிருமியனைத்தும் வெளியேறும்.

(ஆமணக்கு) எண்ணெய்:- 3

பாவை இலையை ஆமணக்கெண்ணெயில் போட்டு வெயிலில் வைக்க. அதில் 4.4 கி. அளவு உள்ளுக்குக் கொடுக்க பேதியாகும். கிருமியனைத்தும் மலத்தின் வழி வெளியேறும்.

எண்ணெய்:- 4

தைவேளை, வேலிப்பருத்தி, பெருந்தும்பை, பொடுதலை, முருக்கிலை ஆகியவற்றின் இலைச்சாற்றை வகைக்கு 335 மி.லி. எடுக்க. சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், வசம்பு, வெள்ளுள்ளி, காயம், வெந்தயம், இந்துப்பு, கடுக்காய்த்தோல் ஆகியவற்றை வகைக்கு 175 கி. எடுத்து மேற்கூறப்பட்ட சாறு விட்டரைத்துக் கொள்க. ஆமணக்கெண்ணெயிலே கலக்கி மெழுகு பதத்திலே வடித்து வைத்துக் கொள்க. அவ்வெண்ணெயை 4.4 கி. அளவு 5 நாட்கள் காலை மாலை கொடுக்கவும். எண்ணெய் கொடுத்த பிறகு 2, 3, தரம் பேதியாகும். பேதியுடன் கிருமியும் வெளியேறும். பேதியானால் உப்பு போட்டு கஞ்சி கொடுக்கவும்.

மருந்து:-

கண்வாய் சிப்பியின் தோலைப் பொடியாக்கி சுட்ட கடுக்காயை அதனுடன் கலந்து வயிற்றில் தடவ தானப்புழு வெளியேறும். பெருமரத்தினிலைத்தூள் (ஈசுரமுலி) நெடிய கரும்பிட மெரித்த கரி இவற்றையும் தேங்காயெண்ணையில் குழப்பி வயிற்றில் போட தானப்புழு நீங்கும்.

நாக்குப்பூச்சிக்கு சாறு:-

மணித்தக்காளியை இடித்த சாறு 12 கி. எடுத்து தனியாகவும் குழந்தைகட்குக் கொடுக்கலாம். இதற்குச் சமமாகத் தாய்ப்பாலை உடன் சேர்த்தும் கொடுக்க நாக்குப்பூச்சி வெளியேறும்.

குடிநீர்:-

சுத்தி செய்த புரசம்விதை, ஓமம், வேப்பீர்க்கு, தயிரில் வேக வைத்துச் சுத்தி செய்த பிரண்டை ஆகிய இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து நன்றாகச் சிதைத்து 335 மி.லி. தண்ணீர் விட்டு நான்கிலொரு பாகமாகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டி அதில் 4 கி. அளவு தேனை விட்டுக் கலந்து குடிக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு இருவேளை 3 நாட்கள் கொடுத்து வரவும். 4 ஆம் நாள் சிற்றாமணக்

கெண்ணெயை பேதிக்குக் கொடுக்க வயிற்றிலுள்ள பூச்சிகள் கொத்துக் கொத்தாக விழும்.

எண்ணெய்:-

சிற்றாமணக்கெண்ணெய், சதுரக் கள்ளிப்பால், பசுவின் பால் வகைக்கு 280 மி.லி எடுக்க. கருஞ்சீரகம் 17 1/2 கி. எடுக்க. தோலுரித்த வெங்காயம் 70 கி. எடுக்க.

மேற்கூறிய திரவங்களை ஒன்று சேர்த்து சிறு தீயாக எரித்துக் கொள்க. ஒரு கொதி வந்தவுடன் மேற்கூறிய மருந்துப் பொருட்களைச் சேர்த்து இடித்து அரைத்து தூளை அக்கலவையில் போட்டு எரித்து கடுகுத் திரள் பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

பெரியவர்களுக்கு 4 கி. அளவும், சிறுவர்களுக்கு 2 கி. அளவும் கொடுக்க. இவ்வெண்ணெய் இளநீர், பால், சீனி, தேன் முதலியவற்றை அனுபானமாகக் கொண்டு குழந்தைகளின் தன்மை, நோயின் வன்மை, மென்மையை அறிந்து கொடுக்கலாம்.

கழிச்சலாகி பழைய மலங்கள் அனைத்தும் வெளிப்படும். அனைத் துப் பூச்சிகளும் கிருமிகளும் வெளிப்பட்டு போகும். கழிச்சல் அதிகமா னால் நீருஞ் சாதமும் சாப்பிடக் கழிச்சல் நிற்கும்.

மருந்து:-

தேங்காய்க் கொப்பரையைப் பெருந்துண்டுகளாக அறுத்து நெல் லோடு வேக வைத்து சுமார் 17½ கி. அளவு குழந்தைக்குத் தின்ன கொடுக்க வேண்டும். இவ்வாறு 2,3 நாட்கள் செய்யின் மலம் வழியாகக் கிருமிகள் வெளிப்படும்.

கீரிநோயின் குறிகுணம்:-

கீரிப்புழு இருந்தால் வயிறு வலிக்கும். உடலும் வலிக்கும், மெலியும், சீதம் விழும். மலம் கருகும், குதத்தைச் சுற்றி அதிகமான கடுப்பு ஏற்படும். சுரம் காயும், கண்ணீல் பீளை ஏற்படும், உடலில் இருக்கும் நீர் வென்னீர் போலாகிவிடும். குழந்தை மிகவும் மெலிந்து விடும்.

குழந்தையின் நெஞ்சு ஒடுங்கிவிடும். இளைப்பு ஏற்படும். நெஞ்சும் விலாவும் ஒடுங்கும். குழந்தை சீறிச் சீறி அழும்.

குழந்தையின் வயிற்றில் கீரிப்புழு இருந்தால் அடிக்கடி பால் போலச் சிக்கி கழிதல், உடம்பு இளைத்துக் காட்டுதல், மார்பிலும் விலாவிலும்

நெறி கட்டிக் கொண்டு அறிவு மாறிப் பேசல் எனும் குறிகுணங்கள் இருக்கும்.

(ஆரையிலைச்) சாறு:-

ஆரையிலை 3.9 லி. நெல் கொள்கிற பெட்டி நிறைய பறித்துக் கொண்டு வந்து அதே இலையில் ஆற்று மணலை வறுத்துக் கொட்டி குலுக்கி சற்று நேரம் வைத்து மறுபடியெடுத்து மணலைத் தட்டி அந்த இலையை உரலிலே போட்டு தண்ணீர் தெளித்து இடித்துப் பிழிய சாறு வரும். இலையில் வழுவழுப்பு காணாது. அச்சாற்றை 12 கி. அளவுக்கு ஆறுநாட்கள் காலை, மாலை, கொடுக்க கீரிப்புழு நீங்கும்.

(எலிச் செவிக்) குடிநீர்:- 1

எலிச் செவிக்கீரை, முருங்கைப்பட்டை, கடுக்காய்த்தோல், தான்றிக் காய்த்தோல், நெல்லிவற்றல் ஆகிய ஐந்து பொருட்களை 9 கி. இடித்து எடுத்து ஒரு மட்பாண்டத்திலிட்டு 650 மி.லி. நீர் விட்டுக் காய்ச்சி 81 மி.லி. ஆகச் சுருக்கி வடித்து அதில் 4 கி. வாய்விடங்கத்தைப் போட்டு தினம் இரண்டு வேளை கொடுத்து வந்தால் கீரிப்பூச்சி மலத்துடன் விழுந்துவிடும். தாய்ப்பாலுண்ணும் குழந்தைக்கு இருப்பின் குழந்தையின் தாயும் உண்டு வரலாம்.

(கருவேலம்பட்டைக்) குடிநீர்:- 2

கருவேலம்பட்டைச்சாறு நல்லெண்ணெய் வகைக்கு 335 மி.லி. உப்பும் நவச்சாரமும், 488 மி.கி. எடுத்து இவற்றை 335 மி.லி. அளவாய் சுருக்கிக் காய்ச்சி கொடுக்க கீரிப்பூச்சி விழும்.

(முசுட்டைக்) குடிநீர்:- 3

நல்ல முசுட்டையைத் துண்டு துண்டாய் நறுக்கி 2.6 லி நீர் விட்டு 675 மி.லி. ஆகச் சுண்டக் காய்ச்சி தினமும் காலையில் குடித்தால் புழு செத்து விழும்.

(முத்தக்காசு) குடிநீர்:- 4

முத்தக்காசு எலிச்செவி, திரிபலை. முருங்கை வேர் இவற்றை நீர்விட்டு எட்டில் ஒன்றாகச் சுண்டக்காய்ச்சி முன்னமே பொடித்து வைத்திருந்த திப்பிலி, வாய்விளங்கம் இவற்றின் பொடியைத் தூவிக் கொடுக்க வயிற்றுப்பூச்சிகள் மடியும்.

(கருங்காலிவேர்க்) குடிநீர்:- 5

கருங்காலிவேர், குடசப்பாலைப்பட்டை, வேப்பலகு, வசம்பு, திரிக டுகு, திரிபலை, சிவதைவேர் இவற்றைச் சமமாகச் சேர்த்து கோமியம் விட்டு குடிநீராக்கிக் குடித்தால் வயிற்றிலுள்ள பூச்சிகள் மடியும்.

(முருங்கைக்) குடிநீர்:- 6

350 கி முருங்கைக் கீரையை அவித்து 5.2. லி தண்ணீர் விட்டு நாலொன்றாய் காய்ச்சி அதில் 81 மி.லி. குடிநீரைக் காலையில் கொடுத்து அவ்விலையை எடுத்துப் பிழிந்து வயிற்றில் வைத்துக் கட்டி விட்டால் கொடிய கீரிப்பூச்சி செத்து மலத்தோடு வந்துவிடும்.

கற்கம்:- 1

ஆவாரை வேர்ப்பட்டை, ஆடு தின்னாப்பாளை வேர் இவற்றைச் சமனெடுத்து சேர்த்து காடியில் அரைத்துக் காடியில் கொடுக்கவும். தீரும்.

கற்கம்:- 2

கருவேப்பிலையை அரைத்துக் கொள்க. அத்துடன் வசம்பு 4.4 கி. எடுத்து சுட்டு சேர்த்தரைத்துப் பழந்தண்ணீரில் கலக்கி 16 மி.லி. கொடுக்க கழிச்சல் ஏற்பட்டு கீரிப்பூச்சி இறந்து விடும்.

(குப்பைமேனி) அடை:-

குப்பைமேனி இலையைப் பறித்துச் சுத்தம் செய்து அதனுடன் சுக்கும், மிளகும், சேர்த்தரைத்து அடைதட்டி உண்டு வந்தால், கீரிப் பூச்சி விழும்.. அடைதட்டி மிஞ்சிய விழுதை கால் முட்டியில் தடவலாம்.

(இளநீர்) நெய்:- 1

335 மி.லி. பசுநெய்யையும், செவ்விள நீரையும் ஒன்றாகக் கலந்து அதில் கிராம்பு, சாதிக்காய், அதி மதுரம், ஓமம், சுக்கு, ஏலம், கோட்டம் ஆகிய ஏழு பொருட்களையும் வகைக்கு 4.கி. எடுத்து தண்ணீர் விட்டரைத்துக் கலந்து பக்குவமாய்க் காய்ச்சி வடித்து அதை 16 மிலி வீதம் நோய் வன்மைக்குத் தக்கவாறு கொடுத்துவர கீரிநோய் நீங்கும்.

நெய்:- 2

பசுநெய், வல்லாரை சாறு வகைக்கு 335 மி.லி. எடுக்க. கிராம்பு, சாதிக்காய், அதிமதுரம், அவுரி, ஓமம், சுக்கு, ஏலம், கோட்டம்

ஆகியவற்றை 4 கி. எடுத்து தண்ணீர் விட்டரைத்து கலவையில் சேர்த்துக் காய்ச்சி பக்குவபதத்துடன் இறக்கிக் கொள்க. அதனை 16 மி.லி. வீதம் குழந்தைகட்குக் கொடுக்க கீரி நோய் நீங்கும்.

நெய்:- 3

பசுவின் வெண்ணெய் 335 மி.லி. அத்திப் பிஞ்சு இடித்த சாறு 165 மிலி, பருத்திப் பிஞ்சை இடித்த சாறு 165 மி.லி. செவ்விளநீர், குதம்பையை இடித்த சாறு 165 மி.லி. எடுத்து இவையனைத்தையும் வடிகட்டி ஒன்றாய்க் கலந்து கொள்க.

ஏலம், இலவங்கம், கொத்துமல்லி, நற்சீரகம், ஓமம், கோட்டம், அதிவிடையம் பெருங்காயம், மாசிக்காய், வாய்விடங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிமதுரம் ஆகியவற்றை வகைக்கு 45 கி. எடுத்துக் கொள்க. இவற்றை மேற்கூறிய சாறு விட்டரைத்துக் கொள்க. நெய்யையும் சேர்த்துக் கொள்க. வயல்நத்தை 6, காட்டுநத்தை 6 எடுத்து அதில் நத்தைச் சதையை மட்டும் நெய்யுடன் சேர்த்துக் கொள்க. நெய்யைக் காய்ச்சி மெழுகு பதமானவுடன் வடித்து வைத்துக் கொள்க. அதை ஒரு ரூபாயளவு (12 கி.) 5 நாட்கள் 10 பொழுது கொடுக்க கீரிப்புழு மலத்தில் விழும்.

நெய்:- 4

பசுவின் நெய் 165 மி.லி., கோழியாவரைச் சாறு 165 மி.லி. எடுத்துக் கொள்க. இலவங்கம், சாதிக்காய், அதிமதுரம் ஓமம், மேற்றோல் சீவின சுக்கு, ஏலம், கோட்டம் ஆகியவற்றின் சூரணம் வகைக்கு 4 கி. எடுக்க. இவற்றைத் தண்ணீர் விட்டரைத்துக் கொள்க. இவ்விழுதைக் கலவை யில் சேர்க்க. காய்ச்சி கடுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க. 4 கி. அளவு கொடுக்க வயிற்றிலுள்ள கீரிப்பூச்சி, சிறு கிருமி முதலியவை வெளிப்படும்.

எண்ணெய்:-

சாரணைக் கொழுந்து, வேளைக் கொழுந்து வகைக்கு ஒருபிடி எடுத்து இரண்டையும் நறுக்கி விளக்கெண்ணெயில் கொதிக்க வைத்துக் கொள்க. 8.8 கி. அளவு அந்த எண்ணெயை உள்ளங்கையிலூற்றி நக்கினால் கீரிப்பூச்சி விழும்.

மருந்து:-

புற்றுச் சோற்றைத் தேனில் குழைத்து விழுங்க பூச்சி கூட்டோடு சேர்ந்து விழும்.

மசரைப் புழுநோய் குறிகுணம்:-

இரத்தமாகக் கழியும், மலமும் சீதமும் சேர்ந்தும் கழியும், குழந்தை சோர்ந்து இருக்கும். ஒரு வேளை சீதமாகவும் ஒரு வேளை மலமாகவும் ஒரு வேளை நீராகவும், ஒரு வேளை கலந்ததாகவும் கழியும். மலம் கருகி இருக்கும். மலவாய் வெளிவருதல், அடிவயிறு நொந்து வலித் தல், வயிற்றுவலி, கத்தரிக்காய் கசங்கின நிறமாய்க் கழிதல் என்னு மிவை மசரைப் புழுநோயின் குறிகுணங்கள்.

(சிறுபீளை) நெய்:- 1

மஞ்சள், ஈருள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, ஏலம், சிறுபீளை வேர் (அல்லது) இலைச்சாறு, மசரை மீன் தலை ஆகிய ஒன்பது பொருட்களையும் வகைக்கு 4 கி. எடுத்து சிறுபீளைச் சாறு விட்டு அரைத்து எருமை நெய்யில் கலக்கி அடுப்பேற்றிக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வேளைக்கு 4.4 கி. கொடுத்து வர மசரைப் புழு நோய் தீரும்.

நெய்:- 2

நாயுருவியிலை, குப்பைமேனியிலை, கொழுஞ்சியிலை, தூதுவளை யிலை ஆகிய இலைகள், வசம்பு, சுக்கு, மஞ்சள் ஆகிய ஏழு பொருட்களையும் 2.2 கி. எடுத்து தண்ணீர் விட்டரைத்து 335 மி.லி. பசுநெய் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாக வரும் போது வடித் தெடுத்துக் கொள்க. அதனை வயதுக்குத் தக்க அளவு குழந்தைகட்குக் கொடுக்க மசரைப்புழு நோய் தீரும்.

(நாயுருவி) நெய்:- 3

பசுவின் நெய் 335 மி.லி. எடுத்துக் கொள்க. நாயுருவியை எடுத்து நெய்யில் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாக வரும்போது இறக்கிக் கொண்டு குழந்தையின் வன்மை, மென்மை, நோயின் தன்மையை அறிந்து கொடுக்க மசரைப்புழு நோய் ஒழியும்.

வழக்கிலுள்ள சில மருத்துவ முறைகள்:-

1. குப்பை மேனித் தைலம்:- மேனித்தலைத்தை வயதுக்குத் தக்கவாறு $7\frac{1}{2}$ கி. முதல் 30 கி. வரை கொடுக்க புழுக்கள் வெளியாகும். மலமும் கழியும்.

2. மாந்த எண்ணெய்:- உத்தாமணிச்சாறு, உப்பு, வசம்பு சுட்டகரி, ஆமணக்கு எண்ணெய் சேர்த்து காய்ச்சி குழந்தைகளுக்குக் கொடுக்க புழு வெளிப்படும்.

3. வேம்புகற்கம்:- வேப்பங்கொழுந்து, ஓமம், மிளகு, பூண்டு, சுக்கு, நொச்சிக் கொழுந்து, கறிவேப்பிலை, சோம்பு, சித்தரத்தை, உப்பு ஆகியவற்றை எடுத்து இவற்றுள் உப்பு நீங்கலாக மற்றவற்றை நெய் விட்டு வதக்கி கடைசியில் உப்பைச் சேர்த்து நீர்விடாமல் மை போல் அரைத்துக் கொள்க. இதில் 65 கி. முதல் 260 மி.கி. வரை குழந்தையின் வயதுக்குத் தக்கவாறு தண்ணீரில் கரைத்து புகட்ட புழு இறந்து வெளியாகும். இத்துடன் மாந்தம், வயிற்றுப்பொருமல், சளி இவை தீரும்.

4. பலாசுவிதை:- பலாசுவிதையை நீரில் ஊறவைத்து மேல் தோலை எடுத்துவிட்டு பருப்பை உலர்த்தி பொடித்து 260 மி.கி. வீதம் தேனில் கலந்து தினமும் 3 வேளை 3 நாட்கள் கொடுத்து விட்டு 4வது நாள் காலை விளக்கெண்ணெய் கொடுக்க, கழிச்சலுடன் புழுக்கள் வெளியாகும்.

5. வாய் விடங்கம்:- விதையைப் பொடி செய்து 2 முதல் 5 கி. எடையைத் தேனில் குழைத்து ஒரு நாளைக்கு 2 வேளை கொடுத்து அடுத்த நாள் சிற்றாமணக்கெண்ணெய் கொடுக்க வயிற்றுப் புழுக்கள் வெளியாகும். (வயதுக்குத் தக்கவாறு)

6. அகத்திக்கீரை:- அகத்திக் கீரையை வேகவைத்து வடித்த நீரில் சிறிது பனங்கற்கண்டு கூட்டி 85 மி.லி - 165 மி லி. வரை கொடுக்க, கழிச்சலுடன் வயிற்றுப்புழு வெளிவரும்.

7. முருக்கன் விதை மாத்திரை:- சுக்கு, மிளகு, திப்பிலி, முருக்கன் விதை, சீரகம், நேர்வாளம், கடுகுரோகிணி, இவற்றைச் சேர்த்து அரைத்து செய்த மாத்திரையினைத் தக்க அளவில் கொடுக்க புழுக்கள் வெளிப்படும்.

புழுக்கள் வெளியேற பற்று:-

கருஞ்சீரகத்தை ஆற்றுத்தும்மட்டி சாறுவிட்டு அரைத்து இருபக்க விலாக்களிலும் பூச குடலில் தங்கி உள்ள புழுக்கள் வெளிப்படும்.

மாந்த எண்ணெய்:-

வெட்பாலை அரிசி, உத்தாமணிச்சாறு, ஆமணக்கு எண்ணெய், கடுகுரோகிணி, நீரடிமுத்து, கோட்டம், கார்போக அரிசி, செண்பகப்பூ, அக்கிராகாரம், நேர்வாளம், இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய மாந்த எண்ணெயினைத் தக்க அளவில் கொடுக்க குடல் புழுக்கள் வெளிப்படும்.

ஆலோசனைகள்:-

பச்சைக்காய்கறிகளையோ, பழங்களையோ பயன்படுத்தும் போது சுத்தமாகக் கழுவி பயன்படுத்த வேண்டும். நன்றாக வேக வைக்க வேண்டும். பாத்திரங்கள் தூய்மையானதாகவும், சுற்றுப்புறம் தூய்மை யானதாகவும் இருக்க வேண்டும். அழுகிய பழங்கள், காய்கறிகள், கெட்டுப் போன தயிர், பழைய சோறு இவற்றைக் தவிர்க்கவும். குழந்தைகள் தனது விரல்களில் உள்ள நகங்களை வெட்ட வேண்டும். சாப்பிடுவதற்கு முன்னரும் மலங்கழித்த பின்னரும் கைகளைச் சுத்த மாக கழுவுதல் வேண்டும். குழந்தைகள் வாயில் விரலை வைத்து சூப்பும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும். அதிக இனிப்புப் பண்டங்க ளையும் தவிர்க்க வேண்டும். இரவு படுக்கும் போது பல் துலக்கி, வாய் கொப்பளித்து கழுவுதல் வேண்டும். கைப்புச் சுவை (கசப்புச் சுவை)யுள்ள உணவுப் பொருட்களான பாகல்காய், அகத்திக்கீரை, சுண்டைவத்தல், கோவைக்காய், கறிவேப்பிலை முதலியவற்றை உண வில் தக்க அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பன்றி, மாடு, முதலிய இறைச்சிகளை கூடியவரை உணவில் தவிர்ப்பது நல்லது. மேலும் உண்ணும் போது நன்றாக வேகவைத்து உண்ண வேண்டும். குழந்தைகள் நாயுடனும், வீட்டுப் பிராணிகளுட னும் சேர்ந்து விளையாடுதலைத் தவிர்க்க வேண்டும்.

அப்போதைக்கப்போது புழுக்களினால் உண்டாகின்ற துணை நோய் களான சுரம், கழிச்சல், வாந்தி, மாந்தம், வெறுப்புநோய், ஊதல் நோய், பசி இன்மை போன்றவற்றிற்குத் தக்க மருத்துவம் செய்தல் வேண்டும்.

நம் சித்த மருத்துவ முறைகள் இவ்வாறிருக்க ஆங்கில முறை மருத்துவம் கூறும் முறைகளையும் இங்குக் காண்போம்.

ஆங்கில முறை மருத்துவம்

குடற்கிருமிகள்:-

குடற்பூச்சிகளில் பலவகை உண்டு. அவற்றுள் முக்கியமானவை:-

பட்டைப்பூச்சிகள் **(Tape worms)**

வட்டப்பூச்சிகள் **(Round worms)**

பட்டைப் பூச்சிகள்:-

பட்டைப்பூச்சிகள் நான்கு வகைப்படும் அவையாவன:

1 மாட்டிறைச்சி பட்டைப்பூச்சி **(Beef Tape worm)**

2. பன்றியிறைச்சி பட்டைப்பூச்சி **(Pork Tape Worm)**

3 மீனிறைச்சி - பட்டைப்பூச்சி **(Fish Tape worm)**

4. நாய் பட்டைப்பூச்சி ***(Tape warm of dogs)***

இவற்றுள் முதல் மூன்று பட்டைப்பூச்சிகள் மாடு, பன்றி மீன், இவற்றின் இறைச்சிகளைச் சரியாகச் சமைத்துண்ணாததால் ஏற்படும். நான்காம் வகை பட்டைப்பூச்சி நாயினால் பரவக்கூடியது. நாயுடன் நெருங்கிப் பழகுவதால் இவ்வகை பட்டைப்பூச்சிகள் மனிதர்களைத் தொற்றுகின்றன.

மாட்டிறைச்சி பட்டைப்பூச்சி (Beef Tape worm)

இது பல மீட்டர் நீளமுள்ளது. இதன் தலைக்கு ஸ்கோலக்ஸ் ***(Scolex)*** என்று பெயர் இத்தலை குண்டூசி அளவு இருக்கும் இதன் தலையில் இரத்தத்தை உறிஞ்சக்கூடிய நான்கு உறிஞ்சிகள் **(Suckers)** உண்டு.

பருவநிலை அடைந்த இதன் ஒவ்வொரு பகுதியும் **(segment)** கர்ப்பப்பை உடையதாக இருக்கும். கர்ப்பப்பை 15 முதல் 20 பக்கக் கிளைகள் **(latered branches)** உடையதாக இருக்கும்.

இதன் முட்டை மலத்தில் வெளியேறும் சில நேரங்களில் இதன் உடல் பாகமும் **(segment)** மலத்தில் வெளியேறும்.

பன்றியிறைச்சிப் பட்டைப்பூச்சி (Taenia solium)

இது மாட்டிறைச்சி பட்டைப் பூச்சியைப் போன்றே சில வேறுபாடு களுடன் காணப்படும். இது முட்டையிலிருந்து மாறுபாடடையும். இரண்டாம் நிலையில் பன்றி இறைச்சியிலிருந்தும் மனித மலத்திலிருந் தும் மனிதனுக்குப் பரவும் வாய்ப்புடையது. பன்றி இறைச்சியிலிருந்து வரும் இப்புழு மனிதனின் மூளைக்கும் மற்ற தசைப்பகுதிகட்கும் செல்கின்றது. 5 முதல் 20 ஆண்டுகள் வரை உயிர்வாழும் இப்புழுக்கள் காக்காய்வலிப்பு, சில நரம்பு நோய்கள் போன்றவற்றை உருவாக்கும்.

நாய்பட்டைப் பூச்சி: Hydatid Disease (Echinococcus Granulosus)

இவ்வகைப் பட்டைப்பூச்சி நாயிலிருந்து மனிதனுக்குப் பரவுகின்றது. மனிதன் நாயுடன் பழகுவதாலும், மற்றும் தண்ணீரிலிருந்தும் இதன் முட்டைகள் வாய் வழியாகக் குடலுக்குச் செல்கிற இப்புழுக்கள் குடலிலிருந்து மனித ஈரலைச் சென்றடைகின்றன. இது மனித ஈரலிலும், நுரையீரலிலும் சைஸ்ட் **(cyst)** என்ற கட்டியை உருவாக்கும் இப்புழுக்கள் சமயத்தில் மூளையிலும் சிறிய கட்டியை உருவாக்கும்.

நூல்பூச்சி (thread worm) (Entrobius Vernicularis)

இவ்வகையைச் சார்ந்த மற்றொரு வகையான பூச்சி நூல் பூச்சி எனப்படும். இது பெரும்பாலும் குழந்தைகளைப் பாதிக்கும். ஆண் நூல் பூச்சிகள் 2 முதல் 5 மி.மீ. நீளமும், பெண் பூச்சிகள் 8 முதல் 13 மி.மீ. நீளமும் உடையதாக இருக்கும். கர்ப்பினியான பெண் பூச்சி மலவாயைச் சுற்றிலும் முட்டைகள் இடும். அப்போது மலவாயில் அரிப்பு உண்டாகும். விரல்களை அரிப்பிற்குப் பயன்படுத்தும் போது அம்முட்டைகள் நகத்தில் ஒட்டிக்கொள்ளும். மீண்டும் நகங்களை வாயில் வைக்கும்போது முட்டை குடலுக்குச் செல்கின்றது. முட்டைகள் சிறுகுடலில் புழுவாக மாறி பெருங்குடலில் வளர்ச்சியடைகிறது.

வட்டப்புழுக்கள் (round worm) (Ascaris Lubricoides)

இதன் நீளம் சுமார் 20-35 மி.மீ அளவு இருக்கும். இதன் முட்டைகள் கலந்த உணவுப் பொருட்களை உண்பதால் இந்தப்பூச்சி பரவுகின்றது. இதன் முட்டைகள் டியோடமம் **(Duodemum)** என்ற குடல் பகுதியில் பொரிந்து புழுக்களாக மாறுகின்றன. இது சிறு குடலில் முழுவளர்ச்சி பெறுகின்றது. இப்புழு சிற்சில சமயங்களில் ஆசனவாய் முதல் வாய் வரை பயணம் செய்யக்கூடியது. இது தவறாக சுவாசக் குழலுக்குச் சென்று விட்டால் மரணம் நேரிடும். இவ்வகை வட்டப்புழுக்களால் ஈசினோபிலியா, வயிற்றுவலி, குடல் அடைப்பு, பித்தப்பாதை அடைப்பு, ஊட்டச்சத்தின்மை போன்ற நோய்கள் உண்டாகும்.

சாட்டைப் புழு: (whip worm) (Trichuris Trichiura)

மணல் கலந்த மண்ணில் குழந்தைகள் விளையாடும் போது சில குழந்தைகள் மண்ணைத் தின்னும்.. அதே விரல்களை வாயில் வைப்பதாலும் இதன் முட்டை வாய்க்குள் செல்லும். இதனால் புழுக்கள் உருவாகும். வளர்ந்த புழுக்கள் சுமார் 3.5 செ.மீ. நீளமிருக்கும். பெருங்குடலில் இருக்கும் இவ்வகை புழுக்களால் பேதியும், பௌத்திரமும் **(rectal prolapse)** உண்டாகும்.

கொக்கிப் புழு (Hook worm) (Ancylostomiasis)

இப்புழுக்கள் சிறுகுடலில் காணப்படும். மலத்தின் மூலம் வெளியே வரும் முட்டைகள் ஈரமான மண்ணில் புழுக்களாக மாறுகின்றன. இப்புழுக்கள் மனிதனின் தோலைத் துளைத்துக் கொண்டு நுரையீரலைச் சென்றடைகின்றன. சுவாசப்பாதை வழியாக வாய்க்கு வந்து சிறுகுடலைச் சென்றடைகின்றன. இது நான்கு வார காலத்திற்குள் முழுவளர்ச்சியடைந்து விடும் இது சுமார் 1 செ மி நீளம் வரை வளரும். தோலைத் துளைக்குமிடத்தில் சிறு புண்கள் **(Allergic inflammation)** உண்டாகும். ஈசினோபிலியாவை உண்டாக்கும் இப்புழுக்கள் இரத்தத்தை உறிஞ்சி வாழும்.

இது நுரையீரலிலிருந்து சுவாசப்பாதை வழியாக வாய்க்கு வரும்போது இருமலையும் இரத்தம் கலந்த சளியையும் உண்டாக்கும். இது வயிற்றில் வலியை உண்டாக்கும். இது நிமோனியாவையும் ஏற்படுத்தலாம் வயிற்றோட்டத்தையும் (கழிச்சல்) உண்டாக்கலாம். இதனால் இரத்த சோகை ஏற்பட்டு புரதச்சத்து குறைந்து குழந்தைகளின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

குடற்கிருமிகள் - பாடல்

தானப்புழுவுக்கு எண்ணெய்:- 1

போவதற்கு வகையெதுதான் சொல்லக் கேளு
புகையிலைவெட் டயமரு தகியும் வேறாய்
ஆவதற்கு சுடுகரி நேர்வ தாக
அரைப்படி நிம்பநெய் யதனில் தீட்ட
பூவதற்குத் தானவாய்ப் புழுவு மாறும்
போட்டுவரச் சலவாய்க்கு மிதுபோ லாகும்
நோவதற்கு மார்பதிலு மூர்ந்த
நூல்கிருமி போகுமென்று நுவலு வோமே.

(கை.பி.98-34)

தானப்புழுவுக்கு மருந்து:- 1

குணமாகத் தானவாய்ப் புழுவுக் கெல்லாம்
குறியான மருந்தொன்று கூறக் கேளு

கணவாயின் தோடதனைப் பொடிய தாக்கி
கடுக்காய்சுட் டதிற்கலந்து தடவத் தீரும்
நிணமேவும் பெருமரத்தி னிலைத்து ளோடு
நெடியகரும் பிடமெரித்த கரியும் நேராய்
மணமேவுந் தேங்குருக் கெண்ணெய் தன்னில்
மத்தித்துப் போட்டுவர மாறிப் போமே.

(கை.பி.98-34)

கீரிநோயின் குறிகுணம்

கிளைபெரு மானே கேளாய்
கீரிநோய் குணத்தைச் சொல்ல
உளைந்திடும் வலிக்கு மங்கே
உடல்மலங் கருகிச் சீதம்
விளைந்திடும் மிகவே நின்று
வெண்குத வாயைச் சூழ்ந்து
கழிந்திடும் கழிப்புக் காட்டும்
கணசுரம் காட்டு மென்றே

காய்ந்திடும் கமுந்து வாங்கும்
கண்ணினில் பீளை சாடு
முயந்திடம் முதுகு மேனி
யொண்ணுநீர் வெண்ணீ ராகும்
தேய்ந்திடும் குளவி தானும்
திறங்கெடு மிவைகள் தீர
வாய்ந்திடும் மருந்து தன்னை
யடவதாய்ச் சொல்லக் கேளே.

(ஏடு 435-28), (ஏடு 601-76)

கொஞ்சியும் நெஞ்சொ டுங்கி
குளைந்ததோ ரிழைப்புக் காட்டி
நெஞ்சோடு விலாவொ டுங்கி
நேரிதாய் மேனி வாடி
செஞ்சியில் மானே பிள்ளை
சீரிமெத் தமுது காட்டும்
மஞ்சவே கீரி நோயென்
றறிந்தவ ருரை;ந்த வாறே

(ஏடு 601-75)

மஞ்சடை மதலை தானும் மருவிடும் பால்பா லாக
மிஞ்சியே வயிற்றிற் பூச்சி மேனியும் மலைத்துக் காட்டும்
நெஞ்சொடு விரைவிற் றட்டி நெறிகட்டு பேசு மாகில்
அஞ்சவே கீரி நோயென் றறிந்துகொள் எழகு மாதே.

(476-172), (477-376,377)

(எலிச் செவிக்) குடிநீர்:- 1

நித்தமும் எலிச்செவியும் நீள்முருங்கை நல்வேறும்
அத்தத் திரிபலையோ டாங்குடிநீர் - ரத்தகணாய்
வாய்விளங்க மேல்தூவி மைந்தர் வயிற்றின் உள்ள
தாய்விழுங்கப் பூச்சிவிழும் தான்.

(476-173), (477-377)

(முருங்கைக்) குடிநீர்:- 6

கீரிப் பாம்பு விழமருந்து கேளீர் முருங்கை இலையதனை
நேர்ப்பாய் அவித்து நால்நாழி நீரே வார்த்து நாலிலொன்றாய்
ஏர்ப்பாய்க் கால மேகொடுத்து இலையை வயிற்றி லேவைத்துக்
கோர்ப்பாய்க் கட்டச் செத்துவிழுங் கொடியக் கீரிப் பாம்பதுவே

(476-173), (477-388)

(இளநீர்) நெய்:- 1

கேளுங் கீரி நோய்தனக்குக் கிளர்ந்த பசுவின் நெய்யுழக்கு
கேளி இளநீ ரொப்பாகக் கிராம்புசாதிக் காய்மதுரம்
தோழி லோமம் சுக்கேலமது கோஷ்ட்டம் அறுகால் ஒன்று
மாள அரைத்து நெய்க்காய்ச்சி வருநெய்க் கரண்டி கொளத்தீரும்

(476-172,173), (477-377)

நெய் 2:-

கேளும் கீரி நோய்தீர
கிளர்ந்த ஆவின்நெய் யுழக்கில்
காளி யாரைக் சாறொப்பாய்க்
கிராம்பு சாதிக் காய்மதுரந்
தோழி ஓமம் தக்கோலம்
துய்ய கோட்டம் காலொன்று

மாள அரைத்து நெய்காய்ச்சி
மருந்து கரண்டி கொளத்தீரும்

(ஏடு 435-29), (ஏடு 601-101) (476-172-173)

மசரைப்புழு நோயின் குறிகுணம்:-

மான்விழி மானே கேளாய்
மசரிநோய் வருத்தத் தானு
முள்வயி றுளைந்து சீதம்
உடன்வலம் சிக்கி நின்று
கூன்குத வாயில் குத்தி
குமறியே குருதி வீழ்ந்து
தீனகாத் துடனே சீதம்
சிதறியே தப்பித் தள்ளும்
தள்ளினால் குருதிச் சீதம்
தருகியே குதவா நின்று
கிள்ளியே யெடுக்கும் சீதம்
கீழ்வயி றுளைந்து நோகும்
மெள்ளவே தீர்க்கும் வண்ணம்
விளங்கிய முனிவர் தாமு
முள்ளநல் மேதி நெய்யில்
உறுவகை உரைக்க லுற்றார்

(ஏடு 601-77) (435-29)

சோருஞ் சீத மலந்தண்ணீர் துலங்க விடாம லேகழிந்து
சேறு மலம்போ லாபனத்தைச் சேர்த்தல் வெளியில் வயிற்றினோய்
காரி னிறம்போல் கத்தரிக்காய் கசங்கல் போலக் கழிந்து குத்தல்
வாரும் வடமுந் திகழ்முலையாய் மசரைப் புழுவின் குணமாமே

(477-376) (476-171)

(சிறுபீளை) நெய்:- 1

உற்றார் மேதி நெய்யுழக்கு
உட்சேர் மஞ்சள் யீரஉள்ளி
திரிகடு கோடு வசம்பேலம்
திகைதரும் பீளை வேரும்

தகுமதனி விலையிலைச் சாறும்
தசையுறும சரீமீனின்
நல்தலைத் தானுங் கூட்டி
நலமாய் நினைவு கெடாமல்தான் கூட்டே

கூட்டுமுன் சாறு விட்டு
கூர்மையா ரைத்து நெய்யில்
நாட்டமாய் கலந்து காய்ச்சி
நலப்பத மெழுக தானால்
தேட்டமாய் வடித்தோர் காசு
திகழுநோய் கொள்ளத் தீரும்
மீட்டமா யின்ன மொன்று
மென்பசு நெய்யில் சொல்வார்
(ஏடு 601-77,78), (ஏடு 435-30) (476-172) (477-376)

நெய்:- 2

மசரிநோய் தீரக் கேளாய்
வருமா வின்நெய் யுழக்கு
குசயில்நா யுருவி மேனி
கொளிஞ்சி தூதளை வேர் தானும்
வசம்புடன் சுக்கு மஞ்சள்
வகையோர்பாக் களவு கூட்டி
சீர்பதம் மெழுகா காய்ச்சி
யினியுண்ண மசரிப் போமே

(ஏடு 601-78) (476-172) (477-376)

(நாயுருவி) நெய்:- 3

ஆவின் நெய் வாங்கு கால்படியி னுள்ளே
இசையில் நாயுருவி மெழுகாய் காய்ச்சி
இனிதுண்ண மசரிப் போமே

(ஏடு 435-46)

கோழைக்கட்டு

சிறு குழந்தைகட்கு, தாயின் உடல் நிலையாலும் குளிர்ந்த நீரில் விளையாடலாலும் குளிர்ச்சியான பொருளைச் சாப்பிடுதலாலும் குளிர்ந்த காற்றுப்படுதலாலும் உடலின் சத்துக் குறைவினாலும் கபம் சேர்ந்து தொண்டை, நுரையீரல், மார்பு, இவற்றில் கோழை கட்டிக் கொள்ளும்.

தக்க மருந்துகளால் இதை உடனே அகற்ற வேண்டும். அல்லா விட்டால் கோழை மார்பில் சேர்ந்து கட்டிக் கொள்ளும். இதுவே வேறு பல நுரையீரல் நோய்களுக்கும் வித்திடும்.

(பிரண்டைச்) சாறு

ஒரு பிரண்டைத் துண்டை எடுத்து அதன் கணுவை நீக்கிவிட்டு, நெருப்பில் வாட்டிப் பிழிந்த சாற்றை 25 மிலி. வீதம் எடுத்துக் கொள்க. அதனைக் காலை மாலை இருவேளையுமாக 5-10 சொட்டுவரை ஐந்து நாள் கொடுக்க கோழைக்கட்டு நீங்கும்.

குடிநீர்:

சிறுதேக்கு, வாய்விடங்கம், வால்மிளகு, கடுகுரோகணி, சுக்கு, ஏலம், திப்பிலி, இலவங்கம், தான்றி, தக்கோலம், கசகசாப்பால் ஆகியவற்றை வகைக்கு 9 கி. ஆக எடுத்துக்கொள்க. அவற்றை இடித்துத் தூளாக்கி பாத்திரத்திலிடுக. 2.6 லி. தண்ணீர் ஊற்றி எட்டொன்றாகக் காய்ச்சிச் சுருக்கிக் கொள்க. அக்குடிநீரை (30 மி.லி. வீதம்) நோயின் வன்மை, குழந்தையின் தன்மை, மென்மை ஆகிய வற்றை அறிந்து கொடுக்க குழந்தைகளின் கோழைக்கட்டு நீங்கும்.

(குப்பைமேனி எண்ணெய்க்) கற்கம்:-

குப்பைமேனிச்சாறு எடுத்து அதில் போதுமான உப்பை அரைத்துக் குழைத்துக் குழப்பி கொள்க. அதில் சிறிது வேப்பெண் ணெய் கூட்டிக் கலந்து வேளைக்கு 520 மி.கி. வீதம் காலை மாலை இருவேளையுமாக 3 நாள் புகட்ட கோழை நீங்கும்.

வேப்பெண்ணெய்:- 1

வேப்பெண்ணெய் 675 மி.லி. எடுக்க. சங்கிலைச்சாறு, பாவட் டைச்சாறு, முசுறுமுட்டை ஆகிய மூன்றையும் வகைக்கு 162 மி.லி.

வீதம் எடுத்து கலந்து கொள்க. அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, சீரகம், கருஞ்சீரகம், கத்தூரி மஞ்சள், பூண்டு ஆகிய 8 பொருட்களை யும் வகைக்கு 4 கி. எடுத்துப் பொடித்து மேலே கூறப்பட்ட கலவையில் கலந்து காய்ச்சி மெழுகு பதமாக வடித்து வேளை ஒன்றுக்கு 25 மி.கி வீதம் கொடுக்க ஐயம் நீங்கிப் போகும். வெந்நீர்ச்சோறு கொடுக்க வேண்டும்.

வேப்பெண்ணெய்:- 2

குட்டிவிளாவேர், தூதுவளை வேர், நாய்வேளை வேர், சீரகம், கத்தூரி மஞ்சள், வெங்காயம், சிற்றரத்தை, மரமஞ்சள், ஆகிய எட்டு பொருட்களையும் வகைக்கு 9 கி. வீதமெடுத்து பொடித்துக் கொள்க. 675 மி.லி. வேப்பெண்ணெயுடன் சேர்த்துக் கலக்கி எரித்துப் பக்குவத் தில் இறக்கி வேளை ஒன்றுக்கு 15 மி.லி. வீதம் கொடுக்க ஐயம் நீங்கும்.

எண்ணெய்:- 3

தூதுவளை, நாயுருவி, கரிப்பான் என்னும் கரிசாலை, வல்லாரை, தும்பை, நொச்சி, கண்டங்கத்திரி ஆகியவற்றின் சாற்றை வகைக்கு 335 மி.லி. எடுக்க. சிற்றாமணக்கெண்ணெய் 1.3 லி. எடுக்க. இவை இரண்டையும் ஒன்றாய்க் கலந்து அதில் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெள்ளுள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு ஆகிய வற்றை வகைக்கு 12 கி. வீதம் எடுத்து அரைத்து முன் சொன்ன கலவையில் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி அளவு (15 மி.லி.) குழந்தைகட்குக் கொடுக்க குழந்தைகட்கு வரும் கபம் ஒழியும்.

எண்ணெய்:- 4

கருநொச்சி, செம்முள்ளி, கோழியவரை, கருமுள்ளி, வெதுப் படக்கியிலை ஆகியவற்றின் சாற்றை 1.3 லி. எடுக்க. ஆமணக்கெண் ணெய் 1.3 லி. எடுத்து அதனுடன் சேர்த்துக் கொள்க. வெள்ளைக் கல் சுண்ணம், கடுகுரோகணி, நேர்வாளம் ஆகிய மூன்றையும் வகைக்கு 17 1/2 கி. எடுக்க. மிருதாரசிங்கி, குடசப்பாலையின் பட்டை, கோட்டம் ஆகியவற்றை வகைக்கு 9 கி. எடுக்க. இச்சரக்குக ளைப் பொடித்து சேர்த்துக் காய்ச்சி குழந்தைகளின் சளிக்கு அதன் தன்மையறிந்து 5-10 மி.லி. கொடுக்க குழந்தைகளின் சளி நீங்கிப் போகும்.

(கப) மாத்திரை:- 1

அதிமதுரம், அக்கிராகாரம், வால்மிளகு, ஏலம், மயிற்பீலி சுட்டது, வடக்கயிறு சுட்டது, சிற்றரத்தை இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து ஆடாதோடைச் சாறு விட்டு 3 மணிநேரம் குழி அம்மியில் விட்டு அரைக்கவும். அரைத்த குழம்பை 130 மி.கி. அளவு உருட்டி நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும். இக்குளிகையைத் தேன், இஞ்சி, தாய்ப் பால் இவற்றில் ஏதேனும் ஒன்றில் கலந்து கொடுக்க இழுப்பு வலிப்பு, கபம், இருமல், ஈளை, காசம் முதலியன தீரும்.

மாத்திரை:- 2

குழியானை, (ஜீவப் பொருள்) பூநாகம் அல்லது நிலவேர், திப்பிலி, புகையூறல் அல்லது ஒட்டடை, மஞ்சள் தூள் இவற்றை ஓர் நிறையாய் நிறுத்து இஞ்சி, ஆடாதோடை, குப்பைமேனி இவற்றின் சாற்றால் அரைத்து நல்லமிளகு அளவு (250 மி.கி.) உருண்டை செய்து நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும். உலர்த்தி வைத்த மாத்திரையை அளவறிந்து இஞ்சிச் சாற்றில் கொடுக்க கபம், இளைப்பு, ஈளை, காய்ச்சல் இவை நீங்கி பேதியும் ஆகும்.

குழம்பு:-

நிலவேரை (பூ நாகம்) பழுக்க வறுத்துப் பொடி செய்து தேனில் (புளிப்பு நீக்கியது) குழைத்து சிறிதளவு குழந்தையின் நாக்கில் தடவ கபம், வலிப்பு, இழுப்பு முதலியன மாறும்

கோழைக்கட்டு - பாடல்

(பிரண்டைச்) சாறு

நாட்டி டுபிரண் டைநருக் கொன்றுதான்
வாட்டி டுபிழி வாங்கு சந்தனைப்
போட்டி டுமிரு போதுமா ரைத்துநான்
கூட்டி டுஞ்சளி கேழைக்கட் டோடுமே

(477-384) (476-168)

குடிநீர்:-

வாய்க்கவே சிறுதேக்கு வாய்விள ங்கம்
வால்மிளகு ரோகணியும் சுக்கோ டேலம்

சாய்க்கவே திப்பிலி இலவங்கந் தான்றி
தக்கோலம் மோதகப்பால் வகைவ கைக்கு
மாய்க்கவே கால்பலமாய் நிறுத்திக் கொண்டு
வன்மையாய் தூளிடித்துப் பாண்டத்திட்டு
காய்க்கவே இருநாழி சலமும் விட்டுக்
கடுகவே எட்டொன்றாய்க் காய்ச்சி யிறக்கே

இறக்கியே கொடுத்திடவே கிராணி மாந்தம்
இயல்பான சுரக்கட்டி விஷதோ ஷங்கள்
உறக்கிய இசிவுகண்ட மாந்தத் தோடு
உற்றதொரு கிராணி சோகைக் காமாலை
நொறுக்கியே கொண்டதொரு கோழைக்கட்டு
ஓடிப்போவான் பாரு கியாழத்தாலே...

(572-51)

வார்க்கவே சிறுதேக்கு வாய்வி ளங்கம்
வால்மிளகு யேலம்ரோ கணிசுக் கோடே
தாக்கோடே திப்பிலியும் இலவங்கம் தான்றி
தக்கோலம் பொஸ்தக் காயிவ கைக்கு
மாய்க்கவே கால்பலமாய் நிறுத்துத் தூக்கி
மைந்தனே தூளிடித்துப் பாண்டத் திட்டுக்
காய்த்துமே இருநாழிச் சலமும் விட்டுக்
கடுகெனவே எட்டொன்றாய்க் காய்ச்சி யிறக்கே.

இறக்கியே கொடுத்துவிட மாந்தக் கிராணி
இயலான சுரகட்டி விஷதோ ஷங்கள்
முருக்கியே இசுவுகண்ட மாந்தத் தோடு
உத்தமனே கிராணிசோகை காமாலை போகும்
உருக்கியே கணம்சுரம் கோழைக் கட்டு
நொடிக்கின்ற கொட்டாவி விம்மல் தும்மல்
நீர்களிடும் பித்தகணம் பாண்டு வெல்லாம்
நமனோடிப் போவான்பார் கியாழத் தாலே.

(468-85)

(குப்பைமேனி எண்ணெய்) கற்கம்:-

குப்பை மேனிச் சாற்றில் உப்பைக்
கூடக் கலந்து வேப்பெண்ணெய்

செப்ப மாக மத்தித்துக்
தேனே மூன்று நாள்பு கட்டத்
தப்பில் லாம லேயிளைப்புத்
தானே சுழிகணம் உப்பிசமும்
துப்பு நெஞ்சிற் கோழையுடன்
துயரங் கெட்டு ஓடு மென்றே

(476-80) (477-145)

வேப்பெண்ணெய்:- 1

வேப்பெண்ணெய் படியரைதான் சங்கிலைச் சாறு
விதமான படியரைக்கால் பாவட்டைச் சாறு
ஆப்பட்ட முசுறுமுட்டை படிய ரைக்கா
லடைவாக வெண்ணையிட்டுக் கடை மருந்து
மாப்பட்ட சுக்குதிப் பிலிவ சம்பு
வளமான மிளகுமிரு சீர கந்தான்
தாப்பட்ட கத்தூரி மஞ்சள் பூண்டு
தனித்தனிவ ராகனெடை வாங்கிக் கொள்ளே

வாங்கியே பொடியாக்கி யெண்ணை யிட்டு
வளமான மெழுகுபதம் வடித்துக் கொண்டு
தாங்கியே துட்டெடைதான் ஒரு வேளைக்குத்
தயவாகக் கொடுத்துவரத் தீரும் வியாதி
தூங்கிவிழுஞ் சந்நிசுரங் கபமுந் தானே
சொல்லுகிறேன் பறக்குமே மெய்தா னீது
சாங்கமுள எண்ணெயிது கைவி டாதே
தப்பாவெந் நீர்ச்சோறு சாப்பி டாயே

(பு. 477-319) (பு.476-134)

வேப்பெண்ணெய்:- 2

சாப்பிடவே வேப்பெண்ணெ யரைப்படி தானாகும்
தன்னோடு தனிக்குட்டி விளாவின் வேரும்
தாப்பிட்ட தூதுவளைநாய் வேளை வேரும்
கருஞ்சீரகங் கத்தூரி மஞ்ச ளோடு
மாம்பிட்ட வெங்காயம் சிற்ற ரத்தை
மரமஞ்சளிவையெல்லாம் எண்ணெ யிட்டுக்
காப்பிட்டே யெரித்துப் பதமா யிறக்கி
கரண்டி கொள்ள வியாதி போம்

(476-135) (447-319)

எண்ணெய்:

கருநொச்சி செம்முள்ளி கோழியவரை கருமுள்ளி சாறதுக்கியும்
கருதும் வெதுப்படக்கியிலை சமதூராய் கண்டசார் படியே
பருவத்தில் வாழ்கின்ற ஆமணக்கெண்ணெய் படியதிலே கலந்து
பகரத்தோணி வலம்புரிரோகிணியும் பலமரை நேர்வாளமும்
சுருவத்துடரைக் கால்மிருதார் சொல்குடசபாலையின் பட்டை
சுகமாய்க் கோஷ்டம் கால்பலமென்று துதியொன் பதமாக்கி
சிறுகுழவியர்க் கிடும்பிணி யுள்ளதுஞ்சிக்கு மலங்கழிந்து
சேர்ந்த சளி.......... சேர வோடிடுமே.

(ஏடு, 362, 59-60)

இருமல்

இயல்:-

தொண்டையிலும் மார்பிலும் கோழையுண்டாகி அதனை வெளி யேற்றுவதற்கும் கபம், பித்தம் இவை தன்னிலை பிறழ்ந்து தொண்டை, மூக்கு, உண்ணாக்கு, நுரையீரல் முதலிய இடங்களில் தாபிதத்தை (புண்ணை) ஏற்படுத்தி அதினின்று கோழை, சளி, நிணநீர் இவற்றை வெளியேற்றுவதற்கும் உண்டான இயற்கை ஒலியே 'இருமல்' எனப்படும்.

காரணங்கள்:

இனிப்புச் சுவை உள்ள பொருட்களை மிகுதியாக உண்ணல், மிக குளிர்ச்சி, மிகுந்த வெப்பம் உள்ள பொருட்களை மிகுதியாக உண்ணல், பசியை அடக்குதல், விருப்பமில்லாத பொருட்களை உண்ணல், தற்காலத்தில் சிறுவர்களில் சிலர் போதைப் பொருட்களை அதிகமாக உபயோகித்தல், ஆகியவற்றால் இருமல் வரும். இடுமருந்தி னாலும் புகை பிடிப்பதாலும் இருமல் வரும்.

உணவு உண்ணும்போது உணவுப் பொருள் உணவுக்குழல் வழியாகச் செல்லாது தவறி காற்றுக் குழலுக்குள் செல்லும் போதும் இருமல் ஏற்படும். இதனைப் ''புறக்கோல்'' என்பர்

குளிர் காற்றில் ஈடுபடுதல்; மிகுந்த வெய்யிலில் இருத்தல்; புழுதி, மண், சுண்ணம், பூநீறு, புகை, மிகுந்த காரம், நன் மணம், தீ மணம் இவற்றை மிகுதியாக முகர்தல், உரத்துப் பேசுதல், பாடுதல், மூச்சை அடக்குதல், பனியில் படுத்துறங்குதல், மூச்சுச் செல்லும் வழியில் தடை உண்டாகும் காரணங்களால் இருமல் உண்டாகும்.

சுரம், இளைப்பு நோய், பன்னாட்கள் நோயுடன் படுக்கையில் கிடத்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து துணைநோயாக இருமல் வரும்.

குறிகுணங்கள்:-

தொண்டை புண்பட்டதுபோல் வலித்தல், தொண்டை சிவத்தல், தொண்டையில் முள்ளால் குத்துவது போன்ற உணர்ச்சி ஏற்படல், குரலோசை குறைதல், மூக்கு நீர் பாய்தல், கண் சிவத்தல், மார்பு நோதல், சூடுள்ள பொருளில் விருப்பமுண்டாதல், சுரங்காய்தல், தலை கனத்தல் ஆகிய குறிகுணங்களையுண்டாக்கும்.

வாய் ஓயாதபடி இருமச் செய்யும். கோழை எளிதில் வெளியா காது. ஆரம்ப காலத்தில் கோழை சிறிது சிறிதாய் வெளியாகும். நாட் செல்லச் செல்ல கோழையும் சளியும் மிகுதியாகும். அடிக்கடி இருமல் வந்து கொண்டேயிருப்பின் நாட்பட்ட இருமலாகிறது. கோழை கெட் டிப்பட்டு நுரையுடன் வெளியாகும். மேலும் படுக்கை பொருந்தாமை, மூச்சு தடுமாறல், உடல் வன்மை குறைதல், முகம் கருத்தல், உதடு நீலமாதல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும். நோய் முற்றிவிட்டால் சளி, சீழைப் போல் நாற்றத்துடன் வெளியாகும்.

நுரையீரல், நுரையீரல் குழல் இவற்றில் சளி மிகுந்து மூச்சுவிட தடையுண்டாகும்.

வளி, அழல், ஐயம், வளியழல், அழலையம், முக்குற்றம், மந்தாரம், பக்கமந்தாரம், இழுப்பு, சுரம், குருதி, மூக்கடைப்பு ஆகிய பன்னிரண்டு வகைகளாக இருமல் பகுக்கப்பட்டுள்ளது. அதன் விளக் கம் பக். 139 - 144-இல் காண்க.

மருத்துவம்:-

ஐயகுற்றம் மிகுதியினால் தொண்டையிலும் மார்பிலும் சேர்ந் துள்ள கோழையை அகற்றி வெளியாக்குவதற்கும் அழல், ஐயம் மிகுதியால் தொண்டை, மூக்கு, உள்நாக்கு, நுரையீரல் முதலிய இடங்களில் உண்டாகின்ற புண்ணை ஆற்றுவதற்கும், அப்புண்ணிலி ருந்து கசியும் கோழை, நிணநீர், சளி முதலியவற்றை வெளியாக்கவும் மருத்துவம் செய்ய வேண்டும். இத்துடன் துணையாக வரும் நோய்க ளுக்கும் மருந்துகள் வழங்க வேண்டும்.

மிகுந்துள்ள ஐயக்குற்றத்தைத் தன்னிலைப்படுத்தவும், கோழையை அகற்றவும், கோழை அகற்றி, வெப்பமுண்டாக்கி, இசிவ கற்றி போன்ற செய்கைகளை உடைய மருந்துகளை வழங்கி ஐயக் குற்றத்தைத் தன்னிலைப்படுத்த வேண்டும். மேலும் சுரம், தொண்டைப் புண், தலைவலி, நீர்க்கோர்வை இவற்றைப் போக்க. தாதுவெப்பகற்றி, வியர்வைப் பெருக்கி, உள்அழலாற்றி, துயரடக்கி போன்ற செய்கை களை உடைய மருந்துகளையும், மிகுந்திருக்கும் கோழையினைப் பேதியின் மூலமாக அகற்ற அதற்குரிய மலமிளக்கி மருந்துகளையும் வழங்குதல் வேண்டும்.

கோழையை அகற்ற துளசி, தூதுவேளை, கண்டங்கத்திரி, ஆடா தோடை, தும்பை, அதிமதுரம், அரிசித் திப்பிலி, யானைத்திப்பிலி, முசுமுசுக்கை, கற்பூரவள்ளி, ஓமவள்ளி, சிற்றரத்தை, பேரரத்தை, பச்சைக் கற்பூரம், கற்கடகசிங்கி, அக்கிராகாரம், உருத்திராட்சம், கற்பூரப்பூ, குங்குமப்பூ, கோட்டம், கோரை, சடாமாஞ்சில், சண்பகம், சிறிய ஏலம்,

உத்தாமணி, இண்டு, கரிசலாங்கண்ணி, சத்திச் சாரணை, விஷ்ணுகிராந்தி சேர்ந்த மருந்துகளை குடிநீராகவோ இளகமாகவோ புகையாகவோ, பொடியாகவோ, தைலமாகவோ பற்று ஒற்றடமாகவோ வழங்குதல் வேண்டும்.

முதலாவதாக ஐயத்தினைத் தன்னிலைப்படுத்த சஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, மாந்த எண்ணெய் இவற்றில் ஏதேனுமொன்றை நோயின் அளவறிந்து தக்க துணை மருந்துடன் கொடுத்து, மலத்தையும், கபத்தையும் வெளியேற்ற வேண்டும்.

சுரசம்:-

335 மி.லி. ஆடாதோடைச் சாற்றில் சுக்கு, திப்பிலி வகைக்கு 4 கி. எடுத்து அரைத்துக் கலக்கி முறித்து 5 மி.லி. தேனில் கொடுக்க இருமல் தீரும்.

(விட்ணுகாந்திக்) குடிநீர்: 1

விட்டுணுகாந்தி, துளசி, திப்பிலி, மாமரத்துப் புல்லுருவி ஆகிய வற்றை வகைக்கு 4 கி, அளவெடுத்து 335 மி.லி. நீர் விட்டு காய்ச்சி குடிநீர் செய்து 30 மி.லி. காலை மாலை இருவேளைக்குமாக கொடுத்து வந்தால் இருமல் நீங்கிப்போகும்.

(மணித்தக்காளிக்) குடிநீர்:- 2

ஒரு பிடி மணித்தக்காளியும் 75 மி.கி. ஈருள்ளியும் எடுத்து அரிந்து சிவக்க வறுக்க வேண்டும். பின்பு 140 கி. வெந்தயத்தை அதனுடன் சேர்த்து அதில் 2.6 லி. நீர் விட்டு 325 மி.லி.யாகக் காய்ச்ச வேண்டும். அதைக் காலையிலும் மாலையிலுமாக 3 நாளைக்குக் கொடுக்க இருமல் நீங்கிப் போகும்.

குடிநீர்:- 3

கற்றாழைச்சோறு, களிப்பாக்கு, கருவேம்பு, பிரமி, சுக்கு ஆகிய வற்றைச் சமனெடுத்து ஒன்று சேர்த்து தண்ணீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி 15 மி.லி. குடிநீருடன் அவித்தூற்றின 15 மி.லி. விளக்கெண்ணையைச் சேர்த்துக் கொடுத்திட குழந்தைகட்கு வரும் இருமல் நின்றுவிடும்.

குடிநீர்:- 4

கண்டங்கத்திரி இலை 105 கி. தூதுவளையிலை 245 கி. இஞ்சி 35 கி. திப்பிலி சித்தரத்தை அக்கிரா இவற்றை வகைக்கு 9 கி. எடுத்து இடித்துப் பொடித்துக் கொள்க அவற்றிற்கேற்ப தண்ணீர் விட்டு காய்ச்சி 30 மி.லி.யாக வற்றியவுடன் அக்குடிநீரை இறுத்து குழந்தைக் குப் புகட்ட இருமல் போகும். தாயானவள் பத்தியம் காக்க வேண்டும்.

குடிநீர்:- 5

இண்டிலை, தூதுவளையிலை, கண்டங்கத்திரியிலை ஆகிய வற்றை வகைக்கு 4 கி. எடுக்க. அரிசித் திப்பிலி, வெள்ளைப் பூண்டிதழ் இவற்றை வகைக்கு 2 கி. எடுத்து எல்லாவற்றையும் இடித்து 1.3 லி. தண்ணீரில் போட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்திறக்கி வடிகட்டி வேளை ஒன்றிற்கு 17 கி. முதல் 35 கி. வரையில் எடுத்து தேன் அல்லது நாட்டுச் சர்க்கரை சேர்த்து குடித்து வர இருமல் நோய் நீங்கும்.

காலை, மாலை பத்து நாள் கொடுக்கத் தீரும்.

குடிநீர்:- 6

இண்டு, வேல், தூதுவளை, ஆகிய இம்மூன்றின் வேரை வகைக்கு 35 கி. எடுத்துக் கொள்க. சுக்கு, மிளகு, திப்பிலி, வெந்தயம் ஆகியவற்றை வகைக்கு 1 கி. எடுத்து அனைத்தையும் இடித்து 1.3 லி. நீரில் போட்டு குடிநீர் செய்து வேளைக்கு 15 மி.லி. நாளொன்றுக்கு மூன்று வேளை கொடுக்க தீரும்.

குடிநீர்:- 7

சித்திர மூலம், தூதுவளை, கண்டங்கத்திரி வேர், கோட்டம், கற்கடகசிங்கி, முசுமுசுக்கை, முள்ளிக் கொடி, அரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய சரக்குகளைச் சமமெடுத்து ஒன்று சேர்த்து தண்ணீர் விட்டு குடிநீராகக் காய்ச்சிக் கொள்க. அதனை வேளைக்கு 15 மி.லி. வீதம் நோய் தீரும் வரை கொடுக்க இருமல் நீங்கும்.

குடிநீர்:- 8

அதிமதுரம், வசம்பு, சுக்கு, ஏலம், அரத்தை, சிறுதேக்கு, அழிஞ்சில் பட்டை, முள்ளிக்கீரை வேர், கருவேப்பிலைக்கு, பூ நாகம் ஆகிய

சரக்குகளை வகைக்கு 2 கி எடுத்து இடித்து தூளாக்கிக் கொள்க. அதனுடன் தண்ணீர் ஊற்றி எட்டிலொன்றாகக் காய்ச்சிக் கொள்க. அதில் நெற்பொரி, இந்துப்பு வகைக்கு 1 கி. எடுத்து சேர்த்து தேன் தேவையான அளவு கலந்து வேளைக்கு 15 மி.லி. குழந்தைக்குப் புகட்டிட துரைப்பிருமல் ஒழியும்.

குடிநீர்:- 9

தூதுவளை, சுக்கு, மிளகு இவை மூன்றையும் சமமாக எடுத்து குடிநீரிட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாகச் சுருக்கி வேளைக்கு 15 மி.லி யாக இருவேளை கொடுக்க இருமல் போகும்.

குடிநீர்:- 10

பேராமுட்டிவேர் 105 கி. சுக்கு 35 கி. எடுத்து இரண்டையும் இடித்து குடிநீர் செய்து 3 நாள் 6 பொழுது குடிக்கக் கொடுக்க இருமல் நிற்கும்.

குடிநீர்:- 11

கீழாநெல்லிவேர், கடுக்காய், சிறுதேக்கு, செவியம், தூதுவளை வேர், முட்சங்கம்வேர், ஆடாதோடையிலை, சிறுவழுதலை வேர், சீந்தில் தண்டு, சிறுபாலை, இவற்றை வகைக்கு 4.4 கி. கூட்டி குடிநீரிட்டுக் கொடுக்க இருமல் நிற்கும்.

குடிநீர்:- 12

நாயுருவியின் சமூலத்தைச் சுட்டு குடிநீராக்கி பெருங்காயம் சேர்த்துக் கொடுக்கவும். இருமல் நீங்கும்.

குடிநீர்:- 13

தூதுவளை, கண்டங்கத்தரி, வில்வம், இன்புறா, சிறுகாஞ்சோறி இவற்றின் வேர் வகைக்கு 44 கி. சீரகம் 9 கி. எடுத்து குடிநீர் வைத்து ஐந்து நாட்கள் கொள்ளவும்; இருமல் குறையும்.

குடிநீர்:- 14

கண்டங்கத்திரி, தூதுவளை, முள்ளி, இண்டு, சங்கங்குப்பி, இன் புறா, முத்தக்காசு, சுக்கு, திப்பிலி, அரத்தை, கொத்தமல்லி ஆகிய மருந்துச் சரக்குகளை வகைக்கு 5 கி. எடுத்து தேவையான அளவு

நீர் விட்டு எட்டிலொன்றாய்ச் சுருக்கி 15 மி.லி. - 30 மி.லி. அளவு இரு வேளையாகக் கொடுக்க இருமல் நீங்கும்.

கற்கம்:- 1

கபம் சிறிதளவாக இருந்து மூக்கில் நீர் பாய்தல், தும்மல், தொண்டைக்கட்டடல் எனும் குறிகள் காணில் இக்கற்கத்தைப் பயன்படுத்துக. தும்பைப்பூ 4. கி. மிளகு 2 கி. எடுத்து சேர்த்து தேன் விட்டரைத்து அதை நான்கு பங்காக்கிக் கொண்டு காலை மாலையாக இரண்டு தினங்கள் சாப்பிட குணமாகும். அதில் தீராவிடின் 4, 5 நாட்கள் சாப்பிடவும்.

கற்கம்:- 2

தாளி இலையைக் கொண்டு வந்து அரிசியைச் சேர்த்தரைத்துச் சாப்பிட்டால் இருமல் நிற்கும்.

கற்கம்:- 3

மிளகரணை, குப்பைமேனி, உத்தாமணி, நாயுருவி இவற்றின் இலைகள், வெள்ளைப்பூண்டு, மிளகு ஆகிவற்றைச் சேர்த்து அரைத்து 2.2. கி. அளவெடுத்து, 5 நாட்களுக்குக் காலையில் மட்டும் உட்கொள்ள வேண்டும். (உடம்பில் தேய்த்து வெந்நீரில் குளியல் கொள்ள இருமல் நிற்கும்.)

கற்கம்:- 4

வெள்ளைப்பூண்டு 675 கி. உரித்துப் போட்டு கையாந்தகரைச் சாறு தேவையான அளவு வார்த்தரைத்து குழப்பி சூரிய புடமாக (வெயிலில்) வைத்து தினம் 2.2. கி. உட்கொள்ள இருமல் நிற்கும்.

கற்கம்:- 5

ஆவரைக் கொழுந்தைத் தேசி என்னும் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கொடுக்கவும்.

தேத்தான் விரையை சீவி வெற்றிலை பாக்குடன் பதினோரு நாட்கள் உண்ணவும்; இருமல் நிற்கும்.

கற்கம்:- 6

ஆகாசத் தாமரையிலை 1, மிளகு-1, வெள்ளைப்பூண்டு பல்லு-1 இவற்றை வகைக்கு எடுத்து மூன்றையும் அரைத்து 15 மி.கி. - 30

மி.கி. அளவுள்ள உருண்டை செய்து விழுங்க இருமல் நிற்கும். பத்தியம்: நெய், புளி நீக்க வேண்டும்.

கற்கம்:- 7

பெருந்தும்பைக் கொழுந்து, சுக்கு, வெண்காரம், ஓமம், மிளகு, வசம்பு சுட்ட சாம்பல் ஆகியவற்றைச் சமமாய் எடுத்து எருமை மோரில் அரைத்து கொடுக்க இருமல் நிற்கும்.

அடை:- 1

முசுமுசுக்கையையும் புழுங்கலரிசியையும் அரைத்து பனைவெல் லம் சேர்த்து அடை சுட்டு வைத்துக் கொண்டு சாப்பிட்டு வரவும். ஈளையிருமல் தீரும்.

அடை:- 2

கையாந்தகரை, நாயுருவி, கருந்தக்காளி எனும் மணத்தக்காளி சங்கு, சாட்டரணை, எருக்குமொட்டு இரண்டு, வேலிப் பருத்தியிலை நான்கு எடுத்து அரிசி, மிளகு சேர்த்து அரைத்து அடை சுட்டு சாப்பிட இருமல் நீங்கும்.

சூரணம்:- 1

கண்டங்கத்திரிவிதை, அமுக்கரா, சிறுதிப்பிலி ஆகியவற்றைச் சமமாக எடுத்துக் கொண்டு பொடித்து 250 கி.கி.-500 மி.கி. அளவு கொடுக்க இருமல் தணியும்.

சூரணம்:- 2

அதிவிடையம், அசமோதம் என்னும் ஓமம், திப்பிலி, பாவட்டை, மிளகு, சுக்கு, அரத்தை ஆகிய சரக்குகளைச் சமனெடுத்து இடித்துக் கொள்க. 250-500 மி.கி. சூரணத்தை வெந்நீரில் (அல்லது) தாய்ப்பா லில் கலந்து கொடுக்க இருமல் போகும்.

சூரணம்:- 3

சுத்தி செய்யப்பட்ட தேற்றான் கொட்டை, கற்கண்டு, இரண்டை யும் பொடித்துத் தேன், எலுமிச்சம் பழச்சாறு, வெண்ணெய் ஆகிய மூன்றும் சம அளவு சேர்த்த கலவையில் கலந்து குழப்பி அதனுடன் தேவையான அளவு தாய்ப்பாலையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அம்மருந்தைக் குழந்தைக்குக் கொடுக்க இருமல் தீரும்.

சூர்ணம்:- 4

கற்கடகசிங்கி, சிறு தேக்கு, திரிபலை, திரிகடுகு, செங்கழுநீர், கோட்டம், மரமஞ்சள், சிறுவழுதலை வேர் ஆகிய இவற்றைச் சமமாய் எடுத்து பொடித்து மூவிரலளவு எடுத்து தேனிலாவது வெந்நீரிலாவது கொள்ள இருமல் தீரும்.

சூர்ணம்:- 5

உத்தாமணி வேரை 35 கி. அளவு செவ்வாய்க்கிழமையன்று எடுத்து வர வேண்டும். அதை நன்கு இடித்துப் பொடித்து மூவிர லளவு எடுத்து நெய்யில் கலந்து கொடுக்க இருமல் தீரும்.

சூர்ணம்:- 6

திப்பிலியை இடித்துப் பொடி செய்து அட்டுப்புடன் கலந்து 4.4 கி. கொள்ள இருமல் நிற்கும்.

சூர்ணம்:- 7

மாசிக்காய் - 4, அக்கிராகாரம் - 4, கோட்டம் - 4 அமுக்கிரா 4 எடுக்க. கற்கடகசிங்கி, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, தாளிசபத் திரி, சிறுநாகப்பூ, வாய்விளங்கம் திரிபாலை, திரிகடுகு அரத்தை, வால்மிளகு இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து பொடித்துக் கொள்க. இதனுடன் கற்கண்டு, பஞ்சதாரை வகைக்கு 35 கி. எடுத்து கலந்து கொள்க. 250-500 மி.கி. அளவு சூரணத்தை தேனில் அல்லது நெய்யில் கொள்ளவும். இரண்டு நேரம், இருபது நாள் சாப்பிடவும். பத்தியம் - கசப்பு, புளிப்பு, கடுகு, பூசணி, பச்சை மீன், தவிர்க்கவும், இருமல், வறட்சி இருமல், ஓயா இருமல், அந்தி இருமல், குறையும்.

சூரணம்:- 8

தான்றிக்காய் சூரணத்துடன் சீரகம், சீந்தில் சர்க்கரை மூவிரலளவு கூட்டி சாப்பிடவும்; இருமல் நிற்கும்.

சூரணம்:- 9

கடுக்காய், சுக்கு, திப்பிலி இவற்றைச் சமஅளவு எடுத்துத் தூள் செய்து மூவிரலளவு கொடுக்க இருமல் நிற்கும்.

சூரணம்:- 10

இன்பூரல் வேரையும் புழுங்கலரிசியையும் அரைத்து அடை தட்டி, ஏடு கட்டி, வெந்த பிறகு துண்டு செய்து காயவைத்து சூரணம் செய்து, கற்கண்டு பொடி கலந்து 250-500 மி.கி. அளவு இரு நேரமும் சாப்பிடவும். இருமல், கோழை தீரும்.

சூரணம்:- 11

துளசியிலை, கரிசலாங்கண்ணி சமூலம் இவற்றைத் தூள் செய்து 8.8 கி. எடுத்துக் கொள்க. அதில் 250-500 மி.கி. எடுத்து வெந்நீரில் கலந்து கொடுக்க இருமல் நிற்கும்.

சூரணம்:- 12

தூதுவளை, கண்டங்கத்திரி, உத்தாமணி, குப்பைமேனி, சங்கு இந்த ஐந்து வகையிலையையும் சிதைத்து பிட்டவித்து சாறு பிழிந்து கொள்க. திப்பிலி 350 மி.கி. எடுத்து சூரணம் செய்து அச்சாற்றில் கொடுக்கவும். இருமல் நிற்கும். கைப்பு புளிப்பு தவிர்க்கவும்

சூரணம்:- 13

சிற்றரத்தை, மிளகு, தாளிசபத்திரி, இலவங்கம் இந்த நான்கையும் வகைக்கு 26 கி. எடுத்து சூரணம் செய்து கொள்க. அதில் 250-500 மி.கி. எடுத்து தேனில் கலந்து சாப்பிட்டு வரவும். இருமல் நிற்கும்.

சூரணம்:- 14

நெல்லிப் பருப்பு, திப்பிலி, நெல்பொரி, இவற்றுடன் சர்க்கரை கூட்டிக் கிளறி சாப்பிடவும். இருமல் நிற்கும்.

சூரணம்:- 15

ஓமம் 35 கி. பெருங்காயம் 12 கி. எடுக்க. பூண்டு, வசம்பு, தேசாவரம் எனும் திப்பிலி வேர் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துக் கொள்க. பெருங்காயத்தை சற்று அனலில் காட்டி வைத்துக் கொண்டு மேற்கூறியவற்றையும் சேர்த்து பொடி செய்து பனைவெல்லம் கலந்து கொள்க. அதில் 250 மி.கி -500 மி.கி. அளவு சாப்பிட கொடுக்க இருமல் நிற்கும்.

சூரணம்:- 16

திப்பிலி, வெந்தயம், நெல்லிப்பருப்பு, சிற்றரத்தை, நெல்பொரி, சர்க்கரை இவற்றை வகைக்கு 30 கி. சேர்த்து காய வைத்து தூள் செய்து காலை, மாலை இருவேளை நெய்யில் கொடுக்க இருமல் நிற்கும்.

சூரணம்:- 17

திப்பிலி 35 கி. எடுத்துப் பொடி செய்து 200 மி.லி. தேனில் கலந்து கொள்க. 8 கி. வெண்காரத்தைச் சுத்திச் செய்து சேர்த்து தினமும் 25 மி.கி. கொடுத்துவர தீரும்.

சூரணம்:- 18

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், களிப்பாக்கு, கருஞ்சீரகம், இந்துப்பு, தேற்றாங்கொட்டை, மஞ்சள், கொடிவேலி கண்டங்கத் திரி, தூதுவளை, சாரணை, வேலிப்பருத்தி இவற்றின் வேர், நொச்சிக் கொழுந்து, ஆடாதோடையிலை இவற்றைச் சமமாக எடுத்து சிவக்க வறுத்துப் பொடி செய்து பனங்கற்கண்டு கூட்டித் தின்னவும். பத்தியம்: கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

சூரணம்:- 19

கையாந்தகரை, நாயுருவி, சங்கம்வேர், தூதுவளை, வேலிப் பருத்தி, எருக்கம்பூ, குப்பைமேனி, மிளகரணை வேர்ப்பட்டை, நிலை யுகரம்பட்டை இவற்றை உலர்த்திப் பொடி செய்து சுக்கு, மிளகு, திப்பிலி, அக்கிலாக்காரம், சிற்றரத்தை, பேரரத்தை, கடுக்காய் இவற் றைச் சம அளவெடுத்து பொடி செய்து கொம்புத் தேனில் பிசைந்து வைத்துக் கொண்டு தினம் மூவிரலளவு தின்னவும். இருமல் தீரும்.

சூரணம்:- 20

கடுக்காய், சுக்கு, திப்பிலி இவற்றைச் சமமாக எடுத்துச் சூரணித்து மூவிரலளவு உட்கொள்ள இருமல் நலமாகும்.

சூரணம்:- 21

திப்பிலி, கடுக்காய், நொச்சிக் கொழுந்து இவற்றை வகைக்கு 20 கி. எடுக்க. பனஞ்சர்க்கரை 20 கி. எடுக்க. அனைத்தையும் சேர்த்தரைத்து 250-500 மி.கி. அளவு மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

சூரணம்:- 22

வெளிச்சிப்பிசின் எனும் விளாம்பிசின், மிளகு, முத்தக்காசு, திப்பிலி, கருஞ்சீரகம் ஆகியவற்றை வகைக்கு 10 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்து சூரணித்துக் கொள்க. மூவிரலளவு சூரணத்தில் தேனும் வெள்ளுள்ளித் தயிலமும் சமனாய் விட்டு கலந்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

சூரணம்:- 23

திரிகடுகு, அதிமதுரம், சடாமாஞ்சில், அக்கிராகாரம், கற்கடக சிங்கி, ஏலம், திரிபலை, கற்கண்டு, கோட்டம் ஆகிய சரக்கு வகைக ளைச் சமமாக எடுத்து இளவறுப்பாய் வறுத்து இடித்துத் தூளாக்கிக் கொள்க. அதனை இஞ்சிப் பாகெடுத்து அதில் கலந்து தேனையும் ஊற்றி குடிக்க குத்திருமல் நின்றுவிடும்.

பிட்டு:- 1

தூதுவளை, கண்டங்கத்திரி, செம்முள்ளி, ஆடாதோடை, சங்கு ஆகிய இவற்றின் இலைகளை வகைக்கு ஒரு பிடி எடுத்து இடித்துப் பிட்டவித்துச் சாறு பிழிந்து கொள்ள வேண்டும். அதில் சுக்கு, மிளகு, இந்துப்பு, சிறு திப்பிலி ஆகியவற்றைச் சமமாக எடுத்து இளவறுப்பாய் வறுத்துப் பொடித்துத் தூவி சிறிது தேன் விட்டுக் கொடுக்க தீரும்.

பிட்டு:- 2

உழிஞை இலை அரைப்பிடி எடுத்து பிட்டவியலாகச் செய்து கொள்க. அக்குடிநீரைப் பிழிந்தெடுத்துக் கொள்க. அதில் மஞ்சாடி, கோரோசனை இவற்றை உரைத்துக்கொடுக்க இருமல் ஒழியும். அதைக் குழந்தையின் வயது வன்மை, மென்மைக்குத் தக்கவாறு கொடுக்க இருமல் நீங்கும்.

(வட்டத்திருப்பி) நெய்:- 1

வட்டத்திருப்பி, சிறுதேக்கு, அதிமதுரம், வசம்பு, சுக்கு, மிளகு, கடுக்காய்த் தோல், தான்றிக் காய்த்தோல், நெல்லிவற்றல், அதிவிடயம், கோட்டம், கோரைக் கிழங்கு, ஆகிய 12 பொருட்களையும் வகைக்கு 5 கி. எடுத்து வெந்நீர் விட்டு நன்றாக அரைத்து ஒரு மண்சட்டியிற் போட வேண்டும். அத்துடன் 1.3 லி. இம்பூரல் சாற்றையும் 1.3 லி. பசுவின் நெய்யையும் ஊற்றிக் காய்ச்சிப் பக்குவமானவுடன் அதை இறக்கிக் கொள்க. அதை வேளைக்கு 5-15 மி.லி. அளவு குழந்தையின்

வயது, நோயின் வன்மை, மென்மைக்கு ஏற்றவாறு கொடுக்க இருமல் நீங்கும்.

(வேலிப் பருத்தி) நெய்:- 2

335 மி.லி. வேலிப்பருத்திச் சாறு, 335 மி.லி. எருமை நெய் இரண்டையும் ஒன்று சேர்த்து மண் சட்டியிலிடுக. 5 கி. கருஞ்சீரகத்தை வெந்நீர் விட்டரைத்துக் கலக்கி காய்ச்சி நெய் பதத்தில் வடித்து, வேளைக்கு 5-15 மி.லி. அளவு நோய் வன்மைக்குத் தக்க நாளளவு கொடுக்க இருமல் சரியாகும்.

நெய்:- 3

திப்பிலி வெளிச்சிப்பிசின் எனும் விளாம்பிசின், கஸ்தூரி மஞ்சள், களிப்பாக்கு இவற்றை வகைக்கு 4 கி. எடுத்துக் கொள்க. தூதுளம் பழம் 10 எடுக்க. இண்டங்கொழுந்து எலுமிச்சங்காயளவு எடுக்க. இவையனைத்தையும் அரைத்து 355 மி.லி. நெய்யில் வேகவைத்து பத்திரப்படுத்திக் கொள்க. அதனை 5-15 மி.லி. அளவு இரண்டு நேரம் கொடுக்கவும்; இருமல் நீங்கும்.

நெய்:- 4

தேங்காய்ப்பால், இந்துப்பு, செவ்வியம், திப்பிலி, மிளகு, சுக்கு, வெள்ளுள்ளி, அரத்தை, வால்மிளகு, கிராம்பு, அதிமதுரம் ஆகிய வற்றை வகைக்கு 5 கி. எடுக்க. முசுறு முட்டை, நிலவேர், ஆடாதோ டையின் சாறு இவற்றைத் தேவையான அளவு எடுத்துக் கொள்க. மேற்கூறப்பட்ட அனைத்துச் சரக்குகளையும் அரைத்து ஒன்று சேர்த்துக் காய்ச்சி பதமாக வடித்து 2-5 கி. அளவு கொடுக்க இருமல் ஒழியும்.

(கலியாண பூசனிக்காய்) நெய்:- 5

கலியாண பூசனிக்காய்ச்சாறு, இளநீர், தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு, பசுவின் பால், நெய் ஆகிய ஐந்தையும் வகைக்கு 1.3 லி. வீதம் சேர்த்துக் கொள்க. அக்கலவையில் கடுகுரோகிணி, சண்பகப்பூ, வெட்டி வேர், கடற்பாசி, அதிமதுரம், இலவங்கம், சிற்றாமுட்டிவேர், பேரா முட்டிவேர், திப்பிலி, சந்தனம், ஏலம், விலாமிச்சம்வேர் எனும் வெட்டிவேர், மாம்பருப்பு, சாதிக்கோட்டம், விளாம்பிசின், இலவம் பிசின், வில்வப்பிசின், பொன்முசுட்டை வேர் ஆகிய பதினேழு பொருட்களையும் வகைக்கு 4 கி. எடுத்து இடித்துப் பொடித்துப் பசுவின் பால் விட்டரைத்துக் கலக்க வேண்டும். பிறகு தேவையான

அளவு நெய்யைச் சேர்த்து பக்குவமாகக் காய்ச்சிப் பதமானவுடன் இறக்கிக் கொள்க. அதைக் காலை, மாலை இருவேளையும் வேண்டிய நாள் மட்டும் 5-15 மி.லி. கொடுக்க இருமல் நீங்கி விடும்.

(தூதுவளை) நெய்:- 6

ஆடாதோடையிலை, பிரமியிலை, தூதுவளைப் பழம், குன்றி யிலை, பூசணிப்பூ, கற்பூரவள்ளியிலை, ஓரிலைத்தாமரைச் சமூலம், சடைச்சி சமூலம், கீழாநெல்லி இவற்றின் சாறு, நெய் வகைக்கு 1.3 லி. எடுக்க. கடுகுரோகணி, ஏலம், கருநெல்லி, தான்றிக்காய், மிளகு, திப்பிலி, வேர்க்கொம்பு எனும் சுக்கு, உள்ளி, வசம்பு இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து அரைத்து கரைத்து காய்ச்சி பதத்தில் வடித்து 5 - 15 மி.லி. அளவு கொடுக்க இருமல் நீங்கும்.

நெய்:- 7

பசுவின் நெய் 325 மி.லி. எடுக்க. ஆடாதோடைச்சாறு, தூதுவ ளைச்சாறு இவற்றை வகைக்கு 325 மி.லி. சர்க்கரை 35 கி. எடுக்க. சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து 325 மி.லி. கருவேலம்பட்டை சாறு கொண்டரைத்து மேற்கூறப்பட்ட கலவையில் சேர்த்து கொள்க. நன்கு காய்ச்சி வேளைக்கு

4.4 கி. அளவு கொடுக்க இருமல் தீரும்.

நெய்:- 8

அக்கிராகாரம், சிற்றரத்தை, கற்கடகசிங்கி, சடாமாஞ்சில், சிவதை, கஸ்தூரி மஞ்சள், சாதிக்காய், திப்பிலி, கிராம்பு, ஏலம், மாசிக்காய் ஆகிய சரக்குகளை வகைக்கு 4 கி. எடுக்க. தூதுவளை, செம்முள்ளி, வீழி இவற்றின் வேர் வகைக்கு 18 கி. எடுக்க. துளசியிலை, தேட்கொடுக்கிலை, சிறுகீரைவேர், வில்வவேர், ஆகியவற்றை வகைக்கு 35 கி. எடுத்துக் கொள்க. செந்தொட்டி, ஆடாதோடை இவற்றின் வேர் வகைக்கு 9 கி. எடுத்துக் கொள்க. இவையனைத்தை யும் பசுவின் பாலில் அரைத்து 1.3 லி. பசுவின் நெய்யையும் உடன் சேர்க்க. அனைத்தையும் ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காச்சி வடித்துக் கொள்க. அதனை 2.5 மிலி. கொடுக்க இருமல் நீங்கும்.

(குண்டலாதி) லேகியம்:- 1

சங்கங்குப்பிவேர் 5.2. கி.கி., கண்டங்கத்திரிவேர் 2.6 கி.கி. தூதுவளை வேர் 1.3 கி.கி., காட்டு மல்லிகை, முருவல்வேர் 280 மி.கி., கடுக்காய் 20 எண். இவற்றை எடுத்து எல்லாவற்றையும் நறுக்கி

பானையிலே போட்டு தண்ணீர் வார்த்து எட்டிலொன்றாய்க் காய்ச்சி இறுத்துக் கொள்க. அதில் திப்பிலி, மிளகு, சுக்கு, கடுகுரோகணி, திப்பிலிமூலம், வாய்விடங்கம் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துப் பொடித்துச் சேர்க்க. அத்துடன் நல்ல வெல்லம், தேவையான அளவு தேன் விட்டு இலேகிய பதமாகக் கிளறி வைத்துக் கொள்ளவும் 5-10 கி. அளவறிந்து குழந்தைகட்குக் கொடுக்க ஈளை இருமல் நீங்கும்.

இலேகியம்:- 2

தாளிசபத்திரி 35 கி. அதிமதுரம், கோட்டம், திப்பிலி, நறுக்கு மூலம், அரத்தை, சிறுநாகப்பூ, இலவங்கப்பட்டை இவற்றை வகைக்கு 9 கி. எடுத்து பொடித்துக் கொள்க பஞ்சதாரை 140 கி. சேர்த்து பாகாகக் காய்ச்சிக் கொள்க. தேவையான அளவு நெய், தேனை உடன் சேர்க்க. மேற்கூறிய சூரணத்தை மேலே தூவி இளகமாகக் கிண்டிக் கொள்க. கலசத்திலெடுத்து பத்திரப்படுத்துக. அதனை 5 - 10 கி. அளவு கொடுக்க இளைப்பிருமல் சரியாகும்.

எண்ணெய்:- 1

ஆமணக்கெண்ணெய் 1.3 லி; கோரோசினை 8 கி, வசம்பு 35 கி. உள்ளி 70 கி. பூலா, கொழுஞ்சிலை, சீரகம் இவற்றை வகைக்கு 17 1/2 கி. எடுக்க. சரக்குகளைப் பொடித்து எண்ணெயில் போட்டு வெயிலில் வைத்து அளவறிந்து கொடுக்க இருமல் நிற்கும்.

எண்ணெய்:- 2

ஆவாரை, சரக்கொன்றை, விட்டுணுகரந்தை, நிலக்குமிழ் ஆகிய வற்றின் வேர், சிறு அம்மான் பச்சரிசி, ஏலம், நற்சீரகம், நெருஞ்சி ஆகியவற்றை வகைக்கு 18 கி. எடுத்து இடித்து அரைத்துக் கொள்க. 1.3 லி. விளக்கெண்ணையில் அவ்விழுதைப் போட்டுக் காய்ச்சிப் பதமாக இறக்கி 5-10 மி.லி. கொடுக்க இருமல் நீங்கும்.

எண்ணெய்:- 3

தூதுவளை, நாயுருவி, கரிப்பான் எனும் கரிசாலை, வல்லாரை, தும்பை, நொச்சி கண்டங்கத்திரி ஆகிய மூலிகைகளை எடுத்து அவற்றின் சாறுகளை வகைக்கு 335 மி.லி. எடுத்துக் கொள்க. சிற்றாமணக்கெண்ணெய் 1.3 லி. எடுக்க. இவற்றைக் கலந்து கொள்க. அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக் காய், வெள்ளுள்ளி, வசம்பு ஆகிய சரக்குகளை வகைக்கு 12 கி. எடுத்து அரைத்துப் போடுக. பிறகு காய்ச்சிய பக்குவத்தில் வடித்தெடுத்து 5-10 மி.லி. கொடுக்க இருமல் விட்டுப் போகும்.

எண்ணெய்:- 4

திப்பிலி, சிற்றரத்தை, அதிமதுரம், உள்ளி, அக்கிரா, வசம்பு, சங்கங்குப்பிவேர் இவற்றை வகைக்கு 5 கி. எடுக்க. தைவேளை, குப்பைமேனி, வெண்ணொச்சி ஆகியவற்றின் சாற்றை வகைக்கு 335 மி.லி. எடுக்க. மேற்கண்ட சரக்குகளை நன்கு அரைத்துக் கொள்க. அவ்விழுதை வேப்பெண்ணெய் 1.3 லி. எடுத்து அதில் கலந்து கொள்க. நன்றாகக் காய்ச்சி நிலவேரையும் அதனுடன் சேர்க்க. பக்குவமான பதத்தில் இறக்கி வடித்திறுத்து கலசத்தில் ஊற்றிக் கொள்க. 5-10 மி.லி. அதனை உள்ளுக்குக் கொடுத்திட இளைப்பிருமல் விட்டுப்போகும்.

எண்ணெய்:- 5

ஆவாரை, *சரக்கொன்றை*, விட்டுணுகரந்தை, நிலக்குமிழ், சிறுஅம் மான் பச்சரிசி ஆகியவற்றின் வேர்ப்பட்டைகள், ஏலரிசி, நற்சீரகம், நெருஞ்சில் ஆகியவற்றை வகைக்கு 18 கி. எடுத்துப் பசுவின் பால் விட்டரைத்து 1.3 லி. சிற்றாமணக்கெண்ணையையும் அதில் சேர்க்க வேண்டும். பிறகு எரித்துப் பக்குவமாக வடித்துக் கொள்க. அதனை 5 - 10 மி.லி. அளவு எடுத்து 48 நாட்கள் வரை கொடுத்துவர குருதி இருமல் நீங்கும்.

(தேய்ப்புத்) தைலம்:- 6

சுக்கு, மிளகு, திப்பிலி, எலிப்புழுக்கை ஆகியவற்றைச் சமமாக எடுத்துக் கொள்க. அவற்றை நவரை இலைச்சாறு விட்டரைத்து அக்கலவையைக் கொதிக்க வைத்து உடலில் தேய்த்துவிட இருமல் போகும்.

எண்ணெய்:- 7

உருக்கின தேங்காயெண்ணைய் 1.3 லி., நவரையிலைச்சாறு, வெற்றிலைச்சாறு, சிற்றகத்தியிலைச்சாறு, குழிமீட்டானிலைச் சாறு, கையாந்தகரைச் சாறு ஆகியவற்றை வகைக்கு 4.2 லி. எடுத்துக் கொள்க. சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், சிற்றரத்தை, கருஞ்சீரகம், எலிப்புழுக்கை ஆகியவற்றை வகைக்கு 9 கி. எடுக்கவும். இவைய னைத்தையும் மேற்கூறிய சாறு விட்டரைத்து நெய்யையும் அதனுடன் சேர்த்து காய்ச்சி முதிரும் பருவத்தில் வடித்து வைத்துக் கொண்டு மூன்று பொழுது உச்சியில் வைக்க இருமல் நீங்கும்.

மாத்திரை:- 1

அதிமதுரம், கோட்டம், திரிகடுகு, இந்துப்பு, திரிசாதம் (ஏலம், இலவங்கம், இலவங்கப்பட்டை), கடுகுரோகணி, அரத்தை, அக்கராகாரம், தேற்றான் விரை, வெளிச்சிப் பிசின் ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுத்து ஆடாதோடைச் சாற்றில் 9 மணி நேரம் அரைத்து தூதுவளங்காய் அளவு (1 கி.) உருட்டி உலர்த்திக் கொள்க. அதனைத் தேனில் இழைத்து கொடுக்க இருமல் தீரும்.

மாத்திரை:- 2

சாதிக்காய், கிராம்பு, ஓமம், கருஞ்சீரகம், வெள்ளைக் காக்கணான் வேர்ப்பட்டை, சுக்கு, திப்பிலி, கஸ்தூரி மஞ்சள், வசம்பு, பெருங்காயம் ஆகியவற்றைச் சமமாக எடுத்து வெந்நீரில் அரைத்துச் சுண்டைக்காயளவுள்ள (2 கி.) உருண்டைகளாகச் செய்து உலர்த்தி வைத்துக்கொள்க. அதனை வெந்நீரிலுரைத்து மூன்று நாட்களுக்குக் கொடுக்க குழந்தை கட்கு வரும் சளி இருமல் நீங்கும். பேதியானால் வசம்பைச் சுட்டு நீரில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

மாத்திரை:- 3

பச்சைக்கற்பூரம், சீரகம், கலைமான் கொம்பு, கோரோசினை, சாம்பிராணி இவற்றை வகைக்கு 5 கி. எடுக்க. பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, நெருஞ்சி, நீர்முள்ளி விதை இவற்றைச் சம அளவெடுக்க. இளநீர் விட்டு காய்ச்சிக் கொள்க. காய்ச்சியதை எடுத்தரைத்து மெழுகாக்கிக் கொள்க. 130 மி.கி. அளவுள்ள குளிகைகளாக உருட்டி நிழலிலுலர்த்தி எடுத்து பத்திரப்படுத்திக் கொள்க. தினம் இருவேளையாக 15 நாட்கள் சாப்பிட இருமல், ஈளை நீங்கும்.

மாத்திரை:- 4

திரிகடுகு, (சுக்கு, மிளகு, திப்பிலி) வெண்காரம், சாதிலிங்கம் ஆகிய இவ்வைந்தைச் சமபங்கெடுத்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைக்கவும். மூன்று மணி நேரமரைத்து பாசிப் பயற்றில் பாதியளவு (32 மி.கி.) உருண்டையைச் செய்து நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

மணித்துளசி, செம்முள்ளி, ஆடாதோடை, தூதுவளை, விட்டுணுகிரந்தி, கண்டங்கத்திரி, வெதுப்படக்கி, பேய்ப்புடோல், சங்கிலை, நொச்சில் ஆகிய மூலிகைகளை எடுத்து பிட்டவியலாக்குக. அக்குடிநீ

ரில் சுக்கு, மிளகு திப்பிலியைப் பொடித்துப் போட்டு பிறகு குடிநீரில் அவ்வுருண்டையை உரைத்துக் கொடுக்க பித்த இருமல் நீங்கும்.

புகை:-

அரளி, அரக்கு, குங்கிலியம், மனோசிலை, சதகுப்பை, வெந்த யம், கருஞ்சீரகம், வறட்டு மஞ்சள், ஓமம் இவற்றை வகைக்கு 10 கி. எடுக்க. இவற்றைப் பொடித்து திரித்து பசுவின் நெய்யில் குழைத்து திரியில் நனைத்து திரி கொளுத்தி அணைத்து புகையை நாசியில் வாங்கவும். இவ்வாறு 3 நாள் புகை பிடிக்க காச இருமல் தீரும். உச்சந்தலையில் நெய் வைக்கவும். தளம் போடவும்.

இருமல், தும்மலுக்குத் திரி:-

மூக்கில் நீர் பாய்ந்து தும்மலாக இருப்பின் தும்பை இலைச்சாற் றைத் துணியில் தடவி துவட்டித் திரியாக்கி திரியைக் கொளுத்திப் புகையைப் பிடிக்கவும்.

நாட்பட்ட இருமலுக்கு மருத்துவம்:-

நாட்பட்ட இருமலாயின் கத்தூரிக் கருப்பு, பவழ பற்பம் வகைக்கு 130 மி.கி. அளவெடுத்து கண்டங்கத்திரி இளகத்தில் கொடுக்கவும்.

நாட்பட்ட இருமலில் கோழை கெட்டிப் பட்டும் நாற்றத்துடன் மிக்க அளவில் வெளியாயின் தாளகபற்பம், முத்துப்பற்பம் இரண்டை யும் வகைக்கு 130 மி.கி. அளவெடுத்து தும்பைச் சாற்றையும் தேனையும் விட்டுக் குழைத்துக் காலை, மாலையில் கொடுக்க நலமா கும்.

நாட்பட்ட இருமலில் இழுப்புக் காணின் செம்புபற்பம் 65 மி.கி. எடுத்து புனுகு 130 மி.கி. கூட்டி காலை மாலை கொடுக்கவும். உத்தாமணிச்சாற்றை 32 மி.லி. உடனே கொடுக்கவும்.

இருமல் நோய்க்கான கடை மருந்துகளும் இலை வகைகளும்:-

கடை மருந்துகள்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், தாளிச பத்திரி இலவங்கம், சிறுதேக்கு, சிற்றரத்தை பேரரத்தை, அக்கராகாரம், கோட்டம், கத்தூரி, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கற்பூரம், முதலியனவாம்.

இலைவகைகள்:-

துளசி, கஞ்சாங்கோரை, தும்பை, தும்பைப்பூ, ஆடா தோடை, உத்தாமணி, கண்டங்கத்திரி முதலியன.

மாத்திரைகள்:-

வசந்த குசுமாகரம், மகா வசந்த குசுமாகரம், பூரண சந்திரோதய மாத்திரை இவற்றில் ஒன்றை எடுத்து தக்க துணை மருந்துடன் கொடுக்கலாம்.

பற்ப செந்தூரங்கள்:-

தாளகபற்பம், பவழபற்பம், பலகரைப் பற்பம், நத்தைப் பற்பம், சிப்பிப் பற்பம், கத்தூரிக் கருப்பு, கோரோசனைக் கருப்பு போன்றவற் றையும் தக்க துணை மருந்துடன் கொடுக்க நலமாகும்.

வழக்கிலுள்ள வைத்திய முறைகள்:-

இருமலுக்கு சுரசம், சாறு

துளசி, கர்ப்பூரவள்ளி ஆடாதோடை, கண்டங்கத்திரி, தூது வேளை, தும்பை, முசுமுசுக்கை இவற்றில் ஏதாவது ஒன்றில் சாறு எடுத்து, அதில் காய்ச்சின இரும்பு கம்பியினைத் தோய்த்து கொடுக்க வும். அல்லது தனிச்சாறாகவோ வழங்குதல் வேண்டும். அளவு 15 முதல் 30 மி.லி.

ஆடாதோடைக் குடிநீர்:-

ஆடாதோடை, அதிமதுரம், அரிசித்திப்பிலி இவற்றைச் சம அளவு எடுத்து 8 பங்கு நீர் விட்டு காய்ச்சி 1/8 ஆக சுருக்கி காலை, மாலை அதில் தேன் சேர்த்து 30 மி.லி. கொடுக்க இருமல், சுரம் தணியும்.

ஆடாதோடையின் இலைகளை 2,3 எடுத்து நறுக்கி, புதிய மண் சட்டியிலிட்டு, தேன் சிறிது சேர்த்து எரிக்க ஒருவித நறுமணம் வீசும். அத்தருவாயில் அதிமதுரம் 2 கி. திப்பிலி 1 கி. தாளிசாதி 1/2 கி. சிற்றரத்தை 1/4 கி. இவற்றைத் தட்டிப்போட்டு 1 லி. தண்ணீர் விட்டு, 1/4 ஆக குறுக்கி காலை, மாலை, 2 வேளை கொடுத்துவர, கோழைக்கட்டு, இருமல், சளி, இரைப்பு, சுரம் நீங்கும்.

ஆடாதோடை வேரையும், கண்டங்கத்திரி வேரையும் குடிநீரி விட்டு அதில் திப்பிலி சேர்த்து கொடுக்க - இருமல் தீரும்.

ஆடாதோடைச் சூரணம்:-

இதன் பட்டையைப் பொடி செய்து கொடுக்க, இருமல், இளைப்பு, இரைப்பு ஆகிய நோய்கள் தீரும்.

ஆடாதோடை மணப்பாகு:-

ஆடாதோடை இலை 80 கி. அரிசித் திப்பிலி 10 கி. அதிமதுரம் 10 கி. தாளிசபத்திரி 10 கி. சிற்றரத்தை 10 கி. வீதம் எடுத்து 640 மி.லி. நீர் விட்டு காய்ச்சி 1/8 ஆக குறுக்கி அதில் 80 கி. சர்க்கரை சேர்த்து காய்ச்சி பாகு பதத்தில் எடுக்கவும். இறுதியாக, தேன் 25 கி. சேர்த்து கலக்கி எடுக்கவும். காலை, மாலை 15 மி.லி. கொடுத்துவர இருமல் தணியும்.

குடிநீர்:-

ஆடாதோடை இலை காய்ந்தது, தாளிசபத்திரி, அரிசித்திப்பிலி, சிற்றரத்தை, அதிமதுரம் இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்து, 40 லி. நீர் விட்டு காய்ச்சி 1/8 ஆக சுருக்கி, வடிகட்டி 30 மி.லி. முதல் 60 மி.லி. வரை கொடுக்க இருமல், சளி, கபசுரம் இவை தீரும்.

கண்டங்கத்திரி:-

இதன் வேரை முறைப்படி குடிநீராக்கி அதில் திப்பிலி சூரணமும் தேனும் சேர்த்துக் கொடுக்க இருமல், நீர்த்தோடம் குணமாகும்.

திப்பிலி:-

திப்பிலி 70 கி., கரிசாலை 35 கி. எடுத்து இவ்விரண்டையும் 350 மி.லி. நீர் சேர்த்து நீரைச் சுண்டக் காய்ச்சியபின், மீதி திப்பிலியை யும், கரிசாலையையும் இளவறுப்பாக வறுத்து பொடித்த எடைக்கு சமமாக பொரி சேர்த்து அதே எடை சர்க்கரை கூட்டி மூவிரல் அளவு 2 வேளை சாப்பிட இருமல் தீரும்.

சிட்டிகை அளவு திப்பிலி பொடியுடன் கம்மாறு வெற்றிலைச் சாறும், தேனும் கலந்து உட்கொள்ள கோழை, இருமல், சுரம் தீரும்.

9 கி. திப்பிலி சூரணத்தை 350 மி.லி. பசும்பாலில் காய்ச்சி சாப்பிடவும் இருமல் தீரும்.

திப்பிலி 350 கி. மிளகு சுக்கு வகைக்கு 175 கி. இரு சீரகம் (பெரு, சிறுசீரகம்) வகைக்கு 70 கி. அரத்தை 70 கி. இலவங்கம்,

35 கி. ஓமம் 70 கி. தாளிசம், இலவங்கப்பத்திரி, திரிபலை, இலவங்கம், ஏலம், சித்திர மூலம் வகைக்கு 35 கி. எடுத்து இவற்றை இளவறுப்பாய் வறுத்து பொடித்து அதே அளவு சர்க்கரை கலந்து தேன் விட்டு பிசைந்து ஒரு சிட்டிகை அளவு 40 நாள் சாப்பிட இளைப்பு, இருமல் தீரும். திப்பிலி 70 கி. சீரகம், சுக்கு ஏலம், திப்பிலிவேர், வாய்விடங்கம், கடுக்காய், மிளகு வகைக்கு 8 1/2 கி. எடுத்து இளவறுப்பாக வறுத்து தேன், சர்க்கரை அல்லது பனைவெல்லம் அவ்வளவு சேர்த்துக் காய்ச்சி பாகு பதத்தில் பிசைந்து 2.2 கி. தினம் 2 வேளை, 40 நாள் சாப்பிட இருமல் - இரைப்பு தீரும்.

யானைத்திப்பிலி:-

இதனைப் பொடித்து தேனில் கலந்து சாப்பிட ஈளை, இருமல் தீரும். இதனைத் தேனில் ஊற வைத்து கொடுக்கத் தீரும்.

துளசி:-

துளசியிலையைப் பிட்டவியல் செய்து சாறு எடுத்து கோரோசனையுடன் கலந்து சாப்பிட இருமல் தீரும். தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி வியர்வை பிடிக்க ஐயம் தீரும்.

துளசி இலையை நீரில் ஊறவைத்து சாப்பிட சளி இருமல் தீரும்.

தூதுவேளை:-

இதன் இலையில் குடிநீரைச் சாப்பிட இருமல் இரைப்பு தீரும். இதனைத் துவையல், குழம்பு செய்து சாப்பிட கோழைக்கட்டு, இருமல் தீரும். இதனை நெய்யாக காய்ச்சி சாப்பிட இருமல் தீரும்.

பிரம்மிய வழுக்கையின் இலைச்சாற்றை தேக்கரண்டி (10 மி.லி.) கொடுக்க இருமல் தீரும்.

கரிசாலை:-

இலைச்சாறு 70 மி.லி. நல்லெண்ணெய் 700 மி.லி. எடுத்து இவற்றைப் பாத்திரத்திலிட்டு காய்ச்சி 5 கி. காலை, மாலை இருவேளை சாப்பிட இருமல் நோய் தீரும்.

கரிசாலை:-

கரிசாலைச்சாறு 2 துளி எடுத்து 8 துளி தேனில் கலந்து கொடுக்க, குழந்தைகளுக்கு உண்டாகும் நீர்க்கோர்வை, இருமல் நீங்கும்.

இதனையே மடக்குக் கரிசாலைத் தைலம் செய்து இருமலுக்குக் லாம்.

கற்பூரவள்ளி:-

இதன் இலைச்சாற்றுடன் கற்கண்டு சேர்த்து, குழந்தைகளுக்கு உண்டாகும் இருமலுக்குக் கொடுக்கலாம்.

இதன் இலைச்சாற்றை நீர் சுண்டக் காய்ச்சி 4 முதல் 8 கி. கொடுக்க, இருமல், சளி, மூக்கு நீர் பாய்தல், சலதோடம் தீரும்.

முக்கியமாக, கோரோசனை மாத்திரையுடன் இதன் சாற்றை அனுபானமாக கொடுக்க நல்லது. இதனைப் பச்சையாக பிழிந்தும் பிட்டவியல் செய்து பிழிந்தும் கொடுக்கலாம்.

கற்கடகசிங்கி:-

கற்கடகசிங்கியை வாயில் அடக்கிக் கொண்டு இதன் காரத்தை விழுங்க இருமல் அடங்கும். கற்கடகசிங்கி, மருதம்பட்டை, திப்பிலி இவற்றைப் பொடித்து ஓர் எடையாக எடுத்து இதில் 2 கி. முதல் 4 கி. அளவு தேனில் கொடுக்க இருமல் தீரும்.

கற்கடகசிங்கி, சுக்கு, திப்பிலி, கஸ்தூரி மஞ்சள், முருங்கைப் பிசின் இவற்றை ஓர் எடை எடுத்து பொடித்து 2 கி. எடை வீதம் தேனுடன் சேர்த்துக் கொடுக்க வறட்டு இருமல் தீரும்.

ஈசுரமூலி:-

இதன் வேரைப் பொடித்து 2 கி. எடை தேனில் கொடுத்துவர இரைப்பிருமல் தீரும்.

சுவாசகுடோரி மாத்திரை:-

சுவாசகுடோரி மாத்திரை வழங்க இருமல் தீரும்.

வெள் எருக்கு:-

இதன் பூ ஒன்று, இரண்டு பங்கு மிளகு சேர்த்து அரைத்து மிளகு அளவு உருட்டிக் கொடுக்க - இரைப்பு - இருமல் தீரும்.

ஓமம்:-

ஓமம் 280 கி. ஆடாதோடைச்சாறு, இஞ்சிச்சாறு, புதினாச்சாறு வகைக்கு 140 கி. இந்துப்பு 35 கி. சேர்த்து ஊற வைத்து உலர்த்தி 2 மி.லி. கொடுக்க இரைப்பு, இருமல் தீரும்.

குரோசாணி ஓமம்:-

இச்செடியின் இலை, பூ, வித்து இவைகளிலிருந்து எடுக்கும் சாற்றை உலர்த்தி 5 துளி அளவு கொடுக்க, சுவாசம், இருமல் தீரும்.

கஞ்சாங்கோரை:-

இதன் சாற்றைக் குழந்தைகளுக்குக் கொடுக்க இருமல் தீரும்.

வெண்கடுகு:-

இதைத் தேனில் அரைத்துக் கொடுக்க இரைப்பு இருமல் தீரும்.

கண்டுபாரங்கி:-

இதன் வேர்ப்பொடி, சுக்குத்தூள் இவற்றை ஒரு அளவாக எடுத்து தேனில் கொடுக்க இருமல் தீரும்.

பெருங்களர்வா:-

இதன் இலையை முறைப்படி குடிநீரிட்டு 80 மி.லி. கொடுக்க, இரைப்பு, இருமல் தீரும்.

கறிமுள்ளி:-

இச்செடிக்கு 100 பங்கு நீர் சேர்த்து குடி நீரிட்டு 20 மி.லி. கொடுத்துவர இருமல், இரைப்பு தீரும்.

காஞ்சொறி:-

பெருங்காஞ்சொறி வேரைக் குடிநீரிட்டுக் கொடுக்க இரைப்பு, இருமல் தீரும்.

நரிவெங்காயம்:-

இது 130 மி.கி. மிளகு 260 மி.கி. பொட்டிலுப்பு 780 மி.கி. எடுத்து இம்மூன்றையும் உலர்த்திப் பொடி செய்து நீரில் அரைத்துக் கொடுக்க, இரைப்பு, இருமல் தீரும்.

கொள்ளு:-

ஒரு பங்கு கொள்ளுக்கு 10 பங்கு நீர் விட்டு, காய்ச்சி அத்துடன் 130 கி. இந்துப்புச் சேர்த்து கொடுக்க இருமல், இரைப்பு தீரும்.

செங்கொன்றை:-

இதன் பட்டையை 35 கி. எடுத்து சிதைத்து, குடிநீரிட்டு தர இரைப்பு இருமல் தீரும்.

முள் சங்கன்:-

முள்சங்கன் இலையை குடிநீரிலிட்டுக் கொடுக்க இருமல், முறைச் சுரம் போகும்.

கோரை:-

கோரைக் கிழங்கின் சாற்றை 32 மி.லி. கொடுக்க இருமல், இரைப்பு தீரும்.

சத்திச் சாரணை:-

இதன் சமூலத்தைக் குடிநீரிட்டுக் கொடுக்க இரைப்பு, இருமல் தீரும்.

சாதிக்காய்:-

சாதிக்காய்ப் பொடி, சூடன், ஏலக்காய், கிராம்பு, சித்திர மூலவேர் இவற்றின் பொடியை வகைக்கு 4 கி. எடுத்து நன்றாக விரவிக் கலந்து 390 மி.கி - 780 மி.கி. கொடுக்க இருமல், இரைப்பு தீரும்.

சாம்பிராணி:-

இதை வெந்நீரிட்டு அரைத்து மேலுக்குப் போட நாள்பட்ட இரைப்பு தணியும்.

சிவனார் வேம்பு:-

இதன் இலையையும், பூவையும் குடிநீரிட்டு வழங்க, இரைப்பு இருமல் தீரும்.

சுக்கன்காய்:-

இதை வற்றலிட்டு உணவாகக் கொள்ள இரைப்பு, இருமல் தீரும்.

தவசுமுருங்கை:-

இதன் இலைச் சாற்றை உட்கொள்ள இரைப்பு, இருமல் குணமாகும்.

தாளிச பத்திரி:-

இதன் இலைத்தூளை, ஆடாதோடை இலைச்சாற்றில் கலந்து சிறிது தேன் சேர்த்து சாப்பிட இருமல், இரைப்பு தீரும்.

திப்பிலி வேர்:-

இதன் வேரை அரைத்து பாலில் கூட்டிக் கொடுக்க இருமல் தணியும்.

யானைத்திப்பிலி:-

இதைப்பொடித்து சலித்து தேனில் குழைத்து கொடுக்க இருமல் தீரும்.

சரளதேவதாரு:-

இக்கட்டையை இடித்து 9-18 கி. எடுத்து குடிநீரிட்டு வழங்க இரைப்பு, இருமல் நீங்கும்.

தேவதாரு:-

இம்மரத்தின் பட்டையைக் குடிநீரிட்டு வழங்க இரைப்பு, இருமல் தீரும்.

நறுவிலி:-

இதன் இலையைக் குடிநீரிட்டு வழங்க இரைப்பு தீரும்.

நாணல்:-

இதன் இலைச்சாற்றைத் தக்க அளவில் வழங்க இரைப்பு, இருமல் நீங்கும்.

பலா:-

இதன் காயை இரைப்பு, இருமலுக்கு வழங்கலாம்.

பன்னீர்ப் பூ:-

இதன் பூவைக் குடிநீரிட்டு வழங்க இரைப்பு, இருமல் தணியும்.

பாகல்:-

வெம்பி விழாத பாகல் பழத்தினால் இருமல், இரைப்பு நீங்கும்.

பெருங்காயம்:-

காயத்துடன் உளுந்து சேர்த்து தீயிட்டு சுட்டுக் கொடுக்க இரைப்பு, இருமல் தீரும்.

மிளகரணை:-

மிளகரணை வேர்ப்பட்டை, கடுகுரோகிணி இரண்டையும் குடிநீரிட்டுக் கொடுக்க இருமல் இரைப்பு தீரும்.

முசுட்டை:-

இதன் இலைச் சாற்றில் சிறிது கோரோசனை கலந்து கொடுக்க இரைப்பு, இருமல் தீரும்.

முருங்கை:-

இதன் வேர்ச்சாற்றுடன் தக்க அளவு பால் சேர்த்து சாப்பிட இரைப்பு, இருமல் நீங்கும்.

மூங்கிலுப்பு:-

மூங்கில் கணுக்களில் தங்கி நிற்கும். இதில் 4 கி. எடைக்கு திப்பிலி 2 கி. ஏலம் 1 கி. இலவங்கம் 1/2 கி, சர்க்கரை 8 கி. எடுத்து பொடித்துக் கலந்து வேளைக்கு 4 கி. சாப்பிட இருமல், இரைப்பு தீரும்.

வாலேந்திர போளம்:-

இதைப் பொடித்து 1கி. - 2கி. அளவு கொடுக்க இரைப்பு, இளைப்பு தீரும்.

உத்தாமணி:-

இதன் சாறு 5 துளியும், தேன் 5 துளியும் சேர்த்து அதில் தாமிர செந்தூரம் கஸ்தூரி 32 மி.கி. சேர்த்துக் கொடுக்க இருமல், இரைப்பு தீரும்.

அரத்தை:-

அதிமதுரம், தாளிசம், திப்பிலி, சிற்றரத்தை வகைக்கு 4 கி. எடுத்து அரைத்து 40 மி.லி. நீர் விட்டு கலக்கி காய்ச்சி, தேன் சிறிது சேர்த்து சாப்பிட இருமல் தணியும்.

அலரிவிதை:-

இதன் விதையை ஊறல் குடிநீர் செய்து கொடுக்க இருமல் இளைப்பு தீரும்.

இஞ்சி:-

இஞ்சியைத் தோல் நீக்கி சாறு எடுத்து தெளிவான இஞ்சிச் சாறு, மாதுளம் பூச்சாறு, தேன் இவற்றைச் சம எடை கலந்து வேளைக்கு 325 மி.லி. சாப்பிட இருமல் ஈளை தணியும்.

இஞ்சியைப் பாலில் அரைத்து 5 கி. அளவெடுத்து 162 மி.லி. பாலில் கலந்து காலை, மாலை கொடுக்க இருமல், இளைப்பு நீங்கும்.

இஞ்சிச்சாறு, ஈரவெங்காயச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு இவற்றைச் சம அளவு கலந்து வேளைக்கு 34 கி. வீதம் 2 வேளை 3 நாட்கள் சாப்பிட இரைப்பு இருமல் தீரும்.

இம்பூரல்:-

இதன் இலையையும், வேரையும் சேர்த்து ஒரு பங்கிற்கு 20 பங்கு நீர் சேர்த்து குடிநீரிட்டு 18 கி. - 35 கி. கொடுக்க இருமல், இரைப்பு, இளைப்பு நீங்கும்.

இலவங்கப்பட்டை:-

இலவங்கப்பட்டை, சோம்பு, சுக்கு, வாய்விடங்கம், கிராம்பு வகைக்கு 4 கி. சேர்த்து முறைப்படி குடிநீரிட்டு 1/4 பாகமாக சுருக்கி வேளைக்கு 18 - 35 கி. தினம் 2 வேளை கொடுக்க இரைப்பு, இருமல் தீரும்.

துளசி:-

இதன் குடிநீரை உள்ளுக்குச் சாப்பிட்டு மேலுக்கும் பூசிவர இருமல் தணியும்.

கொட்டைக்கரந்தை:-

இதன் விதையைப் பொடித்து தேனில் கொடுக்க இருமல் தீரும்.

கருங்காலி:-

இதன் இலைச்சாற்றுடன் கற்கண்டு சேர்த்துக் கொடுக்க இருமல் தணியும்.

காட்டுகருவாப்பட்டை:-

காட்டுகருவாப்பட்டை, சுக்கு, மிளகு 2, திப்பிலி 3, அதிமதுரம், வில்வப்பிசின், விளாம்பிசின், வேலம்பிசின், முருங்கைப் பிசின்,

இவற்றை வகைக்கு 8 பங்கு, எடுத்து ஒன்றாகச் சேர்த்து இடித்து சலித்து ஒரு சிட்டிகை கொடுக்க இருமல், இரைப்பு தீரும்.

கிச்சிலிக் கிழங்கு:-

இதன் கிழங்குடன் திப்பிலி, இலவங்கம், அதிமதுரம் சேர்த்து குடிநீரிட்டு இதில் சர்க்கரை தேன் கூட்டித் தர இருமல் தணியும்.

பண்ணைக்கீரை:-

இதன் விதையைப் பொடித்து பாலிட்டு வேக வைத்து சாப்பிட இருமல் தீரும்.

குப்பைமேனி:-

இதன் இலைப்பொடியினை 260 கி. வரை கொடுக்க இருமல் தீரும்.

மணத்தக்காளி:-

இதனைக் கறியாக சமைத்துச் சாப்பிட தொண்டைப்புண், வறட்டு இருமல் தணியும்.

தாமரை:-

தாமரைப் பூவை மணப்பாகு செய்து கொடுக்க இருமல் தீரும்.

பொடுதலை:-

இதை வதக்கி நீரிலிட்டு கொதிக்க வைத்து இறுத்து வழங்க இருமல் தீரும்.

வசம்பு:-

இதனை நீரிட்டுக் கொடுக்க இருமல் தணியும்.

வெள்ளுள்ளி:-

இதன் சாற்றை 20 துளி தினமும் 2 வேளை சாப்பிட இருமல் தீரும்.

வெற்றிலை:-

வெற்றிலையை எண்ணெயில் நனைத்து விளக்கில் வாட்டி மார்பில் போட இருமல் தணியும்.

கடுக்காய்:-

பச்சைக் கடுக்காயைப் பாலில் அரைத்து சாப்பிட இருமல் தீரும்.

சித்த மருத்துவத்தில் இருமலில் காரணமும் குறிகுணங்களும் வகைகளும் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்க நவீன மருத்துவத்தில் 'இருமல்' நோயின் காரணங்களும் குறி குணங்களும் வகைகளும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆங்கில முறை மருத்துவம்

இருமலின் விளக்கம்:-

சுவாசப்பாதை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதன் முக்கிய அறிகுறி இருமலாகும். குறுகிய காலமுடையதாகவும் வலியை யுண்டாக்குவதாகவும் அமையும் இருமலுக்கு 'மிகக் குறுகிய கால இருமல்' என்று பெயர்.

வரும் காரணங்கள்:-

விஷசுரம் (Pneumonia) வந்ததின் பாதிப்பதாக நுரையீரலின் மேலுறை (Pleura) பாதிக்கப்பட்டிருந்தால் அதன் விளைவாக இரும லுண்டாகலாம். இது சிலகாலமே இருக்கக் கூடியது.

மார்புச்சளி நோயால் (Bronchitis) பாதிக்கப்படும்போது இருமல் வரும். அது குறுகிய கால அளவிலே இருக்கும்.

ஈளை நோயில் (Asthma) இவ்விருமல் ஏற்படும். நீண்டகால மாகவே சுவாசப்பாதையில் நோய் இருக்குமானால் அப்போது இரும லும் வரும். அப்போதைக்கப்போது கபத்தை வெளியேற்றம் செய்யாது சேர்த்துக் கொண்டேயிருக்கும்போது இவ்விருமல் ஒட்டிக் கொள்ளும்.

இருமலுக்குரிய சூழலும் நோய்களும்:-

தட்ப வெப்ப நிலை மாறுதலின் போதும் காற்றின் ஈரப்பதம் மாறும் நிலையிலும் இருமல் அதிகமாகலாம். வழக்கமாக இருமல் பகலை விட இரவில் அதிகமாக இருக்கும். உறங்கி எழுந்த நிலையிலும் அதிகமாக இருக்கும்.

சுவாசப்பாதையில் 'லாரிங்ஸ்' என்ற பாகம் இயங்காமல் நிற்கும் போது இருமல் தனது வழக்கமான தன்மையினின்று மாறுபடுகின்றது. மாடு கத்துவது (Bovin Cough) போன்று இருமல் இருக்கும்.

கக்குவான் நோயிலும் சுவாசப்பாதைப் பகுதி மட்டும் அடைபட்டி ருக்கும் போதும் **'கர்' 'கர்'** (Stridor) என்ற சத்தத்துடன் இருமல் வெளிவரும். சுவாசப்பாதையில் சளி அல்லது எவ்வகை திரவமாயி னும் சரி அளவுக்கு மீறிய நிலையில் சுரப்பு இருக்கும்போது இருமல் உருவாகும்.

சுவாசப்பாதை புற்றுநோயில் (Bronchial Carcinoma) இருமல் ஆரம்ப காலத்தில் தொற்றிக் கொள்கிறது. ஆனால் காசநோயில் (Tuber culosis) காலம் கடந்து உண்டாகிறது.

இருமல் - பாடல்

வளி இருமல்:-

சுருபமாய் நெஞ்சுதனிற் றினவு முண்டாஞ்
செவிதனிலே இரைச்சலுமா மரோச கந்தான்
மருபமன்னிக் கீழ்மூச்சு மார்பள வதாகி
மன்னியே நெஞ்சளவா யுழலுஞ் சுவாசம்
நிருபநேர் படும்பிரம ரந்திரந் தன்னில்
நெய்த்துதுன் மாமிசங்கள் மிகவ ளர்ந்து
துருபமாய் மூச்சிதிக மிருமல் கோழை
தூய்தான வாதகா சத்தின் சீரே

அழலிருமல்:-

சீராக இருமல்மிகப் புரட்ட லாகித்
தித்தித்து உப்புரைக்குஞ் சர்த்தி யுண்டாம்
தாரகத் தலையுடம்பு தான்வ லிக்குந்
தாகித்துக் குரல்கம்மும் ரத்தம் வீழும்
ஆராக வங்கந்தான் மிகவி ளைக்கும்
அன்னந்தான் செல்லாமற் புளித்தேக் காகும்.
மாராக மயிர்கூச்சுஞ் சுரமு முண்டாம்
மதி மயங்கும் பித்தகா சத்தின் வன்மை

(சித் ம-213)

ஐய இருமல்:-

சாற்றவே இருமலொடு இளைப்பு முண்டாய்ச்
சார்ந்தபீ ளையுமூச்சு மிகுந்து வாங்கும்
ஆற்றவே அடிவயிறு மந்தம் பற்றி
அழகாகு முருவழித்து உடம்பு வற்றும்
சேற்றவே சுரமொடு தியக்க முண்டாய்ச்
சித்தமே மிகக்கலங்கி வாந்தி யாகித்
தீற்றவே சிறுகடுப்பாற் தேக மெங்குஞ்
சிலேட்டுமத்தின் காசமென்றே செப்ப லாமே'

(சித் ம-214)

வளி அழல் இருமல்

சூட்டிட்டுக் காரையிலே துளிக்கும் ரத்தஞ்
சூட்சமாய்க் காதுதனி லிரைச்ச லுண்டு
ஆட்டிட்ட இருமலொடு அசதி யாகும்
அடிக்கடிக்கு வாயுதான் மிகவே மீறும்
மூட்டிட்ட முதுகு தண்டு. குடைச்ச லுண்டாம்
மொழிமா றாட்டம் மூச்சோடு சந்தாப
வாட்டிட்ட தேகந்தான் ஊதிக் கொள்ளும்
வாதபித்த காசத்தின் மார்க்கந் தானே'

(சித் ம-214)

அழலைய இருமல்:-

மார்க்கமாய் நெஞ்சதனிற் றினவுண் டாகும்
வடிவமெலாந் தான் வலிக்கும் மிரும லுண்டாம்
தார்க்கமாங் குரல்கம்முஞ் சடமி ளைக்குஞ்
சஞ்சலிக்கும் பருவத்திற் சதியை நாடி
பீர்க்கமாய்ப் பூமியெல்லாம் சுழற்றல் போலாம்
பெண்பார்வை பார்த்தவுடன் புளக முண்டாகும்
பீர்க்கம்பூப் போலுடம்பு மஞ்ச ளிக்கும்
பித்தசிலேட் டுமகாசப் புதுமை தானே

(சித் ம-215)

முக்குற்ற இருமல்

புதுமையாய் புரண்டுமே இருமல் குத்திப்
பூங்கமுகி னிறமாக ரத்தம் வீழும்
வெதுமையாய் வெதும்பலொடு எரிவு தாகம்
மிக்கதோ ரருசியொடு வயிறு பேதி
பதுமையாய்ச் சரீரமெங்கும் படுக்கை கூடாப்
பருத்துமே உடம்பூதிப் பாண்டு வாகும்
கதுமையாய்ச் சரீரமெங்குங் கடுப்புண் டாகுங்
கடிதுதொந்த காசத்தின் காட்சி தானே.

(சித். ம-215)

குளிர்(மந்தார) இருமல்:-

தானான தூயதோர் நாசி தன்னில்
சலநோய்நீர் தான்விழுந்து தும்ப லுண்டாம்
மானான மார்புநெஞ் சடைத்து மூச்சு
வலுவாகப் பாம்புபோல் சீற லாகும்
கானான கண்டமொடு முகமுங் காதுங்
காயமதுங் கசிவாகி வியர்வை யாகும்
ஏனான இருமலொடு கோழைக் கம்மல்
இரைப்பாக மந்தர காச மாமே

'மந்தார காசம் மழைமப்பு மார்பு நெஞ்சு
தந்தான மீளை தனியடைத்த குத்திருமல்
தும்பல்வலி நாசிநீர் சுரமிளைப் பாசமதி
பொம்மி வரு மென்று புகல்

(சித்.ம. - 26)

பக்க மந்தார இருமல்:-

காசமா யிருமலொடு இளைப்பு முண்டாய்க்
கட்டியே நெஞ்சதனிற் கம்ம லாகும்
வாசமாய் வயிறதுவும் பொருமிக் கொள்ளும்
மகத்தான மூக்குநீர் பாய்ச்ச லாகும்

ஆசமா யமரபட்சம் பூர்வ பட்சத்

தருகாமை யானவுடன் சுவாச மீறும்

ஈசமா யிரைப் போடு எரிமூச் சாகும்

இக்குணந்தாள் பக்கமந் தார காசம்

(சித். 217)

இழுப்பு (சுவாச) இருமல்:-

வண்மையாய்க் கோழைக்கட்டி இருமி வீழும்

மாநாகம் போலவே வாங்குஞ் சுவாசம்

திண்மையாய்ச் செருமலுண்டா மடிக்க டிக்குச்

சீரணமி லாமலே வயிறு மூதும்

நன்மையாய் நாசியது தணல்போ லாகும்.

நலிந்துடம்பு வற்றிவருங் குரலுங் கம்மும்

உண்மையா யுண்ணாக்கி லூறுங் கேணி

யுழந்துமே சுவாசகா சத்தி னொப்பே'

(சித். ம - 218)

சுரமிருமல்:-

ஆண்மையாய்ச் சுரமணுகி யங்கந் தன்னில்

அனேக நாள் செறுப்பாக லாக்கை தானும்

காண்மையாய்க் கருதியே யுடலம் வற்றிக்

கனப்பாகிக் கனவிருமல் சுவாச முண்டாய்

வேண்மையாய் வழுவழுத்து கண்பச் சென்று

மிக்க நரம் பெல்லாந்தான் மிகத்த ளர்ந்து

தூண்மையாய்த் தோல் திரைந்து துஞ்ச லுண்டாம்

சுரவிருமற் குணமென்றே சொல்ல லாமே

(சித். ம - 218)

குருதி வாந்தி இருமல்:-

ஒப்பான குரல் கம்மி யுதிரந் தானும்

உருட்சியாயக் கட்டிபோ லுருண்டு வீழும்

விப்பான விலாவிலே மிகநோ வாகி
மளமளென வயிறுகடுத் துளைச்ச லாகும்
பக்கான கால்கையு மோய்ச்ச லாகும்
கடுமூத்திர மெரிந்துமெத்த மஞ்சள் போலாம்
தப்பான சரீரமது வெளுத்துக் காணும்
கக்கும்ரத்த காசமென்றே சாற்ற லாமே

மூக்கடைப்பு இருமல்:-

செய்யவே இருமலொடு கோழை வீழும்
சேட்மமா யிளைப்போடு இரைப்புண் டாகும்
உப்பமாய் வயிறதுவு மூதிக் கொள்ளும்
ஊணுறக்க மில்லாம லுலருந் தேகம்
குப்பமாய் மலசலமுங் கறுகி வீழும்
கோழையிட குணந்தான்மீன் கவிச்ச டிக்கும்
துப்பமாய் சுருண்டுவயிறு வலியு மாகும்
சுவாசபீ னசமென்றே சூட்டி டாயே

(சித்.ம.-222)

தீருவன

காணவே சாத்தியத்தைக் கருதக் கேளாய்
கனத்ததோர் மந்தார காசத் தோடு
பூணேவே பக்கமந் தார காசம்
பொலிவான சுடர்காசம் பித்த காசந்
தோணவே சுவாசகாச சத்தி னோடு
சுழியிரத்தக் காசமாம் பீனச காசம்
தாணவே இதுவேழுஞ் சாத்திய மாகுஞ்
சாதகமாய்ப் பரிகாரம் பார்த்துச் சாற்றே

(சி.ம. 219)

தீராதன

சாற்றியதோ ரசாத்தியந்தான் வாத காசம்
சஞ்சலமாஞ் சேத்துமத்தின் காசத் தோடு

தோற்றியதோர் தொந்தமாங் காசத் தோடு
 சுருக்கான விம்மூன்று மசாத்தி யந்தான்

(சி.ம. 219)

இருமல்

(விஷ்ணுகிரந்திக்) குடிநீர்:- 1

மாந்த கணம்போகும் வல்ல பொருமல்போம்
சேர்ந்திருமல் போகுஞ் சிலேஷ்மம்போம்-காந்தி
துளசி திப்பிலியும் சொல்லும்மா புல்லுரீஇ
களசி எரித்திருந்தக் கால்.

(பு. 477-137)

(மணித்தக்காளிக்) குடிநீர்:- 2

மணித்தக்காளி ஒருபிடியும்
 மானே வெந்தயம் பலம்நாலு
துணித்தீருள்ளி தான் மூன்று
 துட்டெடை யெல்லாம் பொன்னிறமாய்க்
குணித்து வறுத்தே யிரண்டுபடி
 குசம்விட்டெட்டொன்றாய்க் காய்ச்சிக்
கணித்து மூன்று நேரங்கொள்
 கணம்வாய் நாற்றம் மிருமல்போம்.

(477-135) (476 -65)

குடிநீர்:- 3

கற்றாழஞ் சோறுகடு களிப்பாக் கோடு
 கருவேம் பிரமியுடன் சுக்குங் கட்டி
பற்றாமல் நாலிலொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
 பதறாமல் எண்ணெயுடன் பருகு வீரேல்
வற்றாக் கடல்வற்றும் சீதம் போகும்
 வலுவான குன்மமுடன் இருமல் போகும்
பெற்றோரே வாந்திவிக்கல் சுரமும் சீதபேதி
 பேருலகில் நாடாது பேசுவீரே.

(476-126)

குடிநீர்:- 7

நாட்டு மூலம் தூதுவளை
நல்ல கண்டங் கத்திரிவேர்
கோஷ்ட சிங்கி முசுக்கை முள்ளிக்
கொடிய அரத்தை திரிகடுகு
ஏட்டின் படியே கிழாயம் வைத்
திதமாய் ஆறு போத தருந்து
ஓட்ட மோடுஞ் சுரமிருமல்
ஓடும் சீத சுரம்போமே.

(476-128)

குடிநீர்:- 8

இடர்தீரு மதிமதுரம் வசம்பு சுக்கு
ஏலமா மரத்தை சிறு தேக்கழிஞ்சி
புடையாத முள்ளிவேர் கருவேப் பீர்க்கு
பூனாகம் சமன்குடிநீர் போட்டு வாங்கி
கடராத நெல்பொரியிந் துப்பு தேனு
கலந்துபுகட்டிட துரப்பு கக்க லீளை
மடிவான இருமலீளை யரோசி விக்கல்
மாறிப்போம் சகலருக்கு வழுத்தக் கேளே.

(கை.பி. 98-24)

குடிநீர்:- 14

கண்டங்கத்திரி தூதுவளை
கூட்டி முள்ளிக் கடுச்சூரி
இண்டு சுக்கு இன்புரை
இனிய முத்தக் காசுடனே
கொண்ட சுக்கு திப்பிலியும்
கொட்டிய அரத்தை கொத்தமல்லி
மண்டி யிந்த கஷாயம் கொள்ள
மட்டிலா யிருமல் மடிந்திடுமே

(ஏடு 335-110)

அடை:- 2

கையாந் தகரை நாயுருவி
    கருந்தக்காளி சங்கு சாட்டரணை
மெய்யா எருக்கு மொட்டிரண்டு
    வேலிப்பருத்தி இலை நான்கும்
நொய்யா லரிசி மிளகுடளே
    நுணுங்க அரைத்து அடை சுட்டு
கைய்யால் வாங்கி தின்பீராய்
    காதம் விட்டோடும் இருமலுமே

(ஏடு 822-310)

சூரணம்:- 1

காரிவிரை அசுவம் காறுசிறு திப்பிலியும்
கூறுசமன் பொடித்துக் கொடுக்க-ஆறுமே
வாத்தில்லிச் சுரமிருமல் வாராது காணும்
சேர்ந்து தணியுமிது தின்

(482-99) (476-127-128)

சூரணம்:- 2

யிதுவே மின்னமுது கொடுவிக்காள்
    விடைய மசபோக
முதுவே திப்பிலி பாவட்டை
    மிளகு சுக்கோ டரைத்திதனை
கொதிவெந்நீரில் முலைப் பாலில்
    குரையா மணிபோல் தானருந்து
துதிவே பொருமலுங் களியகலத்
    துலங்குங் குளிகை யீதாமென்றே.

(ஏடு 326-66)

சூரணம்:- 3

தேற்றான் கொட்டைக் கற்கண்டு
    தேனிரு மிச்சம் பழச்சாறு
வெண்ணெ யுடனே தான் ரேகிச்சு
    வேர்கட மருந்து பொடிசெய்து

குழப்பி யதில்முலைப்பால் கூட்டி
கொடுக்க யிருமல் தீருமென்றே.

(ஏடு 601-87)

சூரணம்

ஆச்சப்பா திரிகடுகு மதுர மாஞ்சி
அக்கிரா கற்கடக சிங்கி ஏலம்
ஏச்சப்பா திரிபாலை கற்கண்டு கோட்டம்
இந்துவகை சமன்வெதுப்பியிடித்துத் தூளாய்
தாச்சப்பா சூரணந்தா னிஞ்சிப் பாகு
தனில்கலந்து தேன்குத்தித் தாக்குவீரால்
மூச்சப்பா வுப்பிசம் குத்திருமல் கக்கல்
முளைக்கமொரு வாய்வுகுடல் முடிக்கும்போமே.

(கை பி. 98-48)

(வட்டத்திருப்பி) நெய்:- 1

வட்டத் திருப்பி சிறுதேக்கு
மதுரம் வசம்பு சுக்கோடே
இட்ட மிளகு திரிபலையு
மிசைந்த விடையம் கோட்ட முத்தம்
திட்டக் கழஞ்சு இம்பூரல்
சேர்ந்த சாறு படியாநெய்
மட்டப் படியா யெரித்தருந்த
மாறுங் கழிச்ச லிருமலுமே.

(476-146) (477-328)

(வேலிப்பருத்தி) நெய்:- 2

வேலிப்பருத்தி சாறுழக்கு
மேதி வெண்ணெய் தாதுழக்கு
ஆலித் தெழுந்த கருஞ்சீர
மதுவுங்கழஞ்சு அரைத்திட்டு
பாலித் திருந்து பொன்னிற
பதத்தில் வடித்து நெய்யருந்த

வாலப் பிள்ளை வாய் மூக்கால்
வரும்பால் கழிச்சல் மாறிடுமே

(476-146-147) (477-329)

நெய்:- 3

தேங்காய்ப் பாலிந் துப்பு
செவ்வியம் திப்பிலி நல்மிளகு
வாங்கும் சுக்கு வெள்ளுள்ளி
பகர்ந்த அரத்தை வால்மிளகு
வாங்கும் கிராம்பு அதிமதுரம்
வகைக்கு கழஞ்சி முசுறுமுட்டை
நீங்கா நிலவே ரதில் ரெட்டிகு
நிலத்தி லாடா தோடையுடன்
தோடைச் சாறு தான் கலந்து
சுகமாய் வடித்து நெய்யெடுத்து
பேட மயிலே காசளவாய்
பிரிய முடனே கொடுத்திடுகில்
வாடி வாடி கிறுகிறுத்து
வருத்த மிளைப்பு துரப்பெல்லா
மோடிப் போமென்
றுறுதி முனிவ ருரைத்தாரே.

(ஏடு. 601-86)

(கல்யாண பூசணிக்காய்) நெய்:- 5

சீராரும்பூசனிச் சாற்றிளநீருடன் செவ்வாவி நெய்பாலுமாய் திகழும்
சதாவேரியின் கிழங்கிவையுடன் செய்வகைக்கோர் நாழியாய்க்
காராருரோகணிச் சண்பகம்-வெட்டிவேர் கடற்பச்சையதி மதுரமும்
காடுவளரிலவங்க மிருமுட்டிதிப்பிலி கருது சந்தன மேலமும்
பாரிலாமிச் சுமாவிதைக் கோட்டமும் பருவிளாம்பிசினியுடனே
பண்பிலவு தன்பிசின் வில்வப்-பிசினோடு பகருமொரு பொன்முசுட்டை
நேராகுமோர் வகைக் காசெடை நிதனமாய் நிலவரமதாயரைத்து
நேசமுடைனெய்யிற் கலந்தெரிவடித்ததை நித்தங்கொடுத்து விடுமே

விடுமே கணக்காய்ச்சல் மேல் வெதுப்புட் காய்ச்சல்
தடுமே விருமலுடன் சாந்தங்-கொடுமேதான்
பூசனிக்காய் நெய்தலுக்குப் பூரிக்குமேயுடலம்
காசினியி லுள்ளவர்களுக்குக் காண்.

(477, 289-90)

எண்ணெய்:- 4

தேறவே யின்னுமொரு செய்தி கேளு
திப்பிலி சித்திரத்தை மதுர முள்ளி
கூறவே யக்கிரா வசம்பு சங்கன்
குப்பிவேர் வகைக்குவோர் களஞ்சி தூக்கி
மீறவே வேளைகுப்பை மேனி னொச்சி
சாரோ ரொன்றுழக்கு வீதம்
ஏறவே சரக்கெல்லா மரைத்து நிம்ப
எண்ணெயோர் படிதண்ணி விட்டு சேரே.

சேர்த்தொன்றாய்க் கலந்தெரித்துக் காயும்போது
சிறியமிசி றண்டநில வேருங் கூட
பார்த்தங்கே வந்துபதந் தன்னில் வாங்கி
பாங்காக வடித்திறுத்து கலசத் திட்டு
வார்த்தங்கே யுள்ளுக்கு புகட்டி மேலே
வசவு பொறி யொடுங்கக் கண்ணெங்கு போட
வீர்த்தங்கே நின்றயிளைப் பிரும லெச்சி
வீச்சுவலி தோஷமெல்லாம் விட்டுப் போமே.

(கை.பி. 98.23)

எண்ணெய்:- 1

தெரிந்த வாமணக் கெண்ணெயூரி
சேரும் ரோசினை விராகன் ரண்டு
குருந வசம்பு வொரு பலமுங்
குறையா துள்ளி யிரு பலமும்
கழுந்தும் பூலா கொருஞ்சி யிலை
கறுத்த சீரக வெயில் வைத்து

அழுந்தப் பொடித்து வெயிலில் வைத்து
அருந்த விருமலகன் றிடுமே

(ஏடு 129-68)

மாத்திரை:- 3

காத்திடும் பச்சை கற்பூரஞ் சீரகம்
கோத்தி டுங்கலை கொம்பு கோரோசினை
சாத்தி டுங்கத்தஞ் சாம்பிரா ணிவ்வகை
சேத்தி டுவகைக் குக்களஞ்சி விட்டே

விட்டி டும்பேய்ப் புடலும் பேய்ப் பீக்கியும்
முட்டி டும்நெ ருஞ்சிவேர் முள்ளிவிரை
தொட்டி டுயிள நீர்விட்டுக் காச்சியே
தொட்டி டுமரைத் துமெழு காக்கிடவே

ஆக்கி குன்றிபோ லாகக் குளிகையும்
நீக்கி நல்ல நிழலு லத்தியே
நோக்கி நாளிரு போதுமூ வைந்து நாள்
தாக்கி ருமல்ஐய மீளைச் சாடுமே...

(ஏடு 69.22)

(பாலசஞ்சீவி) மாத்திரை

திரிகடுகு வெண்காரம் சாதி லிங்கம்
சிறந்திடவே ஐம்மருந்துஞ் சமன தாக
நெறிபடவே எலுமிச்சம் பழத்தின் சாற்றால்
நிகவரைத்து ஒருசாமம் நிரைய தாக
குறியுடவே உண்டைதனை பயற்றிற் பாதி
குளிர்ந்தநிழல் தனிலுலர்த்திக் குழவிக் கீய
மறிபடவே பாலசஞ் சீவி யென்று
வகுத்துரைத்தார் மலையின்முன் மண்ணு ளோர்க்கே....

மலையின்முனி தாதுரைத்த வகையே தென்னில்
மாந்தகண சுரதோஷம் வயிற்றி னோட்டம்
கொலைசெய்யும் பித்தமுதிர் இருமல் வாந்தி
குலைத்திடுநோ யுள்ளதுவுங் குடிதான் போக

நிலைபெறவே பத்திரியை பிட்ட தாக்கி
நீர்வாங்கி திரிகடுகு கற்க மாக்கி
உலையுயர்ந்த கிழாயமதில் கற்க மோடு
உண்டையொன்று தானெடுத்து உரைத்தி டாயே.

உரைத்திடுமே சுரமிருமல் கணநா முள்ளு
உகந்தகோ ரோசினையும் ஒக்கக் கூட்டி
கரைத்திடுங் காலரத்த கணமூலங் கண்டால்
கடுகவே சாதிக்காய் புளிவித் தோடு
அரைத்திடுமே எண்டை ஒன்று சரக்குங் கூட்டி
அருந்திடவே வில்வப்பழச் சதைக்குள் வைத்து
வரைத்திடுமென் றருள்முனிவன் விபரஞ் சொன்ன
வாலசஞ் சீவியென்றே வகுக்க லாமே.
வகுக்குங்கால் பத்திரிதன் வகையைக் கேளு
மணித்துளசி செம்முள்ளி ஆடா தோடை
பகுத்திடுவாய் தூதுவளை விட்ணு காந்தி
பண்புசெரி கண்டங் கத்திரி யினோடு
நிகழ்த்திடுமே வெதுப்படக்கிப் பேய்ப்பு டோலும்
நின்ற சங்கின் இலைநொச்சில் விரைதான் கட்டி
செருத்திடுமே சுவாசகர மண்தோ ஷங்கள்
தெரிந்துரைத்தார் மாமுனி சஞ்சீவி யென்றே.

(476,124)

கக்குவான்

இயல்:-

கக்குவான் கேவலுடன் இருமலை உண்டாக்கி, உண்ட உணவை கக்கச் செய்து, மூச்சுக்குழலைப் பற்றி வருகின்ற ஒட்டு நோய் வகையினைச் சார்ந்த தொற்று நோய் ஆகும். கொக்-கொக் என இருமி, கோழையுடன் இருமலை உண்டாக்குகின்ற நோயாகும்.

நோய்வரும் வழி:-

பின்பனிக்காலத்திலும் (late winter) இளவேனில் காலத்திலும், பெரும்பாலும் இது உண்டாகின்றது. இது பருவகால வேறுபாட்டின் காரணமாக உண்டாகிறது. குறிப்பாகப் பின்பனி காலத்தில் பிற்பகுதியி லும், இளவேனில் காலத்தின் முற்பகுதியிலும் இது உண்டாகிறது. நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த காலத்தில் உண்டாகிறது ஒரு வகையான நுண்கிருமியால் வருகின்ற நோய் இது காய், பழம், பழைய சாதம், மோர், தயிர், மிகுப்புளிப்புள்ள ஆகாரம் இவற்றை அதிகமாகச் சாப்பிடுவதாலும் பலவித தண்ணீரில் குளிப்பதாலும் கக்குவான் ஏற்படுகிறது.

நோய் வந்த 14 நாள் வரையும் நோயின் வளர்ச்சி காலமாகும். இச்சமயம் மூக்கில் சளி வடியும், இருமலும் தோன்றும். இருமல் நாளாக, நாளாக அதிகரித்து வன்மை பெறும். அடிக்கடி தொடர்ந்து கக்குவான் ஏற்படும். இரவில் இருமல் அதிகமாகி துன்பத்தை அதிகப் படுத்தும். இப்படியே 28 நாள் வரை தொடரும். இடைவிடாமல் கக்குவான் ஏற்படுவதால் சளி மூச்சுக்குழாயில் அடைத்துக் கொண்டு, மூச்சு விட இயலாமை, மூச்சுவிட திக்குமுக்காடுதல், ஏக்கப்பார்வை இவற்றைத் தோற்றுவிக்கும். குரல்வளையை அடைத்து நெருக்குதல், இருமலானது தொடர்ந்து இழுத்துக் கொண்டே கேவலுடன் சென்று முடிவடைகிறது. தொண்டை பாதி திறந்திருக்கும்போது வெளிக்காற்று வேகமாக, குரல்வளையில் நுழைவதால் இந்த கேவல் சத்தம் ஏற்படு கிறது. (apneic) சில நேரங்களில் கேவல் குறைந்து உடல் (Yanoderma) நீலம் பாரித்தல் தோன்றும். வாந்தி, சளி வெளிப்பட்டதும் கேவல், இருமல் சற்று குறையும். நாக்கின் விளிம்புகள் பல்லில் அடிக்கடி உராய்வதால் நாக்கில் புண் உண்டாகிறது. குழந்தை சுறுசுறுப்பில்லாமல் மந்தமான, சோர்வான நிலையில் தோன்றும். மனக்குழப்பத்துடன் எழுச்சியற்று, திகைப்புடன் அதிகமான வியர்வையுடன் காணப்படும்.

இருமல், குளிர்ச்சியான உணவுகளாலும், குளிர்ச்சியான சூழ்நிலையாலும் அதிகமாகிறது. பச்சிளம் குழந்தைகளுக்கு, இந்த இசிவு நிலை தொடர்ந்து அதிகநாள் காணப்படும். நோயின் இறுதி கட்டத்தில் இருமல் அதிகரித்து, கேவல் குறைவாகத் தோன்றும். வாந்தி குறையும். படிப்படியாக, உடலும் தேறும். பசியும் உண்டாகும். இது 15 நாள் வரை நீடிக்கும்.

நுரையீரல் பற்றிய பிணியாளர்கட்கும், மருந்துகளை முறையாக உண்ணாதவர்கட்கும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்கட்கும் இன்னும் அதிகநாள் மருத்துவம் செய்ய வேண்டும்.

கக்குவான் நோயைச் சரிவரக் குணப்படுத்தா விட்டால், தக்க மருத்துவத்தைத் தொடராவிட்டால், அது அதற்குத் துணையாக பல் நோய்களையும் தோற்றுவிக்கும்; கடுமையான நோய்களையும் உண்டாக்கும்.

இந்நோயில் இருமல் தொடர்ந்து அதிகமாக இருப்பதால் நுரையீரல் பாதிக்கப்படுகிறது. நுரையீரலைச் சுற்றியுள்ள உறை பாதிக்கப்படுகிறது. நுரையீரலுக்கும் உறைக்கும் இடைப்பட்ட இடத்தில் நீர் சேர்ந்து கொள்கிறது. வெற்றிடத்தில் காற்றும் சேர்ந்து கொள்கிறது. வீக்கம் இவ்வாறு அதிகரித்திருப்பதால் மூச்சு விடுவதும் இழுப்பதும் சிரமமாக இருக்கும். உணவில் விருப்பமில்லாது போய்விடும். சாப்பிட்டாலும் வாந்திவரும். சாப்பிடாமல் இருப்பதாலும் சத்துகுறையும். நிமோனியா (குடல் பற்றியது) (வயிறு பற்றியது) தாக்கும். சுரம் காய்ந்து, கொண்டேயிருக்கும். மூச்சு விடுதலும் உள் இழுத்தலும் மிகுந்த சிரமத்துடன் இருப்பதால் இளைப்புநோய் உண்டாகும். முன்னரே இளைப்பு நோய் இருந்தால் அது இன்னும் அதிகமாகும். சத்திழந்த குழந்தையின் உடலில் காசநோய் அதிகமாகும். கிருமிகள் எண்ணிக்கையில் கூடும்.

இந்நோயில், குழந்தை இருமும்போது கண்களை மூடி மிகவும் துன்பப்பட்டு இருமுவதால் கண்களில் நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. நரம்புகளிடையே தொடர்ந்து அழுத்தமிருப்பதால் மூளை நரம்பு வெடிக்கிறது. கபாலத்தில் குருதிக் கசிவேற்படுகிறது. அதனால் நரம்புகள் வன்மையிழந்து வலிப்பு உண்டாகும். கண்ணிலுள்ள இரத்த நாளங்கள் வெடித்து விடும். கண்ணில் இரத்தம் வழிந்து சிவப்பாகி விடும். நாளங்களும் வெடித்து விடும். குழந்தை வன்மையிழந்து படிப்படியாக செயலற்றுப் போய்விடும். நரம்புகளின் பலவீனத்தால் தளர்ச்சி பெற்று ஆசனம், குதம் வெளிவந்து விடும். உறுப்பு கீழ் நோக்கி இறங்கும்.

கக்குவானில் உணவு சாப்பிட முடியாததால் குழந்தை வன்மையிழக்கும். இரத்தத்திலுள்ள சிவப்பணுக்கள் குறைந்து வெள்ளணுக்கள் அதிகமாகும். நாளடைவில் இரத்தப்புற்று நோய் வருவதற்கும் வாய்ப்புண்டு.

எனவே கக்குவானுக்கு தக்க மருத்துவரின் ஆலோசனையின் பேரில் தக்க மருத்துவத்தை மேற்கொள்ள வேண்டும்.

குறிகுணம்:-

ஒருவகையாகக் குரலெழுப்பி, ததும்பி மிகுதியாக இருமுதல், கேவல், பல்லைக் கடித்தல், ஐயம் கோழையாக இளகியும் கெட்டிப்பட்டும் வெளிவருதல், மல்லுக்கட்டினாற்போல் துன்புறுதல் போன்ற குறிகுணங்கள் கக்குவான் நோயின் குறிகுணங்கள். இவையேயன்றி 'கொக் கொக்' என்று ஒலித்துக் கோழையுடன் இருமலுண்டாகும்.

அதிகமான சத்தத்துடன் இருமல் உண்டாதல், அதில் இரத்தம் விழுதல், திணறலான மூச்சு, விழி பிதுங்குவது போலிருத்தல், களைப்பு, வியர்வை விழல், குடித்த பாலையும் சாப்பிட்ட உணவையும் கக்குதல், மலமும் சிறுநீரும் நழுவுதல் போன்றவை கக்குவான் நோயின் குறிகுணங்கள். இது தொண்ணூறு நாட்கள் வரைக்கும் இருந்து குழந்தைகளை ஆட்டி வைக்கும் தன்மையுடையது. இது தொற்றும் குணமுள்ளதாகையால் இந்நோயுள்ள குழந்தைகளிடத்தில் நெருங்காமல் குழந்தைகளை அதிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும்.

மருத்துவம்:-

இந்நோயில் ஐயகுற்றம் மிகுந்து இருமல், சளி இவற்றை உண்டாக்கி உண்ட உணவை வயிற்றில் தங்கச் செய்யாமல், வாந்தியில் வெளித்தள்ளுவதால் தன்னிலை மீறிய ஐயகுற்றத்தைத் தன்னிலைப்படுத்தவும், மிகுந்துள்ள சளி, கோழை இவற்றை வெளியாக்கவும், கேவல் என்ற இசிவைப் போக்கவும், மருத்துவம் செய்தல் வேண்டும். பசித்தீ கேடு அடைவதால், அதைத் தூண்டுவதற்கும், உடல் வன்மை குன்றுவதால், உடல்வன்மையைப் பெருக்குவதற்கும் மருந்து கொடுத்தல் வேண்டும். நோயில் மிகுதியாகத் தோன்றும் வாந்தியைப் போக்கவும் மருந்து கொடுத்தல் வேண்டும்.

மேற்கண்ட குற்றங்களைக் களைய, வெப்பமுண்டாக்கி, கோழை அகற்றி, பசித் தீத்தூண்டி ஆகிய செய்கைகளை உடைய மருந்துகளை முறைப்படி வழங்குதல் வேண்டும்.

மிகுந்துள்ள கோழையை அகற்றி, இசிவைப் போக்க மாந்த எண்ணெய், தூதுவளை நெய், கக்குவான் லேகியம், கஸ்தூரி மாத்திரை கோரோசனை மாத்திரை ஆகிய மருந்துகளை நோயின்தன்மை, நோயாளியின் வன்மை மென்மையறிந்து வழங்கலாம்.

முதலைக் கண்டத்தைச் சுட்டு சாம்பலாக்கி தேனில் கொடுக்கவும்.

பழைய மாட்டுத்தோல் கருக்கிய தூளுடன் தேன்கலந்து தக்க அளவு வழங்கலாம்.

முள் எலியைச் சுட்டு சாம்பலாக்கி தக்க அளவு தேனில் கொடுக்கவும்.

தோல் ஊறல் குடிநீரைத் தக்க அளவு கொடுக்கலாம்.

அண்டத் தைலத்தை உள்ளுக்கு 5-10 மி.லி. அளவு கொடுக்கலாம்.

சாறு:- 1

கலியாண முருக்கிலை 35 கி. கருஞ்சீரகம் 4 கி. எடுத்து இரண்டையும் நன்றாக நசுக்கிச் சாறுப்பிழிந்து கொள்க. அதில் 4 அல்லது 2 கி. எடுத்து 135 மி.கி. கோரோசனையைச் சேர்த்துக் குடிக்க கொடுக்க வேண்டும். இவ்வாறு காலை, மாலை குடிக்க கக்குவான் நீங்கும்.

சாறு:- 2

ஒரு வருடம் சென்ற மிளகாய்ச் செடியிலைச்சாறு 5 கி. எடுத்துக் கொள்க. கறியுப்பை 130 மி.கி. எடுத்து மேற்படி சாற்றில் கரைத்து காலையில் ஒருவேளை மட்டும் கொடுத்துவர இந்நோய் நீங்கும்.

சாறு:- 3

இலுப்பைக்கட்டியைத் தேவையான அளவு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து உருட்டிக் கொள்க. சிறு பானையில் துணிகட்டி அதன் மேல் வைத்து பிட்டவியல் முறையில் வேகவைத்து பிழிந்து அத் தண்ணீரைப் புகட்டவும். கக்குவானில் வரும் தொண்டைக் கட்டு கோழை நீங்கி கக்குவான் நலமாகும்.

பானம்:-

தவனமென்னும் மருக்கொழுந்தை இடித்துப் பிழிந்த சாறு 4 கி., தேன் 4 கி. எடுத்து இரண்டையும் கலந்து கொடுக்க வேண்டும். இவ்வாறு பகலில் 3 முறையும் இரவில் இரண்டொரு முறையும் பயன்படுத்திவர கக்குவான் நோய் குணமாகும்.

கற்கம்:- 1

குட்டிவிளா, களிபாக்கு நெய்க்கொட்டான் பழம் (பூவந்தி) ஆகிய இவற்றைச் சமஅளவெடுத்து வெந்நீரிலரைத்துக் கொடுக்க கக்குவான் 7 நாளில் தீரும்.

கற்கம்:- 2

சிகைக்காய், நாயுருவியிலை, மஞ்சள் மூன்றையுமரைத்து பழந் தண்ணிரீல் (நீராகாரம்) கலந்து கொடுக்க கக்குவான் நிற்கும்.

கற்கம்:- 3

செம்முள்ளி, தூதுவளை, துளசி, திப்பிலி, மிளகு இவற்றுடன் துளசியிலைச்சாறு சேர்த்தரைத்து மூன்று நாள் கொடுக்கவும். கக்குவான் குறையும்.

கற்கம்:- 4

வட்டக்கிலுகிலுப்பை வேர், அகத்திப் பழுப்பு இவையிரண்டை யும் அரைத்து பழந்தண்ணீரில் (நீராகாரம்) கலக்கிக் கொடுக்க கக்குவான் தீரும்.

கற்கம்:- 5

முடக்கறுத்தானிலையை எடுத்து 675 மிலி. பசுவின் பாலில் ஊற வைத்து வைக்க. ஒரு கொட்டைப் பூண்டின் முளையை எடுத்துப் போட்டு சேர்த்தரைத்து மூன்று நாள் கொடுக்க கக்குவான் தீரும்.

சூரணம்:- 1

மயிலிறகைச் சாம்பலாக்கிக் கொள்க. மிளகைச் சாம்பலாக்கிக் கொள்க. இரண்டையும் நன்கு பொடித்துச் சமஅளவு எடுக்க. தேவையான அளவு பசுவின் நெய் எடுத்து அதில் கலந்து கழற்சிக்காயளவு கொடுக்க கக்குவான் தீரும்.

பிட்டு:-

இலுப்பைக் கட்டியை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து உருட்டி சிறுபானையில் துணிகட்டி அதன்மேல் பிட்டாக வேகவைத்து பிழிந்து அந்தத் தண்ணீரைப் புகட்டவும். தொண்டை கட்டும் அளவுக்குள்ள கோழையை நீக்கும். கக்குவான் மீளும்.

(ஆடாதோடை) மணப்பாகு:-

ஆடாதோடையிலைச்சாறு 105 கி. கருந்துளசிச்சாறு 70 கி. கண்டங்கத்திரி சமூலச்சாறு 45 கி. நல்ல கெட்டித்தேன் 245 கி. மேல் தோல் சீவின சுக்கு, அரிசித்திப்பிலி, மஞ்சள், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிக்காய்த் தோல், இலவங்கம், இலவங்கப் பட்டை, ஏலம், சித்தரத்தை, பேரரத்தை, அதிமதுரம், தாளிச பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி ஆகிய இவற்றைத் தனித்தனியாக இடித்து துணியில் வடிகட்டிச் செய்த சூரணம் வகைக்கு 2 கி. எடுக்க.

மேற்சொன்ன தேனையும் சாறுவகைகளையும் ஒன்றாகச் சேர்த்து, ஒரு சிறிய புது சட்டியிற்போட்டு மேற்படி சூரணங்களைச் சேர்க்க. அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துப் பாகு பதத்தில் இறக்கிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்துக.

2 கி. அளவு எடுத்து பகலில் 3 முறையும் இரவில் 3 முறையும் உபயோகித்து வர வேண்டும். இவ்வாறு செய்தால் கக்குவான் நோயினால் வரும் தொல்லைகள் குறைந்து போகும்.

நெய்:- 1

தூதுவளைச் சமூலத்தை இடித்துப் பிழிந்த சாறு, வல்லாரைச்சாறு, பசுவின் நெய் இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்துக் கொள்க. கோட்டம், சிறுதேக்கு, அரிசித் திப்பிலி, கற்கடகசிங்கி, மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, கண்டதிப்பிலி ஆகிய இவற்றை தனித்தனியாக எடுத்துப்

பொடியாக்கி 4 கி. எடுத்துக் கொள்க. வெள்ளைப்பூண்டிதழ் 4 கி. எடுக்க.

மேற்கண்ட நெய்யையும் சாறுகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்க. மேற்குறிப்பிட்ட சூரணங்களையும் பூண்டையும் அம்மியில் வைத்து சிறிது தண்ணீர் வார்த்து வெண்ணெய் போலரைத்துக் கொள்க. அவ்விழுதை நெய்யிற் கலக்கி அடுப்பேற்றி சிறுதீயாக எரித்துக் கொள்க. அதனைக் கடுகுத்திரள் பதத்தில் இறக்கி வடிகட்டிப் பத்திரப்படுத்திக் கொள்க. 4 கி. - 12கி. அளவு குழந்தைகளுக்கு பகலில் இருவேளையும், மூன்று வேளையுமாகவும் இரவில் இரண் டொரு முறையும் கொடுக்க கக்குவான் நன்றாம்.

நெய்:- 2

ஆடாதோடைச் சாறு, தூதுளம் பழச்சாறு, பசுநெய் இவற்றை வகைக்கு 675 மி.லி. ஈத்தின்னி வௌவால் 10, கற்கடக சிங்கி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இந்துப்பு, சிறுதேக்கு இவை ஒவ்வொன்றும் வகைக்கு 4.4 கி. எடுத்து கண்டங்கத் திரி வேரோடு சேர்த்துக் காய்ச்சி மேற்சொன்ன சாறுவிட்டு அரைத்து நெய்யுடன் கலந்து காய்ச்சி வடித்து தினமும் இரண்டுவேளை கொடுக்க கக்குவான் தீரும்.

நெய்:- 3

தூதுவளைச் சாறு 675 மி.கி. பசுவின் நெய் 335 மிலி. கோஷ்டச் சூரணம் 45 கி. எடுத்துக் கொண்டு இவையெல்லாவற்றையும் சேர்த்துக் காய்ச்சி கடுகுத்திரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க. அந்நெய்யில் 1 கி. முதல் 2 கி. வரையில் காலை, மாலை இருவேளை யும் கொடுத்து வர கக்குவான் நோய் நீங்கிவிடும்.

பசுநெய், தூதுவளைச்சாறு இரண்டும் 1.3 லி. என்றும் இரண்டும் சமவெடை என்றும் கோட்டம் 4 கி. என்றும் கருத்து வேறுபாடுகளுள.

நெய்:- 4

தூதுளம்பழத்தின் பட்டை, உள்ளி வகைக்கு 17 1/2 கி. தேற்றாம் பட்டை, கருஞ்சீரகம், ஓமம், கஸ்தூரி மஞ்சள் இவற்றை வகைக்கு 8.8 கி. வசம்பு 4.4 கி. எடுத்துக் கொண்டு ஒன்று சேர்த்து தண்ணீர்

விட்டரைத்துக் கொள்க. விழுதானவுடன் அதை மோர் போலக் கலக்கிக் கொள்க. அதனை 675 மி.லி. பசு நெய்யில் சேர்த்துக் காய்ச்சி பக்குவமான பதத்தில் வடித்து வைத்துக் கொள்க. அதை 16 மி.லி. அளவு கொடுக்க வேண்டும். புளிப்பு கைப்பு சுவையுள்ளவற்றைத் தவிர்த்து பத்தியமாக இருக்க வேண்டும்.

இரசாயணம்:-

கண்டங்கத்திரி, கருந்துளசி, ஆடாதோடை இவற்றின் சாறுகள், தேன் இவற்றை முறையே 44 கி. 88 கி. 132 கி. 264 கி. என்ற அளவில் எடுத்துக் கொள்க. சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலம் சிற்றரத்தை, பேரரத்தை அதிமதுரம் சாதிக்காய், தாளிசபத்திரி, சாதிபத் திரி இவற்றை வகைக்கு 2 கி. எடுக்க. சாறுகளையும் தேனையும் மட்கலத்திலிட்டு சரக்குகளைத் தனித்தனியே பொடித்து சேர்த்து பக்குவத்தில் எரித்து மெதுவாகத் துழாவி விரல் அழுந்தும் பாகு பதத்தில் இறக்கிப் பத்திரப்படுத்தவும். 100-300 மி.கி. அளவெடுத்து விரலில் தோய்த்து நாக்கில் தடவ வேண்டும். இவ்வாறு தினம் ஆறுவேளையாக கொடுத்து வர கக்குவான் சரியாகும்.

எண்ணெய்:-

கொன்றைப்பட்டை, ஆவாரம் பட்டை, தூதுவளைவேர், கொடிக் கள்ளிவேர் இவற்றை வகைக்கு 10 கி. ஈத்தின்னி வௌவால் 1, மண்புழு 10 கி. சேர்த்தெடுத்து நல்லெண்ணெயில் எரித்து 4.4 கி. கொடுக்க ஏழு நாளில் கக்குவான் குணமாகும்.

(ஆமையோட்டுப்) பற்பம்:-

ஆமையோடு 35 கி. பூநாகம் 280 கி. எடுத்து கொள்க. பூநாகத்தைப் புளித்த மோரில் போட்டு 2 மணி நேரம் மூடி வைத்திருந்து பிறகு அதனை எடுத்து தண்ணீர் விட்டு நான்கைந்து முறை நன்கு அலசியெடுக்க அதிலுள்ள மண் வெளிப்பட்டு தூய்மைய டையும். பிறகு அம்மியில் வைத்து அரைத்து இரண்டு அடையாகச் செய்து கொள்க. அதிலொன்றை ஓட்டின் மீது வைத்து அதன் மீது ஓட்டைக் காலணா அகலமுள்ள துண்டுகளாகத் துண்டித்து வைக்க, அதன்மீது மற்றொரு அடையையும் வைத்து செம்மையாக அழுத்திப்

பொருத்தி மேலோடு மூடி மூன்று சீலை மண் செய்து கொள்க. 350 கி. அளவுள்ள இருபது வரட்டியிற் புடமிட்டுக் குளிர்ந்தபின் எடுக்க வேண்டும். மேல் வைத்த ஓடுகள் வெண்மையான பற்பமாயிருக்கும். அதனை எடுத்து கல்வத்தில் பொடித்து துணியில் வடிகட்டி சீசாவில் பத்திரப்படுத்த வேண்டும். அவ்வோடானது சுத்தமான வெண்மையா காமல் கருப்பாயிருந்தால் மேற்கூறினபடி மறுபடி புடமிட்டுக் கொள்ள சுத்தமான பற்பமாகிவிடும்.

இம்பூரல்வேர், தும்பை வேர், வெள்ளைச் சாரணவேர், கழற்சி வேர், கருந்துளசியிலை, தூதுவளையிலை, அழிஞ்சில் வேர், வட்டக் கிலுகிலுப்பை வேர், தேள்கொடுக்கியிலை ஆகிய இவ்வேர்களையும் இலைகளையும் வகைக்கு 4 கி. எடுக்க. வேர்களைச் சிதைத்தும் மற்ற இலைகளைச் சிதைக்காமலும் சேர்த்து 165 மி.லி. தண்ணீர் விட்டு மூன்றிலொன்றாகக் சுருக்கி வடிகட்டி வைத்துக் கொள்க. இக்குடிநீரில் மேற்சொன்ன பற்பத்தை வயதிற்கேற்றபடி 270 மி.கி. முதல் 1 கி. வரை ஏற்றவாறெடுத்து கரைத்து இரண்டு அல்லது மூன்று வேளையா கக் கொடுக்க கக்குவானால் ஏற்படும் தொல்லைகள் குறைந்து 96 நாளும் சென்ற பிறகு இந்நோயும் நீங்கிவிடும்.

மருந்து:- 1

முட்டையின் வெண்கரு, இதற்குச் சமமாக சிற்றாமணக்கெண் ணெய் ஆகிய இவ்விரண்டையும் கலந்து காலையில் ஒரு வேளை குடிக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு காலையில் ஒரு வேளை மட்டும் 5 அல்லது 7 நாட்கள் உபயோகித்து வர கக்குவான் நீங்கிவிடும்.

மருந்து:- 2

வெளவால், வெள்ளெலி, புலியின் உப்புக்கண்டம், அதன் தோல் நத்தைச் சதை இவற்றுள் ஒன்றைப் பசுவின் நெய்யில் வேக வைத்துக் கழற்சிக்காய் அளவு கொடுக்க கக்குவான் தீரும்.

மருந்து:- 3

உப்பை அரைத்து ஊமத்தங்காய்க்குள் திணித்து சீலை மண் செய்து புடம்போட்டு எடுத்து அரைத்து 32 மி.கி. அளவு எடுத்து சிமிளில் வைத்து தேனில் குழைத்து கொடுக்கவும். கக்குவான் தீரும்.

மருந்து:- 4

பிரண்டை, தூதுவளை, கண்டங்கத்திரி, முள்ளி, புளியடலை, நறளை இவற்றின் பழங்கள், வெருகங்கிழங்கு இலை, சிற்றரத்தை, பேரரத்தை, கடுக்காய், பூதகரப்பான் பட்டை, விளாவரிசி இவற்றை வகைக்கு 4 கி. எடுக்க. பசுவின் நெய் 325 மி.லி. எடுக்க. பழங்களை பிசைந்து கடைச்சரக்குகளைத்தூள் செய்து போட்டு சூரியபுடம் (வெயி லில்) வைத்துக் கொண்டு வேளைக்கு 2.2 கி. அளவு கொடுக்க கக்குவான் குறையும்.

மருந்து:- 5

ஊமத்தங்காயைத் துளைத்து விதையை நீக்கி உப்பைத் திணித்து சீலைமண் செய்து புடமிட்டு எடுத்து கடுக்காய்த்தூள் 4.4 கி. சேர்த்து அளவறிந்து கொடுக்க கக்குவான் தீரும்.

மலைவாழ் மக்கள், பழங்குடியினர் பயன்படுத்தும் மருந்துகள்:-

கோரோசனம்	கோழி சூப்பு
கஸ்தூரி	கோழி முட்டை
புனுகு	மான் கொழுப்பு
சோளச்சக்கை	முதலைக் கண்டம்
தூதுவளை	கெளுத்தி மீன்
ஆடாதோடை	முள் எலி
துளசி	நண்டு
கொள்ளு	அம்மான் பச்சரிசி
தாளிசாதி	நஞ்சறுப்பான்
தாளிசபத்திரி	எருக்கன் பூ
சிற்றரத்தை	புங்கு
திப்பிலி	உருத்திராட்சன்
அதிமதுரம்	இண்டு
கண்டங்கத்திரி	மிளகு
தும்பை	சுக்கு
நொச்சி	பூண்டு
கரிசாலை	வெங்காயம்
மான் கொம்பு	முசுமுசுக்கை
ஆமை	உத்தாமணி
பழையதோல்	வட்டக் கிலுகிலுப்பை வேர்

திப்பிலி மூலம்
அகத்திப் பழுப்பு
குரோசாணி ஓமம்
நாயுருவி இலை
இலுப்பைக் கட்டி
இம்பூரல் வேர்
வெள்ளைச்சாரணை வேர்
பச்சைக் கர்ப்பூரம்
வெள்ளி
தங்கம்
முத்து
பவளம்
தாளகம்
வேப்பெண்ணெய்
தேன்

லிங்கம்
குங்குமப்பூ மாத்திரை
கருநாபி மாத்திரை
கிராம்பு மாத்திரை

குப்பை மேனி
பூநாகம்
மயிலிறகு
இலைக்கள்ளி
ஊமத்தங்காய்
கற்பூரவள்ளி
ஓமவள்ளி
வசம்பு
தாளிசாதி வடகம்
காப்பிக்கொட்டை

சோளம்:-

சோளக்கதிரில் உள்ள விதையை எடுத்தபின், உள்ள சக்கையி லையை எரித்த சாம்பலுடன், சோற்றுப்பு கலந்து கொடுத்தால், இருமல் கோழைக்கட்டு, கக்குவான் முதலியன தீரும்.

தவனம்:-

கக்கிருமல் காசம் கனத்த சூலையோடு
மிக்க எழுமந்தம் வீக்கமிவை-மக்கட்கு
தீதே பிரிந்திடினும் சீர் மேவும் நற்றவனம்
மாதே யொழிக்குமவர் மாட்டு

இதன் இலையைக் கசக்கிபிழிந்தெடுத்த சாற்றில் வேளைக்கு 15 துளி அளவு வயதிற்கு ஏற்றவாறு தாய்ப்பாலில் கலக்கித் தினம் 2,3 வேளை குழந்தைகட்கு கொடுத்து வர கக்குவான் இருமலைக் குணப்ப டுத்தும். இதன் இலையை வதக்கி நோயுள்ள இடத்தில் ஒற்றடமிடலாம்.

தவசு முருங்கையிலை:-

இதன் இலைச்சாற்றை வேளைக்கு 15 மி.லி. வீதம் தினம் இருவேளை கொடுக்க, குத்திருமல் தீரும்.

தவசு முருங்கைத் தழையதற்குக் கேளா
வசியம் பீசைமுள் நாக்கு மூவசர்க்கியை
அஞ்சு வாசகப மண்டாது குற்றிருமல்
வையேகம் விட்டேகும் வழுத்து.

வலம்புரிக்காய்:-

பூதபைசாசம், பொருக்கொளு நேத்திரஞ்சேர்
கீதமிகு செவிநோய் கேவல் விக்க-லோதுகுளிர்த்
தோடமோடு மேகங்கூன் சொன்னவையெலா நடுங்கி
யோட வலம்புரியை யுண்

இதன் வேர்ப்பட்டைச் சூரணத்துடன் சமஅளவு சர்க்கரை சேர்த்துக் கொடுக்க இருமலின் தீவிரத்தால் நின்ற கேவல் தீரும்.

நஞ்சறுப்பான் இலை:-

வேளைக்கு 3,4 இலைகளைச் சாறெடுத்து பிழிந்து கக்குவான் இருமலுக்கு கொடுக்க, கபத்தை இளகச் செய்து இருமலைச் சாந்தப்ப டுத்தும்.

கருந்துளசி:-

இதன் இலையால் இருமலால் வரும் கேவல், மார்புச்சளி, சுரம், காசம், தொண்டைக்குள் குருகுரு என்னும் ஒலி இரைப்பு தீரும்.

காப்பிக் கொட்டை:-

காப்பியினால் கக்கிருமல், இரைப்பு இருமல் தீரும்.

கற்பூரம்:-

இதனை 100 மி.கி. அளவெடுத்து முட்டை வெண்கருவில் கலந்து கொடுக்க கக்குவான் தீரும்.

புலிக் கொழுப்பு:-

கக்குவான் நோயில் விடா இருமலைத் தணிக்க மிகுந்த கவனத்து டன் சிறிது கொழுப்புப் புகையை குழந்தையின் அருகே காட்டவும்.

நவீன மருத்துவத்தில் கக்குவானின் விளக்கமும் நிலைகளும் அதனால் வரும் துன்பங்களும் கீழ்கண்டவாறு குறிக்கப்பட்டுள்ளன.

ஆங்கில முறை மருத்துவம்

கக்குவான்:- (Whooping Cough)

கக்குவான் (Petusis) ஒரு தொற்று நோயாகும். (Highly infectious) இது போட்டெடெல்லா பெர்டுசிஸ் (Bordctella) கிருமியால் குழந்தைக

ளைத் தாக்குகின்றது. கிருமி (Bactoria) தாக்கிய (தொற்றிய)வுடன் 7 லிருந்து 14 நாட்களுக்குள் நோயையுண்டாக்கி முழுமையடையச் செய்யும். இந்நோய் பெரும்பாலும் (90%) ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளையே தொற்றிக் கொண்டு பாதிக்கிறது.

கக்குவானின் மூன்று நிலைகள்:-

நோய் தொற்றும் காலம், திடீர் இருமல் உண்டாகுங்காலம், நோயிலிலிருந்து குணமடையுங் காலம் என்னும் மூன்று நிலைகள் உள்ளன. அவற்றை நோக்குவோம்.

தொற்றும் காலம்:- (Infectious stage)

முதல்நிலையில், மேல் சுவாசப்பாதை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும். அப்பகுதியில் சுரத்தல் அதிகமாயிருக்கும். இக்காலக்கட்டத்தில் கண் சிவப்பாகும், மூக்கில் நீரொழுகும். இருமல் இருக்கும். ஆனால் சளி வெளிவராது. இக்கட்டத்தில் இந்நோயைக் கண்டறிவது கடினம். இந்நோய்க்கிருமியை, சுவாசப்பாதையினின்றெடுக்கப்படும் சுரத்தலினைப் பரிசோதனை செய்வதன் வாயிலாக அறியலாம்.

திடீர் இருமல் உருவாகும் காலம்:-
(Paroxysmal Cough)

இந்நிலையில் இருமல் ஆரம்பமாகிவிடும். இருமல் அதிக சக்தி வாய்ந்ததாகவும் 5 அல்லது 10 நிமிடம் தொடர்ந்து இருக்கும். ஒரு நாளைக்கு 40 லிருந்து 50 முறை குழந்தை இருமி விடும். ஒவ்வொரு முறை இருமும் போதும் குழந்தை மிகவும் துன்பப்படும். இந்நிலையில் மேல் சுவாசப்பாதையில் தடை இறுக்கம் அதிகமாகும். அடைப்பும் (Spasm) ஏற்பட்டிருக்கும். எனவே தான் இருமல் அதிகமாக இருக்கும். இருமல் முதலில் சிறிது நேரம் இருப்பதாக அமைந்து பிறகு நீண்ட நேரம் உள்ளதாக அமையும். அந்நேரத்தில் உள்மூச்சு (மூச்சை உள்ளிழுப்பது) (Inspiration) நடைபெறும். இவ்வாறு இருமல் நீளும் போது 'கேவல்' அதாவது இந்நோய்க்குரிய கக்குவான் சத்தம் (Whoop) கேட்கும். இந்நிலையானது பல வாரங்கள் நீடிக்கும்.

நோயினின்று குணமடையுங்காலம்:-

(Stage of Convalescence)

இக்காலக்கட்டத்தில் இருமல் குறையும். கபம் எளிதில் வெளியேறும்

கக்குவானால் உண்டாகும் துன்பங்கள்:-

சளி அதிகமாக சேர்ந்து சுவாசப்பாதை அடைப்பட்டு நுரையீர லும், பாதிப்புக்குள்ளாகும் வாய்ப்புள்ளதால் 'நிமோனியா' (Pneumonia) நோய் ஏற்படலாம். குழந்தை இருமும் போது கண்ணறைச் சுவரின் அறைபாதிக்கப்படுகிறது. அதனால் நுரையீரல் கண்ணறையிலுள்ள சளி வெளிவருவதற்குப் பதிலாக ஒரு அறைக்குப் பக்கத்திலுள்ள மற்றொரு அறைக்குச் செல்லுகிறது. கண்ணறைகள் அழற்சியுறுகின்றன. சளி வெளிவர முடியாது. கண்ணறைகள் முழுவதுமாக சளி அதிகமாகி அடைத்துக் கொள்கிறது. நுரையீரல் இவ்வாறு சளியால் பாதிக்கப்படுகி றது.

மூச்சுப்பாதையில் சுரத்தல் அதிகமாதலால், சளி அதிகமாதலால் அடிக்கடி இருமல் ஏற்படுவதால் இருமி சளி வெளிவரும் நிலையில் மூச்சுப்பாதை அழற்சியுறுகிறது. மூச்சுப்பாதையிலுள்ள தந்துகிகள் பாதிக்கப்படுகின்றன. எனவே மூச்சுப்பாதை அகலமாகும் நிலை உருவா கிறது. (Bronchiactasis)

'கக்குவான்' நோய் அதிகமாகும் போது இரும்லும் அதிக ஒலியுடன் அதிக நேரம் நீடிக்கும். அப்போது கழுத்திலும் அதற்கு மேலுள்ள நரம்புகளும் இறுக்கமடையும். எனவே மூளையிலுள்ள நரம்புகளில், உடம்பில் வலிப்பையுண்டாக்கும். நரம்புப் பகுதி பாதிக் கப்பட்டு பழுதடைந்துவிடும். அப்போது நரம்பு பலவீனமடைந்து அதன் செயலிழந்து வலிப்பு வரும்.

கக்குவானில் இருமல் அதிகமாகி கண்ணிற்கருகாமையிலுள்ள நரம்புகளை அழற்சிக்குள்ளாக்கும்; கண்ணிற்குள்ளிருக்கும் தந்து கிகளைப் பாதித்து வெடிப்படையச் செய்யும். அதனால் இரத்தம் கசியும். இதற்கு ஆங்கிலத்தில் (Sub Conjunctival Haemorrhage என்று பெயர்.

கக்குவான் நோயில் இருமல் அதிகமாக இருக்கும். அப்போது தசைகள் இறுக்கமடையும். உதரவிதானம் மேல்நோக்கித் தள்ளப்படும். வயிற்றுத்தசைகளும் வயிற்றில் அனைத்துப் பகுதிகளும் மேல்நோக்கி இழுக்கப்படும். ஆசனப்பகுதிகள் மேலுக்கு எழும்பும். ஆசன வாய்த்த சைகள் இறுக்கமடையும். எனவே மலமானது வெளிவரும் போது இறுக்கத்துடன் இருக்கும் தசையைக் கிழித்து இரத்தத்துடன் வெளிவரும்.

தொண்டை அடைப்பான்:- (Diphtheria)

கார்னி பேக்டீரியம் டிப்தீரியா என்ற கிருமியால் (Bacteria) மேல் சுவாசப்பாதை பாதிக்கப்படுகிறது. அதனால் புண் ஏற்படுகிறது. இது தொற்றும் தன்மையுடையது. இந்த பேக்டீரியா தொற்றிய இடத்தி லேயே இருக்கிறது. இவை ஒரு வகை விஷத்தை (Exotoxion) உற்பத்தி செய்கிறது. இவ்விஷம் இருதயத்தசையையும் நரம்பு மண்டலத்தையும் பாதிக்கிறது. நோயுண்டாக 2 விருந்து 4 நாட்கள் பிடிக்கும். நோயாளி கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

நோயின் குறிகுணங்கள்:-

நோய் வருவது தெரியாமல் வரும். காய்ச்சல் அதிகமாக இருக் கும். இதயத்துடிப்பு அதிகரிக்கும். தொண்டையைச் சுற்றி தோல் போன்ற ஒரு மெல்லிய (Tansil) இதழுமுண்டாகும். இது நன்றாக ஒட்டி கொண்டும் வரையறுக்கப்பட்ட முடிவுடையதாகவும் அமையும். உடலில் எதிர்ப்பு சக்தி அதிகமாயிருப்பின் இத்தோல் உருவாகாது. நீர் முடிச்சுகள் பெரியதாக இருக்கும். கழுத்து வீங்கி விடும். மூக்கிலி ருந்து இரத்தம் கலந்த சுரத்தல் வரும். தொண்டை அடைப்பானில் குரல் மெதுவாக இருக்கும். இருமல் அதிக சக்தியுள்ளதாக அமையும். சில சமயத்தில் திடீரென்று மூச்சு முழுமையும் அடைபட்டு விடும். நாடித்துடிப்பு மிகுதியாகவும், இரத்த அழுத்தம் குறைவாகவும் இருக் கும். இதயக் கோளாறுகள் ஏற்படும். இரத்த அழுத்தம் குறைவாக இருப்பதால் சில சமயங்களில் இரத்த ஓட்டம் (Circulatory Failure) தோல்வியடைந்து விடும். அதனால் இறக்க நேரிடும்.

நரம்பு மண்டலக் கோளாறுகள்:-

தொண்டையிலுள்ள 'பேல்ட்' (Palate) பாதிக்கப்பட்டு அது இயங்காத நிலை (Palate Palsy) ஏற்படும். கை கால்களில் உணர்ச்சி யற்றுப் போதல், இயக்கம் குறைந்து போகும்.

கக்குவான் - பாடல்

நோய் வருவழி:-

சேரும்காய் கனி செய்பழஞ் சோறுபால்
மோருடன் தயிர் மொய்புளிப் புண்டியால்
சாருமே பல நீரின் ஸ்நானத்தால்
காரும் கோழையின் கக்குவான் என்பதே.

குறிகுணம்:-

கொக்கரித்துத் தும்பிக் கிளர்ந்திருமல் உண்டாகும்
கொக்கரித்துப் பற்கடித்துக் கோழைகப மேயிறங்கி
வக்கரித்தங் காண்பெண்ணு மற்கட்டி விட்டாற்போல்.
நக்கரித்து நாணு நவில்கக்கு வானதுவே

(477-368) (476-166)

குறிகுணம்:-

வார்செறி விலாவில் மார்பில் வந்திடும் கோழைநெஞ்சில்
சாரவே செனிப்புண்டாகிச் சளியொடு புகைச்சலுண்டாம்
மூரவே இருமலு மடரி உண்டிடும் சோரும் கக்கும்
காரவாய் இளக்கும் மேனி கக்குவான் குணமிதாமே

(சரபேந்திரர் வைத்திய முறைகள் பக்.39)

கற்கம்:-

குட்டிவிளா களிப்பாக்கு கூறு நெய்க்கொட்
டான் பழகும் கொடு வெந்நீரில்
அட்டுணசேம் மூப்பிறை கண்டு எழும் கக்கு
வான் ஏழுநாளில் போம் என்றும்

(சர.வை. முறைகள் ப.99)

நெய்:- 3

தூதுவே ளைதான் துவைத்துமே சாறு கொண்டு
கோதில் படிநெய்யும் கோட்டமொடு - மாதே நீ
கூட்டி யெரித்தருந்தக் கோரகக்கு வானதுவும்
தாட்டியின்றி யோடிவிடுந் தான்.

(477-368) (476-166)

இளைப்பு நோய்

வேறு பெயர்:-

ஈளை, கபநோய், அரச நோய், க்ஷயம், ராஜ்யஷ்மா, யஷ்மா, சூசாஷை என்பன.

உடல் இளைத்துக் கொண்டே வருவதால் இதற்கு இளைப்பு நோய் என்றும் இந்நோயில் ஈளை (கோழை) பெரிதும் வெளியாவதால் ஈளை நோயென்றும் இந்நோய்க்குத் துணையாகப் பல்வேறு நோய்கள் தொடருவதால் அரசு நோயெனவும் இதற்குப் பல பெயர்கள் உண்டா யின.

இயல்:

மாலைப் பொழுதில் சுரம் காய்ந்து உடற்கட்டுகளில் ஒன்றன் பின் ஒன்றாக வன்மை குறைந்து ஊக்கம் இழந்து உடலின் பலம் குறைந்து விடும்.

நோய் வரும் வழி:-

அடிக்கடி பட்டினி இருத்தல், இரவில் விழித்தல், அதிக உழைப்பு, உடலிற்கு ஊட்டமில்லாத உணவையே சாப்பிடுதல், காற்று வசதியில் லாத வீட்டில் வசித்தல், மிகுந்த வறுமை ஆகிய பல காரணங்களால் இந்நோய் வரும். மேலும் ''கிருமியால் வந்த தோடம் பெருக உண்டு'' என்று சித்தர் பாடல்களில் கூறப்படுவதால் கிருமியால் இந்த நோய் வரவும் வாய்ப்பு உண்டு.

குறிகுணங்கள்:-

உண்ணும் பொருள் எவற்றிலும் விருப்பமின்மை, பசியின்மை, மந்தம், உடல் வெளுத்தல், கால்வீக்கம், உடம்பு வீக்கம் ஆகிய குறிகுணங்களுடன் உடல் நடுங்கல், உடலை மீண்டும் மீண்டும் பார்த்தல், குளம், குட்டை, ஆறு இவை வற்றியிருத்தல் போலவும், கொடிய புள் வகைகள் துன்புறுத்துவது போலவும் கோள்கள், மலை கள், காடுகள் அழிந்து வீழ்தல் போலவும் கனவு காணல், நகம், மயிர் அதிகமாக வளர்தல் போன்றவை இந்நோயின் குறிகுணங்கள். உடலை மெலியச் செய்து இறுதியில் ஐயம் பெருகி குரல் கம்மல், மூக்கில்

நீர் பாய்தல், இருமல், கோழை கக்கல், பக்கசூலை, இரவில் மிகுதியாக வியர்வை காணல், கண் பஞ்சடைதல், காது கேளாமை, மிகுந்த கழிச்சல், வாந்தி ஆகிய குறிகுணங்களைக் காட்டும்.

நோயின் வகைகள்:-

தசவாயுக்களில் நான்கு கேடடைவதனால் எவ்வுறுப்புகளையும் பற்றுமாகலின் இந்நான்கின் அளவாக நான்கும் உறுப்பு அளவாக (கீல்கள்) ஒன்றும் ஆ,க ஐந்து வகைப்படும். குற்றவளவாக (தோட) நான்கென வகுப்பர் பன்னிரெண்டென வகுப்பர்.

1. மார்புக்கும் கழுத்துக்கும் இடையில் உள்ள பகுதியில் வரும் நோய்:-

மூக்கு, கழுத்து, தொண்டை, மார்பு போன்ற உடலின் மேல் பாகங்களுக்குரிய குற்றம், பித்தமும் கபமும் கேடடைந்து கால்களில் மேல் நோக்குங்கால் (உதான வாயு) தன்னிலை பிறழ்ந்து வரும் நோயாகும்.

2. உந்திக்கு கீழ்பாகங்களில் (அடி வயிறு) வரும் நோய்:-

உந்திக்கு கீழ் உள்ள உறுப்பு கீழ் நோக்குங்கால் வாழுமிடத்து வரும் நோய்.

3. மேல் வயிற்று பகுதிகளில் வரும் நோய்:-

மார்பின் கீழும் உந்திக்கு மேலும் உள்ள இடத்து வரும் நடுக்காலின் (சமான வாயுவின்) செயலிடமாகிய வயிற்றில் வரும் நோய்.

4. உடல் முழுவதும் வரும் நோய்:-

பரவுகால் (வியானன்) உலாவும் இடங்களில் தன் செயலால் பக்கசூலையைப் போன்ற குத்தல் நோய்களும் தோலைப் பற்றிய கழலைகளும் பிறக்கும்.

5. மூட்டு (அ) கீல்களில் வரும் நோய்:-

கீல் என்புகளில் காணும் நோய்.

6. கழுத்துக்கு மேல் வரும் (காது, மூக்கு, தொண்டை) நோய்கள்:-

அடிக்கடி மூக்கடைப்பு, தும்மல், இருமல் ஆகிய குணங்களைக் காட்டி முக்கில் நீர் பாயும். மூக்கில் நீர் பாய்வது, நீண்ட நாட்கள்

இருந்து பின் அந்தநீர் கடினப்பட்டுச் சளிபோல் ஆகும். சில வேளை சக்கைத் துண்டு போல் விழும். மூக்கு புண்ணாகும். பிற புண் போல் சிவந்திராது வெளுத்திருக்கும். புண்ணைச் சுற்றிக் குழ குழப்பான சீழ் வரும். மற்றும் இளைப்பு நோயில் காணும் பொதுக் குறிகுணங்கள் அனைத்தும் இதில் தொடரும்.

தொண்டையில் வரும் இளைப்பு நோய்:

குரல்வளையில் ஐயம் மிகுந்து குரல் கம்மி நாளுக்கு நாள் உடலை மெலியச் செய்யும். இளைப்பு நோய்க்குரிய பிற குறிகுணங்களும் இதில் தொடரும்.

குரல் வளையின் இரு பக்கங்களிலும் கழலையைப் போன்ற வீக்கத்தை ஏற்படுத்தி புண்ணைத் (சீழ்) தோற்றுவிக்கும். குரல் கம்மல், புண் நாட்பட்டிருத்தல், எம்மருந்திலும் தீராமை ஆகிய குறிகளையும் உண்டாக்கும்.

கழுத்தில் தோன்றும் இளைப்பு நோய்:

கழுத்தைச் சுற்றி சிறு கழலைகள் ஏற்படும் அவை நாளுக்கு நாள் பெருத்து ஒன்றோடொன்று இணைந்து மாலை யைப் போல் தொடுத்துக் கொள்ளும். கழலைகள் பெருத்த பின் திரண்டு கடினப்பட்டு உருண்டை உருண்டையாய்க் காணும். பழுக்கும், சீழ் கசியும். எளிதில் உலராது துன்பத்தைக் கொடுக்கும். உடலை மெலியச் செய்து சுரம், இருமல், கழிச்சல் முதலியவற்றை உண்டாக்கும். இதைக் கண்டமாலை என்பர். இது பெரும்பாலும் சிறுவயதினர்க்கு வரக் கூடிய நோய்.

மார்பில் தோன்றும் இளைப்பு நோய்:-

நுரையீரலில் தோன்றி பின் சிறிது சிறிதாகப் பரவும் நோய் இது. உடல் மெலிவு, உணவில் வெறுப்பு, மூக்கில் நீர் பாய்தல், சிறு அளவில் இருமுதல், சளியும் குருதியும் அதில் வெளிப்படுதல், குரல் கம்மல், மாலைக் காலத்தில் சுரம் காய்தல், மூச்சுத்தடை போன்ற குறிகுணங்கள் இந்நோயில் ஏற்படும்.

சில வேளையில் கடுமையான சுரம் காய்ந்து இருமல், இரைப்பு என்னும் குணங்களோடு தீவிரமாய் இருக்கும். சுரம் காய்வதும் இறங்குவதுமாக நெடுநாள் வரை இருந்து இடைவிடாத இருமலை ஏற்படுத்தி கோழையையும் மிகுந்த அளவில் வெளியேற்றும். சுரமா

னது பகலெல்லாம் காய்ந்து, இரவில் விட்டு மிகவும் வியர்க்கும். காலையில் காய்ச்சல் இருக்காது.

சிலருக்கு மேற்கூறப்பட்ட எக்குறிகுணங்களையும் காட்டாது உடல் மட்டும் மெலிந்து நாளுக்கு நாள் வன்மை குறைந்து இருமலை மட்டும் வெளிப்படுத்தி பின் தீவிரப்படுத்துவதுண்டு.

சிலருக்கு சுரம் காய்ந்து உடல் மெலிவை ஏற்படுத்தி பிற குறி குணங்களையும் காட்டி விடும்.

உந்திக்குக் கீழ் (கீழ் நோக்குங்கால்) வரும் இளைப்புநோய்:-

இளைப்பு நோய்கள் குடலைப் பற்றியும் குடலைச் சார்ந்த உறுப்பு களைப் பற்றியுமுண்டாகும். மார்பைப் பற்றிய இளைப்பு நோயின் குறிகுணங்களோடு அடிக்கடி கழியச் செய்யும். உடல் மிகவும் இளைக் கும். அடி வயிறு பெருக்கும். சிறு வயதினர்க்கு வயிறு பெருத்து முகம் சுருங்கல், உடல் வெளுத்தல், அடிக்கடி சுரம் காய்தலாகிய குணங்களையும் தோற்றுவிக்கும். வயிற்றுத் தோலின் கீழ்ச் சிறு கழலைகளைப் போல் திரளும். நாளுக்கு நாள் வயிறு பெருத்து கழிச்சலையுமுண்டாக்கும். வயிறு வலித்தல், பெரு வயிறுபோல் வயிற்றுள் நீர் கோர்த்தல் ஆகிய குறிகுணங்களைக் காட்டும்.

மார்புக்கு கீழ் உந்திக்கு மேல் வரும் இளைப்பு நோய்:-

இடப்பாட்டீரல், நீர்க்குண்டிக்காய் இவற்றைப் பற்றி வரும் நோய் இது.

இடப்பாட்டீரல் பற்றி வரும்நோயில் இளைப்பு நோய்க் குறிகுணங்க ளோடு இடப்பாட்டீரல் பெருத்துக் கொண்டே வரும்.

குண்டிக்காய் பற்றியதில் நீர்க்குண்டிக்காய் வீங்கி அடிக்கடி நீரிழிதல், நீரில் சீழ் அல்லது குருதி கலந்து இழிதல், நீரிழியும் போது நீர்ப்புழை எரிதல், நீரை அடக்க முடியாமலிருத்தல், முதலிய குறிகுணங்களையும் காட்டி இளைப்பு நோய்க்குறி குணங்களையும் சேர்த்து காட்டும். பின் பக்கத்தில் தாங்க முடியாத வலியையுமுண்டாக்கும்.

பரவுகால் (வியானன்) தூண்டப்படுவதால் வரும் இளைப்புநோய்:-

தோல் பற்றியும் மார்பின் பக்கம் வரும் பக்கசூலையும் இவ்வகை யைச் சார்ந்தது.

தோல்பற்றி வருவன:-

சிறு வயதினருக்குப் பெரும்பாலும் இந்நோய் வரும். மூக்கு, கால்விரல், கை, கால் முதலியவற்றில் படை போல் தோன்றி சிறியதும் பெரியதுமாய் கழலைகள் தோன்றி வளர்ந்து, சுற்றியும் சிவந்து வீங்கி மருளைப் போல் வளர்ந்து புண்ணாகும். அதன் மேல் அடை கட்டிக் கொள்ளும். இவ்வாறாகப் புண்ணாவதும் பக்குக் கட்டிக் கொள்வது மாகவே ஆறாமல் இருந்துவிடும்.

பக்கசூலை நோய்பற்றி வரும் இளைப்பு நோய்:-

பக்கசூலை நோயில் காணும் மூச்சு விட முடியாமை, மூச்சு விடும்போது பக்கத்தின் விலா எலும்பு வலித்தல், குத்தல், சிறு சுரம் காய்தல், படுக்கையில் இருக்க முடியாமை, சிறு இருமல், இருமிக் கோழையைத் துப்ப முடியாமை முதலிய குறிகுணங்கள் தோன்றும். நாள் செல்லச் செல்ல மார்பின் இரு சவ்வுகளினிடையே நீர் கோர்த்து விலா எலும்புகள் தெரியாதபடி வீங்கும். இத்துடன் இளைப்பு நோய் குறிகுணங்களும் இணைந்திருக்கும்.

பக்கசூலையானது இளைப்பு நோய்க்குத் துணையாகவும் வரும். இளைப்பு நோய் முதலில் வரும்போது பக்கத்தில் தாங்க முடியாத வலியைத் தந்து மூச்சு விடமுடியாது பரிதவிக்கச் செய்யும். மனம் திடுக்கிடல், முகம் வெளுத்து நீலமாதல், கைகால் சில்லிட்டுப் பிசுபி சுத்த வியர்வை விடல், மார்பு துடித்தல், நாடி நடை மெலிதல், பேச முடியாமை எனும் குறிகுணங்களையும் காட்டும்.

கீல்களில் வரும் இளைப்புநோய்:-

பெரும்பாலான சிறுவர்க்கு முழங்கால், முழங்கைகளில் வரும் நரித்தலை வாதத்தைப் போல் முட்டிகளில் ஒன்றோ பலவோ வீங்கி வீக்கமாகிக் கொண்டே போகும். வீக்கத்திற்கேற்ப நீர் கோர்த்துக் கொள்ளும். இலேசான சுரம் வரும். உடல் இளைத்துப் போகும்.

இடுப்பின் கீழேயுள்ள இருபட்டை எலும்பும் கால்மேலெலும்பும் கூடும் கிண்ணப்பந்து சந்திலுண்டாகும் நோயில், பெரும்பான்மை மேற்காலின் எலும்புமுட்டி நோய்வாய்ப்பட்டு, அக்குள் தாபிதப்பட்டு, விரைவில் எலும்பை அழுகச் செய்து, காலின் அளவைக் குறுகச் செய்யும். நோயினால் பாதிக்கப்பட்ட கால் மற்றதை விட குறுகிக் காணும். நீட்டவும் மடக்கவும் முடியாதபடி ஆகி உடலை இளைக்கச்

செய்து பிற இளப்பு நோயின் குறிகுணங்களையும் காட்டும். இது மிகுதியாக சிறுவரையே அதிகமாகத் தாக்கும்.

எலும்பைப் பற்றி வரும் இளைப்பு நோய்:-

தலையிலிருந்து கீழ் வரையிலுள்ள முதுகுத் தண்டு எலும்புகளுள் ஏதேனும் ஒரு எலும்பைப் பற்றி நோயுண்டாகும். எலும்பிற்கேற்ப குறிகுணங்களும் வேறுபாடடையும். முதுகுத் தண்டின் உறுப்புகளில் ஏதேனும் சில பகுதிகள் சிதைந்து விடும். சிதைந்த எலும்பின் எடை குறைவதால் முதுகுத் தண்டு வளைந்து காணும். தலையில் தட்டல், அடித்தல் முதலியவற்றின் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட எலும்பு தாங்க முடியாது வலிக்கும். முதுகுத் தண்டு வளையும் போது வலிக்கும். அரையெலும்புகளின் பக்கமுள்ள தண்டெலும்புகளின் நோயில் காலின் வளர்ச்சி குன்றும். அதற்கு மேல் உள்ள இடத்திலுள்ள போது அடி வயிறு, பிட்டம் இவற்றில் வலித்தலும் மார்பின் பின்புறம் உள்ள போது மேல்வயிறு வலித்தலுமுண்டாகும்.

மேலும் முதுகுத்தண்டை குனியவும் நிமிரவும் ஒட்டாதபடிச் செய்யும். நோய் அதிகமாகும் போது முதுகு எலும்புகள் இணைந்து பின் பக்கமாக மேனும் வளைந்து கூனடையும்; அல்லது முன்பக்க மேனும் வலப்பக்கம் மேனும் வளைந்து காணும். கழுத்தினிடத்தில் இருப்பின் தலை நிமிர்ந்து அதற்குத் துணையாகத் தோள் பட்டைகள் அணையச் செய்து தலையைத் திரும்பிப் பார்க்க முடியாதபடிச் செய்யும்.

இந்நோயில் எலும்புகள் அழுகிச் சீழ் அதிகமாயின் அச்சீழ் எலும்புகளின் மெல்லிய சவ்வுகளின் இடையே நுழைந்து நோயுற்ற இடத்திற்கு ஏற்றாற்போன்று வாயின் கீழ், விலாப்புறம், மார்பின் பக்கம், துடையின் இடுக்கு இவற்றில் பாய்ந்து கட்டி போல் தோற்றமுற்று உடைந்து சீழ் வடிவதுமுண்டு.

மருத்துவம்:-

தன்னளவில் மிகுந்த குற்றத்தையும் அதற்குத் துணையாகவுள்ள மற்ற குற்றங்களையும் தன்னிலைப்படுத்துவதற்கான மருந்து வகைகள் மெலியும் உடற்கட்டுகளை வன்மைப்படுத்தி உடற்கு உரம் உண்டாக்குவதற்கான மருந்து வகைகள், வாயுக்களைத் தன்னிலைப்படுத்தும் மருந்துகள், பசித்தீயைத் தூண்டக் கூடியதுமாக மருந்துகள், இவற்றைக் கொண்டு உடலுக்கு உரம் தரும் உணவு வகைகளை உண்ண வேண்டும்.

சாறு:-

ஆவாரை வேரையும் அ[illegible] வேரையும் நறுக்கி நீரில் ஊறவிட்டுக் குடிக்க எலும்புருக்கி குணமாகும்.

சாறு:- 2

செம்பருத்திஇலை, பாலை இலை இவற்றின் சாறுகளைச் சம அளவெடுத்து 'நோயின் வன்மை, மென்மை அறிந்து கொடுக்க தீரும்.

குடிநீர்:- 1

தூதுவளை, பூவன் குறத்தி, ஆடாதோடை, இஞ்சி, வசம்பு, அரத்தை ஆகிய சரக்குகளைச் சமமாக எடுத்து தண்ணீர் விட்டு எட்டொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சிக் கொள்க. ஒரு கைப்பிடியளவு களைந்த உள்ளி, 10 கி. நிலவேர் இவற்றைச் சேர்த்தரைத்து வேப்பெண்ணைய் சேர்த்து சுடர்த்தைலம் செய்து கொண்டு மேற்சொன்ன குடிநீருடன் சேர்த்துக் கொள்க. அதனை நோயின் தன்மை, குழந்தையின் வன்மை அறிந்து கொடுக்க இளைப்பு ஈளை துரைப்பு வலி (இருமலாலுண்டாகும் வலி) நீங்கும்.

குடிநீர்:- 2

முசுமுசுக்கை தூதுவளை, சிறுகாஞ்சி, கண்டங்கத்திரி இவற்றின் வேர்கள், தும்பராட்டகம் என்று அழைக்கப்படுகின்ற உத்திராட்சம் இவற்றைச் சமனெடுத்து குடிநீராய் வைத்து அதில் பவளச் சுண்ணத் தைக் கரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இளைப்பு தீரும்.

குடிநீர்:- 3

வட்டதுத்திவேர், இலவங்கப்பட்டை, கற்கண்டு, கொத்துமல்லி, இவற்றைச் சமமாக எடுத்து இடித்துத் தூளாக்கிக் கொள்க. 2.6. வி. தண்ணீர் விட்டு காய்ச்சி எட்டிலொன்றாக்கிக் குடிக்க, இளைப்பு, வறட்சியால் வரும் புகையிருமல் நீங்கும்.

குடிநீர்:- 4

கற்கடகசிங்கி, சீந்தில், சீரகம், வில்வஓடு, அதிவிடையம், கடுகுரோ கணி கண்டங்கத்திரி, முசுமுசுக்கை, முள்ளி தூதுவளை, திப்பிலி ஆகிய சரக்குகளை எடுத்து நறுக்கிப் போட்டு, தண்ணீர் விட்டு எட்டொன்

றாய்க் காய்ச்சிக் கொள்ளவும். அதனை நோயின் வன்மை, மென்மைக் குத் தக்கவாறு கொடுக்க இளைப்பிருமல் நீங்கும்.

குடிநீர்:- 5

சிறுதேக்கு, திப்பிலி, துள்ளிவேர், கற்கடகசிங்கி, நிலவேர், கரு வேம்பு, ஏலம் ஆகிய சரக்கு வகைகளைச் சமன் சேர்த்து தண்ணீர் ஊற்றி எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்க. அதனுடன் நெற்பொரி, இந்துப்பு, தேன் ஆகியவற்றைச் சேர்த்துக் கொடுக்க இளைப்பு, ஈளை, துரப்புவலி நீங்கும். குழந்தைகளுக்குத் தன்மையறிந்து கொடுக்க நலமளிக்கும்.

கற்கம்:- 1

கொட்டைப்பாசி சமூலத்தை அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து, எருமை வெண்ணையைக் கலந்து கொடுக்கவும்.

கற்கம்:- 2

புள்ளிமான் கொம்பைப் பசுவின் பாலில் அரைத்துக் கொடுக்க எலும்புருக்கி தீரும்.

கற்கம்:- 3

தவசி முருங்கையிலையை அரைத்து பசுவெண்ணையுடன் கலந்து எலுமிச்சைங்காயளவு எடுத்து 8 நாட்கள் தொடர்ந்து கொடுக்க எலும்புருக்கி குறையும்.

உட்களி:-

செப்பு நெருஞ்சில் சமூலத்தையெடுத்து குருவை வரகரிசியைச் சேர்த்து இடித்துக் கொள்ளவும். இதனுடன் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து களியாகக் கிண்டிக் கொள்க. பசு நெய் சேர்த்து பக்குவமாகக் கிளறி சாப்பிட எலும்புருக்கி நோய் குறையும்.

அடை:-

கவிழ்தும்பையிலை ஒரு பிடி, கறுப்பு நெல்லரிசி 650 மி.கி. கூட்டி இடித்து அடை சுட்டு பனைவெல்லம் அல்லது நல்ல வெல்லம் கூட்டிச் சாப்பிடவும் . இதனைத் தொடர்ந்து சாப்பிட எலும்புருக்கி தீரும்.

சூரணம்:- 1

ஆடாதோடை சமூலத்தை இடித்து வடிகட்டின சூரணம் 350 கி. கொத்துமல்லி, மிளகு, அரத்தை, சுக்கு, அதிமதுரம், தாளிசப்பத்திரி, இந்துப்பு, பேரரத்தை, கோட்டம், கருஞ்சீரகம், வாலுளுவையரிசி, கடுகுரோகணி, அதிவிடையம், சிறுநாகப்பூ, கிராம்பு, சிறுதேக்கு, ஏலம் குக்கில், இஞ்சி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இடித்து சூரணம் செய்து கொள்க. சூரண எடைக்கு கால்பங்கு சர்க்கரை கூட்டிக் கொள்க. தயாரிக்கப்பட்ட சூரணத்தை 250 மி.கி. - 500 மி.கி. அளவெடுத்து நெய், தேன் சேர்த்து உட்கொள்ள இளைப்பு தணியும்.

(திப்பிலாதிச்) சூரணம்:- 2

திப்பிலி, சிறு தேக்கு, வாய்விடங்கம், செவ்வியம், சீரகம், சுக்கு, கொடி வேலி திப்பிலி மூலம், கையாந்தகரை இவற்றை வகைக்கு 105 கி. எடுத்து உலர்த்தி இடித்து சூரணம் செய்து கொள்க. இதற்கு 1/2 பங்கு நாட்டுச் சர்க்கரை கூட்டி சாப்பிடவும். உடல் வன்மையைக் கருதி, தேனில் குழைத்து 20 நாள் கொள்ள தீராத இருமல், ஈளை, இளைப்பு' வாந்தி குறையும்.

(வராகிச்) சூரணம்:- 3

நிலப்பனங்கிழங்கு, கோரைக்கிழங்கு, கீழா நெல்லி, காட்டுச் சாம் பல், இலுப்பைப்பூ, அதிமதுரம், தாமரைக் கிழங்கு, நெய்தல் கிழங்கு, தென்னம்பாளை, வாழைக் கிழங்குச் சாறு, சீரகம், ஏலம், கச்சோலம், குறுவேர் என்கிற வெட்டிவேர், சிற்றாமல்லி, சதாவேரிவேர், ஓமம், தேற்றாங்கொட்டை, முள்ளிலவம்பட்டை, சங்கம்பட்டை, வெள்ளைச் சாறுவளை, நல்ல சந்தனம், இவற்றைச் சமனெடுத்து சூரணம் செய்து கொள்க. 250 மி.கி. - 500 மி.கி. அளவு கொடுக்க எலும்புருக்கி தீரும்.

சூரணம்:- 4

எலிச் செவிக்காய் எடுத்து உலர்த்திப் பொடித்து 488 மி.கி. அளவு பொடி எடுத்துக் கொள்க. அதே அளவு திப்பிலிப் பொடியையும் சேர்த்து 25 மி.கி. தேனில் கலந்து கொடுக்கவும். இளைப்பு, ஈளை, இருமல் குறையும். பசுவின்பால் தயிர், நெய் கூட்டவும்.

சூரணம்:- 5

சுக்கு, மளகு, திப்பிலி, கையாந்தகரை, சிறு தேக்கு, சங்கன் இலை ஆகிய சரக்குகளைச் சமனெடுத்து அரைத்துச் சூரணம் செய்து கொள்ள வேண்டும்.

250 மி.கி. - 500 மி.கி. அளவு சூரணத்துடன் 100 மி.கி. - 250 மி.கி. அளவு சங்குபற்பம் சேர்த்து தேன் கலந்து உட்கொண்டால் இளைப்பு நோய் தீரும்.

சூரணம்:- 6

சிறுநீர் கழியும் போது சுண்ணாம்புக் கறை படிந்திருக்கும் ஒரு வகை எலும்புருக்கி நோய்க்கு இச்சூரணம் அளிப்பது சிறந்தது.

பொரித்த வெண்காரம், கற்கண்டுத்தூள், நெல்லி முள்ளிச் சூரணம் ஆகிய மூன்றையும் சமமாகச் சேர்த்து வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு 520 மி.கி அளவெடுத்து பசுவின் மோர் அல்லது தாய்ப்பா லில் கலந்து கொடுக்கவும். இவ்வாறு நாளொன்றுக்கு 2 அல்லது 3 முறையாக நோய் தீரும் வரை உபயோகித்து வந்தால் குழந்தைகளின் எலும்புருக்கி நோய் தீரும்.

சூரணம்:- 7

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், முத்தக்காசு, விளாவரிசி, செவியம், கொடிவேலிவேர், ஏலம், இலவங் கம், கிராம்பு, இந்துப்பு திப்பிலி, நேர்வாளம் இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து பொடி செய்து மூவிரலளவு (1/2-1 கி.) எடுத்து தேனில் கொள்ளவும்.

சூரணம்:- 8

ஆலம் விழுது, இலவம்பட்டை பற்படாகம், தென்னம்பாளை, ஆடாதோடை, அருகன்வேர், முந்திரிப்பழம் ஆகிய இவற்றைச் சமஅளவு எடுத்தரைத்து தேன், சர்க்கரை கூட்டி 500 மி.கி. - 1 கி. அளவு, இருவேளை கொடுக்க இளைப்பு குறையும்.

சூரணம்:- 9

கற்கடகசிங்கி, சிறு தேக்கு, திப்பிலி, கருநெல்லி, சுக்கு, கோட்டம், மரமஞ்சள், மிளகு, கச்சோலம், சிறு வழுதலை ஆகிய மருந்துப் பொருட்களைச் சமனெடுத்து உலர்த்திப் பொடித்து 500 மி.கி. 1 கி. அளவு எடுத்து குழைத்துக் கொடுக்க காச இருமல் குறையும்.

பிட்டு:- 1

கருவேலிலை 3 பிடி, கருங்குருவையரிசி 1 பிடி எடுத்து இரண்டை யும் பிட்டாக அவித்து ஆட்டு நெய் 162 மி.லி. சேர்த்து சாப்பிடவும்.

இதற்குக் குணமாகாவிட்டால் கிளுவையிலையையும் அரிசியையும் இடித்து பிட்டு அவித்து சாப்பிடுக. ஆட்டு மாமிசத்தையும் முருங்கைக் காயையும் நெய்யையும் நோய்தீரும் வரை உண்டு வர நோயின் கொடுமை தணிந்து உடல் வன்மையுறும்.

பிட்டு:- 2

செம்பருத்திப்பட்டையையும் அரிசியையும் இடித்துப் பிட்டவித்து எண்ணெய், வெல்லம் கூட்டிக் கொடுக்க என்புருக்கி நோய் தணியும்.

நெய்:- 1

தூதுவளை, ஆடாதோடை, செம்முள்ளி, எழுத்தாணிப் பூடு, கண் டங்கத்திரி ஆகிய இவற்றின் வேர் வகைக்கு 175 கி. எடுத்து இடித்து பாத்திரத்தில் இட்டு தண்ணீர் 13 லி. ஊற்றி 1.3 லி. ஆக சுருக்கிக் காய்ச்சுக. அத்துடன் நெய், பால் வகைக்கு 1.3 லி. ஊற்றுக. அரிதாரம், கற்கடகசிங்கி கருஞ்சீரகம், கம்பிப்பிசின் இவற்றை வகைக்கு 16 கி. சாதிக்காய் கடுக்காய் வகைக்கு 20 எடுத்து இடித்துப் பொடித்து கொள்க. 2/3 பகுதி பொடியுடன் நெய், பால் மேற்சொன்ன குடிநீரை யும் சேர்த்துக் காய்ச்சி இறுத்துக் கொள்க. குடிக்கும்போது மீதமுள்ள ஒரு பகுதி பொடியைத் தூவிக் குடிக்கவும். இவ்வாறு 12 நாட்கள் இருவேளை குடிக்க என்புருக்கி நீங்கும்.

நெய்:- 2

கரிசலாங்கண்ணி, காவேளை, நொச்சி, வில்வம், ஆடாதோடை, தூதுவளை, அமுக்கிரா இவற்றின் இலைச்சாறுகளைச் சமஅளவு எடுத்து அதே அளவு நெய்யையும் சேர்த்துக் காய்ச்சி அளவறிந்து நாளறிந்து கொடுக்க இளைப்பு நீங்கும்.

நெய்:- 3

பூவரசங்காய், பூவரசிலை, பாவட்டம்வேர் இவற்றைச் சமனெடுத்து தண்ணீர்விட்டுக் காய்ச்சி பிசைந்து இறக்கி இறுத்துக் கொண்டு வேண்டிய அளவு நெய், பால் சேர்த்துக் கொள்க. அதிமதுரம் 35 கி. எடுத்து அரைத்து கலவையில் சேர்த்துக் காய்ச்சி வடித்து 5 கி. நோய் தீரும்வரை கொடுக்கவும். எலும்புருக்கி தீரும்.

(ஏடு. 822-384)

நெய்:- 4

1.3 லி. பசுநெய்யில் வௌவ்வால் கொண்டு வந்து தலையையும் கால்களையும் அறுத்துவிட்டு வயிற்றைக் கீறி குடலையும் பிச்சுகளை யும் எடுத்து சதையை மட்டும் நெய்யிலே போட்டு எரித்து, நீர் சுண்டின பின்பு 4 கி. கோரோசனத்தைப் பொடி செய்து போட்டு இறக்கிக் கொள்க. அதனைச்சிறு கரண்டியளவு (5 மி.லி.) கொடுக்க இளைப்பு நோய் தீர்ந்துபோகும்.

(மணத்தக்காளி) நெய் 5:-

மணத்தக்காளி, நெய் இவற்றை வகைக்கு 1.3 லி. திப்பிலி, சீரகம் செவியம், கொடிவேலி வேர்ப்பட்டை, ஆடாதோடை, ஓமம், கடுக் காய், சிறுதேக்கு, அதிவிடையம், இந்துப்பு, விளாவரிசி, சிறுதுளசி, கண்டங்கத்திரி, முத்தக்காசு வகைக்கு 5 கி. எடுத்து அரைத்துக் கரைத்து பதத்தில் காய்ச்சி வடித்து தினம் 20 கி. கொடுக்க இளைப்பு, இருமல் நீங்கும்.

(ஏடு 822-96)

(கருங்குக்குடவவ்வால்) நெய்:

கருங்கோழி, வௌவ்வால் இரண்டின் குடல் எடுத்து சுத்தம் செய்து ஒன்றாய் இடித்து 10.4 லி. தண்ணீரில் போட்டு 1.3 லி. ஆக காய்ச்சி எலும்புகளை எடுத்துவிட்டு அதில் பசுவின் நெய், சிற்றாமணக்கெண் ணெய் நல்லெண்ணெய் வகைக்கு 1.3 லி. எடுத்து ஒன்றாய் சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதம் வரும்போது கருஞ்சீரகம், திப்பிலி, மிளகு, சுக்கு, சாதிக்காய், அதிமதுரம், கடுக்காய் தான்றிக்காய், கோரோசனை, குங்குமப்பூ வகைக்கு 35 கி. எடுத்து சூரணம் செய்து வடிகட்டி நெய்யில் போட்டு பதமாய் எடுத்து வைத்துக் கொள்க. காலை மாலை ஒரு கரண்டி (16 மி.லி.) சாப்பிடவும். இளைப்புநோய்கள் தீரும்.

நெய்:- 7

பாலரசந்தோல், நாயுருவி, எள், முள்ளி, ஆனைப்பனங்காய், வாழைச்சருகுத் தோல் இவற்றின் சாம்பல் எடுத்து நீர் வார்த்துக் காய்ச்சி வடித்துக் கொள்க. நெய் 1.3 லி. சேர்க்க. செவியம், சிறுமூலம், சுக்கு, திப்பிலி, வாய் விடங்கம், தேசாவரம், கடுகுரோகணி, வசம்பு, ஆனைத்திப்பிலி, **சீரகம், கருஞ்சீரகம்**, கொடிவேலி வேர் இவற்றை

வகைக்கு 5 கி. எடுத்து அரைத்துக் கொள்க. துத்தியிலைச்சாறு, கோவையிலைச்சாறு, எருமைச்சாணச்சாறு, நீர்பூலாயிலைச்சாறு, சங்க னிலைச்சாறு இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்து கலந்து காய்ச்சி நெய்பதத்தில் வடித்துக் கொள்க. 10 மி.லி. அளவு உள்ளுக்குக் கொடுக்க. எலும்புருக்கி குணமாகும்.

நெய்:- 8

முடக்கொத்தான் இலைச்சாறு 1.3 லிட்டர், நறுவிலிக் கொழுந்து ஒருபிடி, நறுந்தாளியிலை ஒருபிடி எடுத்து இவற்றை அரைத்து 1.3 லி. வெள்ளாட்டு நெய்யில் கரைத்து, ஏலம், இலவங்கப்பட்டை, அதிமதுரம், சீரகம் இவற்றை வகைக்கு 9 கி. அளவு பொடி செய்து கூடப்போட்டு அனலில் வைத்துக் கிளறி வேகவைத்து பக்குவத்தில் இறக்கி தினமொரு பாக்களவு (2.2 கி.) சாப்பிடவும். எலும்புருக்கி குறையும்.

இளகம்:- 1

பொன்னாங்காணி, தூதுவளை, வல்லாரை, கரிப்பான், கரிமுள்ளி என்ற கண்டங்கத்திரி. வட்டதுத்தி, பேய்ப்புடல், தாமரைத் தண்டு, வில்வம் ஆகியவற்றின் வேர்கள், நெல்லியின் ஈர்க்கு இவற்றை வகைக்கு 500 கி. எடுக்க. நீர்வள்ளிக் கிழங்கு, சீரகம், ஏலம், சாதிக்காய், மாசிக்காய், கோரோசனை கடுக்காய், கிராம்பு, செஞ்சந்த னம், செவ்வள்ளிக் கொடி, சாதிப்பத்திரி ஆகிய சரக்குகளை வகைக்கு 100 கி. எடுக்க சிற்றாமணக்கெண்ணெய் 100 மி.லி பசுவின் நெய் 675 மி.லி. எடுத்து மேற்சொன்ன சரக்குகளையும் வேர்களையும் அதில் பொடித்துப் போட்டுக் காய்ச்சுக. பக்குவமான பிறகு பதத்தில் இறக்கி பத்திரப்படுத்துக. அதனைத் தினமும் 5 கி. - 10 கி. அளவெடுத்து இருவேளையும் சாப்பிட எலும்புருக்கிபோம்.

(குங்குமப்பூ) இளகம்:- 2

குங்குமப்பூ, வெள்ளரிக்காய் வித்து, சாதிக்காய், இலவங்கப்பூ, இலவங்கப்பட்டை ஏலம், இலவங்கப்பத்திரி, நீர்முள்ளி, நிலப்பனை வேர், சோற்றுக்கற்றாழைவேர், செப்புநெருஞ்சில், கொடிமாதுளை விதை, யானை வணங்கி, துளசி, நெல்லிமுள்ளி, திப்பிலி, அதிவிடை யம், சுக்கு, நறுவிலிப்பழம், கூகைநீறு, மிளகு, கோதும்பைச்சத்து, வாதுமைப்பருப்பு, கஞ்சாவித்து, அதிமதுரம், உளுந்து சத்து, கடுகுரோ

கிணி, சடாமாஞ்சில் ஆகிய இவற்றை வகைக்கு 35 கி. வாங்கிக் கொள்க. பன்னீர்ப்பூ 175 கி. எடுக்க. இவையனைத்தையும் நன்கு காயவைத்து தூள் செய்து கொள்க.

தூளுடன் அப்பிரகச் செந்தூரத்தை 9 கி. எடுத்துச் சேர்க்க. பசுவின் நெய் 335 மி.லி. சேர்க்க. பனங்கற்கண்டு 175 கி. கூட்டி அனைத்தை யும் சேர்த்து பாகாகக் காய்ச்சி கிண்டி மெழுகு பதமாக வரும்போது பக்குவத்துடன் இறக்கி குப்பியிலடைத்து பத்திரப்படுத்துக. இரு வேளை 390 மி.கி. அளவு கொடுத்துவர எலும்புருக்கி நீங்கும்.

இளகம்:- 3

கண்டங்கத்திரி, தூதுவளை, ஆடாதோடை, சாரணை, செந்தொட்டி, நொச்சி, வாதமடக்கி, பிரண்டை, செம்முள்ளி இவற்றின் இலைகள், தூதுவளைப்பழம் இவற்றின் சாறுகளை வகைக்கு 675 மி.லி. எடுக்க. பனைவெல்லம் 175 கி. எடுத்து கரைத்து சேர்த்து நன்றாய்க் காய்ச்சிக் கொள்க. அதில் மிளகு 70 கி. வாய்விடங்கம், கஸ்தூரி மஞ்சள், திப்பிலி, நறுக்குமூலம், சுக்கு, அக்கிராகாரம் சிற்றரத்தை, அரத்தை இவற்றைச் சமஅளவு பொடித்துப் போட்டு இலேகியமாய்க் கிளறிக் கொள்க. 2.2 கி. அளவு காலை, மாலை, இருவேளை கொடுக்கவும். கைப்பு புளிப்பு நீக்கவும்.

(ஓம) இளகம்:- 4

ஓமம், கற்கண்டு இரண்டையும் சம அளவு எடுத்து சேர்த்து தேவையான அளவு தண்ணீர் கூட்டி பாகாய்க்காய்ச்சி கிண்டி தேனை விட்டுக் கிளறி இலேகியமாகக் கொள்ள இருமல், ஈளை நீங்கும்

இளகம்:- 5

ஆடாதோடை, கருநொச்சி, கரிசலாங்கண்ணி, கண்டங்கத்திரி, பிரண்டை இவற்றின் சாறு வகைக்கு 325 மி.லி. எடுக்க. சுக்கு மிளகு, திப்பிலி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இடித்துத் தூள் செய்து சூரணமாக்கிக் கொள்க. சாறு கொதிக்கையில் இந்தத் தூளைப் போட்டு கிளறி 35 கி. தேன் விட்டு இறக்கிக் கொண்டு சீலையில் கொட்ட லேகியமாம். இதை நேரத்துக்கு 5 கி. கொள்ளவும். இதற்குப் பத்தியம் - உப்பு, புளிப்பு தவிர்க்கவும். இளைப்பு, சுவாசம் இருமல் ஆகியவை தீரும்.

இளகம்:- 6

கண்டங்கத்திரி, தூதுவளை, கையாந்தகரை, நீர்முள்ளி, பருத்திக் காய், கொடுப்பை, பிரமி, பொடுதலை, முசுமுசுக்கை இவற்றின் சாறு, மூன்று பசுவின் பால், நெய் இவற்றை வகைக்கு 325 மி.லி. எடுக்க. கோட்டம் , சித்தரத்தை, சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், கடுக்காய், அதிவிடையம், பெருங்காயம், பொரிகாரம், வாய்விடங்கம், மண்டூரம், திப்பிலி மூலம் ஆகிய மருந்துகளை வகைக்கு 10 கி. எடுக்க. மேற்கூறப்பட்ட சாற்றில் இச்சரக்குகளை அரைத்துக் கொள்க. கலவை யைக் கரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சி களிபோல் வரும்போது 560 கி. சீனியையும் 325 மி.லி. தேனையும் சேர்த்து இலேகியமாய்க் கிளறிக் கொள்க. அதனை 16 மி.லி. அளவு தினமும் நோய் தீரும் வரை கொடுக்க இளைப்பு, இருமல், ஈளையுடன் கூடிய காய்ச்சல், நாவறட்சி, தாகம், காசம், தீராச் சுவாசம் அனைத்தும் தீரும்.

எண்ணெய்:- 1

நெல்லிமுள்ளி, பொன்னரிதாரம், கோட்டம், பெருங்காயம் ஏலம் இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து பசுவின்பால் விட்டரைத்து வேப் பெண்ணையில் போட்டுப் பதமாக எரித்துக் கொண்டு தினம் 5 கி. அளவு கொடுக்கவும். பருப்பையும் முளைக்கீரையையும் உணவில் சேர்ப்பது நல்லது.

எண்ணெய்:- 2

நன்றாக முற்றிய தேங்காயை நான்கு எடுத்துபிழிந்து சாறெடுத்துக் கொள்க. ஆடாதோடைச் சாறு 675 மி.லி. எடுக்க. நஞ்சறுப்பானில் உள்ள நரம்பைப் போக்கி எடுக்க. தண்ணீர்விட்டான் வேர் 35 கி. எடுத்து நன்கு அரைத்துக் கொள்க. பெருங்கரையான், பூநாகம் இவற்றைக் கலவையில் போட்டுக் காய்ச்சி பாத்திரத்தில் ஒட்டாத அளவுக்குப் பக்குவத்துடன் வடித்தெடுத்துக் கொள்க. அவ்வெண் ணையை 4.4 கி. அளவு கொடுக்க இளைப்பு நீங்கும்.

(குருவிச்சி எனப்படும் புல்லுருவி) எண்ணெய்:- 3

ஆலமரத்துப் புல்லுருவி, பனைவெல்லம் வகைக்கு 1 கி. எடுத்து இவ்விரண்டையும் கூட் டி அரைத்து 16 மி.லி. எண்ணெயில் கலந்து காலையில் மட்டும் கொடுக்க எலும்புருக்கி நோய் தீரும்.

உருண்டை:- 1

வடக்கே போகின்ற பொன் சங்கம் வேரை எடுத்து எலுமிச்சங்காய ளவு அரைத்து பசுவின் பாலிலே குழம்பு போல கரைத்து திரட்டுப்பால் பதமாகக் காய்ச்சி மூன்று உருண்டைகள் செய்து கொள்க. 165 மி.லி. பசுவின் நெய்யெடுத்து அதனை மூன்று பங்காகச் செய்து கொள்க. வேளைக்கு ஒரு உருண்டையும் ஒரு பங்கு நெய்யையும் சேர்த்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாட்கள் கொள்ளவும். நெடு நாட்கள் இருப்பின் நோய் தீரும் வரை உட்கொள்ள வேண்டும். சரியாகும்.

உருண்டை:- 2

கோட்டம் அதிமதுரம், சாத்திரபேதி தக்கோலம், கோரோசனை, முத்தக்காசு, விலாமிச்சம், இருவேலி ஆகிய இவற்றை அரைத்து இலந்தைக் கொட்டையளவு (1 1/2 கி.) உருண்டை செய்து வெந்நீரில் கொள்ள இளைப்பு நீங்கும்

உருண்டை:- 3

உலங்காரை என்கிற உத்திராட்சம், தண்டை என்கின்ற ஆதொண்டை வேர் ஆகிய இவற்றைச் சமனாய் எடுத்து குடிநீரிட்டு, நீரை வடித்துக் குழம்பாக்கி கிராம்பு 70 கி. சேர்த்து அரைத்து 3 கி. - 6 கி. அளவு உருண்டை செய்து கொடுக்க இளைப்பு தீரும்.

குழம்பு:-

மிளகு, நெய், சீனி, இவை மூன்றையும் வகைக்கு 35 கி. எடுக்க. 6 மணிநேரம் அரைக்க. பிசின் போல் வரும் வரை ஆட்டுக. புதுக்கலத்தில் அடைத்து வைக்க. 3 நாட்கள் அப்படியே வைத்து 4 ஆம் நாளிலிருந்து காலை, மாலை 15 மி.லி. அளவு கொடுக்க வேண்டும். 48 நாட்கள் இவ்வாறு சாப்பிட இளைப்பு நீங்கும்.

தேங்காய்ப்பாலில் சிறுபயிற்றம் பருப்பைப் போட்டு கொள்க. சர்க்கரை 20 கி., சுக்கு 15 கி. எடுத்துக் கொள்க. இஞ்சிச் சாற்றைத் தேவையான அளவு சேர்த்துக் கொள்க. நன்கு காய்ச்சி உப்பு போட்டுக் கொடுக்க நோய் நீங்குவதுடன் உடலும் நலம் பெறும்; வன்மையுறும்.

இஞ்சித் தேனூறல்:-

இஞ்சியைத் தோல் நீக்கி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி கொம்புத் தேனில் 10 நாட்கள் ஊற வைக்க வேண்டும். காலை, மாலை வேளைக்கொரு துண்டாக உண்டு வந்தால் பசியைத் தூண்டி உடல் வன்மையைத்தரும். இளைப்பு குறையும்.

மருந்து:- 1

கருவேப்பிலையைக் கழுவி சுத்தம் செய்து அரைத்து எலுமிச்சங் காயளவு எடுத்துக் கொள்க. அரிசிக் கஞ்சியில் இவ்விழுதைப் போட்டு அதனுடன் 9 கி. களிப்பாக்கையும் போட்டு ஊறவிடவேண்டும். காலையில் எழுந்ததும் எருமைத்தயிரில் இவ்விழுதுச் சாற்றை உண் டால் எலும்புருக்கி தணியும்.

மருந்து:- 2

மருதம் பட்டையை அரைத்து பசுநெய் சேர்த்து சாப்பிடவும்.

மருந்து:- 3

முற்றின ஒதியப்பட்டையை இடித்து சிதைத்து நல்லெண்ணெய் கலந்துண்டால் என்புருக்கி நோய் குறையும்.

மருந்து:- 4

தேங்காய்பால், இந்துப்பு, செவ்வியம், திப்பிலி, மிளகு, சுக்கு, வெள்ளுள்ளி, அரத்தை, வால்மிளகு, கிராம்பு, அதிமதுரம் ஆகிய வற்றை வகைக்கு 5 கி. எடுக்க. முசுறு முட்டை, நிலவேர் வகைக்கு 10 கி. எடுக்க. தேவையான அளவு ஆடாதோடைச் சாறு சேர்த்து காய்ச்சி பக்குவத்துடன் வடித்து 4.4 கி. அளவு குழந்தைகட்குக் கொடுக்க இளைப்பு, துரப்பு (இருமலாலுண்டாகும் வலி) நீங்கி நலமாகும்.

மருந்து:- 5

குப்பைமேனிச் சாறு எடுத்து அதில் போதுமான அளவு உப்பைச் சேர்த்து நன்கு குழப்பிக் கொள்க. அதனுடன் தேவையான அளவு வேப்பெண்ணெய் கூட்டிக் கலந்து காலை, மாலை இருவேளையுமாக மூன்று நாட்கள் புகட்ட இளைப்பு தீரும்.

மருந்து:- 6

தூதுவளை வேரையும், கொன்றையிலையையும் எடுத்து இரண்டையும் வெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்க இளைப்பு தீரும்.

மருந்து:- 7

நறுநெய், தூதுவளைப் பழச்சாறு, முசுறு முட்டைத் திரவம், ஆடாதோடைச் சாறு, தூதுவளை இலைச் சாறு, கண்டங்கத்திரிச் சாறு ஆகியவற்றைத் தேவையான அளவு எடுத்து ஒன்று சேர்க்க. திப்பிலி, அக்கிராகாரம், அதிமதுரம் ஆகிய மருந்துப் பொருட்களை வகைக்கு 35 கி. எடுத்து மேற்சொன்ன சாற்றில் அரைத்துக் கலக்கி காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்திறக்கிக் கொள்க. அதனைக் குழந்தைகளின் தன்மை, நோய் வன்மை, மென்மை அறிந்து கொடுக்க இளைப்பு நீங்கும்.

வழக்கிலுள்ள சில மருத்துவ முறைகள்:-

வாந்தியுண்டாக நெய்:-

இலைக்கள்ளிச்சாறு 85 மி.லி. மருக்காரைப் பழம் 70 கி. அதிமதுரம் 35 கி. சுக்கு மிளகு, திப்பிலி வகைக்கு 17 1/2 கி. எடுத்து அரைத்து நெய் 675 மி.லி. கூட்டி காய்ச்சி வடித்து 16 மி.லி. அளவு நெய்யைக் கொடுக்க வாந்தியுண்டாகி கோழை வெளியேறி ஐயம் குறையும்.

வாந்தியுடன் கழிச்சலுண்டாக:-

கோரோசனைக் கருப்பை ஒரு சிட்டிகையளவு எடுத்து கொத்துமல்லி குடிநீரில் கலந்து சர்க்கரையையும் நெய்யையும் சேர்த்துக் கொடுக்க வாந்தியும் கழிச்சலுமுண்டாகும்.

வாந்தியுடன் கழிச்சலும் பசித்தீயுமுண்டாக:-

நிலாவாரை, சிவதை, மருக்காரை வேர், சுக்கு, ஏலம், சிற்றரத்தை, கொம்புக்கள்ளிவேர் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து 2.6 லி. நீர் விட்டு காய்ச்சி 675 மி.லி.யாகச் சுருக்கிக் கொள்க. அதனுடன் 675 மி.லி. நெய் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி எடுக்க. அதை 16 மி.லி. அளவு குழந்தைகளுக்குக் கொடுக்க வாந்தியும் கழிச்சலும் உண்டாகும். பசியும் எடுக்கும்.

கழிச்சலுண்டாக எண்ணெய்:-

உத்தாமணி எண்ணெய், கழற்சி எண்ணெய் போன்றவற்றுள் ஒன்றை நோய் வன்மை, நோயாளியின் தன்மைக்கேற்ப கொடுக்கவும்.

பசியைத் தூண்ட நண்டுத்தீநீர்:-

வரப்பு நண்டு 300 எடுத்து நன்றாக உள்ளவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவற்றைக் கழித்துவிடுக. அவற்றைக் கழுவி உரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து அதனுடன் 19.5. லி. நீர் சேர்த்து சீரகம், இஞ்சி, இலவங்கம், இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, ஓமம் இவற்றை வகைக்கு 35 கி. இடித்துப் போட்டு தீநீர் வடித்து வைத்துக் கொள்க. அதை 162 மி.லி. முதல் 325 மி.லி. வரை குழந்தையின் தன்மை, நோயின் வன்மையை அறிந்து கொடுக்கவும். அது பசித் தீயைத் தூண்டி உண்டவுணவைச் செரிப்பித்து உடலுக்கு வன்மையைத் தரும்.

மாத்திரை:-

சயகுலாந்தகம், பூரணசந்திரோதயம், மகாவசந்தகுசுமாகரம் போன்ற மாத்திரைகளில் ஒன்றைக் கொடுத்தல் வேண்டும்.

பற்ப செந்தூரங்கள்:-

தாளகபற்பம், வெள்ளீய பற்பம், பொன்னடைலை, வெள்ளி அடலை, அயநாயக அடலை போன்றவற்றையும் வழங்கலாம்.

என்புருக்கிப் புகை:-

அரளி, அரக்கு, குங்கிலியம், மனோசிலை, சதகுப்பை, வெந்தயம், கருஞ்சீரகம், விரலி மஞ்சள், ஓமம், இவற்றை வகைக்கு 10 கி. எடுக்க. இவற்றைப் பொடித்து திரியாகத் திரித்து பசு நெய்யில் நனைத்து, திரி கொளுத்தி அப்புகையை மூன்று நாட்கள் உள்ளிழுக்க இளைப்பு தீரும்.

கொள்ளத்தக்க உணவு:-

இந்நோயில் நாளுக்கு நாள் உடற்கட்டு மெலிந்து கொண்டே வருமாதலால் உடலின் ஊட்டம் குறையாது பெருகும் வண்ணம் பால், நெய் முதலிய நெய்ப்பொருட்களையும் ஊன் பொருட்களையும் பழவகைகளையும் செரிப்புத் தன்மைக்கேற்றவாறு கொடுக்க வேண்டும். செரிமானத்தன்மை சற்று குறையும்போது செரிப்புத்தன்மையை எளிதாக்கும் காய்கறிகளைக் கொள்வது நல்லது. நண்டு, முயல் இவற்றையும் வழங்கலாம்.

இளைப்பு - பாடல்

குடிநீர்:- 1

விட்டிடவே ஒருசிறங்கை முளைக்கவைத்த வுள்ளி
  மேலுமிகு கழஞ்சி நிலவேர் காரங்கால்
நிட்டையுறச் சேர்த்தரைத்துத் தயிலம் பூசி
  நிம்பெண்ணை சுடர்வாட்டித் தயிலம் வாங்கி

யெட்டி தூதளை பூவன் குறத்தி தோடை
  இஞ்சிவ சம்பரத்தை சமன் எட்டொன் றாக்கி
இட்டிறுத்துக் கஷாயமதில் கலந்து தாக்க
  இளைப்பீளை துரைப்புவலி எல்லாம் போமே

(கை.பி.98, 23)

குடிநீர்:- 3

கண்டவட்டத் துத்தி லவங்கப்பட்டை
  கற்கண்டு கொத்துமல்லி சமன தாக
துண்டறவே யிடித்துநன்றாய்த் தூள தாகச்
  சுத்தசல மிருநாழி தண்ணீர் விட்டு
வேண்டாம லெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
  வேடுகட்டி யிறுத்துநீ குடிப்பீ ராகில்
மண்டியே சயகாச மிரைப்புத் தீரும்
  வறட்சியினாற் புகையிருமல் மாறிப் யோமே.

(ஏடு 129 - 187)

குடிநீர்:- 4

சிங்கி கற்கடகம் சீந்தில் சீரகம் வில்வ ஓடு
உங்கதி விடையத் தானும் உரோகணி கண்டங் காரி
பொங்கமா முசுக்கை முள்ளிப் புகல்தூது வேளைத் திப்பிலி
கங்கைநீர்க் காய்ச்சிக் கொள்ள கணஞ்சுழி சுவாசம் போமே.

(476-8)

குடிநீர்:- 5

சிறுதேக்கு திப்பிலி துள்ளிவேர்
  கற்கடக சிங்கி நிலவேர் கூட்டி

கருவேம்பு யேலமொடு கழாயம் அனல் வைத்து
காய்ந்த பின்பு எட்டொன்றா யிறுத்துக் கொண்டு
விருத்தருக்கு நெல் பொரியு மிந்துப்பு தேனும்
விரும்பியே கொடுத்தாக்கால் விக்க லோடு

பரிதான யிளைப்பு யீளைத்துரப்புக்கா லணுகாது
பாலருக் கூட்டி ராசி போமே.

(ஏடு. 601 - 81)

சூரணம்:- 9

கற்கடக சிறிங்கி சிறுதேக்கு
கார்க்கும் திப்பிலி கருநெல்லி
சுக்கொடு கோஷ்டம் மரமஞ்சள்
துலங்கு மிளகிவை கச்சோலம்
தற்கிடி தானி சிறியவழுதலை
தாவிக் கொள்ளும் வேர்புறந்தோல்
மைக்கடி தண்ணில் ஒக்கக் கொண்டு
மருந்தும் உலர்த்தி பொடிபண்ணி
தெற்கிடை சீங்காதி சூரணத்தைத்
தேனில் குழைத்து மிழுங்கியிட
வற்க காச யிருமலெல்லாம்
மாற நல்ல மருந்திதுவே

(ஏடு 301 -51)

நெய்:- 2

கரிசலாங் கண்ணிச் சாறு
காவேளை நொச்சிச் சாறும்
பெரியதோர் வில்வச் சாறும்
பேரடை தோடைச் சாறும்
அரியதூ தளையின் சாறும்
அழுக்குறாச் சாறுஞ் சுக்கு
எரியவே நெய்யிற் காச்சி
யெழிலுட னருந்து வாயே

(ஏடு 129 - 68)

(குங்குமப்பூ) இளகம்:- 2

சார்வான குங்குமப்பூ வெள்ளரிக்காய் வித்து
சாதிக்காய் லவங்கப்பூ லவங்கப் பட்டை
ஏர்வான ஏலமுடன் லவங்க பத்திரி
இயலான நீர்முள்ளி நிலப்ப னம்வேர்
கோர்வான குமரிவேர் நெருஞ்சில் செப்பு
கொடிமா தளம்வித்து வணங்கி யானை
தீர்வான திருத்துழாய் நெல்லி முள்ளி
திப்பிலியும் அதிவிடையம் கடுக்காய் சுக்கே

சுக்கான நறுவிலியின் பழமுந் தான்றி
சுயகூகை மிளகோ தும்பைச் சத்து
சுக்கான வாதுமைப் பருப்பு போலே
கஞ்சாவித் ததிமதுரம் உழுந்து சத்து
சுக்கான தேற்றா ரோகணியு மாஞ்சில்
சுகமாக வகைக்குஒரு பலமே வாங்கி
சுக்கான பன்னீர்ப்பூ பலம்அஞ் சாகும்
சுக்குவற்ற லாயுலர்த்தி சூரணித்தே.

சூரணத்தில் அப்பிரேக செந்தூ ரந்தான்
சுத்தமா மதுவுங்கால் பலமே யிட்டு
வாரணத்தின் கோவின்நெய் படிகா லாக
வசனித்த கற்கண்டுப் பலம்அஞ் சிட்டு
காரணத்தின் கற்கண்டும் நெய்யுங் கூட்டி
காய்ச்சயிலே பாகுவரில் சரக்கைக் கொட்டு
ஏரணத்தில் கிண்டிமெழு காகும் போது
என்னசொல்வேன் லேகியத்தை இறக்கி டாயே.

இறக்கியே குப்பிக்குள் பதனம் பண்ணி
என்மகனே தேவிக்கும் வயிர வர்க்கும்
இறக்கியே சண்முகர்க்கும் பூசை பண்ணி
ஏகாந்த சேர்வையதாய் பணிந்து போற்று
இறக்கியே இருவேளை அந்தி சந்தி
எடுத்து நீ சுண்டக்கா யளவு கொள்ளு
இறக்கியே புளிபுகையும் பெண்ணுந் தள்ளு
இச்சா பத்தியமாக எடுத்து உண்ணே.

(ஏடு 572-45, 47)

(ஓம) இளகம்:- 4

செப்பினதோர் ஓமமது சேரு மைந்து
திரண்டிருக்கும் கற்கண்டு சேரு மைந்து
அப்பைதளிர் பாகாக்கி யருளமுன் னாக
அரைத்து நன்றாய்க் கிண்டியதில் தேனை விட்டு
வொப்புரவாய் கிண்டியுண்ண மந்தார காச
உயர்சுவாச காசமொடு இருமல் ஈளை
துப்புரவாய் குணமாகு உண்மை யித்தை
சொல்லொண்ணா கைகண்ட சூட்சந் தானே

இளகம்:- 6

கண்டங் கத்திரி தூதுவளை
கையாந் தகரை நீர்முள்ளி
விண்ட பருத்திக் காய்கொடுப்பை
வெல்லும் பிரமி பொடுதலையும்
முண்டி முளைத்த முசுமுசுக்கை
மூன்று பசும்பால் நெய்தானும்
கண்ட துகைதான் வகைக்குழக்கு
கண்டவாள மருந்து சொல்வோமே.

சொல்லுங் கோட்டஞ் சிற்றரத்தை
சுக்கு திப்பிலி மிளகோமம்
வெல்லுங் கடுக்கா யதிவிடைய
மேலும் காயம் பொரிகாரம்
வல்லு விளங்க மண்டூகம்
வாய்த்த திப்பிலி மூலமோடு
எல்லா மருந்து யிருகழஞ்சு
யிதமா யரைத்துக் கொள்வீரே

அரைத்த மருந்தை யவ்வளவு
அளவாய்க் கரைத்து யடுப்பேற்றி
இரைத்துக் கொதித்து வற்றியபின்
இசைகளி போல வரும்போது
உரைத்த சீனி யிருசேரே
யுகந்த தேன்கால் படி வார்த்து

கரைத்து கிண்ட லேகியமாங்
  கரண்டி தினமுங் கொள்வீரே

கொள்ளும் போது காமாலை
  குலைக்கு மிரும லீளையோடு
விள்ளுங் காச்சல் நாவறட்சி
  மிகுந்த தாக மேலிளைப்பு
தெள்ளுஞ் சோகை சயரோகந்
  தீராதச் சுவாசந் திகைப்போடும்
துள்ளுங் கபால பயித்தியமுஞ்
  சுகமாங் கண்டீர் சொன்னோமே.

(129-199-200)

எண்ணெய்:- 2

கட்டாக எண்ணெயொன்று சொல்லக் கேளு
  கனித்து பழுத்தெடுத்த தேங்காயோர் நான்கு
தட்டாமல் வெந்நீரில் பிழிந்து தோடைச்
  சாறுரி நஞ்சறுப்பா னுள்நரம்பு போக்கி
பிட்டான்வேர் பலமொன் றரைத்து நல்ல
  பெருங்கறையான் பூநாகம் போட்டுக் காய்ச்சி
ஒட்டாமல் வடித்தோர் காசளவ தாக
  உள்ளிரும லிளைப்பீளை யோடிப் போமே

(கை.பி.98-212)

(குருவிச்சி எனப்படும் புல்லுருவி) எண்ணெய்:- 3

குருவிச் சிலையுங் கருப்பட்டி கட வேயரைத் தெண்ணெயிலே
மருவிக் குழப்பி விழுங்கவுளை மாந்த முட்சுர மெலும்புருக்கி
உருவித் தீரும் சொன்னபடி யுண்மை யிதுதான் கண்டாயே
கருவி நிகரள கத்தாளே கால கால னடிபணியே.

(477 - 80) (476 - 55)

உருண்டை 1:-

காரைவேரும் தண்டை வேரும் நேராய்க்
  கண்டித்து இதைதூக்கிக் கிசாய மிட்டு
நீரதனை வடித்த பின்பு குளம்ப தாக்கி
  நிறுத்தியதிற் கிராம்பிரண்டு பலமே போட்டு

ஆறினபின் குளம்புடனே அரைத்து உண்டை
உருட்டியுண்ண வாதகுணமுஞ் சுவாச காசந்
தீருமென்று யாக்கோபு சொன்னா ரித்தை
செகத்தில்வர பேர் விளங்கி செப்பி னேனே

(ஏ.201.68)

இளைப்பிற்கு குளம்பு:-

கடந்தே யிருமல் மந்தார
காச முதலாய்ப் போவதற்கு
அடர்ந்த குளம்பு வென்றிதனை
அறையக் கேளும் புலத்தியனே
துடர்ந்த மிளகொன்று
துய்ய நறுநெய் யவ்வண்ணம்
படர்ந்த சீனியிவை மூன்றும்
வகைக்கோர் பலமாய் பரிவுசெய்யே.

செய்வா யிரண்டு சாமயரை
தெளிவா யாட்டுப் பிசின்போல
நய்யும் பருவப் புதுக்கற்க
தடக்கி நாலா நாள்முதலாய்
வய்யம் புகழ வந்திசந்தி
வளமாய்த் தாணிக் காயளவாய்
உய்யும் படிக்கே அருந்தி வரில்
ஒருமண்ட லத்தி லோடிடுமே

ஓடும் வியாதி தனக்கேற்ற
உறுதி கேள்தேங் காய்ப்பாலில்
கூடிடு சிறுபயிற்றம் பருப்பிடு
பஞ்சத தாரை நாற்களஞ்சு
பருத்த சுக்கு முக்களஞ்சு (இஞ்சிப்பாலால்)
நாடிடு மொன்றாய்க் காச்சி
நயம்பெற உப்புப் போட்டு
தேடிடும் படிக்கேக் கொள்ளத்
தெளிந்தது பஞ்சாய்ப் போமே

மருந்து:- 4

தேங்காய் பாலிந் துப்பு
செவ்வியம் திப்பிலி நல்லமிளகு
வாங்கும் சுக்கு வெள்ளுள்ளி
பகர்ந்த அரத்தை வால்மிளகு
வாங்கும் கிராம்பு அதிமதுரம்
வகைக்கு சுழஞ்சு முசுறுமுட்டை
நீங்கா நிலவே ரதில்ரெட்டிக்கு
நிலத்தி லாடா தோடையுடன்

தோடைச் சாறு தான்கலந்து
சுகமாய் வடித்து நெய்யெடுத்து
பேட மயிலே காசளவாய்
பிரிய முடனே கொடுத்திடுகில்
வாடி வாடி கிறுகிறுத்து
வருத்து மிளைப்பு துரப்பெல்லாம்
ஓடி போமென்று
உறுதி முனிவ ருரைத்தாரே

(ஏடு. 601-81, 87)

மருந்து:- 5

குப்பைமேனிச் சாற்றில் உப்பைக் கூடகலந்து வேப்பெண்ணெய்
செப்ப மாக மத்தித்து தேனே மூன்று நாள்புகட்ட
தப்பில் லாமலே இளைப்பு தானே சுழிகணம் உப்பிசமும்
துப்பு நெஞ்சிற் கோழையுடன் துயரங்கெட்டு ஓடுமென்றே

(476-80)

இரைப்புநோய்

வேறு பெயர்கள்:- இழுப்பு நோய், சுவாசகாசம்.

இயல்:-

இந்த நோய் இன்னவகை என குறிப்பிடக் கூடாதபடி ஒரு காரணமுமின்றி மார்பை இறுக்கிப் பிடித்து வலித்து எளிதில் மூச்சினை வெளிவிடவும் உள்ளிழுக்கவும் முடியாமல் திணறச் செய்து, வெளியாகும் மூச்சு மிகுந்த சிரமத்துடன் குழல், யாழ், வீணை முதலிய வாத்தியங்களின் ஒலியைப் போல் ஒலிக்கச் செய்து, இருமினால் கோழை வெளிப்படாமல் மிகுந்த சிரமத்துடன் சிறிதளவே கெட்டியான கோழையினை வெளிப்படுத்தும் இயல்பினை உடையது.

நோய் வரும் வழி:-

உடலுக்கு ஒத்துக் கொள்ளாத உணவுப் பொருட்களை உண்பதாலும் ஒவ்வாத செயல்களில் ஈடுபடுவதாலும், உடல் வன்மை குறைந்த நிலையில் ஐயத்தையும் மந்தத்தையும் மிகுதிப்படுத்தக் கூடிய உணவுப் பொருள்களை உண்பதாலும் இந்நோய் பிறக்கும். புல், பூண்டு, நெல் கேழ்வரகு, சோளம் போன்றவற்றின் சுணையினாலும் தனக்கு ஒவ்வாத மணப்பொருட்களை முகர்வதாலும் வயிற்று கிருமிகளாலும் இந்நோய் வரும்.

தனக்கு ஒவ்வாத சுற்றுப்புறச்சூழல் கேட்டினாலும், எடுத்துக்காட்டாகத் தூய்மையற்ற நீரைப் பருகுதல், கேடடைந்த உணவை உண்ணல், தூசி, புகை மற்றும் சுகாதாரமற்ற ஒவ்வாத காற்றைச் சுவாசித்தாலும் இயற்கையின் பருவகால மாறுபாடுகளாலும், ஒவ்வாத தொழிற்சாலைகளான பஞ்சாலை, தோல் தொழிற்சாலை, அச்சுக்கூடங்கள், சிமெண்ட் ஆலைகள், வேதியியல் ஆய்வுக்கூடங்கள், தீப்பெட்டித் தொழிற்சாலை போன்றவைகளில் பணிபுரிவதாலும் இந்நோய் வரும்.

நோய் முற்குறிகள்:-

ஒவ்வாத உணவும் ஒவ்வாத காற்றும் பட்டவுடன் மூக்கில் நீர்பாய்ந்து தும்மல் வரும். மார்பு நோகும். மார்பினை இறுக்கி கட்டியதைப்போல் உணர்வு ஏற்பட்டு வேதனை உண்டாகும். இயல்பான மூச்சு தடைபடும். மூச்சின் விரைவால் விலாவில் பள்ளம் ஏற்படும். பால் அருந்த முடியாது. வயிறு உப்பும். உடல் வியர்க்கும்.

ஒரு சில நேரங்களில் பார்வைக்கு இருப்பானோ இறப்பானோ என்று எண்ணும்படியாகத் தோன்றும். இயல்பாக உட்காரவும் படுக்கவும் நிற்கவும் இயலாமல் துன்பம் ஏற்படும். பெரும்பாலும் முதுகு முன்புறம் வளைந்த நிலையில் உட்கார்ந்தால் சற்று துன்பம் குறைந்தது போல் உணர்வு ஏற்படும்.

மருத்துவம்:-

குழந்தைகள் தனக்கு ஒவ்வாத உணவுப் பொருள்களைத் தவிர்க்க வேண்டும். தனக்கு ஒவ்வாத சூழ்நிலைகளைத் தவிர்த்து நல்ல ஆரோக்கியமான காற்றோட்டத்தில் இருக்கும் சூழ்நிலையினை உரு வாக்க வேண்டும். உடல் வன்மை குறைந்த நிலையில் ஐயக்குற்றத்தைப் பெருக்கும் உணவுகளை நீக்குதல் வேண்டும். தாய்ப்பால் வழங்குகின்ற தாய்மார்கள் ஐயக்குற்றத்தையும் மந்தத்தையும் அதிகப்படுத்தும் உண வுப் பொருட்களை நீக்குதல் வேண்டும். மனநிலை பாதிக்கப்படாத நிலையில் பயத்தினாலோ, கோபம், அதிர்ச்சி போன்ற இயற்கை உந்துதல்களுக்குப் பாதிக்கப்படாமல் நல்ல மனநிலையில் இருக்குமாறு குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும்.

இந்த நோய்க்கு மருந்து வழங்கும்போது இசிவகற்றி, கோழை அகற்றி, பசித்தீத்தூண்டி முதலிய செய்கைகளைக் கொண்ட பெரிதும் மூலிகையினால் தயார் செய்யப்பட்ட எண்ணெய், நெய், குடிநீர், சுரசம், மணப்பாகு, மாத்திரை, சூரணம், பற்பம் போன்ற எளிய அக மருந்துகளைக் கொண்டு மருத்துவம் செய்தல் வேண்டும்.

இரைப்பு நோயில் ஐயக்குற்றமும் மேல்நோக்குக் காலும் (உதான வாயு) கேடு அடைந்து இருப்பதால் அவற்றைத் தன்னிலைப்படுத்த வேண்டும். ஐயக்குற்றத்திற்கு நசியமும் அஞ்சனமும் மேல்நோக்குக் காலுக்கு (உதான வாயு) பேதி மருந்தும் வழங்குதல் வேண்டும். மேலும் ஒற்றடம், பற்று இவற்றையும் கையாளலாம்.

மருத்துவம்:-

இவ்வகை பிணியாளருக்கு கேடடைந்த உதானவாய்வையும் கபக்குற்றத்தையும் தன்னிலைப்படுத்த மாந்த எண்ணெயை வழங்குதல் வேண்டும். இது மலத்தை இளக்கி சளியை வெளிப்படுத்தும்.

மாந்த எண்ணெய்:- 1

சிற்றாமணக்கு நெய் 1.4 லி. ஈயக் கொழுந்துச் சாறு 2.8 லி., கருஞ்சீரகம் 35 கி., கோரோசனை 4 கி. எடுத்துக் கொள்க. முதல்

இரண்டு சரக்குகளை ஒரு பாண்டத்திலிட்டுக் கொதிக்க வைத்து சாறு சுண்டும் தருவாயில் கருஞ்சீரகத்தை இடித்துப் போட்டு மெழுகு பக்குவத்தில் காய்ச்சி தைலத்தை வடித்துக் கொள்ளவும். தினமும் காலையில் பாலுடன் கலந்து 10 மி.லி. கொடுக்கவும்.

மாந்த எண்ணெய்:- 2

ஆமணக்கெண்ணெய், உத்தாமணிச் சாறு இவற்றை வகைக்கு 2.8 லி. எடுக்க. வெட்பாலையரிசி, கருஞ்சீரகம், கடுகுரோகணி, நீரடி முத்துப்பருப்பு, கோட்டம், கார்போக அரிசி, செண்பகப்பூ, அக்கராகாரம் ஆகியவற்றை வகைக்கு 8.75 கி. எடுக்க. நேர்வாளம் 70 கி எடுக்க. சரக்குகளைப் பொடித்து உத்தாமணிச் சாறுவிட்டு அரைத்து ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடிக்கவும். 5-10 மி.லி. எடுத்துத் தாய்ப்பாலில் கலந்து அனலில் வெதுப்பிக் குலுக்கிக் காலையில் மட்டும் கொடுத்து மாலையில் மாந்தக் குடிநீர் கொடுக்கவும். குழந்தைகளுக்குக் குறைத்துப் புகட்டவும்.

சாறு:-

(1) தாளிச பத்திரியினைத் தூள் செய்து ஆடாதோடை இலைச் சாற்றில் கலந்து தேன் சேர்த்துச் சாப்பிட இரைப்பு நோய் குணமாகும். (2) தேன், எலுமிச்சைப்பழச்சாறு இவற்றைச் சமஅளவு (4 மிலி) கொடுக்க இருமல் தீரும்.

ஊறல் குடிநீர்:- 1

ஆடாதோடை இலை, வேர் இவற்றை ஒரெடை எடுத்து அதற்குத் தக்கபடி மிளகும் கூட்டி ஊறல் குடிநீர் செய்து கொடுக்க இரைப்பு, உப்பிசம், ஈளை, இருமல், சுரம் இவை தணியும்.

குடிநீர்:- 2

துளசிக் குடிநீர், தூதுவளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை, கற்பூரவள்ளி, ஓமவள்ளி, முசுமுசுக்கை, உத்தாமணி, மிளகு, திப்பிலி, தாளிசபத்திரி, சிற்றரத்தை, பேரரத்தை, தும்பை, அக்கமணி என்னும் உருத்திராட்சம், தவனகம், நஞ்சறுப்பான், தலைச்சுருளி, கரிசலாங் கண்ணி, குப்பைமேனி இவை சமஅளவு சேர்ந்த குடிநீரை அளவுப்படி குடிக்க இரைப்பு, இருமல் தீரும். மேலும் இதையே சுரசம் செய்தும் வழங்கலாம்.

குடிநீர்:- 3

ஆடாதோடை, திராட்சை, கடுக்காய் இவற்றின் குடிநீரில் தேனும் சர்க்கரையும் கூட்டிக் கொடுக்க கொடுமையான இரைப்பு இருமல் தீரும்.

குடிநீர்:- 4

ஆடாதோடை வேர், கண்டங்கத்திரிவேர், சுக்கு, கொள்ளுு இவை சேர்ந்த குடிநீரில் அல்லிக் கிழங்கின் பொடியைக் கூட்டிக் கொடுக்க இரைப்பு இருமல் தீரும்.

தூதுவளை இலைக் குடிநீரை இரைப்பிருமலுக்குக் கொடுக்கலாம்.

குடிநீர்:- 5

நிலக்குமிழ்வேர், கண்டுபாரங்கி, தேவதாரம், நிலவேம்பு, பற்பாடகம், கடுக்காய், சுக்கு, கோரைக்கிழங்கு, வசம்பு முதலியவற்றை ஓர் எடையில் கொண்டு 2.6 லி நீர்விட்டு 325 மிலி.யாக் வற்றக் காய்ச்சி அதனுடன் தேனும் பெருங்காயமும் சேர்த்துப் பருகில் கொடிய ஐயம், இரைப்பு, இருமல் தீரும்.

குடிநீர்:- 6

இரண்டு மூன்று செழுமையான ஆடாதோடை இலைகளைப் பொடியாகக் கத்தரித்து ஒரு புதிய மண் சட்டியிலிட்டு தேன் சிறிது கூட்டி வதக்க ஒரு வித நன்மணம் வீசும். அத்தருவாயில் அதிமதுரம் 2 கி., திப்பிலி 1 கி., தாளிசபத்திரி 1/2 கி. தேவையானால் சிற்றரத்தை 1/4 கி. எடுத்து ஒன்றிரண்டாகச் சிதைத்து மேற் கூறியவற்றுடன் கலந்து கொள்க. அத்துடன் 650 மி.லி. தூய்மையான நீர் விட்டுக் காய்ச்சி 165 மி.லி. யாகக் குறுக்கி வடிகட்டிக் கொள்க. காலை மாலை இருவேளை 15 முதல் 30 மி.லி. கொடுத்து வர கோழைக்கட்டு அறும். சளி வெளிப்படும். இருமல், இரைப்பு, சுரம் போன்றவையும் நீங்கும்.

கற்கம்:-

பலகறையை எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்து சுத்தி செய்து மைபோல் அரைத்துக் குழப்பிக் கொடுக்க இரைப்பு, இருமல் தீரும். அளவு 50 மி.கி.

அடை:-

ஊறவைத்த புழுங்கலரியுடன் முசுமுசுக்கை இலையைச் சேர்த்து அரைத்து சிறிது உப்பு கூட்டி அடைசுட்டுக் கொடுத்துவர கோழைக்கட்டு, ஈளை, இரைப்பு, இருமல் தீரும்.

சூரணம்:- 1

சுத்தி செய்த மூங்கிலுப்பு 4 கி., திப்பிலி 2. கி. இலவங்கம் 1/2 கி., சர்க்கரை 8 கி. எடுத்து பொடித்துக் கலந்து வேளைக்கு 4 கி. கொடுக்க ஐய நோய், இருமல், இரைப்பு தீரும்.

சூரணம்:- 2

ஆடாதோடையிலை, தூதுவளை இலை, சங்கன் இலை, புரசன் இலை (பலாசு) இவற்றைச் சமஅளவு கொண்டு வேடுகட்டி, பிட்டவியலாக அவித்து, சாற்றைப் பிழிந்து கொள்க. அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றைச் சம எடை எடுத்து சூரணித்து வஸ்திரகாயம் செய்து கொள்க. ஒரு சிட்டிகை தூளுடன் 5 துளி தேன் கலந்து சாப்பிட இரைப்பு, இருமல் தீரும்.

சூரணம்:- 3

பொரித்த வெங்காரம் 325 மி.கி., மிளகுத்தூள் 195 மி.கி. எடுத்து இரண்டையும் கலந்து 4 மி.லி அளவு தேனில் கலந்து கொடுக்க இருமல், இரைப்பு தீரும்.

சூரணம்:- 4

யானைத் திப்பிலியைப் பொடித்து சலித்துத் தேனில் குழைத்துச் சாப்பிட இரைப்பிருமல், குரல் கம்மல் நோய் குணப்படும்.

தாளிசாதிக் சூரணம், திப்பிலிச் சூரணம், தாளிசபத்திரி சூரணம் ஆகியவற்றைத் தனித்தனியாக தக்க அளவில் கொடுக்க இரைப்பிருமல் தீரும்.

நெய்:-

ஆடாதோடை நெய், தூதுவளை நெய், ஈருள்ளி நெய் ஆகியவற்றை இரைப்பிற்கு வழங்கலாம். உடும்பு நெய், நத்தை நெய், முயல் நெய் ஆகியவற்றையும் இரைப்பிற்கு அளவறிந்து கொடுக்கக் குறையும்.

(ஆடாதோடை) நெய்:- 1

ஆடாதோடைச்சாறு பசும்பால், பசுநெய் இவற்றை வகைக்கு 2.8 லி. எடுக்க. யானைத்திப்பிலி, திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை, இந்துப்பு, சுக்கு, யவாட்சாரம், சத்திச்சாரம் ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுக்க. மருந்து சரக்குகளைப் பொடித்துப் பசும்பால் சிறிது

விட்டு அரைத்துப் பாலில் கலக்கி ஆடாதோடைச் சாறும் நெய்யும் கலந்து காய்ச்சிப் பதத்தில் எடுத்து வடிகட்டிக்கொள்ளவும். அதனை நாளொன்றுக்கு முதலிரண்டு வேளை 5 கி.மும். மூன்றாம் வேளை 2 1/2 கி.முமாக மூன்றுவேளை சுக்குக் குடிநீரில் கொடுக்கவும்.

(தூதுவளை) நெய்:- 2

தூதுவளை, முள்ளி, கண்டங்கத்திரி, பெருங்காஞ்சொறி, ஆடா தோடை, சிறுகாஞ்சொறி ஆகியவற்றின் வேர்கள் வகைக்கு 140 கி., கடுக்காய்த்தோல், 140 கி. சுக்கு, மிளகு, திப்பிலி, தாளிசபத் திரி, கோட்டம், அக்கராகாரம், வாய்விடங்கம், சீரகம், ஓமம், சிற்ற ரத்தை, வால்மிளகு, பேரரத்தை, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத் திரி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவற்றை வகைக்கு 15 கி. எடுக்க பசும்பால், பசு நெய் வகைக்கு 2.8 லி. எடுக்க. வேர்களை நன்கிடித்து ஒரு பாண்டத்திலிட்டு தண்ணீர் 43 லி. சேர்த்து 1/16 ஆக குறுக்கி வடித்து ஊற்றிக் கொள்க.

மற்ற சரக்குகளைப் பசும்பால்விட்டு கற்கமாகச் செய்து, மேற் சொன்ன கலவையுடன் கலந்து கொள்க. பாலையும், நெய்யையும் கூட்டிக் கரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும். இதனைக் காலையில் மட்டும் 10-15 மி.லி. அளவாக 45 நாட்கள் உட்கொள்ள வேண்டும்.

நெய்:- 3

பசுவின் நெய், எருக்கம்பால், ஆடாதோடை இலைச்சாறு வகைக்கு 24 கி. எடுத்து, கடுக்காய், நெல்லிமுள்ளி, செவ்வியம், தேவதாரம்,தான்றிக்காய்,தூதுவளை, சடாமாஞ்சில், சிறுநெருஞ்சிவேர், அமுக்கிராக் கிழங்கு, இலவங்கப்பட்டை, இந்துப்பு, கோட்டம் இவற்றை வகைக்கு 12 கி. எடுத்து பசும்பால் விட்டரைத்துக் கொள்க. மேற்குறிப்பிட்ட சாறு, நெய், மற்ற மருந்துகளை ஒன்றாய்க் கூட்டி மெழுகுபதமாக எரித்து எடுக்கவும். சிறுகரண்டியளவு (2 மிலி) கொள்ள இருமல், இரைப்பிருமல் தீரும்.

(திப்பிலி) இரசாயணம்:- 1

திப்பிலி 350 கி., மிளகு 175 கி., சுக்கு 175 கி. இரு சீரகம் (சீரகம், பெருஞ்சீரகம்) வகைக்கு 70 கி. அரத்தை 70 கி. இலவங்கப் பட்டை 35 கி. ஓமம் 70 கி. தாளிசம், இலவங்கப்பத்திரி, திரிபலை, இலவங்கம், ஏலம், சித்திரமூலம் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இளவறுப்பாக வறுத்துப் பொடித்து அதே அளவு பனைவெல்லம் கலந்து தேன் விட்டுப் பிசைந்து ஒரு சிட்டிகை அளவு 40 நாட்கள் சாப்பிட்டு வர ஈளை, இருமல் தீரும்.

(திப்பிலி) இரசாயனம்:- 2

திப்பிலி 70 கி. இலவங்கம், சுக்கு, ஏலம், திப்பிலிவேர், வாய்விடங்கம், கடுக்காய், மிளகு வகைக்கு 8 1/2 கி. எடுத்துக் கொள்ளவும். இவற்றை இளவறுப்பாக வறுத்துத் தேன், சர்க்கரை அல்லது பனைவெல்லம் அதே அளவு சேர்த்து காய்ச்சி பாகுபதத்தில் இறக்கி பிசைந்து 2.2 கி. தினம் இருவேளை 40 நாட்கள் சாப்பிட்டு வர இரைப்பு, இருமல், ஈளை, நெட்டிருமல், நீர்வறட்சி தீரும்.

இலேகியம்:-

வாச்சக்ண்டத்ரி இலேகியத்தை இரைப்புக்குக் கொடுக்க குறையும்.

எண்ணெய்:- 1

இரைப்புக்கு உத்தாமணி எண்ணெய் கொடுத்தால் நல்லது.

(ஈருள்ளி) எண்ணெய்:- 2

வெங்காயச்சாறு, ஆமணக்கெண்ணெய் வகைக்கு 280 மி.கி. எடுத்து காலையில் 35 கி. கொடுக்கவும்; இரைப்பிருமல் குறையும்.

(மாந்த) எண்ணெய்:- 3

மாந்த எண்ணெயை 2 மி.லி. எடுத்து 15 மி.லி. வெந்நீரில் கலந்து காலையில் மட்டும் கொடுக்க, கழிச்சலாகும். இரைப்பு தணியும்; 3 நாட்கள் காலையில் மட்டும் தக்க அளவில் கொடுக்கலாம்.

எண்ணெய்:- 4

இண்டஞ்சாறு, சிங்கிலைச் சாறு, தூதுவளைச் சாறு, துளசிச் சாறு, நொச்சிச் சாறு, உத்தாமணிச்சாறு, நாய்த்துளசிச் சாறு, ஏரண்டத்தைலம் இவற்றை வகைக்கு 165 மி.லி. எடுத்துக் கொள்ளவும்.

கடுகு ரோகணி 17 1/2 கி. இந்துப்பு, வெங்காரம், சன்னிநாயகம் என்ற சிற்றரத்தை, ஓமம், கருஞ்சீரகம், வசம்பு. இவற்றை வகைக்கு 9 கி., பூண்டு 17 1/2 கி. எடுத்து அரைத்து மேற்கூறப்பட்ட சாறு வகையுடன் எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து அடுப்பேற்றி பத மாய்க் காய்ச்சி வடித்து காலையில் 4 மி.லி. வீதம் உள்ளுக்குக் கொடுக்க இரைப்பிருமல் தீரும்.

(குழித்தைலம்) எண்ணெய்:- 5

முற்றிய நாயுருவி சமூலத்தை நறுக்கி பசுநீரில் ஊறப்போட்டு உலர்த்தி குழித்தைலம் வடித்துக் கொள்க. அதில் ஒன்றிரண்டு துளியை வெற்றிலையில் பூசித் தின்ன இருமல், ஈளை, இரைப்பு நோய்களைப் போக்கி உடலுக்கு ஊட்டம் தரும்.

(பச்சைக் கற்பூர) மாத்திரை:- 1

பச்சைக் கற்பூரம், இலவங்கம், சாதிக்காய், கந்தகம், வாளம், இவற்றைச் சரி அளவு எடுத்து குமரிச்சாறு விட்டு அரைத்து 65 மி.கி. அளவு மாத்திரை செய்து தேன், இஞ்சிச்சாறு இவற்றில் ஒரு மாத்திரை வீதம் உரைத்து மூன்று நாட்கள் கொடுக்க உடல் வெப்பு, வெப்பு, சுரம், இரைப்பு இவை தீரும்.

குளிகை:- 2

எருக்கம் பூ இதழ் சம எடை மிளகுப்பொடி சேர்த்து அத்துடன் வெட்டிவேரையும் சேர்த்து அரைத்து 4 உருண்டைகளாகச் செய்து தினமும் ஒரு உருண்டை வீதம் 4 நாட்களுக்குச் சாப்பிடவும் இரைப்பிருமல் தீரும்.

மாத்திரை:- 3

சயகுலாந்தகம், பூரண சந்திரோதயம், மகாவசந்த குசுமாகரம் போன்ற பெரு மருந்துகளில் ஒன்றைத் தக்க துணை மருந்துகளோடு வழங்கலாம்.

முசுமுசுக்கை இலைச்சாற்றில் கோரோசனை மாத்திரையைச் சேர்த்துக் கொடுக்க இரைப்பு நோய் தணியும்.

கோரோசனை மாத்திரை, கஸ்தூரி மாத்திரை, சஞ்சீவி மாத்திரை, கண்டங்காரி மாத்திரை, பச்சைக்கற்பூர மாத்திரை, சுப்ரவடி மாத்திரை, பால சஞ்சீவி மாத்திரை, கற்பூராதி மாத்திரை போன்ற மாத்திரைகளை இரைப்பிற்கு அளிக்க குணமாகும்.

(அம்பர்) மாத்திரை:- 4

அம்பர் 12 கி., மூங்கிலுப்பு, 36 கி. கருவேலம் பிசின் 12 கி. எடுத்துக் கொள்ளவும். மூங்கிலுப்பை கருவேலம் பிசினுடன் கலந்து அரைத்துக் கொள்க. பன்னீர் விட்டு அம்பரைச் சிறிது சிறிதாகச் சேர்த்து

நன்றாக அரைத்து மிளகு அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். நாள் ஒன்றுக்கு இருவேளை துளசிச் சாற்றில் கொடுக்க இருமல், இரைப்பு தீரும்.

(கஸ்தூரி) மாத்திரை:- 5

கஸ்தூரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு சேர்த்து அரைத்துக் கொள்ளவும். அதை மீண்டும் துளசிச்சாறுவிட்டு அரைத்து 65 மி.கி. மாத்திரையாக உருட்டி உலர்த்தி கொடுக்க இரைப்பு, இருமல் தீரும். கஸ்தூரி தைலத்தில் வழங்க வேண்டும்.

நண்டுத் தீநீர்:-

வரப்பு நண்டு 300 எடுத்து சுத்தி செய்து இடித்து அதில் 19.5. லி. நீர்விட்டு, சீரகம், இஞ்சி, இலவங்கம், இலவங்கப்பட்டை, சாதிக் காய், சாதிபத்திரி, ஓமம், மிளகு, திப்பிலி, வசம்பு, அரத்தை இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இடித்துப் போட்டு தீநீர் செய்து கொள்க. அதில் 20 முதல் 40 மி.லி. கொடுக்க. இரைப்பு நோய் தீரும். மேலும் பசி, செரிப்புத்தன்மை இவற்றை உண்டாக்கி உடலுக்கு வன்மையைத் தரும்.

மெழுகு:-

ஆடாதோடையிலைச் சாறு 1 பங்கு, தேன் அல்லது இஞ்சிச்சாறு 1/2 பங்கு இரண்டையும் ஒன்று சேர்த்து மெழுகுபதமாகக் காய்ச்சி 260 மி.கி. முதல் 520 மி.கி. அளவு நாள் ஒன்றுக்கு மூன்று முறை கொடுக்க இரைப்பு, ஈளை, இருமல் தணியும்.

(பலகரைப்) பற்பம்:- 1

இதனைத் தக்க அளவு வெள்ளுள்ளிச் சாற்றுடன் கொடுக்க இரைப்பிருமல், இருமல் தீரும்.

(பவள) பற்பம்:- 2

பவளப் பற்பத்தைத் துளசிச் சாற்றில் கொடுக்க இருமல் இரைப்புத் தீரும்.

(முத்துப்) பற்பம்:- 3

முத்துப்பற்பத்தைத் துளசிச்சாற்றில் கொடுக்க, இருமல், இரைப்பு தீரும்.

(முத்துச்சிப்பி) பற்பம்:- 4

முத்துச்சிப்பி பற்பத்தைத் துளசிச்சாற்றில் கொடுக்க இருமல், இரைப்பு தீரும்.

(மான் கொம்பு) பற்பம்:- 5

மான் கொம்பு பற்பத்தைத் துளசிச் சாற்றில் கொடுக்க ஈளை, இருமல், இரைப்பு தீரும்.

(முட்டை ஓட்டுப்) பற்பம்:- 6

பொரித்த கோழி முட்டை ஓட்டை உவர்மண் கூட்டி நீர் விட்டு அவித்து கழுவி எடுத்துக் கொண்டு நீர்முள்ளிச்சாறு விட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். அதனைப் புடத்திலிட்டெடுக்க .அவ்வாறு மூன்று புடமிட்டெடுக்க பற்பமாகும். இதனை அளவறிந்து கொடுக்க இரைப்பி ருமல் தீரும்.

கடுகுரோகணிவேர் சிறுதுண்டு, மிளகரணைவேர், பட்டை ஆகிய வற்றைச் சேர்த்து குடிநீராக்கிக் கொள்க. இக்குடிநீரில் மேற்சொன்ன பற்பத்தைத் துவரையளவு கலந்து கொடுக்க இரைப்பு நோய் தீரும்.

(சர்வசங்கார உப்புப்பற்பம் (அ) ஈளை நோய் நிவாரணி) பற்பம்:- 7

குப்பைமேனி சமூலத்தை நிழலிலர்த்தி, சுட்டு சாம்பலெடுத்து அதனைக் குடிநீர் விட்டுக் கரைத்து தெளிய வைத்துக் கொள்க. அதன் தெளிவை அடுப்பேற்றி வற்றக் காய்ச்சி வெய்யிலில் காய வைத்து உப்பு எடுத்து பிரண்டைச்சாறு விட்டரைத்து கொள்க. அதனை வில்லை தட்டி சீலை மண் செய்து 10 வரட்டியில் புடமிட பற்பமாகும். 65 மி.கி. பற்பத்தைத் திரிகடுகுத்தூள், தேன் கலந்து காலை, மாலை கொடுக்க இரைப்பு, இருமல், ஈளை தீரும்.

மருந்து:- 1

தேன் 4 மி.லி. 2 வேளை சாப்பிட இருமல் இரைப்பு தீரும்.

மருந்து:- 2

தேன் 8 மி.லி., ஆமணக்கு எண்ணெய் 15 மி.லி. கலந்து கொடுக்க இரைப்பிருமல் தீரும். மலக்கட்டு தீரும். வெள்ளாட்டுப்பாலை கறந்தவு டன் குடிக்க இருமல், இரைப்பு தீரும். கழுதைப் பால் குடிக்க இருமல், இரைப்பு தீரும். புலிப்பிச்சில் இலவங்கைத்தை ஊற வைத்து உலர்த்திக் கொடுக்க இரைப்பு, இருமல் தீரும்.

மருந்து:- 3

குடோரிக் குளிகை (அ) பொடி	-	40 கி.
வெள்ளெருக்கன் பூச்சாறு	-	300 மி.லி.
குப்பைமேனியிலைச் சாறு	-	80 மி.லி.
கம்மாரு வெற்றிலைச் சாறு	-	80 மி.லி.
தேன்	-	1 லிட்.

எடுத்துக் கொள்க. இவற்றை நன்றாகக் கலந்து ஒரு குப்பியில் அடைத்து வைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு 4 மி.லி. அளவு 2 அல்லது 3 வேளை வெந்நீரில் கொடுக்கவும்.

மருந்து:- 4

70 கி. கோதுமையை ஒரு பாத்திரத்தில் போட்டு மேலும் வெள்ளெருக்கன் பாலை விட்டு கோதுமை முழுவதும் முழுகும் வரை ஊற்றி ஒரு நாள் முழுதும் ஊற வைத்து மறுநாள் அதை நன்றாக உலர்த்தி ஒரு மண்பானையில் போட்டு சிவக்கும்வரை வறுத்துக் கொள்ளவும். ஒரு வெற்றிலையில் வறுத்த கோதுமையை 1 சிட்டிகை எடுத்து வைத்து சுருட்டி உட்கொள்ளத் தீரும். பத்தியமில்லை.

மருந்து:- 5

நொச்சி மிளகு, பூண்டு, இலவங்கம் இவற்றைச் சம அளவு சேர்த்து சிறிதளவாக மென்று மெதுவாகத் தின்ன இரைப்பு நோயின் எழுச்சி அடங்கும்.

விளாம்பழத்தினால் ஈளை இருமல் தீரும். கற்பூரம், பொரித்த பெருங்காயம் இவற்றைச் சமவெடை எடுத்துச் சேர்த்து 200 மி.கி. சாப்பிட இரைப்பு, உப்பிசம் தீரும்.

மருந்து:- 6

கோரோசனை கருப்பை, 1 சிட்டிகை கொத்தமல்லிக் குடிநீரில் கலந்து சர்க்கரையும் நெய்யும் கூட்டிக் கொடுக்க வாந்தியுடன் கழிச்சல் உண்டாகும். இதனால் சளி வெளிப்படும். இரைப்பு நோயும் குணமா கும்.

மருந்து:- 7

சிற்றாமணக்கு நெய் 15 மி.லி. தேன் 7 மி.லி. கொடுக்க இரைப்பிருமல், சுவாசகாசம் தீரும்.

பூண்டுத்தேன் 10 மி.லி. கொடுக்க சளி, இருமல், இரைப்பு தீரும்.

தேனைச் சூடான பார்லி நீரில் கொடுக்க இரைப்பு தீரும்.

மருந்துகள்:-

புவள பற்பம், முத்துப் பற்பம், சிருங்கி பற்பம், முத்துச்சிப்பி பற்பம், கஸ்தூரிக் கருப்பு, சுவாசக் குடோரி, சாம்பிராணிப்பூ மாத்திரை இவற்றைத் தக்க அளவில் அனுபானத்துடன் காலை, மாலை கொடுக்க வும். மேற்கூறிய ஒன்றை ஐயத்தைக் குறைக்கும் ஆடாதோடைக் குடிநீர், தாளிசபத்திரிக் குடிநீர், ஆடாதோடையிலை, கண்டங்கத்திரி யிலை, துளசியிலை, தூதுவளை, கஞ்சாங்கோரை, முசுமுசுக்கை, திப்பிலிக் கொடி இவற்றைப் பிட்டவியல் செய்த சுரசம், தாளிசாதிச் சூரணம், அரத்தைச் சூரணம், திப்பிலிரசாயனம் இவற்றில் ஒன்றுடன் கூட்டிக் கொடுக்கலாம்.

கஸ்தூரிக் கருப்பு, முத்துப் பற்பம், சிருங்கி பற்பம், முத்துச்சிப்பி பற்பம் இவற்றை வகைக்கு 65 மிகி. எடுத்து தாளிசாதிச் சூரணம், அரத்தைச் சூரணம், அக்கிராகாரச் சூரணம், திப்பிலி இரசாயனம், திரிகடுகுச் சூரணம் இவற்றில் ஏதாவது ஒன்றை 500 மி.கி. எடுத்து தேனில் குழப்பி காலை, மாலை கொடுக்க இரைப்பு தீரும். (அனுபவ மருந்து)

பற்று:-

கண்டு பாரங்கி இலையைத் திரிபலை (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்)க் குடிநீரில் அரைத்து பற்றிட இரைப்பிருமல் குணமாகும்.

புகை:-

ஆடாதோடை இலையை உலர்த்தி சுருட்டிக் கொண்டு எரித்து புகை பிடிக்க இரைப்பு நோய் தீரும். இதனைப் பெரிய குழந்தைகளுக் குச் செயல்படுத்தலாம்.

உணவு:-

ஐயக்குற்றம் மிகுந்து இந்நோய் வருவதால் ஓலிக்குற்றத்தை மிகுதிப்படுத்தும் உணவுப் பொருட்களையும் ஒவ்வாமையின் காரணத் தால் வருவதால் அவரவர்களுக்கு ஒவ்வாத உணவுப் பொருட்களை அறிந்து அவற்றைத் தவிர்த்துவிட வேண்டும். வெப்பத்தை ஊட்டக்கூ டிய கார்ப்புச்சுவையுடைய மிளகு போன்ற உணவுப் பொருட்களை உண்ண வேண்டும். மாமிச உணவு உண்பவர்கள் வயல் நண்டு,

வெளவால், ஒட்டகம் ஆகியவற்றின் மாமிசத்தைச் சேர்த்துக் கொள்ள வும். ஒட்டகப் பாலையும் வழங்கலாம். எப்போதும் சூடான உணவு களை ஏற்றுக் கொண்டும் பழைய உணவுகளைத் தவிர்க்கவும் செய்ய வேண்டும். எளிதில் செரிக்கக்கூடிய ஆவியில் வெந்த உணவைச் சேர்த்து எண்ணெய் மற்றும் மசாலப் பொருட்களைக் குறைக்க வேண்டும். முக்கியமாக இரவு நேரத்தில் குறைந்த அளவில் முன்னதா கவே (7-8 மணிக்குள்) சாப்பிட வேண்டும்.

உடை:-

மெல்லிய பருத்தி ஆடைகளை அணிவது சாலச்சிறந்தது.

படுக்கை:-

வெப்பத்தைக் கொடுக்கக்கூடிய படுக்கை விரிப்புகளை பயன்ப டுத்தலாம்.

சுற்றுப்புறம்:-

குறிப்பாக காற்றோட்டம், சூரிய வெளிச்சம் நிறைந்த அறையில் இருக்க வேண்டும். சுற்றுப்புறம் தூய்மையானதாகவும் ஈரத்தன்மை இல்லாததாகவும் இருக்க வேண்டும்.

காமாலை

வேறு பெயர்கள்:-

இந்நோய் 'பித்தநோய்' பித்துநோய், காமாலை, காமிலா, மஞ்சள் நோய், மஞ்சட் காமாலை எனப் பல பெயர்களாலும் வழங்கப்படும். எதிலும் இச்சை இல்லாமல் இருப்பதால், காமாலை (காமம் + இல்லை) ஆசை இல்லை என்பதால் இவ்வாறு அழைக்கப்பட்டது.

1. உடல் முழுவதும் மஞ்சள் நிறமாக தோற்றமளிப்பதால், மஞ்சள் நோய் என்றும்
2. பித்த நீர் இரத்தத்தில் கலப்பதால் பித்தநோய் என்றும்
3. எந்த பொருள் மீதும் காமம் என்கின்ற இச்சை (அ) விருப்பம் இல்லாததால் காமாலை என்றும் கூறப்படுகிறது.

நோய் வரும் வழி:-

''ஒளி உவர் கைப்பேரின் பித்துச் சீரும்'' என்பதற்கிணங்க அழல் குற்றத்தைப் பெருக்கக் கூடிய உப்பு, கைப்பு, கார்ப்புச் சுவையுள்ள உணவுப் பொருட்களை மிகுதியாக உண்ணுதல், எண்ணெய், நெய், கொழுப்பு இவற்றை மிகுதியாக உண்ணுதல், தூய்மையற்ற நீரைப் பருகுதல், தூய்மையற்ற உணவை உண்ணுதல், மது வகைகளை அருந்துதல் ஆகிய காரணங்களால் நோய்க் கிருமிகள் பித்தப் பையைத் தாக்கி தாபிதமடையச் செய்து விடும்.

வெயிலில் அலைதல், இரவில் மிகுதியாகக் கண்விழித்தல் ஆகிய வைகளால் அழல் குற்றம் மிகுத்து தனக்குத் துணையாக ஐயத்தையும் சேர்த்துக்கொண்டு இந்நோய் வருகிறது.

மேலும் இயற்கையிலேயே நோய் எதிர்ப்புச் சக்தி இன்மை, இந்நோயை உண்டாக்கும் கிருமிகள் ஆகிய காரணங்களால் பித்தப்பை தாபிதமடைகிறது. மேலும் பித்தப்பையில் கட்டி, கல் இவற்றின் காரணமாக பித்தநாளம் அடைபடுவதாலும் இந்நோய் வருகிறது. மேலும் குருதியைக் கேடடையச் செய்யும் மருந்து வகைகளாலும் பரம்பரையாக வரும் ரத்த நோய்களாலும், நளிர் சுரத்தாலும், நாட்பட்ட ஈரல் நோய்களாலும் இந்நோய் வருகிறது. மேற்கூறிய காரணங்களால் பித்தநீர் தன் இயற்கை வழியில் செல்லாமல் குருதியில் கலந்து குருதியினைக் கேடடையச் செய்வதால் இந்நோய் வருகிறது.

பொது குறிகுணங்கள்:-

காமாலையின் தொடக்க நிலையில் சிறுநீர் மஞ்சள் நிறமாக இழியும். நோய் முற்றிய நிலையில் நாக்கின் அடிபாகம், நகக்கண், கண் இவையும் மஞ்சளாகும்; மஞ்சள் கலந்த வெண்ணிறம் பெறும். பிறகு தோல் மஞ்சள் நிறத்துடன் பச்சை நிறம் பெற்றது போலக் காணும்.

நோய் தீவிரமடையும் நிலையில் மூக்கு, பல்ஈறு, வாய் இவற்றி னின்று குருதி கசியும். சிறுநீர், அரைத்த மஞ்சள் நிறத்துடன் இரத்தமும் சேர்ந்தாற்போல் காணும். வியர்வை, உமிழ்நீர், கண்ணீர், பல் இவை யும் சிலர்க்கு மஞ்சளிக்கும். மலம் வெண்மையாய் குழகுழத்து கழியும்.

சோர்வு, உடல் வறண்டு அரிப்புண்டாதல், தவளைத் தோல் போலக் காணல், நாடி நடை தளர்தல், தூக்கமின்மை, பசியின்மை எப்பொருளும் பார்வைக்கு மஞ்சளாகத் தோற்றமளித்தல் போன்றவை காமாலைக்கான பொது குறி குணங்களாகும்.

சுரம்காய்தல், வாந்தி காணல், மயக்கமுண்டாகுதல், உடல் ஊதல், கல்லீரல் வீக்கம், வயிறு நோதல், விலாக்கள் சூடாயிருத்தல், மலச்சிக் கல் ஏற்படுதல், இரத்தம் குறைந்து போயிருத்தல், கை கால் சோர்ந்து போதல், உள்நாக்கு மூக்கு இவை புண்ணாகுதல், உணவில் வெறுப்பு, தொண்டைப்புண் ஆதல் இவை மஞ்சள் காமாலையின் குறிகுணங்கள்.

வகைகள்

காமாலையை, வளிக்காமாலை, அழல்காமாலை, ஐயுக்காமாலை, வளிஐயக்காமாலை, அழலையக் காமாலை, முக்குற்றக் காமாலை, அழுகுக் காமாலை, செங்கமலக் காமாலை, கும்ப காமாலை, குன்மு காமாலை, பெருங்காமாலை, ஊதுகாமாலை, வரள் காமாலை என பதின்மூன்று பிரிவுகளாக வகுத்துள்ளார்கள்.

வளிக் காமாலையின் குறிகுணங்கள்:-

வயிறு பொருமி வீங்கும். மலம் கழியாது. உடல் வீங்கும். புறங்காலும் முகமும் வீங்கும். எத்தொழிலையும் செய்ய முடியாதபடி உடல் வலிக்கும். இளைக்கும். காது மிக வீங்கும். கண்ணில் ஒளி குறைந்து பருக்கும். பசியும் தூக்கமும் இருக்காது.

அழல் காமாலையின் குறிகுணம்:-

இவ்வகைக் காமாலையில் தோல் உலர்ந்தது போல் வறண்டு காணும். தூக்கமிருக்காது. சோம்பலுடன் படுக்கையிலேயே இருக்கத் தோன்றும். உண்ட உணவு செரிக்காது. உடம்பெல்லாம் வலிக்கும். அடிக்கடி பெருமூச்செறியும். வயிற்றிரைச்சல் ஏற்பட்டு பருக்கையாகக் கழியும். கை, கால் அசத்தியாயிருக்கும்.

ஐய காமாலையின் குறிகுணம்:-

ஐயத்தால் வரும் இவ்வகைக் காமாலை நோயில் உடம்பு முழுவதும் மஞ்சளாகும். இருமல் இடைவிடாமல் வரும். தலையும் முகமும் வியர்க்கும். நடக்க இயலாது போகும். நடந்தால் பெருமூச்சு வாங்கும். கண் அதிகமாக சிவக்கும். உடல் நடுங்கும். மார்பு கனக்கும். இந்நோயுள்ளவர்கள் துவர்ப்பினைச் சாப்பிட (பாக்கு சாப்பிட்டால்) மயக்கமேற்படும்.

வளிஐயகாமாலையின் குறிகுணம்:-

உண்ட உணவு செரியாது. உடல் மூக்கு இவற்றில் வியர்வை உண்டாகும். கண்ணில் நீர் கசியும். வயிறு இரைந்து பொருமிக் கொள்ளும். நாவும் கண்ணும் வெளுக்கும். வேகமாக நடந்தால் பெருமூச்செறியும். நகம் வீங்கும். அதிக இருமலுண்டாகும்.

அழலைய காமாலையின் குறிகுணம்:-

இப்பிரிவு நோயில் உடல் மஞ்சள் நிறமடையும். வாந்தி வரும். தலை வலித்து நெஞ்சு புண்பட்டு தளர்ந்து போகும். பால் போல் வெள்ளையாகக் கழியும். தாகம் உண்டாகும். உணவு செரியாமை, மயக்கம், உடல் முழுவதும் வீங்கல், மூச்சு, கைகால் வெளுத்தல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

முக்குற்ற காமாலையின் குறிகுணம்:-

இவ்வகையில் மேற்கூறிய வகைக்குரிய ஓரிரண்டு குறிகுணங்கள் காணும். அத்துடன் உடல் மிகவும் களைப்படைந்து எரிச்சலையுண்டாக்கும். அடிக்கடி உடலில் சத்தில்லாதது போல் தளர்ச்சி ஏற்பட்டு இருமலுண்டாகும். நீர் வேட்கை, விக்கல், உடல் கடுப்பு, புளித்தேப்பம் ஆகிய குறிகுணங்களும் இணைந்திருக்கும். நா புளிக்கும். குறைவான பசியெடுக்கும். குளிருண்டாகும். அடிவயிறு வீங்கும்; வியர்க்கும்.

பெருங்காமாலையின் குறிகுணம்:-

சிறுநீர் மஞ்சளாதல், உடல் வீங்கி வன்மை குறைதல், முகம், கால், கை, கண், உள்நாக்கு, நாக்கு இவை மஞ்சள் நிறமடையும். நோயின் வன்மையைக் கண்டு மனச்சலிப்பு, பெருமூச்சு, வருத்தம் உண்டாகும். மலக்கட்டு உண்டாகும். முகம் மினுக்கும். பசிக்குறைவு உண்டாகும். நாடி நடை தளர்வுறும்.

செங்கமலக் காமாலையின் குறிகுணம்:-

இப்பிரிவு காமாலையில் இதயம் வன்மையிழந்து விடும். அதனால் உடலில் தளர்ச்சி ஏற்பட்டு சோம்பலைத் தரும். அத்துடன் சிறுநீர் வற்றி சிவந்த மஞ்சள் நிறத்துடன் வெளியாகும். உடலும் நகமும் வெளுக்கும். உடல் வற்றிச் சுரமேற்படும். உள்நாக்கும் வெளிநாக்கும் உமிழ்நீரும் மஞ்சள் நிறமாகும்.

கும்ப காமாலையின் குறிகுணம்:-

உடம்பு கனக்கும்; அடிக்கடி களைப்புண்டாக்கும். சிறுநீர் மஞ்சளாகக் காணும்; மாலை நேரத்தில் உடல் வியர்க்கும். கண் சிவக்கும், பூமாலை துவள்வது போல் நோயாளி துவண்டு கிடப்பார். மயில் நின்று கொண்டு உறங்குவது போன்று இந்நோயால் பாதிக்கப்பட்டவனும் நோயின் வன்மையால் நின்று கொண்டே தூங்குவான். சீதக் கழிச்சல் வெளியாவது போன்று இதிலும் மலம் குதுக்கெனக் கழியும்.

குன்மகாமாலையின் குறிகுணம்:-

வாய்வெளுக்கும், கண் பசுமைநிறமடையும். சிறுநீர் மஞ்சள் நிறம் பெற்று குழம்பாய் வெளியேறும். உணவு செரிக்கும் பொழுது அடிவயிறு வலித்து வாந்தியாகும். மூக்கில் வாசனை தெரியாது. அடிக்கடி இருமி மூச்சு வாங்கல், பிணத்தைப் போல் அசையாது கிடத்தல் அல்லது வயிற்று வலி பொறுக்க முடியாது படுக்கையில் புரளல் என்னும் குறிகுணங்கள் குன்மமஞ்சள் நோயில் காணும்.

அழகுக் காமாலை நோயின் குறிகுணம்:-

கை, கால் அசதி, புருவம், கண் இவை கழற்சிக்கொடிக் காயைப் போல் பச்சை நிறமடைதல், நீர் வேட்கை சிறுநீர் மஞ்சளாகக் கழிதல், நீர்ப்புழை எரிதல், உணவு செரிக்காது வயிறு உப்பிசம் கொள்ளல், உடல் அனல் போல் வெதும்பல் ஆகிய குறிகுணங்கள் அழகுக் காமாலைக்குரியன.

அசாத்திய குறிகுணம்:-

1) சீதக்கழிச்சல் காணுதல் (கும்பம்)
2) நின்று கொண்டே தூங்குதல் (மயில் போல்) (கும்பம்)
3) சிறுநீர் மஞ்சளித்து குழம்பு போல் வெளியேறுதல் (கும்பம்)
4) மூக்குவாசனை தெரியாமல் இருத்தல் (குன்மம்)
5) பிணத்தைப் போல் அசையாமல் கிடத்தல் (குன்மம்)
6) பொறுக்க முடியாத வயிற்றுவலி காணல் (குன்மம்)
7) புறங்கால், முகம், உடல் வீக்கம் காணல் (வளி)
8) கண்பார்வை மங்கலாதல் (வளி)
9) இருதய பாதிப்பு ஏற்படுதல் (செங்கமலம்)
10) உடல் முழுதும் முடி உட்பட கழற்சிக்காய் நிறமாக இருத்தல் (அழகு, முக்குற்ற காமாலை) பார்வை - யூகிமுனி.
11) காமாலையில் விக்கல் ஏற்படுதல் ஆகியவை அசாத்திய குறிகுணங்களாகும்.

தீரும் வகை:-

மேற்சொல்லப்பட்ட காமாலை பதின்மூன்றினுள் அழல் காமாலை, பெருங்காமாலை, ஐய காமாலை, ஊது காமாலை, வறட்காமாலை, வளிஐய காமாலை, அழலைய காமாலை ஆகிய ஏழும் மருத்துவத்திற்குக் கட்டுப்பட்டு எளிதில் நீங்குவனவாகும்.

எளிதில் தீராத வகைகள்:-

வளிக்காமாலை, செங்கமலக் காமாலை, அழகுக் காமாலை, முக்குற்ற காமாலை, கும்ப காமாலை, குன்ம காமாலை ஆகிய ஆறும் தீராதனவாகும்.

மருத்துவம்:-

அழல் குற்றம் பாதிக்கப்பட்டு இருப்பதால், அதைத் தன்னிலை படுத்த, 'வமனத்தால் பித்தம் தாழும்' என்ற கூற்றுப்படி வாந்தி செய்விக்க வேண்டும். இந்நோயில் பித்தநீர் அதிகப்பட்டு கூடியதால் இரத்தமும் நன்னிலையில் இல்லாது இருப்பதால் மிகுந்துள்ள பித்த நீரை வெளியாக்கவும், இரத்தத்தில் வன்மையைப் பெருக்கவும் மருந்து கொடுக்க வேண்டும்.

1) மிகுந்துள்ள பித்த நீரை வெளிப்படுத்த, வாந்தி செய்விக்கவும், கழிச்சலை உண்டாக்கவும் தக்க மருந்துகளை வழங்க வேண்டும்.

(நோயாளியின் நிலை அறிந்து தேவைப்படின் வாந்தி, கழிச்சலுக்கு மருந்து கொடுக்கவும்.

2) சிறுநீரைப் பெருக்கி மிகுந்துள்ள பித்தநீரை வெளியேற்ற சிறுநீர் பெருக்கி செய்கையுள்ள மருந்துகளை வழங்க வேண்டும்.

(3) இரத்தத்தில் வன்மையைப் பெருக்க, அயச் சத்துள்ள மருந்துகளை வழங்க வேண்டும்.

(4) இந்நோயில் பசித்தீ குறைந்துள்ளபடியால், பசித்தீயினைத் தூண்டக்கூடிய, மருந்துகளை வழங்குதல் வேண்டும்.

(5) ஈரல் இந்நோயில் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தால், ஈரல் தேற்றி மருந்துகள் வழங்கப்படுதல் வேண்டும்.

6) இந்நோயில் மலச்சிக்கல் இருந்தால் மலத்தைக் கழிக்க, தகுந்த மருந்துகளை வழங்க வேண்டும். (எண்ணெய் வகை கொடுக்கக் கூடாது)

(மண்டூர அடைக்) குடிநீர்:- 1

சுத்தி செய்த மண்டூரம் 280 கி., மாவிலை, நீர் முள்ளி, கீழாநெல்லி, கரிசாலை இவற்றை வகைக்கு 175 கி. நற்சீரகம் 35 கி எடுத்துக் கொள்க. மேற்சொல்லப்பட்ட ஆறு பொருட்களையும் அளவுப்படி எடுத்திடித்து அதனுடன் 10 பங்கு நீர் சேர்த்து எட்டிலொன்றாக வற்றும்படி காய்ச்சி அடைக்கியாழமாக வைத்து நோயின் வன்மைக்கும் நோயாளியின் வயதுக்கும் தக்கபடி காலை, மாலை 30 முதல் 60 மி.லி. வரை வழங்க காமாலை தீரும்.

குறிப்பு:-

மண்டூரத்தைச் சேர்ப்பதால், குருதியின் வன்மை பெருகுகிறது.

மாவிலை சேருவதால் ஈரல் வீக்கம் குறைகிறது.

நீர்முள்ளி சேருவதால், சிறு நீர் அதிகம் வெளியேறி பித்த நீர் வெகுவாக வெளியேற்றப்படுகிறது.

கீழாநெல்லி, கரிசாலை, சீரகம் இவை காமாலை நோய்க்கு முக்கிய மருந்துகளாகப் பயன்படுகிறது. இதனால் முறையே வாத, பித்த, கப, காமாலைகளை இக்குடிநீர் போக்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

குடிநீர்:- 2

கற்றாழைச் சோறெடுத்து சட்டியிலிட்டு கடுக்காய் பொடிபோட்டு வைத்தால் நீர் வெளியாகும். அவ்வாறு செய்த 280 மி.லி. நீரில் சர்க்கரை போட்டு காலையிலே கொடுக்கவும். காமாலை தீரும். நீர் சுத்தமாய் இருக்க வேண்டும். மூன்று (அல்லது) ஐந்து நாளில் குணமாகும்.

குடிநீர்:- 3

பசுவின் பாலையும் கற்றாழை நீரையும் கலந்து சர்க்கரை போட்டுக் குடிக்கவும். உப்பு, புளி, கரப்பானை உண்டாக்கும் பண்டங்கள் ஆகாது.

குடிநீர்:- 4

பொன்னாங்காணி, சிறுகீரை, ஓரிதழ்த்தாமரை, சீந்தில் இவற்றைக் குடிநீர் செய்து கொடுக்கவும்.

(கீழாநெல்லிக்) குடிநீர்:- 5

கீழாநெல்லிச் சமூலம், மஞ்சள், கரிசாலை, வெள்ளாட்டுப் புழுக்கை, ஆமணக்கம் வேர், சுக்கு, முடக்கத்தான் வேர் ஆகிய ஆறு பொருட்களையும் வகைக்கு 5 கி. எடுத்து குடிநீர் செய்து காலை, மாலை இரு வேளையும் 60 மி.லி. புகட்டி வர மஞ்சள் காமாலை நீங்கும். பத்தியம்:- பாலும் சோறும்

குடிநீர்:- 6

சிறுதேக்கு, வாய்விடங்கம், வால்மிளகு, கடுகுரோகணி, சுக்கு, ஏலம், திப்பிலி, இலவங்கம் , தான்றி, தக்கோலம், போஸ்தக்காய் ஓடு ஆகியவற்றை வகைக்கு 9 கி. எடுத்து இடித்து பாத்திரத்திலிட்டுக் கொள்க. 2.6 லி. தண்ணீர் விட்டு காய்ச்சி எட்டொன்றாகச் சுருக்கிக் கொள்ள வேண்டும். அக்குடிநீரைக் குழந்தைகளுக்குக் கொடுக்க காமாலை போகும்.

(அதிமதுரக்) கற்கம்:- 1

அதிமதுரமும் சங்கம் வேரும் வகைக்கு 9 கிராம் எடுத்து அதை எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்து பசுவின்பாலில் கலந்து காலை மாலை இருவேளையும் கொடுக்க வேண்டும்.

(கீழாநெல்லி) கற்கம்:- 2

கீழாநெல்லிச் சமூலமும் மணித்தக்காளி இலையும் வகைக்கு 5 கி. சேர்த்து பசுவின் தயிரில் அரைத்து உட்கொண்டால் மஞ்சள் காமாலை தீரும். இதை மும்முறை அல்லது நோய் நீங்குமட்டும் கொடுக்கலாம். அன்றியும் 3 முதல் 5 முறை கொடுப்பதும் உப்பு, புளி நீக்கி பால்சோறு, வெந்நீர்ச் சோறு உண்ணச் செய்தலும் வழக்கம்.

கற்கம்:- 3

வெள்ளைச் சாரணையை அரைத்து விழுங்க காமாலை சரியாகும்.

கற்கம்:- 4

அரப்பொடி, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு 16 கி. வெள்ளுள்ளி 24 கி. எடுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து ஒரு நாளைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவாக மூன்று நாள் கொள்ள காமாலை குறையும்.

கற்கம்:- 5

கிட்டம், இரும்புப் பொடி, வெள் வெங்காயம், முருங்கையிலை, கரிசாலை, முற்றின தேங்காய் இவற்றைச் சமனெடுத்து தேவையான அளவு இளநீர் விட்டரைத்து கொள்க. அதனை 2 1/2 கி. அளவு இருவேளையும் கொடுக்க மஞ்சள் காமாலை தணியும்.

கற்கம்:- 6

தாழை இலையை அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து எருமைத் தயிரில் மூன்று நாள் கொடுத்து வந்தால் சிறுநீர் தெளிவடையும். மஞ்சள் காமாலை குணமாகும்.

கற்கம்:- 7

கீழாநெல்லிச் சமூலத்தை அரைத்து 4 கி. அளவு எடுத்து, பசும்பால் 100 மி.லி. கொண்டு வந்து பாலில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் சங்கில் வைத்து கொடுக்கவும். இவ்வாறு 5,7,9 நாட்கள் நோயின் வன்மை, குழந்தையின் தன்மையை அறிந்து கொடுக்கவும். உப்பைக் குறைத்துக் கொடுக்கவும். எண்ணெய் பண்டங்கள் ஆகாது. பாலும் சோறும் சாப்பிடவும்.

கற்கம்:- 8

கீழ்க்காய் நெல்லி இலை 1 பங்கு, மிளகுச் சூரணம் 1/4 பங்கு எடுத்துக் கொள்க. இவ்விரண்டையும் சேர்த்தரைத்து வெண்ணெய் போலான பின்பு எடுத்து வயதிற்குத் தக்கபடி 2 கி. முதல் 8 கி. வரை, குழந்தையின் தன்மை நோயின் வன்மை, மென்மையை அறிந்து பசுவின் பால் அல்லது மோரில் கரைத்துக் கொடுக்கவும். இவ்வாறு ஏழுநாள் காலை, மாலை கொடுக்கவும். நோய் கடுமையாயிருப்பின் புளியை நீக்கவும்.

சூரணம்:- 1

கீழாநெல்லிப் பருப்பு, வாய்விடங்கம், ஏலம், இலவங்கப்பத்திரி கிராம்பு, சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து சூரணம் செய்து 250-500 மி.கி. அளவு வயதிற்குத் தக்கபடி கொடுக்கவும். காமாலை குறையும்.

சூரணம்:- 2

திப்பிலி, திப்பிலிமூலம் வகைக்கு 171/2 கி., அரத்தை 70 கி., கஸ்தூரி மஞ்சள் 17 1/2 கி., பழங்கிட்டம் 70 கி. அரப்பொடி 17 1/2 கி., கருப்புக்கட்டி 140 கி. எடுத்து தனித்தனியே இடித்து சூரணம் செய்து கருப்புக்கட்டியில் சேர்த்து உருண்டை செய்து ஏழு பொழுது அந்தி சந்தி கொள்ளவும். கார்ப்பு, புளி தவிர்க்கவும்.

சூரணம்:- 3

நிலஆவாரையின் சமூலத்தை இடித்துச் சூரணித்துக் கொள்ள வேண்டும். பழுத்த எருக்கன் இலையை வதக்கி சாறு பிழிந்து கொள்க. சூரணத்தைச் சாற்றில் குழப்பி நோய் தீரும் வரை அளவறிந்து கொடுக்க காமாலை தீரும்.

சூரணம்:- 4

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றைச் சமமெனடுத்துப் பொடித்துக் கொள்க. மண்டூரத்தை 12 கி. எடுத்து சேர்த்து தேவையான அளவு தேனில் கலந்து உள்ளுக்குக் கொடுத்து பின் மோரும் சோறும் சாப்பிட காமாலை தீரும்.

இளகம்:-

எலுமிச்சம்பழச்சாறு, வெற்றிலைச்சாறு, கையாந்தகரைச்சமூலச் சாறு, காட்டு முல்லை சமூலச் சாறு இவற்றை வகைக்கு 1.3 லி. எடுக்க. திரிகடுகு, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், கடுகுரோகணி, வாய்விடங்கம், வெள்ளுள்ளி, இந்துப்பு, பெருங்காயம் வகைக்கு 25 கி. எடுத்து மேற்கூறிய சாற்றில் 5 நாள் ஊறப்போட்டு பின்பு எடுத்தரைத்துக் கொள்க. சட்டியில் விழுதைப் போட்டு நல்ல தேன் விட்டுக் கிளறி இலேகியமாகச் செய்து, நெல்லிக் காயளவு 12 நாள் 2 நேரம் சாப்பிடவும். காமாலை குணமாகும்.

(மண்டூரக்) குளிகை:- 1

நூறு வருடமான இரும்புக் கிட்டத்தை எடுத்துப் பொடியாக்கி கோமியத்தில் நான்கு முறை காய்ச்சிக் கொள்க. அந்நீரிலேயே கரைத்துக் கொள்க. பின் அதனை வெயிலில் வைத்துக் கிண்டி உலர வைத்துக் கொள்க. சீலையில் வடிகட்டி வைத்துக் கொள்க. சீரகம் (இரண்டு வகை) சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஓமம், பெருங்காயம் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து வறுத்துப் பொடியாக்கிக் கொள்க.

கரந்தை, சாரணை, துளசி, கையாந்தகரை ஆகிய நான்கு மூலிகை களின் சாற்றைச் சமன் எடுக்க. நான்கு நாட்கள் ஒவ்வொரு சாற்றையும் தனித்தனியே விட்டு மேற்கூறிய மருந்துச் சரக்குகளை அரைத்து உலர வைத்துக் கொள்க.

மீண்டும் தேன் வார்த்தரைத்து பத்திரப்படுத்திக் கொள்க. சுண்டைக்காயளவு (400 மி.கி.) இருபது நாள் இரு நேரமும் உட் கொள்ள காமாலை குணமாகும். புளியை நீக்கி உணவைக் கொள்ள நலமாகும்.

உருண்டை:- 2

சுக்கு, மிளகு, பெருங்காயம், திப்பிலி, இந்துப்பு, வெள்ளுள்ளி, தகரை, வசம்பு, அசமதாகம் என்னும் ஒரு வகை ஓமம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகிய இக்கடைச் சரக்குகளைச் சமன் எடுக்க; பொடித்துக் கொள்க. கரிசாலை, பிரமி, கழற்சியிலை, கீழா நெல்லி ஆகிய மூலிகைகளின் சாற்றை எடுத்து மேற்கூறிய பொடியைச் சேர்த்தரைத்து 1 கி. அளவுள்ள மாத்திரை செய்து உலர்த்தி பத்திரப் படுத்திக் கொள்க. அதனைக் குழந்தைகளின் வயதுக்குத் தக்கவாறு, ஒரு நேரத்திற்கு 1-3 மாத்திரை தேன் அல்லது மோரில் கொடுக்க காமாலை சரியாகும்.

மருந்து:-

பவள பற்பம் 7 கி., அவுரிச்சாறு 325 மி.லி., தண்ணீர் 325 மி.லி. எடுத்துக் கொள்க. வரகரிசி 250 கி. போட்டு பொங்கிக் கொள்க. மூன்று நாள் மூன்றுவேளை சாப்பிடவும். இதற்குக் கடுமையான பத்தியம்.

வறட்காமாலை குறிகுணம்:-

கால் கைகள் வற்றிபோகும். ஓய்ச்சலாக இருக்கும். நீல நிறமாகக் கழியும். சிறுநீர் சிவந்து போகும். நீர் கழியும்போது நீர்ப்புழை எரிச்சலாகும். குத்தல் உண்டாவதுடன் உணவில் சுவையறியாமை, மாலையில் கண் தெரியாமை, உடல் குத்தல் என்னும் குறிகளை காட்டும். உடம்பு எரிச்சலாகி கடுக்கும். அடிக்கடி தளர்ச்சியுமிருமலும் உண்டாகும். புளியேப்பம் வருதல், நாக்கு புளித்தல், அடிக்கடி பொய்ப்பசி எடுத்தல், உடல் குளிர்தல், அடி வயிறு வீங்குதல், உடல் வியர்த்தல் என்பன ஏற்படும். கண் பச்சை நிறமடையும். கால் ஓயும், உடம்பு உலரும், நீர்வேட்கை அதிகமுண்டாகும். சிறுநீர், கண் மஞ்சளாயிருக்கும் முகம், கை கால் வீங்கும்.

(மணித்தக்காளி) கற்கம்:- 1

மணித்தக்காளி, கீழாநெல்லிச் சமூலம் ஆகிய இரண்டையும் சரி எடை எடுத்து அரைத்து எலுமிச்சங் காயளவு எடுத்துக் கொள்க. எருமைத் தயிரில் கலந்து கொடுக்க நீங்கும். எருமைத்தயிர், பால் உபயோகித்து வர நன்றாம்.

கற்கம்:- 2

கிட்டம், இரும்புப்பொடி, வெள்வெங்காயம், முருங்கையிலை, கரிசாலை, முற்றின தேங்காய் இவற்றைச் சமமாக எடுத்து தேவையான அளவு இளநீர் விட்டு அரைத்துக்கொள்க. அதனை 2 1/2 கி. வீதம் இருவேளை கொடுக்க வறட்காமாலை நீங்கும்.

ஊதுகாமாலையின் குறிகுணம்:-

உடல் நடுங்கும்படியான சுரங்காயும்-கீழ் நோக்குங்கால் நீர் வேட்கை, தலையில் நீர்கோர்த்தல், தாய்க்குப் பால் சுண்டி நீராதல் போன்றவை ஏற்படும். இவ்வூதலின் மலசலக் கழிவிற்கு அடிப்படையான கீழ் மூலத்தில் புகுந்தால் உடம்பு ஊதித் தடித்தல், சுரம் அதிகமாய்க் காய்தல், கண் வெளுத்தல், உதடு வெடித்தல், தலை

நோதல், உடல் வீங்கல், கை, கால்கள் அயர்வாதல், முகம் மாறுபடல், பசியெடுக்காமை, சூடு அதிகமாதல், காதடைத்தல், இளைத்தல் ஆகிய குறிகுணங்கள் உண்டானால் அது ஊதுகாமாலையினுடையவை என லாம்.

முடக்கொத்தான் குடிநீர்:-

முடக்கத்தான் வேர், பிரமிய வழுக்கை, நீர்ச் சுண்டி (நொச்சி), சுக்கு, நீர் முள்ளி, சங்கங்குப்பிவேர், சிறுகண்டங்கத்திரி ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுத்து 335 மி.லி நீரில் இட்டு அடுப்பேற்றி 80 மி.லியாக சுண்டக் காய்ச்சி காலை, மாலை 15 மி.லி. - 30 மி.லி. அளவறிந்து கொடுக்கவும்.

கற்கம்:-

ஒரு கைப்பிடியளவு அவுரியிலையைக் கொண்டு வந்து தண்ணீர் படாமல் பசுவின் பாலில் வார்த்தரைத்து மூன்று பங்காக்கி தினமும் மூன்று வேளை பாலில் கொடுக்கவும். இவ்வாறு மூன்று நாள் தொடர்ந்து வழங்கவும்.

மாத்திரை:- 1

இம்மாத்திரையில் 'அன்ன பேதிச் செந்தூரம்' சேர்க்கப்பட்டுள்ள தால் அதற்கான செய்முறை இங்கு முதலில் கூறப்பட்டுள்ளது.

அன்னபேதிச் செந்தூரம்:-

தேவையான அளவு அன்னபேதியைக் கல்வத்திட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுக சிறுக வார்த்து 6 மணி நேரம் அரைத்து வெண்ணெய் போலான பின்பு வில்லை செய்துலர்த்தி வைக்க. அதனை அகலிலிட்டு மேலகல் மூடி இரண்டு மூன்று சீலைமண் செய்துலர்த்தி இருபது பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும். இதனைத் தனியாகவும் பிற மருந்துக ளில் சேர்த்தும் உபயோகிக்கலாம்.

இந்த அன்னபேதிச் செந்தூரம், வெள்ளைப் பூண்டிதழ், கையாந்த கரையிலை ஆகிய இவற்றை வகைக்குச் சமமாக எடுத்துக் கொள்க. இவற்றைக் கல்வத்திலிட்டு இளநீர் (அல்) தண்ணீர் வார்த்து 3 மணி நேரம் அரைத்து வெண்ணெய் போல மிருதுவான போது எடுத்து கடலை அளவுள்ள மாத்திரைகள் செய்து வைக்க. வயதிற்குத் தக்கவாறு மாத்திரை 1, 2 எடுத்துக் கொள்க. அதனைத் தேன், வெல்லம்

முதலியவற்றில் உரைத்து காலை, மாலை, இருவேளையும் கொடுத்து வர ஊது காமாலை நோய் குணமாகும்.

மாத்திரை:- 2

மேற்கூறிய அன்னபேதிச் செந்தூரம், மிளகு, கையாந்தகரைச் சமூலம் ஆகிய இம்மூன்றையும் சமவெடை எடுத்துக் கொள்க . மிளகைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மற்ற இரண்டையும் சேர்த்து இரண்டு (அல்லது) மூன்று மணி நேரம் அரைத்து வெண்ணெய் போலான பின்பு 330 மி.கி. அளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைக்க. வேளை ஒன்றுக்கு 1 அல்லது 2 மாத்திரை காலை, மாலை, இருவேளையும் உபயோகிக்க ஊது காமாலை நீங்கும்.

மருந்து:- 1

உத்தாமணிவேர் எடுத்து 675 மி.கி. அரிசியில் சேர்த்திடித்து ரொட்டி சுட்டு நல்லெண்ணெயும் வெல்லமும் சேர்த்து சாப்பிடவும்.

மருந்து:- 2

சாமையரிசியிலே தேங்காயைத் திருகிப் போட்டு கல்லுப்பு கூடப் போட்டு பனியிலே வைத்து 3 நாள் சாப்பிடவும்.

வழக்கிலுள்ள மருத்துவ முறைகள்:-

செந்தூரம்:-

இரும்புக்கிட்ட செந்தூரம், இரும்புச் செந்தூரம், வெடியுப்புச் சுண்ணம் (அல்) செந்தூரம், நவச்சார செந்தூரம், ஐந்துப்பு செந்தூரம், காளமேக நாராயணச் செந்தூரம் போன்றவற்றை நோய்க்கேற்ற அளவு டன் எடுத்து தக்க துணை மருந்துடன் கொடுக்க வேண்டும். தேவையெ னில் மலத்தைக் கழித்து வாந்தி செய்விக்க மேற்கூறப்பட்ட குடிநீர்களில் ஏதேனும் ஒன்றிலோ (அல்) கீழாநெல்லிச் சாற்றிலோ 12-24 கி. அளவு குழந்தைகளின் வயது, நோயின் தன்மைக்கேற்றவாறு பேதியுப்பைச் சேர்த்து கரைத்து வடித்தும் கொடுக்கலாம்.

உட்கொள்ள வேண்டிய அளவு:-

புளி, உப்பு நீக்கிய கஞ்சி வகையே நல்லது. இருமுறை வடித்த சோறு கொடுக்கலாம். எண்ணெய், நெய், வெண்ணெய் முதலிய கொழுப்புப் பொருட்களையும் அவற்றால் சமைக்கப்பட்ட உணவு வகைகளையும் நீக்குக. தாளிதம் இல்லாத காய்கறிகள் சாப்பிடுவது நல்லது.

மாத்திரை:-

சஞ்சீவி மாத்திரையை இலைக்கள்ளிச் சாற்றில் கொடுக்க இரண்டு அல்லது மூன்று முறை வாந்தியுண்டாக்கிக் கழிச்சலையும் உண்டாக்கும்.

சூரணம்:-

மருக்காரைக் காயைச் செம்பிஞ்சாக எடுத்துக் கொள்க. அதனை எலுமிச்சம்பழச்சாறு, இலைக்கள்ளிச்சாறு ஆகிய சாறுகளில் இரண்டிரண்டு நாள் ஊற வைத்து உலர்த்திப் பொடித்துச் சூரணமாக்கிக் கொள்க. 1/2 டீ ஸ்பூன் 1 சிட்டிகை அளவு கொடுக்க கழிச்சலாகும்.

கற்கம்:-

கரிசாலை, கீழாநெல்லி, சிவனார் வேம்பு, கடுக்காய், நெருஞ்சில், சரக்கொன்றைப் பூ, இலை, பட்டை இவற்றைக் கற்கமாக்கிக் கொள்ளலாம்.

குடிநீர்:-

கீழா நெல்லியின் சாறு 165 மி.லி எடுத்து அதில் 12 முதல் 24 கி. குழந்தைகளின் வயது, நோயின் தன்மைக்கேற்றவாறு பேதியுப்பைப் கூட்டி சிறுதீயில் வைத்தெரித்து உப்பு கரைந்த உடனே வடித்துக் காலையில் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்ய வாந்தியையும் கழிச்சலையும் உண்டாக்கி பித்து நீரைக் கழியச் செய்யும்.

*** மதுரை மாவட்டம் கம்பம் என்ற ஊரில் உள்ள வெள்ளிவேல் சாமியார் மடத்தில் டாக்டர் A. ரஞ்சித் சிங் B.I.M. அவர்கள் பரம்பரையில் சித்த மருத்துவ வளர்ச்சியினை முன்னிட்டு இலவசமாக வழங்கப்பட்ட பரம்பரை, சர்வகாமாலை மாத்திரை. கீழா நெல்லிச் சமூலம், கரிசாலைச் சமூலம், தும்பை இலை, அம்மான் பச்சரிசி நான்கையும் சமஅளவாகச் சேர்த்து அரைத்து பெரிய நெல்லிக்காயளவு மாத்திரைகளாக உருட்டி காயவைத்து எடுத்துக் கொள்ளவும். நோய் அளவு, நோயாளியின் தன்மை அறிந்து காலை, மதியம் மாலை, ஆக மூன்று வேளையும் 1 முதல் 2 மாத்திரை வீதம் வழங்க சகலவிதமான காமாலையும் தீரும். வெந்நீர் அனுபானம் ஆகும். 3 நாளிலிருந்து 7 நாளில் குணம் உண்டாகும். இது அனுபவத்தில் கை கண்ட முறை. பத்தியம், பால்சாதம், மோர் சாதம் சேர்க்கவும்.**

உப்பில்லாத மோர், வெண்ணெய் நீக்கிய மோர், பார்லிக் கஞ்சி, குளுக்கோஸ் தண்ணீர், குளுக்கோஸ், இளநீர் சேர்க்கவும்.

குடிநீர்:-

நீர்முள்ளிப் பூ, வேப்பம்பூ, நெருஞ்சில், கடுக்காய், தான்றி நெல்லிவற்றல், சிவதை இவற்றை ஓரளவாய்க் கொண்டு எட்டு பங்கு நீரிலிட்டு எட்டொன்றாய்ச் சுருக்கி வடித்துக் கொடுக்க வேண்டும். கழிச்சல் ஏற்பட்டு பித்தநீர் வடிந்து நோய் நீங்கும்.

கொன்றை, வேம்பு, நெல்லி, கீழா நெல்லி, மரமஞ்சள், கறிமஞ்சள், கடுகு இவற்றைக் குடிநீராக்கி 15-30 மிலி. அளவு காலை, மாலை உட்கொள்ள வேண்டும். இதனால் வாந்தி, கழிச்சல் உண்டாகும்.

பற்பம்:-

1) சிலாசத்துப்பற்பம்.

2) வெடியுப்புச்சுண்ணம், சிலாசத்துப்பற்பம், நண்டுக்கல் பற்பம் போன்றவற்றை வழங்கலாம். நீர் முள்ளி, நெருஞ்சில், மண்டூராதி அடைக்குடிநீர் இவற்றைப் பயன்படுத்தவும். இதனால் சிறுநீர் மிகுதியாக வெளியாகி, மிகுந்துள்ள பித்தநீர் வெளியேற்றப்படுகிறது.

3) அன்னபேதி, வெடி அன்னபேதி, காந்தசெந்தூரம், லோகமண்டூரச் செந்தூரம், அயச்செந்தூரம் இவற்றைத் தேனில் வழங்க குருதியின் வன்மை பெருகும்.

4) பஞ்சதீபாக்கினிச் சூரணம், ஏலாதிச் சூரணம், சீரகச்சூரணம் இவற்றைத் தனித்தனியாகத் தேனில் வழங்க பசித்தீ உண்டாகும்.

5) கீழா நெல்லி, கரிசாலை இவற்றின் சூரணம், சாந்தசந்திரோதயம் இவற்றை வழங்க, ஈரல் வீக்கம் குறைந்து வன்மைபெறும்.

6) நிலவாகைச்சூரணம், திரிபலாதிச் சூரணம் இவற்றை இரவில் வெந்நீருடன் கொடுக்க மலம் இளகும்.

இந்நோயில் சிறப்பாக, சுரம் இருந்தால், சாந்த சந்திரோதய மாத்திரை, வசந்தகுசுமாகரம், நிலவேம்புக் குடிநீர் இவற்றை வழங்கலாம்.

கீழா நெல்லி, வால்மிளகு, ஏலரிசி, சீரகம் இவற்றைச் சேர்த்து அரைத்த கீழா நெல்லி கற்கத்தை வெள்ளாட்டுப்பால், பசும்பால் அல்லது மோருடன் 30 கி. அளவு, 2 வேளை உணவிற்கு முன்பு வழங்கவும்.

உணவு:-

1. இளநீர் - தண்ணீர்.
2. கரும்புச்சாறு, குளுக்கோஸ் தண்ணீர்.
3. பார்லிக் கஞ்சி.
4. ஆரஞ்சுச்சாறு (புளிப்பில்லாதது).
5. சாத்துக்குடிச்சாறு, இனிப்பான பழங்கள், வாழைப்பழம், ஆப்பிள், உலர்ந்த திராட்சை.
6. குழைய வேகவைத்த சாதம் + உப்பு, வெண்ணெய் நீக்கப்பட்ட மோர்.
7. ஆவியில் வெந்த இடியாப்பம், புட்டு, இட்லி + சீனி அல்லது தேன்.
8. துவரம் பருப்பு, பச்சைப்பயறு சேர்ந்த சாதம்.
9. அரைக்கீரை, மணித்தக்காளிக் கீரை, பொன்னாங்காணிக்கீரை, முருங்கைக் கீரை சேர்ந்த சாதம்.
10. வெள்ளாட்டுப்பால், காய்ச்சிய ஏடு எடுத்தபால்.
11. தினமும் 2 வேளை இளவெந்நீரில் குளிக்கவும்.

முக்கியமாக நீக்க வேண்டிய உணவுகள்:-

1) உப்பு
2) புளிப்பு
3) காரம்
4) எண்ணெய், நெய், சேர்த்த பொருள்கள்
5) புகை - புகையிலை
6) மதுபானங்கள்
7) பாகல்காய், அகத்திக்கீரை
8) மீன், கருவாடு, நண்டு, ஆட்டுக்கறி இதர வகை கவிச்சுப் பொருட்கள்.

சித்த மருத்துவத்தில் மேற்குறிப்பிட்டுள்ளவாறு காமாலையின் காரணங்கள், குறிகுணங்கள் வகைகள் அமைய, நவீன மருத்துவத்தில், மஞ்சள் காமாலை வருவதற்குரிய காரணங்கள், அதன் தன்மைகள், பிரிவுகள் குறித்து கீழ்கண்டவாறு குறிப்பிடப்படுகின்றது.

ஆங்கில முறை மருத்துவம்

உடலிலுள்ள திரவங்கள் ((Body Fluid) அனைத்திலும் பிலிரூபின் (Bilirubin)என்ற நுண்பொருள் அளவுக்கு மீறி அதிகமாவதால் (Above Normal Limits) தோலும் மெல்லிய தோலும் (Mucous Membrane) மஞ்சள் நிறமாகின்றது. இதைத்தான் நாம் 'மஞ்சள் காமாலை' என்கி றோம். இது இரத்தத்தில் 50 மி.லி. / மோல்ஸ் / லிட்டர் (3 mg. / 100 ml.) என்ற அளவுக்கு இருக்கும்போது இதை மஞ்சள்காமாலை என்று கணிக்கின்றனர். பிலிரூபின் என்ற நுண்பொருள் மூளைக்குச் செல்வதில்லை. பிறந்த குழந்தைக்கு சில வியாதிகளினால் இது மூளைக்குச் செல்கிறது.

மஞ்சள் காமாலையைக் கீழ்கண்டவாறு மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

(1) ஹீமோலைடிக் (Haemolytic)
(2) ஹெப்டோ செல்லுலார் (Hepatocellular)
(3) அப்ஸ்ட்ரக்டிவ் (Obstructive)

(1) ஹீமோலைடிக் என்னும் பிரிவின் காரணமும் குறிகுணமும்:-

இந்த பிரிவில் சிவப்பு இரத்த அணுக்கள் அதிகமாக அழிக்கப்படு கின்றன. அதனால் பிலிரூபின் அதிகமாக உற்பத்தியாகின்றது.

பிலிரூபின் மலத்தில் கலக்கும்போது ஸ்டெகோ பிலிநோஜன் (Bilinogen) என்று அழைக்கப்படுகிறது. ஸ்டெர்கோ (Sterco) மூத்திரத் தில் (Urine) கலக்கும்போது இது யூரோபிலிநோஜன் (Urobilonogen) என்று அழைக்கப்படுகிறது. யூரோபிலிநோஜன் அதிகமாவதால் சிறுநீர் (Urine) மஞ்சள் நிறமாக காட்சியளிக்கிறது. ஸ்டெகோபிலிநோஜன் அதிகமாவதால் மலம் அதிக (dark) நிறமுடையதாகக் காணப்படுகிறது. உடல் வெளுத்து (Pallor) காணப்படும். கல்லீரல் சற்று பெரியதாகும். பிலிரூபின் பிணைந்தது (Conjugated), பிணையாதது (Unconjugated) என்ற இருவகைப்படும்.

ஹீமோலைடிக் மஞ்சள் காமாலையில் பிலிரூபின் சிறுநீரில் வருவ தில்லை. ஏனென்றால் இந்த நோயில் பிணையாத பிலிரூபின் அதிக மாக உள்ளது.

காரணங்கள்:-

காமாலையின் இப்பிரிவு, சிவப்பு அணுக்களில் உள்ள குறைகள், பரம்பரை இரத்த நோய்கள், ஒரு சில மருந்துகளைத் தொடர்ந்து பயன்படுத்துதல், மலேரியா நோயினால் பீடிக்கப்படுதல் முதலிய காரணங்களால் வரும்.

(2) ஹெப்பட்டோ செல்லுலார் காமாலை:-

வைரஸ்கிருமிகள், மருந்துகள், சாராயம், சிரோசிஸ், நாட்பட்ட ஈரல் நோய் முதலிய காரணங்களால் ஈரலிலுள்ள செல்கள் சுரக்கும் நீரினைச் சுரக்காது பழுதடைந்து விடுகின்றன. அதனால் ஈரலில் உற்பத்தியாகும் பிலிரூபினைப் பித்தப்பைக்கு அனுப்ப முடிவதில்லை.

காமாலையின் இந்தப் பிரிவில் பிணைந்த மற்றும் பிணையாத பிலிரூபின் இரத்தத்தில் அதிகமாக இருக்கும். நோய் ஆரம்ப நிலையிலும் முற்றிய நிலையிலுமாக இருக்கும்.

(3) அடைப்புக் காமாலை:- (Obstructive or Cholestatic)

இவ்வகை நோயில் ஈரலிலிருந்து குடலுக்குச் செல்லும் பித்தப் பாதை (Biliary Tract) அடைபடுவதால் பித்த நீர் (Biliary Juice) இரைப்பையை அடுத்த டியோடினம் என்ற குடல் பகுதியைச் சென்றடைவதில்லை.

1. பெரிய பித்தப்பாதை அடைப்புக்கான காரணங்கள்:-

பித்தப்பாதையில் கல் இருத்தல், தலை கணையத்தில் புற்றுநோய் ஏற்படுதல், பித்தப்பாதையில் புற்று நோய் வருதல், குடற்பூச்சிகள் பித்தப்பாதையை அடைத்துக் கொள்ளுதல் போன்ற காரணங்களால் பெரிய பித்தப்பாதையில் அடைப்பு ஏற்படுகிறது.

2. சிறிய பித்தப்பாதை அடைப்பு:-

குறிப்பிட்ட மருந்துகளைத் தொடர்ந்து உட்கொள்ளல், சாராயம் குடித்தல், நாட்பட்ட ஈரல் நோய்கள், அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தைப் பேறு ஏற்படுதல், ஈரல் புற்றுநோய் போன்ற காரணங்களால் சிறிய பித்தப்பாதையில் அடைப்பு நிகழ்கிறது.

இப்பிரிவு காமாலையின் குறிகுணங்கள்:-

தோல் பச்சை நிறமாக இருக்கும். பிலிரூபின் மலத்தில் கலக்காததால் மலம் வெளுப்பாக (அல்லது) வெண் களிமண் நிறமாகக்

காணப்படும். இந்நோய்க்குட்பட்டவர்கள் அடிக்கடி மலம் கழிப்பார்கள். சிறுநீர் அதிகமான நிறத்தில் (dark urine) காணப்படும். உடலில் அரிப்பு ஏற்படும். பசியானது குறையும். நாக்கில் ஒருவிதமான இரும்புச்சுவை (Matallic taste) தோன்றும். மேல் வயிற்றில் வலியேற்படும். காய்ச்சல், குளிர் வரும். பித்தப்பை பெரியதாகும்.

சிவப்பு இரத்த அணுக்கள் அழியாமல் பிறவியிலேயே உண்டாகும் காமாலை:-

Congenital non-heaemolytic Lyperbilirubinalmia)

1. கில்பெர்ட் சிண்ட்ரோம்:- (Gilbert's Syndrome)

இது ஹெப்பாடிக் குளுக்யூரோனில் டிரான்பரேன்ஸ் (Hepatic glucuronyl transferance) என்ற திரவம் குறைவாகச் சுரத்தலினால் வைரஸ் கிருமிகள் (Toxoplasma goodit) விஷக்கிருமிகள் (Ceptrospira Icterohaemorrhagial Coxiclla Burneti) ஆகிய கிருமிகளினால் இளம் பருவத்தில் 12 வயது முதல் 20 வரையிலும் வரக்கூடிய பிறவி நோயாகும். இப்பிரிவில் மஞ்சள் காமாலை சாதாரண அளவில் (Mild Jaundice) இருக்கும்.

2. கிரிக்ளர் நாஜர் சிண்ட்ரோம்

(Crigler-Najjar Syndrome):-

இந்த வகைக் காமாலையில் ஹெப்பாடிக் குளுக்யூரோனில் டிரான்பரேஸ் என்ற திரவம் முழுமையாகச் சுரப்பதில்லை (Complete Absence). இத்திரவம் சுரக்காததால் பிலிரூபின் பித்தப்பாதைக்குச் செல் வது தடைபடுகிறது.

3. மருந்துகளால் உண்டாகும் காமாலை:-

சல்ஃபனோமைடு
சாலிகிலேட்ஸ்
ரிஃபேம்பிசின் போன்ற காச நோய் மருந்து
சல்ஃபடைசின்
கர்ப்பத்தடை மாத்திரை

போன்ற மாத்திரைகளைத் தொடர்ந்து உட்கொண்டாலும் காமாலை வர வாய்ப்புள்ளது.

குறுகிய கால ஈரல் நோய்:- (Acute Hepatitis)

மிகக் குறுகிய காலத்தில் ஈரல் அணுக்கள் அதிகமான எண்ணிக் கையில் அழிக்கப்படுகின்றன. அதனால் இவ்வகைக் காமாலை நோய் உண்டாகிறது.

(1) விஷப் பொருட்கள் (Toxic Substances)

சில சமயத்தில் மருந்துகளே நச்சுப் பொருட்களாக மாறி உடலுக் குத் தீங்கு விளைவிக்கின்றன. குளோரோஃபோமைசின், எர்தோமை சின், ஐசோநியாசிட், ரிஃபாம்பிசின், மீதில்டோபா, இந்தோமெதாசின், குளோரோப்ரபாமைட், டெட்ராசைகளின், பெராசடமல், மஞ்சள் பாஸ் பரஸ், ஆல்கஹால் போன்ற பல மருந்துகள் உடலினுள் செல்லும்போது அவை விஷமாகி காமாலையை வரச் செய்கிறது.

(2) மெட்டபாலிக் அப்நார்மாலிட்டி (Metabolic abnormality)

வில்சன்ஸ் நோயிலும் (Wilson's disease) கர்ப்பக் காலத்தில் கடைசி மூன்று மாதங்களிலும் காமாலை ஒருவரைத் தாக்கும் வாய்ப் புள்ளது.

(3) இரத்த சுழற்சி கோளாறுகள்:- (Circulation Disturbances)

அதிர்ச்சி, வலதுபக்க அறையின் (வெண்டிரிக்கிள்) இதய தோல்வி போன்ற காரணங்களால் இரத்த கோளாறு ஏற்படுகிறது. இதனாலும் கமாலை வருகிறது.

நீண்டகால ஈரல் நோய்:- (Chronic Hepatitis)

நீண்ட நாட்களாக சாராயத்தை உட்கொள்ளுதல், நோய்க்கிருமி களால் பாதிப்பு, உடலில் எந்நோயையும் எதிர்க்கும் எதிர்ப்பு சக்தி குறைதல் ஆகிய காரணங்களால் ஈரல் அணுக்கள் பழுதடைகின்றன. தாபிதமடைந்த இவ்வணுக்களினால் நாட்பட்ட ஈரல் நோய் ஏற்படுகி றது.

காமாலை - பாடல்

குறிகுணம்

பருகவே உள்ளங்கா லுள்ளங் கைகள்
பகர்முகங்கண் ணுடம்புமிக வெளுப்பு காணும்
கருகவே காற்கைக ளோய்ச்ச லாகும்
கனமாக நடுக்கியே யிளைப்புண் டாக்குஞ்
சுருகவே மலந்தானும் வறண்டு கட்டும்
தூயமுக மஞ்சளிட நிறம தாகும்
வெருகவே வீக்கமாய்க் களைப்புண் டாகும்
மிக்காது மந்தத்தலை கனப்புண் டாகும்

(சித்.ம. பக்.340)

குறிகுணம்

கண்ணுடன் சிறுநீர் நாக்கு
கணக்கவே மஞ்சட் போலாம்
எண்ணிய சுரங்கள் வாந்தி
யெடுத்திடு மயக்க மூதல்
வண்ணமாய் மூக்கி நீரும்
வடித்திடும் வயிற்று னோயாம்
தண்ணுமஞ் சட்காமாலை
நாடிய குணங்கள் தானே

(477-356)

குண்டியக் கரமி ருந்தால்
குருப்பையாய் முகங்கால் வீங்கும்
விண்டிட ரத்தம் வற்றும்
வெதுப்புமேல் விலாவில் தோன்றும்
பண்டியின் மலமுஞ் சிக்கிப்
பசுமஞ்சட் சிறுநீ ராகும்
கண்டியாய் கண்வெ ளுக்கு
மஞ்சட்கா மாலை யாமே.

(கை.பி.போ-233) (482-114) (476-164) (477-356)

கைதான் சோர்ந்து காலசந்து
கனக்குண் ணாக்கும் புண்ணாகும்
மெய்தான் சுரமும் வீக்கமுடன்
விழிநீர் மஞ்சள் நிறமாகும்

பொய்தான் அல்ல அரோசிகமும்
புண்ணா மிடறு புகைவிதிதான்
செய்தான் மஞ்சள் காமாலை
செய்யுங் குணங்க ளிதுதானே

(ஏடு 941-34) (ஏடு 362-46)

வகை:-

உரைக்கவே ஊதுகா மாலை யோடு
உயிர்வறட்கா மாலைவா தக்கா மாலை
பிரைக்கவே பித்தாகா மாலை யோடு
பேரான சிலேட்மகா மாலை யாகும்
வரைக்கவே வாதசிலேட் டுமக்கா மாலை
வகையான பித்தசிலேட் டுமக்கா மாலை
துரைக்கவே தொந்தகா மாலையோடு
சூக்ஷமமா மஞ்சட்கா மாலை யாமே

மஞ்சளா மழகுகா மாலை யோடு
மருவுகின்ற செங்கமலக் காமாலை யாகும்
குஞ்சலாங் கும்பகா மாலையோடு
கொடிய குன்மக் காமாலை பதிமூன்றாகும்.

(சித். 341)

வளிக் காமாலை நோயின் குறிகுணம்:-

வாறான வயிறுதனைப் பொருமி விக்கும்
மலந்தானுங் கழியாது உடம்பு வீங்கும்
பூதான புறங்காலு முகம தைக்கும்
புகழ்கரும மொன்றையுந்தான் செய்ய வொட்டா
ஊறான உடல்கடுக்கு மிகவி ளைக்கும்
உறங்காது மிகவீங்குங் கண்ப ருக்கும்
பாதாள பசியில்லா துறக்க மாகும்
பண்பான வாதகா மாலை யாமே

அழல் காமாலை நோயின் குறிகுணம்:

மாலையா யுடம்புலர்ந்து முறக்க மில்லை
மகத்தான படுக்கைவிட் டேதுஞ் செய்யா
சேலையாய்ச் சோறுமே செரியா மற்றான்
சடமெங்கும் வாயுவாய்த் தியக்க மாகும்

பாலையா மூச்சதுவு மிகவுண் டாகும்
பருக்கையாய்க் கழியுமே வயிறு தானும்
ஆலையாய் வயிற்றிரைச்ச லதிக மாகு
மசதியாய்ப் பித்தகா மாலை யாமே

ஐய காமாலை நோய்:

தாமென்ற சடத்தையே யறிவ ழிக்குந்
தாக்கான இருமலே மிகவுண் டாகும்
வேமென்ற தலைமுகமும் வியர்வை யாகு
மிடுக்கான நடைமுறையு மூச்சு மாகும்
பாமென்ற பாக்கருத்தில் மிகச்செ ருக்கும்
பண்பான விழிசிவக்கு முடல்ந டுக்கும்
நேமென்ற நெஞ்சுதான் மிகக்க னக்கும்
நெடிதுயிர்க்கும் சிலேட்டுமகா மாலை யாமே.

வளிஐய காமாலை நோயின் குறிகுணம்:-

துய்க்குமனந் தனைத்தானுஞ் சீரண மாக்கா
செரிசுக மாகவொட்டாச் செரும லாகும்
முயிர்க்குமுக மூக்குகண் மிகவே வேர்க்கும்
முடுகியே வயிறிரைந்து பொருமிக் கொள்ளுங்
கயர்க்குநாக் குக்கண்ணு மிகவெ ளுக்கும்
கனமான நடையில் மூச்செறிய வைக்கும்
வியர்க்குமே நகமெல்லாம் வீக்க மாகும்
மிடுக்கான இருமலுண்டாம் வாத சிலேட்மம்.

(சித் ம-343)

அழலைய காமலை நோயின் குறிகுணம்:-

உண்டாகி வாந்திபணுஞ் செரும லாகு
மோயாமற் றலைவலிக்கு மனமறுக்கும்
வண்டாகி வயிறுகழியுந் தாக முண்டா
மனமெல்லாம் புண்ணாகி மயக்க மாகுந்
துண்டாகிச் சாதமுப்பிச் சீரணி யாது
துய்முகமுங் காலோடு கைவெ ளுக்கும்
வெண்டாகி மேனியுமே யூதிக் காணு
மிகப்பித்த சிலேட்மகா மாலை யாமே

(சித்.ம. 343)

முக்குற்ற காமாலை நோயின் குறிகுணம்:-

ஆமென்ற வங்க மழன் றேயெ ரிக்கும்
அசதிவரு மடிக்கடிக்கு இரும லுண்டாந்
தாமென்ற தண்ணீர்தான் மிகத்த விக்குஞ்
சடமெங்குங் கடுப்பெடுக்கும் புளித்தேப் பாகும்.

பெருங் காமாலைநோய்:-

''விபரமாய் மூத்திரந்தான் மஞ்ச ளாகும்
வீங்குமே சரீர மெங்கு நோவுண் டாகும்
மூபரமாய் முகங்கால்கண் கையுண் ணாக்கு
மொழிமஞ்ச ணிறமாகும் முகமி னுக்கும்
அபரமா யன்னத்தை யிறங்கொட் டாது
அழுகையாய் மனஞ்சலிக்கு மூச்சுண் டாகுந்
தபரமாய் தாதுநஷ்ட மலமும் பந்தஞ்
சார்ந்தமஞ்சட் காமாலை தன்பே ராமே.

(சித் ம. 345)

அழகுக் காமாலை நோய்

குறிகுணம்:-

பேரான கால்கையு மசதி யாகும்
போர்புருவங் கண்கள் கழற்காய் போலப்
பாரான பச்சென்று தானி ருக்கும்
பருகுநீர் மஞ்சணிற மாய்வி டுக்குந்
தீரான லிங்கத்து ளெரிப்பு மாகுஞ்
செரிக்க வொட்டா தன்னயதைச் சிதறியுப்பும்
ஆரான வழல்போல் வெதும்பு மேனி
அழகு மாலையிட வாண்மை தானே

(சித்.ம.346)

செங்கமலக் காமாலை நோயின் குறிகுணம்:-

ஆண்மையில்லாத் தமரகத்தின் குணமு மாகும்
அங்கமெலா மழற்சியுமாய்ச் சோம்பு மாகுந்
தீண்மைசிறு நீர்சிவந்து மஞ்ச ளித்துச்
சிறுகியே சிறுநீர்தான் குறுக்கி வீழும்
நாண்மையாய் நகங்களுடல் மிகவெ ளுத்து
நற்காயம் வற்றியே சுரமுண் டாகும்
ஊண்மையா யுண்ணாக்கு உமிழ்நீர் நாக்கு
முறுமஞ்சள் செங்கமலக் காமாலை யாமே!

(சித்.ம. 346)

கும்பகாமாலை நோய் - குறிகுணம்:-

காமாலை யடிக்கடிக் களையே யாகும்
கணமாகு முடம்புசிறு நீரே மஞ்சள்
வேமாலை நேரத்தில் வியர்வை யாகும்
மேனோக்கும் வாதந்தான் கண்சி வக்கும்
பூமாலை போலவே துவண்டு போகும்
புகழான மயிலுறக்கம் போலே யாகுங்
கோமாலை மலந்தானுங் குதுக்கென் றாகுங்
கொடியகும்ப காமாலைக் குணமி தாமே.

குன்ம காமாலை நோய் - குறிகுணம்:-

குணமான வாய்வெளுப்பு கண்தான் பச்சைக்
கொடுமூத்திர மஞ்சளித்தக் குழம்பு மாகும்
அணமான வன்னந்தான் செரிக்கும் போது
அடிவயிற்றில் வலியுண்டாம் வாந்தி யாகும்
மணமான தொன்றுமே யறிந்தி டாது
மயிலுறக்க மிரைப்பிருமல் மூச்சு மாகும்
பிணமான ததுபோலக் கிடைகி டக்கும்
புரளுமே குன்மகா மாலை தானே'

-(சித்.ம.347)

தீருவன, தீராதன:-

தானான காமாலை பதின்மூன் றாகும்
சாத்தியந்தா னேழாகும் பேரே தென்னில்
பானான பித்தக்கா மாலை யோடு
பரவுமஞ்சட் காமாலை சிலேட்ம மாகும்
ஊனான ஊதுகா மாலை யோடு
உணர்த்துவறட் காமாலை வாதசி லேட்மம்
கோனான பித்தசிலேட் மக்கா மாலை
குணமான வேழுந்தான் கூர்ந்து கேளே.

கேளென்ற கும்பகா மாலை யோடு
கெடிகுன்மக் காமாலை தொந்தகா மாலை
வாளென்ற வாதகா மாலை யோடு
மருவுசெங் கமலக்கா மாலை யாகும்

ஆளென்ற வழகுகா மாலையோடு
ஆறுந்தா னசாத்யமா மறிந்து கொள்ளு
கோளென்று சொல்லிமகா கொடுமை செய்த
குணங்கெட்ட மானிடரைக் கூடுங் தானே

(சித்.ம.-348)

(மண்டூர அடைக்) குடிநீர்:- 1

சுத்தி செய்த மண்டூரம் பலமோ ரெட்டு
சூதவிலை நீர் முள்ளி கீழ்வாய் நெல்லி
சிற்றரமாங் கரிசலாங்கண்ணி யோடு
சிறப்பாக வகைக்கஞ்சு பலமே கூட்டிப்

புத்தியுடன் சீரகமும் பலமொன் றாகப்
புனல்படியோ ரெட்டுவிட்டு வற்றக் காய்ச்சிப்
பத்தியுட னடைகியாழ மாகத் தானே
பண்பாக வந்திசந்தி கொடுத்தி டாயே

கொடுத்திடப் பாண்டு கொடிய சோகைகளும்
அடுத்த காமாலை யனைத்துமே தீரும்
படித்திடு மிச்சாப் பத்தியங் காத்திடத்
தொடுத்த வியாதிக ளெல்லாம் தொலையுமே

(477-355)

(கீழாநெல்லிக்) குடிநீர்:-5

குணத்தொடு கீழா நெல்லி
கூறுபொற் றலைக்கை யானு
மணத்தவெள் ளாட்டு லத்தி
வளர்த்தவா மணக்கு சுக்கு
பணத்திடு முடக்கற் றானும்
பாகமாய்க் குடிநீர் கொண்டால்
இணைத்தமஞ் சட்கா மாலை
யேகும்பா லன்னங் கொள்ளே.

(477, 357)

குடிநீர்:- 6

வாய்க்கவே சிறுதேக்கு வாய்வி ளங்கம்
வால்மிளகு ரோகணியும் சுக்கோ டேலம்

சாய்க்கவே திப்பிலி இலவங்கந் தான்றி
 தத்கோலம் மொஸ்தகப்பால் வகைவ கைக்கு
மாய்க்கவே கால்பலமாய் நிறுத்துக் கொண்டு
 வண்மையாய் தூளிடித்து பாண்டத் திட்டு
காய்க்கவே இருநாழி சலமும் விட்டுக்
 கடுகவே எட்டொன்றாய்க் காய்ச்சி நக்கே.

(572-51)

(அதிமதுரக்) கற்கமும் (கீழாநெல்லிக்) கற்கமும்

சாற்றினா ரதிமதுரம் சங்கம் வேரு'ம்
 தனித்தநிம்பப் பழத்தரைத்துத் தானே யாவின்
சாற்றினார் பால்தனிலே யுண்ண வேதான்
 தணியுமஞ்சட் காமாலை தரணி தன்னில்
சாற்றினார் கண்டீரோ கீழ்க்காய் நெல்லி
 தழைத்தமணித் தக்காளி தயிரில் தானே
சாற்றினார் அரைத்தீயக் குழவி கட்கு
 தணியுமஞ்சட் காமாலை சபலந்தானே

(ஏடு 6218-35) (ஏடு 362-46) (476-164) (477-357)

கற்கம்:- 4

கிட்டமுட னரைப்பொடியு வெள்வெங் காயம்
 கிளர் முருங்கை யிலைக்கரு சாலங் கண்ணி
திட்டமுடன் முத்தியே தேங்காய் கூட்டி
 சிறந்தயிளநீர் வாத்து அரைத்துக் கொண்டு
வட்டமரு முலையாளே ரெண்டு நேரம்
 வாகாக அரைக்களஞ்சி குழவிக் கீய
சட்டமதாய் மஞ்சள் காமாலை தானுந்
 தணியும்வறக் காமாலை சாத்தி னாரே,

(ஏடு. 362-46) (ஏடு. 941-34)

சூரணம்:- 4

திரிபலை மிளகு சுக்கு
 திப்பிலி விளங்க மெல்லாஞ்
சரிநிரை சூரணத்தில்
 சமன் சேர்த்து மண்டூரத்தை
மருவிய விராகன் மூன்று
 வாங்கிப்பின் மோருஞ் சோறும்

பருகினில் பாண்டு சோகை
பறக்குங் காமாலை பாரே''

(ஏ 201-24)

(மண்டூரக்) குளிகை:- 1

தவிர்த்திடவே மண்டூரக் குளிகை கேளு
தனினூறு வருஷமது கிட்டங் கொண்டு
அவித்திடுநீ பொடியாக்கி யுருக்கிக் கொள்ள
நன்றாக காச்சுருக்கி யாவி நீரில்
கவித்திடுவாய் நாலுதரங் காய்ச்சிக்
கலங்காமல் கோமயத்தி நன்றாய் தானும்
அவித்திடுநீ யாவினீர் தனிற் கரைத்து
அடிபற்றாக் கரண்டியினார் குறுகக் காய்ச்சே

காய்ச்சியதோர் மருந்ததனை வெயிலில் வைத்துக்
கலங்காமல் கிண்டியே யுலர வைப்பாய்
தாட்சியில்லாச் சீலைவடி கொண்டு நன்றாய்
தருவான சீரகமோ ரண்டு மிந்து
பாய்ச்சிடுவாய் திரிகடுகு திரிபலாதி
பகர்ந்திடுவா யோமம் பெருங்காயம் கூட்டி
மாய்ச்சிடவே வகையொன்று பலமொன் றாக
வறுத்துநீ பொடியாக்கி முன்பொடியுங் கூட்டே

கூட்டியே கரந்தைச்சார் சாரணைசார்
குறையாமல் துளசிச் சார் கையாண் சாறும்
வாட்டமில்லா நாளொன்று சாறொன் றாக
வகைவகையாய்த் தானரைத்து உலர வைத்து
தாட்டிகமாய் நாலுநாள் சாறு நாலு
தனித்தனியே யரைத்தரைத்து உலர வைத்து
மூட்டுவாய் தேன்வார்த்து அரைத்துச் சேர்த்து
முசியாமற் சுண்டைக்கா யளவு கொள்ளே.

கொள்ளுவா யிருபது நாளிரு நேரந்தான்
கூசாமற் சோகைகா மாலை பாண்டு
தள்ளுமடா நோயல்லா நறுக்குப் போடுந்
தருகாம லிருநேரஞ் சார்ந்து பாரு

வள்ளலே புளிபுகை மூப்புந் தள்ளு
மாசில்லா மேனியெல்லாம் வச்சிர மாகு
முள்ளபடி சொல்லிவிட்டேன் குளிகை தன்னை
யுத்தமமா மென்று சொல்லி யுகந்து பாரே.

(129-27-28)

உருண்டை:- 2

சுக்கு மிளகு பெருங்காயம்
துய்ய திப்பிலி இந்துப்பு
புக்க வெள்ளுள்ளி தகரை
யான வசம்பு அசமதாகம்
பித்தநற் திரிகடுகு திரிபாலை
நுக்க நூறி பொடியாக்கும்
தக்க உண்மை யிலைச்சாறு
தானுமங்கே உமை செய்வோம்

கரிசாலை பிரமி கழற்சியிலை
கன்றில் நடுபோர் கீழாநெல்லி யிந்த சாத்தி
லரைத்தே உண்டை தான்செய்து
....
விரைப்பார் பாண்டந் தனில் வைத்து
வேண்டு முன் மத்த நாளில்
பரியார் தேனில் மோரில் கொள்ள
பறக்குங் காதம் பதிங்காதம்.

(ஏ 822-98)

வறட்டு மஞ்சள் நோயின் குறிகுணம்:-

உரைக்கவே கால்கைகள் மிகவும் வற்றும்
ஊனவே கால்தவறு மசதி யாகும்
நிரைக்கவே நீலம்போல் மலமி றங்கும்
நீர்தானுஞ் சிவந்துமே நெருப்பாய்க் காணும்
துரைக்கவே குலைநோ வென்னக் குத்துஞ்
சோறுருசி யில்லாது மாலைக் கண்ணும்
வரைக்கவே வடிவெல்லாங் கறுகிக் காணும்
மயங்குவரட் காமாலை வகுத்த வாறே.

(சித்.ம. 344)

வறட்காமாலை - குறிகுணம்:-

''போமென்ற நாவதுதான் மிகப்பு ளிக்கும்
  புரையான பசியெடுக்குங் குளிருண் டாகும்
வேமென்ற அடிவயிறு வீங்கும் வேர்க்கும்
  மிகத்தொந்த காமாலை விவரந் தானே'

(சித்.ம. 345)

கண்பச்சென் றேயிருக்கும் காலோய்ந் துடம்புலரும்
  தண்ணீருக்கு மெத்தத் தவிக்குமே - பெண்ணே
இருட்பிழம்பைப் போலு மிளவலுக்குந் தான்சூழ்
  வரட்காமா லைகுணத்தின் வாறு

(பு 477-357) (பு 476-165)

(மணித்தக்காளி) கற்கம்

மணித்தக்கா ளிக்கீழின் காய்நெல்லி மண்மேல்
கணித்துச்ச மூலநிம்பக் காயின் - கணித்தே
எருமைத் தயிரி லினிதாக வுண்டு
எருமைத் தயிர்பால் நெய்யீ.

(பு 477-357) (476-165)

ஊது மஞ்சள் நோயின் குறிகுணம்:-

கனப்பாகக் கண்ணுமுகமுங் கசிவுண் டாகும்
  கனவீக்க முடலெங்கு முளைவுண் டாகும்
அனப்பாக வழற்றலாய்த் தேகமுணர் வில்லை
  அதிகமாய்ச் சீதவெப்பு தலைதி ருப்புந்
தினைப்பாகத் தியக்கமொடு சிறுநீர் மஞ்சள்
  தேகமெங்கும் வாடியே திமிருண் டாகும்
உனப்பாக உன்னாத லாயி ருக்கும்
  ஊதுகா மாலையென உரைக்க லாமே'

(சித்.ம. 344)

ஊது காமாலையின் குறிகுணம்:-

ஊது காமாலைக் குணங்கேளே
  யதி முகமுங் காலதைக்கும்
பாதி சாமம் பசியெடுக்கும்
  புசித்த யுடனே மந்திக்கும்
சீதஞ் சிறுத்து வயிறுவிடும்
  சிந்தை மயக்க முண்டாகும்
காது மடைக்கு மிளைப்புண்டாம்
  காமாலை யதற் குணமிதுவே

காதுட னுடம்புங் கண்ணும்
 கனக்கவே வீங்கும் வத்தும்
போதவே நாவும் புண்ணாய்
 பொருந்திய சுரமுண் டாகும்
வேதுகை காலுஞ் சோர்ந்து
 வெறுத்திடு மன்னந் தன்னை
ஊதுகா மாலை யென்றே
 யுரைத்தனர் முனிவர் தானே.

கொள்ளவே பசிக்கு முப்பும்
 கொடுஞ்சீதம் வயிறு போகுந்
தள்ளவே மயக்குங் காதைத்
 தடையூற வடைக்குங் கண்தான்
வெள்ளையாள் வெளுத்துக் காணும்
 வெதும்பியே யூத லாகு
முள்ளமே யிளைப்பாய்த் தோன்று
 மூதுகா மாலை பெண்ணே

(ஏடு. 362-45), (பு. 476-164), (பு. 477-351).

(முடக்கற்றான்) குடிநீர்:-

மாலைசேர் முடக்கற் றான்வேர்
 வழுக்கைநீர் சுண்டி சுக்கு
காலநீர் முள்ளி தானுஞ்
 சங்கொடு சங்கக் குப்பிக்
கூலமாங் கண்டங் காலி
 கொடுத்திடு குடிநீ ராக
ஞாலமிட் டலறி யோடு
 மூதுகா மாலை யாமே.

(பு. 477-356)

சுரம்

வேறு பெயர்:-

வெம்மை, வெப்புநோய் காந்தல், காங்கை, காய்ச்சல், சூடு, அனல், 'பிறப்பிலும் இறப்பிலும் தொடரும் நோய்', 'பம்மல் நோய்'

இயல்:-

குடலில் சீதம் அதிகமாகி உடலின் இயற்கைச் சூடு தன்னளவுக்கு மிஞ்சி எழுந்து கண் எரிதல், வாய் குமட்டல், உடல் நோதல், வாந்தியாதல் ஆகிய பல குறிகளைத் தோற்றுவிப்பது.

நோய் வரும் வழி:-

உணவின் வேறுபாடுகள், மாந்தம் மலச்சிக்கல் ஏற்படல், பலவகைப்பட்ட நஞ்சுகள், எண்ணெய் தேய்த்து நீராடிய பிறகு ஐயம் மிகுந்த பொருட்களை உண்ணல், குளிர்ந்த நீரைப் பருகுதல், அதிகமான சுமையைச் சுமத்தல், காயம்படுதல், புண், கட்டி இருத்தல், தூக்கமின்மை, கடும் வெயிலில் நடத்தல், அதிசுவையுள்ள பொருட்களையுண்ணல், பொரிமா, பழம், கபிலவாழை தின்னல், அதிக கோபம் கொள்ளல், பசி எடுக்காத போது மேலும் சாப்பிடல், மிகுந்த வேலை செய்தல், கிருமி இருத்தல் போன்ற பல காரணங்களால் சுரம் தோன்றும்.

குறிகுணங்கள்:-

உண்ணும் உணவில் விருப்பமின்மை, உடம்பு கனமாயிருத்தல், உடல் நிறம் மாறல், எப்பொருள் பட்டாலும் உடல் கூசல், உணவு செரியாமை, கொட்டாவி, மயக்கம், பிதற்றல், நாச்சுவையறியாமை, உடல் நடுங்கல், குளிர்தல், இரவில் தூக்கமின்மை, உடல் முழுதும் குத்தல், கண்களில் நீர்முட்டி முட்டி வெளிப்படல், உடல் கடுப்பு, நா வறண்டு போதல், இளைப்பு, தலை கிறுகிறுப்பு, வியர்வை தோன்றல் ஆகிய இக்குறிகுணங்கள் சுரத்தினுடையவை.

மருத்துவம்:-

சுரம் வருவதற்கு சமகளத்துண்டாகும் (ஆமாசய) கோளாறுகளே முதன்மையாய் நிற்குமாதலால் இந்நோய்க்குரிய மருத்துவத்தில்

முதன்மையாய் நின்ற கோளாறுகளைப் போக்கித் தன்னிலை திரிந்த முக்குற்றங்களையும் தத்தம் வழி மீண்டும் தன்னிலைப்படுத்தி திகழச் செய்ய (1) பட்டினி (2) கழிச்சல் (பேதி) (3) வாந்தி ஆகிய இவற்றைச் செய்வித்து நோயை நீக்க வேண்டும். சமகளத்துண்டாகும் கோளாறு தவிர பிற காரணங்களால் வருகின்ற சுரநோய்களில் சுரத்திற்குரிய முதற்காரணத்தை அறிந்து அதற்குண்டான மருத்துவம் செய்து அதற்குப் பிறகு சுரத்தைத் தணிப்பதற்குரிய மருந்தைக் கொடுக்க வேண்டும்.

இவற்றிலும் நீங்காத இடத்தில் குடிநீர், பொடி, மாத்திரை, மெழுகு, பற்பல செந்தூரங்கள் முதலியவற்றைக் கொடுத்தும் இந்நோயிற்குத் துணையாக எழும் நோய்கட்கு மூக்குப்பொடி, மூக்குத்திரி, கண் மருந்து முதலியன கொடுத்தும் வியர்வை உண்டாகுமாறு செய்தும் நீக்க வேண்டும். சுரம் தணிந்த பிறகு உடலுக்கு உரமூட்டும் உடல் தேற்றி மருந்துகளைக் கொடுக்க வேண்டும்.

குடிநீர்:-

முக்குற்றங்களை முறையே தன்னிலைப்படுத்த வாதசுரக் குடிநீர், பித்த சுரக் குடிநீர், கபசுரக் குடிநீர் இவற்றை வழங்கலாம். இதுதவிர நிலவேம்புக் குடிநீர், சீந்தில் குடிநீர், ஆடாதோடைக் குடிநீர் இவற்றை வேளைக்கு 15-30 மி.லியாக நாளுக்கு மூன்று வேளை, சுரம் தீருமட்டும் வழங்க வேண்டும்.

மணப்பாகு:-

கபசுரத்தில் வரும் இருமலைத் தணிக்க ஆடாதோடை மணப்பாகை வழங்கலாம்.

வடகம்:-

இருமலைக் குறைத்து பசித்தீயைக் தூண்ட தாளிசாதி வடகத்தை வழங்கலாம்.

சாறு:-

கற்பூரவள்ளி, கம்மாறு வெற்றிலை, ஓமவல்லி, தும்பை, துளசி இவற்றின் சாறுகளில் ஏதேனுமொன்றின் சாற்றை முறித்து சிறிதளவு தேனைக் கலந்து வயதிற்குத் தக்க அளவு கொடுக்கவும்.

மாத்திரை:-

வதந்தகுசுமாகரம், பச்சைக் கற்பூர மாத்திரை, சாந்த சந்திரோதய மாத்திரை, பாலசஞ்சீவி மாத்திரை, கஸ்தூரி மாத்திரை, கோரோசினை

மாத்திரை போன்ற மாத்திரைகளில் ஏதேனுமொன்றை சுரநோயிற் காணும் குறி குணங்களுக்கேற்ப தாய்ப்பால், வெற்றிலை, துளசி, ஓமவல்லி, கற்பூரவள்ளி ஆகிய இவற்றின் சாறுகளில் ஏதேனுமொன்றில் இழைத்து வயதிற்கேற்ப அளவறிந்து கொடுக்கவும்.

செந்தூரம்:-

இலிங்கச் செந்தூரத்தை 25-100 மி.கி. அளவெடுத்து தேனில் குழைத்து வயதிற்கேற்றவாறு கொடுக்கவும்.

வியர்வை (வேது) பிடித்தல்

நொச்சித் தழை நான்கு பிடி, மஞ்சள் 9 கி. எடுத்து இவற்றை ஒன்றிரண்டாக இடித்து குடிநீர் போல காய்ச்சி வடித்து மீண்டும் நன்றாகக் காய வைத்து அடுப்பில் செங்கல் துண்டுகளைப் போட்டுப் பழுக்கக் காய வைத்துக் கொள்க. பிறகு ஒவ்வொரு கல்லாக நீரில் இட்டு போர்வை மூடி வியர்வை பிடிக்கவும்.

யூகலிப்டஸ் தைலத்தில் 2 துளிகளைக் கொதிக்கும் நீரில் விட்டு, ஆவி வெளியேறாமல் போர்வையால் நன்கு உடலை மூடி வேது பிடிக்க வேண்டும்.

இவ்வாறு வியர்வை பிடிப்பதால் நஞ்சால் பிறந்த சுரங்கள், கபத்தால் தலையிலும் உடலிலும் நீரேற்றங் கொண்டு தலைவலி ஏற்படுதல், தலைகுத்தல், உடல்கனமாய் இருத்தல் போன்றவை நீங்கும்.

கண்மருந்து (கலிக்கம்):-

ஒரு இலவங்கத்தைத் தாய்ப்பாலில் இட்டு ஊற வைத்து துணியில் முடிந்து கண்ணில் பிழிய முக்குற்ற சுரத்தில் வரும் துன்பங்கள் நீங்கும்.

தும்பை வேர், சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றை ஒரெடையாக எடுத்து தாய்ப்பாலிலும் தேனிலும் அரைத்து கண்ணிற்கிடும் மாத்திரைகளாக உருட்டி துளசிச் சாற்றிலிழைத்து கண்ணிற்கிடவும். இவ்வாறு செய்ய தன்னிலை திரிந்த முக்குற்றங்கள் தன்னிலைப்படும்.

நசியம்:-

தும்பைச் சாற்றினைப் பிழிந்து துணியில் நனைத்து ஒருதுளி மூக்கில் பிழியவும்.

கற்பூரவள்ளி, ஓமவல்லி, துளசி இவற்றின் இலைச்சாறுகளைத் துணியில் நனைத்து நசியமிட வேண்டும். தலைபாரம், தலைவலி, மூக்கடைப்பு நீங்கும்; கபம் குறையும்.

மூக்குத்திரி:-

திப்பிலி, மஞ்சள், ஓமம், மிளகு இவற்றை நுண்ணிய பொடியாக்கி சீலையில் தூவி திரியாகத் திரித்து வேப்பெண்ணெயில் நனைத்து கொளுத்தி அப்புகையை மூக்கின் வழி நசியம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய உடலில் தங்கிய நீர் மூக்கின் வழியாக வடிந்து சுரம் போகும்; தலையின் பாரம் நீங்கும்; அப்புகையை உடல் முழுமையும் படும்படிச் செய்தல் வேண்டும்.

புகை:-

மஞ்சளைச் சுட்டு அதனின்று வரும் புகையை மூக்கின் வழியாக நுகர வேண்டும். அதனால் தலைவலி, தலைபாரம், மூக்கடைப்பு நீங்கும்.

மிளகைச் சுட்டு அப்புகையை மூக்கின் வழியாக நுகரச் செய்ய வேண்டும். அதனால் தலைவலி, தலைபாரம், மூக்கடைப்பு நீங்கும்.

ஆக்கிராணப் பொடி:-

கற்பூரம், ஓமம் இவற்றைச் சிதைத்து துணியில் பொட்டணமாகக் கட்டி மூக்கில் நசியம் செய்யவும். இவ்வாறு செய்ய மூக்கடைப்பு, தலைவலி, தலைபாரம் நீங்கும்.

பற்று:-

குளிர்ந்த நீரைத் துணியில் நனைத்து நெற்றியில் போடவும். துணி உலர உலர மீண்டும் போடவும். தாய்ப்பாலைத் தூய்மையான வெள்ளைத் துணியில் நனைத்து நெற்றியில் பற்றிடவும். துணி உலர உலர மீண்டும் போடவும். இவ்விதம் செய்ய சுரம் தணியும்.

கம்மாறு வெற்றிலைக்காம்பு, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ இவற்றைத் தாய்ப்பாலில் அரைத்து நெற்றியில் பற்றிடவும். நீரேற்றம் குறையும்; சுரம் தணியும்.

நீர்க்கோவை மாத்திரையைத் தாய்ப்பாலில் இழைத்து நெற்றியில் பற்றிட தலைபாரம் நீங்கி நீரேற்றம் குறையும்; சுரம் தணியும்.

தேற்றாங்கொட்டையை வேப்பெண்ணெயில் குழைத்து மார்பில் பற்றிட மார்படைப்பு, பிடிப்பு, கபம் நீங்கும்.

சுரத்தில் தலைவலி இருப்பின் பற்று

சாம்பிராணி, கத்தூரி மஞ்சள், சுக்கு, பெருங்காயம், உளுந்து இவற்றை வகைக்கு 2கி, அபினி 1கி எடுத்து தாய்ப்பால் விட்டரைத்து

நெற்றி, கன்னம், கழுத்து ஆகிய நோயுள்ள பாகங்களில் தடவி அனலில் உலரும்படி செய்தால், காய்ச்சல், தலைவலி, தலைபாரம் நீங்கும்.

ஒற்றடம்:-

சடாமாஞ்சில் தைலம், கற்பூராதித் தைலம் இவற்றை மார்பில் தடவி கோதுமைத் தவிடு, அரிசித்தவிடு, செங்கல்தூள் இவற்றை லேசாக வறுத்து ஒரு துணியில் முடிந்து மார்பில் ஒற்றடமிட மார்புச்சளி கரைந்து வெளியேறும்.

மெழுகுத்தைலம், அண்டத்தைலம், இவை இரண்டிலொன்றை உடம்பு முழுவதும் பூசித் தேய்த்து விடுக. கோதுமைத் தவிட்டை நீர் விட்டு பிசறி இரும்பு வாணலியிலிட்டு தீப்பிடிக்காமல் வறுத்து சீலையில் முடிந்து தாங்கக்கூடிய சூட்டில் ஒற்றடம் கொடுக்கவும் சூடாறியபின் மீண்டும் அவ்வாறே செய்யவும்.

சுரத்தில் மலசலம்கட்டி வீக்கம் இருந்தால்:-

பொன்வறுவலாக வறுத்த சீரகம், மிளகு, கரிசாலை இவற்றை வகைக்கு 9 கி. சுக்கு, சிற்றரத்தை, கடுக்காய்த் தோல் இவற்றை வகைக்கு 17 கி. எடுத்து இடித்து மட்கலத்தில் போட்டு 675 மி.லி. நீர்விட்டு 325 மி.லியாக சுண்டக்காய்ச்சி ஆறவிட்டு வடித்து வைக்க. அதில் 4 கி. இலவங்கப்பட்டை சூரணத்தையும் 2 சிட்டிகை பொரித்த வெங்காரத்தையும் போட்டு கலக்கி மூன்றாகப் பங்கிட்டுக் கொள்க

ஆறுமணி நேரத்துக்கொரு முறை 15-30 மி.லி. அளவு கொடுத்துவர மலசலம் விடும்.

பொடி:-

பொன்வறுவலாக வறுத்த கொள், மஞ்சள், கற்பூரம் இவற்றை நுண்ணியதாகப் பொடித்து தேகத்தில் சூடு பறக்க தேய்க்கவும்.

சுரநோயில் விக்கல் இருப்பின் மெழுகு:-

சாம்பிராணி, நல்ல வெல்லம் இவற்றைச் சமனெடையாகக் கல்வத்தில் போட்டு மெழுகு போலரைத்து 250-500 மி.கி. அளவெடுத்து மூன்று மணி நேரத்திற்கொரு முறையாகக் கொடுத்து வர விக்கல் நிற்கும்.

சுரநோயில் விக்கல், நாவறட்சி, நாமுள் பாய்தல் கண்டால் குழம்பு:-

பழைய செருப்புத்தோல், பாக்கு, திப்பிலி, மிளகு இவற்றைத் தனித்தனியே சுட்டு கரியாக்கிக் கொள்க. கரியைச் சமனெடை எடுத்து

தேன்விட்டு குழம்பு பதமாக அரைத்து 15 நிமிடத்திற்கொரு முறை ஒரு விரலால் வழித்து நாவில் தடவி வர 3 மணி நேரத்திற்குள் கொடிய விக்கல், நாவறட்சி தீரும்.

சுரத்தில் விக்கல் வாந்திக்குக் குழம்பு:-

அரிசித்திப்பிலி, கருஞ்சீரகம், மயிலிறகு இம்மூன்றையும் சமனெடை எடுத்து சட்டியிலிட்டு வெளுத்து சாம்பலாகும் வரை வறுக்க. அதனைக் கல்வத்திலிட்டு அரைத்து தேன்விட்டு மத்தித்து வைத்துக் கொள்க. அதனை ஒரு விரலால் வழித்து நாவில் தடவிக் கொண்டே வர விக்கல், வாந்தி குணமாகும்.

சுரநோயில் வாந்தி, விக்கல், குமட்டல், நாவறட்சி ஏற்பட்டால் குழம்பு:-

மயிலிறகு, சீரகம், மான்கொம்பு, ஏலக்காய் வித்து, தாளிசபத்திரி, எலுமிச்சம்பழத்தோல், நெல்பொரி இவற்றைச் சமனெடையாக எடுத்துக் கொள்க. கறுப்பு பட்டுத் துணியினிடையில் வைத்து பந்து போல் சுருட்டி தேனில் தோய்த்துக் கொள்க. ஒரு அகண்ட மண்ணோட்டில் வைத்து அடுப்பேற்றி எரித்து கரியான பின்பு கல்வத்திட்டு தேன் விட்டரைத்துக் கொள்க. அதனை ஒரு விரலால் வழித்து நாவில் தடவி வர வாந்தி, விக்கல், குமட்டல், நாவறட்சி தீரும்.

படிகாரச்செந்தூரம், வேப்பிலைக்கருக்குக் குடிநீர் இவற்றைக் கொடுக்க வாந்தி, குமட்டல் குணமாகும்.

வீரரசச் செந்தூரம், நாயுருவி கருக்குக் குடிநீர், அதிமதுரக் குடிநீர் முதலியவற்றைக் கொடுக்க நாவறட்சி குணமாகும்.

சுரத்தில் வாய்பிதற்றல் இருப்பின் (தலையில் வைக்க) அடை

பொட்டு நீக்கிய உளுத்தம்பருப்பை இயந்திரத்திலிட்டு மாவாக அரைத்துக் கொள்க. அதில் நீர் விட்டுப் பிசைந்து அடை தட்டி இரும்பு வாணலியிலிட்டு திருப்பாமல் வேகச் சுட்டெடுத்துக் கொள்க. தாங்கக் கூடிய வெப்பத்தில், அடையின் மேற்புறம் தலையில் படும்படியாக வைத்து துணியினால் கட்டவும். அடையின் சூடு ஆறிய பின் மீண்டும் அடையைச் சுட்டு கட்டவும். இவ்வாறு 4,5 முறை கட்ட பித்தம் தலையிலிருந்து இறங்கும். வாய் பிதற்றல் நீங்கும்.

சுரநோயில் மலச்சிக்கல் இருந்தால் சூரணம்

சோம்புச்சூரணம், அதிமதுரச் சூரணம் இவற்றைச் சமனெடுத்து கலந்து கொள்க. அதில் 250-500 மி.கி. அளவெடுத்து இரவில் வெந்நீரில்

கலந்து கொடுக்க மறுநாட்காலை மலச்சிக்கல் நீங்கி பேதியாகும். அப்போது சுரத்திற்கேற்ற மருத்துவம் செய்க.

குடிநீர்:- 1

கண்டங்கத்திரி இலை 105கி, தூதுவளையிலை 245கி, இஞ்சி 35 கி, திப்பிலி, சித்தரத்தை, அக்கிராகாரம் இவற்றை வகைக்கு 9 கி. எடுத்துக் கொள்க. எல்லாவற்றையும் 325 மி.லி. நீர்விட்டு காய்ச்சி சுருக்கிக் கொள்க. அது 30 மி.லி. ஆனவுடன் அந்தக் குடிநீரை இறுத்து புகட்ட தீரும்.

குடிநீர்:- 2

பொடுதலை 35 கி, நல்ல மிளகு 9கி. எடுத்து 325 மி.லி. நீரிலிட்டு காய்ச்சி 30 மி.லி. ஆனவுடன் அதை இறுத்து சங்கிலே கொடுக்க குழந்தைகட்கு வரும் சுரம் நீங்கும்.

குடிநீர்:- 3

சங்கு, நன்னாரி, தூதுவளை, துளசி, கஞ்சாங்கோரை, நீர்முள்ளி வெதுப்படக்கி இவற்றின் வேர், பிரமி, கையாந்தகரை வகைக்கு ஒரு பிடி, சுக்கு வேர் 2 , கடுக்காய் 10 இவற்றை எடுத்து இடித்து 2.6 லி. தண்ணீரில் போட்டு, குடிநீராகச் செய்து மூன்று வேளை கொடுக்க சுரத்தில் காணும் வீக்கம் சரியாகும்.

குடிநீர்:- 4

சுரைக் கொடி பழுப்பு, கீழ்க்காய் நெல்லி வேர் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து 2 6 லி தண்ணீரில் போட்டு, குடிநீராகக் காய்ச்சி கொடுக்க சுரத்தில் காணும் வீக்கம் நலமாகும்.

குடிநீர்:- 5

வேப்பம் ஈர்க்கு 280 மி.கி. நெருஞ்சிவேர், கருஞ்சீரகம், நல்ல மிளகு, கடுக்காய்த்தோடு வகைக்கு 9கி, இஞ்சி 35கி எடுத்துக் கொள்க. சீனப்பாகு 5கி. எடுக்க. இவை எல்லாவற்றையும் போதிய அளவு தண்ணீர்விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகச் சுண்ட வைத்து 60 மி.லி. கொடுக்க குழந்தைகட்கு வரும் சுரம் நீங்கி விடும்.

குடிநீர்:- 6

பூவரசம் பழுப்பு, சங்கம்பட்டை, சீந்திற்கொடி, துளசி, சுக்கு, வரள்முள்ளி, முருங்கை ஈர்க்கு, நீர்முள்ளிவேர், சாறுவேளைவேர்,

பிரமியிலை, மருள்கிழங்கு, தூதுவளை, சிறுகுறிஞ்சானிலை, சத்திச்சாரணை வேர், கருஞ்சீரகம் ஆகிய இந்த பதினைந்து வகைச் சரக்குகளையும் சம அளவு எடுத்து இடித்துக் குடிநீரிட்டு எட்டில் ஒன்றாக வற்றச் செய்து 15-30 மி.லி. அளவு கொடுக்க சுரம் நீங்கும்.

(விட்டுணு கிரந்திக்) குடிநீர்:- 7

விட்டுணுகிரந்தி, சுக்கு, கடுக்காய், இண்டுக்கொடி, வாலுளுவை யரிசி இவற்றைச் சம அளவு சேர்த்துப் பொடித்துத் தூளாக்கி கூட்டிக் குடிநீர் செய்து தக்க அளவில் காலை, மாலை இருவேளையும் உட்கொள்ள 64 சுரமும் நீங்கிப் போகும்.

குடிநீர்:- 8

திப்பிலி, திப்பிலி மூலம் வகைக்கு 20கி, சுக்கு, செவியம், வாய்விடங்கம், கொத்துமல்லி இவற்றை வகைக்கு 12 கி, கடுக்காய், பேய்ப்புடல், நெல்லிமுள்ளி வகைக்கு 35 கி. எடுத்துக் கொள்க. அனைத்துச் சரக்குகளையும் பொடித்து 6 பங்காகச் செய்து கொள்க. வேளைக்கு ஒரு பங்கை எடுத்து 2.6லி தண்ணீர் விட்டு 325 மி.லி.யாக வற்றும் வரை காய்ச்சவும். அதனை ஆறு வேளைக்குக் கொடுக்கவும்.

குடிநீர்:- 9

மணலை வறுத்து அதில் 2 லி. நொச்சிச் சாறு விட்டு கொதிக்கும் போது குடிநீர் 8-இல் சொன்ன சரக்குத்தூளை 1 பங்கு எடுத்து தூவி கலந்து மூன்று வேளைக்குக் கொடுக்க சகல முறைச்சுரங்களும் தீரும்.

குடிநீர்:- 10

இலந்தை, நாரத்தை, புளி, சின்னம்மான் பச்சரிசி, நெல்லி இவற்றின் ஈர்க்குகள் சமஅளவு எடுக்க. இவற்றைப் பொடித்து நீர்விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிக் குடிநீராக்கிக் குடிக்க காய்ச்சலுடன் தாகமும் போகும்.

குடிநீர்:- 11

ஆலங்கொழுந்தும் பட்டையும், ஆவாரங்கொழுந்தும் பட்டையும், விடதாரிக் கொழுந்தும் பட்டையும், நாவல் கொழுந்தும் பட்டையும், கருவேலங்கொழுந்தும் பட்டையும், அத்திப்பட்டை, தென்னை மொக்கு ஆகிய ஏழு பொருட்களையும் ஒருவேளைக்கு வகைக்கு 9 கி. வீதம் எடுத்து இடித்து மண்சட்டியிலிட்டு 650 மி.லி. தண்ணீர் விட்டு

170 மி.லி. ஆகக் காய்ச்சி வடித்து அதில் சீரகம், அதிவிடயம், மாசிக்காய், கிராம்பு சாதிக்காய், விளாம்பிசின் ஆகிய இவ்வாறு பொருட்களையும், வகைக்கு 1 கி. வீதம் எடுத்து சிறு தீயில் வாட்டி பொடி செய்து தூவிக் கொள்க. வேளைக்கு 20 மி.லி. ஆகக் காய்ச்சிக் கொள்க. இரண்டுவேளை, மூன்று (அல்) ஐந்து நாள் கொடுக்க சுரம் நீங்கும்.

குடிநீர்:- 12

ஆலந்துளிர், நாவல்துளிர், விலாமிச்சை இவற்றைச் சம அளவு எடுத்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க குழந்தைக்கு வரும் சுரம் தீரும்.

குடிநீர்:- 13

முத்தெருக்கஞ்செவி, திரிபலை (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) கோரைக்கிழங்கு, சுக்கு, கடுகுரோகணி, நிலவேம்பு, சித்திரமூலம், செவியம், மூக்கிரட்டை, சீந்தில், விஷ்ணுகிரந்தி வகைக்கு 35 கி. எடுத்து இடித்து 5.2 லி. தண்ணீர் போட்டு 325 மி.லியாகக் கொடுக்கவும். இப்படி 6 வேளை கொடுக்க சுரங்கள் தீரும்.

குடிநீர்:- 14

சித்திரமூலம், முத்தக்காசு, அக்கிராகாரம், அதிமதுரம், கோட்டம், ஏலம், இலவங்கம், திரிகடுகு, திரிபலை, வெட்பாலையரிசி, பொரித்த சீரகம், மிளகு வகைக்கு 12 கி. எடுத்து சிதைத்து 1.3 லி. நீரில் போட்டு 325 மி.லியாக வற்ற வைத்துக் கொள்க. இதனை 6 வேளை கொடுக்க தீரும்

குடிநீர்:- 15

சிற்றாமுட்டி, கொழிஞ்சி, கிளா, நாயுருவி, மூக்கிரட்டை, தூதுளை, கண்டங்கத்திரி, வில்வம், முள்ளிக்கத்திரி, சங்கு இவற்றின் வேர் வகைக்கு 70 கி. எடுத்து இவற்றைச் சிதைத்து 7.8 லி. தண்ணீரில் போட்டு 3.9லியாகச் சுருக்கிக் கொள்க. திப்பிலி, திப்பிலி மூலம், தேசாவரம் எனும் கண்டதிப்பிலி, அரத்தை, சுக்கு இவற்றை வகைக்கு 12 கி., கடுக்காய், நெல்லிமுள்ளி, பேய்ப்புடல் வகைக்கு 35 கி. எடுத்து சூரணம் செய்து வேளையொன்றுக்கு மேற்சொல்லப்பட்ட குடிநீரில் 325 மி.லி. இச்சூரணத்தை 3 கி. கலந்து எட்டு வேளை கொடுக்க தீரும்.

குடிநீர்:- 16

சுக்கு, நிலக்குமிழ் வகைக்கு 10 கி. எடுத்து இவற்றைப் பொடித்து காய்ச்சி அத்துடன் 10கி வெல்லத்தையும் சேர்த்துக் குடிநீராக்கி காலையில் பருக வன்மையான சுரமும் நீங்கிப் போகும்.

குடிநீர்:- 17

ஆடாதோடை இலை, பிரண்டை, கண்டங்கத்திரி வேர், பேய்ப்புடல், முத்தக் காசு, வசம்பு, சுக்கு, கடுகுரோகணி, கொத்துமல்லி இவற்றை வகைக்கு 12 கி. எடுத்து 2.6 லி. நீரிலிட்டு 200 மி.லி. ஆகச் சுருக்கி இரண்டு நேரமும் கொடுக்கவும். இவ்வாறு 3 நாள் கொடுக்கவும். அனைத்து சுரமும் குளிரும் தீரும்.

குடிநீர்:- 18

கொத்துமல்லி, சுக்கு, மிளகு, திப்பிலி, பேராமுட்டி இவற்றை வகைக்கு 15 கி. எடுத்திடித்து 1.3 லி. நீரிற் போட்டு 325 மி.லி.யாக வற்றக் காய்ச்சி குடிநீராக்கி மூன்று நாட்களுக்குக் கொடுக்க சுரம் நீங்கும்.

சூரணம்:- 1

அஞ்சனைவேர் (அவுரிவேர்), நெல்பொரி, சடாமாஞ்சில், அதிமதுரம் இவற்றைச் சம அளவு எடுத்து பொடித்துச் சர்க்கரை (அல்) தேனில் கலந்துண்ண குழந்தைகளின் காய்ச்சல் தீரும்.

சூரணம்:- 2

கண்டங்காரி, அமுக்கரா, தேவதாரு, திப்பிலி ஆகிய இவற்றைச் சமமாய் எடுத்துப் பொடித்து தேனில் கலந்துண்ண சுரம் போகும்.

பிட்டவியல்:-

ஆடாதோடை, தூதுவளை, நொச்சி, பெருந்தும்பை, கண்டங்கத்திரி, இசங்கு, புத்தரிசி (புதிய அரிசி), சுண்டை, தண்ணீர் விட்டான், துளசி, கறுத்தசுண்டை, தருப்பைப்புல், முருங்கைப்பூ இவற்றை வகைக்கு ஒரு கைப்பிடி எடுத்துக் கொள்க. இஞ்சி, திப்பிலி,, திப்பிலி மூலம், வெள்ளுள்ளி, மிளகு, சித்தரத்தை கோட்டம், நிலவேர் இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து அதனைத் தாய்ப்பால் விட்டு சிறுகச் சிறுக அரைத்துப் பிட்டவித்து பிழிந்தெடுத்து காலை, மாலை இரு வேளையுங்கொள்ள சுரமனைத்தும் நீங்கிப் போகும்.

(உள்ளுக்கும் மேலுக்கும்) நெய்:-

சீதா செங்கழுநீர்ச்சாறு 5.2லி, நெய் 1.3லி எடுத்து ஒன்றாய்க் கலந்து கொள்க. அதில் மஞ்சிட்டி, தாமரைக்கிழங்கு, ஏலம், இலவங்கம், கடுகுரோகணி, கோட்டம், நன்னாரிவேர், அதிமதுரம், சந்தனம் இவற்றை வகைக்கு 4 கி எடுத்து அரைத்து மேற்சொன்ன கலவையில்

போட்டுக் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு 5 கி வீதம் உள்ளுக்குச் சாப்பிட்டு மேலுக்கும் பூச சகல சுரமும் நீங்கும். கண்ணுங் குளிரும்.

(கஸ்தூரி) எண்ணெய்:- 1

கோரோசினை, கோட்டம், அதிமதுரம், சீரகம், திப்பிலி, தேவதாரம், ஏலம், மாசிக்காய், வெந்தயம், சுக்கு, வெள்ளுள்ளி, கஸ்தூரி, வசம்பு, கடுகுரோகணி, மூங்கில் பச்சைத்தோல் ஆகிய இவற்றை வகைக்கு 4 கி எடுத்துக் கொள்க. எருமுட்டை பீநாறிச் சாற்றில் மேற்சொன்னவற்றை அரைத்து வழித்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் விளக்கெண்ணெய் 1.3 லி. எடுத்து ஒன்று சேர்த்து எரித்துப் பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனைக் குழந்தையின் தன்மை, நோயின் வன்மை அறிந்து கொடுக்க காய்ச்சல் நீங்கிப் போகும்.

(கற்றாழை) எண்ணெய்:- 2

கற்றாழைச்சாறு, பால், விஷ்ணுகிரந்தி நீர் இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்துக் கொள்க. வேப்பிலைச்சாறு 675 மி.லி., சிற்றாமணக்கெண்ணெய் 3.9 லி. எடுத்துக் கொண்டு மூன்றையும் ஒன்று சேர்த்து வைக்க. சந்தனம், சின்னம்மான் பச்சரிசி, கலைமான் கொம்பு ஆகியவற்றை 35 கி. எடுக்க. சண்பகம், பச்சைப் பூலா, ஏலம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், நன்னாரி, சாதிக்காய், சாதிபத்திரி, கொத்துமல்லி, அதிமதுரம், கோட்டம், கடுகுரோகணி, கிராம்பு, கோரைக் கிழங்கு, சன்னலவங்கப்பட்டை, கருஞ்சீரகம், நற்சீரகம், துத்தநாகம், சிறுநாகம் இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து சாற்றில் சேர்த்தரைத்து எண்ணெயைக் கலந்து எரித்து பக்குவ பதத்துடன் வடித்து வைத்துக் கொள்க. பிறகு அதில் குருவிச்சையை 4 கி. எடுத்து தூவி விட வேண்டும். இந்த எண்ணெயை 4.4 கி. அளவெடுத்து இருவேளையும் குழந்தைக்குக் கொடுக்க மிகுந்த காய்ச்சல் நீங்கிப் போகும்.

(சத்தி) எண்ணெய்:- 3

உருக்கின தேங்காய் எண்ணெய் 1.3 லி., தகரையிலைச்சாறு 165 மி.லி., வெற்றிலைச்சாறு, சிற்றகத்தியிலைச் சாறு, குழிமீட்டானிலைச் சாறு, கையாந்தகரைச்சாறு இவற்றை வகைக்கு 80 மி.லி. எடுத்துக் கொள்க. சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், சித்தரத்தை, கருஞ்சீரகம், எலிப்புழுக்கை இவற்றை வகைக்கு 9 கி. எடுத்துக் கொள்க. இம்மருந்துகளனைத்தையும் மேற்கூறிய சாற்றை விட்டு அரைத்து அதை நெய்யில் கலக்கி எரித்துக் காய்ச்சி முதிரும்

பருவத்தில் வடித்து வைத்துக் கொண்டு மூன்று பொழுது குழந்தைகளின் உச்சியில் வைக்க சுரம் தீரும்.

(குமரி) எண்ணெய் 4:-

1.3 லி. சிற்றாமணக்கெண்ணெயையும், குமரிச் சோற்றைத் தேங்காயளவும் எடுத்து இவையிரண்டையும் ஒரு மண் சட்டியிலிட்டு, அதில் 25 மி.கி. வெந்தயம் எடுத்துத் தண்ணீரில் ஊறவைத்து அரைத்துச் சேர்த்துக் கொண்டு அத்துடன் 35 அரிந்த ஈருள்ளியைப் போட்டு அடுப்பேற்றிக் காய்ச்ச வேண்டும். வெங்காயம் வெந்து மிதக்கும் பதத்தில் வடித்துக் கொண்டு, அதை 5-15 மி.லி. வீதம் காலையில் மட்டும் ஐந்து (அல்) ஏழு நாள் கொடுக்க சுரம் நீங்கும்.

எண்ணெய்:- 5

நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய், வேப்பெண்ணெய் இவற்றை வகைக்கு 325 மி.லி. எடுத்துக் கொள்ளவும். அதில் ஆடாதோடைச் சாறு, தாய்ப்பால் இவற்றை வகைக்கு 1.3 லி எடுத்துச் சேர்க்க. மூன்று முட்டைகள் எடுக்க. நன்னாரி, மரமஞ்சள், தேவதாரம் இவற்றை வகைக்கு 10கி எடுத்துப் பொடி செய்து மேற்கூறிய கலவையில் போட்டு காய்ச்சி, பக்குவத்தில் வடித்தெடுத்து தக்க அளவு கொடுக்க சுரங்கள் போகும்.

எண்ணெய்:- 6

சிறுபுள்ளடி, செப்பு நெருஞ்சில், வல்லாரை, வறட்பூலா, கோழியவரை ஆகிய இவற்றின் சாற்றை வகைக்கு 335 மி.லி. எடுத்துக் கொள்ளவும். ஆமணக்கெண்ணெயை சாறுகளின் அளவிற்குச் சம அளவு எடுத்துக் கொள்க. கடுகுரோகணி, வெளிச்சிப்பிசின், சடாமாஞ்சில் இவற்றை வகைக்கு 500 மி.கி. எடுத்துப் பொடித்து அக்கலவையில் போட்டுக் காய்ச்சி பதமாக இறக்கிக் கொள்க. அதனை 3 துளிகள் கொடுக்க காய்ச்சல் நீங்கிவிடும்.

(இரச கற்பூர) மாத்திரை:- 1

சுத்தி செய்த இரச கற்பூரம் 9 கி. நேர்வாளம் 35 கி. அழிஞ்சில் வேர்ப்பட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை வகைக்கு 9 கி. எடுத்து கையாந்தகரைச் சாற்றிலும் தாய்ப்பாலிலும் வகைக்கு 6 மணி நேரம் அரைத்து துவரை அளவு மாத்திரை செய்து தேனில் உரைத்துக் கொடுக்க சகலசுரமும் போகும்.

உருண்டை :- 2

வெள்ளைக்காக்கணான் விதை, திரிபலை, மிளகு, திப்பிலி, இரசம், கெந்தகம், வாய்விடங்கம் இவற்றைச் சமமாயெடுத்து கரிப்பான் சாற்றில் ஒரு நாளரைத்து 400 மி.கி. அளவு உருண்டை செய்து வயதிற்குத் தக்க அளவு உருண்டையை இஞ்சிச் சாற்றில் கொடுக்க சுரம் தீரும்.

(அமுதாதிக்) குளிகை :- 3

அதிமதுரம், சண்பகப்பூ, ஏலம், கோரோசினை, சாத்திரபேதி, வெட்டிவேர், கோட்டம், மாசிப்பத்திரி, விலாமிச்சம் வேர் ஆகிய ஒன்பது சரக்குகளையும் சமவெடை எடுத்து அதை ஆதொண்டை எனும் காத்தொட்டியின் சாறுவிட்டு 3 மணி நேரம் அரைக்க வேண்டும். பின்பு அதை 130 மி.கி. அளவுள்ள குளிகை செய்து கொள்ள வேண்டும். வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் மூன்று நாள் தாய்ப்பாலில் இழைத்துக் கொடுக்க நாவறட்சி, சுரம் முதலியன தீரும்.

(ஏலாதி) மாத்திரை:- 4

கோரோசினை 12 கி, அதிமதுரம், கோட்டம், இந்துப்பு, பெரிய இலுப்பைக்கொட்டை, சாத்திரபேதி, பெருஞ்சீரகம் இவற்றை 4 கி எடுத்துக் கொள்க. இவற்றைக் கற்றாழைச்சாறு விட்டரைத்து அதை மீண்டும் தாய்ப்பாலில் அரைத்து 135 மி.கி. அளவினதாக மாத்திரை செய்து தாய்ப்பாலில் இழைத்துக் குழந்தைகட்குக் கொடுக்க சுரம் நீங்கும்.

(பச்சைக் கற்பூர) மாத்திரை :- 5

பச்சைக்கற்பூரம், இலவங்கப்பட்டை, சாதிக்காய் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்துக் கொள்க. நேர்வாளம் 30 கி. எடுத்து கற்றாழைச்சாறு விட்டரைத்து 65 மி.கி. அளவுள்ள மாத்திரை செய்து உலர வைத்து எடுத்துக் கொள்க. சர்க்கரையுடன் ஒரு மாத்திரையைச் சேர்த்து கொடுக்க வேண்டும். கொடுக்க கழிச்சல் ஆகும். சுரமும் விட்டுப் போகும். குளிர் வந்ததென்றால் குப்பைமேனியிலை, கொடிவேலி, மிளகு இவற்றைச் சமமாக எடுத்து அரைத்துக் கொடுக்க சுரம் நீங்கிப் போகும்.

(இலிங்க) மாத்திரை:- 6

(இ)லிங்கம் 20 கி., திப்பிலி 10 கி. எடுத்து பசும்பால் விட்டரைத்து 65 மி.கி. அளவுள்ள உருண்டை செய்து சுக்குக் குடிநீரில் இழைத்துக் கொடுக்க சகல சுரமும் தீரும்.

மாத்திரை :- 7

ஆடுதின்னாப்பாளை, கருவாப்பட்டை ஆகிய இவற்றை நிழலிலுர்த்தி இடித்து தூள் செய்து கொள்ள வேண்டும். இவற்றை எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஆட்டிக் கொள்ள வேண்டும். அரைத்து பருத்திக் கொட்டை அளவாய் உருண்டை செய்து தக்க அனுபானத்தில் கொடுக்க அனைத்துக் காய்ச்சலும் நீங்கிப் போகும். தாய், பால் தரும் போது புளிப்பு, கைப்புப் பொருட்களைத் தள்ளவும்.

(ஏலாதி) மாத்திரை:- 8

முக்கடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) சாதிக்காய், கிராம்பு, ஏலம், கடுகுரோகணி, மஞ்சள், நாபி (குறிப்பிட்ட அளவு) ஆகிய ஏழு பொருட்களில் நாபியைத் தவிர மற்றவற்றை வகைக்கு 5 கி. எடுத்துக் கொள்க. முறைப்படி சுத்தி செய்த நாபியைத் தகுந்த அளவு கூட்டிக் கல்வத்திலிட்டுப் பொடியாக்கி சரக்குகளை ஒன்று சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு 6 மணி நேரம் அரைத்து 65 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க. வேளைக்கு ஒரு மாத்திரை தாளிச பத்திரிக் குடிநீரில் கொடுக்க வேண்டும். கொடுத்தால் சுரம் நீங்கும்.

உருண்டை:- 9

மஞ்சள் சாதிக்காய், திரிகடுகு, கிராம்பு, கடுகுரோகணி, ஏலம், நாபிக்கிழங்கு (குறிப்பிட்ட அளவு) இவற்றை வகைக்கு 4 கி எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றா லொரு நாளரைத்து 65 மி.கி. அளவுள்ள உருண்டை செய்து மாசிப்பத்திரிக் குடிநீரில் தர சுரம் நீங்கும்.

உருண்டை:- 10

அதிவிடையம், சாதிக்காய், சாதிபத்திரி, அபினி, கடுக்காய், தான்றிக்காய், மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு 1கி. ஏலம் 4 கி எடுக்க. மாதுளந்தளிரும், அத்திப்பட்டையும் எடுத்து குடிநீர் செய்து மேற்சொன்ன மருந்துகளை அரைத்து அடைபோல் தட்டி அரசிலையில் கட்டி சட்டியில் வைத்து மேற்சொன்ன குடிநீரைச் சிறிது சிறிதாய் வார்க்க. இவ்வாறே பத்துமுறை வேகவைத்து அம்மருந்தை மைபோல் அரைத்து 130 மி.கி. அளவான உருண்டை செய்து கொள்க. இதனை வெந்நீரில் கொடுக்க காய்ச்சல் நீங்கும்.

(அமிர்தசஞ்சீவிக்) குளிகை:- 11

துத்தி, ஆரை, வெண்காரம், கோரோசினை இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துக் கொள்க. கடுகுரோகிணி 15 கி. எடுத்து இவற்றை ஒன்று சேர்த்து சூரணமாக்கி வெந்நீர் சேர்த்து 130 மி.கி. அளவுள்ள உருண்டை செய்து கொள்க. அதனைத் தாய்ப்பால் (அல்லது) வெந்நீரிலிட சுரங்கள் போகும்.

காட்டுத்துளசி, செம்முள்ளி, ஆடாதோடை, தூதுவளை, விட்டுணுகாந்தி, கண்டங்கத்திரி, வெதுப்படக்கி, பேய்ப்புடல், சங்கங்குப்பி, நொச்சி இவற்றினிலைகளைச் சமவெடை எடுத்து குடிநீராக்கி அதில் குளிகையை இழைத்துக் கொடுக்க சுரம் நலமாகும்.

(ஏலாதி) மாத்திரை:- 12

ஏலம், கிராம்பு, சுக்கு, திப்பிலி, கொடி முந்திரிப்பழம், பேரீச்சம் பழம், தாளிசபத்திரி, அதிமதுரம், கோட்டம், இலாமிச்சம் வேர், மலேசிய சாம்பிராணி, சந்தனம், இலவங்கப் பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி, கோரோசனை, இலுப்பைப்பூ, சண்பகப்பூ, ஓரிலைத்தாமரை வேர் இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து அதற்குச் சமமாக அரைத்து பருத்தி விதை அளவு உருண்டை செய்து கொள்ள வேண்டும். அதனை உட்சுரம், அதிசாரசுரம், ஆமசுரம், வெப்புசுரம் இவற்றிற்குத் தாய்ப்பாலிலும் தோஷ சுரத்திற்குக் குதிரை வாலிக் குடிநீரிலும் கொடுக்க நன்றாகும்.

குளிகை:- 13

வசம்பு, ஓமம், வெள்ளை வெங்காயம், பொடுதலை, மிளகு, திப்பிலி, ஆமையோடு இவற்றைச் சேர்த்து அரைத்து கடலை அளவாய் (250 மி.கி.) செய்திட்டு குழந்தைகளின் வயதிற்குத் தக்கவாறு தேனிலிழைத்துக் கொடுக்க காய்ச்சல் போகும்.

(வாதராட்சதக்) குளிகை:- 14

பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, அரியாறு (அரிசி வகை ஆறு) கார்போகரிசி, வாலுளுவையரிசி, திப்பிலியரிசி, வெட்பாலையரிசி (விளாவரிசி) மூங்கிலரிசி, சுக்கு, கடுகு, அரத்தை, சிவதை, கடுகுரோகணி, வசம்பு, கடுக்காய், பூநாகம், முசுறுமுட்டை, இவற்றைச் சமமாய் எடுத்துக் கொண்டு பொடி செய்து கல்வத்திலிட்டு அதனை நொச்சிச் சாற்றாலாட்டி 130 மி.கி. அளவுள்ள மாத்திரை செய்து வைத்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். வயதிற்கு ஏற்றவாறு தக்க

துணை மருந்தில் அதனைக் கொடுக்க குழந்தைக்கு வரும் சுரமனைத்தும் தீர்ந்துவிடும்.

(கருணானந்த சஞ்சீவிக்) குளிகை:- 15

பச்சைக்கற்பூரம், ஏலம், இலவங்கம், வால்மிளகு, சிறு நாகப்பூ, கடுகுரோகணி, சடாமாஞ்சில், சுக்கு, சீரகம், நேர்வாளம் இவற்றைச் சமமாய்க் கூட்டி பொற்றலைக் கையாந்தகரையின் சாற்றாலாட்டிக் கொள்ள வேண்டும். ஒன்பது நாள் இவ்வாறு அரைத்துக் கொள்ள வேண்டும். மிளகளவாக (100 மி.கி.) மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி செப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். அதனை வயதிற்கு ஏற்றவாறு தேன், தாய்ப்பால், இஞ்சிச்சாறு இவற்றில் இழைத்துக் கொடுத்திட சுரங்கள், நாவறட்சி, கபம், அனல் போன்றவை நீங்கி விடும்.

(கோரோசனைக்) குளிகை:- 16

கோரோசினை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், இரசசெந்தூரம், இரசகற்பூரம், ஏலம், அப்பிரகச் செந்தூரம், கிராம்பு, கோட்டம், சாதிக்காய், அக்கிராகாரம் இவற்றை வகைக்கு 15 கி. எடுக்க. சந்தனக் குடிநீரில் 12 மணி நேரமும், சண்பகக் குடிநீரில் 6 மணி நேரமும், குங்குமப்பூக் குடிநீரில் 6 மணி நேரமும் அரைத்து 135 மி.கி. அளவு உருண்டை செய்து நிழலிலுலர்த்தி அளவறிந்து தாய்ப்பாலிலுரைத்துக் கொடுத்திட சுரங்கள் நீங்கும்.

நசியம்:-

குளிர்சுரம் அடிக்கும் போது சிறு தும்பையிலையையும் மிளகையும் ஒன்றாய்ச் சிதைத்து நாசியில் நசியம் பண்ணத் தீரும். திப்பிலியையும், வேலிப்பருத்தியிலையையும் ஒன்றாய்ச் சிதைத்து நாசியில் நசியமிட்டாலும் அல்லது இந்துப்பு, உள்ளி, கொம்புப் பாகலிலை இவற்றை ஒன்றாய்ச் சிதைத்து நாசியில் நசியமிட்டாலும் சுரம் தீரும்.

பூச்சு:-

ஆட்டெலும்பைக் காடியிலரைத்து மேலுக்குப் பூச அனைத்து சுரமும் தீரும்.

அசாத்திய சுரத்திற்குக் குடிநீர்:-

கொத்துமல்லி, தேசாவரம் என்ற கண்டதிப்பிலி இவற்றை வகைக்கு 3 கி. வீதம் எடுத்திடித்து 675 மி.லி. நீரில் போட்டு 1/8 பங்காகக் குடிநீர்

செய்து கொள்க. அதனை நான்கு வேளைக்குக் கொடுக்க. இவ்வாறு மூன்று நாட்களுக்குக் கொடுக்க அசாத்திய சுரம் நீங்கும்.

அசீரண சுரத்தின் குணம்:-

சுரங்காயும், வயிறு பொருமிக கழியும், வலிக்கும், வாயு மிகப் பிரியும், அடிக்கடி புளித்தேப்பம், கொட்டாவி, விக்கல் காணும், நா உலரும், கையும் உடலும் வலிக்கும், வியர்க்கும், குரல் கம்மும்.

குடிநீர்:- 1

கல் ஆலஞ்சருகு, ஆலஞ்சருகு, முட்காவேளையின் சருகு, முருங்கை வேர்ப்பட்டை இவற்றை வகைக்கு 105 கி. நொச்சி வேர் 140 கி. எடுத்து 5.2 லி. தண்ணீரில் போட்டு பங்காகக் (1.3 லி.) குறுக்கி காய்ச்சி வேளைக்கு 165 மி.லி.யாக மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

குடிநீர் :- 2

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், முட்சங்கம் வேர், திப்பிலிமூலம், சித்திரமூலம், வசம்பு, ஓமம் இவற்றை வகைக்கு 9 கி. எடுத்து 500 மி.லி. தண்ணீர் ஊற்றி நான்கிலொன்றாகக் குறுக்கிக் காய்ச்சி மூன்று வேளை கொடுக்க அசீரண சுரம் நீங்கும்.

குடிநீர் :- 3

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பேய்பாச்சொற்றி, கடுகுரோகணி, சுக்கு, பேராமுட்டி, சிற்றாமுட்டி வகைக்கு 9 கி. எடுத்து 500 மி லி. நீரூற்றி, நான்கிலொன்றாய்க் காய்ச்சி மூன்று வேளைக்குக் கொடுக்க அசீரண சுரம் நீங்கும்.

பெருங்கழிச்சல் சுரக்குறிகுணம்:-

கழிச்சல் சுரத்தில் மிகக் காய்தல், வயிறு இரைந்து இரைந்து பல நிறமாகக் கழிதல், கால் கைகள் உதறல், உணவில் விருப்பமின்றி வாய் குமட்டல், வாய் குழகுழத்தல் ஆகிய இக்குணங்கள் உண்டாம்.

சாறு:-

கோரைக்கிழங்கையும் மாம்பட்டையையும் சமனாய் எடுத்து இடித்துப் பிட்டவித்து சாறு பிழிந்து அதில் இலவம்பிசின், அதிவிடையம் இவற்றை வகைக்கு 4கி எடுத்துப் பொடித்துப் போட்டுக் கொடுக்க நலமாகும்.

குடிநீர்:- 1

ஆல், மா, நாவல் இவற்றின் துளிரெடுத்து தேவையான தண்ணீர் விட்டு குடிநீராக்கி காலை, மாலை கொடுக்க பெருங்கழிச்சல் சுரத்தில் வரும் தாகம் தீரும்.

குடிநீர்:- 2

பங்கம்பாளை எனும் ஆடு தின்னாப்பாளை, சுக்கு, முத்தக்காசு, சிறுகாஞ்சொறிவேர் இவற்றைச் சமமாயெடுத்து குடிநீராக்கித் தக்க அளவு கொடுக்கத் தீரும்.

குடிநீர்:- 3

மாம்பட்டை, அதிவிடையம், முதியார் கூந்தல், சுக்கு, முத்தக்காசு இவற்றை வேளைக்கு 9 கி எடுத்து சிதைத்து 1.3 லி நீரிற் போட்டுக் காய்ச்சி 165 மி.லியாக வற்ற வைத்து அதில் இலவம்பிசின் 4 கி. பொடித்துப் போட்டு கொடுக்கத் தீரும்.

குடிநீர்:- 4

சின்னி சமூலம், பொன்னாங்காணிவேர், நன்னாரிவேர், பற்பாடகம், கோரைக்கிழங்கு, கஞ்சாங்கோரை, வெட்டிவேர், இலாமிச்சவேர், கொத்துமல்லி, சந்தனம், சுக்கு இவற்றை ஓர் நிறையாய் எடுத்து குடிநீர் செய்து 15-30 மி லி. அளவு கொடுக்க அதிசாரம் தீரும்.

குடிநீர் :- 5

பெருமரத்துப்பட்டை எனும் பீநாறி, வில்வப்பிஞ்சு, செந்தொட்டி, மாதுளம்பிஞ்சு, அதிவிடையம், சுக்கு, முத்தக்காசு வகைக்கு 9கி. எடுத்து சிதைத்து குடிநீராக்கி 15-30 மி.லி. அளவு கொடுக்க சுரம் நலமாகும்.

குடிநீர் :- 6

மாம்பட்டை, வில்வப்பழச்சதை, முத்தக்காசு, நிலவேம்பு, பெருமரத்துப்பட்டை, சுக்கு வகைக்கு 9 கி. எடுத்து ஒன்று சேர்த்து குடிநீர் செய்து 15-30 மி.லி. அளவு கொடுக்க நலமாகும்.

குடிநீர் :- 7

மலராத மாதுளம்பூ, அதிவிடையம், பிராய்பட்டை, மாதுளந்தோடு, வில்வப்பழச்சதை, குடசப்பாலை, சுக்கு, முத்தக்காசு,

ஆவாரம்பூ வகைக்கு 9கி. எடுத்து குடிநீர் செய்து 15-30 மி.லி. அளவு கொடுக்க சுரம் தீரும்.

குடிநீர் :- 8

சிற்றாமுட்டி வேர், வில்வக்காய், சீந்தில்தண்டு, குடசப்பாலை, சுக்கு, முத்தக்காசு, நிலவேம்பு, கஞ்சாவிரை வகைக்கு 9கி. எடுத்து சிதைத்து குடிநீராக்கி அளவறிந்து கொடுக்க பெருங்கழிச்சல் சுரம் தீரும்.

கற்கம்:-

விருசம்பட்டை (நறுவிலி), வெங்காயம், பருத்திப்பிஞ்சு இவற்றைச் சம அளவாய் எடுத்து சாறு பிழிந்து கொள்க. அதில் அதிமதுரம், குப்பைக்கீரை வேர், வெள்ளைக்கெருடன், மாதுளம்பிஞ்சு, சீரகம் இவற்றைச் சமமாக எடுத்து அரைத்து 250-500 மி.கி. அளவு வெள்ளாட்டுப் பாலில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

(அஞ்சன (அவுரி) வேராதிச்) சூரணம் :- 1

அவுரிவேர், நெற்பொரி, சடமாஞ்சில், அதிமதுரம் இவற்றின் பொடியைச் சரிசமமாகக் கூட்டி சர்க்கரையைச் சமனாகக் கூட்டி 250 - 500 மி.கி. அளவு கொடுக்கக் காய்ச்சல் தீரும் சுரத்துடன் தாகம், கழிச்சல், சுவாசம் ஏற்பட்டால் மேற்படி சரக்குகளுடன் அதிவிடையப் பொடி சேர்த்துக் கொடுக்க அவையும் நீங்கும்.

சூரணம் :- 2

கலைமான்கொம்பு, திப்பிலி, அதிவிடையம் இவற்றைக் கூட்டி சூரணித்து தேனோடு குழைத்து 250 - 500 மி.கி. கொடுக்க பெருங்கழிச்சல் சுரம் நீங்கும்.

குளிகை:- 1

இலவம், விளா, வில்வம் இவற்றின் பிசின்கள், சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், கிராம்பு, அதிவிடையம், கழற்சிப்பருப்பு, சீரகம், ஓமம், கற்கடகசிங்கி, சிறுதேக்கு, மாதுளம்பிஞ்சு, வில்வப்பழச்சதை, பொன்முசுட்டை வேர் இவற்றைச் சமமாயெடுத்து நல்லெண்ணெய் விட்டு மணக்க வறுத்து தயிர்த் தண்ணீர் விட்டரைத்து 2 கி. அளவு உருண்டைகளாகச் செய்து வடிதயிரில் ஒரு உருண்டை கொடுக்க பெருங்கழிச்சலும் அதனால் வரும் சுரமும் நீங்கும்.

உருண்டை :- 2

அதிவிடையம், சாதிக்காய், சாதிபத்திரி, அபின், கடுக்காய், தான்றிக்காய், மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு 1கி, ஏலம் 4 கி எடுத்துக் கொள்க. மாதுளந்தளிரையும் அத்திப்பட்டையையும் எடுத்து குடிநீர் செய்து மேற்சொல்லப்பட்ட மருந்துகளை அரைத்து அடைபோல் தட்டி அரசிலையில் கட்டி சட்டியில் வைத்து மேற்படி குடிநீரைச் சிறிது சிறிதாய் வார்த்து வேகவைத்துக் கொள்க. இப்படியே பத்துமுறை மைபோல் அரைத்து 135 மி.கி. அளவு உருண்டை செய்து வடிகட்டின எருமைத்தயிரில் வயதிற்குத் தக்க அளவறிநது கொடுக்க கழிச்சல் தீரும். வெந்நீரில் கொடுக்க சுரம் நீங்கும்.

(கல்நார்) குளிகை:- 3

கல்நார், கெருடப்பச்சை, காட்டுமிளகுவேர், சந்தனம், காண்டா மிருகத்தின் கொம்பு, தாளிவேர், வசம்பு இவற்றைச் சமமாக எடுத்துக் கொள்க. அதனைத் தாய்ப்பாலில் அரைத்து மிளகு போல் (130 மி.கி.) உருண்டை செய்து வெந்நீரில் இழைத்து அளவறிந்து கொடுக்க கழிச்சல் சுரம் விட்டுப் போகும்

அத்தி (என்பு) சுரத்தின் குறிகுணம்:-

குழந்தை பால் குடிக்காது, புத்தி கலங்கிவிடும், உள்வலி தோன்றும், வெள்ளையாக ஓக்காளம் எடுக்கும். வாந்தி உண்டாகும். சிறுநீர் சிவக்கும் இரவு நேரத்திலே சுரம் ஏற்படும். இருமல் வரும். உடம்பு முன்னர் வற்றி பின்னர் வீங்கிச் சோகை ஏற்படும். தாகம் அதிகமேற்படும். உடல் குளிர்ச்சியாயிருக்கும். சுரம் அதிகமாய்க் காய்ந்து விட்டு விடும். மூளை சுரமும் ஏற்படும்.

குடிநீர் :- 1

பேய்ப்புடல், முத்தக்காசு, பற்பாடகம், ✱பாடாவரை. கடுகுரோகணி, சுக்கு, பேய்பாச்சொற்றி வகைக்கு 9 கி. எடுத்திடித்து 2.6 லி. தண்ணீரிற் போட்டுக் காய்ச்சி மூன்றிலொன்றாகச் சுருக்கி மூன்று வேளைக்குக் கொடுக்க என்புசுரம் நலமாகும்.

குடிநீர்:- 2

குப்பைமேனியிலை, தும்பைச் சமூலம் இவற்றைக் கருக்கித் துடைத்து சட்டியில் மிளகை கருக்கி வெந்தயம், ஓமம் இவற்றை இளவறுவலாய் வறுத்து உடன் சேர்த்து தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி எட்டிலொன்றாகச் சுருக்கி தக்க அளவு கொடுக்க என்புசுரம் நலமாகும்.

நெய்:- 1

சாத்திரபேதி, கோட்டம், அதிமதுரம், சந்தனம், ஏலம், சீரகம், சரக்கொன்றைக்காய்ப் பிசின், உருத்திராட்சம், நெல்லிக்காய் வற்றல், சண்பகப்பூ, கொத்துமல்லி, விலாமிச்சை வேர், மான்கொம்பு பற்பம் இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து பசுவின்பால் விட்டு ஆட்டிக் கொள்ள வேண்டும். நெய் 1.3 லி., பருத்திக்காயின் சாறு, பொன்னாங்காணிச் சாறு இவற்றை வகைக்கு 335 மி.லி. எடுத்துக் கொள்க. இவற்றைக் காய்ச்சி அதில் 9 கி. சர்க்கரையைப் போட்டுக் கிளறி விட வேண்டும். அதனை 5-10 மி.லி. இருவேளை கொடுக்க குழந்தைகட்கு வரும் என்புசுரம் நீங்கிப் போகும்.

நெய் :- 2

தேங்காய் 4 எடுத்து துருவி வறுத்துப் பால்பிழிந்து கொள்க. ஏலம், திப்பிலி, கார்போகரிசி, வாலுளுவையரிசி, வெட்பாலையரிசி, மூங்கிலரிசி, நற்சீரகம், இலவங்கப்பட்டை, செண்பகப்பூ, நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய், அதிமதுரம் இவற்றை வகைக்கு 35கி, ஆடாதோடை - 70 கி., சீனி 175 கி. எடுத்து இவற்றை ஒன்று சேர்த்து அரைத்துக் கலக்கி காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்துக் கொண்டு பத்திரப்படுத்தி வைக்க அதை இரண்டு நேரம் 8 மி.லி. கொடுக்கவும். அதையே துவாலையாகப் போடவும்

இரசாயணம்:-

சர்க்கரை 70 கி., மாதளம்பூ 35 கி., மாதளம்பிஞ்சு 35 கி., மாதுளம்பட்டை, மாதுளம் கொழுந்து - 35 கி., பற்பாடகம் - 70 கி., இவையனைத்தையும் நெய் விட்டு வேகவைத்து அரைத்து சர்க்கரை சேர்த்து காலை மாலை நெல்லிக்காயளவு சாப்பிடவும்.

(வேளையாதி) எண்ணெய் :-

நல்வேளை, நாய்வேளை, செம்பருத்தி, மணித்தக்காளி, சிவப்பு அவரை, சிறுதகரை, பழம்பாசி, சமுத்திரசோகி, அம்மான் பச்சரிசி, நிலவிளா, சிவதைவேர், சிவதையிலை, வேலிப்பருத்தி, இண்டு, செம்முள்ளி, கண்டங்கத்திரி, துளசி, தராயிலை, பருத்திவித்து, பாவட்டை, பொடுதலை, கழற்சியிலை, நரிப்பயறு, சிறுபுள்ளடி, கோழியவரை, சுரை, கொன்றைப்பட்டை, முருங்கைப்பட்டை, அகத்தி, கற்றாழைச்சாறு, கணப்பூண்டு, வெங்காயம், பேய்ப்பீர்க்கு, சிறுசின்னி,

கோடகசாலை ஆகிய மூலிகைகளின் சாறும் வகைக்கு 158 கி. சேர்த்து அத்துடன் இதற்குச் சரிபாதியாய் ஆமணக்கெண்ணெய் கூட்டி வெயிலில் வைக்க வேண்டும்.

இதில் ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, வசம்பு, தக்கோலம், குங்குமப்பூ, திப்பிலி, கொத்துமல்லி, வெள்ளுள்ளி, மிளகு, கோட்டம், அகில் ஆகிய மருந்துச் சரக்குகளின் பொடியை வகைக்கு 8 கி. எடுத்துப் பாலில் அரைத்துச் சேர்க்க. அதனை 16 மி.லி. எடுத்துக் குழந்தைக்குக் கொடுக்க அத்திசுரம் நீங்கும். தாய் பத்தியம் இருக்க வேண்டும்.

அனல் சுரக் குறிகுணம்:-

வெக்கையாக கழிச்சல் வெளியாகும். வெப்பமாகி வாய்ப்புண்ணாகும். கபம் ஏற்பட்டு சிறுநீர் சிவந்து போகும். பேதியது வறட்சியாக விழும். மலத்துவாரம் புண்ணாகிவிடும்.

குடிநீர்:-

நன்னாரி, கொழிஞ்சிவேர், பனங்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, அதிமதுரம், தேவதாரம், வெங்காயம், நற்சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, இஞ்சி ஆகிய இச்சரக்குகளைச் சமமாய் எடுத்துப் பொடித்துக் குடிநீராக்கி 15 மி.லி. - 30 மி.லி. இருவேளை குழந்தைகட்குக் கொடுக்க அனல்சுரம் சரியாகும்.

(வில்வாதி) மாத்திரை :- 1

பச்சைக் கற்பூரம், இலவங்கம், வால்மிளகு, சிறுநாகப்பூ, கடுகுரோகணி, ஏலம், சடாமாஞ்சில், சுக்கு, சீரகம் ஆகியவற்றை வகைக்கு 9 கிராமும் நேர்வாளத்தைக் குறிப்பிட்ட அளவும் எடுத்துக் கொள்க. இந்தச் சரக்குகளைப் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றாலாட்டி மிளகு போல் உருண்டை செய்து பத்திரப்படுத்தி வைத்துக் கொள்க. அதனை இஞ்சி (அல்) தாய்ப்பாலில் இழைத்துக் கொடுக்க கனல் சுரம் விட்டுப் போகும்.

(சீரக) மாத்திரை :- 2

நற்சீரகம், பேரீந்து, ஏலம், முந்திரிப்பழம், செங்கழுநீர்க்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், அதிமதுரம், சந்தனம், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், கல்நார், கிராம்பு, கடுகுரோகணி, சாத்திரபேதி, முத்தக்காசு, கொத்துமல்லி, சூடன் வகைக்கு 10 கி. எடுத்து இளநீரிலரைத்து தூதுவளங்காய் (400 மி.கி.) போலுருட்டிக் கொண்டு தாய்ப்பாலிலுரைத்து ஆறுவேளை கொடுக்க உஷ்ண சுரம் தீரும்.

அன்னபானாதிச் சுரத்தின் குறிகுணம்:-

வேர்வை, உடல் வெதும்பல், கண்சிவத்தல், அடிக்கடி குடிக்க வெந்நீர் வேண்டுதல், எதைப் பார்த்தாலும் பயந்து பதறியும் கதறியும் அழுதல், அடிக்கடி எழுந்து நின்று தெருவழியைக் கண்டு ஓடுதல், மலச்சிக்கல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

(கற்றாழை) எண்ணெய்:-

கற்றாழஞ்சோறு, கடுக்காய்த்தோல், களிப்பாக்கு, கருவேலம்பட்டை, பிரமியிலை, சுக்கு ஆக இவ்வாறையும் வகைக்கு 9 கி. எடுத்து இடித்து 560 மி.லி. நீர்விட்டு 160 மி.லி.யாகச் சுண்ட வைத்து வடித்த குடிநீருடன் அதற்குச் சரிபாகம் சிற்றாமணக் கெண்ணெய் கூட்டி எரித்துப் பக்குவத்தில் எடுத்த எண்ணெயைக் காலையில் மட்டும் 5-15 மி.லி. வீதம் போதுமான நாளளவு கொடுக்க அன்னபானாதிச் நீங்கும்.

குளிகை:-

கோரோசனை, அதிமதுரம், கோட்டம், விலாமிச்சம் வேர், வெட்டிவேர், ஏலம், சண்பகப்பூ, மாசிப்பச்சை, சாத்திரபேதி இவற்றைச் சமமாய் எடுத்து தாய்ப்பாலிலாவது வெட்டி வேர்த்தண்டுச் சாற்றிலாவது மைபோல் அரைத்து 130 மி.கி. அளவு உருண்டை செய்து தாய்ப்பாலில் உரைத்து வேளைக்கொன்றாக நோய் வன்மைக்குத் தக்கவாறு கொடுக்கத் தீரும்.

ஆமசுரக் குறிகுணம்:-

சுரவேகம் அதிகமாகத் தெரியாது. ஆனால் மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை சூடு அதிகமாகக் காணும். நீர்வேட்கை இருக்கும். உடல் இளைக்கும். சீறிச் சீறியழும். பசி உண்டாகாது. உடல் கறுக்கும். சோர்வு ஏற்படும். நடுக்கம் உண்டாகும். இச்சுரம் வலிமை பெற்றால் கை, கால் குளிர்ச்சி அடையும். படுக்கையினின்று எழுந்து அலறச் செய்யும். தாய்ப்பாலை உண்ண முடியாமல் வெப்பத்தால் வாயினின்று ஆவியெழும் அடிக்கடி இருமலுண்டாகும். வாய்பிதற்றும். கண்ணிலும் தலையிலும் வலி உண்டாகும்.

தீராத ஆமசுரக் குறிகுணம்:-

குழந்தையின் தலை நடுங்கும். தலை சுற்றும். தொண்டையில் கபமானது ஏற்படும். கண்கள் விரிந்து வெளுத்து விடும். கண் சொருகும்.

உறக்கம் கொள்ளும். சுரம் அதிகமாய் இருக்கும். விட்டு விட்டு வரும். வாய், நாக்கு உலரும். இவையே தீராத ஆமசுரத்தின் குறிகுணங்களாகும். இந்நோய் அசாத்தியம் ஆயினும் மருத்துவத்தை விடலாகாது.

குடிநீர்:-

பாவட்டை, கொன்றை, சிற்றாமுட்டி, இவற்றின் வேரையும் மிளகையும் தட்டிப் போட்டு குடிநீர் செய்து 15-30 மி.லி. அளவு இருவேளை கொடுக்கத் தீரும்.

ஆம சுரத்துக்கு நெய்:-

விளாங்காய் அளவு ஆவின் வெண்ணெயில், உத்தாமணிக் கொழுந்து, வசம்பு, உள்ளி, விளாவோடு, ஓமம், ஆமையோடு வகைக்கு 10கி. எடுத்து வறுத்துப் பொடித்துப் போட்டுக் காய்ச்சி 5-15மி.லி கொடுக்கத் தீரும்.

(வேளையாதி) எண்ணெய்:-

நல்வேளை எனும் தைவேளை, நாய்வேளை, செம்பருத்தி, மணத்தக்காளி, சிவப்பு அவரை, சிறுதகரை, பழம்பாசி, சமுத்திர சோகி, அம்மான் பச்சரிசி, நிலவிளா, சிவதைவேர், சிவதையிலை, வேலிப்பருத்தி, இண்டு, செம்முள்ளி, கண்டங்கத்திரி, துளசி, தராயிலை, பருத்திவித்து, பாவட்டை, பொடுதலை, கழற்சியிலை, நரிப்பயறு, சிறுபுள்ளடி, கோழியவரை, சுரை, கொன்றைப்பட்டை, முருங்கைப்பட்டை, அகத்தி, கற்றாழைச்சோறு, கணப்பூண்டு, வெங்காயம், பேய்ப்பீர்க்கு, சிறுசின்னி, கோடகசாலை ஆகிய 35 வகைச்சாறும் வகைக்கு 158 கி. வீதம் சேர்த்துக் கொள்க. அத்துடன் சரிபாதி ஆமணக்கெண்ணெய் கூட்டி வெயிலில் வைக்க. இதில் ஓமம், சாதிக்காய் சாதிபத்திரி, வசம்பு, தகக்காலம், குங்குமப்பூ, திப்பிலி, கொத்துமல்லி, வெள்ளுள்ளி, மிளகு, கோட்டம், அகில் ஆகிய பன்னிரண்டு மருந்துச் சரக்குகளைப் பொடித்து வகைக்கு 8 கி. எடுத்துப் பாலில் அரைத்துக் கூட்டிக் கரைத்துப் பின் வடிகட்டி எடுத்து 5-15 மி.லி. வீதம் கொடுத்துவர ஆம பேராம சுரம் நீங்கும், தாய் பத்தியம் காக்க வேண்டும்.

(உள்ளி) உருண்டை:- 1

தராவின் வேர், பொன்னாங்கண்ணி வேர், சத்திச் சாரணை வேர் ஆகிய மூன்றையும் சம எடை எடுத்து போதுமான அளவு

உள்ளித்தைலம் விட்டரைத்து 1-5 கி. அளவினதாக உருண்டை செய்து வயதிற்குத் தக்க அளவு கொடுத்துவர ஆமசுரம் நீங்கும்.

(ஏலாதி) மாத்திரை:- 2

ஏலம், கிராம்பு, கோரைக்கிழங்கு, அதிமதுரம், வெட்டிவேர், கடுகு, சுக்கு, கொடி முந்திரிப்பழம், கோரோசனம், நன்னாரிவேர், நிலப்பனைக் கிழங்கு, தாளிசபத்திரி, சடாமாஞ்சில், சந்தனத்தூள், இலுப்பைப்பூ, தேவதாரம், திப்பிலி, கடுகுரோகணி இவற்றை வகைக்கு 1கி. எடுத்துக் கொள்க. கல்வத்திலிட்டு 2 செவ்விளநீர் விட்டு 6 மணி நேரமரைத்துப் பிறகு தாய்ப்பால் விட்டு மேலும் ஆறுமணி நேரம் அரைத்து 135 மி.கி. அளவு மாத்திரை செய்து வைத்துக் கொள்ள வேண்டும். காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் தாய்ப்பாலிலிழைத்துக் கொடுக்க ஆமசுரம் நீங்கும்.

ஆம சுர மாறலுக்கு மருந்து:-

வேம்பு, இலுப்பை, மாவிலங்கு, பாவட்டை, முருங்கை, நுணா இவற்றின் ஈர்க்கு, வேலிப்பருத்தி, தைவேளை, சாரணை இவற்றின் வேர் பேய்ப்பாச்சோற்றி வகைக்கொரு பிடி எடுத்து வறுத்து 2.6 லி. நீரில் போட்டு திப்பிலி, மிளகு, ஆமையோடு, சுக்கு, வசம்பு, ஓமம், ஓர் நிறையாய் முடிந்து போட்டு வற்றக்காய்ச்சி அதில் மேற்படி மருந்தை வைத்துக் கொடுக்கத் தீரும்.

உடம்பு வலிக் காய்ச்சல் குறிகுணம்:-

உடம்பு நோகும், காய்ச்சல் ஏற்படும். உதட்டைக் கடிக்கும். கைகளை மூடிக் கொள்ளும். கண்கள் நட்ட கண்களாகவே இருக்கும். பாலுண்ணாமலே தாயின் மார்பைக் கடித்து இழுக்கும்; ஆகிய இக்குணங்கள் கண்டால் உடம்பு வலிக் காய்ச்சல் ஆகும்

(சாணாக்கிப்பிட்டவியற்) சாறு:-

சீதேவி செங்கழுநீர்ப் பூண்டை இடித்துப் பிட்டவியலாக அவித்துப் பிழிந்த சாற்றில் கடுகுரோகணியை அரைத்துக் கலந்து வெள்ளாட்டுப் பாலும் சேர்த்துப் புகட்டி வர உடம்பு வலிக் காய்ச்சல் நீங்கும்.

உட்சுரம் - குறிகுணம்:-

மலமும் சிறுநீரும் மிகவும் குறைந்து கழியும். உட்சுரமாக இருக்கும். வெதும்பும், மார்பில் மட்டும் சுரம் தோன்றும். வயிற்றிலும், மலம் போகும் போது ஆசன வாயிலிலும் எரிச்சல் காணும். தலை மயக்கம் கொள்ளும். இவ்வையே உட்காய்ச்சலின் குறிகுணங்கள்.

குடிநீர்:-

செவியம், முத்தக்காசு, பேய்ப்புடல், கஞ்சாங்கோரை, இருவேலி, சுக்கு இவற்றைக் குடிநீரிட்டு 15-30 மி.லி. அளவு, இருவேளை கொடுக்க உள்சுரம் மாறும்.

(புளியாதி யீர்க்குக்) கற்கம்:-

புளி, வேம்பு , மா, நெல்லி, நாரத்தை, நுணா, ஒதி, தகரை, எலுமிச்சை ஆகியவற்றின் ஈர்க்குகள் எடுக்க வல்லாரைக்கீரை, பழம்பாசி, புள்ளடி, கோரைக்கிழங்கு, வெங்காயம், அத்திமொக்கு, சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், மணத்தக்காளி, முசுமுசுக்கை, விட்டுணுகிரந்தி, நரிப்பயற்றங்கொடி, பற்பாடகம், மூக்கொற்றி, சத்திச்சாட்டரணை, அகத்தி, அம்மான் பச்சரிசி, சீந்தில் கொடி, பொன்வறுப்பாய் வறுத்த சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, வெந்தயம் ஆகிய சரக்குகளை வகைக்கு 18 கி. வீதம் எடுத்துக்கொள்க. கோரோசனையும், அக்கராகாரம், அதிமதுரம், மான்கொம்பு, சாதிக்கோட்டம் இவ்வைந்தையும் வகைக்கு 500 மி.கி. அளவெடுக்க.

மேற்கூறிய அனைத்துச் சரக்குகளையும் ஒன்று சேர்த்து ஆதொண்டை எனும் காத்தொட்டி சமூலக்குடிநீர் விட்டரைத்துக் கற்கமாக்கி 1-5 கி., வயதிற்குத்தக்க அளவெடுத்து காலை, மாலை 10 நாட்கள் கொடுத்துவர உட்சுரம் சரியாகும்.

(சங்கன்) நெய்:- 1

நற்சங்கன், சிறுசெருப்படை, துளசி, வறட்பூலா, கழற்சி ஆகிய இவற்றின் சாறுகளை வகைக்கு 1.3 லி. வீதம் எடுத்துக் கொள்க. அதில் அப்பைக்கோவைக் கிழங்கு, நெருஞ்சில்வேர், தூதுவளை வேர், கிராம்பு, அரிசித் திப்பிலி, சாதிக்காய், இம்பூறல் வேர்ப்பட்டை, சுட்ட வசம்பு, வெள்ளுள்ளி, சுக்கு, கடுக்காய்த்தோல், சிறுதேக்கு ஆகிய 12 பொருட்களையும் வகைக்கு 5 கி. எடுக்க. அவற்றைப் பால்விட்டு அரைத்துக் கலக்கி 1.3 லி. நெய்யுடன் சேர்த்துச் சிறுதீயில் எரித்துப் பக்குவத்தில் வடித்து காலையில் 5-15 மி.லி. வீதம் உள்ளுக்குப் புகட்டியும் மேலுக்குப் பூசியும் வர உட்காய்ச்சல் நீங்கும்.

(கலியாண பூசணிக்காய்) நெய் :- 2

கலியாண பூசணிக்காய்ச் (சாம்பல் பூசணி) சாறு, இளநீர், தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு, பசுவின்பால், பசுவின் நெய் ஆகிய இவ்வைந்தையும் வகைக்கு 1.3 லி. வீதம் சேர்த்துக் கொள்க. அதில்

கடுகுரோகணி, சண்பகப்பூ, வெட்டிவேர், கடற்பாசி, அதிமதுரம், இலவங்கம், சிற்றாமுட்டி வேர், பேராமுட்டிவேர், திப்பிலி, சந்தனம், ஏலம், விலாமிச்சம்வேர், மாம்பருப்பு, சாதிக்கோட்டம், விளாம்பிசின், இலவம்பிசின், பொன்முசுட்டை வேர் ஆகிய பொருட்களை வகைக்கு 5 கி. எடுத்து இடித்துப் பொடித்துப் பசுவின்பால் விட்டரைத்துக் கலக்க வேண்டும். பின்பு எரித்துப் பக்குவமானவுடன் வடித்துக் கொள்ள வேண்டும். அதைக் காலையிலும், மாலையிலும் 5-15 மி.லி. அளவு வேண்டிய நாள் மட்டும் கொடுத்துவர உட்காய்ச்சல் நீங்கும்.

நெய் :- 3

10 வாழைப்பழம், நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம் இவற்றைச் சம அளவெடுக்க. துளசி, முடக்கறுத்தான் இவற்றைச் சம அளவெடுத்து அரைத்து விளாங்காய் அளவு எடுத்துக் கொள்க. 3 லி. பசுவின் நெய்யிலிட்டுக் காய்ச்சிக் கொள்க. ஈருள்ளி 35 கி. எடுத்து உரித்துப் போட்டுப் பதம் பார்த்து இறக்கி கலசத்தில் வைத்து காலை மாலை 5-15 மி.லி. அளவறிந்து கொடுக்க. உட்காய்ச்சல் குறையும்.

(தகரை) எண்ணெய் :- 1

ஊற்றின ஆமணக்கு நெய், தகரைச்சாறு 1.3லி. எடுத்து ஒன்று சேர்த்து அதில் நாயுருவிவேர், தைவேளை வேர், நாய்வேளைவேர், கொழுஞ்சிவேர், மூக்கரட்டை வேர் இவற்றை வகைக்கு எலுமிச்சங்காயளவு அரைத்துக் கலக்கிக் கொள்க. வசம்பு, ஓமம், கஸ்தூரிமஞ்சள், வாய்விடங்கம், இவற்றை வகைக்கு 17.5 கி. வெள்ளுள்ளி 7.0 கி., கருஞ்சீரகம், வெந்தயம், கடுகுரோகணி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து எல்லாவற்றையும் நீர்விட்டு அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்துக் கொள்க. அதனைக் குழந்தைக்கு காலையில் மட்டும் 5-15 மி.லி. அளவு வயதிற்கும் நோயின் வன்மைக்கும் ஏற்றவாறு புகட்டிவர மேற்படி நோய்கள் நீங்கும். தாய், உப்பு, புளி பத்தியங்காக்க வேண்டும்.

(குருவிச்சி என்ற புல்லுருவி) எண்ணெய்:- 2

ஆலமரத்துப் புல்லுருவி 1கி. பனை வெல்லம் 1 கி. எடுத்து இவ்விரண்டையும் கூட்டி அரைத்து 5-15 மி.லி. எண்ணெயில் கலந்து காலையில் மட்டும் 3 நாட்களுக்குக் கொடுக்க உட்சுரம் நீங்கும்.

(கற்றாழை) எண்ணெய்:- 3

கற்றாழைச்சாறு, இளநீர், பசுவின்பால் ஆகிய இம்மூன்றையும் வகைக்கு 1.3 லி. எடுத்து இத்துடன் 3.9 லி. சிற்றாமணக்கெண்ணெயைக் கலந்து கொள்க. இதில் சின்னம்மான் பச்சரிசி, கலைமான் கொம்பு பற்பம், சந்தனம், ஆமையோட்டுப் பற்பம் ஆகிய நான்கையும் வகைக்கு 35 கி. எடுத்து இளநீர் விட்டரைத்துக் கொள்க. சண்பகப்பூ, சாதிக்காய், கருஞ்சீரகம், சீரகம், அதிமதுரம், சிறுநாகப்பூ ஆகிய இவற்றை வகைக்கு 9 கி. சாதிபத்திரி 4.5 கி., கொத்துமல்லி 18 கி. எடுத்து பசுவின்பால் விட்டரைத்துச் சேர்த்துக் கலக்கி எரித்து மெழுகு பதமாக வடித்துக் காலை, மாலையில் 5-15 மி.லி. அளவு, ஏழு நாட்கள் கொடுத்துவர உட்காய்ச்சல் தீரும்.

(இளநீர்) எண்ணெய்:- 4

இளநீரில் பக்குவம் செய்த சிற்றாமணக்கெண்ணெய் 1.3 லி. பசுவின்பால் 2.6 லி., 650 மி.லி., கற்றாழைச்சாறு ஆகிய இம்மூன்றையும் ஒன்றாகக் கூட்டி எரித்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்க. இதில் சீரகம், மாசிக்காய், கோட்டம், அதிமதுரம், கிராம்பு, ஏலம், சுக்கு ஆகிய இவ்வேழு பொருட்களையும் இளவறுப்பாக வறுத்து நுண்ணிய பொடியாக இடித்து வகைக்கு 4.4கி. வீதம் எடுத்து கலந்து கொள்க. 9கி. வெந்தயத்தையும் இளவறுப்பாக வறுத்து இடித்துத் தூளாக்கி சேர்த்து வெய்யிலில் வைத்தெடுத்து காலை, மாலையில் 5-15 மி.லி. வீதம் இருவேளை வேண்டிய நாள் மட்டும் குழந்தைகட்குக் கொடுத்துவர உட்காய்ச்சல் நீங்கும்.

எண்ணெய் :- 5

இளநீரில் வேகவைத்த சிற்றாமணக்கு எண்ணெய் வரகெண்ணெய் வகைக்கு 1.3 லி., பால் 2.6 லி., கற்றாழைச்சாறு 675 மி.லி. எடுத்து மெழுகுபதமாகக் காய்ச்சிக் கொள்க. அதில் கோட்டம், அதிமதுரம், கிராம்பு, ஏலம், இருவேலி, தருப்பைப்புல் இவற்றை வகைக்கு 4.4 கி. வெந்தயம் 9 கி. எடுத்துப் பொடி செய்து மேற்கூறிய கலவையில் போட்டுக் காய்ச்சி 5-15 மி.லி. அளவறிந்து கொடுக்க உட்காய்ச்சல் நீங்கும்.

தைலம்:-

கற்றாழை, நெல்லிக்காய், முசுமுசுக்கை, ஆவின் பால் வகைக்கு 325 மி.லி. நல்லெண்ணெய் 2.6லி. எடுத்து ஒன்று சேர்த்து அதில் அதிமதுரம் 35கி. எடுத்து அரைத்துக் கலந்து காய்ச்சி வடித்து முழுகிவர உட்சுரம், காலெரிவு தீரும்.

கண (கணை) சுரத்தின் குறிகுணம்:-

கொப்பூழைத் தொடர்ந்து நுரையீரல் அளவும் புண்ணாகும். சுவாசித்தலில் ஏற்றத்தாழ்வு இருக்கும். உடம்பில் சுரம் ஏற்பட்டது போன்று தோலையொட்டிக் காய்ந்து மிக வருத்தத்தோடு மயக்கத்தை உண்டாக்கும். இதுவே கணக்காய்ச்சலின் குறிகுணங்களாகும்.

காய்ச்சல் அதிகமாக இருக்கும். ஒருநாள் விட்டொரு நாள் வீங்கும். ஒரு நாள் விட்டொரு நாள் வாடும். வாய்ப்புண் ஏற்படும். குழந்தை சோற்றைத் தின்னாது. வயிறு மந்தமாகி மலம் கட்டிப் போகும்.

சாறு:-

தூதுவளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை, செம்முள்ளி, விஷ்ணு காந்தி, சங்கு, இண்டு, சடைச்சி, துளசி இவற்றின் இலைகளை வகைக்கு ஒருபிடி எடுத்து இடித்துக் கொள்க. அதனுள் 4கி. ஓமத்தை முடிந்து வைத்துப் பிட்டவியலாய் அவித்துச் சாறு பிழிந்து கொள்க. அதில் ஓமத்தை அரைத்துக் கலக்கி 10-15 துளிகள் கொடுக்க கணசுரம் நீங்கும்.

குடிநீர்:- 1

வெட்பூலா, வில்வம், சிற்றாமுட்டி, விஷ்ணுகிரந்தி, நன்னாரி இவற்றின் வேர் வகைக்கு 175 கி. எடுத்துக் கொள்க. மிளகு 18 கி. எடுத்து தூள் செய்து இருபங்காக்கிக் கொள்க. பிறகு 2.6 லி. தண்ணீரில் ஒரு பங்கு தூளைப் போட்டு சுண்ட வைத்து அதனை ஐந்து நேரங்கட்குக் கொடுக்க கணசுரம் நீங்கும்.

(பழம்பாசிக்) குடிநீர்:- 2

பழம்பாசி, சின்னம்மான் பச்சரிசி, பேய்மிரட்டி, வல்லாரை, நாய்த்துளசி, தகரை ஆகிய ஆறு பொருட்களையும் வகைக்கு 9 கி. எடுத்து இடித்து 335 மி.லி. தண்ணீர் சேர்த்து நாலில் ஒரு பாகமாகச் சுண்டவைத்துக் கொள்க. அதில் சீரகம், கருஞ்சீரகம், கோரோசனை ஆகிய மூன்றையும் வகைக்கு 500 மி.கி. எடுத்துப் பொடித்துக் கூட்டி, காலை, மாலை, இருவேளையும் அதைப் பகிர்ந்து கொடுத்துவர கணசுரம் தீரும்.

குடிநீர்:- 3

வில்லைப்பத்திரி, துத்தி, வெங்காயம், வெந்தயம் இவற்றைச் சமமாய் எடுத்துக் கொண்டு நன்றாய் நீர்விட்டுக் காய்ச்சி பிறகு அதில் தக்க அளவு சீரகத்தைப் போட்டுக் குடிக்க நீங்கும்.

குடிநீர்:- 4

வேப்பம்பட்டை, மருதம்பட்டை, கூவிளத்தினிலை, தகரை, சித்திரப்பாலை (சின்னம்மான் பச்சரிசி) கொழிஞ்சிவேர், சிறுவிளா, விஷ்ணுகிரந்தி, நன்னாரி, முத்தக்காசு, வேலிப்பருத்தி, சீந்தில், பேய்ப்புடல், அகத்தி இவற்றை வகைக்கு ஒருபிடி எடுத்துக் கொள்க. கோட்டம், மாசிக்காய், கொத்துமல்லி, வெந்தயம், நறுக்குமூலம், அதிமதுரம், பற்பாடகம், அக்கிராகாரம், சிறுதேக்கு, ஓமம் ஆகிய கடைச்சரக்குகளை வகைக்கு 15 கி. எடுத்து அனைத்தையும் ஒன்று சேர்த்துக் குடிநீராகக் காய்ச்சி 15-30 மி.லி. அளவு மூன்று நாட்கள் கொடுத்திட கணசுரம் தீரும்.

(அதிமதுரச்) சூரணம்:-

அதிமதுரம், ஏலம், இலவங்கப்பட்டை, சண்பகமொக்கு, கோட்டம், சுக்கு, நற்சீரகம், கோரைக்கிழங்கு ஆகிய சரக்குகளைச் சமஎடை எடுத்து இளவறுப்பாக வறுத்து இடித்துப் பொடியாக்கி சீலையில் வடிகட்டி சர்க்கரை சமமாகக் கூட்டி மூன்று விரலளவு கொடுத்துவர கணசுரம் நீங்கும்.

சங்கன் நெய்:-

கலியாண பூசணிக்காய் நெய் கணசுரத்தைப் போக்கும். இதன் செய்முறையை உட்சுரத்தில் காண்க.

(புள்ளடி) எண்ணெய்:- 1

புள்ளடி, செப்பு நெருஞ்சில், வல்லாரை, வறட்பூலா, கோழியவரை ஆகியவற்றின் இலைச்சாறுகளை வகைக்கு 70 கி. எடுத்து அதனுடன் 280 கி. சிற்றாமணக்கெண்ணெய் சேர்த்துக் கலந்து கொள்க. அதில் குரோசாணிஓமம், கடுகுரோகணி, வெளிச்சிப்பிசின், ஆலம்புல்லுருவி, சடாமாஞ்சில் ஆகிய இவ்வைந்து பொருட்களையும் வகைக்கு 3 கி. எடுத்து இடித்துப் பொடியாக்கிக் கலக்க வேண்டும். பிறகு எரித்துப் பக்குவமானவுடன் வடித்துவைக்க, அதனை 5-15 மி.லி. வீதம் காலை, மாலை வேண்டிய நாள்வரை கொடுத்துவர கணக்காய்ச்சல் குணமாகும்.

(ஆவாரை) எண்ணெய்:- 2

ஆவாரை, சரக்கொன்றை, விஷ்ணுகிரந்தி, நிலக்குமிழ், சிறுஅம்மான் பச்சரிசி ஆகிய மூலிகைகளின் வேர்ப்பட்டைகள், ஏலரிசி, நற்சீரகம், நெருஞ்சில் ஆகிய எட்டுப் பொருட்களையும் வகைக்கு 18 கி.

எடுத்துப் பசுவின்பால் விட்டரைத்து 1.3 லி. சிற்றாமணக் கெண்ணெயை அதனுடன் கலக்க வேண்டும். பின் எரித்துப் பக்குவ மாக வடிக்க வேண்டும். அதை 5-15 மி.லி. அளவாக 40 நாட்கள் கொடுத்துவர கணசுரம் நீங்கும்.

உப்பிலாங் கொடியினை வட்டமாக வெட்டி எடுத்து பசுவின் நெய்யை உடன் சேர்த்து 12 மணி நேரம் வெய்யிலில் வைத்து பக்குவமானவுடன் எடுத்து அளவறிந்து குழந்தைகட்குக் கொடுக்க கணசுரம் நீங்கும்.

(ஏலாதி) மாத்திரை:- 1

மாசிக்காய், திப்பிலி, ஏலம், கோரோசனை, கோட்டம், சடாமாஞ்சில், நற்சீரகம், கருஞ்சீரகம், அக்கிராகாரம் ஆகியவற்றை வகைக்கு 9 கி. எடுத்துக் கொள்க. தாய்ப்பால் விட்டு அந்த சரக்குகளை 6 மணி நேரம் அரைத்து 65 மி.கி. அளவுள்ள உருண்டை செய்து தாய்ப்பாலில் இழைத்துக் கொடுத்திட கணசுரம் நீங்கும்.

உருண்டை:- 2

சுக்கு, மிளகு, திப்பிலி, பொரித்த வெங்காரம், சாதிலிங்கம் இவற்றைச் சமனெடை எடுக்க, எலுமிச்சம் பழச்சாற்றால் மூன்று மணி நேரமரைத்து 32 மி.கி. அளவு உருண்டை செய்து கொள்க. துளசி செம்முள்ளி, ஆடாதோடை, தூதுவளை, விஷ்ணுகிரந்தி, கண்டங்கத்திரி, வெதுப்படக்கி, பேய்ப்புடல், சங்கு, நொச்சி ஆகிய இவற்றின் இலைகளை இடித்து பிட்டவித்துச் சாறு பிழிந்து கொள்க.

மேற்சொன்ன உருண்டையையும், கோரோசனையையும் பிட்டவித்த நீரில் உரைத்து, திரிகடுகை வெதுப்பிப் பொடித்த தூளையுங் கலந்து கொடுக்க கணசுரம் நீங்கும்.

உருண்டை:- 3

கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், குங்குமப்பூ, கஸ்தூரி, ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோரோசனை ஆகிய இவற்றை 9 கி. கிராம்பு 4 கி. எடுத்துக் கொள்க. இவையனைத்தையும் கருநொச்சிச் சாறுவிட்டு 3 மணிநேரம் நன்கு அரைத்துக் கொள்க. 32 மி.கி. அளவுள்ள உருண்டை செய்து வயதிற்குத் தக்கவாறு துளசிச் சாற்றில் இழைத்துக் கொடுக்க கணசுரம் நீங்கிவிடும்.

மாத்திரை:- 4

ஆமசுரத்தில் வரும் 'ஏலாதி மாத்திரை'யும் இதற்குப் பொருந்தும்.

ஊண் சுரம் - குறிகுணம்:-

மாங்கிஷ சுரம் என்று இதற்கு மற்றொரு பெயருமுண்டு.

ஊண்சுரத்தில் உடலில் அனல் போல சுரங்காயும்; உடல் நடுங்கும். மூச்சு அதிகமாக விடும். குருதி குறையும். உடல் வெளுத்து இளைத்துக் கருகும். அறிவு மயங்கும். மூர்ச்சையுண்டாகும். மயிர் கூச்சிடும்.

பச்சைக் கற்பூர மாத்திரை:-

பச்சைக்கற்பூரம், தூய்மை செய்த கந்தகம், இந்துப்பு, இலவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி ஆகிய ஆறு பொருட்களையும் வகைக்கு 5 கி. எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு மூன்று மணிநேரம் அரைத்து 65 மி.கி. அளவில் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

இஞ்சிச்சாறு, சர்க்கரை, சுக்கு இவற்றில் ஒன்றைத் துணை மருந்தாகக் கொண்டு, காலை, மாலை இருவேளையும் ஒரு மாத்திரை கொடுக்க ஊண் சுரம் நீங்கும்.

மேற்சொன்ன ஆறு சரக்குகளின் எடைக்குச் சமமாகத் தூய்மை செய்த நேர்வாளம் கூட்டி அரைத்து உருட்டிய மாத்திரையை மலக்கட்டுடன் வரும் எல்லாச் சுரங்களுக்கும் கொடுக்க 1.30 மணி நேரத்தில் பலன் கொடுக்கும்.

ஐயசுரம் (சிலேற்பனசுரம்) குறிகுணம்:-

குளிரும் பின்சுரமும் ஏற்படும். இருமல் வரும். மலமுங் கட்டிக் கொண்டு வயிறூதிக் கொள்ளும். கால், கை வலிக்கும். 17 நாட்களில் இச்சுரம் போய்விடும். இவை சிலேற்பன சுரத்தின் குறிகுணங்களாகும்.

சோம்புதல், வாய் தித்திப்பு, மூத்திரமும் மலமும் வெளுத்திருத்தல், மயிர்குத்துதல், நித்திரை மிகுந்திருத்தல், வாய் உப்புக்கரித்தல், சிறு கொதிப்பாய் இருத்தல், வாந்தியுண்டாதல், நெஞ்சு தழுதழுப்பாய் இருத்தல், வாய்நீர் கொள்ளுதல், இருமல், திமிர் நித்திரை, வயிற்றுப் பொருமல், குளிர் இவை அனைத்தும் சிலேத்தும சுரத்தின் குறிகுணங்களாகும்.

சுரம் காயும். உடம்பெங்கும் அடிக்கடி சில்லென ஈரப்படும். கண் சொருகும். அதிக நீர் வேட்கை உண்டாகும். விடக்கடி போல உடம்பு அசதி கொள்ளும். இக்குறி குணங்கள் கண்டால் சீதசுரம் எனப்படும்.

வயிறு பொருமும். கண்கள் வெளுக்கும். கைகால் சோர்ந்து விழும். கண்கள் குழிவிழும். சுரமும் விடாது. தோஷமும் விடாது. உடம்பும் நாக்கும் வறண்டு போகும். விக்கல் எடுக்கும். விட்டு விட்டு சுரங்காயும். கைகால் வெதும்பி கன்னங்காயும், நெஞ்சு வலிக்கும். வாந்தி ஏற்படும். உடலில் இங்குமங்கும் கனத்துக் கட்டி போல் காணாமல் மறையும். சுரத்தின் வேகம் அளவு கடந்து காணும். இவை ஐய சுரத்தின் குறிகுணங்களாகும்.

குடிநீர்:- 1

ஆடாதோடை, சிறுதேக்கு, கையாந்தகரை, சங்கன்வேர், சுக்கு, மிளகு, இவற்றைச் சேர்த்துக் குடிநீராக்கி 15-30 மி.லி. அளவு, 2 அல் 3 வேளை கொடுக்க ஐயசுரம் நீங்கும்.

(ஆடாதோடைக்) குடிநீர்:- 2

ஆடாதோடை, கொடிவேலிவேர், கொத்துமல்லி, வட்டத்திருப்பி, சுக்கு, கடுகுரோகணி, இவற்றைச் சமனெடுத்து 2.6 லி. நீர் வார்த்துக் காய்ச்சி 1/8 பாகமாகக் குறுக்கி 5 மி.லி. தேன்விட்டுக் கொடுக்க சிலேத்தும சுரம் நீங்கும்.

குடிநீர்:- 3

சிறுவழுதலை வேர், சிறுகாஞ்சோறிவேர், சிறுதேக்கு, சுக்கு, சீந்தில், முத்தக்காசு இவற்றைக் குடிநீராகக் காய்ச்சி 3 கி. திப்பிலி பொடியைத் தூவிக் கொடுக்க நலமாம்.

குடிநீர்:- 4

பேய்ப்புடல், கடுக்காய், நெல்லிமுள்ளி, ஆடாதோடை, கண்டங்கத்திரி, மரமஞ்சள், கடுகுரோகணி, செம்முள்ளிவேர், கட்டுக்கோடிவேர், சந்தனம், வேலிப்பருத்தி, திப்பிலி இவற்றை வகைக்கு 15 கி. எடுத்திடித்து மூன்று பங்கு செய்து கொள்க. வேளையொன்றுக்கு ஒரு பங்கை எடுத்து 2.6 லி. தண்ணீரில் போட்டு குடிநீராய்ச் சுருக்கிக் கொடுக்க சளி சுரம் நீங்கும். மலபந்தம் நீங்கும்.

குடிநீர்:- 5

கண்டங்கத்திரி, இருவேலி, விட்டுணுகிரந்தி, வாய்விடங்கம், துளசி, சுக்கு, கோட்டம், செங்கழுநீர்க்கிழங்கு, காஞ்சொறி, தூதுவளை, செவ்வியம் இவற்றைக் குடிநீராகக் காய்ச்சி 15-30 மி.லி. கொடுக்க சிலேத்தும சுரம் தீரும்.

குடிநீர்:- 6

சித்திர மூலம், தூதுவளை, கண்டங்கத்திரி வேர், கோட்டம், சிங்கி எனும் கடுக்காய்ப்பூ, முசுமுசுக்கை, முள்ளியிலை, அரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய சரக்குகளை வகைக்கு 9 கி. எடுத்து சமமாய்ப் பொடித்து 335 மி.லி. நீர் சேர்த்து 85 மி.லி. ஆக சுண்ட வைத்து ஆறு பொழுது குடிக்க சீதசுரம் நீங்கிவிடும்.

சூரணம்:- 1

கஞ்சாங்கோரை, துளசிவேர், பற்பாடகம், விஷ்ணுகிரந்தி, நிலவேம்பு, பேராமுட்டி, அரத்தை, பேய்ப்புடல், சுக்கு, சிறுதேக்கு, திப்பிலி, விளாம்பிசின், சீந்தில் இவற்றைச் சேர்த்து சூரணமாக்கி 500 மி.கி. அளவு இருவேளை உட்கொள்ள சீத சுரம் தீரும்.

(வழுதலைச்) சூரணம்:- 2

வழுதலை, சீந்தில், தாமரை வளையம், சுக்கு, முத்தக்காசு இவற்றைச் சமமாக எடுத்துப் பொடித்து சீலையில் வடிகட்டி 500 மி.கி. அளவு இருவேளை உட்கொள்ள சீத சுரம் நீங்கிப் போகும்.

(கோரோசனைக்) குளிகை:- 1

கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், ரசசெந்தூரம், ரசகற்பூரம், ஏலம், அப்பிரகச் செந்தூரம், கிராம்பு, கோட்டம், சாதிக்காய், அக்கிராகாரம் இவற்றை வகைக்கு 15 கி. எடுத்து சந்தனக் குடிநீரில் 12 மணி நேரமும் சண்பகப்பூக் குடிநீரில் 6 மணி நேரமும் குங்குமப்பூக் குடிநீரில் 6 மணி நேரமுமரைத்து 135 மி.கி. அளவு குளிகை செய்து நிழலிலுலர்த்தி தாய்ப்பாலிலுரைத்துக் கொடுக்க சிலேத்தும சுரம் நீங்கும்.

பற்று:-

இலவங்கம், அதிமதுரம், பச்சரிசி இவற்றைக் கழுநீரிலரைத்துக் கழுநீரில் கலந்து பற்றிடவும்.

மருந்து:-

அத்திக்காயின் சாறு, எருமைத்தயிர் இவற்றை வகைக்கு 35 கி. எடுக்க. ஓமம் 4 கி. எடுத்தரைத்து மேற்கூறிய கலவையில் கலந்து கொடுக்க குழந்தைகட்கு வரும் கப சுரம் நீங்கும்.

குளிர்சுரக் குறிகுணம்:-

முதலில் குளிர் உண்டாகிப் பின் சுரம் உண்டாகும். உடல்வளையும்; நாவறண்டு நீர் வேட்கையுண்டாகும். உடல் நோகும்; அரிப்புண்டாகும்.

சாறு:- 1

புரசையிலை, அதன் பட்டை, கற்றாழஞ்சோறு இவற்றை எடுத்து தட்டிச் சாறு பிழிந்து 16 மி.லி. கொடுக்க குளிர் சுரம் மாறும்.

சாறு:- 2

பெருந்தும்பையை இடித்துப் பிட்டவித்துச் சாறு பிழிந்து சாற்றிற்குச் சமமாகத் தேன்விட்டு எடுத்துக் கொள்க. இவ்வாறு மூன்று முறை செய்து கொடுக்க குளிர்சுரம் நிற்கும்.

குடிநீர்:- 1

கோட்டம், திப்பிலி, கண்டங்கத்திரி, சிறுதேக்கு, நிலக்குமிழ், சுக்கு, நிலவேம்பு, முத்தக்காசு, சிறுகாஞ்சோறி, சீந்தில், பற்பாடகம் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்திடித்து 2.6 லி. தண்ணீரில் போட்டு 165 மி.லி.யாக வற்றக் காய்ச்சிக் கொள்க. அதனை அளவறிந்து ஆறு வேளை கொடுக்கத் தீரும்.

குடிநீர்:- 2

ஆடாதோடை, முத்தக்காசு, சிறுவழுதலை, பற்பாடகம், பங்கம்பாளை, சுக்கு, சந்தனம், நன்னாரி வேர் வகைக்கு 35 கி. எடுத்து இடித்து 2.6 லி. தண்ணீரிற் போட்டு 325 மி.லி.யாக வற்றவைத்துக் கொள்க. இவ்வாறு ஆறுவேளை கொடுக்க குளிர்சுரம் நீங்கும்.

குடிநீர்:- 3

சீந்தில், நிலவேம்பு, சிறுகாஞ்சோறி, கொத்துமல்லி, வட்டத்திருப்பி, இலாமிச்சம் வேர், வேலிப்பருத்தி, வெட்டிவேர், பற்பாடகம் வகைக்கு 35 கி. இடித்துப் போட்டுக் குடிநீராக்கித் தக்க அளவு கொடுக்கத் தீரும்.

குடிநீர்:- 4

பேய்ப்புடல், முத்தக்காசு, பற்பாடகம், சீந்தில் தண்டு வகைக்கு 35 கி. எடுத்து இடித்துப் போட்டு குடிநீர் செய்து தக்க அளவு கொடுக்கத் தீரும்.

குடிநீர்:- 5

தூதுவளைச்சமூலம், நன்னாரி வேர், முத்தக்காசு, கடுக்காய், நெல்லிக்காய் தான்றிக்காய், வீழிப்பட்டை, வெட்டிவேர், இலாமிச்சம் வேர், தாமரைக்கிழங்கு இவற்றை வகைக்கு 12 கி. வீதமெடுத்து 2.6 லி. தண்ணீரில் போட்டு 325 மி.லி.யாக வற்றும்படி காய்ச்சுக. ஆறுவேளை கொடுக்க நலமாகும்.

குடிநீர்:- 6

சுக்கு, செவியம், கொத்துமல்லி, கற்கண்டு, பரங்கிப்பட்டை, பேய்ப்புடல், திப்பிலி மூலம், இலவங்கம், அதிமதுரம், முத்தக்காசு, வெட்டிவேர், இலாமிச்சம் வேர், கண்டங்கத்திரி, சீந்தில், பற்பாடகம், நன்னாரி, தூதுவளை, ஆடாதோடையிலை வகைக்கு 12 கி. எடுத்து இடித்துப் போட்டுக் குடிநீராக்கித் தக்க அளவு கொடுக்க குளிர்சுரம் தீரும்.

குடிநீர்:- 7

சீரகத்தையும் குருந்தொட்டி வேரையும் சமமாய் எடுத்து குடிநீராக்கி ஆறு வேளை கொடுக்க குளிர்சுரம் சரியாகும்.

குடிநீர்:- 8

நாராகரந்தைவேர், துளசிவேர், சுக்கு வகைக்கு 35 கி. எடுத்திடித்து 2.6 லி. நீரிற் போட்டு 325 மி.லி. அளவாய் வற்ற வைத்து ஆறு வேளைக்கும் கொடுக்க நலமாகும்.

கற்கம்:-

சண்பகப்பூ, சாத்திரபேதி, வெட்டிவேர், இலாமிச்சம் வேர், தக்கோலம், நெற்பொரி, சுக்கு இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து 325 மி.லி. மாதுளம்பழச் சாற்றிலரைத்துக் கலக்கித் தக்க அளவு கொடுக்க குளிர் சுரம் தீரும்.

(பச்சைக்கற்பூர) மாத்திரை:- 1

பச்சைக்கற்பூரம், இலவங்கப்பட்டை, சாதிக்காய் இவை மூன்றையும் வகைக்கு 10 கி. எடுத்து ஒன்று சேர்த்துக் கற்றாழைச் சாற்றால் 12 மணி நேரமரைத்து 30 கி. நேர்வாளம் சேர்த்து 65 மி.கி. அளவு உருட்டி நிழலிலுலர்த்தி வைக்க. வேளைக்கு 1 மாத்திரை வீதம் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்க 1.30 மணிநேரத்தில் கழிச்சலாகும்; பிறகு சுரம் தீரும். மலச்சிக்கலுடன் கூடிய குளிர் சுரம் நீங்கும்.

மாத்திரை:- 2

குளிருடன் வரும் சுரத்திற்கு குப்பைமேனியிலை, கொடிவேலி வேர்ப்பட்டை, மிளகு இவற்றைச் சமமாய் எடுத்தரைத்துக் கொள்க. அவ்விழுதில் 1/2 - 5 கி. வீதமெடுத்து அத்துடன் ஒரு கற்பூராதி மாத்திரையைச் சேர்த்து குளிர்வரும் போது கொடுத்தால் குளிர்சுரம் தீரும்

குளிகை:- 3

இரசம், பச்சைநாவி, அரிதாரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், நவச்சாரம், வெண்காரம், நேர்வாளம் ஆகியவற்றை வகைக்கு 4 கி., நேர்வாளம் 44 கி. இவற்றைச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாட்கள் அரைத்துக் கொள்ள வேண்டும். 130 மி.கி. அளவு உருண்டை செய்து உலர்த்திக் கொண்டு வெல்லம், தாய்ப்பால், இஞ்சிச்சாறு, மிளகுப்பொடி இவை ஏதேனுமொன்றில் இழைத்துக் கொடுக்க குளிர்சுரம் நீங்கிப் போகும்.

உருண்டை:- 4

செந்தகத்தையும் மிதிபாகலிலையையும் சமமாய் அரைத்து 65 மி.கி. அளவு உருண்டை செய்து கொள்க. 9 கி. மிளகை உடைத்துப் போட்டுக் குடிநீர் செய்து கொள்க. அதில் மேற்சொன்ன உருண்டையை உரைத்துக் கொடுக்க குளிர்சுரம் சரியாகும்.

உருண்டை:- 5

தராவின்வேர், பொன்னாங்கண்ணிவேர், சத்திச்சாரணை வேர் ஆகிய மூன்றையும் சம எடை எடுத்துக் கூட்டி போதுமான அளவு உள்ளித்தைலம் விட்டரைத்து 5 கி. அளவு உருண்டை செய்து தக்க அளவு கொடுத்துவர குளிர்சுரம் விட்டுப் போகும்.

ஒற்றடம்:-

கெந்தகத்தையும் சுண்ணாம்பையும் சமபங்கு எடுத்து அரைத்து புழுங்கலரிசி அரைத்த தவிட்டில் ஒற்றடம் கொடுக்க குளிர் குறைந்து சுரம் தணியும்.

குளிர்சன்னி சுரத்திற்கு மாத்திரை:- 1

மஞ்சள், சாதிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, கடுகுரோகணி, மரமஞ்சள் இவற்றைச் சமஅளவெடுத்து எலுமிச்சம் பழச்சாறு 1, 3 லி. எடுத்து வார்த்தரைத்து 65 மி.கி. மாத்திரைகளாகச்

செய்து தக்க அளவு தேனில் கொடுக்க குளிர்சுரங்கள் அனைத்தும் போகும்.

(ஏலாதி) மாத்திரை:- 2

சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், கிராம்பு, ஏலம், கடுகுரோகணி, மஞ்சள், நாபி இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துப் பொடி செய்து 6 மணி நேரம் எலுமிச்சம் பழச்சாறு விட்டாட்டி 65 மி.கி. உருண்டை செய்து அதனை மாசிப்பத்திரியின் குடிநீரில் கலந்து கொடுக்க குளிர் சன்னி சுரங்கள் நீங்கிவிடும்.

குளிர்தொந்த சுரத்திற்குக் கஸ்தூரி எண்ணெய்:-

கோரோசினை, கோட்டம், அதிமதுரம், சீரகம், திப்பிலி, தேவதாரம், சந்தனம், ஏலம், மாசிக்காய், வெந்தயம், சுக்கு, வெள்ளுள்ளி, கஸ்தூரி, வசம்பு, கடுகுரோகணி, மூங்கிலின் பச்சைத்தோல் இவற்றை வகைக்கு 1 கி. எடுத்து அதனை வறுத்து வைக்க. அதனை எருமுட்டை பீநாறியின் சாற்றில் அரைத்து வழித்துக் கொள்க அதனுடன் 1.3 லி. விளக்கெண்ணெய் சேர்த்து எரித்து இறுத்து 3-10 மி.லி. கொடுக்க குளிர் தொந்தசுரம் நீங்கிப் போகும்.

நடுக்கல்சுரம், நளிர்சுரத்திற்குக் குடிநீர்:-

மிளகைக் குடிநீராகச் செய்து சாப்பிட நிற்கும். தேவதாரம், பற்பாடகம், கடுக்காய், சுக்கு, கண்டங்கத்திரி, கோஷ்டம், குமிழ்வேர், சிறுதேக்கு இவற்றை வகைக்கு 35 கி. வீதமெடுத்து 2.6 லி. தண்ணீரூற்றி எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி அளவறிந்து கொடுக்க நடுக்கல் சுரம், நளிர்சுரம் நலமாகும்.

சீந்தில், வழுதலை எனும் கத்திரிவேர், நிலவேம்பு குமிழ் இவற்றின் வேர், சுக்கு, கடுக்காய், கடுகுரோகணி, கோஷ்டம், சிறுதேக்கு, தேவதாரம், பற்பாடகம், ஆடாதோடை வகைக்கு 9 கி. எடுத்து இடித்து 2.6 லி. தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வேளைக்கு 165 மி.லி. வீதமெடுத்து திப்பிலிப் பொடியை 4 கி. உடன்போட்டு ஆறு வேளை கொடுக்க நடுக்கல், நளிர்சுரம் நீங்கிப் போகும்.

சன்னிசுரக் குறிகுணம்:-

சோறு செல்லாது; குளிர்ச்சி அதிகமாகி பல்கிட்டிக் கொண்டு சளி, கோழை மிகுதியாகும்; வாய் முறமுறப்பாயிருந்து வாந்தியெடுக்கும்; வேனல் அதிகமாகிக் குடல் வலிக்கும்.

பழைய மலத்தின் சிக்கலுடன் கழிச்சல் இருக்கும். உதடு மிகவும் தடிக்கும். வெதும்பும்; உடம்பு சூடாயிருக்கும்; வழலை உண்டாகும்; குத்திருமல் ஏற்படும்.

குடிநீர்:- 1

கற்றாழஞ்சோறு, வேம்பீனீர்க்கு, கண்டங்கத்திரிவேர், கற்கண்டு, கண்டங்கத்திரிப்பூ இவற்றைச் சமபாகம் எடுத்து 1.3 லி. நீர் விட்டு காய்ச்சி வேகவைத்து அதில் கொடிமுந்திரிப்பழம் போட்டு நன்கு பிசைந்து வேகவைத்து வெந்த சாற்றினை 325 மி.லி. எடுத்து அதில் தாய்ப்பாலைக் கலந்து அமுக்கிரா சேர்த்துக் கொடுக்க சன்னிசுரம் மாறும்.

குடிநீர்:- 2

இலந்தையிலை, நன்னாரி, சீந்தில் தண்டு, இருவேலி, இலாமிச்சம், பேய்ப்புடல், முத்தக்காசு, கோட்டம், சுக்கு, ஆடாதோடை இவற்றைச் சமனாக எடுத்து 2.6 லி. தண்ணீர் விட்டுக் காய்ச்சி அதற்குச் சமமாக தாய்ப்பாலெடுத்து அதில் இஞ்சிச் சாற்றினை விட்டு திப்பிலியைப் பொடித்து தூவி தக்க அளவு கொடுக்க சன்னிசுரம் போகும்.

குடிநீர்:- 3

தூதுவளை, இன்பூரல், ஆடாதோடை, சிறுகாஞ்சோறி, முத்தக்காசு, கற்றாழை, கண்டங்கத்திரி இவற்றைச் சமமாக எடுத்து தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்க. அதில் திப்பிலியைப் பொடித்துப் போட்டு தக்க அளவு கொடுக்க சன்னிசுரம் நீங்கும்.

குடிநீர்:- 4

வில்வம், வாதமடக்கி, பாதிரி, நெருஞ்சி இவற்றைக் குடிநீரிட்டு தக்க அளவு கொடுக்க சன்னி சுரம் நீங்கும்.

குடிநீர்:- 5

வேப்பெண்ணெய் 375 மி.லி., குட்டிவிளா, தூதுவளை, நாய்வேளை இவற்றின் வேர், சீரகம், கஸ்தூரி மஞ்சள், வெங்காயம், சித்தரத்தை, மரமஞ்சள் இவற்றை வகைக்கு 8 கி. எடுத்து நறுக்கிப் போட்டு குடிநீராகக் காய்ச்சி வேளைக்கு 15-30 மி.லி. வீதம் கொடுக்க சன்னிசுரம் நீங்கும்.

குடிநீர்:- 6

தைவேளைச்சாறு, இஞ்சிச்சாறு வகைக்கு 325 மி.லி. எடுத்து தனித்தனியே முறித்து பின் ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலியைப் பொடித்து 250-500 மி.கி. எடுத்து சேர்க்க. தேன் 25 மி.லி. கூட்டி அளவறிந்து கொடுக்கவும்.

வேப்பெண்ணெய்:-

வேப்பெண்ணெய் 675 மி.லி. சங்கிலைச் சாறு, பாவட்டைச்சாறு, முசுறு முட்டை ஆகியவற்றை வகைக்கு 162 மி.லி. வீதம் எடுத்துக் கலந்து அதில் பூண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, சீரகம், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள் ஆகிய எட்டு பொருட்களையும் வகைக்கு 4 கி. எடுத்து பொடித்து மேற்சொல்லப்பட்ட கலவையில் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வேளை ஒன்றுக்கு 5-15 மி.லி. வீதம் கொடுத்துவர சன்னி சுரம் நீங்கும். வெந்நீர்ச்சோறு கொடுக்க வேண்டும்.

குங்குமக் குளிகை:-

குங்குமப்பூ 35 கி. சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், கிராம்பு, ஏலம், சந்தனம், தேவதாரம், கடுகுரோகணி இவற்றை வகைக்கு 18 கி. எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றில் 6 மணி நேரமரைத்து, 12 மணி நேரம் இஞ்சிச்சாற்றிலும் 6 மணி நேரம் கண்டங்கத்திரி பழச்சாற்றிலும் அரைத்து 65 மி.கி. அளவு உருண்டை செய்து தகுந்த துணை மருந்துகளிலிட குளிர் முதலான சன்னி சுரங்கள் தீரும்.

சன்னிதோஷ சுரத்திற்குக் குடிநீர்:-

வாலுளுவையரிசி, சிவனார் வேம்பு, கண்டங்கத்திரி, அரத்தை, அவுரிவேர், திரிகடுகு, வசம்பு, வெள்ளுள்ளி, கொடிவேலி, கஞ்சாங்கோரை, போஸ்தக்காய், மாசிக்காய், மஞ்சிட்டி, ஏலம், இலவங்கம், பரங்கிப்பட்டை, வால்மிளகு, சங்கவேர்ப்பட்டை, நாயுருவிவேர், புளியம்பட்டை, தூதுவளை, மூக்கத்தாரி, பேய்ப்புடல், கூவிளைவித்து, ஓமம், கருஞ்சீரகம், மாவிலிங்கம் வேர் வகைக்கு 9 கி. எடுத்து இடித்து 2.6 லி. தண்ணீரிற் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி அதில் கழுதைப் பால் தக்க அளவு கலந்து கொடுக்கவும். இவ்வாறு மூன்று வேளை கொடுக்க சன்னி தோஷ சுரம் நீங்கும்.

சன்னிவாத சுரத்திற்குக் குடிநீர்:-

சீந்தில் தண்டு, ஆடாதோடை ஈர்க்கு, நிலவேம்பு, பற்பாடகம், சுக்கு, சிறுகாஞ்சோறிவேர், சிற்றாமுட்டிவேர் இவற்றை வகைக்கு 100 கி. எடுத்து 8 லி. தண்ணீர் சேர்த்து 1.3 லி. ஆகச் சுருக்கிக் கொடுக்க சன்னிவாதம் தீரும்.

தோஷ சுரக்குணம்:-

காய்ச்சல் வரும், வாந்தி, பேதி உண்டாகும்; பயம் ஏற்பட்டு அரைக்கண்ணிலேயே உறக்கம் கொள்ளும்; சோறு, நீர் இவை செல்லாது. குழந்தை பரபரத்து கையில் தங்காது. மருந்து கொடுக்கும் போது மருந்தினை ஏற்காது. வாந்தி ஏற்படும்.

குடிநீர்:- 1

இசங்கு, நஞ்சறுத்தான், கொழிஞ்சி, சிறுவிளா, சடாமாஞ்சில், ஆடாதோடை இவற்றின் வேர்கள், முத்தக்காசு, அதிமதுரம், இலவங்கம், கொத்துமல்லி, சித்தரத்தை, நெற்பொரி, திப்பிலி இவற்றைச் சமனாக எடுத்து இடித்துப் போட்டு தேவையான நீரிட்டுக் குடிநீரிட்டுக் கொடுக்க தோஷ சுரம் நீங்கிப் போகும்.

குடிநீர்:- 2

கழற்சி, நன்னாரி, பேராமுட்டி, வில்வம் இவற்றின் வேர், முத்தக்காசு, பேய்ப்புடல், செவ்வள்ளிக் கொடி, செங்கழுநீர்க் கிழங்கு இவற்றை வேளையொன்றுக்கு வகைக்கு 17.5 கி. எடுத்து சிதைத்து 2.6 லி. நீர் விட்டு 325 மி லி.யாகச் சுண்டும் வரை வற்றக் காய்ச்சி அதற்குச் சமமாக இஞ்சிச்சாறு கூட்டிக் கொடுக்கவும். இவ்வாறு மூன்றுவேளை கொடுக்க தோஷசுரம் நீங்கும்.

குடிநீர்:- 3

சீந்தில், தூதுவளை, சிறுகாஞ்சோறி, நன்னாரி, முள்ளி, ஆடாதோடை, விஷ்ணுகிரந்தி இவற்றின் வேர், கண்டங்கத்திரி, நிலவேம்பு, முத்தக்காசு, கொத்துமல்லி, அரத்தை, செவியம், திரிகடுகு, திரிபலை, பேய்ப்புடல், கோட்டம், சன்னலவங்கம், இவற்றை வகைக்கு 12 கி. எடுத்திடித்து 2.6 லி. நீரில் போட்டு 325 மி.லி.யாகக் காய்ச்சி 6 வேளை கொடுக்க நலமாம்.

குடிநீர்:- 4

சந்தனம், பற்பாடகம், வெட்டிவேர், இலாமிச்சம் வேர், சுக்கு, காஞ்சோறிவேர், இம்பூரல் வேர், இலவங்கம், நன்னாரி வேர் இவற்றை வேளை ஒன்றுக்கு வகைக்கு 5 கி. வீதம் எடுத்திடித்து 2.6 லி. நீர் விட்டு 325 மி.லி.யாகக் காய்ச்சி 6 வேளை கொடுக்க தோஷ சுரம் நீங்கும்.

முத்தோட சுரத்திற்குக் குடிநீர்:- 1

சந்தனம், அதிமதுரம், இலவங்கம், வெட்டிவேர், இலாமிச்சம் வேர், கொத்துமல்லி, சுக்கு, நிலவேம்பு, பற்படாகம், சீந்தில்தண்டு, செவியம் இவற்றைச் சமமாயெடுத்து சிதைத்து வேளைக்கு 35 கி. தூளை 2.6 லி. தண்ணீரிற் போட்டு 325 மி.லி.யாக வற்றக் காய்ச்சுக. இவ்வாறு 6 வேளைக்குக் கொடுக்க திரிதோஷசுரம் நன்றாகும்.

குடிநீர்:- 2

வட்டத்திருப்பி, தூதுவளை, நன்னாரி, சிறுவழுதலை, சிறுகாஞ்சோறி, கண்டங்கத்திரிவேர், ஆடாதோடை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு இவற்றைச் சிதைத்துக் கொள்க. வேளைக்கு 18 கி. தூளை 1.3 லி. தண்ணீரிற் போட்டு 325 மி.லி.யாக வற்றக் காய்ச்சி அதில் திப்பிலி 4 கி. எடுத்து வெதுப்பிப் பொடித்துப் போட்டு சிறிது தேன் விட்டு 6 வேளை கொடுக்க திரிதோஷம் தீரும்.

குடிநீர்:- 3

வேம்பினலகு, சாரணை, குடசப்பாலை இவற்றின் வேர்களை வகைக்கு 10 கி. எடுத்து தேவையான நீரிட்டு நாலிலொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சி தேன் விட்டு தக்க அளவு குடிக்கவும். முத்தோட சுரம் நிற்கும்.

குடிநீர்:- 4

தூதுவளை, கண்டங்கத்திரி, நிலவேம்பு, சீந்தில், சிறுகாஞ்சோறி, நன்னாரி, முள்ளி, ஆடாதோடை, விட்ணுகிரந்தி, இவற்றின் வேர், முத்தக்காசு, கொத்துமல்லி, சித்தரத்தை, செவியம், திரிகடுகு, திரிபலை, பேய்ப்புடல், கோட்டம், சன்னலவங்கம் இவற்றை வகைக்கு 30 கி. எடுத்து சிதைத்து ஆறு பங்கு செய்து கொள்க. ஒவ்வொரு பங்குடனும் 2.6 லி. தண்ணீர் விட்டு 325 மி.லி.யாக வற்றக் காய்ச்சி குடிநீராக்கிக் கொள்க. இவ்வாறு செய்து 6 வேளை கொடுக்க முத்தோடம் நீங்கும்.

பித்தசுரத்தின் குறிகுணம்:-

தண்ணீர்த் தாகமெடுத்து நா வறட்சி கொள்ளும். தலை வலிக்கும். மலம் இறுகிக் கொள்ளும். காய்ச்சல் அடிக்கும். மந்தமாக இருக்கும்.

குடிநீர்:- 1

ஆடாதோடை, வேப்பீர்க்கு, பற்பாடகம், கொத்துமல்லி, பூசனித் தண்டு, வெட்டிவேர், சுக்கு இவற்றைச் சமமெனடுத்து தேவையான அளவு நீர் சேர்த்து குடிநீராக்கிப் பருக பித்தசுரம் பறந்தோடும்.

குடிநீர்:- 2

முன்னை, பாதிரி, நிலவேம்பு, சீந்தில், நன்னாரி, நெய்ச்சிட்டி, விலாமிச்சன் வேர், சாறுவேளை, குறுந்தொட்டி, சிறுமுள்ளி, சிறுதேக்கு சிற்றாமத்தை, சிற்றாமல்லி, கஞ்சாங்கோரை, கொத்துமல்லி, சுக்கு, இலுப்பைப்பூ, வட்டக்கிலுகிலுப்பை இவற்றைச் சமனெடுத்துக் குடிநீராக்கி 15-30 மி.லி. கொடுக்க பித்தசுரம் நீங்கும்.

குடிநீர்:- 3

சீந்தி முத்தக்காசு, பற்பாடகம், விலாமிச்சவேர், வெட்டிவேர், சந்தனம், சுக்கு, சிற்றாமுட்டி இவற்றைச் சமனெடுத்துக் குடிநீராகக் காய்ச்சி 15-30 மி.லி. கொடுக்க பித்த சுரம் நீங்கும்.

கோட்ட எண்ணெய்:-

1.3 லி. பசுநெய், 2.6 லி. பசுவின் பால், 7.8 லி. நல்லெண்ணெய் ஆகியவற்றை ஒரு மட்பாண்டத்தில் இட்டு அதில் பெருங்குரும்பை, நன்னாரி, அதிமதுரம், கருவேலினிலை, கடுகுரோகணி, செவ்வள்ளிக் கொடி, அமுக்கிராவேர், மரமஞ்சள், சந்தனம், சுக்கு, கோரைக்கிழங்கு, கொம்பரக்கு, சாதிக்கோட்டம் ஆகிய இப்பதிமூன்றையும் வகைக்கு 5 கி. வீதமெடுத்து தேவையான அளவு பசுவின்பால் விட்டரைத்துக் கலந்து எரித்துப் பக்குவபாகத்தில் வடித்து பிள்ளைகளின் தலையிலும் உடம்பிலும் பூசிவர பித்தசுரம் நீங்கி விடும். இதையே தாபசுரத்திற்கும் கொடுக்கலாம்.

கஸ்தூரி மாத்திரை :-

கஸ்தூரி 5கி, குங்குமப்பூ 10கி, கோரோசினை 15கி இவை மூன்றையுங் கல்வத்திலிட்டு தாய்ப்பாலிட்டு 3 மணி நேரம் அரைத்துக் கொள்க. அதனை 135 மி.கி. அளவு உருட்டிக் கொள்க. அந்த மாத்திரை

ஒன்றெடுத்து தாய்ப்பால் விட்டிழைத்து முனை நாவில் தடவிவிட பித்த சுரம் நீங்கி விடும். இதனை மாந்த சுரத்திற்கும் வழங்கலாம்.

தப்பளம்:-

பூசனிக் கொழுந்தையும் மிளகையும் தேவையான அளவெடுத்து அரைத்து தலையில் மத்திக்க பித்த சுரம் மாறும்.

தாப(வெப்ப) சுரத்தின் குறிகுணம்:-

சுரம் வரும், வாய் வெதும்பும், கண் சிவக்கும், வேர்வையுண்டாகும். தண்ணீர் தாகம் எப்போதும் எடுக்கும்; வாய் புலம்பிக் கொண்டேயிருக்கும்; மலமும் சிவக்கும். இவை தாபசுரத்தின் குறிகுணங்களாகும்.

குடிநீர் :- 1

பேராமுட்டி, சிற்றாமுட்டி, சிறுகாஞ்சோறி, நன்னாரி, சிறுகீரை, பொன்னாங்கண்ணி, ஆவரை, நிலவேம்பு, முத்தக்காசு, சிறுதேக்கு, கொத்துமல்லி இவற்றை வகைக்கு 9 கி. எடுத்து இடித்து 2.6 லி. தண்ணீர் விட்டு குடிநீராகக் காய்ச்சி பகலிலும் இரவிலும் கொடுக்கத் தீரும்.

குடிநீர்:- 2

முந்திரிப்பழம், சிறுநாகப்பூ, அதிமதுரம், செங்கழுநீர்க் கிழங்கு, நன்னாரி வேர் இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து சிதைத்து 1.3 லி. தண்ணீரிற் போட்டு குடிநீராக்கி வேளைக்கு 15-30 மி.லி. கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்க நலமாகும்.

குடிநீர்:- 3

முத்தக்காசு, மாவீர்க்கு, இலாமிச்சம் வேர், பற்பாடகம், நெற்பொரி, சிறுபயறு வகைக்கு 10 கி. எடுத்து சிதைத்து 5.2 லி. தண்ணீரில் போட்டு 1.3 லி. ஆக வற்ற வைத்து வேளைக்கு 162 மி.லி. வீதம் எடுத்து சந்தனம், பச்சைக்கற்பூரம், உத்திராட்சம் வகைக்கு 1 கி. எடுத்து அரைத்து அதில் கலக்கி 6 வேளை கொடுக்க நலமாகும்.

குடிநீர்:- 4

கோட்டம், அதிமதுரம், நெல்லிமுள்ளி, இலாமிச்சம் வேர், வெட்டிவேர், முத்தக்காசு, சந்தனம், நெற்பொரி வகைக்கு 10 கி. எடுத்து

675 மி.லி. இளநீரில் போட்டு 162 மி.லி.யாக வற்றவைத்துக் கொடுக்க தாபசுரம் தீரும்.

குடிநீர் :- 5

நற்கொழிஞ்சி, கூவிளைவேர், முத்தக்காசு, தூதுவளை, அதிமதுரம், சுக்கு, ஏலம், இலவங்கம், சித்தரத்தை, சிறுதேக்கு, திப்பிலி ஆகிய இவற்றைச் சமமாக எடுத்து இடித்துப் பொடித்து குடிநீர் செய்து மூன்று நாளும் கொடுத்துவிட தாபசுரம் நீங்கிப் போகும்.

குடிநீர் :- 6

வில்வவேர், விலாமிச்சம்வேர், நெருஞ்சிவேர், நன்னாரி, அதிமதுரம், சோம்பு, விளாவரிசி, முத்தக்காசு, நெற்பொரி, முந்திரிப்பழம், நெல்லிமுள்ளி, இலுப்பைப்பூ, சுக்கு வகைக்கு 12 கி. எடுத்து சிதைத்து குடிநீர் செய்து கொடுக்க தாபசுரம் சரியாகும்.

சூரணம்:-

நற்சீரகத்தையும், சர்க்கரையையும் சம அளவு எடுத்து சேர்த்து அல்லது கொத்துமல்லியையும் சர்க்கரையையும் சம அளவு எடுத்து சேர்த்து அதில் 2-5கி வரை எடுத்து தாய்ப்பாலில் கலந்து கொடுக்க தாபசுரம் சரியாகும்.

1. குளிர் பித்த சுரக்குணம் :-

மலமானது மிகுதியாகும். புத்தி பேதலிக்கச் செய்யும். காலிரண்டும் சில்லிட்டுப் போகும் சுரங்காய்ந்து உடல் வீங்கிக் கொள்ளும். 16 நாட்களில் விட்டுப் போகும்.

2. பித்த குளிர் சுரக் குணம் :-

குளிர் வரும்; சுரம் விடாது இருக்கும்; புத்திமயக்கமேற்படும். நெற்றி வேர்த்து கைகால் குளிர்ந்திருக்கும்; 13 நாட்கள் சுரம் காய்ந்து கொண்டேயிருக்கும்.

பித்ததோட சுரத்திற்குக் குடிநீர் :-

சிறுகாஞ்சோறி, தூதுவளை, சிறுகுறிஞ்சா, நன்னாரி, ஆடாதோடை, கண்டங்கத்திரி, முள்ளி இவற்றின் வேர், சுக்கு, சீரகம், கடுக்காய், தான்றிக்காய், மிளகு, திப்பிலி இவற்றைச் சம அளவெடுத்து முறையாகக் குடிநீர் செய்து தேன்விட்டு குடிக்க பித்தத்தோட சுரங்கள் தீரும்.

பயித்திய சுரத்திற்குக் குடிநீர் :-

சாட்டரணைவேர், சித்திரமூலம், இந்துப்பு, கடுக்காய், மிளகு, ஓமம், பேய்ப்புடல், கொத்துமல்லி, பரங்கிச்சக்கை, வெங்காரம், காயம், சுக்கு, வெள்ளுள்ளி இவற்றைச் சமன்கூட்டி தேன் 4 கி. கூட்டிக்கொடுக்க பயித்திய சுரம் தீரும்.

பிடரிக் காய்ச்சலுக்கு நெய்:-

உள்ளி, கீழ்க்காய் நெல்லி, பொடுதலை, கையாந்தகரை, பிரமி, கொடுப்பை, வீழி, பழம்பாசி, அகத்தி, ஆடா தோடை, முருங்கை, முருக்கிலை, வேலிப்பருத்தி, ஆரை, குழிமீட்டான் எனும் நத்தைச் சூரி ஆகியவற்றின் சாறு, இளநீர், தண்ணீர் இவற்றை வகைக்கு 325 மி.லி. எடுத்துக் கொள்க.

பசுவின்பால், பசுவின்நெய் 1.3 லி. எடுத்துக் கொள்க. சாதிக்காய், கொத்துமல்லி, சுக்கு, மிளகு, திப்பிலி, சடாமாஞ்சில், கல்நார், மாசிக்காய், அதிவிடையம், கருடப்பச்சை, அத்தி, திப்பிலி, வெண்சந்தனம், கோட்டம், அதிமதுரம், கச்சோலம், சீரகம் ஆகிய இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துக் கொள்க. இவற்றை முன்கூறிய இளநீர் விட்டரைத்து கரைத்துக் கொள்க. முற்கூறிய கலவையில் சேர்க்க. அக்கலவையை அடுப்பேற்றிப் பதமாய்க் காய்ச்சிக் கொள்க. கோரோசினையையும் தக்க அளவு அத்துடன் சேர்க்க. இந்நெய்யை காலை, மாலை 5-10 மி.லி. கொடுக்கவும். தேவை கருதி 12 நாட்கள் குழந்தைகட்குக் கொடுக்க பிடரிக்காய்ச்சல், உடம்புலர்தல், நெஞ்சுலர்தல் இவை நீங்கும்.

மாந்தசுரக் குறிகுணம்:-

மாந்தத்தாலுண்டாகும் சுரத்தில் விடாவெதுப்பும் உடற்கட்டின் பலக்குறைவும் உணர்ச்சியற்றுக் கிடத்தலுமாகிய குறிகுணங்கள் தோன்றும்.

நடுக்கமேற்படும்; வயிறூதும், மலசலங்கள் கெட்டிப்படும்; நாட்கள் அதிகமாக அதிகமாக வீக்கம் ஏற்படும். உடல் வெளுப்படையும்; விட்டு விட்டு நடுக்கம் ஏற்படும்; உணவெடுக்காது; சீதம் ஏற்படும்.

வயிறு கழிந்து மயக்கமேற்படும்; உஷ்ணமாக இருக்கும். பசி இருக்காது. கை, கால் சோர்ந்து கிடக்கும். இது ஒரு வகை மாந்த சுரமாகும்.

(ஈருள்ளிக்) குடிநீர்:- 1

350 மி.கி. வெங்காயம், 1.3 கி.கி. அவுரி, ஒரு பிடி வில்வம், ஒரு பிடி நிலவிளா ஆகிய இந்நான்கு பொருட்களையும் குறுக அரிந்து சிவக்க வறுத்து தேவையான அளவு தண்ணீர் விட்டுக் காய்ச்சி ஒருவேளைக்கு 15-30 மி.லி.யாக மூன்று நாட்கள் கொடுக்க மாந்த சுரம் நீங்கும்.

(நெல்லிக்) குடிநீர்:- 2

நெல்லி ஈர்க்கு, வேப்பீர்க்கு, புளியீர்க்கு, விஷ்ணுகிரந்தை சமூலம், சிற்றாமுட்டி வேர், பேராமுட்டிவேர், ஓரிதழ்த்தாமரை, சீரகம், கிராம்பு, திப்பிலி ஆகிய 10 பொருட்களையும் வகைக்கு 2 கி. எடுத்து நறுக்கிப் போட்டு 160 மி.லி. நீர்விட்டு 40 மி.லியாகக் காய்ச்சி ஒருவேளைக்கு 20-40 மி.லி.யாக வயதிற்குத் தக்க அளவு கொடுக்க மாந்த சுரம் நீங்கும்.

குடிநீர்:- 3

பேய்ப்பீர்க்கு, சீந்தில்தண்டு, கொழிஞ்சிவேர், சுண்டை வற்றல், முருங்கைப்பூ, கடுக்காய், சுக்கு, ஏலம், கடுகுரோகணி, சிவதை, கோட்டம், வெள்ளுள்ளி, நறுக்குமூலம் இவற்றைச் சமமாக எடுத்துக் குடிநீர் செய்து மூன்று நாளும் கொடுக்க மாந்த சுரம் விட்டுப் போகும்.

(சீந்தில்) குடிநீர்:- 4

சீந்தில் தண்டு, களிப்பாக்கு, சிவதைவேர், கடுக்காய், காய்ந்த சுக்கு, கடுகுரோகணி இவற்றை எடுத்து இடித்துப் பொடித்து தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சிக் குழந்தைகட்குக் கொடுக்க மாந்த சுரம் போகும்.

மேற்கூறப்பட்ட குடிநீரில் உள்ள சிவதை 18 நஞ்சு வகையிலொன்று. ஆகையால் இதனைப் பத்துதரம் சுத்தி செய்து கொள்க. இதற்கு முறிவு 10 வெண் மிளகைச் சாப்பிட வேண்டும்.

(கடுக்காய்) எண்ணெய்:-

16 விதை நீக்கிய கடுக்காயின் தோல் எடுக்க; கஸ்தூரி மஞ்சள், கருடன் கிழங்கு ஆகியவற்றைச் சமமாய் எடுத்துப் பொடித்து 1.3 லி. ஆமணக்கு எண்ணெயில் போட்டு மேலுக்குத் துணி கட்டி, வெயிலில் வைத்துப் பக்குவப்படுத்துக. காலையிலும் மாலையிலும் 8 மி.லி. உள்ளுக்கும் கொடுத்து உச்சியிலும் தடவி வந்தால் மாந்தசுரம் நீங்கும்.

கஸ்தூரி மாத்திரை மாந்த சுரத்தைப் போக்கும். இதன் செய்முறையைப் பித்த சுரத்தில் காண்க.

குளிகை:- 1

உள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, அரத்தை, பெருங்காயம், சுத்தி செய்த நாவி (குறிப்பிட்ட அளவு) லிங்கம், அதிமதுரம், கோட்டம், அக்கிராகாரம், அரிதகி எனும் கடுக்காய், கடுகுரோகணி, கிராம்பு, கருஞ்சீரகம், இலுப்பை, வெண்பிசின், நிலவேர் என்னும் பூநாகம், முசுறுமுட்டை இவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்க. இச்சரக்கை நல்வேளைச் சாற்றிலரைத்து 135 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்க.

அதனை உலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சிச்சாறு, தாய்ப்பால், நொச்சியிலை, இஞ்சி இரண்டும் வேகவைக்கப்பட்ட நீர், முருங்கைப்பூ, வெள்ளை உள்ளிச்சாறு, வேப்பெண்ணெய், குப்பைமேனிச் சாறு, நிலவேர்வெந்தநீர் ஆகிய இவற்றில் ஏதேனுமொன்றில் ஒரு குளிகையை இழைத்துக் கொடுக்க மாந்த சுரம் நீங்கும்.

மாத்திரை:- 2

திப்பிலி, துளசி, தூதுவளை, செம்முள்ளியிலை, மணத்தக்காளி, விஷ்ணுகிரந்தி, நற்சீரகம், கிராம்பு இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து அவற்றை முடிந்து பிட்டவியல் செய்து கொள்க. பிறகு இந்தக் குடிநீரை விட்டு அரைத்து 65 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்க. பத்தியம் உண்டு. மாந்த சுரம் நீங்கும்.

அட்சரமாந்த சுரத்திற்குப் பூவரசம் எண்ணெய்:-

பூவரசு இலை, பூவரசங்காய், பூவரசம்பூ ஆகிய இம்மூன்றையும் தனித்தனியாக அரைத்து வகைக்கு 35 கி. எடுத்து ஒன்று கூட்டி அடையாகத் தட்டி அதை 140 கி. சிற்றாமணக்கு நெய்யிற் போட்டு அடுப்பேற்றிக் காய்ச்ச வேண்டும். அடை சிவந்து மிதக்கும் போது அடையை நீக்கிவிட்டு அதில் ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி ஆகிய மூன்றையும் வகைக்கு 2 கி. எடுத்துப் பொடித்துக் கலக்கி காலை, மாலை 5-10 மி.லி. வீதம் கொடுத்து வர அட்சர மாந்தசுரம் நீங்கும்.

நாட்பட்ட மாந்த சுரத்திற்கு இலவங்காதிக் குளிகை:-

பச்சைக்கற்பூரம், இலவங்கம், வால்மிளகு, சிறுநாகப்பூ, கடுகுரோகணி, ஏலம், சடாமாஞ்சில், சுக்கு, சீரகம், இவற்றை வகைக்கு

25 கி., நேர்வாளம் 100 கி. எடுக்க. இச்சரக்குகளைப் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றாலாட்டி வைத்துக் கொள்க. பிறகு 9 நாட்களும் சென்ற பின் மிளகு போலுருண்டை (130 மி.கி. செய்து செப்பில் வைத்துக் கொள்க. அதனை இஞ்சி, தேன், தாய்ப்பால் இவற்றில் இழைத்துக் கொடுக்க நாட்பட்ட மாந்தசுரம் விட்டுப் போகும்.

மாந்தகணசுரத்திற்கு நுணா ஈர்க்குக் குடிநீர்:-

புளி, நுணா, நெல்லி, ஓதி, வேம்பு, கையாந்தகரை, பொடுதலை, அம்மான் பச்சரிசி ஆகியவற்றின் ஈர்க்குகளை வகைக்கு ஒரு பிடி எடுத்துக் கொள்க.

வில்வ இலை, வில்வ ஓடு, சிறுபுள்ளடி, கோழியவரை, பழம்பாசி, விஷ்ணுகரந்தை, நன்னாரிவேர், கோரைக்கிழங்கு, செருப்படை, மணத்தக்காளி, வல்லாரை, சீந்தில் கொடி, பேய்ப்புடல் இவற்றை வகைக்கு ஒரு பிடி எடுத்துக் கொண்டு குறுக அரிந்து சிவக்க வறுத்து 1.3 லி. நீர்விட்டு 325 மி.லி.யாகக் காய்ச்சி அதில் கோட்டம், விளாம்பிசின், வில்வப்பிசின், மாசிக்காய், சாதிக்காய், வெந்தயம் ஆகிய ஏழு பொருட்களையும் வகைக்கு 4 கி. எடுத்து இளவறுப்பாக வறுத்து இடித்துப் பொடித்துக் குடிநீரில் தூவி ஆறுவேளை குடிக்க மாந்தகணசுரம் நீங்கிவிடும்.

உருண்டை:-

இரசசெந்தூரம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், குங்குமப்பூ, கத்தூரி, ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோரோசினை இவற்றை வகைக்கு 9 கி., கிராம்பு 4 கி. எடுத்து இவற்றைக் கருநொச்சிச்சாற்றால் அரைத்து 65 மி.கி. உருண்டை செய்து துளசிச் சாற்றில் இழைத்துக் கொடுக்க மாந்தகணசுரம் நீங்கும்.

தொந்தமாந்த சுரத்தின் குறிகுணம்:-

அனல்போல் சுரங்காயும், விட்டுவிட்டு வரும். மலம் தீப்போல் காய்ந்து கட்டும். 'வயிற்றுப் பொருமல் ஏற்படும். முக்கல் ஏற்படும். அசதியாயிருக்கும். தலை வேர்க்கும். மலம் போகாது

குடிநீர்:-

சீந்தில், முத்தக்காசு, முருங்கைப்பூ, காஞ்சோறி, கறுத்த சுண்டை, வெணகுருவிச்சிவேர், வட்டத்திருப்பியின் வேர் ஆகிய இந்தச் சரக்கு வகைகளை வகைக்கு 5 கி. எடுக்க. சுக்கு, அதிமதுரம், பற்பாடகம்,

நறுக்குமூலம், பேரரத்தை, சிற்றரத்தை, திப்பிலி, விலாமிச்சு, கொத்துமல்லி இவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்க. தண்ணீர் 2.6 லி. எடுக்க. அதில் மேற்கூறிய அனைத்துச் சரக்குகளையும் இடித்துப் போட்டு தீயிலிட்டுக் காய்ச்சி எட்டொன்றாகச் சுருக்கி, குழந்தைகட்கு மூன்று நாட்கள், அந்தி, சந்தி கொடுக்க தொந்த மாந்த சுரம் நீங்கும்.

பால் சுரத்தின் குணம்:-

குழந்தை தாயின் கையில் தங்காது. வாந்தியேற்படும். நடுக்கமேற்படும். உடம்பு சில்லிடும். பிறகு காய்ச்சலுண்டாகும். உடல் வாடும். வாய் வெளுத்துப் போகும். கண்ணீர் வரும். மலம் கட்டுப்பட்டு சிக்கிக்கொண்டு கட்டியாய் விழும். இவையே பால்சுரத்தின் தன்மைகளாகும்.

குடிநீர்:-

சீரகம், திப்பிலி, கிராம்பு, அதிமதுரம், நறுக்குமூலம், சித்தரத்தை, முத்தக்காசு, கடுகுரோகணி ஆகிய இச்சரக்குகளைச் சமமாய் எடுத்து இடித்து குடிநீரிட்டு மூன்று நாட்களும் 15-30 மி.லி. குடித்துவிடப் பால் சுரங்கள் விட்டுப் போகும்.

சூரணம்:-

அதிமதுரம், ஏலம், இலவங்கப்பட்டை, சண்பகமொக்கு, கோட்டம், மேற்றோல் சீவினசுக்கு, நற்சீரகம், கோரைக்கிழங்கு இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து வறுத்து முறைப்படி சூரணம் செய்து கொள்க. அச்சூரணத்திற்குச் சமவெடை நாட்டு வெல்லம் சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து நன்றாகக் கலந்த பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும், இதனைப் பால்சுரத்திற்குக் கொடுக்க குணமாகும்.

குழம்பு:-

சுத்தித்த நெல்லிக்காய் கெந்தகம், சாதிலிங்கம் வகைக்கு 9 கி. எடுத்து இவ்விரண்டையும் சேர்த்து செம்மையாகத் தூள் செய்து வைத்துக் கொள்ளவும். 4 வாழைப்பழங்களைத் தோல் நீக்கிப் பீங்கானில் போட்டு புது மூங்கிலின் மேற்புறணியைக் கத்தியினாற் சீவி, சுமார் 18 கி. தூளை அதில் போட்டுப் பிசைந்து, சற்று தாமதித்துப் பிழிந்தால் முத்துப்போல் தண்ணீர் வரும். அந்தத் தண்ணீரைத் தனியே வைத்துக் கொள்ளவும்.

முன்னர் சுத்தப்படுத்தியிருக்கிற தூளை ஒரு பெரிய இரும்புக் கரண்டியிற் போட்டு அடுப்பில் விளக்கு போல் நெருப்பைப் பொரியவிட்டு கரண்டியை அதிற் பிடிக்க அதிலுள்ள மருந்தானது உருகி வரும். அப்போது முன் சுத்தப்படுத்தின பழத்தின் தண்ணீரைச் சிறுக சிறுக வார்த்து தீய்ந்து போகாமல் புரட்டிவர மெழுகு பதமாய் வரும். அச்சமயத்திலிறக்கிப் பீங்கான் சிமிளில் வைத்துக் கொள்ளவும். 100-200 மி.கி. அளவை எடுத்து நாக்கில் தடவவும்.

மாறல் சுரக்குறிகுணம்:-

உடல் நடுக்கத்துடன் சுரம் ஒரு நாள் விட்டு ஒருநாளாக வரும். தோள் நோகும். வயிற்றில் மண்ணீரல், கல்லீரல் வளர்ச்சியடையும். இவையே மாறல் சுரக்குறிக்குணம்.

குடிநீர்:-

பெருங்குமிழ்வேர், நன்னாரிவேர், தாமரைக்கிழங்கு, இலுப்பைப்பூ, முந்திரிப்பழம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சோறிவேர், அதிமதுரம், நெல்லிப்பருப்பு வகைக்கு 12 கி எடுத்திடித்துப் போட்டு 1.3 லி. தண்ணீர் விட்டு முறைப்படி குடிநீர் செய்து அதில் தேன்விட்டு மூன்று நாட்கள் கொடுக்கத் தீரும்.

(அதிமதுரச்) சூரணம்:- 1

மாறல் சுரத்தைப் போக்கும். இதன் செய்முறையை கணை சுரத்தில் காண்க.

சூரணம்:- 2

சீரகம், சர்க்கரை சேர்த்து சூரணித்து துளசிச் சாற்றிலிட்டால் மாறல் சுரம் நலமாகும்.

மாறல் குளிர்சுரக் குறிகுணம்:-

குளிரெடுத்து சுரங்காய்ந்து நாடி துடிக்கும். சுரமும் தாகமும் அதிகமாகி மலமுங்கட்டிக் கொள்ளும். இடுப்பின் கீழ் காய்ந்து கீழ் சுரமுண்டாகும்.

குளிர் மாறலுக்குக் குளிகை:-

குப்பைமேனிச் சாற்றையும் திப்பிலியையும் அரைத்து 65 மி.கி. அளவு குளிகைகளாகத் திரட்டி நல்லெண்ணெயில் ஒரு குளிகை போட்டு மத்தித்து நோய் தீரும் வரை கொடுக்கவும்.

ஒருநாள் விட்டொருநாள் வரும் மாறல் சுரத்திற்குக் குடிநீர்:-

பற்பாடகம், பேய்ப்புடல், அதிமதுரம், சீந்தில் தண்டு,, அதன் வேர், கொடுப்பை வேர், முத்தக்காசு, கொத்துமல்லி, சுக்கு இவற்றை வகைக்கு 12 கி. எடுத்து சிதைத்து 1.3 லி. தண்ணீரில் போட்டு 165 மி.லி.யாக வற்றக் காய்ச்சி அதில் தேன்விட்டு கொடுக்கவும். இவ்வாறு 6 நாட்கள் கொடுக்க இச்சுரம் தீரும்.

கற்கம்:-

திரிகடுகு, வகைக்கு 4 கி. ஓருள்ளிப்பூடு - 1, கடுகுரோகணி 2 கி., அருகம்புல் 2 கி. அனைத்தையும் ஒன்று சேர்த்து வெந்நீரிலரைத்து கலக்கிக் கொடுக்க சுரம் நீங்கும்.

மருந்து:-

முருங்கைப்பூ, சிறுதும்பைப்பூ, நத்தைச்சூரிவேர், கடுகு, ஈருள்ளி இவற்றையரைத்து புன்னைக்காயளவு (5 கி அளவு) கொடுக்கவும்.

மூன்றாம் முறை குளிர் சுரத்திற்குக் குடிநீர்:-

சிறுதேக்கு, பற்பாடகம், முத்தக்காசு, சீந்தில் தண்டு, நன்னாரி, சிறுகாஞ்சோறிவேர், தேவதாரம், கோட்டம், பேய்ப்புடல், சுக்கு இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இடித்து 2.6 லி. தண்ணீரிற் போட்டு வற்றக்காய்ச்சி 6 வேளை கொடுக்க இச்சுரம் தீரும்.

மருந்து:-

முடக்கத்தான் இலையைச் சுத்தம் செய்து அதனுடன் 4 கி. திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) சேர்த்து அரைத்து குளிர்வரும் போது 2.2 கி. கொடுக்க மூன்றாமுறைச் சுரம் குறையும்.

65 மி.லி. சிறுநீரில் 16 கி. மிளகை அரைத்து சிறுநீரில் கலக்கிக் கொடுக்க மூன்றாமுறைக் காய்ச்சல் நீங்கும்.

மிளகாய்ச் செடியின் இலையை ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து 25 மி.கி. சர்க்கரை சேர்த்து உண்ண மூன்றாமுறைச் சுரம் தணியும்.

நான்காம் முறைக் காய்ச்சலுக்குக் கற்கம்:-

பற்பாடகம், மிளகு இவற்றை வெந்நீர் விட்டரைத்து எலுமிச்சங்காயளவு எடுக்க. அவ்வளவே எருமை வெண்ணெயையும் சேர்த்து 15 நாட்கள் உட்கொள்ள நான்காமுறைக் காய்ச்சல் நீங்கும்.

இளகம்:-

கொச்சிநாட்டு மதனகாமப்பூ, கோட்டான் உண்கின்ற காட்டாத் திப்பூ, அச்சிநாட்டு வால்மிளகு, சுக்கு, அதிவிடையம், கசகசா, கிராம்பு, ஏலம், செஞ்சிநாட்டுக் கஞ்சா, அபினி, சேலத்துப் பனைவெல்லம், சாதிக்காய் ஆகிய சரக்குகளைச் சமமாக 35 கி. எடுத்துக்கொள்க. அடுப்பேற்றி சட்டியில் இவற்றைப் போட்டு லேசாக வறுத்துக் கொள்க. உரலிலிட்டுப் பூணில்லா உலக்கையால் பொடித்துக் கொள்க. 420 கி. பனை வெல்லத்தை எடுத்துக் காய்ச்சி மேற்சொன்ன தூளை அதில் போட்டு பக்குவமாய்க் கிளறி இளகிய பதமாக இறக்கி வைத்துக்கொள்க. காலை, மாலை இருவேளையும் குழந்தைகட்குக் கொடுக்க நான்காமுறைக் காய்ச்சல் விட்டுப் போகும். இதனைக் குழந்தைக்கு மிகக் குறைந்த அளவாக உடலைத் தேற்றுவதற்காக அளிக்கலாம்.

மாங்கிஷ மாமிச சுரத்தின் குறிகுணம்:-

உடம்பெல்லாம் அதிகமாகக் காயும். சுரம் நெருப்புப் போல் காயும். உடம்பில் நடுக்கமேற்படும். மேல்மூச்சு உண்டாகும். இரத்தம் வற்றி உடல் வெளுத்து உடல் இளைக்கும். புத்தி மயங்கி மூர்ச்சை ஏற்படும். இவையே மாங்கிஷ சுரத்தின் குறிகுணங்களாகும்.

(கற்பூராதி) மாத்திரை:-

பச்சைக்கற்பூரம், கெந்தகம், இந்துப்பு, இலவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துக்கொள்க. இவற்றைப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றில் 36 மணி நேரமரைத்து 65 மி.கி. அளவுள்ள உருண்டைகளாகச் செய்து கொள்க. அதனை இஞ்சிச்சாறு, சர்க்கரை, சுக்கு நீரில் கொடுக்க மாங்கிஷ சுரம் நிற்கும்.

இரத்த சுரத்தின் குறிகுணம்:-

தாகமும் கழிச்சலும் ஏற்படும். பேதியிலே இரத்தங்காணும். தலை சுழலும். சுரம் அதிகமாகி விட்டு விட்டு காயும். கண் தாழ்ந்து குழிவிழும். முகம் வாடும், வாய், நா உலர்ந்து போகும். சோகம் வரும். வயிற்றில் நோய் ஏற்பட்டு உடல் சோர்ந்து கை, கால்களில் வேர்வை தண்ணீராக ஒழுகுதல் ஆகிய குறிகுணங்கள் ஏற்படும்.

குடிநீர்:-

வேப்பம்பூ, முருங்கைப்பூவும் கொழுந்தும், முத்தக்காசு, ஆடாதோடை, சிவனார்வேம்பு, சித்தரத்தை, சிறுதேக்கு, அமுக்கிரா,

ஓமம், கொத்துமல்லி, அதிமதுரம், தேவதாரம் ஆகிய இச்சரக்குகளைச் சமமாக எடுத்து போதிய அளவு நீர் விட்டு குடிநீராகச் செய்து 15-30 மி.லி. இருவேளை குழந்தைகட்குக் கொடுக்க இரத்த சுரம் நீங்கிப் போகும்

ஏலம், இலவங்கம், இலவங்கப்பட்டை, அதிமதுரம், முத்தக்காசு, இவற்றைச் சமவெடை எடுத்து இளவறுப்பாய் வறுத்துத் தேவையான அளவு சேர்த்து குடிநீராக்கி 15-30 மி.லி. இருவேளை கொடுத்திட இரத்த சுரம் நீங்கும்.

கஸ்தூரி எண்ணெய்:-

இரத்த சுரத்தைப் போக்கும். இதன் செய்முறையைக் குளிர் தொந்த சுரத்தில் காண்க.

இரவில் காணும் சுரத்திற்குக் குடிநீர்:-

பேராமுட்டி, விஷ்ணுகிரந்தி, பாலை, பேய்ப்பாச்சோற்றி, நாகமல்லி, சிற்றாமுட்டி இவற்றின் வேர், கடுகுரோகணி, சுக்கு இவற்றை வகைக்கு 9 கி. எடுத்து சிதைத்து 2.6 லி. தண்ணீரில் போட்டு 165 மி.லி.யாக வற்றவைத்து 6 நேரம் கொடுக்க நலமாகும்.

குடிநீர்:- 2

திப்பிலி, மரக்கிழங்கு, சுக்கு, நிலவேம்பு, கடுகுரோகணி, நெல்லி, பேய்ப்புடல், பாவட்டை வேர் இவற்றைச் சமஅளவெடுத்து சிதைத்து தேவையான அளவு நீர்விட்டு குடிநீராய்க் காய்ச்சி 15-30 மி.லி. அளவு கொடுக்க இரவில் வரும் சுரம் சரியாகும்.

வாத சுரத்திற்குக் குடிநீர்:-

முட்காவேளை, வேலிப்பருத்தி, கஞ்சாங்கோரை, கற்றாழஞ்சருகு, முடக்கொத்தான், கடுக்காய், சுக்கு, சிறுதேக்கு, சிறுகாஞ்சோறிவேர், சங்கன்வேர், வேப்பம்பட்டையீர்க்கு இவற்றை வகைக்குச் சமனெடுத்து குடிநீராக்கி 15-30 மி.லி. அளவறிந்து கொடுக்க வாத சுரம் நீங்கும்.

நசியம்:-

காய்ச்சல் அதிகமாக இருக்கும் போது தைவேளை இலையைக் கசக்கி காதில் பிழிய மாறும்.

வாத பித்த சுரத்திற்குக் குடிநீர்:-

திப்பிலிமூலம், சதகுப்பி, விலாமிச்சன் வேர், தான்றிக்காய், கடுக்காய், நெல்லிவிதை, கடுகுரோகணி இவற்றைக் குடிநீரிட்டு அளவறிந்து கொடுக்க வாத பித்த சுரம் சரியாகும்.

முக்குற்ற சுரத்தின் குணம்:-

உடலில் வாத பித்தம் தோன்றின் எலும்பில் ஐயம் ஏற்படும். பிறகு உடம்பில் நோயையுண்டு பண்ணும்.

'இலவங்காதி மாத்திரை' முக்குற்ற சுரத்தைப் போக்கும். இதன் செய்முறையை நாட்பட்ட மாந்த சுரத்தில் காண்க.

(கோடாசுழி) மாத்திரை:-

கோரோசினை 8 கி., கடுகுரோகணி 4 கி., நேர்வாளம் 4 கி. எடுத்து இவற்றைத் தாய்ப்பால் விட்டு நன்கு அரைத்து 65 மி.கி. அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைக்க. அதில் ஒரு மாத்திரை யெடுத்து இஞ்சிச் சாற்றில் கொடுக்க வாத சுரம் நீங்கும். தாய்ப்பாலில் கொடுக்க பித்த சுரம் விடும் ஆடாதோடை, கண்டங்கத்திரி, தூதுவளை ஆகியவற்றைச் சரியெடை எடுத்து பிட்டவியல் செய்து பிழிந்த சாற்றில் கொடுக்க சிலேத்தும சுரம் நீங்கும். சன்னியும் நீங்கும.

இம்மாத்திரை கழிச்சலை உண்டுபண்ணும்; அதனால் காலையில் மட்டும் உபயோகிக்க வேண்டும். மாலையில் கோரோசினை மாத்திரையில் ஒன்றை மேற்கூறிய துணை மருந்துகளோடு சேர்த்துக் கொடுக்கலாம்.

முத்தோட சுரத்துக்குக் கோரோசினை மாத்திரை:-

12 கி. கோரோசினையை எடுத்துக் கொள்க. அதனுடன் அதிமதுரம், கோட்டம், இந்துப்பு, இலுப்பைக் கொட்டை, சாத்திரபேதி, சோம்பு, கருஞ்சீரகம் ஆகிய ஏழையும் வகைக்கு 4 கி. எடுத்துக் கொள்க. இவற்றைக் கல்வத்திலிட்டு கற்றாழைச்சோறு சேர்த்து 6 மணி நேரம் அரைத்துப் பின் தாய்ப்பால் கூட்டி மேலும் 6 மணி நேரம் அரைத்து 135 மி.கி. அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைக்க.

காலையிலும் மாலையிலும் ஒரு மாத்திரை எடுத்து தாய்ப்பாலில் சேர்த்து கொடுக்க முத்தோடத்தாலுண்டாகும் சுரம் தீரும்.

குளிர் வாத சுரக்குணம்:-

உடம்பெல்லாம் குளிரும், வலியெடுக்கும், மலம் கட்டிக்கொள்ளும், காய்ச்சல் அதிகமாகும், குளிர் விடுத்து உடல் விறைத்து வாங்கும், காய்ச்சல் மிகவும் அதிகமாய் காயும், தாகமேற்படும், முக்கல் நிகழும். வாதநாடி வேகமாகச் செயல்படும், பதினெட்டு நாட்களுக்குள் இச்சுரம் குணமாகும்.

குடிநீர்:-

சிற்றரத்தை, சிறுதேக்கு, திப்பிலி மூலம், இஞ்சி, மலைமிளகு, வேம்பு இவற்றைச் சமனெடுத்து தேவையான அளவு தண்ணீர் விட்டு எட்டொன்றாக்கிக் கொள்க. அக்குடிநீரில் உறுதியான இந்த மாத்திரையை உரைத்துக் கொடுக்கும் போது குழந்தைகட்கு வரும் குளிர்வாத சுரம் குணமாகும்.

வாந்தி சுரத்திற்குக் குடிநீர்:-

நெற்பொரி, வறுத்த பாசிப்பயறு, பற்பாடகம், பெரும்பூசனிவேர், வில்வவேர் வகைக்கு 50 கி. எடுத்திடித்து 2.6 லி. தண்ணீரிற் போட்டு எட்டிலொன்றாக்கிக் குடிநீர் செய்து கொடுக்கவும். தாகம் அதிகமாயிருந்தால் 9 கி. அதிமதுரத்தைக் கூட்டி குடிநீர் செய்து கொடுக்க வாந்திசுரம் தீரும்.

விஷசுரக் குறிகுணம்:-

ஒருபுறங் குளிரும், ஒருபுறங்காயும், உடம்பில் விஷம் ஏறுவது போல் தோன்றும்.

குடிநீர்:- 1

நெல்லி, தான்றி, வேப்பீர்க்கு, சீந்தில் தண்டு, கொத்துமல்லி, முத்தக்காசு இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து சிதைத்து 500 மி.லி. தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாக்கிக் குறுக்கி குடிநீராக்கிக் கொடுக்க விஷ சுரம் நீங்கும். சிறுவழுதலை, சீந்தில், தாமரை இவற்றின் வேர், முத்தக்காசு, சுக்கு இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து சிதைத்து 500 மி.லி. நீரிற் போட்டு எட்டிலொன்றாக்கிக் குறுக்கி காய்ச்சி குடிநீராக்கிக் கொடுக்க விஷசுரம் நீங்கி நலமாகும்.

குடிநீர்:- 2

கோழியவரை வேர், சித்திரமூலம், வேப்பீர்க்கு, சிறுபுள்ளடி, பற்பாடகம், சுக்கு, செவியம் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து 500 மி.லி. தண்ணீர் விட்டு குடிநீராக்கிக் கொடுக்க நன்றாகும்.

குடிநீர்:- 3

சுக்கு, கடுக்காய், நிலவேம்பு, வேப்பம்பட்டை, சீந்தில், பேய்ப்புடல் வகைக்கு 10 கி. எடுத்து சிதைத்துப் போட்டு 500 மி.லி. நீர்விட்டு வற்றக்காய்ச்சி எட்டிலொன்றாக்கிக் கொடுக்க சுரம் நீங்கி நலமாகும்.

குடிநீர்:- 4

ஆடாதோடை யீர்க்கு, நிலவேம்பு, சீந்தில் தண்டு, பேய்ப்புடல், பேய்ப்பீர்க்குவேர், வெட்பாலையரிசி வகைக்கு 10 கி. எடுத்து சிதைத்து 500 மி.லி. தண்ணீர் விட்டு குடிநீராக்கிக் கொடுக்க வேண்டும். விஷ சுரம் நீங்கும்.

குடிநீர்:- 5

நெருஞ்சி, வீழி, குருந்தொட்டி, சிறுபீளை, அமுக்கரா, நன்னாரி, பெருங்குரும்பை, சீந்தில், முன்னை, பாதிரி, சிறுவழுதலை, சிறுகாஞ்சோறி, சிற்றாமணக்கு, மலைதாங்கி, சத்திச்சாரணை, கூவிளை, ஆடாதோடை, சிற்றாமுட்டி, வெதுப்படக்கி, இவற்றின் சமூலம், நீர்முள்ளி வேர், இலாமிச்சம் வேர், கற்றாழஞ்சருகு, பற்பாடகம், தாமரை வளையம், சன்னலவங்கம், சிற்றரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், செவியம், சித்திரமூலம், கோட்டம், சிறுதேக்கு, தேசாவரம் எனும் கண்டதிப்பிலி, கோரைக்கிழங்கு இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து இடித்து மூன்று பங்கு செய்து கொள்க. அதில் ஒரு பங்கை யெடுத்து 2.6 லி. தண்ணீரில் போட்டு 325 மி.லி.யாகச் சுண்டும்படி காய்ச்சி அதில் 5 கி. வெங்காரத்தைப் பொடித்துப் போட்டுக் கொடுக்கவும். இவ்வாறு ஆறுவேளை கொடுக்க விஷசுரம் நலமாகும்.

முக்கடுகுக் குடிநீர்:- 6

சுக்கு, அரிசித்திப்பிலி, மிளகு, சுட்டவசம்பு ஆகிய நான்கு பொருட்களையும் வகைக்கு 4 கி. எடுத்து 130 மி.லி. நீர் விட்டு 30 மி.லி. குடிநீராக இறக்கி வடித்து தேன் கலந்து நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 முறை தக்க அளவு கொடுக்க நச்சுச்சுரம் தீரும்.

குளிகை:- 1

சாதிக்காய், கிராம்பு, ஓமம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, கத்தூரி மஞ்சள், வசம்பு, பெருங்காயம், வெள்ளைக்காக்கணான் வேர்ப்பட்டை ஆகிய இவற்றைச் சம எடை எடுத்துக் கூட்டி வெந்நீரில் அரைத்து 400 மி.கி. அளவுள்ள உருண்டைகளாகச் செய்துலர்த்தி வைக்க. அதனை வெந்நீரில் இழைத்து மூன்று நாட்கள் கொடுக்க விஷசுரம் தீரும்.

உருண்டை:- 2

சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், கிராம்பு, ஏலம், கடுகுரோகணி, மஞ்சள் இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துக் கொள்க. இவற்றைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு 6 மணி நேரமாட்டி 65 மி.கி. உருண்டை செய்து மாசிப்பத்திரியின் குடிநீரில் இழைத்துக் கொடுக்க விஷசுரம் விட்டுப் போகும்.

மாத்திரை:- 3

கடுகுரோகணி 1 பங்கு, இலுப்பைப்பூ 1 பங்கு, நேர்வாளம் 2 மடங்கு சேர்த்து கற்றாழைச்சாற்றால் 12 மணி நேரமரைத்து தூதுவளங்காய் (250 மி.கி. அளவுள்ள) போலுருட்டி நிழலிலுலர்த்தி வைக்க. இஞ்சி, தேன் கூட்டி மாத்திரையை அதில் இழைத்து காலையிலே கொடுத்தால் விஷ சுரம் நீங்கும்.

விடாச்சுரத்தின் குறிகுணம்:-

விடாச்சுரத்தில் உடல் நோகும். மிகுதியாகச் சுரங்காயும். நீர் வேட்கை, மார்பு நோய், தலைநோய், உடல் எரிவு, மலச்சிக்கல் முதலியவை உண்டாகும்.

குடிநீர்:-

390 மி.கி. அவுரிவேருடன் 5 மிளகைக் கூட்டி வெந்நீரிலரைத்துக் கலக்கி அதில் சுண்ணாம்பை 135 மி.கி. அளவெடுத்து கரைத்துக் கொடுக்கவும். இவ்வாறே மூன்று வேளை கொடுக்க விடாச்சுரம் விட்டு விடும்.

நெய்:-

பசுநெய், சுத்தமான தண்ணீர் வகைக்கு 1.3 லி. எடுத்து ஒன்றாய்க் கலந்து கொள்க. அதில் கொடிமுந்திரிப்பழம், வெட்பாலையரிசி அரிசித்திப்பிலி, கெந்தகம், அதிவிடையம், நெல்லி, நிலவேம்பு

விலாமிச்சம்வேர், வில்வவேர் வகைக்கு 5 கி. எடுத்து தண்ணீரிலரைத்துப் போட்டு கலவையில் சேர்த்துக் காய்ச்சி வடித்து நேரமொன்றுக்கு 5-10 மி.லி. வீதம் கொடுத்துவரத் தீரும்.

ஏலாதியுருண்டை:-

ஏலம், கிராம்பு, கோரைக்கிழங்கு, அதிமதுரம், வெட்டிவேர், வெண்கடுகு, சுக்கு, நன்னாரி, கொடிமுந்திரிகை, கோரோசினை, தாளிசபத்திரி, நிலப்பனைவேர், சடாமாஞ்சில், சந்தனத்தூள், இலுப்பைப்பூ, தேவதாரம், திப்பிலி, கடுகுரோகணி ஆகிய இச்சரக்குகளை வகைக்கு 1 கி. எடுத்துக் கொள்க. இவற்றைக் கல்வத்திலிட்டு செவ்விளநீர் வார்த்து 6 மணி நேரம் ஆட்டுக. நன்கு அரைத்ததை வழித்தெடுத்து 135 மி.கி. அளவு உருண்டை செய்து 15 நாட்கள் நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்தி வைத்துக் கொள்க. அதனைத் தாய்ப்பாலில் இழைத்துக் கொடுக்க விடாக்காய்ச்சல் விட்டு விடும்.

ஆறுமாத சுரத்திற்குக் குடிநீர்:-

நெல்லி, வேம்பு, கும்மட்டி இவற்றைச் சம அளவு எடுத்துக்கொள்க. குமிழ்த்தாமரை, கிராம்பு, திப்பிலி இவற்றைப் பொடித்துக் கொள்க. மேற்சொன்ன சரக்குகளின் கலவையுடன் இதனைக் கலந்து தேவையான அளவு நீர்விட்டுக் காய்ச்சி அதை 15-30 மி.லி. குழந்தைக்குக் கொடுக்க ஆறுமாத சுரம் விட்டுப் போகும்.

குடிநீர்:- 2

ஈருள்ளி பத்து எடுத்துப் பொடியாய் அரிந்து கொள்க. வில்வம், ஆவாரை, நிலவிளா இவற்றை அரிந்து சிவக்க வறுத்துக் கொள்க. இவற்றுடன் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து குடிநீராய்க் காய்ச்சி மூன்று நாட்கள் குழந்தைகட்குக் கொடுக்க ஆறுமாத சுரமும் நீங்கிப் போகும்.

மருந்து:-

புளி, வேம்பு, மா, நெல்லி, நாரத்தை, நுணா, தகரை, எலுமிச்சை இவற்றின் ஈர்க்குகளை எடுத்துக் கொள்க. வல்லாரை, பழம்பாசி, முத்தக்காசு, வெங்காயம், நத்தைச்சூரி, மிளகு, தக்காளி, நரிப்பயறு, முசுமுசுக்கை, விஷ்ணுகிரந்தி, மூக்குத்திப்பூண்டு, பற்பாடகம், அம்மான் பச்சரிசி, சீந்தில் ஆகிய சரக்குகளைச் சமனாக எடுத்துக் கொள்க.

சுக்கு, வெந்தயம் இவற்றை வகைக்கு 17.5 கி எடுத்து அரைத்துக் கொள்க. கோரோசினை, அக்கிராகாரம், அதிமதுரம், மான்கொம்பு, கோட்டம் இவற்றை வகைக்கு 488 மி.கி. எடுத்து ஒன்று சேர்த்தரைத்து குழந்தைக்கு அளவறிந்து கொடுத்தால் ஆறு மாத சுரம் நீங்கும். 10 நாட்கள் இரண்டு வேளை கொடுக்க குணமாகும்.

பழஞ்சுரத்திற்குக் குடிநீர்:- 1

தூதுவளை, காஞ்சோறிவேர், சீந்தில், பற்பாடகம், பேராமுட்டி, சிற்றாமுட்டி, கடுக்காய் இவற்றைச் சமமாக எடுத்து இடித்துக் குடிநீர் செய்து இறுத்து திப்பிலிப் பொடியை அதில் தூவி குழந்தைகட்குக் கொடுக்க பழஞ்சுரம் போம்.

குடிநீர்:- 2

சிறுகாஞ்சோறி, சிறுவழுதலை, சீந்தில் இவற்றின் வேர், பற்பாடகம், பேய்ப்புடல், சுக்கு, முத்தக்காசு வகைக்கு 9 கி. எடுத்து இடித்து மூன்று பங்கு செய்து கொள்க. வேளைக்கு ஒரு பங்கு எடுத்து 2.6 லி. தண்ணீர் விட்டு 162 மி.லியாக வற்ற வைத்து தேன்விட்டுக் கொடுக்க பழஞ்சுரம் தீரும்.

குடிநீர்:- 3

நன்னாரி, விலாமிச்சம் வேர், முத்தக்காசு, சுக்கு, மிளகு, திப்பிலி, கொத்துமல்லி, செந்தொட்டிவேர், பற்பாடகம், பேய்ப்புடல் வகைக்கு 10 கி. எடுத்து அதை மூன்று பங்குசெய்து வேளை ஒன்றுக்கு ஒரு பங்கை எடுத்து 2.6 லி. தண்ணீரில் போட்டு வற்றவைத்து அதில் தேனும் திப்பிலிப் பொடியும் கலந்து கொடுக்கவும். இவ்வாறே 6 வேளை கொடுக்கத் தீரும்.

குடிநீர்:- 4

சிறுதேக்கு, சீந்திற்கொடி, பற்பாடகம், கோஷ்டம், திப்பிலி, நிலவேம்பு, சுக்கு, சிறுகாஞ்சோறி, முத்தக்காசு, ஆடாதோடை இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து 1.3 லி. நீரிற் போட்டு எட்டொன்றாய் வற்றக்காய்ச்சி 6 வேளை கொடுக்க பழஞ்சுரம் தீரும்.

நெய்:

வெள்வேல், கழற்சி, நாயுருவி, சிறுபீளை, விஷ்ணுகிரந்தி, இவற்றின் வேர்கள், வசம்பு, பூடு இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து அரைத்து 1.3 லி. பசுநெய்யிற் போட்டு காய்ச்சி வடித்து வேளைக்கு 5-10 மி.லி. கொள்ள அனைத்து பழஞ்சுரங்களும் நீங்கும்.

(பாலசஞ்சீவி) மாத்திரை:- 1

நாவி (குறிப்பிட்ட அளவு), திப்பிலி, வெண்காரம் இவற்றை வகைக்கு 75 கி., சாதிலிங்கம் 50 கி. எடுக்க. இவற்றை எலுமிச்சம்பழத்தின் சாற்றால் 3 மணி நேரமரைத்து அதனைக் கடலை (250 மி.கி.) அளவாக உருண்டை செய்து கொள்க. அதனைச் சுக்கு நீரிலிட்டு இழைத்துக் கொடுக்க வெதுப்பு தீரும். சீரகம், கிராம்பு இவற்றின் குடிநீரில் கொடுக்க தாகமும், ஆலம்விழுதின் குடிநீரில் கொள்ள பழஞ்சுரங்களும் சரியாகும்.

(ஏலாதி) மாத்திரை:- 2

ஏலாதி மாத்திரை பழஞ்சுரத்தைப் போக்கும். இதன் செய்முறையை விடாச்சுரத்தில் காண்க.

மேற்பூச கோட்ட எண்ணெய்:-

1.3 லி. பசுநெய், 2.6 லி. பசுவின்பால், 7.8 லி. நல்லெண்ணெய் ஆகியவற்றை ஒரு மட்பாண்டத்தில் சேர்த்துக் கலந்து அதில் பெருந்தும்பை, அதிமதுரம், நன்னாரி, கருவேலிலை, கடுகுரோகணி, செவ்வள்ளிக் கொடி, அமுக்கரா வேர், மரமஞ்சள், சந்தனம், சுக்கு, கோரைக்கிழங்கு, கொம்பரக்கு, சாதிக்கோட்டம் ஆகிய இப்பதிமூன்றையும் வகைக்கு 5 கி. எடுத்து பசுவின்பாலில் அரைத்துக் கலந்து எரித்து பக்குவத்தில் வடித்துக் குழந்தையின் உடம்பிலும் தலையிலும் பூசிவர பழஞ்சுரம் நீங்கும்.

சுரம் - பாடல்

(சுரத்திற்குக்) குடிநீர்:- 6

பாடுவோம் பூவரசம் பழுப்பு சங்கம்
பட்டை சீந்திற்கொடியும் துளசி சுக்கு
நீடுவோம் வரள்முள்ளி முருங்கை யீர்க்கு
நீர்முள்ளிச் சாறுவேளையின் றன்வேரும்
சூடுவோம் பிரமியிலை மருள்கிழங்கு
தூ துவளை சிறுகுறிஞ்சான் சத்தி மூலம்
கோடுவோம் கருஞ்சீரம் இவைவ கைக்குக்
கொண்டு சமன் எடையாக தூக்கி டாயே.

தூக்கியே கியாழமிட்டு எட்டொன் றாக்கிச்
சுகமாக நல்கினால் மாந்த வீக்கம்
வீக்கிவிட வீக்கம்விட பாக வீக்கம்
மீறுசுரம் நீர்க்கட்டு மலக்கட்டும் போம்.

(விஷ்ணுகிரந்திக்) குடிநீர்:- 7

விட்டுணுவின் காந்தி சுக்கு விளம்பிய கடுக்காயிண்டு
வட்டவா லுழுவை கூட்டி வளம்பெறக் கொள்வீராகில்
எட்சுர மறுபா னாலு மிடரஃ தில்லை யில்லை
விட்டாது போக வென்று விளம்பினார் புவியுள் ளோர்க்கே

(477-279) (476-131)

குடிநீர்:- 10

இலந்தை நாரத்தைபுளியின் கணப் பூண்டும்
கலந்துநெல்லி ஈர்க்குடனே காய்ச்சியுண்ண நலமா
கழிகணம் உள்வறட்சிக் காய்ச்சலுடன் தாகம்
பழிவருமென் றோடும் பார்.

(476-146), (477-328)

குடிநீர்:- 11

ஆலாவரை விடத்தேர் நாவலாகிய கருவேலின்
ஆனகொழுந்தும் பட்டையுநல் லத்திப் பட்டையுடன்
சேலாத்தெங்கின் மொக்குடனே சமன்தேடிக் குடிநீராய்
சீரகம் விடயமாசி கிராம்புதின்னுஞ் சாதிக்காய்
மேலாந் தீயில்வாட்டி விளாவின்மேவுந் தன்பிசினும்
மேலுமிதைப் பொடியாக்கிய நீரில் மெத்தனவே கரையாய்
பாலாய்ப் பேதி மூலகணத்துடன் பாரிய கக்கல்சுரம்
பாறிடுமே மறுசட்டியில் மாற்றிப் பாலர்க் கீய்ந்திடவே.

(477-159)

குடிநீர்:- 12

தங்கியஆல் நாவல்துளிர் விலாம்பிச்சை சமனாய்
சாதகமாய்க் காச்சிஇது குழந்தைக் கீய
அங்கயெனுஞ் சுரங்காச வாந்தி யோடு
அதிசாரத் தாகமிது அடங்குந் தானே

(ஏடு 612-12)

குடிநீர்:- 16

வல்ல சுரம்போம் மாந்தமுடன் தோசம்போம்
கொல்ல லெகுமேகம் சோகைபோம் - நல்லாய்கேள்
தாலவெல்லஞ் சுக்குடனே சற்றே நிலக்குமிளும்
காலமே காச்சியுண்ணக் கேள்.

(R. 6218-36)

சூரணம்:- 1

அஞ்சனவேர் நெல்பொரியு மாஞ்சி லொடு
அதிமதுரஞ் சக்கரைதே னளவா யுண்ண
கொஞ்சளவே கொஞ்சுபிள்ளை காச்சல் தீரும்
குயில்மொழியா பின்னதென்று கூறக் கேளு

(ஏடு.612-12)

சூரணம்:- 2

காரிவிரை யசுவம் காங்காரு திப்பிலியும்
கூரும்பொடி சமனாய் குழவிநோ யாறும்
வாந்தி சுரமிருமல் வாராது காணும்
சேர்ந்து மதுவதனில் தின்.

(ஏடு R. 6218-36)

பிட்டவியல்:-

ஆடாதோடை தூ துவளை
அழகாம் நொச்சி பெருந்தும்பை
போடா கண்டங்காரி யிசங்கு
புத்தரிச் சுண்டை குழிமீண்டான்
வாடாத் துளசி கறுத்த சுண்டை
வளருமுஞ்ஞை முருங்கைப் பூ
போடே வகைக்குப் பிடி யொன்று
பொருந்து மிஞ்சி திப்பிலியே.

திப்பிலி மூலம் வெள்ளுள்ளி
சிறந்த மிளகு சித்தரத்தை
உற்பல மாக நிலவேரும்
ஓரோர் வகைக்குக் கழஞ்சொன்று

செப்பெரு முலையாள் பால்விட்டு
சிறுக்க அரித்துப் புழிந்தெடுத்து
மெய்ப்பெரு மானே யந்திசந்தி
ஏகிப் போகும் சுரமெல்லாம்.

(கை.பி.98-164,165)

(கஸ்தூரி) எண்ணெய்:- 1

ஏகநாயகன்றன் இணையடியைப் போற்றி செய்து
வாகுடனே எண்ணெய் வசனிப்பேன் - யோகமுள்ள
காரோ சினையும் கோஷ்டம் அதிமதுரம்
சீரந்திப்பிலி தேவ தாரமுடன் - பேரான
சந்தனமும் ஏலம்தன் னுடனே மாசிக்காய்
வெந்தயமும் சுக்கு வெள்ளுள்ளி - அந்தமுள்ள
பேரான கஸ்தூரிப் பெருவசம்பு ரோகணியும்
பாரமுள்ள மூங்கில் பச்சைத்தோல் - சீராய்
வகைக்கு விராகனெடை வாட நிறுத்து வருத்துத்
தொகையாய் அரைப்பதற்கு சொல்லக்கேள் - தகைமையுடன்
எருமூட்டைப் பீநாரி இசைந்ததொரு சாற்றில்
வருந்தி அரைத்து வழித்ததனைத் - திரும்ப
விளக்கெண்ணை ஓர்படியும் விட்டெரித்துத் தான்இருத்து
மலைக்காமல் நோய்க்கெல்லாம் வைப்பாய் - கலக்கமற
பிள்ளைப்பிணிக்குப் பேராகத்தான் கொடுக்க
உள்ளநோய்ப் போகும் ஓதக்கேள் - கள்ள
மாந்தவயிற் றுப்பிசமும் வடிவாய் இளந்தேகம்
சோர்ந்து கிடக்கும் சுழிமாந்தம் - கார்ந்தும்
நாவறச்சிக் கணமும் நளிர்க்காய்ச்சலுங் குளிருங்
தூவி யிரத்த தொந்தசுர - மேவும்
முக்குக் குணமும் முதிர்ப்பால் கிறிச்சனமும்
பக்கியின் தோஷம் பழங்காய்ச்சல் - அக்கணமே
இத்தனை நோயெல்லாம் இருப்பிடத்தை விட்டுவிட்டு
கத்திலிழுந் தோடுங் காண்.

(476-56)

கற்றாழை எண்ணெய்:- 2

கற்றாழஞ் சாறுபா லுடனே
காந்திநீர் அவ்வ கையும்

வற்றா வகைக்குப் படியாக
வாராய் நிம்பம் இதிற்பாதி
சிற்றா மணக்குபடி மூன்று
திறமையாக கலந்திட்டு
சற்றே சந்தனங் கணப்பூண்டு
தானே சிங்கி ஓர்பலமே.

பலமே அரைதான் சண்பகமும்
பச்சைப் பூலா ஏலமுடன்
நலமாய் இரண்டு வாசவேர்
நாறி சாதிக்காய் பத்ரி
நிலமே வளருங் கொத்தமல்லி
நீகேள் மதுரங் கோஷ்ட்டமுடன்
பிலமே கடுகு ரோகணியும்
பெண்ணே கிராம்பு முத்தமுமே.

முத்தஞ் சன்ன லவங்கமுடன்
மொழியுஞ் சீரகம் இருவகையும்
சுத்த நாகம் சிறுநாகம்
சொல்லுங் காசெடை ஓரளவாய்
வைத்தே அரைத்து எண்ணைதனில்
வகையாய் கலந்தே எரியிட்டு
அத்தை வடித்து புல்லுருவ
ஆனக் காசெடை தூவி விடே

தூவு மெண்ணெய்க் காசெடைதான்
சுகமாய் இரண்டு வேளையும்
மேவி குழவிக் கிடும் போது
மிகுத்த காய்ச்சல் வரட்கணமும்
கூவியோடும் இரத்த கணம்
குளித்தோ ஷங்கட் கவலையுடன்
பாவாய் பாலர்க்கி டவேதான்
பகற்கற் றாழை எண்ணையிதே.

(476-128,129)

(குமரி) எண்ணெய்:- 4

ஆட்டிய என்னெ யதுபடி யொன்று
கூட்டெழு சுத்திக் குமரிச் சோறது

மீட்டித் தேங்காய ளவு வெந்தயம்
ஊட்டித் துட்டெடை யூறப் போட்டிடே

ஊறியதோர் சலத்தோடே வெந்தயமுங் கூட
ஊற்றிவிடு எண்ணெயிலே கலந்தொன்றாகக்
கூறியஈ ருள்ளிபலம் அரிந்து போடு
குமுறவே யடுப்பேற்றி மெழுக தாக
ஆறியபின் வடித்தெடுத்து வைத்துக் கொண்டே
அழகாக நேரமொரு கரண்டி வீதம்
கோரிகொடு பதினெட்டுக் கணமுந் தானே
குணமாகுங் கணவெட்டை சுரங்கள் போமே.

(477,169)

எண்ணெய்:- 5

ஆமெனவே வாலைகள்தான் சுரத்துக் கெல்லாம்
அறைகிறேன் நல்லெண்ணெய் ஏரண்டத் தெண்ணெய்
தாமெனவே வேப்பெண்ணை வகைக்கு ழக்கு
தானதிலே தோடைச்சார் முலைப்பா லுந்தான்
நாமமுறா துரியுடன் சிற்றண்ட மூன்று
நன்னாரி மரமஞ்சள் தேவ தாரம்
வாரமுது நாயனிரு கழஞ்சி கூட்டி
வடிபதைப்பி லிடுசுரங்கள் மாறுந் தானே.

(கை.பி.98,45)

எண்ணெய்:- 6

புள்ளடி செப்புநெருஞ்சி வல்லாரை வறட்பூலுடனே
செல்லடி கோழியவரையின் சாறுசேர் காலுடனே
தள்ளடி ஆமணக்கெண்ணையுஞ் சேர்கிற காணியுடன்
சொல்லடி கடுகுரோகணி வெளிச்சியுஞ் சொல்லிடுமே.

சொல்லிடு மாவின்புழுநீ மாஞ்சி சொன்னவகை
மெள்ள அளவு பணவிடை இதிற்க லந்து
உள்ளவே றிதுபதமாக் குழவிக்கு துட்டளவு
உள்ளபடியிற் கணங்களும் காச்சலும் ஓடிடுமே.

(ஏடு 6218-44)

(அமுதாதிக்) குளிகை:- 3

அருளினார் அமுர்தமெனுங் குளிகை தானும்
அதிமதுரம் சண்பகப்பூ ஏல மோடு
திருவுகோ ரோசினையுஞ் சாத்திர பேதி
சிறந்தவெட்டி வேர்க்கோஷ்ட்டம் மாசிப் பச்சை
தருவெனவே விலாமிச்சம் வேருங் கூட்டிச்
சரியாக ஆதொண்டைச் சாறு விட்டுப்
பருவமதாய் ஒருசாமம் அரைத்துக் குன்றிப்
பருமனாய் முலைப்பாலிற் பருகி டீரே.

பருகிடில்ஓர் உண்டைதனை முலைப்பால் தன்னில்
பகைத்துவருங் கணமாந்த மெட்டுந் தீரும்
திருகுகுடல் படுவன்நீர்ப் பாடுந் தீரும்
சேர்கர்ப்பப் பாடுநா வறட்சித் தீரும்
குருவெனவே இக்குளிகை சுரமுந் தீரும்
குலையெரிவு வெப்புமுதல் தோஷந்தீரும்
அருளெனவே முனியுரைத்தார் பாரின் மீது
அமுர்தாதிக் குளிகைதனை அரைத்தி டாயே.

(ஏடு. 6218-46), (476-76,77), (477-82)

(ஏலாதி) மாத்திரை:- 4

அரிய ரோசினையெடை விராகன் மூன்று
அதனுடனே அதிமதுரங் கோஷ்டம் இந்து
பெரிய இருப்பைக் கொட்டை சாஸ்திர
பேதி பெருஞ் சீரகமுங் கூட்டி
சரியாக விராகனெடை ஒன்று கூட்டி
தன்மை குமரிச்சார் வார்த்தரைத்து பின்பு
உரிய முலைப்பாலி லரைகுன்றிப் போலே
உண்முலைப்பால் தன்னிலிட சுரமோ டும்மே.

(476-128)

(பச்சைக் கற்பூர) மாத்திரை:- 5

பச்சைக் கற்பூரந் தான்பூ
பட்டைச் சாதிக்காய் வகைக்கு
மச்சைக் கழஞ்சு இரண்டாக
வாளம் ஆறுகழஞ் சுடனே

அச்சக் குமரிச் சாறதனால்
அரைத்து உழுந்து பிரமாணம்
மச்சத் துடனே உலரவைத்து
சர்க்கரை தனிலோர் குளிகையிடு

இடநாழிகை மூன்றே முக்கால்
இவ்வி ரோசனந் தானாகும்
படுமே சுரமுந் தான் தீரும்
பண்பாய் வந்த குளிருக்கு
தொடுமே குப்பை மேனியிலை
சொற்கொடி வேலி மிளகரைத்து
கொடுமே விழுது சரிகூட்டிக்
குளிர்வரும் போது குணமாமே.

(476-130, 131)

மாத்திரை:- 7

ஆடுதின்னாப் பாளை பட்டை
அதைநிழல் உலர்த்திக் கொண்டு
சாடிய கருவாய்ப் பட்டை
சமனதாய் இடித்து தூளாய்
வாடிய வஸ்திர காயம்
வண்மையாய் செய்து அதை
பாடிய புளித்த நிம்ப
பழச்சாறு விட்டு ஆட்டே

ஆட்டியே பருத்திக் கொட்டை
அளவதாய் வுண்டை செய்து
.கூட்டிய அநுபா னத்தில்
கொடுசர்வ காய்ச்சல் தீரும்
பூட்டிய புளிப்பு கைப்பு
புகலவே சற்றும் ஆகா
நாட்டிய விஷமும் போகும்
நளின மறிந்தி டாயே.

(476-131)

(ஏலாதி) மாத்திரை:- 8

ஈந்திட்டா லேலாதி யுண்டை கேளா
யினிதான திரிகடுகு சாதிக் காயும்

ஈந்திட்ட கிராம்பேலம் ரோணி மஞ்ச
ளெழில் நாபி சரக்குவகை கழஞ்ச தாக
ஈந்திட்ட கல்வத்தில் பொடியாய் செய்திங்
கிருசாமம் பழச்சாறு தன்னா லாட்டி
ஈந்திட்ட பயற்றளவி லுண்டை செய்திங்
கினிமாசிப் பத்திரியின் கியாழத் தூட்டே.

ஊட்டவே விடசந்நி சுரமும் விக்க
லுறவான குளிர்சந்நி யூர்விட் டோடும்
நீட்டவே யிந்நூலை முந்நூ றாக்கி
நிகழ்த்தினேன் குழந்தைகளி னிறக்கத் தாலே
கூட்டவே சிசுவின்நோய் தீர்ப்பா ராகில்
குரூரமுள்ள பிறப்பதுவு மற்றுப் போமே.

(477-317, 318)

(அமிர்த சஞ்சீவிக்) குளிகை:- 11

சீறிங்கொடை துத்தாரை வெண்காரம்
கோரோசினை திகழ்வகைக் கோர்கழஞ்சி
மலம்விடு கடுகுரோகணி முக்களஞ்சு சேரவே
உலர்ந்ததோர் மருந்து தன்னை
உற்றதோர் வியாதிக் கெல்லாம்
நலம்பெற முலைப்பால் வென்னீர்
தனிலொரு உண்டை (செய்து)
நலங்கலு மீறும் மாந்தம்
இஷ்ட்டக ணங்கள்சுரந் தாளல்
அலங்குரு முனியு ரைத்த
அமுர்த சஞ்சீவி யாமே.

வழங்குங்கால் பத்திரிதன் வகையைக் கேளீர்
வனதுளசி செம்முள்ளி ஆடா தோடை
களத்தறிவான் தூதுவளை விஷ்ட்டுணு காந்தி
பண்புசெறி கண்டங் கத்தரியி னோடு
நெகிழ்த்திடு வெதுப்படக்கி பேய்ப்புடலும்
நின்றசங் கினிலைநொச்சி நிரைதான் கூட்டி
திகழ்த்திடுமேல் சுவாசசுரங் கணைதோஷங்கள்
தெளிந்துரைத்தார் மாமுனிசஞ்சீவி யென்றே

(ஆர் 6218-44-45)

குளிகை:- 13

விளங்களிஞ்சி வசம்பு ஓமம்
வெள்வெங் காயம் பொடுதலையும்
இளங்கோ மிளகு திப்பிலியும்
மெதுவாய் ஆமை யோட்டுடனே
களங்கா திலையின் சாத்தரைத்து
கடலை அளவாய் செய்திடவே
புளங்கா திருமல் சளிகாச்சல்
பொருமல் கணமாந்தத் துண்டையிதே.

(ஆர் 6218-46)

(வாதராட்சதக்) குளிகை:- 14

ஆமென்ற பிள்ளைசுர மனைத்துந் தீர
அப்பனே வாதராஷக்ஷதக் குளிகை கேளு
நாமென்ற பெருங்காயம் வெள்ளைப் பூண்டு
நலமான அரியாறு சுக்கு ஏலம்
போமென்ற கடுகரத்தை சிவதை ரோணி
புகளான வசம்புடனே கடுக்காய் தானும்
தாமென்ற பூநாகம் முசிறு முட்டை
தயவான நாகத்தின் கண்டந் தானே.

தானான வகைசரியாய் வாங்கி வந்து
தயவாகப் பொடிசெய்து கல்வத்திட்டு
மானான நொச்சிச்சாற் தன்னா லாட்டி
மைந்தனே குன்றியிடை குளிகை கட்டி
தேனான நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
சிறப்பான அனுபான மதனி லீய்ந்தால்
கோனான பிள்ளைசுர மனைத்துந் தீரும்
குருவான யிந்நூலைக் கூர்ந்து பாரே.

(கை.பி. 98-81)

(கருணானந்த சஞ்சீவிக்) குளிகை:- 15

பாரேநீ பிள்ளைநோய் சுரங்கள் தீர
பாடுகிறேன் கருணானந்த சஞ்சீவி தன்னை
ஏரேநீ பச்சைக் கற்பூர மேலம்
இலவங்கம் வால்மிளகு சிறுநாகப்பூ

கூரேநீ ரோகணியும் மாஞ்சி சுக்கு
குணமான சீரகமும் நேர்வா ளந்தான்
சீரேநீ வகைவகைக்குச் சரியாய்க் கூட்டி
சிறப்பாக பொற்றலையின் சாற்றா லாட்டே.

ஆட்டியே ஒன்பதுநா ளரைத்துக் கொண்டு
அப்பனே மிளகுதரம் குளிகை செய்து
மாட்டியே நிழலுர்த்திச் செப்பில் வைத்து
மைந்தனே தேன்முலைப்பா லிஞ்சிச் சாற்றில்
நீட்டியே யீய்ந்திடவே சுரங்க ளெங்கே
நேரான நாவறட்சி மாந்த மெங்கே
கூட்டியே கபமெங்கே அனலு மெங்கே
குடிகெட்டு ஓடிவிடுந் திண்ணந் தானே.

(கை.பி.98-82)

(கோரோசனைக்) குளிகை:- 16

பாரப்பா கோரோசினை குளிகைக் கேளு
பாங்கான கோரோசினை யுங்குங் குமப்பூ
சாரப்பா கற்பூரம் ரசசெந் தூரம்
சார்வான பச்சை கற்பூர மேலஞ்
சேரப்பா வப்பிறகம் கிராம்பு கோஷ்ட்டம்
திறமான சாதிக்காய் அக்கிரா காரம்
மாரப்பா வகையொன்று கழஞ்சி மூன்றும்
அப்பனே கல்வத்தில் பொடித்துக் கொள்ளே.

பொடித்திதனை லரைப்பதற்குக் கிஷாயங் கேளு
பேரான சந்தூள் கிஷாயஞ் செய்து
வடித்திதனை சாமம்நா லரைத்துக் கொண்டு
மெய்யான லவுங்கப்பூ கிஷாயஞ் செய்து
துடித்திடவே யிருசாம மரைத்துக் கொண்டு
துலங்கவே செண்பகப்பூக் கிஷாயஞ் செய்து
கடித்திட்டு யிருசாம மரைத்துக் கொண்டு
கருவாக குன்றிபோ லுண்டை செய்யே

உண்டைசெய்து நிழலிலுலர்த்தி செப்பில் வைத்து
உத்தமனே முலைப்பாலில் கொடுத்தா யானால்
தொண்டைக் கட்டு சேட்டுமங்கள் தொன்னூற்றாறும்
துலைவிடுஞ் சன்னியெல்லாம் சொல்லாதோடும்

மண்டைக்கட்டு சூலை முதல் நீர்த்தோடங்கள்
மயக்கமோடு சேத்துமசுர மாண்டு போகும்
சண்டையிட்டு வந்ததொரு வலிப்பு சவுஞ்
கண்ணுண்டு போகுமடா சொல்லக் கேளு!

(ஏ 318-15)

பெருங்கழிச்சல் சுரக்குறிகுணம்:

அதிசாரக் காய்ச்ச லழற்றல் வயிற்றில்
பதிந்திரைந்து பேதி பலவாய் - நிதந்தவறா
தாதலின்கால் கையுதற லன்னமுண வாய்குமட்டல்
போதக் குழகுழத்தல் போற்று

(477-282)

குடிநீர்:- 1

தங்கிய ஆல்மா நாவல்துளி தன்னோடே
தான்காய்ச்சி அந்திசந்தி கொடுப்பீ ராகில்
அங்கியெனுஞ் சுரதாப விக்க லோடு
அதிசார தாகமவை அகலுந் தானே

(476-130)

(அஞ்சன வேராதிச்) சூரணம்:- 1

அஞ்சனவேர் நெற்பொரியும் மாஞ்சி லோடே
அதிமதுரஞ் சர்க்கரைதே னளாவி யுண்ணக்
கொஞ்சனவே கொஞ்சிபிள்ளைக் காய்ச்சல் தீரும்
குயில்மொழியா யின்னமொன்று கூறக் கேளாய்
தஞ்சமென்ற வதிவிடயந் தேனிற் கொள்ளத்
தாகமுட னதிசாரஞ் சுவாசம் போகும்
மஞ்சணவுங் குழல்மடவாய் பிள்ளைக் கென்று
வைத்தியநூல் சிவனுரைத்த வாறுதானே.

(477-282)

சூரணம்:- 2

சிங்கியுடன் திப்பிலியும் விடையங் கூட்டி
தேனோடு குழைத்துமே குழந்தைக் கீய
இங்கிதமாய் கரகாச வாந்தியோடு
இன்பமுடன் தீருமின்னே சொல்லக் கேளு.

(476-130)

(கல்நார்) குளிகை:- 3

கன்னார் கருடபச்சை கானக மிளகு வேரும்
மன்னார்கேள் சந்தனமும் காணவே - காண்டாமிருகம்
கொம்பு மாகதான் தாளிவே றுதாண்ட
வசம்புதான் சமனாய்க் கொள்ளே.

கொள்ளவே கோதை முலைப்பாலில் நீதான்
கொள்ளுமள விட்டரைத்து மிளகு போலே
அள்ளவே யுண்டையொன்று வென்னீரில் கொள்ள
அகற்றுமே வந்தபிணி குழந்தைக்குத் தாக்குந்தானே.
மெள்ளவே சத்திலது வயிற்றுப் போக்கும்
மெத்தனவே காய்ச்சல் வெதுப்புடனே திட்டமுடன்
தீருமென்று சொன்னார் திருமலையில் வாழ்முனிவன்
பாருலகில் லெல்லோர்க்கும் பகர்.

(ஏடு. 601-14,15)

அத்தி (என்பு) சுரத்தின் குறிகுணம்:-

அத்தி சுரகுணஞ் சொல்லி
அனலே வெதும்பி முலையுண்ணா
புத்தி கலங்கு முள்ளுளையும்
போத வெள்ளோக் காளமிகும்
சக்தி எடுக்கும் நீர் சிவக்கும்
சாமந் தனிலே தான்காயும்
வற்றி வீங்கி யிருமல் சோகை
வருமே கடுப்பு சுரந்தானே.

(476-127), (477-293,294)

நெய்:- 1

சாத்திரபேதி கோஷ்ட்ட மதுரசந்தன மேலஞ் சீரகமுந் தானுங்
கொண்ணைக்காயின் பிசினுஞ் சங்கார் சங்கமுருத்திராட்சம்
காத்திரமான கலைக்கொம்பு நெல்லிக்காய் வற்றல் செண்பகமுங்
கொத்தமல்லி விலாம்பிச்சை காசுக்காசம் வரைத்து
பாத்திரந்தன்னில் நெய்யொருநாழி பருத்திக் காய்ச்சாறுடனே
பகருங் காளிச்சார் வகைகாலும் பதமாய் வடிகளுரைத்

தோத்திரம்பண்ணி பலங்கால் சக்கரைத் தூவிக் கரண்டியிடத்
தோன்றுமஸ்திசுரமும் வறக்கணமுஞ் சொல்லாம லோடிடுமே.

(ஏடு.941-28), (476-127), (477-294)

(வேளையாதி) எண்ணெய்:-

நறுவேளை நாய்வேளை நற்செம் பருத்தி
சிறுமணித்தக் காளிசெவ் வவரை - சிறிய
தகரை பழம்பாசி சமுத்திரா சோகி
பகரம்மான் பச்சரிசி பார்.

பாரில் விளாவடிம்பு பட்டை யிலைவேலி
சேரும் பருத்தியிண்டு செம்முள்ளி - காரி
துளபந் தராயினிலை சொல்லும் பருத்தி
பளையாய் பாவட்டை பரி.

பரிவாம் பொடுதலையும் பச்சை கழற்சி
நரிப்பயறு புள்ளடியும் நாடி - அரிதான
கோழியவரை சுரைக்கொன்றை யின்பட்டை
வாழ்முருங்கை யும்மகத் திவை.

கற்றாழஞ் சோறும் கணப்பூண்டு மீருள்ளி
சிற்றாகும் பீர்க்கு சிறுசன்னி - பற்றான
கோடகத் தின்சாலை கொண்டு தனிச் சாறுசமன்
சாடிதனில் வார்ப்பதக்கு தான்.

ஆமணக் கெண்ணை யளந்தே குறுணிவிட்டு
தாமணக்கும் வெயிலிலே தான் வைத்தல் - ஓமமுடன்
சாதிக்காய் சாதிபத்திரி தன்வசம்பு கொத்துமல்லி
கோதில்லா வெள்ளுள்ளி கூட்டு.

பஞ்ச திரவியமும் பண்பான திப்பிலியும்
எஞ்சா வராக னிரண்டாகும் - அஞ்சா
கரைத்துக் கரைத்துமெழு கானபதம் பார்த்தே
குறைந்தபடி யிறுத்துட் கொள்.

உள்ளேதான் கொள்வ தொருகரண்டி யெண்ணெயாம்
விள்ளாத வாமம் விழுவிக்கும் - மெள்ள மெள்ளப்
பேராமம் அத்திசுரம் போக்கு மிதற்குநல்ல
சீரான பத்தியமே செய்.

(477-285)

அனல்சுரக்குணம்:-

போமென்ற அனல்சுரத்தின் குணமே தென்றால்
 பொல்லாத கழிச்சலது அனல்போல மீறும்
நாமென்ற காச்சல் வெக்கை வாய்ப்புண் ணாகும்
 நாயகனே கபமுண்டாய் நீர்சி வக்கும்
ஆமென்ற பேதியது வறண்டு வீழும்
 அப்பனே மலத்துவாரம் புண்ணாய்க் காணும்
தாமென்ற இன்னோய்க்குக் கிசாயம் சொல்வேன்
 சத்தியமாய்ப் பாலருக்குத் தயவாய்த் தானே.''

குடிநீர்:-

தயவான நறுநன்றி கொளிஞ்சி வேரும்
 தாட்டிகமாய்ப் படர்தாளிக் கிழங்கினோடு
மயமான செங்கழுநீர்க் கிழங்கு தானும்
 மைந்தனே அதிமதுரம் தேவ தாரம்
கயமான ஈருள்ளி சீரகங்க ளிரண்டும்
 கடுகுரோ கணியிஞ்சி கண்டு வாங்கி
நயமான வகை சரியாய்க் கஷாயம் செய்து
 நாயகனே கொடுத்துவிடு நலமுண் டாமே''

(கை.பி.98-76)

(வில்வாதி) மாத்திரை:-

நவின்றசுர வில்வாதிக் குளிகை கேளு
 நற்பச்சைப் பூரங்கால் இலவங் கங்கால்
நவின்றிட்டோம் வால்மிளகு சிறுநா கப்பூ
 நன்றாக ரோகணியும் ஏலம் மாஞ்சில்
நவின்றிற் றோட்டம் சுக்குமே சீர கங்கால்
 நலினசெவ் வாலம் பருப்பு நிகர்க்கு ஒன்று
நவின்றிட்டோம் பொற்றலையின் சாற்றா லாட்டி
 நவநாளுஞ் சென்றபின்பு மிளகு போலே

மிளகுபோ லுண்டைசெய்து செப்பில் வைத்து
 விளங்குகிற இஞ்சித்தேன் முலைப்பால் தன்னில்
இளகுபோல் இழைத்துண்ண என்ன சொல்வேன்
 இனியநாட் சென்றசுர மாந்தம் போகும்
களகுபோல் வாதபித்த சேஷ்ம மூன்றுங்
 கடந்தசுரங் கனல்சுரமுங் கழன்று ஓடு

மளகுபோல் இந்தமுறை இந்த போக்கு
மகத்தான நந்தீசர் செயலாங் காணே.

(572-38)

அன்னபானாதிச்சுரத்தின் குறிகுணம்:-

ஆர்க்குங் காயும் அன்ப னாதி
ஆன சுரத்தை அறியக்கேள்
வேர்க்கும் வெதுப்புங் கண்சி வக்கும்
வென்னீர் வேண்டும் பலகாலும்
பார்க்கப் பயமா யிருக்குதெனப்
பதறி அலறிக் கதறியழும்
சேர்க்க வயிறு சிக்கிவிடுந்
தெருவிற் பிறப்பட் டோடிடுமே.

(476-126), (477-295)

(கற்றாழை) எண்ணெய்:-

கற்றாளஞ் சோறுகடு களிப்பாக் கோடு
கருவேலும் பிரமியுடன் சுக்குங் கூட்டிப்
பற்றாமல் நாலிலொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
பதறாம லெண்ணெயுடன் பருகு வீரேல்
வற்றாத கடல்வற்றும் சீதம் போகும்
வலிவான குன்மமென் சுரமிரும லும்போம்
பெற்றாலோ வன்பனோடுஞ் சீத பேதி
பேருலகில் நாடாது பேசு வீரே.

(477-295), (476-126,127)

ஆமசுரக் குறிகுணம்:-

ஆமசுரத்தின் குணங்கேளா யதிக மாக வெதும்பாது
சாமந்தோரும் வெதுப்புவிக்குந் தண்ணீ ருழலை யுண்டாக்கும்
சேமமாக வுடம்பிளைக்கும் சீறி யழுதும் பசியில்லை
நாமங் காரி யுடலோயும் நடுங்கி யிருக்குங் கண்டாயே.

ஆமசுரத்தின் மிகுகுணங்கே ளடைவாய்க் கைகால் குளிர்ந்துவிடும்
சாமந்தோறு மெழுந்தலறும் தாயின் முலைப்பா லருந்தாது
தூமவாயி லெடுத்துவிடுஞ் சோரா திருமும் வாயரற்றும்
காமனம்பின் கயற்கண்ணாளே கண்தலை மிகநோய் கண்டாயே.

(477-282)

தீராத ஆமசுரக் குறிகுணம்:-

பிறகு மதலை தலைநடுக்கும்
தலையது சுழற்றல் காணும்
வேகமாய் சுரமுஞ் சற்றே
விட்டுவிட் டேகுங் காயும்
வாகுசேர் கண்ணுந் தாழ்ந்து
வாயுடன் நாஉ லர்ந்து
சோகமும் வயிற்றில் சோயும்
சோர்ந்து கைகால் தண்ணீரே.

(476-126), (477-285)

(வேளையாதி) எண்ணெய்:-

அத்தி சுரத்திற் தரப்பட்ட வேளையாதி எண்ணெய் காண்க.

(உள்ளி) உருண்டை:- 1

உள்ளியைத் தயிலம் வாங்கி
யொக்கவே தாராவின் வேரும்
தள்ளிய பொன்னாங் காணி
சாரணை வேருங் கூட்டி
ஒள்ளிய மாய ரைத்தங்
குண்டையோர் கழஞ்ச தாக்கிக்
கொள்ளவே யாம மற்ற
குளிர்ச்சுரங் கடுப்பும் போமே.

(477-284)

(ஏலாதி) மாத்திரை:- 2

நல்குவீர் நல்லேலம் கிராம்பு முத்தம்
நல்மதுரம் இருவேலி கடுகு சுக்கு
அல்குவீர் மதுரம் ரோசினை நன்னாரி
அரியநிலப் பனையின்வேர் தாளி கந்தான்
வல்குவீர் சடாமாஞ்சில் சந்தனத் தூள்
வகையிலுப்பைப் பூவுடனே தேவ தாரம்
மல்குவீர் திப்பிலி ரோகணி வகைக்கு
வரிசையாய்க் கால்கழஞ்சு நிறுத்துக் கொள்ளே.

நிறுத்துமே கல்வத்தில் போட்ட பின்பு
நிலையான செவ்விளநீர் தன்னை வார்த்து
வறுத்துமே இருசாமம் விடாமல் ஆட்டி
வழிமைபோல் ஆகுமிந்த வரிசை பாரு
குறித்துமே முலைப்பாலால் சாம மிரண்டு
கூசாமல் அரைத்துமே வழித்தெ டுத்து
பருத்தகுன்றி யளவாக உண்டை செய்து
பஷமொன்று நிழல்உலர்த்தி பதனம் பண்ணே.

பதனமாய் முலைப்பாலில் உண்டை ஈய
பறக்குமே பழஞ்சுரம் விடாத காய்ச்சல்
விதனமாய் அம்மையார்க் கூந்தல் கொண்டு
விருப்பமாய்க் கியாழமிட்டு அதனில் ஈய
மதனமந்த பதின்மூன்று சன்னி யோடு
மகத்தான விஷதோஷங் கெதிகெட் டோடும்
அதனமாய் ஆமசுரம் கணைச்சு ரங்கள்
அச்சமுற் றகலும் யேலாதி என்றே.

(476-129), (477-286)

உடம்பு வலிக் காய்ச்சல் குறிகுணம்:-

உதட்டைக் கடிக்குமுறுகை முட்டி யாக்கும்
மிதப்பநட்ட கண்ணாய் விழிக்கும் - பதட்ட
குசத்தைக் கடித்திழுக்கும் கூறுடம்பு நோயாம்
நிசத்தை விளக்கினோம் நேர்.

(477-294)

(சாணாக்கிப் பிட்டவியற்) சாறு

சீதேவிப் பூடிடித்துச் செய்யபிட்டா யவித்தே
ஓதேயச் சாற்றிலு ரோகணியை - மாதே
அரைத்துநீ வெள்ளாட்டுப் பாலிற் புகட்டப்
புரைத்துடம்பு காய்ச்சனோய் போம்.

(477-295)

உட்சுரக்குறிகுணம்:-

மலமுஞ் சலமு மிகத்தீந்து மார்பி லதிக சுரங்காயும்
மலமும் வயிறு மிகவெரியும் வளமாய்த் தலையு மிக மயக்கம்
சலமும் வற்றித் தான்குறையும் சண்டா ளம்போ லுட்காய்ச்சல்
தலமாம் பனிரண் டாண்டுமட்டுந் தனதாய் வருத்துங் கணமிதுவே.

(477-291)

(புளியாதி யீர்க்குக்) கற்கம்:-

உற்றபுளி வேம்புமா நெல்லிநா ரத்தையும்
ஓதிநுணா தகரை நிம்பம்
ஓதுவகை யீர்க்கில் வல்லாரைப் பழம்பாசி
வுசித புள்ளடி முத்தமும்
பத்திரு மீருள்ளி வண்ணத்தி யிருமுட்டி
பகர்மி எகுதக் காளியும்
பகர்முசுக்கை காந்தி நரிப்பயற் றங்கொடி
பற்பட மூக்கொற் றியும்
சத்திவளர் முனியம்மன் பச்சரிசி சீந்திலுஞ்
சமனாக விருசீ ரகம்
தகர்சுக்கு வெந்தய மரைப்பலம தாய்வறுத்
தாதண்டைக் கியாழ கற்கம்
வைத்தகோ ரோசனை பய்யரா வதிமதுரம்
வரிக்கலைக் கொம்பு கோட்டம்
வாகாக வொவ்வொரு பணவெடைய தாகவே
வளமாக நெகிழ வரையே.

அரைத்ததைக் குழவிக் கீய
வானதோ ரிரண்டு நேரம்
உரைத்திடும் பத்து நாள்தா
னுட்சுர முள்ள வெல்லாம்
கரைத்திடுங் கணமும் பொல்லாக்
காய்ச்சலுங் கணமும் தீரும்
வரைத்திடுஞ் சுரம சக்கை
மாறுமென் றருள்செய் தாரே.

(477-288)

(சங்கன்) நெய்:- 1

சங்குடனே செருப்படையுற் துளசி பூலா
தருகழற்சி நரிப்பயற்றஞ் சாறு வெவ்வே
றங்கதொரு படியதனி லப்பைக் கொவ்வை
அடர்நெருஞ்சில் தூதுவளை வேர்கி ராம்பும்
இங்கிதபிப் பிலிசாதிக் காயின் பூறல்
இயல்வசம் புள்ளிசுக்கு கடுக்காய் தேக்கு
துங்கநெய்தான் படியிலெரித் தருந்திப் பூசச்
சொல்லரிது கணங்களுட் சுரமும் போமே.

(477-289)

(கலியாண பூசணிக்காய்) நெய்:- 2

சீராரும் பூசணிச் சாற்றிள நீருடன்
செவ்வாவி நெய்பாலு மாய்
திகழுஞ் சதாவேரியின் கிழங்கி வையுடன்
செவ்வகைக் கோர்நாழி யாய்க்

காராரு ரோகணிச் சண்பகம் வெட்டிவேர்
கடற்பச்சை யதிமதுரமும்
காடுவள ரிலவங்க மிருமட்டி திப்பிலி
கருதுசந்தன மேலமும்

பாராரி லாமிச்ச மாவிதைக் கோட்டமும்
பருவிளாம் பிசினி யுடனே
பண்பிலவு தன்பிசின் வில்வப் பிசினொடு
பகருமொரு பொன்முசுட்டை

நேராரு மோர்வகைக் காசெடை நிதானமாய்
நிலவரம தாயரைத்து
நேசமுட னெய்யிற் கலந்தெரி வடித்ததை
நித்தங் கொடுத்து விடுமே.

விடுமே கணக்காய்ச்சல் மேல்வெதுப்புட் காய்ச்சல்
தடுமே விருமலுடன் சாந்தங் - கொடுமேதான்
பூசணிக்காய் நெய்தனக்குப் பூரிக்கு மேயுடலம்
காசனியி லுள்ளவர்க்குக் காண்.

(ஏடு. 362-37,38), (477-289)

(தகரை) எண்ணெய்:- 1

வெந்தவித் தூற்றுகின்ற விளக்கெண்ணெய் நாழிதன்னில்
அந்தந்த கரையின்சாறும் அதுபடி யேதா னொன்று
தந்தநா யுருவிவேரும் தைவேளை நாயின் வேளை
முந்தவே கொழுஞ்சிவேரும் மூக்கரைச்சா ரணையின் வேரே.

வகைக்கொரு வெலுமிச் சங்காய் அளவுசாந் தரைத்துக் கொண்டும்
பகைப்பிலா வசம்பு மோமம் பண்புகத் தூரி மஞ்சள்
மிதப்புடன் சரிவி ளங்கம் மிகுவகைக் கரை யதாகத்
திகைத்தவெள் குள்ளிதானுஞ் சேர்ந்திரு பங்கு கூட்டே.

கருத்தசீ ரகமும் வெந்தயங் கடுகுரோ கணிவ கைக்கு
நிறுத்தொக்க வொருபங் காக நீர்விட்டுத் தான ரைத்து

மறுத்தசட் டியிற்க லந்து வகையுட னொன்றா யூற்றிப்
பெருத்திடு மெழுகு பாகம் பிழையற வடித்துக் கொள்ளே.

பிள்ளைக்குத் தக்க எண்ணெய் தானது புகட்ட இந்தப்
பிள்ளைத்தாய் தனக்கே உப்புக் கைப்புடன் தவிர்த்திட் டாக்கால்
தெள்ளிய திட்டு மாந்தம் சீரிய சுழிக ணந்தான்
நள்ளிரு வாயுட் காய்ச்சல் நளிர்மாந்தம் புரளி போமே.

(477-78,79)

(குருவிச்சி என்ற புல்லுருவி) எண்ணெய்:- 2

குருவிச் சிலையுங் கருப்புட்டி கூட வேயரைத் தெண்ணையிலே
மருவிக் குழப்பி விழுங்கவுளை மாந்த முட்சுர மெலும்பு ருக்கி
உருவித் தீரும் சொன்னபடி யுண்மை யிதுதான் கண்டாயே
கருவி நிகரள கத்தாளே கால கால னடிபணியே.

(477-80)

(கற்றாழை) எண்ணெய்:- 3

கற்றாழஞ் சாறிளநீ ராவின் பாலும்
கருதுவகை படியொன்றா யளந்து கொண்டு
பற்றாஞ்சிற் றாமணக்கி னெண்ணெய் மூன்று
படியளந்தொன் றாய்க்கலந்து சொல்லக் கேளாய்
சற்றான கணப்பூண்டு கலைமான் கொம்பு
சந்தனமும் கச்சபத்தி னோடிந் நாலும்
மற்றான வகைக்குப்பல மொன்ற தாக
மருவிளநீர் விட்டரைத்து மருந்திற் சேரே.

சேர்க்கவே சண்கப்பூ சாதிக் காயும்
சீரகமு மதிமதுரம் சிறுநா கப்பூ
வார்க்கவே கரியசீ ரகம்வ கைக்கு
வளமான கால்பலமாய் நிறுத்துக் கொண்டு
பார்க்கவே சாதிபத்திரி பலம ரைக்கால்
பகர்கொத்து மல்லிபல மரைய தாக
மார்க்கமாய்ப் பசுவின்பா லாட்டி முன்னர்
மருந்தில்சேர்த் துக்கலக்கிக் காய்ச்சிக் கொள்ளே.

காய்ச்சியே மெழுகுபதந் தனில்வ டித்துக்
காலையிலு மாலையிலுந் துட்டெடை யேவாரு

பாய்ச்சியின் வண்ணமெழு நாளு மீந்தால்
படர்மந்த கணஞ்சவலை குளியன் தோடம்
ஆய்ச்சியே வரட்கணமு முடம்பி ளைத்தல்
அச்சரத்தில் காய்ச்சலுட னுட்காய்ச் சற்போம்
ஓய்ச்சியே சிறுவருக்கு வந்த நோய்கள்
உண்மையுடன் தீருமது திண்ணந் தானே.

(477-291,292)

(இளநீர்) எண்ணெய்:- 4

முனிவோர்சிற் றாமணக்கு முதலிளநீர் தனில வித்து
செனிவாகு மெண்ணெய்படி சேர்பசும்பா லிரண்டுபடி
தனியா குமரிநீர் தானரைப் படியாக
தொனியாய் மெழுகுபதஞ் சொல்லும் படிக்காய்ச்சே.

காய்ச்சி யிறுத்தெண்ணையிற் கற்கமினி சீரகமும்
மாசிக்காய் கோட்ட மதுரங்கி ராம்பேலம்
காழ்ச்சியில்லா சுக்குசரி வகைக்குக் காசெடையாய்
கூச்சமின்றி வெந்தயமும் கூறும்பலங் காலே.

காணவே யிவையெல்லாம் வறுத்தி டித்து
கற்கமிதை யெண்ணெயிலே கலந்த பின்பு
பூணவே சூரியன்றன் புடத்தில் வைத்துப்
பிள்ளைதனக் கீந்திடவே போந்நோ யெல்லாம்
தோணவே காய்ச்சலுட் காய்ச்சல் மாந்தம்
தோன்றுகின்ற வுடம்புவற்றல் வகைகள் யாவும்
நாணவே வாய்வரண்டு குலைந டுங்கி
நாடாதென் றேபெரியோர் நவின்றிட் டாரே.

(477-292)

எண்ணெய்:- 5

முனிவோர் சித்தா மணக்கு
முதலிளநீர் தனிலே வெந்து
செனிவரகு எண்ணெய் படி
சேர்ந்தபால் படியி ரண்டு
தனில்வாங் குமரி யின்னீர்
தனில ரைப்படி யாக
துணிவாய் மெழுகு பதஞ்
சொல்லு படிக் காய்ச்சி

காய்ச்சி யிறுத்தெண் ணையினில்
　　கற்கமினிச் சீரகமு
மாச்சிக் கரைய கோஷ்ட்டம்
　　மதுரங் கிராம்பு யேலம்
தாச்சி வாசுக் குசரி
　　வகைக்கோர் சாசி டைதான்
கூச்ச மன்ற வெந்தயமும்
　　கூறும் பலங்காணும்

காண வறுத்தி டித்து
　　கலந்தி டுமேயெண் ணெயினில்
வேண பாரு போதருந்த
　　லெக்காச் சல்உள் காச்சல்
காண உடம்பி ளைத்தால்
　　நல்ல கண மாந்தமுடன்
மாண மலத்தென்று சொல்லி
　　வாரா தேடிப் பாராதே.

(ஏடு. 941-27)

கணசுரத்தின் குறிகுணம்:-

உந்திதனைப் பற்றி யீரளவும் புண்ணாய்
　　ஒருக்காலே சுவாசந்தான் உண்டாம் மெத்த
வந்துசுரம் பூசினாற் போலே காய்ந்து
　　வருத்தமாய் திட்டுமுட்டாய் மயக்கங் காணும்
இந்தவகை கணக்காய்ச்ச லென்றே நாளும்
　　இயம்புவார் புவிமீது நூல்வல் லோர்கள்
சுந்தரியா ளுமைபாகன் முனிக்கு சொன்ன
　　சூட்சமிது தானறிவீ ருண்மை தானே.

(ஏடு.362-28), (476-125), (477-287)

சாந்தமாம் கணைச்சுரத்தின் குணத்தைக் கேளு
　　தயவாகக் காய்ச்சலது மிகவுங் காணும்
சாந்தமாம் ஒன்றைவிட்டு ஒருநாள் வீங்கும்
　　தயவாக ஒன்றைவிட் டொருநாள் வாடும்
சாந்தமாம் வாய்ப்புண்ணான் சுவாச முட்டும்
　　தயவாக அன்னமது யிறங்கொட் டாது
சாந்தமாம் வயிறுமந்தம் மலம்போ காது
　　தயவாகக் கணசுரத்தின் குணமி தாமே.

(கை.பி.98-90)

(பழம்பாசிக்) குடிநீர்:- 2

பழம்பாசி கணப்பூண்டு வெதுப்ப டக்கி
பசியநல்ல வல்லாரை தகரை கூட்டி
குழம்பாகக் காய்ச்சியநீர் தன்னி லேதான்
கூட்டியிருஞ் சீரகம்ரோ சனையைப் போட்டு
விழும்பாலர் கணந்தனக்கு விரும்பிக் கொள்ள
விட்டோடுங் கணமெல்லாம் வெதுப்பு மாறும்
கெழும்பாலர் தங்களுக்கே யேலா தென்று
கேவலமா யுரைக்கவினி கேளுந் தானே.

(477-288)

குடிநீர்:- 3

வில்லைப் பத்திரி துத்திவெங் காயமும்
நல்ல வெந்தயமொக்க நன்றாய் - வரு
தல்ல நீரினில்க் காய்ச்சிபின் சீரகஞ்
சொல்லு கற்கங்குடி கண்ணுங் சோடுமே.

(362-29)

குடிநீர்:- 4

குணமான நிம்பரநட்டு மருதம் பட்டை
கூவிளத்தி னிலையுடனே தவரை தானும்
குணமான சித்திரப்பால் கொழிஞ்சி வேரும்
மைந்தனே சிறுவிளா விஷ்ணு கிராந்தி
கணமான நன்னாரி முத்தக் காசு
கருவான நெல்லியென்ற பருத்தி தானும்
பண்பான சீந்திலுடன் பேய்ப்பு டோலும்
பங்கான வில்லகத்தி னோடும் கூட்டே.

கூட்டியே கோட்டமுடன் மாயக் காயும்
கொத்தமல்லி வெந்தயமும் நறுக்கு மூலம்
ஆட்டியே அதிமதுரம் பற்ப டாகம்
அக்கிரா சிறுதேக்கு ஓமந் தானும்
நாட்டியே முன்மருந்து பிடிஒன் றாக
நலமாகக் கடைமருந்து கழஞ்சு மூன்றாய்
பூட்டியே கஷாயமிட்டு மூன்று நாளும்
புகழாகக் கொடுத்திடவே புனித மாமே.

(கை.பி.98-80,81)

(அதிமதுரச்) சூரணம்:-

அதிமதுர மேலமுடன் லவங்கப் பட்டை
யானசண் பகமொக்கு கோட்டந் தானும்
விதியுடனே சுக்குஞ் சீரகமு முத்தம்
விதவிதமாய் வறுத்திடித்துப் பொடித்துக் கொண்டு
சதிருடனே சர்க்கரையுங் கூடச் சேர்த்துச்
சகலபிள்ளை யருந்திடவே சபல மாகும்
மதிநுதல்சேர் பெண்ணரசே கணமும் போகும்
மாறிவருங் காய்ச்சலெலா மாறுந் தானே.

(477-289)

(புள்ளடி) எண்ணெய்:- 1

புள்ளடி செப்பு நெருஞ்சில் வல்லாரை பூலா வுடனே
தெள்ளடிக் கோழி யவரையின் சாறொடு சேரொ ருக்கால்
தள்ளடி யாமணக் கெண்ணெயும் சேர்குரோ சானியுடன்
துள்ளடி ரோகணி சூழும் வெளிச்சையுங் சொல்லி டுமே.

சொல்விடு மால்புல் லுருவியு மாஞ்சியுஞ் சொன்ன வகை
எல்லை இரண்டு பணவெடை யாக விதில்க லந்து
துள்ளவெ ரித்துப் பதமா யிறக்கி நல்துட் டளவாய்
பிள்ளைகட் கீயக் கணங்களும் காய்ச்சலும் போய்விடுமே.

(ஏடு.362-60), (477-290)

(ஆவாரை) எண்ணெய்:- 2

ஆவாரை வேரோ டழகுசரக் கொன்றைவேர்
காவாத விட்ணுக் கரந்தைவேர் - பூவா
கலக்க மில்லாமல் கமழ்தந்து வீசும்
நிலக்குமிழின் வேரதனை நேர்

வேறுசிறு வம்மான் பச்சரிசி யேலம்
விரைசீர மானைக்கால் வணங்கிப் பூடு
தாருடனே வகைக்குவரைப் பலமும் வாங்கி
தனையாஞ் சிற்றேரண்டத் தெண்ணெய் யொன்றில்
கூருடனே வாவின்பால் விட்ட ரைத்துக்
குறிசொல்வேன் கலக்கியெண்ணை யெரித்து வாங்கி
சீருடனே மண்டலங்கால் கரண்டி வீதம்
சிறுவிச்சா பத்தியமாய்க் கொள்ளச் சொல்லே.

(477-290,291)

கொள்ளவே கணப்பாண்டு கணச்சு ரங்கள்
கொடிதான வத்திவெட்டை யிருமல் ரத்தம்
கொள்ளவே பறந்தோடு மெண்ணெய் மார்க்கம்
குறியாகச் சிறுபிள்ளை கழிச்சல் தோடம்
கொள்ளவே யுப்பிலியின் பூண்டு வாங்கிக்
குளமாக நறுக்கியா நெய்யுஞ் சேர்த்துக்
கொள்ளவே ரவிகாயச் சாமம் நாலு
குருவருளால் பிள்ளைதனக் கீய்ந்தி டாயே

(477-291)

(ஏலாதி) மாத்திரை:- 1

ஏலாதி மாசிக்காய் திப்பிலியும் ஏலம்
இனியகோ ரோசினையும் கோஷ்ட்ட மாஞ்சில்
ஏலாதி சீரகந்தான் இரண்டக் கராகாரம்
இனத்தோடே கால்பலமாய் நிறுத்தி வாங்கி
ஏலாதி கல்வத்திட்டு முலைப்பால் வார்த்து
இருசாமந் தானரைத்து உண்டை செய்து
ஏலாதி கணசுரங்கள் கண்ட பேர்க்கு
எடுத்துநீ முலைப்பாலில் ஈந்தி டாயே.

(572-36), (477-291)

உருண்டை:- 3

தாமேரசச் செந்தூரம் திரிப லாதி
தருகுங்கு மப்பூ கஸ்தூரி ஏலம்
வாமேதான் திரிகடுகு ரோசி னைத்தான்
வளமாகப் பலங்காலாய் நிறுத்துக் கொண்டு
காமேதான் கிராம்பெடையும் விராக னொன்று
கருநொச்சிச் சாறுவிட்டு சாமம் ஆட்டி
நாமே சிறு பயறுபோல் உண்டை செய்து
நலத்துளசிச் சாற்றிவிட நயந்துக் கேளே

நயந்துகேள் கணமாந்தம கணசு ரங்கள்
நற்பெரிய வயிறுப்பல் மாந்தம் போகும்
நயத்துகேள் வாந்தி வயிற்றுப்பி சங்கள்
நாடாது இவ்வுண்டை நளின மெத்த
நயந்தகேள் என்குருவின் செயலால் சொன்னேன்
நமசிவய மென்றருளை நாவில் போற்று

நயந்துகேள் ரிஷியென்றும் பேருண் டாகி
நாம்கண்ட பலனெல்லாம் நவின்றிட் டோமே.
(572-37,38), (476-123)

மாத்திரை:- 4

ஆமசுரத்தில் வரும் ஏலாதி மாத்திரை காண்க. அதுவே இதற்கும் பொருந்தும்.

ஊண் சுரம்:-

அதிகமாய் சரீரமெல்லா மனல்போலச் சுரமுங் காயும்
சதிரமெல் லாந டுக்கும் தான்மூச்சு மெத்த வோடும்
உதிரம்போ யுடல்வெ ளுத்தேயுருகியே கருகு மேனி
மதியுமே மயங்கி மூர்ச்சை மயிர்கூச்ச மாங்கிச வெப்பே.
(477-293), (476-127)

(பச்சைக் கற்பூர) மாத்திரை:-

கற்பூரம் கெந்திஇந்து லவங்கத் தோடு
கனமான சாதிக்காய் சாதி பத்ரி
செப்பமுடன் ஒருகழஞ்சு தேசிச் சாற்றில்
திறமாக ஒருசாமம் அரைத்துக் கொண்டு
ஒப்புடனே உழுந்தளவு உண்டை செய்து
உகந்திஞ்சி சர்க்கரையிற் சுக்கில் ஊட்ட
நட்புடனே எச்சுரமு மூன்றே முக்கால்
நாழிகையில் விட்டகலும் நாட்செல் லாதே.

(476-127) (477-293).

சிலேற்பன சுரக்குணம்:-

சொன்னார் சிலேற்ப சுரம துதான்
தோன்றும்குளிரும் பின்சுரமாய்
மன்னா ரிருமு காச்சலுமாய்
மலமும் பிடித்து வயிறூதும்
குன்னார் விட்டு விட்டேனே
குளிர்ந்து கால்கை அதைத்துவரும்
இன்னா ரிந்தக்குணம் கண்டால்
இதுபோம் நாளும்பதி னேழே.

(கை.பி.98-163)

சீதசுரக் குறிகுணம்:-

சீதசுர தாகமது சில்லென்னல் காய்தல்கண்
போத மிகச்செருகல் புன்தாகம் - கோதின்
கடிவிடம் போலுடலம் காண்ட லயர்தல்
கடிமலர்க் கூந்தலாய் காண்.

(477-286)

மீளாத ஐயசுரத்தின் குணம்:-

ஐயசுரத்தின் குணங் கேளு
அகடு பொருமிகண் வெளுக்கும்
கையுங்காலும் சோர்ந்து வீழும்
கண்கள் உள்ளே தான் வீழும்
தொய்யசுரமு விடா ததுவும்
சொல்லும் தோஷம் ஆனாற்போல்
மெய்யு நாக்குமே வரண்டு
விக்க லெடுக்க மீளாதே.

மெய்யில் வந்தினைஞ் சுரந்தான்
விட்டு விட்டே வெதும்பி
கையுடன் கால்வெ தும்பி
கன்னங்காயும் நெஞ்சி டிக்கும்
உய்யும் உழலை வாந்தியுண்டாம்
ஓடி ஓடிக் கட்டுமது
அய்யம்பிழைப்ப தரிதுகண்டாய்
அதிக மாகுஞ்சுரந் தானே.

(476-131), (477-280)

குடிநீர்:- 6

நாட்டு மூலம் தூ துவளை
நல்ல கண்டங் கத்திரிவேர்
கோட்டஞ் சிங்கி முசுக்கைமுள்ளி
கொடிய அரத்தை திரிகடுகு
ஏட்டின் படியே கியாழம்வைத்
திதமாய் ஆறுபோ தருந்த
ஓட்ட மோடுஞ் சுரமிருமல்
(ஒடுங்கி) ஓடும்சீத சுரம் போமே.

(476-128), (477-286).

(வழுதலைச்) சூரணம்:- 2

வழுதலை சீந்தில் தண்டு
தாமரை வளையத் தோடு
முழுதுள சுக்கு முத்தக்
காசுடன் ஒன்ற தாகப்
பொழுதுடன் கூட்டி மேலே
பொடிதூவிக் கொள்வீ ராகில்
எழுபது லட்ச சீத
சுரமது இல்லை தானே.

(476-128), (477-286)

மருந்து:-

அத்திக்காயின் சாறோமம் அறியும் எருமைத் தயிருடனே
பத்தியாகக் கலந்த ருந்த பண்பாய் பிறந்த குழந்தைகட்குத்
தத்திக்கழியும் அதிசாரம் தானே அகலுங் கபசுரமும்
மெத்த பயந்துவிட்டும் மீன்போற் குவளைப் பெண்மயிலே.

(476-148), (477-331)

குளிர்சுரக் குறிகுணம்:-

குளிர்ச்சுரமே முன்குளிர் கடினபின் காய்ச்சல்
நளிரா உடல்வளைதல் நாவுங் - களியின்றி
நீர்வறண்டு வேட்கையுறல் நேருமுடன் மேற்றோலில்
சார்ந்தமை யிண்டென்று சாற்று.

(477-286)

(பச்சைக் கற்பூர) மாத்திரை:- 1

பச்சைக் கற்பூர ந்தான்
பூபட்டைச் சாதிக்காய் வகைக்கு
மச்சைக் கழஞ்சு இரண்டாக
வாளம் ஆறுகழஞ் சுடனே
அச்சக் குமரிச்சா றதனால்
அரைத்து உழுந்து பிரமாணம்
மச்சத் துடனே உலர வைத்து
சர்க்கரை தனிலோர் குளிகையிடு

இடநாழிகை மூன்றே முக்கால்
　　இவ்வி ரோசனந் தானாகும்
படுமே சுரமுந் தான் தீரும்
　　பண்பாய் வந்த குளிருக்கு
தொடுமே குப்பை மேனியிலை
　　சொற்கொடி வேலிமிள கரைத்து
கொடுமே விழுது சரிகூட்டிக்
　　குளிர்வரும் போது குணமாமே.

(477-278, 279)

உருண்டை:- 5

உள்ளியைத் தைலம் வாங்கி யொக்கவே தராவின் வேரும்
தள்ளிய பொன்னாங் காணி சாரணை வேருங் கூட்டி
ஒள்ளிய மாய ரைத்தங் குண்டையோர் கழஞ்ச தாக்கிக்
கொள்ளவே யாம மற்ற குளிர்சுரங் கடுப்பும போமே.

(477-284)

குளிர் சன்னி சுரத்திற்கு மாத்திரை:-

மஞ்சளும் சாதிக்காயும் வருந்திரி கடுகுங் கிராம்பு
மிஞ்சிய கடுகு ரோகணி மிகுமர மஞ்சள் நாழி
அஞ்சிய நிம்பம் ஓர்நாள் சாறுவார்த் தரைத்து ருட்டி
கொஞ்சிய ராமபாணங் குளிர்சன்னி சுரங்கள் போமே.

(476-135)

(ஏலாதி) மாத்திரை:-

ஈந்திட்டால் ஏலாதி உண்டை கேளு
　　இனிதான திரிகடுகு சாதிக் காயும்
ஈந்திட்ட கிராம்பேலம் ரோணி மஞ்சள்
　　எழில்நாபி சரக்குவகைக் கழஞ்ச தாக
ஈந்திட்ட கல்வத்திற் பொடியாய்ச் செய்து
　　இருசாமம் பழச்சாறு தன்னா லாட்டி
ஈந்திட்டப் பயற்றளவு உண்டை செய்து
　　இனிமாசிப் பத்திரியின் கியாழத் தூட்டே.

(572-36), 9476-135)

குளிர் தொந்த சுரத்திற்குக் கஸ்தூரி எண்ணெய்:-

ஏகநாயகன்றன் இணையடியைப் போற்றி செய்து
வாகுடனே எண்ணெய் வசனிப்பேன் - யோகமுள்ள
காரோசினையும் கோஷ்ட்டம் அதிம துரம்
சீரந்திப்பிலி தேவ தாரமுடன் - பேரான
சந்தனமும் ஏலம் தன்னுடனே மாசிக்காய்
வெந்தயமும் சுக்கு வெள்ளுள்ளி - அந்தமுள்ள
பேரான கஸ்தூரிப் பெருவசம்பு ரோகணியும்
பாரமுள்ள மூங்கில் பச்சைத்தோல் சீராய்
வகைக்கு விராகனெடை வாடநிறுத்து வறுத்துத்
தொகையாய் அரைப்பதற்கு சொல்லக்கேள் - தகமையுடன்
எருமுட்டைப் பீநாறி இசைந்ததொருச் சாற்றில்
வருந்தி அரைத்து வழித்ததனைத் திரும்ப
விளக்கெண்ணை ஓர்படியும் விட்டெரித்துத் தான்இருத்து
மலைக்காமல் நோய்க்கெல்லாம் வைப்பாய்க் கலக்கமற
பிள்ளைப் பிணிக்குப் பேராகத்தான் கொடுக்க
ள்ளநோய்ப் போகும் ஓதக்கேள் கள்ள
மாந்தவயிற் றுப்பிசமும் வடிவாய் இளந்ததேகம்
சோர்ந்து கிடக்கும் சுழிமாந்தம் கார்ந்தும்
நாவரட்சிக் கணமும் நளிர்காய்ச்சலுங் குளிரும்
தூவியிரத்த தொந்தசுர மேவும்
முக்கக் குணமும் முதிர்ப்பால் கிறிச்சினமும்
பக்கியின் தோஷம் பழங்காய்ச்சல் அக்கணமே
இத்தனை நோயெல்லாம் இருப்பிடத்தை விட்டுவிட்டு
கத்தி லிழுந்தோடுங் காண்.

(476-56)

சன்னிசுரக் குணம்:-

சுரமது தோன்று முன்னே
சுகம் பெற அன்னஞ் செல்லா
பரபர குளிர்ச்சை தோன்றி
பல்கட்டி மிகுதி யாகி
சரசரப் பால்சற் திக்கும்
சளிசோரை மிகுதி சாயும்
நிரையது மிகுதி யாகி
தியக்குடல் வலிக்கும் பாரே.

(கை.பி. 98-164)

சிக்கிக் கழியு முளலை மிகும்
சிறந்த ஆதம் மிகத் தடிக்கும்
மெய்க்குள் விதமாய் அதுவெ தும்பும்
மிகவும் மாவேமொழி யுணர
மதக்கத் தாக மிகப் பரிக்கும்
தரியா பித்த சிலேற்றுமமும்
மைய்க்கண் மடவாய் வாத முன்கால்
வண்ணஞ் சன்னி சுழத்தி யல்லோ

(ஏடு.209-213)

சிக்கிக் கழியும் முன்மலமும்
சிறந்த அதறமிகத் தடிக்கும்
மெய்க்குள் விதமாய்மிக வெதும்பும்
மிகவே வழலையுண் டாகு
மொக்கு மிதான்குத் திருமல்
பொரிந்துச் சிரிக்குஞ் செவி கேளாய்
மைக்கன் மடவாய் வாதமுங்கால்
மண்ணஞ் சன்னிச்சுரத்தியல் பாமே

(ஏ 307-124)

குடிநீர்:- 1

கற்றாழஞ் சாறும் வேப்பந் தண்டும்
கண்டங் கத்திரிவேர் கருத்தாக
உற்றதோக கறுக்கண்டு கண்டங்கத்திரி
ராம்பூவினுட நீர்நாழி ....
வற்றவே வெந்ததிலே முந்திரிக் காய்பழமும்
வகையாய்ப் பிசைந்து வெந்தசா றுழக்காய்
வற்றாத முலைப்பா லமுக்கூறு கூட்டி
வகையாகவே கொள்ள சன்னிசுரம் மாறுமே.

(ஏ 209-213)

குடிநீர்:- 2

இலந்தையிலை நன்னாரி சீந்தி தண்டு
யிருவேலி லாமிச்ச மென்னு மராசு
கலந்ததொரு பேய்ப்புடலும் முத்தங் காசம்
கனக்க கோஷ்ட்டம் சுக்குட னாடாதோடை
தலம்புகழும் யிருநாழி நீர்தாக்கி காய்ச்சி
சமனாக முலைப்பாலி லிஞ்சிச் சாறுவிட்டு

அலந்ததோர் திப்பிலிமேல் பொடியிடு
விகந்துகொள்ளச் சன்னிசுரம் போகுந்தானே

(ஏ 209-213)

குடிநீர்:- 3

தூ துவேளை யின்பூரல் லாடா தோடை
துய்யசிறு காஞ்சொறி முத்தக் காசு
யேதுவாதங் கற்றாழை கண்டங் கத்திரி
எத்தழலையுஞ் சிக்கி யிடித்துக் கூட்டி
பேதமற பன்னீரு கழஞ்சிக் கூட்டி
பெரியனீரு ருவரிய தாகக் காச்சி
ஓதரிய திப்பிலியும் பொடியும் போட்டு
உகந்துகொள்ள சன்னிசுரம் போகுந் தானே

(ஏ 307-124)

வேப்பெண்ணெய்:-

வேப்பெண்ணெய் படியரைதான் சங்கிலைச் சாறு
விதமான படியரைக்கால் பாவட்டைச் சாறு
ஆப்பட்ட முசுறுமுட்டை படிய ரைக்கா
லடைவாக வெண்ணெயிட்டுக் கடைம ருந்து
மாப்பட்ட சுக்கு திப்பிலி வசம்பு
வளமான மிளகுமிரு சீர கந்தான்
தாப்பட்ட கத்தூரி மஞ்சள் பூண்டு
தனித்தனி வராகனெடை வாங்கிக் கொள்ளே.

வாங்கியே பொடியாக்கி யெண்ணெ யிட்டு
வளமான மெழுகுபதம் வடித்துக் கொண்டு
தாங்கியே துட்டெடைதான் ஒருவே ளைக்குத்
தயவாகக் கொடுத்துவரத் தீரும் வியாதி
தூங்கிவிழுஞ் சந்நிசுரங் கபமுந் தானே
சொல்லுகிறேன் பறக்குமே மெய்தா னீது
சாங்கமுள எண்ணெயிது கைவி டாதே
தப்பாவெந் நீர்ச்சோறு சாப்பி டாயோ.

(477-319,320)

தோஷ சுரக்குணம்:-

தீருகின்ற தோஷசுரம் வருமே யானால்
சிறுபனியாய்ப் பனியடிக்கும் சிலுகுண் டாகு

சாறுகின்ற சற்தல் பேதி மிகவுண் டாகும்
பயமடையு மரைக்கண்ணிட் டுறங்கும் பாரு
கூறுகின்ற அன்னதண்ணீர் வாங்கொட் டாது
குணக்கேடாய்ப் பரபரக்கும் கையில்தங் காது
நேருகின்ற அவுஷதங்கள் கொடுக்கும் போது
நிசமாகச் சத்திக்கும் மருந்தே றாதே.

(கை.பி.98-78)

குடிநீர்:- 1

ஏறாது இன்னோய்க்குக் கிஷாயங் கேளு
இசங்கன்வேர் நஞ்சறுத்தான் கொழிஞ்சி வேரும்
பாராது சிறுவிளா சின்ன வேரும்
பாஞ்சிவேர் தோடைவேர் முத்தக் காசும்
சீராக அதிமதுர மிலவங்கம் மல்லி
சித்தரத்தை நெல்பொரியும் திப்பிலியி னோடு
நேராக கிஷாயமிட்டு அருந்தும் போது
நில்லாது தோஷசுரம் நீங்கிப் போமே.

(கை.பி.98-79)

மேற்பூச கோட்ட எண்ணெய்:- 1

சுரமது தணிய பசுவின்நெய் நாழிச்
சொல்லி டும்பால் இருநாழி
தோன்றுமோ ராறுநாழிநல் லெண்ணெய்
தொகையது சேர்த்ததில் கற்கம்

வரும்பெருங் குரும்பை மதுர நன்னாரி
வளர்கரு வேலிலை ரோணி
வாருசெவ் வள்ளிக் கொடியமுக் கராவேர்
வருமர மஞ்சள் சந்தனமும்

திருவுள சுக்கு காசுட னரக்கு
திமிர்ந்திடுங் கோட்டமிவ் வகைக்குத்
திகழொரு கழஞ்சரைத் தெரித்திதைச் சேய்கள்
சிரத்தினு முடம்பினும் பூசப்

பரவிய பித்த சுரம்பரி தாபப்
பல்வல சுரம்பழ வெதுப்பும்
பாருமுன் பனிபோற் பறந்திரு மிதன்பேர்
பாருநற் கோட்டெண்ணை பகரே.

(476-130), (477-279,280)

பித்த சுரத்திற்குக் கஸ்தூரி மாத்திரை:-

எய்தாமல் கஸ்தூரி கழஞ்சு ஒன்று
இனிதான குங்குமப்பூ கழஞ்சு ரண்டு
எய்தாமல் ரோசினையும் கழஞ்சு மூன்று
இவைமூன்றுங் கல்வத்தி லிட்டுக் கொண்டு
எய்தாமல் அமுர்தமென்னு முலைப்பால் விட்டு
இனியதொரு சாமம்ஒன் றரைத்துக் கொண்டு
எய்தாமல் குன்றிபோல் நிழலு லர்த்தி
எடுத்துநீ செப்புதனில் அடைத்தி டாயே.

அடைத்திட்ட மாத்திரைதா னொன்றெ டுத்து
அந்தெடைக்கு முலைப்பால்விட் டிழைத்துக் கொண்டு
விடைத்திட்ட முனைநாவில் தீட்டிட் டாக்கால்
விஷதோஷ சந்நிமாந்தம் வீறிட் டோடும்
கடத்தெழுந்த சுரம்வாந்தி தீரும் தீரும்
கடைமருந்தின் போக்கறியார் கழுதை மாண்பர்
குடைத்தெழுந்த குடநகில மானே கேளாய்
குருவருளால் கஸ்தூரி குளிகை யாமே.
(572-37), (476-135), (477-318)

தாப (வெப்ப) சுரத்தின் குறிகுணம்:-

பாரேநீ கொடுத்திடவே கபசுரந்தான் தீரும்
பாங்கான தாபசுரம் சொல்லக் கேளு
கூரேநீ சுரங்காயும் வாய்வெ தும்பும்
குணமாகக் கண்சிவக்கும் வேர்வை யுண்டாம்
தீரேநீ எப்போதும் தண்ணீர் தேடும்
சிக்கிவிடும் பயப்பட்டு சரிந்தி டாது
நேரேநீ வாய்புலம்பும் மலமுஞ் சிக்கும்
நிசமாகத் தாபசுரக் குணமி தென்னே.

(கை.பி.98-78)

குடிநீர்:- 5

எண்ணவே நற்கொழிஞ்சி கூவிளை வேர்
இசலான முத்தக்காய் தூதளையின் மூலம்

பண்ணவே அதிமதுரம் சுக்கு ஏலம்
பாங்கான இலவங்கஞ் சித்த ரத்தை
நண்ணவே சிறுதேக்கு திப்பிலியி னோடு
நலமாகச் சரிகூட்டி கிஷாயஞ் செய்து
திண்ணவே கொடுத்துவிடு மூன்று நாளும்
சிறப்பாகத் தாபசுரம் தீருந் தானே.

(கை.பி.98-78)

குளிர் பித்த சுரக்குணம்:-

மலமது மிகுதியாகும் மனமது மறிந்துச் சாதல்
சலமது போலக்காலு ரெண்டும் சிறுகுளிர் போலதாகும்
வலுவதாய்ச் சிலுத்துடம்பு வந்திடும் சுரமே காய்ந்து
கலுவதாய் வீங்கிக் கொள்ளும் கழிந்திடும் சுரமீ ரெட்டில்

(கை.பி.98-164)

பித்தகுளிர் சுரக்குணம்:-

சற்திக்கும் குளிரும் பின்னே தணிவில்லா சுரமுங் காயும்
புத்திக்கும் மயக்க மாகி புலம்பலும் காய்ச்சல் காணும்
நெற்றியும் வேர்க்கும் கைகால் நேசமாய்க் குளுந்திருக்கும்
வெற்றிக்கும் பின்னுங் காய்ந்து விளம்பும்நாள் பதிமூன் றாமே.

(கை.பி.98-163)

பிடரிக்காய்ச்சலுக்கு நெய்:-

அகன்றுபோ மிரைமாந்தத் தீர வேண்டி
அறைகிற மூதாதி நெய்தா னொன்று
புகன்றதோ ரமுதுள்ளி கீழ்க்காய் நெல்லி
பொடுதலை கையான்பிரமி கொடுப்பை வீளி
முகன்றதோர் பழம்பாசி யகத்தி தோடை
முருங்கை முருக்கிலை வேலிப்பருத்தி தெற்றி
இகன்றதோ ராரை குழீமீண்டான் சாறு
இளநீர் தண்ணீர் வகைக்கோ ருழக்க தாமே

உழக்குடனே ஆவின்பால் பசுநெய் நாழி
ஊற்றியதில் சாதிக்காய் கொத்த மல்லி
வழக்கமுள்ள திரிகடுகு மாஞ்சி கன்னார்
மாயக்கா யதிவிடையம் கெருடப் பச்சை

பழக்கமுள்ள அத்தி திற்பிலி வெண்சந்தம்
பாங்கான கோட்ட மதிமதுரங் கச்சோல்
முழக்கமுள்ள சீரகமோர் கழஞ்சி வீதம்
முன்னிளநீர் விட்டரைத்துக் கரைத்து வாரே.

கரைத்துவார்த் தடுப்பேற்றி பதமாய்க் காச்சி
கலசமேல் வடித்துப்பின் பொடிதான் பின்னும்
மரைத்துரோ சினைகலந்து வைத்துக் கொண்டு
மைந்தர்க்கோர் கரண்டியள வந்தி சந்தி
உரைத்துமே பன்னிரெண்டு நாள்தா னூட்ட
உடம்புலர்தல் நெஞ்சுலர்தல் பிடரிக் காய்ச்சல்
விரைந்துமே அத்திசுரக் கழிச்சல் மெத்த
வெதுப்பகலும் வாலையுடல் விளங்குந் தானே.

(கை.பி.98-63)

மாந்தசுரக்குறிகுணம்:-

மந்தத்தால் வெப்பணுகில் மாறாது காய்வதன்றி
வந்தணுகுந் தாது குறைவடையும் - பந்தம்
விலகித் தனைமறந்து வீழ்க்குங் குறியை
கலைமதிநேர் நன்னுதலாய் காண்.

(477-280)

செய்யவே மாந்தசுரம் வருமே யாகில்
சியலாகப் பனியடிக்கும் வயிறு மூதும்
நைய்யவே மலசலங்கள் பிடித்துக் கொள்ளும்
நாள்பட்டால் வீக்கமுண்டாம் வெளுக்கும் தேகம்
பய்யவே விட்டுவிட்டுப் பனியுண் டாகும்
பாங்கான சீதம்வரு மசனம் வேண்டாம்
துய்யவே யின்னோய்க்குக் கிசாயம் சொல்வேன்
சிறுவருக்கு உச்சரித்துக் கொடுத்தி டாயே.

(கை.பி.98-75,76)

மாந்த சுரத்தின் வகைகேளாய்
வயிறே கழிந்து மயக்குமுமாய்
காந்தும் பசிய தில்லாமல்
காம விரதங் கொண்டவர்போல்
சோர்ந்து கிடக்குங் கைகாலுஞ்
சுழன்றே குளிருந் தொல்லுலகில்

காந்த மலர்போல் கரமுடையர்க்
கணத்தின் வகையென் றறிவாயே.

(ஏடு.612,546-5)

(ஈருள்ளிக்) குடிநீர்:- 1

போமேயீ ருள்ளி பொடியாயரிந்து வில்வமொடு
ஆமேஅவுரி பூமிவிளா அரிந்து சிவக்க வறுத்ததனை
வேமே காய்ச்சிச் சிறுவோர்க்கு விதமாய் மூன்றுநாள் கொடுக்கத்
தாமே யணுகு மாந்தசுரந் தணியுங் கணமுந் தரியாதே.

(477-280)

(நெல்லிக்) குடிநீர்:- 2

நெல்லியுடன் வேம்புபுளி கரந்தை தானும்
நேயமிரு முட்டிநிரி நிரையொன் றாகச்
சொல்லுமோ ரிதழின்தா மரையுங் கூட்டிச்
சுகமாகவே நறுக்கித் தோகாய் நீகேள்
உள்ளபடி சீரகங்கி ராம்பு திப்பிலி
நன்றாகக் கூட்டியே யுழக்காய் காய்ச்சி
மெல்லவே சிறுவோர்க்குக் கொடுக்க வேதான்
வெதும்பாது மாந்தசுரம் விட்டுப் போமே.

(477-280,281)

குடிநீர்:- 3

கொடுத்திடவே பேய்ப்பீர்க்குச் சீந்தித் தண்டு
கொழிஞ்சிவேர் கறுத்தசுண்டை முருங்கைப் பூவும்
அடுத்திடவே கடுக்காயும் சுக்கு ஏலம்
அப்பனே ரோகணியும் சிவதை கோட்டம்
படுத்திடவே வெள்ளுள்ளி நறுக்கு மூலம்
பாங்காகச் சரிகூட்டிக் கசாயம் செய்து
எடுத்திடவே கொடுத்துவிடு மூன்று நாளும்
என்னசொல்வேன் மாந்தசுரம் தவறிப் போச்சே.

(கை.பி.98-75,76)

(சீந்தில்) குடிநீர்:- 4

சீந்தித் தண்டுங் கடுக்காயுஞ்
சிவதை வேருங் களிப்பாக்குங்

காய்ந்த சுக்கு ரோகணியுங்
காயும் நீரில் தகர்த்திட்டு
யேந்து முலையா ளின்னீரை
யெடுத்துக் குடிக்கக் கட்டுமது
மாந்த மான சுரந்தீரும்
வயறு கழியுங் கண்டீரே.

(ஏடு.941-18), (476-121), (477-281).

(கடுக்காய்) எண்ணெய்:-

கடுக்காய்தான் பதினாறு விதைகள் போக்கிக்
கத்தூரி மஞ்சள் கருடக் கிழங்கு
முடுக்காக மூன்றுமவை சரியாய்க் கொண்டு
முறையுடனே பொடிசெய்து தைலந் தானும்
அடுக்காக நாழியதிற் பொடியைப் போட்டங்
கனலிமுகம் வைத்துள் ளுக்குக் கொடுத்துச்
சடுக்கெனவுச் சியிலிடப் பொரும லோடு
தணியாத மாந்தசுரம் தணியு மன்றே.

(477-281)

குளிகை:- 1

ஓடவே மாத்திரையொன் றுரைக்கக் கேளு
உள்ளிதிரி கடுகுவசம் பரத்தை காயம்
ஆடவே நாவிலிங்க மதுரங் கோட்டம்
அக்கிரா வருதகி ரோகணி கிராம்பு
கூடவே கரியசீ ரகமிலுப் பைக்கோ
தோடுவெண் பிசினிநில வேர் ✱ **பாம்புக்கண்டம்**
நாடவே முசிறுமுட்டை சமனாய்க் கூட்டி
நல்வேளைச் சாற்றிலரைத் துண்டை செய்யே.

செய்யவே குன்றியிடை பிரமா ணந்தான்
சேர்த்துலர்த்தி செப்புதனி லடைத்துக் கொண்டு
நொய்யவே இஞ்சிமுலைப் பாலி லாதல்
நொச்சியிலை யிஞ்சிவே டவிநீ ராதல்
யெய்யவே முருங்கைப்பூ வெள்ளை யுள்ளி
இஞ்சிச் சாறல்லது நிம்பெண்ணை தன்னில்
வெய்யவே மேனிச்சார் நிலவேர் கூட
வெந்ததிலோர் குளிகைவீத மறிந்து வூட்டே.

ஊட்டவே பிறைதோ மதினால் ரோகம்
விலாச்சுழி மார்பிற்வீச்சு சுழியி னோடு
ஓட்டவே மாந்தவலி மாந்த சன்னி
உள்ளெச்சில் பிறவெச்சில் மாந்த தோஷம்
பூட்டவே மாந்தசுரம் மயக்கம் வேர்வை
பொறிகலங்கு மேகங்க ளிளைப்பி ருமல் சேற்பம்
காட்டிடவே பொருமல் சீரணநீர்ப் பேதிக்
கட்டுமுத லகலுமெனக் கண்டு தேறே.

(கை.பி.98-22)

அட்சர மாந்த சுரத்திற்கு - பூவரசம் எண்ணெய்:-

பூவர சிலையுங் காய்பூ புகழ் பெற மூன்றுந் தானே
தாவர சமன தாக தயவுடன் அரைத்து நல்லாய்
ஆவர பலமொன் றாக அடையதை தட்டிக் கொண்டு
தேவர்கள் மகிழுஞ் சிற்றா மணக்கு நெய் அரைசேர் கூட்டே

கூட்டியே காயவைத்துக் கூறதில் அடையைப் போட்டுத்
தீட்டிடு சிவக்கக் காய்ச்சித் திகழடை எடுத்துப் போட்டுக்
காட்டிய ஏலம் சாதிக் காய் சாதி பத்ரி மூன்றும்
ஆட்டிய வகைவ தைக்கு அரைவிரா கன்தான் தூக்கே.

தூக்கிநீ பொடியாய்ச் செய்து துகளிலா எண்ணெய் தன்னில்
ஊக்கமாய்க் கலந்து பின்பு உள்ளுக்கு எடைதான் துட்டுப்
பாக்கிய மாக வார்க்கப் பாலரை மயக்க வந்த
ஆக்கிய காய்ச்சல் மற்ற அட்சர மாந்தம் போமே.

(477-269)

(நாட்பட்ட) மாந்தசுரத்திற்கு இலவங்காதிக் குளிகை:-

நவின்றசுர வில்வாதி குளிகை கேளு
நற்பச்சைப் பூரங்கால் இலவங் கங்கால்
நவின்றிட்டோம் வால்மிளகு சிறுநா கப்பூ
நன்றான ரோகணியும் ஏலம் மாஞ்சில்
நவின்றிட்டோம் சுக்குமே சீர கங்கால்
நளினசெவ் வாளம்பருப்பு நிகர்க்கு ஒன்று
நவின்றிட்டோம் பொற்றலையின் சாற்றா லாட்டி
நவநாளுஞ் சென்றபின்பு மிளகு போலே

மிளகுபோ லுண்டை செய்து செப்பில் வைத்து
விளங்குகிற இஞ்சித்தேன் முலைப்பால் தன்னில்
இளகுபோல் இழைத்துண்ண என்ன சொல்வேன்
இனியநாட் சென்றசுரம் மாந்தம் போகும்
களகுபோல் வாதபித்த சேஷ்ம மூன்றுங்
கடந்தசுரங் கனல்சுரமுங் கழன்று ஓடும்
மளகுபோல் இந்தமுறை இந்த போக்கு
மகத்தான நந்தீசர் செயலாங் காணே
(476-122,123), (572-38,39), (477-278)

மாந்தகண சுரத்திற்கு நுணாயீர்க்குக் குடிநீர்:-

புளிநுணா நெல்லிஓதி வேம்பொடு தகரையும்
பொடுதலை அம்மா னரிசியும்
புகழெட்டி நீர்க்குகூ விளையுலையும் அவ்வோடு
பொங்கு சிறுபுள் ளடியிலை

நளிர்கோழி யவரையிலை நிலவிளா தன்னிலை
நரிப்பயற்றங் கொடியுடன்
நற்பழம் பாசியிலை விட்ணுக் கரந்தைநன்
னாரிகோ ரைக்கிழங்கும்

தளிர்செருப் படைமணித் தக்காளி வல்லாரை
தான்சீந்தில் பேய்ப்புட லெல்லாம்
தணிவகைக் கொருபிடிக் கொடுவந் தரிந்துமே
தக்கபொன் னிறம்வ றுத்துக்

களிகளொரு படிசலம் விட்டுக்கால் படியாகக்
காய்ந்தகி யாழமதிலே
கமழ்கின்ற கோட்டம் விளாம்பிசின் வில்வத்தின்
கனபிசினி லவம்பிசினுமே

பிசினு மாசிச் சாதிக்காய்
பெருகு வெந்தய மிவைவ கைக்கு
விசித விராக னெடையாக
வெதுப்பிப் பொன்னிற மாய்வறுத்துப்
புசயப் பொடியாய்ச் செய்தந்தப்
பொடியைக் கியாழந் திற்றூவி
உசித வாறு வேளை துய்க்க
ஓடு மாந்த கணசுரமே.

(477-281,282)

தொந்த மாந்த சுரத்தின் குறிகுணம்:-

அனலெனப் போலே காயும்
அகம்விட்டு உடனே தோன்றும்
கனலென மலத்தைக் கட்டும்
காய்ச்சலும் பொருமல் தோன்றி
நனவென முக்கல் தோன்றி
நவில்தலை யசதி யாகும்
குனலெனச் சிரசு வேர்க்கும்
குறிகுணம் மலம்போ காதே.

(கை.பி.98-161)

குடிநீர்:-

கேளப்பா சீந்திமுத்தம் முருங்கை யின்பூக்
கெடிய காஞ்சோறி கறுத்த சுண்டை
நாளப்பா வேருடனே வெண்குரு விச்சிவேர்
நலமான அப்பட்டின் குருந்தி னோடு
வாளப்பா படவலமோ டிவைக ளெல்லாம்
வகைக்குஒரு கழஞ்சி சுக்கு மதிரந் தார
மீளப்பா பற்பாடகபுல் நறுக்கு மூல
மிருசரத்தை திற்பிலி ராமிச்சு மல்லி.

மல்லியொடு வகைவகைக்குச் சரியாய்க் கூட்டி
வார்த்திடுவாய் தோயமிரு படிதான் விட்டு
வல்லியரே அனலெரித்து எட்டென் றாக்கி
மதலைக்கு மூன்றுநா ளந்தி சந்தி.
சொல்லியரே குடுத்திடுகில் சுரங்க ளேது
சிறுவருக்குப் பொருமல் மலம் பிடித்த மோது
முல்லை மலர் மங்கையரே சுரங்க ளேது
முன்னோர்க ளெடுத்துரைத்த முறையி தாமே.

(கை.பி.98-162)

பால் சுரத்தின் குணம்:-

தானான பால்சுரத்தின் குணமே தென்றால்
தாய்கையில் தங்காது சத்த முண்டாம்
மானான பனிகதறி யடிக்கும் பாரு
மைந்தனே சில்லரிச்சுக் காய்ச்ச லுண்டாம்

தேனான தேகமது வாடிக் காணும்
சிறப்பாக வாய்வெளுக்கும் கண்ணீர் பாயும்
கோனான மலம்சிக்கிச் சுழியாய் வீழும்
கொற்றவனே யிந்நோய்க்கு கிஷாயம் கேளே.

(கை.பி.98-75)

குடிநீர்:-

கேளப்பா சீரகம் திப்பிலி கிராம்பு
கெடியான அதிமதுரம் நறுக்கு மூலம்
நாளப்பா சித்தரத்தை முத்தக் காசு
நலமான கடுகுரோ கணியும்
ஆளப்பா கஷாயமிட்டு மூன்று நாளும்
அருந்திவிடப் பால்சுரங்கள் மாறிப் போகும்
பாளப்பா போகாது பிள்ளை நூலைப்
பரிவாக ஆராய்ந்து மருந்து செய்யே.

(கை.பி.98-75)

மாறல் சுரக் குறிகுணம்:-

நடுக்க லுடன்சுரமும் நாள்விட்டு நாளில்
அடுத்துவந்து தோனேர்ந்த கட்டில் - துடிப்பாக
ஈரல் வளர்ச்சியுமா மேந்திழையே யீதுநளிர்
மாறற் சுரமாய் வழுத்து.

(477-287)

(அதிமதுரச்) சூரணம்:- 1

கணச்சுரத்திற்கு வரும் அதிமதுர சூரணத்தைக் காண்க.

மாறல் குளிர் சுரக்குணம்:-

குளிர்ந்துபின் சுரமுங் காய்ந்து
கொடுகொடா நாடி கொட்டி
நனைந்துபின் சுரமுந் தாகம்
நய்யவே யதிக மாகி
யிளந்துறை மலமுங் கட்டி
யிடுப்பின்கீழ் காய்ந்து விட்டு
கிளந்துடன் மற்ற நாளில்
கீழ்சுரம் பின்னுண் டாமே.

(கை.பி.98-163,164)

நான்காம்முறைக் காய்ச்சலுக்கு வச்சிரகண்டி லேகியம்:-

உச்சித வேலாயுதனைப் போற்றி - நல்ல
உண்மை மனோன்மணியைப் போற்றி
வச்சிரகண்டி லேகியத்தைச சொல்ல - நல்ல
வாகாய் சரக்குவகை எத்தனைநீ கேளு
கொச்சிதேச மதனகாமப் பூவும் - நல்லக்
கோட்டான் புசிக்கின்ற காட்டாத்திப் பூவும்
அச்சிதேச வால்மிளகு சுக்கு - நல்ல
அதிவிடையங் கசகசா கிராம்புடனே ஏலம்
செஞ்சிதேச கஞ்சா அபினி - நல்ல
சேலத்து பனைவெல்லஞ் சாதிக்காய் கூட்டி
சட்டியை அடுப்புதனில் ஏற்றி - நல்ல
சரக்கை அதில்வாட்டி உரல்தனிற் போட்டு
பூணிலா வுலக்கைக் கொண்டிடித்து - நல்லப்
புகழான பனவெல்லப் பாகுதனைக்காய்ச்சி
இடித்ததொரு தூளதனைப் போட்டு - நல்ல
இதமாகவே கிளரி லேகியமாய் செய்து
அந்திசந்தி ரண்டுவேளைத் தின்றால் - நல்ல
அலறியே ஓடுமந்த மாந்தசன்னிக் காய்ச்சல்
ஏந்திய குழந்தைகளின் மாந்தம் - நல்ல
ஏங்குவலி அதிசார பேதியைக் கேட்கும்
விந்தையுடன் நாலாமுறைக் காய்ச்சல் - நல்ல
வீரிட்டு ஓடுமந்த க்ஷயங்களைக் கேட்கும்
(476-150,151), (477-333,334)

மாங்கிஷ சுரம்:-

அதிகமாய் சரீரமெல்லாம் அனல் போல சுரமுங் காயும்
சதிரமெல்லாம் நடுக்கும் தான்மூச்சு மெற்ற ஓடும்
உதிரம்போய் உடல் வெளுத்து உருகியே கருகு மேனி
மதியுமே மயங்கி மூர்ச்சை மயிர்கூச்ச மாங்கிஷ வெப்பே.
(476-127)

(கற்பூராதி) மாத்திரை:-

கற்பூரம்கெந்தி இந்து வலங்கத் தோடு
கனமான சாதிக்காய் சாதி பத்ரி
செப்பமுடன் ஒருகழஞ்சு தேசிச் சாற்றில்
திறமாக ஒருசாமம் அரைத்துக் கொண்டு

ஒப்புடனே உழுந்தளவு உண்டை செய்து
உகந்திஞ்சி சர்க்கரையிற் சுக்கில் ஊட்ட
நட்புடனே எச்சுரமும் மூன்றே முக்கால்
நாழிகையில் விட்டகலும் நாட்செல் லாதே.

(476-127)

இரத்த சுரம்:-

போமப்பா அதிசாரக் கழிச்ச லுண்டாம்
பொங்கிய நல்வேளையுடன் தலையெ டாது
நாமப்பா விட்டுவிட்டுச் சுரமுங் காயும்
நலமாகப் பேதியிலே இரத்தங் காணும்
தாமப்பா முகம்வாடிக் கண்ணும் தாழ்ந்து
தயவாக நாவுலர்ந்து நடுக்க முண்டாம்
ஆமப்பா வயிறகமே நோவுண் டாகும்
அப்பனே தேகமது அனுகொட்டாது.

(கை.பி.98-79), (476-126), (477-293)

குடிநீர்:-

ஒட்டாது இன்னோய்க்குக் கிசாயம் கேளு
உத்தமனே வேப்பனெட்டு முருங்கைப் பூவும்
கிட்டாது அப்பட்டுக் குருந்தி னோடு
கிருபையுள்ள முத்தக்கா சாடா தோடை
தட்டாத சிவன்வேம்பு சித்த ரத்தை
தயவான சிறுதேக்கு அமுக்கி ராவும்
பட்டாத கிரிசாத்து ஓமம் மல்லி
பாங்கான அதிமதுரம் தேவ தாரம்

தாரமுட னிவைகளெல்லாம் சரியாய்க் கூட்டி
தயவாகக் கசாயமிட்டுக் கொடுப்பா யானால்
காரமுடன் ரெத்தசுரம் தீர்ந்து போகும்
கைகண்ட யோகமிது கருதிப் பாரு
பாரமுட னின்னுமொன்று சாதி மூன்று
பாங்கான அதிமதுர முத்தக் காசும்
காரமுட னிளவறுப்பாய்க் கசாயம் செய்து
தயவாகக் கொடுத்திடவே சாந்த மாகும்.

(கை.பி.98-79,80)

முக்குற்ற சுரத்தின் குணம்:-

மாங்கிஷந் தன்னில்வாத மதுபிந்தந் தானுந் தோலில்
தூங்கிய எலும்பிலையம் சுகமறத் தோன்றும் பின்னர்
சாங்கிய மாகநின்று சரீரத்தில் நோயும் பண்ணும்
ஆங்கிதைச் சொல்ல வொண்ணா ததிகமாம் உரோகந் தானே.

(476-121)

கோடாசுழி மாத்திரை:-

கோரோ சனமிரு வராகனெடை
கூறுமு ரோகணி வராக னொன்று
நேர்வளந்தான் வராக னொன்று
நிகழு முலைப்பால் தான்விட்டிங்
கூரா யரைத்துப் பயறளவி
லுண்டை செய்து நிழலு லர்த்தி
ஏரே வாத சுரத்திற்கே
யிஞ்சிச் சாற்றி லிட்டிடுமே.

இடுமே பித்த சுரத்திற்கே
யெழினன் முலைப்பா லிற்றீரும்
அடுமே யைய சுரத்திற்கே
யாடா தோடை யுங்காரி
பொடுமே தூதுளை பிட்டவியல்
பொருந்த வவித்த சாற்றிலிடப்
படுமே சந்நி யெலாந்தீரும்
பகர்வை யிச்சா பத்தியமே.

(477-277), (476-121)

கோரோசினை மாத்திரை:-

அரியரோ சனையெடை வராகன் மூன்றும்
அதனுடனே வதிமதுரங் கோட்ட மிந்து
பெரியவிருப் பைக்கொட்டைச் சாத்திர பேதி
பெருஞ்சீர கங்கருஞ்சீ ரகமுங் கூட்டிச்
சரியாக வராகனெடை யொன்று கூட்டித்
தண்மைகும ரியனீர்வார்த் தரைத்துப் பின்பே
உரியமுலைப் பாலிலரை குன்றி போல
உண்முலைப்பால் தன்னிலிடச் சுரமோ டும்மே.

(477-277)

குளிர்வாத சுரக்குணம்:-

கேளப்பா தேகமெல்லாம் குளிரும் நோகும்
கெட்டிவிடும் மலசலமும் கிளரும் காய்ச்சல்
வாளப்பா குளிர்விட்டு விறைத்து வாங்கும்
வகையாக நல்சுரமா யின்னுந் தோன்றும்
நாளப்பா தாகமுண்டாம் முக்கல் தோன்றும்
நாடியது தான்பார்க்கில் வாத மீறும்
பாளப்பா யிச்சுரந்தான் பதினெட்டுக்குள்
பாலகன்தான் தேகம் விட்டேகு மென்றே.

(கை.பி. 98-162)

குடிநீர்:-

சித்தரத்தை சிறுதேக்கு திப்பிலி மூலம்
சிறந்தயிஞ்சி கிரிசரத்து மிளகு நிம்பம்
உற்றதொரு அப்புவிட்டு எட்டொன் றாக்கி
உறுதியுள்ள மாத்திரையும் கூடத் தாக்கி
யெற்றிசையும் பாலகர்க்குக் கொடுக்கும் போது
ஏகிவிடும் வாதகுளிர் சுரந்தா னப்பா
குற்றமில்லாக் குறுமுனிவ ருரைத்தா ரிந்தக்
குணமான மருந்தொன்று குறித்திட் டோமே.

(கை.பி.98-163)

நச்சுச் சுரத்திற்கு முக்கடுகுக் குடிநீர்:-

கடுகு மூன்றுடன் காண வசம்பொடு
எடுபடு குடிநீர் எட்டொன் றாக்கியே
விடுவிடு தேனுடன் விளாவிக் கொள்ளவே
எடுபடு விடசுர சீத மில்லையே.

(477-287), (476-128)

உருண்டை:- 2

ஈந்திடாய் விலாடியுண்டை விரும்பிக் கேளு
இனிதான திரிகடுகு சாதிக் காயும்
ஈந்திடாய் கிராம்பேலம் ரோகணி மஞ்சள்
இதன்நாபி சரக்குவகை கழஞ்ச தாக
ஈந்திடாய் கல்வத்தில் பிடியா யிட்டு
இயல்பாக பழச்சாற்றில் சாமம்ரண் டாட்டி

ஈந்திடாய்ப் பயறளவு உண்டை செய்து
எழில்மாசிப் பத்திரியின் கியாழத் தூட்டே.

ஊட்டவே விஷசந்தி சுரங்கள் விக்கல்
உணர்வான குளிர்சந்நி உடன்கெட் டோடும்.

(572-36,37)

விடாச்சுரத்தின் குறிகுணம்:-

ஆகமதி னோயா யதிகசுரங் காய்தல்
தாகமுடன் மார்நோய் தலைவலியும் - தேகம்
எரிவுமலக் கட்டாகு மேந்திழையே யெங்கும்
பரவும் விடாச் சுரமாம் பார்.

(477-287)

ஏலாதி யுருண்டை:-

தீராத ஆம சுரத்திலுள்ள ஏலாதி மாத்திரை காண்க. அதுவே இதற்கும் பொருந்தும்.

ஆறுமாத சுரத்துக்குக் குடிநீர்:-

நெல்லியுடன் வேம்புரி கிரந்தி தானும்
நேருமிப்படியே கும்மட்டி நிறையொன் றாக
சொல்லுக்குமிள்த் தாமரையின் கதிகம் வைத்து
சுகமாகவே நறுக்கி தொகையைக் கேள்
வல்லணைய தன்மயிலே கிராம்பு திப்பிலி
வாகாகவே முடிந்து வளமாய்க் காய்ச்சி
மெல்லவதைச் சிறுவோர்க்குக் குடுக்க வேதான்
வெதுப்பாறு மாத்தைச்சுரம் விட்டுப் போமே.

(ஏடு.362-42)

குடிநீர்:-

போமே யீருள்ளிப் பத்துப்
பொடியதா யரிந்து வில்வம்
ஆமே ஆவாரை நிலவிளா
அரிந்து சிவக்க வறுத்ததனை
வேமே காய்ச்சிச் சிறுவோர்க்கு
விதமாய் மூன்று நாள் குடுக்கத்

தாமே ஆறு மாத்தைச் சுரம்
தணியுங் கணமுந் தரியாதே.

(ஏடு.362-43)

மருந்து:-

உட்சுரத்தில் காணும் புளியாதி யீர்க்குக் கற்கம் காண்க. அதுவே இதற்கும் பொருந்தும்.

பழஞ்சுரத்திற்குக் குடிநீர்:- 1

அரிய தூது காஞ்சொரி வேர்
ஆன சீந்தில் பற்படாகம்
பெரிய நொச்சி பேராமுட்டி
பின்னுஞ் சிற்றா முட்டியுடன்
சிறிய கடுக்காய் தான்கூட்டிக்
கியாழம் வைத்து தான்இறுத்து
உரிய திப்பிலி பொடிதூவி
உகந்துகொள் பழஞ்சுரம் போமே.

(476-129), (477-295)

பால சஞ்சீவி மாத்திரை:-

நாவி திப்பிலி வெண்காரம் நல்ல காசெடை மூவைந்து
மேவுஞ் சாதி லிங்கமது வீசுங் காசெடை பத்தாகும்
தூவுநிம்ப பழத்தின் சாற்றால் சதமா யரைத்து ஒருசாமம்
காவிங் கயற்கண் ணாளே கடலைநிரை உண்டை செய்யே.

சுக்குநீர் தன்னில் கொள்ள சுகமுடன் வெதுப்பு தீரும்
தக்க சீரகங் கிராம்பு தனிலிட தாகந் தீரும்
பக்காலின் விழுதிற் கொள்ள பண்டையின் சுரங்கள் தீரும்
மைக்கண்ணாய் குளிகை யின்பேர் பால சஞ்சீவி யாமே.

(476-126)

மேற்பூச கோட்ட எண்ணெய்:-

சுரமது தணியப் பசுவின்நெய் நாழிச்
சொல்லிடும் பாலிரு நாழி
தொன்றுமோ ராறு நாழிநல் லெண்ணெய்
தொகையது சேர்த்ததில் கற்கம்
வரும்பெருங் குரும்பை மதுரநன் னாரி

வளர்கரு வேலிலை ரோணி
வாருசெவ் வள்ளிக் கொடியமுக் கராவேர்
வருமர மஞ்சள்சந் தனமும்
திருவுள சுக்கு காசுட னரக்கு
திமிர்ந்திடுங் கோட்டமிவ் வகைக்குத்
திகழொரு கழஞ்சரைத் தெரித்திதைச் சேய்கள்
சிரத்தினு முடம்பினும் பூசப்
பரவிய பித்த சுரம்பரி தாபப்
பல்வல சுரம்பழ வெதுப்பும்
பானுமுன் பனிபேற் பறந்திரு மிதன்பேர்
பாருநற் கோட்டெண்ணெய் பகரே.

(477-279,280)

ஆகாப்பொருட்கள்:-

பாலெண்ணெய் இளநீர் போகம் பருகிடுங் குளிர்ந்த சோறு
கால்நடை தயிர்பு ளிப்பு கடுவேலை யினிப்பு பாகு
மால்தரு மடமான் கன்றே வந்திடுஞ் சுரத்திற் காகா
ஞாலமேல் மனிதர் பேரில் நாட்டிடிற் சந்நி யாமே

பச்சைமீ னிறைச்சி கோழி பழங்கறி தேங்காய் மாங்காய்
இச்சைநெய் பருப்பு முட்டை யெழிலுள புனுகுசந்தம்
நச்சுள விவைக ளெல்லாம் நாட்டிய சுரத்திற் காகா
கொச்சைமா னிடர்கள் கொண்டால் கொடியதாம் மரணம் நேரும்.

தோசைப் பிட்டுப் பணியாரம் சொல்லும் பயறு மவல் பொரிகள்
வேசை யுறக்கம் மஞ்சவாடை வேண்டாம் பழங்கறி பழங்கஞ்சி
ஆசையுடனே பொருள்தேடல் யாக்கை யுறக்க மிவையாகா
தோட மிகுந்து பல்பிணியாய்ச் சொல்லில் மரணம் வந்திடுமே.

(477-296)

சன்னி

வேறு பெயர்:-

1. முக்குற்ற நோய்.

2. முப்பிணி நோய்.

3. நமர் நோய்.

இயல்:-

முக்குற்றங்களும் ஒரே நேரத்தில் கேடடைந்து மதியை மயங்கச் செய்து உடலை வாட்டுகின்ற ஒரு நோய்.

நோய் வரும் வழி:-

ஐயத்தைப் பெருக்கக்கூடிய உணவுகளை மிகுதியாக உண்பதாலும் மற்றும் ஐயக் குற்றத்தைப் பெருக்கக் கூடிய செயல்களாலும் ஐயம் வளர்ச்சியடைந்து மற்ற இரு குற்றங்களையும் தன்னளவில் அதிகப் படுத்தி இந்நோய் வருகின்றது. அன்றியும் கட்டி, இரணம், தீப்புண், சுரம் இவற்றைத் தொடர்ந்தும் இயற்கையான எதிர்ப்புச் சக்தி குறைவினாலும் தொப்புள் கொடியைத் தூய்மையற்ற கருவிகளால் துண்டித்தலினாலும், தூய்மையற்ற இடங்களில் விளையாடுவதாலும் நுண்கிருமிகள் மூலமாகவும் இந்நோய் வருகிறது.

நரம்பிசிவு (Tetanus), வில்வலிப்பு, தனுர்வாதம் (Apoplexy), வெறிபிதற்றல் நிலை (Delirium) ஆகியவற்றிலும் இந்த நோயின் குறிகுணங்கள் சில ஒத்து இருந்தாலும் சன்னி நோயானது தனித்தன்மை பெற்றது. இதில் மதிமயங்கி உடலின் இயல்பான இயக்கங்கள் முடக்கப்படுகின்றன. இந்நோயுற்ற பிள்ளை தூங்குவது போல் இருக்கும். ஆனால் இருதயமும் புப்புசம் எனும் நுரையீரலும் இயங்கிக் கொண்டிருக்கும்.

சன்னிநோய் பிறவி நோயாகவும் நரம்பு மண்டலத்தின் இயக்க கோளாறுகளாலும் ஏற்பட வாய்ப்புண்டு. டெலிரியத்தில் தற்காலிக மனமாற்றமும், பதட்டமும் (Restless) ஏற்படுவதுண்டு. மேலும் மன எழுச்சி, கிளர்ச்சி, (Exitement) பரபரப்பு ஏற்பட்டு மூளை தூண்டுதலும் ஏற்படும். இது ஒரு குறிகுணமே தவிர நோய் அல்ல.

'டெட்டனஸ்' என்பது காயம்பட்ட இடங்களிலும் புண்களிலும் நச்சுத்தன்மை உண்டாகி குருதியில் கலந்துவிடும். நரம்பு மண்டலமும் தசைகளும் இதனால் பாதிக்கப்படுகின்றன. அதனால் நரம்பில் இசிவும் தசையில் விறைப்பும் இறுக்கமும் ஏற்படுகிறது. உதாரணமாக இந்நோயில் கீழ்தாடை பூட்டு அசைக்க முடியாமலும் கழுத்து பேசிகள் விறைப்பாகி பக்கவாட்டில் திருப்ப முடியாமலும் ஆகிவிடுகின்றன. சன்னிநோயில் உடலும் அறிவும் ஒரே நேரத்தில் பாதிக்கப்படுகின்றன.

மூளையில் குருதி கசிவதாலும் மூளைக்குச் செல்லும் இரத்த நாளங்களில் ஏற்படும் தடையினாலும் மூளைப்பகுதியிலுள்ள இரத்தத்தில் நீர்த்துவம் அதிகமாவதாலும் டெலிரியம், டெட்டனசு போன்ற சில நோய்களிலும் சன்னி நோய் வரும்.

நோயின் பொது குறிகுணம்:-

1. மிகுந்த சுரம் காய்தல்,
2. வாய் பிதற்றல்,
3. படுக்கையில் இருப்பு கொள்ளாமை,
4. நாவறட்சி,
5. நாசுரசுரப்பு அடைதல்,
6. புத்தி பேதலித்தல்,
7. கண் குழி விழுந்து கண்களில் நீர் வடிதல்,
8. கண் பஞ்சடைதல்,
9. மூக்கு, கை, கால், சில்லிடல்,
10. காது அடைத்தல்,
11. கை, கால் வீங்குதல்,
12. உறவினர்களை உற்று உற்று பார்த்தல்,
13. தாடை இறுக்கமாதல்,
14. கழுத்து சதைகள் இறுக்கமாதல்,
15. கெண்டைச் சதை இறுக்குதல்,
16. வயிற்றுப் பேசிகள் இறுக்கமாதல்,
17. விறைப்பு அடைதல்,
18. புருவம் உயர்ந்து காணப்படுதல்.

வகைகள்:-

சன்னி நோயில் பலவகை கூறப்பட்டு இருப்பினும் குழந்தைகளுக்குக் குறிப்பாகக் கீழ்க்கண்ட சன்னி வகைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

1. அலத்திடு சன்னி,
2. ஆமசன்னி,
3. எரிசன்னி,
4. கபசன்னி,
5. கிருமி சன்னி,
6. குளிர் சன்னி,
7. கோராமசன்னி,
8. சந்திரசன்னி,
9. சிலேத்துமசன்னி,
10. தாந்திரீகசன்னி,
11. தீராத சன்னி,
12. தோட சன்னி,
13. பித்த சன்னி (வாய் கோணின சன்னி, முகசன்னி, மண்டை குடைச்சல் சன்னி)
14. மாந்த சன்னி,
15. மாந்த கண சன்னி,
16. வாத சன்னி (பாரிச வாயு சன்னி)
17. விட சன்னி,
18. விடதோட சன்னி.

மருத்துவம்:-

ஒரே காலத்தில் கேடடைந்த முக்குற்றங்களையும், உடனே இயல் பான நிலையெய்தும்படி செய்ய வன்மைமிக்க பெரு மருந்துகளை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். முக்குற்றங்களில் ஐயகுற்றமே, கெடுதிகள் பலவற்றையுமுண்டாக்கிக் கொல்லுமாதலால், மிகுந்தெ ழுந்த ஐயக்குற்றத்தினைத் தன்னிலைப்படுத்த கண், மூக்கு, உச்சி இவற்றிற்கான மருத்துவமும், ஒற்றடம், பற்று, வியர்வை பிடித்தல் முதலிய புற மருத்துவமும் செய்வித்து தன்னிலைப் படுத்த வேண்டும். அக மருத்துவத்தில் வாந்தி, கழிச்சலுக்கான மருந்துகளையும் வழங்கு தல் வேண்டும்.

சன்னி வருவதற்கான முதற்காரணத்தை அறிந்து அதற்கான மருத்துவத்தையும் சேர்த்து செய்ய வேண்டும்.

குடிநீர்:- 1

சிறுவழுதலையின் வேர் 20 கி., சுக்கு, சீந்தில் வகைக்கு 10 கி. எடுத்து இவற்றை இடித்து 2.6 லி. நீரில் போட்டு காய்ச்சி எட்டொன்றாய்க் குறுக்கிக் கொள்க. அதனை 15 மி.லி. - 30 மி.லி. அளவு இருவேளையாக அளவறிந்து குழந்தையின் தன்மையறிந்து கொடுக்க சன்னி வகையனைத்தும் முறிந்து போகும்.

குடிநீர்:- 2

நிலவேம்பு, ஓமம், வசம்பு, சுக்கு, பற்பாடகம், புடல் இவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்க. இவற்றுடன் தேவையான தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி எட்டொன்றாய்ச் சுருக்கி 15 மி.லி. - 30 மி.லி. அளவு இருவேளையாகக் குடித்தால் அனைத்து வகை சன்னியும் இல்லாது போகும்.

குடிநீர்:- 3

வேம்பு, புளி, நுணா, நாரத்தை, எலுமிச்சை இவற்றின் ஈர்க்குகள், பேய்ப்புடல், சுக்கு, கொத்துமல்லி விதை, சீரகம், இவற்றைச் சம னெடுத்து ஒன்று சேர்த்து வறுத்து 1.3 லி. தண்ணீர் விட்டு எட்டிலொன் றாய் வற்றும்படி காய்ச்சி 15 மி.லி. - 30 மி.லி. இருவேளையாகக் கொடுக்க சன்னி தீரும். பத்தியம் இருக்க வேண்டும்.

குடிநீர்:- 4

சீந்தில் கொடி, நன்னாரி வேர், ஆடாதோடை ஈர்க்கு, பேய்ப் புடல், வசம்பு, கோரைக்கிழங்கு, சீரகம் ஆகிய சரக்குகளைச் சம னெடுத்து சற்றே வறுத்து 1.3 லி. தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சிக் கொள்க. 15 மி.லி. - 30 மி.லி. இருவேளை அளவறிந்து கொடுக்கவும். பத்தியம் காக்க வேண்டும்.

குடிநீர்:- 5

காட்டு முருங்கை, வெட்பாலை, ஆயிலியம், நொச்சி, கிளாக்காய் இவற்றின் பட்டைகளையும், ஆதண்டம், ✱முள்ளுக்குட்டிபிரா பாப் பார முள்ளி, பயிர்காலி, நிலாவாரை, குப்பைமேனி இவற்றின் வேர்களையும் எடுத்து 5.2 லி. தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் குறுக்கிக் காய்ச்சி வடித்துக் கொள்க. அக்குடி நீரில், ஓமம், மிளகு, வெள்ளைப்பூண்டு, மஞ்சள், திப்பிலி ஆகிய இச்சரக்குகளைத் துணி யில் முடிந்து போட்டு காய்ச்சி பிறகெடுத்து அரைக்க. அரைத்த விழுதினைக் குடிநீரில் கலந்து மீண்டும் பொங்கக் காய்ச்சி 15 மி.லி. - 30 மி.லி. அளவு கொடுக்கலாம். இதற்கு கடும்பத்தியம் இருக்க வேண்டும்.

பானல்கொடி எனும் வெற்றிலை, அமுக்கிராக் கிழங்கு, சித்திரமூ லப்பட்டை இவற்றையும் இக்குடிநீரில் சேர்த்துக் கொள்ளலாம்.

குடிநீர்:- 6

முருங்கைவேர், பெருங்காயம், வெளுத்தப்பிசின் எனும் விளாம் பிசின் இவற்றை வகைக்கு 2 கி. எடுத்து சேர்த்து 100 மி.லி. தண்ணீர் விட்டு முறையாகக் குடிநீர் செய்து உள்ளுக்குப் பருக கொடுக்க வேண்டும். அதனையே காதருகில், காதடிகளில், கழுத்தடிகளில் பூச உள்குத்துப் புறவீச்சு, குதிரை வலி, மந்த சன்னி, அனைத்து சன்னியுந் தீரும்.

சூரணம்:-

அழிஞ்சில் வேர்ப்பட்டை 3 கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக் காய் வகைக்கு 105 கி. எடுத்து நிழலிலுர்த்திப்பொடி செய்து மூவிரலளவு 40 நாள் உட்கொள்ளவும். பத்தியம் இருக்க வேண்டும்.

வெண்ணெய்:-:-

மூக்கிலே விஷநீர் வடிந்து கொண்டிருக்கும் சன்னிகளுக்கு இவ் வெண்ணெய் கொடுக்க நலமாகும். வேப்பந்தோல் சாறு, துளசிச்சாறு, பிரமிச்சாறு, திராய்ச்சாறு இவற்றை வகைக்கு 325 மி.லி. எடுக்க. திராய் வேர், முசுறு முட்டை, வெளிச்சிப் பிசின் எனும் விளாம்பிசின் இவற்றை வகைக்கு 9 கி. எடுத்துக் கொள்க. கடைச் சரக்குகளைச் சாறு விட்டாட்டிக் கொள்க. வேப்பெண்ணெய் 1.3 லி. விட்டு அனைத்தையும் ஒன்று சேர்த்து அரைத்து வெண்ணெயாக்கி வழித்தெடுத்துக் கொள்க. 5 மி.கி. - 10 மி.கி. இருவேளை அளவறிந்து கொடுக்க நலம்.

எண்ணெய்:- 1

வேப்பெண்ணெய் 675 மி.லி., சங்கிலைச் சாறு, பாவட்டைச் சாறு, முசுறு முட்டைச் சாறு இவற்றை 162 மி.லி. எடுத்துக் கொள்க. அதில் சுக்கு, திப்பிலி, வசம்பு, மிளகு, சீரகம், நற்சீரகம், கஸ்தூரி மஞ்சள் இவற்றை வகைக்கு 4 கி. எடுத்துப் பொடித்துப் போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி இறக்கிக் கொள்க. அதனை வேளை ஒன்றுக்கு 5 - 15 மி.லி. கொடுக்க சன்னி தீரும். பத்தியம்: வெந்நீர்ச் சோறு சாப்பிடவும்.

எண்ணெய்:- 2

வேப்பெண்ணெய் 675 மி.லி. எடுத்துக் கொண்டு அதில் குட்டி விளாவேர், தூதுவளை வேர், நாய்வேளை வேர், சீரகம், கஸ்தூரி மஞ்சள், வெங்காயம், சிற்றரத்தை, மரமஞ்சள் ஆகிய சரக்குகளைப் பொடித்துப் போட்டு எரித்து பதமாய் இறக்கி வேளை ஒன்றுக்கு 5 - 15 மி.லி. கொடுக்க சன்னி தீரும்.

எண்ணெய்:- 3

வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், பசுவின் நெய், காட்டாமணக்கெண்ணெய் இவற்றைச் சமமாக எடுத்து ஒன்று சேர்க்க. மஞ்சள், சாதிலிங்கம், தீமுறுகற்பாடாணம், கெந்தி, இரசம், நாபி, மிளகு, திப்பிலி, ஆனைத்திப்பிலி, இலவங்கம், நேர்வாளம் ஆகிய கடைச் சரக்குகளை வகைக்கு 5 கி. எடுக்க. இச்சரக்குகளைச் சித்திரமூலக் குடிநீரில் 3 மணி நேரமரைத்து மேற்குறிப்பிட்ட எண்ணெயிலே கரைத்துக் கொள்க. அவ்வெண்ணெய் கொதிக்கும்போது எருக்கு, கொடிக்கள்ளி, சதுரக்கள்ளி, இலைக்கள்ளி, திருகுகள்ளி, *நானா

கள்ளி, படர்ந்த கள்ளி, முள்ளி கள்ளி இவற்றின் பாலை வகைக்கு 325 மி.லி. சேர்த்து கிண்டி பாத்திரத்தை மூடுக. 2 விறகு கொண்ட தீயாக எரித்து விடுக. மறுபடி எண்ணெய் கொதிக்கும் போது கஸ்தூரியை 175 கி. எடுத்து தாய்ப்பாலில் அரைத்து அதில் விடுக. கழுதைப்பால் 325 மி.லி., காட்டெருமைப் பால் 35 மி.லி. எடுத்து அவ்வெண்ணெயிலே சேர்த்துக் காய்ச்சுக. திருநீற்றுப் பச்சிலை நான்கு அதில் போடுக. வெள்ளைப் பூண்டை அரைத்துப் போட்டு காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடித்துக் கொள்க. 5 கி. கோரோசினையைச் சேர்த்து 5-15 மி.லி. அளவு, நோயின் தன்மை, நோயாளியின் வன்மை அறிந்து எண்ணெயை உள்ளுக்குக் கொடுக்க சன்னியனைத்தும் பறந்து போகும். வலிப்பனைத்துக்கும் மேல் துவாலையிட ஒழியும்.

(ஏகமூலித்) தைலம்:- 1

சிவனார்வேம்பு சமூலத்தைப் பொடித்துக் கொள்க. 1.3 லி. நல்லெண்ணெய் எடுத்து அதில் 325 மி.லி. மேற்கூறிய பொடி, வெள்ளுள்ளி, வசம்பு இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து போட்டு எரித்து மெழுகு பதத்திலிறக்கிக் கொள்க. அதை 5 கி. எடுத்து உள்ளுக்குக் கொடுக்க. எண்ணெயைச் சற்று சூட வைத்து உச்சியில் சிறிது வைத்து நெறி, சந்துகள் அனைத்திற்கும் தடவி பிடித்து விடவும். அனைத்து சன்னிகளும் தீரும்.

(சன்னி நாயகத்) தைலம்:- 2

வேப்பெண்ணெய், வெள்ளாட்டுப்பால், வேலிப்பருத்திச் சாறு, புளிபிசைந்த குழம்பு இவற்றை வகைக்கு 675 மி.லி. எடுத்து ஒன்றாய்க் கலந்து எரித்து பக்குவத்தில் வடித்து மேலுக்குப் பிடிப்பிக்கச் சகல சன்னியுந் தீரும்.

(வசம்பு) தைலம்:- 3

வசம்பு, வெள்ளுள்ளி, நிலவேம்பு, முசுறுமுட்டை, நண்டு, கோழி முட்டையின் மஞ்சள் தாது இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து நெய், வேப்பெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு 1.3 லி. சேர்த்து காய்ச்சி மெழுகு பதமாக வடித்து இளஞ்சூட்டில் காதில் பிழிய சன்னி தீரும்.

தைலம்:- 4

உத்தமதாளிவேர், வெள்ளை உள்ளி, இவற்றைச் சம அளவெடுத்து தட்டி தேவையான அளவு வேப்பெண்ணெயெடுத்து அதில் மேற்சொன்ன சரக்கைப் போட்டு காய்ச்சி உச்சி முதல் உள்ளங்கால்

வரை தேய்த்து உதடு, செவியில் தேய்க்க சன்னிவகை அனைத்தும் தீரும்.

தைலம்:- 5

ஆமணக்கெண்ணெய், வேப்பெண்ணெய் வகைக்கு 325 மி.லி., வெள்ளுள்ளி, வசம்பு, ஊமத்தின் வேர், சாறடை வேர் இவற்றைச் சமனெடுத்து ஒன்றுசேர்த்து அரைத்துக் கொள்க. புன்னைக்காயளவு கடுகு எடுத்து அரைத்து ஒன்றாகக் கலக்கி காய்ச்சி மெழுகு பதத்திலி றக்கி 2-5 கி. அளவு உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசிவிடவும்.

(உள்ளித்) தைலம்:- 6

உள்ளியுரித்து 1.3 லி. எடுத்து அரைத்து மூன்று சாண் நால் விரல் நீளம், ஒரு சாண் நால் விரல் அகலம் உள்ள துணியைக் கிழித்து நடுவே அரைத்த விழுதை வைத்து அனலில் வைத்துப் பிழிய தைலம் விழும். அதனை நாடி நரம்புகட்கெல்லாம் தடவி பிடித்து விடவும்.

(சோதிருஷி) தைலம்:- 7

அவுரி, முன்னை, அழிஞ்சில், சாரணை, சிவனார் வேம்பு, சிறு புள்ளடி, சங்கன், செங்கத்தாரி, வாகை, புங்கன், நொச்சி, பூவரசு, குட்டிக்களா, குட்டிக்குமிழ், குட்டி விளா, பெருங்குதம்பை, முருங்கை, மிளகரணை, முட்காவேளை, பாவட்டை, ஆதொண்டை, வெட்பாலை, எருக்கன், கத்தரி, கொடிவேலி, தூதுவளை, கூத்தன் குதம்பை, ஓரிதழ்த் தாமரை, உத்தாமணி, விட்டுணுகிராந்தி, சத்திச்சாரணை, நன்னாரி, எலியால் ஆகிய முப்பத்து மூன்று வகை வேர்களை வகைக்கு 40 கி. எடுத்துக் கொள்க.

பாகல், நாய்ப்பாகல், ஆடாதோடை, சின்னி, எருக்கிலை, புங் கிலை, எலுமிச்சம்பழம், முடக்கற்றான், காட்டுக்குறிஞ்சான், மாவி லிங்கை ஆகியவற்றின் சாறு வகைகள் பத்தும் வகைக்கு 325 மி.லி. கூட்டிக் கொள்க.

வௌவால் இரண்டு, காகம் ஒன்று, பெரிய ஓணான் ஒன்று, முயல் ஒன்று, சிறிய ஓணான் மூன்று, உடும்பு ஒன்று, பாம்பின் துண்டம் ஒன்று, பச்சை மயிலின் இறகு இவற்றை எடுத்து வைத்துக் கொள்க.

பசுவின் நீர், எருமையின் சிறுநீர், வெள்ளாட்டின் சிறுநீர் இவற்றை வகைக்கு 335 மி.லி. எடுத்துக் கொள்ள வேண்டும்.

கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், மஞ்சள், மரமஞ்சள், வாய்விடங்கம், கடுக்காய், கிட்டம், சதகுப்பை, சிற்றரத்தை, பேரரத்தை, செண்பகப்பூ, திப்பிலி, பெருங்காயம், சாதிக்காய், மைசாட்சி (அல்லது) மைசாடிதம், சிறுதேக்கு இவற்றை வகைக்கு 24 கி. எடுத்துக்கொள்ள வேண்டும். வசம்பை 40 கி. எடுத்துக் கொள்க. பூண்டு 40 கி. வலம்புரிக்காய் 64 கி. எடுத்துக் கொள்ள வேண்டும்.

வேர்கள் அனைத்தையும் பொடி செய்து குடிநீராக்கி மேற்கூறிய கடைச்சரக்கில் வார்த்து அரைத்துக் கொள்க. பிறகு அவ்விழுதை மேற்கூறிய பச்சிலைகள் சாற்றை விட்டு மேலும் நன்கு அரைத்து, மீதமுள்ள கோமியங்கள் அனைத்தையும் விட்டரைத்து சாணி பதமானவுடன் எடுத்து பாத்திரத்திலிட்டு வைக்க. அதில் வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய் வகைக்கு 1.3 லி. ஊற்ற வேண்டும். பிறகு அனைத்தையும் கலக்கி அடுப்பிலேற்றி வைக்கும்போது ஓணான், வெளவால், முயல், உடும்பு, சிறிய ஓணான், நல்ல பாம்பு இவற்றை அறுத்து இரத்தத்தைப் பாத்திரத்தில் ஊற்றிக் கொள்ள வேண்டும். தோல், இறகு, குடல் இவற்றை அவ்வெண்ணெயிலே போட்டு 6 மணி நேரம் எரிக்க வேண்டும். பின் இறக்கி வைத்துவிட வேண்டும்.

மறுநாள் மீண்டும் அடுப்பேற்றி நன்றாக எரித்து மெழுகு பதமாக இறக்கிக் கொள்க. இறைச்சிகள் அனைத்தையும் வெளியே எடுத்துவிட வேண்டும். பிறகு வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். அதனை உள்ளுக்கு 5 கி. அளவு கொடுத்து தலை உடம்பு முழுவதும் நன்கு தேய்த்துவிட வேண்டும். அப்போது சன்னி வகை அனைத்தும் தீரும்.

புகையிலை, புளி, கருவாடு, மீன், இறைச்சி, கரப்பானை உண்டாக்கும் பண்டங்கள் இவற்றைத் தவிர்த்தால் சன்னி தீரும்.

மாத்திரை:- 1

நாவி (குறிப்பிட்ட அளவு), வெண்காரம், பொன்னரிதாரம் இவற்றைச் சமமாக எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் 3 மணி நேரமரைத்து கடலை அளவுள்ள (250 மி.கி.) உருண்டைகளாகச் செய்து கொள்க. சன்னிக்கு இஞ்சிச்சாற்றில் ஒரு மாத்திரையை உரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

மாத்திரை:- 2

கழற்சிப் பருப்பு, புங்கம் விதை இரண்டையும் வகைக்கு 10 கி. கொண்டு வந்து பெருங்காயம் 10 கி. சேர்த்து அரைத்து 12

குளிகைகளாகச் செய்து கொள்க. அவற்றை முட்டையின் வெள்ளைக் கருவில் 6 நாள் கொடுக்கவும். பத்தியம் புளி, மிளகாய் கூட்டாமலி ருக்க வேண்டும்.

(ஏலாதி) மாத்திரை:- 3

ஏலம், கிராம்பு, கோரைக்கிழங்கு, அதிமதுரம், வெட்டிவேர், வெண்கடுகு, சுக்கு, நன்னாரி, கொடி முந்திரிகை, கோரோசினை, தாளிசபத்திரி, நிலப்பனைவேர், சடாமாஞ்சில், சந்தனத்தூள், இலுப் பைப்பூ, தேவதாரம், திப்பிலி, கடுகுரோகணி ஆகிய இச்சரக்குகளை வகைக்கு 1 1/4 கி. எடுத்துக் கொள்ள வேண்டும். இவை அனைத்தை யும் கல்வத்தில் போட்டு 2 செவ்விளநீர் விட்டு 6 மணி நேரம் அரைத்துக் கொள்க. மைபோலாகிய அவ்விழுதை மீண்டும் தாய்ப்பால் விட்டு 6 மணி நேரம் அரைத்துக் கொள்க. அதனை 135 மி.கி. அளவுள்ள உருண்டைகளாக செய்து 15 நாள் நிழலிலுலர்த்தி வைக்க. அதனை முதியார் கூந்தல் எனும் சவுரிக்கொடியை எடுத்து குடிநீர் காய்ச்சி அதில் கரைத்துக் கொடுக்க குழந்தைகளுக்கு வரும் 13 வகை சன்னிகளும் நீங்கி விடும்.

மாத்திரை:- 4

அதிமதுரம், அக்கிராகாரம், கஞ்சா, கற்கடகசிங்கி இவற்றைச் சமவெடை எடுத்து சுத்தி செய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு, இஞ்சிச்சாறு, தாய்ப்பால் இவற்றில் வகைக்கு 3 மணி நேரமாட்டுக. பின் 65 மி.கி. அளவுள்ள மாத்திரை செய்து கொள்க. அம்மாத்திரை யைத் தேனிலிழைத்து அளவறிந்து குழந்தைகட்குக் கொடுக்க அனைத்து சன்னியும் குணமாகும்.

மெழுகு:- 1

மனோசிலை, சிலாசத்து, குங்கிலியம், கற்பூரம், இருவி, கெந்தம், அரிதாரம், படிகாரம், இந்துப்பு, துருசு இவற்றை 3 மணி நேரம் விடாமல் நன்றாக அரைக்க வேண்டும். அப்போது புளிபோல் கறுப்பாக இருக்கும்.வெல்லம், கோட்டம், வச்சிகரி (காயா மரத்தினை எரித்த கரி) இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து ஒன்று சேர்க்க. தேங்காய்ப்பால் விட்டு மேற்சொன்னவற்றை ஆட்டுக. ஆட்டிய விழுதை மாட்டுக் கொம்பில் அடைத்து வைக்க. தேவையானபோது 65 மி.கி. அளவெடுத்து வெற்றிலையில் வைத்து கொடுத்திட அனைத்து சன்னியும் தீரும்.

மெழுகு:- 2

வேப்பெண்ணெய், எருக்கம்பால் இவற்றை வகைக்கு 325 மி.லி. எடுக்க. முட்டையின் மஞ்சள் கரு, உள்ளி, திப்பிலி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து மூன்றையும் ஒன்று சேர்த்து அரைத்து கரைத்துக் கொள்ளவும். வேளைவேர், சிறுகீரை வேர் வகைக்கு 3 கி. எடுத்து தட்டிப்போட்டு கரண்டியினால் துளாவி மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொள்க.

இதனை ஓரிரு துளிகள் நாக்கில் தடவி உச்சியில் குடோரி ஆடி தேய்க்க அனைத்து சன்னியும் தீரும். 30 நாள் பத்தியம்; உப்பு, புளி தவிர்க்கவும்.

ஒற்றடம்:- 1

ஆனைலத்தி, நொச்சியிலை, பொடுதலை, சாரணை மூலம், கண்டங்கத்திரிசமூலம் இவையெல்லாவற்றையும் இடித்து சிறுநீர் விட்டுப் பிசைந்து வறுத்து உச்சி, கழுத்தடி, உள்ளங்கை, கால், பிடரி ஆகிய இடங்களுக்கு ஒற்றடம் கொடுக்க சன்னி நீங்கும்.

(எருக்கிலை) ஒற்றடம்:- 2

எருக்கிலை இரண்டு பிடி எடுத்து ஒன்று சேர்த்துக் கட்டிக் கொள்க. கயிற்றினால் நாலு விரலளவு சுற்றிக் கட்டிப் பிறகு அடியிலே வட்டமாய் அறுத்துப் போடுக. சட்டியைக் காய வைத்து வேப்பெண் ணெயை அதில் ஊற்றிக் காய வைத்து, எருக்கிலையின் புறத்தை எண்ணெயில் தொய்த்து உச்சி, பிடரி, நெற்றி, நெறி, முதுகுமுள், கை, கால், நாடி நரம்பு இவற்றில் ஒற்றடமிட சன்னி தீரும்.

புகை:- 1

சுக்கு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், சூதம், சதகுப்பை, கற்பூரம், மனோசிலை இவற்றைச் சம அளவெடுத்து குன்றிச்சாறு விட்டரைத்து துணியிலூட்டி பதத்தில் திரித்து உலர்த்தி வைத்துக் கொள்க. அதனை எரியவைத்து புகைக்க சன்னி சரியாகும்.

புகை:- 2

திப்பிலி, மிளகு, மஞ்சள், சாம்பிராணி, சதகுப்பை, கற்பூரம் இவற்றைச் சமமாய் எடுத்து ஒன்று சேர்த்து சூரணித்து குப்பைமேனிச்

சாறு விட்டரைத்து துணியில் தடவிக் கொள்க. அதனைப் பதத்துடன் திரித்து நிழலிலுலர்த்தி கொளுத்தி புகை பிடிக்க சன்னி (வாய்வு) தீரும்.

புகை:- 3

குழியரணை, மயிலிறகு, வலம்புரிக்காய், பூனைக்கோட்டம், சாதிலிங்கம், மஞ்சள், வசம்பு, வெள்ளை வெங்காயம், சுக்கு, எருமைக் கொம்பு இவையெல்லாவற்றையும் சமனெடுத்துப் பொடி செய்து கம்பிளியில் வைத்து திரித்து எரித்து புகையை மூக்கில் பிடிக்கவும்.

கலிக்கம்:- 1

இந்துப்பு, மகிளவிரை, மிளகு இவற்றைக் கோமியம் விட்டரைத்து கண்ணிற்கிடும் திரட்டு மாத்திரைகளாகச் செய்து கொள்க. அதனை இஞ்சிச்சாறு, தண்ணீர் இவற்றில் ஏதேனுமொன்றில் உரைத்துக் கண்ணி விட அனைத்து சன்னியும் நீங்கும்.

கலிக்கம்:- 2

நேர்வாளம், சிற்றாமணக்கன் முத்து இவற்றைச் சம அளவெடுத்து தேவையான அளவு தேன் வார்த்தரைத்து சிமிளில் வைத்துக் கொள்க. அதில் 2 கடுகளவு மட்டுமெடுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் மத்தித்து கண்ணுக்குக் கலிக்கமிட அனைத்து வகை சன்னியும் போகும்.

கலிக்கம்:- 3

கோரோசினை, பெருங்காயம், திரிகடுகு, (சுக்கு, மிளகு, திப்பிலி) காந்தம், இந்துப்பு, வெண்காரம், அக்கிராகாரம், புங்கங்கொட்டை, இலுப்பைக் கொட்டை, மகிளம்பூ 3, வாகை விதை, வேப்பங்கொட்டை இவற்றைச் சம அளவு எடுக்க. இவற்றுடன் முசுறுமுட்டை, நிம்பக்காய் (வேப்பங்காய்) இவற்றைப் பசுவின் கோமியத்தில் அரைத்துக் கலிக்க மிடச் சகல சன்னியும் தீரும்.

கலிக்கம்:- 4

இந்துப்பு, திப்பிலி, மிளகு, மனோசிலை, காட்டு வாகை விரை, வெள்ளுள்ளி ஆகிய இச்சரக்குகளைச் சமமாக எடுத்துக் கூட்டி வெள்ளாட்டுக்கிடாய் சிறுநீர் வார்த்தரைத்து உருண்டை செய்து கொள்க. அதை நல்லெண்ணெயிலுரைத்துக் கண்ணிலிடச் சன்னி நீங்கும்.

கலிக்கம்:- 5

மருக்காரைக்காயை வேப்பிலைச் சாற்றிலரைத்து கண்ணிற்கிடும் திரட்டு மாத்திரைகளாகச் செய்து கொள்க. வேப்பிலைச் சாற்றில் அம்மாத்திரையை உரைத்து கண்ணிற்குக் கலிக்கமிட சன்னி அனைத் தும் தீரும்.

நசியம்:- 1

மிளகு, அகில், திப்பிலி, இந்துப்பு, பூண்டு இவற்றைச் சமனெ டுத்து காட்டு வெற்றிலைச் சாற்றில் நசியம் செய்ய அனைத்து சன்னியும் தீரும்.

நசியம்:- 2

எருக்கு, சிறுகீரை, குப்பைக்கீரை இவற்றின் வேர், முருங்கை வேர், பட்டை இவற்றையெடுத்து தட்டி தாய்ப்பால் சேர்த்து துணியில் கட்டி நசியம் செய்யவும். அனைத்து சன்னியும் தீரும்.

நசியம்:- 3

தும்பை, திப்பிலி, சமுத்திராப்பழம், சுக்கு, குதம்பைப் புண்ணாக்கு இவற்றைப் பொடி செய்து நசியம் செய்யவும்.

நசியம்:- 4

நேர்வாளம்-1, கோழிமுட்டை ஓடு, சுக்கு, மிளகு இவற்றை வகைக்கு எடுத்து பொன் வறுவலாய் வறுத்து பொடி செய்து வைத்துக் கொண்டு பல்கிட்டும் பொழுது மூக்கில் ஊதினால் தீரும்.

அலத்திடு சன்னியின் குறிகுணம்:-

அதிகமான கூட்டங்களைக் கண்ட மாத்திரத்தில் எழுந்திருக்கும். உடல் குளிரும்; வாய் பிதற்றும்; இளைக்கும்; வேர்க்கும்; முகம் வெளுக்கும்; தெளிவுடன் பேசும்; துன்பத்திற்கிடமான மூச்சுண்டாகும்; உடல் ஆட்டம் கொள்ளும்; இக்குணங்களுடைய சன்னிபாத சுரம் அலத்திடு சன்னி எனப்படும்.

(வெற்றிலைச்) சுரசம்:-

வெற்றிலை, சுக்கு, ஓமம், மாவிலிங்கப்பட்டை, நொச்சிக்கொ ழுந்து, அக்கிராகாரம், முருங்கைப்பட்டை, எருக்கம்பூ, சிற்றரத்தை,

திப்பிலிக்கட்டை ஆகிய இப்பத்தையும் வகைக்கு 4 கி. எடுத்து நீர் விட்டு அரைத்துப் பிழிந்து சுடவைத்து 15-30 மி.லி. எடுத்து அதில் 130 மி.கி. ஆமையோட்டுப் பற்பம் சேர்த்துக் கொடுக்க அலத்திடு சன்னி தீரும்.

ஆம சன்னியின் குறிகுணம்:-

குழந்தை பாலுண்ணாது. தாய் முகத்தை நோக்கிப் பார்த்து அழும். முகம் வேறுபடும். பலவிதமாக வலியுண்டாகும். நெற்றிச் சுழியுண்டாகும். குரல் கம்மும். மலம் தீய்ந்து கட்டிப்படும். சுரங் காயும். மேலும் அதிக நீர் வேட்கை கொள்ளலும் வயிறு பொருமலும் கண்களை விழிக்காதபடி சுழித்தலும் மயக்கமடைதலும் ஆம சன்னியின் குறிகுணங்கள்.

(கடுக்காய்க்) குடிநீர்:- 1

கடுக்காய், கடுகு ரோகணி, சிவதை, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு பொருட்களை 4 கி. எடுத்து இடித்து 335 மி.லி. நீர் சேர்த்து 85 மி.லி. ஆகச் சுருக்கி குடிநீராக்கி காலையிலும் மாலையிலும் 15-30 மி.லி. உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

குடிநீர்:- 2

சாரணக்காய், மூக்குரட்டைக்காய், பொடுதலைக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, துளசி, சீரகம் ஆகிய மருந்துப் பொருட்களை வகைக்கு 4 கி. எடுத்து இடித்து, 335 மி.லி. நீர் விட்டு காய்ச்சி 85 மி.லி.யாகச் சுருக்கி சுண்டவைத்து அக்குடிநீரைக் காலையிலும் மாலையிலும் 15-30 மி.லி. அளவு புகட்டி வர ஆமசன்னி நீங்கும்.

(ஐந்தெண்ணெய்) தைலம்:- 1

கொடிவேலி வேர்ப்பட்டை, சங்கன்வேர், எருக்கன் வேர்ப் பட்டை, முடக்கத்தான் வேர்ப்பட்டை ஆகிய நான்கினையும் வகைக்கு 35 கி. எடுத்து இடித்துப் பொடியாக்கி அதனுடன் நல்லெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய், இலுப்பை எண்ணெய், புங்கெண்ணெய், வேப்பெண்ணெய் ஆகிய ஐந்தெண்ணெயையும் வகைக்கு 325 மி.லி. எடுத்துச் சேர்த்து எரித்து பக்குவத்தில் வடிக்க வேண்டும். அதில் ஒரு பாகமெடுத்து அதற்குச் சரிபாகம் முட்டையும் வெள்ளுள்ளியும் சேர்த்து வடித்து தைலத்தைக் கூட்டி உடல் முழுவதும் துவாலையிட ஆமசன்னி வாங்கும். புங்கெண்ணெய் நீக்கியும் இவ்வெண்ணெய் செய்யலாம்.

(முட்டைத்) தைலம்:- 2

முட்டைத் தயிலத்தையும் வேப்பெண்ணெயையும் கலந்து உள் ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூச வேண்டும்.

எரிசன்னிக்குக் குடிநீர்:-

சந்தனம், வெட்டிவேர், சம்பங்கிமொக்கு, நெல்லிவிதை, விஷ முட்டிவேர், பற்பாடகம், சுக்கு, கொத்துமல்லிவேர், ஏலம் இவற்றைச் சற்றே இளவறுவலாய் வறுத்து 1.3 லி. தண்ணீர் விட்டு எட்டிலொன் றாய்க் குறுக்கிக் காய்ச்சி வேளைக்கு 15 மி.லி. - 30 மி.லி. அளவு நோயின் தன்மை, குழந்தையின் வன்மையை அறிந்து கொடுக்க எரிசன்னி குணமாகும். பத்தியம் காக்க வேண்டும்.

தைலம்:-

ஆயிலியம், துரிஞ்சி, வேம்பு, பீநாறி, குன்றி, இலுப்பை, எட்டி, புரசு, *கலக்கொழுஞ்சி, *மிளகுக் கொழுஞ்சி, நல்லகாவேளை, கொடிவேலி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, உத்தாமணி, சிறுகுறிஞ்சா, கருமத்தை, குப்பைமேனி, எருக்கு, சிவனார்வேம்பு, வெள்ளறுகு, சங்கன்புங்கு, சங்கங்குப்பி ஆகிய மூலிகைகளின் பட்டைகள், செங்கத் தாரிச் சமூலம், நொச்சிச் சமூலம் இவற்றின் சாறெடுத்து வைத்துக் கொள்க.

கண்டுபாரங்கி, திப்பிலி, தேசாவரம் எனும் கண்ட திப்பிலி வேர், ஓமம், வெள்ளுள்ளி, கடுகுரோகிணி, மிளகு, பெருங்காயம், மஞ்சள் இவற்றை எடுத்து சூரணமாக்கிக் கொள்க. இலுப்பெண்ணெய், நல லெண்ணெய், விளக்கெண்ணெய், புங்கெண்ணெய், வேப்பெண் ணெய், இவற்றை வகைக்கு 280 மி.லி. எடுத்து ஒன்று சேர்த்துக் காய்ச்சிக் கொள்க. அதனுடன் மேற்சொன்ன சாற்றினை 325 மி.லி. சேர்க்க. மேற்குறிப்பிட்ட சூரண வகை 35 கி. போட்டுக் காய்ச்சி பதத்திலெடுத்து வடித்து வைத்துக் கொள்ளவும். மேலுக்குத் தடவவும் எரி சன்னி தீரும்.

கபசன்னி:-

ஐய குற்ற வேறுபாட்டால் மார்பில் சளி சேர்ந்து வியர்வை அதிகமாகி மூச்சுத்திணறல் ஏற்பட்டு கபசன்னி ஏற்படுகிறது. இதில் மருட்சியுடன் கூடிய பார்வை காணும்.

கிருமிசன்னி:-

வயிற்றில் கிருமிகள் அதிகமாக உண்டாகி அதன் காரணமாக கிருமி சன்னி ஏற்படுகிறது. இதற்கு சன்னி நோய்க்குரிய மருந்துகளை வழங்குவதுடன் முதற்காரணமாகிய கிருமிகளை வெளியேற்ற மருந்து வழங்க வேண்டும்.

குடிநீர்:-

அகத்தி இலையினை வேகவைத்து வடித்த நீரில் சிறிது பனங்கற் கண்டு கூட்டி 30 மி.லி. உள்ளுக்குக் கொடுக்க கழிச்சலையுண்டாக்கி வயிற்றுப்புழு வெளிப்படும்.

சூரணம்:-

வாய்விடங்கச் சூரணம் 500 மி.கி. 2 அல்லது 3 வேளை வெந்நீரில் கொடுக்கவும்.

மாத்திரை:-

தக்க அளவில் முருக்கன்வித்து மாத்திரையினைக் கொடுத்து வயிற்றைக் கழிக்கவும். ஒரு வேளை போதுமானது. அல்லது காக்க ணம் மாத்திரையினையும் வழங்கலாம்.

மெழுகு:-

வேப்பங் கொழுந்து, பூண்டு, சுக்கு, நொச்சிக்கொழுந்து, கறிவேப் பிலை, சோம்பு எனும் பெருஞ்சீரகம், சிற்றரத்தை இவற்றை எடுத்து தனித்தனியாக நெய்விட்டு வதக்கிக் கொள்க. இஞ்சியில் உப்பைச் சேர்த்து நீர் விடாமல் மைபோலரைத்து மெழுகு பதத்தில் 150 மி.கி அளவு எடுத்து தண்ணீர் கலந்து புகட்ட மாந்தம், வயிற்றுப் பொருமல், சளி இவை போகும். குடல் புழுக்களைக் கொல்லும். கழியச் செய்யும்.

குளிர் சன்னியின் குறிகுணம்:-

முதலில் குளிர்கண்டு வேர்க்கும். பிறகு சுரங்காணும். தலை கனத்து வலிக்கும். உணவும் நீருங் கொள்ளாது.

உருண்டை:- 1

திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி), சாதிக்காய், கிராம்பு, ஏலம், கடுகுரோகணி, மஞ்சள், நாபி (குறிப்பிட்ட அளவு) ஆகிய இச்சரக்கு

களை வகைக்கு 5 கி. அளவாக எடுத்துக் கொண்டு கல்வத்தில் பிடி, பிடியாயிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு 6 மணி நேரம் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அதனை 65 மி.கி. அளவுள்ள உருண்டை செய்து, மாசிப்பத்திரியின் குடிநீரில் கலந்து நோய் வன் மைக்குத் தக்க அளவு கொடுக்க குளிர் சன்னி தீரும்.

(இராமபாணக்) குளிகை:-

மஞ்சள், சாதிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், கடுகு ரோகணி, மரமஞ்சள், நாபி ஆகிய ஒன்பது சரக்குகளைச் சம எடை எடுத்துப் பொடியாகச் செய்து அதில் எலுமிச்சம் பழச்சாறு விட்டு 12 மணி நேரம் அரைத்து மிளகளவு (250 மி.கி.) மாத்திரையாகச் செய்து நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும். அதனைத் தேன் அல்லது தாய்ப்பாலில் கொடுக்க குளிர் சன்னி நீங்கும்.

கோராமசன்னியின் குறிகுணம்:-

வாயு மிகும். உந்தியிலிருந்து உடலெங்கும் கனகனத்துச் சூடுண் டாகும். தசைகள் குலுங்கும். கண், கால், கை பதைபதைக்கும். பார்ப்பதற்கு மாந்தம் போலிருக்கும். வளிநீர் உடலில் சேர்ந்திருப்ப தால் வாய் பேச முடியாது. தாளைக் கட்டும். உடல் வீங்கும். அதிக அளவில் வெப்பு தோன்றும். உடல் அசைந்து அசைந்து வலிப்பு கொள்ளும். இவை கோராம சன்னியின் குறிகுணங்களாகும். வாத நீர் தாளிலிறங்கும்.

(வேப்பம்பட்டை) எண்ணெய்:- 1

நூறாண்டு விளைந்த வேம்பின் பட்டையை 350 கி. எடுத்து நைய இடிக்க வேண்டும். அதில் 10.5 லி. நீர் விட்டுக் காய்ச்சி 1.3 லி. ஆகக் குறுக்க வேண்டும். அத்துடன் 1.3 லி. ஆற்றுத் தும்மட்டிக்காய்ச் சாறு, 1.3 லி. சிற்றாமணக்கெண்ணெய், 35 கி. முட்டைத் தைலம், 35 கி. முசுறு முட்டைத் தைலம் ஆகிய நான்கையும் சேர்த்துக் கொள்க. அதில் கலப்பைக் கிழங்கு, கண்டங்கத்திரி வேர், கருடன் கிழங்கு, தவசு முருங்கை வேர்ப்பட்டை, பெருங்கிழங்கு, வெண்சாரணை வேர், கொத்தான் வேர் ஆகிய இவ்வேழு பொருட்க ளையும் வகைக்கு 70 கி. எடுத்து பொடிக்க. ஏலம், நற்சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, பெருங்காயம் ஆகிய இவற்றை வகைக்கு 70 கி. எடுத்துப் பொடித்து மேற்கூறியதில் போட்டு மெழுகு பதம் வரும் வரை காய்ச்சி வடிக்க. 5-10 மி.லி. வீதம் மூன்று நாள் காலை, மாலை கொடுக்க. தாய்க்கு மூன்று நாளும் பத்தியம்.

எண்ணெய்:- 2

குமட்டிக்காய்ச் சாறு, நூறாண்டு சென்ற வேப்பம்பட்டைக் குடிநீர், விளக்கெண்ணெய் இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்து ஒன்றாய்க் கலந்ததில் வெந்தோன்றிக் கிழங்கு, கருடக்கிழங்கு, நீர்முள்ளி, சிவனார் வேம்பு, தவசி முருங்கை, வெள்ளைச் சாரணை, முடக்கொத்தான் இவற்றின் வேர், ஏலம், சீரகம். கருஞ்சீரகம், கடுகு ரோகணி, பெருங்காயம் ஆகிய சரக்குகளை வகைக்கு 70 கி. தட்டிப்போட வேண்டும். பின்னர் கோழி முட்டைத் தைலம், முசறு முட்டைத் தைலம் வகைக்கு 70 கி. சேர்த்து மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து 5-10 மி.லி. அளவு மூன்று நாள் பத்தியமாய்க் கொடுக்க. கோராம சன்னி தீரும்.

குறிப்பு:-

இம்மருந்திலுள்ள சரக்குகள் மேலே உள்ளவற்றுடன் பெரும் பான்மை ஒத்துள்ளன. சில அளவுகள் மாறி உள்ளன.

சந்திர சன்னிக்குக் குடிநீர்:-

முடக்கொத்தான், நீர்முள்ளி, சாரணை, வெண்ணொச்சில், திப் பிலி, அசமதாகம், இந்துப்பு, கடுக்காய் இவற்றைச் சமமாக எடுத்து 2.6 லி. தண்ணீர் விட்டு 325 மி.லி.யாகக் குறுக்கிக் காய்ச்சி 15-30 மி.லி. அளவறிந்து கொடுக்க சந்திர சன்னி நீங்கும்.

சிலேத்தும சன்னிக்குக் கற்பூர மாத்திரை:-

கற்பூரம், ஏலம், சாதிக்காய், கிராம்பு, மிளகு இவற்றைச் சம அளவெடுத்து நன்றாய்ப் பொடி செய்து தேன் விட்டரைத்து 65 மி.கி. அளவுள்ள 21 உருண்டை செய்து கொள்க. அதில் வேளைக்கு ஒன்றை குறட்டிலடக்கிக் கொள்ள சிலேட்டும சன்னி தீரும்.

தாந்திரிக சன்னி - குறிகுணம்:-

பசியெடுப்பது போல் தோன்றும். கழிச்சல் ஏற்படும். சுவாசமேற்ப டும். தலை வலிக்கும். தேகத்தில் சுருக்கம் ஏற்படும். மனமானது நடுங்கிடும்.

சிலேற்றுமம் அதிகமாகி கால் வீக்கம் கொள்ளும். வயறு இரை யும். மேல் மூச்சு வாங்கும். உடல் நடுங்கும். நாக்கு தடிக்கும். சுரம் வேகமாய்க் காயும். உடம்பு பதை பதைக்கும். விருப்பத்துடன்

பாலுண்ணாது. மூர்ச்சையோடு உறங்கும். உடலில் சிலிர்ப்புண்டாகும். அரைக்குக் கீழ் குளிர்ந்திருக்கும். நீர் வேட்கை அதிகமாகும். இவை தாந்திரிக சன்னியின் குறிகுணங்கள்.

குடிநீர்:- 1

முத்தக்காசு, சந்தனம், சுக்கு, பற்பாடகம், விலாமிச்சை, இரு வேலி, திப்பிலி இவற்றைச் சமபாகமாய் எடுத்து தேவையான அளவு நீர் விட்டு காய்ச்சி எட்டிலொன்றாய்ச் சுருக்கி 15-30 மி.லி. அளவ றிந்து குடிக்கக் கொடுக்க தாந்திரிக சன்னி நீங்கும்.

குடிநீர்:- 2

தண்ணீர் விட்டான், இருவேலி, அதிமதுரம், சிறுகீரை, நன்னாரி, விலாமிச்சை, முந்திரிகை இவற்றைச் சமமாயெடுத்து 2.6 லி. தண்ணீர் விட்டு குறுகக் காய்ச்சி 15-30 மி.லி. அளவறிந்து கொடுக்க தாந்திரிக சன்னி தீரும்.

குடிநீர்:- 3

சிறுதேக்கு, கடுக்காய், கோஷ்டம், சிறுவழுதலை, கண்டங்கத்திரி, சீந்தில்தண்டு இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து சேர்த்து குடிநீராய்க் காய்ச்சி திப்பிலிப் பொடியை மேலே தூவி 15-30 மி.லி. அளவு கொடுக்க வேண்டும். கண்ணுக்கு திப்பிலி, மிளகு, பெருங்காயம் சேர்த்து கலிக்கமாக போடவும்.

புகை:-

ஊமத்தை வேர், கஞ்சா, முருங்கைவேர்ப் பட்டை, சித்திர மூல வேர்ப்பட்டை, வெள்ளுள்ளி, வசம்பு, கம்பள மயிர், மயிலிறகு, வேளை வேர் ஆகிய மருந்துப் பொருட்களைச் சரியெடையெடுத்து பொடியாக்கிக் கொள்க. அதனைக் குழம்பு பக்குவத்திற்குக் கொண்டு வரக்கூடிய அளவுக்குத் தேவையான வேப்பெண்ணெயையும் முட் டைத் தயிலத்தையும் சரிபாகமாகக் கூட்டிக் கலந்து சீலையில் தடவி திரியாக்கிக் கொள்க. அதனைத் தேவைப்பட்டபோது கொளுத்தி, அணைத்துப் புகை காட்ட தாந்திரிக சன்னி நீங்கும்.

வேளை, ஊமத்தை, முருங்கை, சீந்தில் இவற்றின் வேர், வெள் ளுள்ளி, வசம்பு, மயிலிறகு இவற்றைச் சம எடை எடுத்து அனைத்தை யும் இடித்து கம்பளியிற் சுத்தி வேப்பெண்ணெயைத் தடவி வைத்து தீயிற் கொளுத்தி அணைத்துப் புகை காட்டத் தீரும்.

தீராத சன்னி (அசாத்திய சன்னி) இசிவுகள்:-

குறிகுணம்:-

கண், நாக்கு, புருவம், கால், கை ஆகிய உறுப்புகள் வலிக்கும். ஆகாயத்தை நோக்கிப் பார்க்கும். பெருமூச்சு விட்டு பிறகு வலி உண்டாதல், தாய்ப்பாலை உண்ண முடியாமை, தூக்கம் பிடித்துத் தூங்காமை, உடல் மஞ்சள் நிறம் பெறுதல் ஆகியவை தீராச் சன்னியின் குறிகுணங்கள்.

தோட சன்னி குறிகுணம்:-

மாந்த கணம், பேராம கணம் ஆகியவை ஒன்று சேர்ந்து தோடசன்னி உண்டாகும். வயிறு உப்பும்; கழிச்சல் செய்யும்; வாந்தி யெடுக்கும்; காய்ச்சல் வரும். கால், கை குளிர்ந்திருக்கும். ரத்தம், சீதம், தனித்தோ கலந்தோ அதிகமாகப் போகும். படபடவென்று ஒலித்து காற்று போகும்; கண், நாக்கு முதலியவை வெந்து புண்ணாகி விடும் தோஷமும் முடிவு பெறாது சன்னியாய் வலித்து வேர்க்கும்.

இந்நோய் ஏற்பட்டால் வடவாமுகாக்கினி போன்ற மருந்திட்டு நீங்கச் செய்வது நல்லது. அப்படியின்றேல் ஒரு மாதம், மூன்று மாதம் அல்லது ஆறு மாதத்தில் தீரும்.

குடிநீர்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, கண்டுபாரங்கி, தும்பராட்டகம் எனும் பேரரத்தை இவற்றை வகைக்கு 9 கி. எடுத்து நறுக்கிப் போட்டு 1.3 லி. தண்ணீர் விட்டு காய்ச்சி 15-30 மி.லி. அளவறிந்து கொடுக்கவும். சன்னி தோஷமும் நாவறட்சியுந் தீரும்.

(அண்டத்) தயிலம்:-

10 முட்டையை அவித்து மஞ்சள் கருவெடுத்து சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து வறுக்க தயிலமிறங்கும். பச்சைக்கற்பூரம் 4 கி., பூரம் 16 கி., இரசகற்பூரம் 4 கி., ஆலாத்தி கற்பூரம் 16 கி., கோரோசினை 4 கி. கஸ்தூரி 488 மி.கி. இவற்றையெடுத்து தூளாக்கி தைலம் இறங்குகிற சமயத்தில் தூளைப் போட்டு கிண்டி வைத்துக் கொண்டு வெண்ணெயில் (அல்லது) நெய்யில் 2 துளி சேர்த்து கொடுக்க சன்னிதோடம் நீங்கும்.

(கஸ்தூரி) மாத்திரை:-

கஸ்தூரி ஒரு பங்கு, குங்குமப்பூ இரண்டு பங்கு கோரோசினை மூன்று பங்கு இவை மூன்றையும் தாய்ப்பால் விட்டரைத்து 130 மி.கி. அளவுள்ள உருண்டை செய்து நோய் வன்மைக்குத் தக்க அளவு எடுத்து தாய்ப்பாலிலுரைத்து கொடுத்திட தோட சன்னி நீங்கும்.

பித்த சன்னி:-

அழல் குற்ற விகற்பத்தால் முகத்தில் பாதிப்பு ஏற்பட்டு முகத்தின் தசை கோணி இது ஏற்படுகிறது.

குடிநீர்:-

நிலவேம்பு, சீரகம், சந்தனம், பற்பாடகம், விஷ்ணுகிராந்தி போன்ற அழல் குற்றத்தைத் தன்னிலைப்படுத்தும் மூலிகைகளைக் குடிநீரிட்டு தக்க அளவு கொடுக்கவும்.

மாத்திரை:-

விஷ்ணுசக்கரம், கருப்பு விஷ்ணுசக்கரம் இவற்றை இஞ்சிச் சாற்றிலும் தேனிலும் அனுபானித்து இருவேளை கொடுக்கவும்.

தைலம்:-

விஷமுட்டித் தைலம், சிற்றாமுட்டித் தைலம் இவற்றைப் பாதிப்புள்ள தசையில் தடவி ஒற்றடம் தரவும்.

தைலம்:- 1

குப்பைமேனி, மணித்தக்காளி, முள்ளி, நன்னாரி, ✱நெபுட்டி வேலி இவற்றின் வேர், ✱கம்பிப்பிசின், உள்ளி, வசம்பு இவற்றைச் சமமாக நறுக்கி விளக்கெண்ணெயில் போட்டு பதமாகக் காய்ச்சி வடித்து உள்ளுக்கு 25 மி.கி. கொடுத்து மேலுக்குத் துவாலையிட வேண்டும். இவ்வாறு ஏழு நாள் செய்து மூன்று நாள் நசியமிட வாய் கோணிண சன்னி தீரும்.

நசியம்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, முந்திரிப்பழம், இந்துப்பு இவற்றை வகைக்கு 1 கி. எடுத்து தாய்ப்பாலில் அரைத்து துணியில் கட்டி நசியமிடவும்.

மண்டை சன்னி, மண்டைக் குடைச்சல், முக சன்னிக்கு முழுக எண்ணெய்:-

ஆதண்டைச்சாறு 1.3 லி. நல்லெண்ணெய் 675 மி.லி. எடுத்து இரண்டையும் சேர்த்து காய்ச்சுக. சாறனைத்தும் வற்றின பிறகு, 4 கி. சீரகத்தை எண்ணெயில் போட்டு கொதிக்கும் வரை காய்ச்சி பதமாக வடித்து இறுத்து வைத்துக் கொள்க. எண்ணெய் தேய்த்து அரப்பிட்டு வெந்நீரில் முழுகவும். இவ்வாறு செய்ய மண்டை சன்னி, மண்டை குடைச்சல், மண்டை இரைச்சல், மண்டை இடிப்பு அனைத்தும் தீரும்.

மாந்த சன்னி:-

பால் உண்ணும் பருவத்தில் தாய், மாந்தம் விளைவிக்கும் உணவுப் பொருட்களை உண்பதன் காரணத்தினால், தாய்க்கு மலச்சிக்கல் ஏற்பட்டு மாந்தம் உண்டாகி தாய்ப்பால் கெடுவதால் அப்பாலைப் பருகும் குழந்தைக்குச் செரியாமை ஏற்பட்டு சுரம் காய்ந்து கழிச்சல் உண்டாவதை மாந்தம் என்பர்.

குறிகுணங்கள்:-

மாந்த சன்னியில் மயக்கம், சுரம், தாகம், நாமுள், புத்தி கலக்கம், கண் தாழ்தல், ஓயாது அலறல், வயிற்றுப்பிசம், கால் குளிர்தல், மலம் தீய்தல், வலிப்பு ஏற்படல், வாய் பிதற்றல், ஒரு கண் திறந்து மற்றொரு கண் உருட்டி விழித்து பார்த்தல், கழுத்து சிறுத்தல், வயிறு பெருத்தல், உடல் நோதல், தலை புரட்டல், வாந்தி, ஏப்பம் ஆகிய குறிகுணங்கள் காணும்.

(வேளை வேர்ச்) சுரசம்:- 1

வேளை வேர், உத்தாமணி வேர், மாவிலிங்கப்பட்டை, முருங்கைப்பட்டை இவற்றின் சாற்றை வகைக்கு 35 கி. எடுத்து ஒன்றாகக் கலந்து, அதைச் சுட வைத்து பின் ஆற வைத்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றின் பொடியைச் சேர்த்துக் கொள்க. பிறகு அதனுடன் நவலோக பூபதி மாத்திரையை இழைத்துக் கலந்து கொடுக்க வேண்டும். மாந்தசன்னி தீரும்.

(வெற்றிலைச்) சுரசம்:- 2

வெற்றிலை, முசுறு முட்டை, சிற்றரத்தை, சுக்கு, முருங்கைப் பட்டை, மாவிலிங்கப்பட்டை இவற்றைச் சரியெடை எடுத்து அரைத்

துப் பிழிந்து சுரசம் **செய்து** அதில் வேளைக்கு 25 மி.கி. கஸ்தூரி சேர்த்து காலையிலும் **மாலையி**லும் மூன்று நாள் 5-15 மி.லி. அளவு உள்ளுக்குக் கொடுக்க **சன்னி** மாந்தம் நீங்கும்.

சுரசம்:- 3

வேலிப்பருத்தி, **உள்ளி**, வசம்பு ஆகிய இவற்றை எடுத்து சாறு பிழிந்து சிறிது நேரம் **கொதிக்க** வைக்க வேண்டும். அதனை அளவ றிந்து உள்ளுக்குக் கொடு**த்து அ**தனையே துவாலையிட மாந்த சன்னி சரியாகும்.

(உள்ளுக்கும் துவாலைக்கும் பூண்டாதிச்) சாறு:-

சிறுகளாயிலை, வெள்ளுள்ளி, சுட்ட வசம்பு, ஓமம் இவற்றைச் சமமாக எடுத்து இடித்துச் **சாறு** வாங்கிக் காலை, மாலை மூன்று நாள் கொடுக்க 18 வகை **மாந்த** சன்னி தீரும். இதையே துவாலை செய்யவும்.

(வேளைக்) குடிநீர்:-

ஒரு மண் சட்டியைக் **காயவைத்து** அதில் 280 கி. உப்பைக் கொட்டி அது சாம்பலாகுமட்டும் எரித்துப் பின் அதைக் கொட்டிவிட்டு சட்டியைத் துடைத்து **அதில்** 280 கி. வசம்பை நறுக்கிப் போட்டு அது தீப்பற்றி கருகி வரும் சமயத்தில் ஒரு பிடி நல்வேளைக் கீரையை மூன்று அரிப்பாய் அரிந்து போட்டுப் பொன்போல் வறுத்து அதில் அரைச் சிரங்கை நீரைத் தெளித்து அது வறளும் மட்டும் வறுத்து, மறுபடி சிறிது நீர்விட்டு அது வறளுமட்டும் வறுத்து அதில் 4.4 கி. ஓமத்தைப் போட்டு அது பொரியும் சமயத்தில் 1.3 லி. நீரை விட்டு எட்டிலொன்றாக வடித்து, காலை, மாலை இரு வேளையும் 30 மி.லி.க்கும் குறைவான அளவுக்குப் புகட்டி வர மாந்த சன்னி நீங்கும்.

எண்ணெய்:- 1

கழுதை லத்தி, குதிரைலத்தி எடுத்து தவலோட்டில் கருக்கி கோழி முட்டை வெண்கருவிட்டுக் கொள்க. உள்ளி, வசம்பு இவற்றைப் பொடி செய்து போட்டு வேப்பெண்ணெய் விட்டு எரித்துக் கொள்க. பதமான வுடன் வடித்து மிளகு, மஞ்சள் இவற்றை மேலுக்குப் போட்டு நன்கு கலந்து 5-10 மி.லி. உள்ளுக்குக் கொடுக்கவும்.

எண்ணெய்:- 2

மலச்சிக்கல் இருப்பின் மாந்த எண்ணெயினைத் தக்க அளவு வழங்கலாம். மார்பிலும் முதுகிலும் கற்பூராதித் தைலத்தினைத் தடவி வரவும்.

தைலம்:-

முட்டை, வெள்ளைப்பூண்டு இவ்விரண்டையும் சேர்த்து கருத்தைலம் வாங்கி மேலுக்குப் பூச மாந்த சன்னி போகும்.

(கத்தூரி) மாத்திரை:- 1

கஸ்தூரி 1 பங்கு, குங்குமப்பூ 2 பங்கு, கோரோசினை 3 பங்கு எடுத்து மூன்றையும் தாய்ப்பால் விட்டரைத்து அதை 130 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலுலர்த்தி தாய்ப்பாலில் உரைத்துக் கொடுக்க வேண்டும். மாந்த சன்னி நீங்கும்.

மாத்திரை:- 2

கஸ்தூரி, கோரோசினை, விஷ்ணுசக்கரம் ஆகிய மாத்திரைகளில் ஒன்றை கற்பூரவள்ளி இலைச்சாறு, வெற்றிலைச் சாறு, துளசிச்சாறு இவை ஏதேனும் ஒன்றில் தக்க அளவு தேனும் கலந்து கொடுக்கத் தீரும்.

கலிக்கம்:-

பேய்ப்பீர்க்கு கூடு, குட்டிவிளா, பேய்மிரட்டி இம்மூலிகைகளின் இலைகள், தும்பை, குப்பைமேனி, வெதுப்படக்கி, நொச்சி, திரிகடுகு, (சுக்கு, மிளகு, திப்பிலி), வசம்பு, உள்ளி, சுரைக்கொடி வேர் இவற்றை நிழலிலுலர்த்தி சூரணம் செய்து கொள்க. பெருங்காயம், இந்துப்பு சேர்க்க. இவற்றை வெற்றிலை, வேளையிலை இவற்றின் சாற்றில் அரைத்து உருண்டை செய்து நிழலிலுலர்த்துக. பின்பு அதனை வேப்பெண்ணெய், சாரணைச் சாறு இவற்றிலுரைத்துக் கண்ணிலிட மாந்த சன்னி நீங்கும்.

மருந்து:-

நல்லெண்ணெய் 670 மி.லி., முருங்கைப் பட்டைச் சாறு 1.3 லி. எடுத்து கலந்து கொள்க. வெள்ளைப்பூண்டு 35 கி., வசம்பு சுட்ட கரி 9 கி. எடுத்து பொடித்துக் கூடப் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

புகை:-

கஞ்சா வேர், ஊமத்தை வேர், கோரைக்கிழங்கு வேர் இவற்றைச் சரி எடை எடுத்து இடித்து அதை வேப்பெண்ணெய் விட்டு வறுத்துப் பொடி செய்து நெருப்பில் போட்டு அதிலிருந்து வரும் புகையைப் பிடிக்க மாந்தசன்னி போகும்.

மாந்த கணச் சன்னியின் குறிகுணம்:-

மாந்தமும் கணமும் ஒன்று கூடியபோது அவற்றின் சிறந்த குணங்கள் தோன்றுவதுடன் உட்சுரம் போன்று சூடுண்டாக்கி அடி வயிற்றிறங்கி குழந்தையைத் துன்பப்படுத்தும்.

(கோரோசினை) மாத்திரை:- 1

மாசிக்காய், திப்பிலி, கோரோசனை, சாதிக்கோட்டம், கருஞ்சீரகம், அக்கராகாரம் ஆகிய ஆறு மருந்துப் பொருட்களையும் சம அளவு எடுத்து தாய்ப்பால் விட்டரைத்து மிளகு அளவு மாத்திரையாகச் செய்து தாய்ப்பாலில் இழைத்துக் குழந்தைக்குக் கொடுக்க மாந்த சன்னி தீரும்.

(ஏலாதி) மாத்திரை:- 2

ஏலம், இலவங்கம், அதிமதுரம், வெட்டிவேர், சங்கன்வேர், நன்னாரிவேர், கொடி முந்திரி, பேரீந்து, இலாமிச்சம் வேர், கோரோசனை, தாளிசபத்திரி, நிலப்பனங்கிழங்கு, சடாமாஞ்சில், சந்தனம், தேவதாரம், திப்பிலி, இலுப்பைப்பூ, கடுகுரோகணி ஆகிய இச்சரக்குப் பொருட்களை வகைக்கு 5 கி. எடுத்துக் கொண்டு நீர் விட்டரைத்து 130 மி.கி. மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைக்க. அதனை தாய்ப்பாலில் இழைத்துக் கொடுக்க மாந்தகண சன்னி தீரும். மருந்துப் பொருட்கள் - 4 கி. என்ற கருத்தும் உள.

வாத சன்னி:-

கீல் வாத நோயில் வளிக்குற்ற விகற்பத்தால் மலம், சிறுநீர் கட்டுப்பட்டு மூளையினைப் பாதிப்பதால் இந்நோய் வருகிறது. கீல் வாயு நோயில் காணப்படும் குறிகுணங்களைக் காட்டி சன்னி நோய் தொடர்கிறது.

குறிகுணம்:-

...லும் **கனக்கும். திமிர்த்திருக்கும். உடல் மெலியும்.** ...ம் ந க்கு **தடுமாறும். மூச்சு வாங்கும். நா வறளும்.**

மூக்கும் கண்ணும் சுளிக்கும். வியர்வை அரும்பும். காய்ச்சல், கழிச்சல் உண்டாகும். உடல் குளிரும். புறந்தாளின் புறப்பகுதியில் கைப்புச் சுவை உண்டாகும். இத்தகு குறி குணங்கள் ஏற்படின் மரணமேற்படும்.

எண்ணெய்:-

கடுகு, முருங்கைப்பட்டை, வெள்ளை வெங்காயம், வசம்பு, பெருங்காயம் இவற்றைச் சமவெடை எடுக்க. சிற்றாமணக்கெண்ணெய் 1.3 லி. எடுத்து மேற்சொன்ன சரக்கைப் பொடித்து சேர்த்துக் காய்ச்சி 5-10 மி.லி. அளவு குடிக்க பாரிச வாய்வு சன்னி தீரும்.

(வயிரவக்) குளிகை:- 1

பச்சை நாபி, திரிகடுகு, (சுக்கு, மிளகு, திப்பிலி), கந்தகம், வெண்காரம், கல்மதம், தாமிர பற்பம், சாதிலிங்கம், ஊமத்தைவிதை இவற்றைச் சமமாயெடுத்து இஞ்சிச்சாறு விட்டரைத்துக் கடலை அளவு உருண்டை செய்து செவ்வியம், சித்திர மூலம் சேர்ந்த குடிநீரில் ஒரு உருண்டையை உரைத்துக் கொடுக்க சன்னி வாதங்களெல்லாம் தீரும்.

(கோரோசினை) மாத்திரை:- 2

மலத்தைக் கழிப்பதற்கும் சுரத்தைத் தணிப்பதற்கும் கோரோசனை மாத்திரையினைத் தினமும் மூன்று வேளை வெற்றிலைச் சாற்றிலும் தேனிலும் அனுபானித்துக் கொடுக்கவும்.

(அட்டபைரவ) மாத்திரை:- 3

அட்டபைரவ மாத்திரையை காலை, மாலை இரு வேளையும் துளசிச் சாற்றிலும் சிற்றாமுட்டி அல்லது அரத்தைக் குடிநீரிலும் அனுபானித்துக் கொடுக்கவும்.

உருண்டை:- 4

வெண்காரம், திப்பிலி, கடுகுரோகணி, சுக்கு, மிளகு, கடுக்காய், இந்துப்பு, செவ்வாலம் விதை இவற்றைச் சமனெடுத்து இண்டுவேரிலாவது இஞ்சிச் சாற்றிலாவது அரைத்துப் பாவட்டங்காய் அளவு உருண்டை செய்து இஞ்சிச் சாற்றிலிடவும். சன்னி வாத (சுரம்) போகும்.

மருந்து:-

செவ்வியம், திப்பிலி, அதிமதுரம், கருவேம்பு, மரமஞ்சள், சங்கின் வேர் இவற்றைச் சமமாயெடுத்துக் கொள்க. அவ்வெடைக்குச் சமமாக கஞ்சாவையும் இரண்டு மடங்காக சர்க்கரையையும் சேர்த்து நன்றாக அனைத்தையும் ஒன்றாக மத்தித்துக் கொள்க. அதனை 5 கி. எடுத்து சன்னி வாதமுள்ள குழந்தைக்குக் கொடுக்க நீங்கும்.

முகவாத சன்னிக்கு உள்ளுக்கும் மேலுக்கும் எண்ணெய்:-

பேய்ப்புடல், திராய், வேப்பம்பட்டைத் தோல், ஆடாதோடைச் சாறு வகைக்கு 1.3 லி. எடுக்க. கோஷ்டம், மரமஞ்சள், தேவதாரம், அதிமதுரம், சதகுப்பை, விளாவரிசி, கற்கடகசிங்கி, முன்னைவேர், இலாமிச்சம் வேர், இருவேலி வேர், குந்திருக்கம் வேர் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து வேண்டிய அளவு வேப்பெண்ணெய் விட்டு காய்ச்சி பதத்தில் வடித்து 5-10 மி.லி. உள்ளுக்குக் குடித்து மேலுக்குப் பூச முகவாத சன்னி நீங்கும்.

வாத சன்னிக்குப் பூச்சு:-

முட்டைத் தைலத்தினையும் வேப்பெண்ணெயினையும் கலந்து மேலுக்குப் பூச வாத சன்னி நலமாகும்.

வாதசன்னி கை, கால், முடம் வாத காலாந்தகத் தைலம்:-

நொச்சியிலைச்சாறு, புளியிலைச்சாறு, எருக்கம்பால், காடி, வெள்ளாட்டுப்பால், நல்லெண்ணெய் இவற்றை வகைக்கு 1.3 லி. வெள்ளை வெங்காயம் 52 கி. எடுத்து அரைத்துக் கலந்து காய்ச்சி மெழுகு பக்குவத்திலே வடித்துப் பூசவும். குழந்தைகளின் 80 வகை வாத சன்னிகள் தீரும்.

விட சன்னியின் குறிகுணம்:-

பின் கழுத்தில் வலித்தல், உடல் மிகக்காய்தல் அத்துடன் குளிர் தல், அதிக நீர் வேட்கை ஆகியன ஏற்படின் அது விட சன்னியாகும்.

(ஏலாதி) மாத்திரை:-

சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், கிராம்பு, ஏலம், கடுகுரோகணி, மஞ்சள், நாபி ஆகிய ஏழு பொருட்களையும் வகைக்கு 5 கி.

எடுத்து கல்வத்தில் இட்டுப் பொடியாக்கி எலுமிச்சம் பழச்சாறு விட்டு 6 மணி நேரம் அரைத்து 65 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாக நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு மாத்திரையாக மாசிப்பத்திரிக் குடிநீரிலிட விடசன்னி தீரும்.

விடதோட சன்னிக்கு கத்தூரி மாத்திரை:-

கத்தூரி ஒரு பங்கு, குங்குமப்பூ இரண்டு பங்கு, கோரோசனம் மூன்று பங்கெடுத்து ஒன்று சேர்த்து தாய்ப்பால் விட்டரைத்து 130 மி.கி. அளவாக உருட்டி தாய்ப்பாலில் கொடுக்க விடதோட சன்னி நீங்கும்.

சித்த மருத்துவத்தில் மேற்குறிப்பிட்டுள்ளவாறு சன்னியின் காரணங்கள், குறிகுணங்கள், வகைகள் அமைய, நவீன மருத்துவத்தில், சன்னி வருவதற்குரிய காரணங்கள், அதன் தன்மைகள் குறித்து கீழ்கண்டவாறு குறிப்பிடப்படுகின்றது.

ஆங்கிலமுறை மருத்துவம்

கிளாஸ்டிரியம் டெட்டனஸ் (Clostrium Tetanus) என்ற பேக்டீரியாவினால் சன்னி உண்டாகிறது. இந்த பேக்டீரியா மனிதன் மற்றும் மிருகங்களின் குடலில் இருக்கின்றது. மண்ணிலும் வாழ்கின்றது. துருபிடித்த ஆணிகள் உண்டாக்கும் காயங்கள், தோட்ட வேலைக்குப் பயன்படும் மண்வெட்டி போன்ற ஆயுதங்களால் உண்டாகும் காயம், கீழே விழுவதால் ஏற்படும் காயம் போன்றவற்றால் இந்நுண்கிருமி உடலினுள் செல்கின்றது.

வளரும் நாடுகளில், தூசிகளில் இதன் ஸ்போர்ஸ் இருக்கின்றது. மனித மலம் மற்றும் மிருகங்களின் சாணத்திலிருந்து இந்த ஸ்போர்ஸ் உருவாகின்றது. இக்கிருமி கலந்த தூசி காயத்தில் படும்போதும் சன்னி ஏற்படுகிறது. சுகாதாரமற்ற இடங்களில் குழந்தை பிறக்கும் போதும் தொப்புள் கொடியைத் துரு பிடித்த அரிவாளால் அறுக்கும் போதும் இந்நோய் பரவுகின்றது.

இக்கிருமி வளரமுடியாத சூழ்நிலையில் ஸ்போர்ஸ் (Spores) என்ற உருவத்தைப் பெற்று பல வருடங்கள் பூமியில் உயிரோடு இருக்கின்றது. அழுகிய புண்கள்'ஆக்ஸிஜன் குறைவாக உள்ள புண்கள் இவற்றில் இந்த ஸ்போர்ஸ் சன்னியை உருவாக்கும் உருவத்தை

அடைகின்றது. இக்கிருமி புண்களை விட்டு வேறு இடத்திற்குப் பரவாது. ஆனால் ஒரு வகை விஷத்தை உண்டு பண்ணுகிறது. இவ்விஷமானது நரம்பு மண்டலத்திற்குள் சென்று பாதிப்பை உண்டாக் குகிறது. இப்பாதிப்பினால் தசையில் இறுக்கமும் சொடுக்கலும் உண்டா கிறது.

குணம்:-

இந்நோயின் குணத்தை வைத்தே இந்நோய் கணிக்கப்படுகிறது. சில நேரங்களில் மட்டுமே இக்கிருமியைப் புண்ணிலிருந்து கண்டு பிடிக்க முடிகிறது. காயம் ஏற்பட்ட 2 நாட்களிலிருந்து பல வாரங்களுக் குள் இந்நோய் தெரிய வரும். மிகவும் குறுகிய காலத்தில் நோயின் தன்மை தெரிந்தால் விஷத்தன்மை மிகவும் அதிகம் என்று பொருள்.

குறிகுணங்கள்:-

இந்நோயால் பாதிக்கப்பட்டவருக்கு வாயை அசைக்கக்கூடிய 'மெஸிட்டர்' என்ற சதை பாதிப்பதால் வாயைத் திறப்பதோ மெல்லு வதோ மிகவும் துன்பமாக இருக்கும். அதனால் இதற்கு 'பூட்டிய வாய்' என்று பெயர்.

முகத்திலுள்ள தசை, கழுத்து, கழுத்துக்கும் இடுப்புக்கும் இடையே யுள்ள தசைகள் மிகவும் இறுக்கமாக இருக்கும். நெற்றியிலுள்ள தசைகள் இறுக்கமாவதால் புருவம் உயர்ந்து இருக்கும். முதுகுப்புறம் வளைந்து இருக்கும். வயிறு, எழுதும் பலகை போல் மிகக் கடினமாக இருக்கும். சன்னிநோய் அதிகமாக இருந்தால் சதை முறிப்பு அதிகமாக வும் கொடிய முறையிலும் அமையும். இச்சதை இறுக்கமானது. தானாகவும் வரும்; நோயாளியை நகற்றும் போதோ சத்தம் உண்டா கும் போதோ வரும்.

இச்சொடுக்கலானது வலியையும் உண்டாக்கும். இச்சதை முறிப் பும் கொடுக்கல் ஒரு வார காலத்தில் அதிகமாகும். இதனால் வலிமை குறைவாகும். உடலில் வலிமையும் எதிர்ப்புச் சக்தியும் குறையுமானால் மூச்சுத்திணறல், நிமோனியா சுரம் ஏற்படும். இறுதியில் நோயாளியை இறக்கச் செய்யும்.

விஷமானது குறைவாக இருந்தால் நோயின் குணம் குறைவாக இருக்கும். வலிப்பு வராது. இரத்தக் கொதிப்பு ஏற்படும். சில சமயங்களில் சன்னி குறிப்பிட்ட பகுதியில் இருக்கும். அப்போது புண்ணுக்கு அருகாமையிலுள்ள தசை மட்டும் இறுக்கம் அடையும்.,

இவ்வகை சன்னிக்கு மருத்துவம் செய்தால் விரைவில் குணம் கிடைக்கும்.

இந்நோய் குழந்தைகளைப் பாதித்தால் 100% இறப்பையும் வயது வந்தவர்களுக்கு 40% இறப்பையும் உருவாக்குகின்றது.

வருமுன்னர் காத்தல்:-

சன்னி நோய் வராமல் காக்க வேண்டும். காயம், புண் ஏற்பட்ட பிறகு சிறிதாக இருக்கும் போதே அதைக் களைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். புண்ணின் மீது அழுக்கான துணி கொண்டு துடைத்தல், தூசி, தண்ணீர் படுதல் தவிர்க்க வேண்டும். சாணியைப் புண்களின் மீது வைத்து தேய்ப்பது கண்டிக்கப்பட வேண்டும். குறைக்கப்பட வேண்டும்.

சன்னி - பாடல்

சன்னியின் குறிகுணம்:-

பத்தியத் தாழ்வால் மாந்தம்
பகைசெயும் விதங்கள் மெத்த
சுற்றிய மயக்க முண்டாய்ச்
சொல்லொணா சன்னி எய்தும்
முற்றிய சுரமுந் தாக
முதிர்ந்திடும் நாவில் முள்ளு
புத்தியுங் கலங்கிக் கண்ணும்
போதவே தாழுந் தானே.

(புத். 476-132)

குடிநீர்:- 1

திட்டான சன்னிக்குக் கஷாயஞ் சொல்வேன்
சிறிய வழுதலையின் வேர்க்களஞ்சி நாலு
தொட்டான சுக்குரண்டு சீந்தித் தண்டு
துவளயிடித் திருநாளி நீரிற்போடே
போட்டதனை யெட்டொன்றாய் குறுக்கிக் கொள்ள
புகழான சன்னியெல்லாம் முறிந்து போகும்.

(ஏடு. 224-160)

குடிநீர்:- 2

கூறும் சன்னி பதிமூணும்
கோணமா முன்னே நிலவேம்பு
கூறும் ஓமம் வசம்புடனே
மிக்க சுக்கு பற்படகம்
தேறும் புடலும் சமன்கொண்டு
தெளிவாய்க் காச்சிக் குடிப்பீராய்
வீறு சன்னி பதிமூணு
வின்னி பறந்து போய்விடுமே!

(ஏடு. 264-267)

எண்ணெய்:- 1

வேப்பெண்ணெய் படியரைதான் சங்கிலைச் சாறு
விதமான படியரைக்கால் பாவட்டைச் சாறு
ஆப்பட்ட முசுறுமுட்டை படிய ரைக்கா
லடைவாக வெண்ணெயிட்டுக் கடைம ருந்து
மாப்பட்ட சுக்குதிப் பிலிவ சம்பு
வளமான மிளகுமிரு சீர கந்தான்
தாப்பட்ட கத்தூரி மஞ்சள் பூண்டு
தனித்தனிவ ராகனெடை வாங்கிக் கொள்ளே.

வாங்கியே பொடியாக்கி யெண்ணெ யிட்டு
வளமான மெழுகுபதம் வடித்துக் கொண்டு
தாங்கியே துட்டெடைதான் ஒருவே ளைக்குத்
தயவாகக் கொடுத்துவரத் தீரும் வியாதி

தூங்கிவிழுஞ் சந்நி .... தானே
சொல்லுகிறேன் பறக்குமே மெய்தா னீது
சாங்கமுள எண்ணெயிது கைவி டாதே
தப்பாவெந் நீர்ச்சோறு சாப்பி டாயே.

(476-134), (477-319).

எண்ணெய்:- 2

சாப்பிடவே வேப்பெண்ணை யரைப்படிதா னாகும்
தன்னோடு தனிக்குட்டி விளாவின் வேரும்

தாப்பிட்ட தூதுளைநாய் வேளை வேரும்
  தகுஞ்சீரங் கத்தூரி மஞ்ச ளோடு
மாப்பிட்ட வெங்காயம் சிற்ற ரத்தை
  மரமஞ்ச ளிவையெல்லா மெண்ணெ யிட்டுக்
காப்பிட்டே யெரித்துபத மாயி றக்கிக்
  கரண்டிகொளச் சந்நியெலாங் காணா தன்றே.

(477-319), (476-135).

எண்ணெய்:- 3

போமப்பா சன்னியெல்லாங் கடலே புக்க
  புகழான தயிலமொன்று சொல்லக் கேளு
நாமப்பா வேப்பெண்ணெய் புங்(கு) யெண்ணெய்
  நலமான புன்னையெண்ணெய் பசுவின் நெய்யுங்
காரப்பா காட்டிலா மணக்கி னெண்ணை
  கருவாக சமன் சேர்த்துக் கொண்டு
காணப்பா குக்கிடத்தின் முட்டை பத்து

மாலான மஞ்சளைத்தான் கூட விட்டு
  மயங்காதே கடைமருந்து சொல்லக் கேளு
சாலான சாதிலிங்கந் தீமுரு கலசந்
  தானகெந்தி ரசபா ணந்தான்
ஆலான நாபியோடு மிளகு திப்பிலி
  அழகான ஆனையுட திப்பிலியும் போடே

போடப்பா லவுங்கமொரு நேர்வா ளந்தான்
  புகழான களஞ்சிநிறை சமனாய்க் கூட்டி
நாடப்பா சித்திமூல கிஷாயந் தன்னால்
  நலமாக சாமமொன்று அரைத்துக் கொண்டு
சாடப்பா எண்ணையிலே கரைத்து விட்டு
  சதிராகக் கொதிக்கயிலே யெருக்கன்...
கோடப்பா கொடிக்கள்ளி சதுரக் கள்ளி
  குணமான இலைக்கள்ளிப் பாலுங் கூட்டே

கூட்டவே திருகுகள்ளி நானா கள்ளி
  கூசாதே படர்ந்தகள்ளி முள்ளி கள்ளி
சாடவே பால்வகைதா னுழக்கு மாகுஞ்
  சாதகமா யெண்ணெயிலே விட்டுக் கிண்டி

மூடவே கமலம்போல் தீயை யிட்டு
முதிராமல் கொதிக்கயிலே கஸ்தூரிச்
சாடப்பா வஞ்சுபலம் முலைப்பாலாலே கேளு
தானரைத்துக் கரைத்திடுநீ எண்ணெயிலே வாரே

வாரப்பா பாலதுதான் படிகால் வீதம்
வளமான தேசிப்பால் படிகா லாகுஞ்
கோரப்பா காட்டெருமைப் பால்ப லந்தான்
திறமாக எண்ணெயிலே விட்டுக் காச்சி
யாரப்பா பச்சி லைநால் போடு
வப்பனே வெள்ளுள்ளி யரைத்துப் போடே
சேரப்பா மெழுகுபத மான போதே
முகன்நறுகு பூசித்து வடித்தி டாயே

வடித்தயில மதைபரணி தனில டைத்து
வாகான கோரோசினையுங் களஞ்சி போட்டு
பிடித்திட்ட பத்துக்கும் நாடி...........
பேரான கரண்டிநின்ற எண்ணெ யுள்ளேகொள்ள
துடித்திட்ட சன்னியெல்லாம் பறந்து போகும்
துடியான யிசுவுக்குத் துவாலை போட
நடித்திட்ட நாடியெல்லா மிறுக லாகும்
நலமில்லா யிசிவெல்லாம் நளின மாமே!

(ஏ. 336-112-114)

(சோதிருஷி) தைலம்:- 7

ஆதிமறை விளங்கும் ஆயுர்வே தத்துணர்ந்த
சோதிருஷி தைலம் சொல்லக்கேள் - நீதியாய்
அவுரிவேர் முன்னைவேர் அழிஞ்சில்வேர் சாரணைவேர்
சிவனார் வேம்பின்வேர் சிறுபுள்ளடி - துவராணை

சங்கன்வேர் செங்கத் தாரிவேர் வாகைவேர்
புங்கன்வேர் நொச்சிவேர் பூவரசு - துங்கமுள்ள
குட்டிக்களா வேரும் குட்டிக் குமிழ்வேரும்
குட்டிவிளா வேர்பெருங் குதம்பைவேர் - திட்டமுடன்
முருங்கைமிள கருணைவேர் முட்கா வேளைவேர்
அரியா வட்டைவேர் ஆதொண்டை - விரும்புகிற
வெட்பாலை வேர்எருக்கன் வேர்க்கத் திரிவேர்

துப்புகொடி வேலிவேர் தூதுவளைவேர் - தப்பில்லா
கூத்தன் குதம்பைவேர் கூறும் வண்டரைவேர்
காத்த வேலிவிட்ணுக் காந்திவேர் - சீர்த்தியள
சத்தியின் சாரணைவேர் தளிர்த்தநன் னாரிவேர்
அத்தம்போ லாகும்எலி யாலின்வேர் - சுத்த
முகைக்கின்ற வேர்வகைகள் முப்பத்து மூன்றும்
வகைக்கு விராகனெடை வாங்குபத்து - அகைக்கும்
நல்லபா கல்சாறும் நாய்ப்பாகல் சாறும்
செல்ஆடா தோடைச்சார் சின்னிச்சார் - வல்ல
எருக்கிலைச்சார் புங்கிலைச்சார் எலுமிச்சம் பழச்சார்
பெருக்கமுடக் கற்றான்சார் பின்னும் - திருக்குடைய
காட்டுக் குறிஞ்சான் கனமாவி லிங்கைச்சார்
பாட்டில்வருஞ் சார்வகைகள் பத்துங் - கூட்டி
வகைவகைக்கு கால்படியாய் வளமாக வேயளந்து
தொகையுடனே சேர்த்து துடியாக - பகையில்லா
வெளவால் இரண்டு வாயாசமும் தான்ஒன்று
ஒவ்வா பெரும் ஓணான் ஒன்று - சவ்வா
முயல்ஒன்று சிற்றோணான் மூன்றுடும்பு ஒன்று
கயல்வழியே சர்ப்பக் கண்டம் ஒன்று - வயனப்
பச்சை மயிலிறகு பண்பாக அந்து
சச்சமாய் நல்லவடம் தான்அந்து - இச்சைப்
பசுவினுட நீரும் பகர்மேதியின் நீரும்
விசயவெள் ளாட்டின்நீர் மேற்சிறுநீர் - நுரையா
வகைவகைக்கு கால்படியாய் வண்மையுடன் அளந்து
தொகையாய்க் கடைச்சரக்கு சொல்லக்கேள் - தகைமைக்
கருஞ்சீ ரகத்துடனே கஸ்தூரி மஞ்சள்
உரிமையுடன் பூதக் கரப்பானும் - வரஞ்சிறந்த
மஞ்சள் மரமஞ்சள் வாய்விளங்கங் கடுக்காய்
தஞ்சை நகர்கிட்டம் சதகுப்பி - மிஞ்சும்நற்
சிற்றரத்தைப் பேரரத்தை செண்பகப்பூ திப்பிலியுஞ்
சற்றாம் பெருங்காய் சாதிக்காய் - பற்றுடைய
செவ்வியங் குக்கில் சிறுதேக் கரைப்பொடியும்
வெவ்வகைக் காறு விராகனெடை - கல்வும்
வசம்பு விராகனெடை வரிசையுடன் பத்து
இசைஉள்ளி விராகன் எடைபத்தும் - நிசம்பெறவே
வீசும் வலம்புரிக்காய் விராகனெடை யீரெட்டு
வாசமுறக் கொண்டுவந்து வைத்துமே - ஆசையுடன்

செய்யும் வகைவிபரம் தெளிவாகச் சொல்லக்கேள்
மைவிழிசேர் திவ்ய மடமயிலே - பையவே
காட்டுவேர் எல்லாம் கதிக்கக் கியாழமிட்டு
மாட்டிக் கடைச்சரக்கில் வார்த்தரைத்து - ஊட்டியே
பச்சிலைகட் சாற்றைவிட்டுப் பரிவாகத் தானரைத்து
மிச்சமுள்ள கோமியங்கள் விட்டரைத்துக் - கச்சடையாம்
சாணிபதம் ஆனால் சரியெனவே பாண்டத்தில்
பேணி நீயிட்ட பிற்பாடு - வாணியே
வேப்பெண்ணெய் ஓர்நாழி விளக்கெண்ணெய் ஓர்நாழி
கோப்பாக முன்மருந்திற் கூடவிட்டு - பூப்பாக்
கலக்கிஅடுப் பேற்றும் போதில் காய ஓணான்
துலக்கமுள்ள வெளவாலும் சொல்முயலும் - பிலக்க
உடும்போடு சிற்றோணான் உக்ரநல்ல பாம்பும்
இடும்பொன்றுஞ் செய்யா தெடுத்து - திடமாய்
அறுத்து திரம்பாண்டத் தம்மருந்திற் பிடித்து
மறுத்துத்தோல் இறகுகுடல் வாங்கி - குறித்ததோர்
எண்ணெயிலே தான்விட் டெரிக்கிரண்டு சாமம்
வன்மையுடன் தான்இறக்கி வைத்து - தன்மை
மறுநாள் அடுப்பேற்றி வளமாகத் தானெரித்து
வெறுவா மெழுகுபத மேபார்த்து - அறிவாக
இறைச்சிகளை யெல்லாம் எடுத்தெறிந்து போட்டு
மறைத்து வடிகட்டி வைத்து - மெள்ளவே
உள்ளுக்குக் காசெடைதான் உண்டையுடன் கொடுத்து
தெள்ளுதலை முழுதுந் தேய்த்து - மெள்ளவே
சர்வாங்க முந்துவளை தானிட வேயிதற்கு
விரைவாக தீரும் வியாதிகேள் - பரவியெழும்
கோண வலிப்புடனே குமரகண்ட வலிப்பும்
காண பிறவலிப்பும் காக்கைவலி - பூணுகிற
சன்னி வலிப்பு தாங்காத உள்வலிப்பும்
பன்னிம ரணவலிப்பும் பார்மீது - இன்னம்
முகவாதத் தின்வலிப்பு முகசன்னி யின்வலிப்பு
இகலும் இமையிடிப்பு எண்ணஞ்செய் - புகலுங்
குதிரை வலிப்பு கொள்ளை நடுக்கின்வலிப்பு
சதிராய் முசல்வலிப்பு சகவாதம் - பதறியெழும்
பாரீச வாதம் படருஞ் சந்தின்வாதம்
மாரிசமாம் முடக்கு வாதம் - வாரீக
உள்ளங்கால் வாதம் உச்சி வாதத்தோடு

கள்ளமில் லாதக் கணுவாதம் - மெள்ளவே
வாதமென்னப் பட்டவையும் வலிப்பென்னப் பட்டவையும்
பாதக சன்னியென்னப் பட்டவையும் - ஆதரையில்
மெய்யாகத் தீரும் வினவும்இதற்கு பத்தியம்
பொய்யாய்ப் புகையிலையும் புளியும் - வெய்யக்
கருவாடு மீனிறைச்சிக் கரப்பான் பண்டந்தள்ளி
பரிவா யீந்தால் பலிக்குமே - பெரியவர்
சிறியவர்க்கும் சைஸவர்க்கும் சேய்கட்கும் ஆமென்று
நெறிசோதி ருஷிசொன்ன நேர்.

(476-141-143)

(ஏலாதி) மாத்திரை:- 3

நல்குவீர் நல்லேலம் கிராம்பு முத்தம்
நல்மதுர மிருவேலி கடுகு சுக்கோ
டல்குவீர் மதுரரோ சனநன் னாரி
அரியநிலப் பனையின்வேர் தாளி சந்தான்
வல்குவீர் சடாமாஞ்சில் சந்த னத்தூள்
வகையிலுப்பைப் பூவுடனே தேவ தாரம்
மல்குவீர் திப்பிலிரோ கணிவ கைக்கு
வரிசையாய்க் கால்கழஞ்சு நிறுத்துக்கொள்ளே

நிறுத்துமே கல்வத்திற் போட்ட பின்பு
நிலையான செவ்விளநீர் தன்னை வார்த்து
வறுத்துமே யிருசாமம் விடாம லாட்டி
வழிமைபோ லாகுமிந்த வரிசை பாராய்
குறித்துமே முலைப்பாலாற் சாமம் ரண்டு
கூசாம லரைத்துமே வழித்தெ டுத்துப்
பருத்திகுன்றி யளவாக வுண்டை செய்து
பட்சமொன்று நிழலுலர்த்திப் பதனம் பண்ணே

பதனமாய் முலைப்பாலி லுண்டை யீயப்
பறக்குமே பழஞ்சுரம் விடாத காய்ச்சல்
விதனமா யம்மையார் கூந்தல் கொண்டு
விருப்பமாய்க் கியாழமிட் டதனி லீய
மதனமந்தப் பதின்மூன்று சந்நி.........
.... கதிகெட் டோடும்.

(572-35), (477-285, 286), (476-129,130)

மாத்திரை:- 4

கூட்டப்பா அதிமதுரம் அக்கிரா காரம்
குணமான கஞ்சாவும் கற்கடக சிங்கி
வாட்டப்பா முச்சரக்குஞ் சுத்தி செய்து
வளமான மருந்தெல்லாம் கல்வத் திட்டு
காட்டப்பா யெலுமிச்சம் பழச்சார் சாமம்
கனமான யிஞ்சிச் சார்..... .....
ஆட்டப்பா முலைப்பாலில் சாம மாட்டு
அப்பனே ஆட்டினபின் மாத்திரைதான் செய்யே

செய்யவே இதுக்கெல்லா ....
...... மான பூப்போட்டால் சரக்கெல்லாம் கொள்ளும்
வையப்பா ஒருரைப்பு தேனில் கொள்ள
வளமான சன்னிபதி மூன்றும் போகும்
மெய்யப்பா அனுபான மறிந்து கொள்ளு
மைந்தனே விஷசன்னி தோஷம் போகும்
கையப்பா ஏழையுந்தான் வயித்தியஞ் சொன்னேன்
கருதியதோ ரெனைப்போலே வைத்தியம்சொல் லாரே!

(ஏடு. 336-133)

அலத்திடு சன்னியின் குறிகுணம்:-

கூட்டங்கண் டெழுந்தி ருக்கும்
குளிரும்வாய் பிதற்ற லுண்டாம்
வாட்டமா யிளைக்கும் வேர்க்கும்
மதிமுகம் வெளுக்கும் பேய்போல்
தேட்டமாய் வார்த்தை யுண்டாஞ்
சீரில்லா மூச்சுண் டாகும்
ஆட்டமாஞ் சரீரந் தானும்
அலத்திடுஞ் சன்னி யாமே.

(477-317)

(வெற்றிலைச்) சுரசம்:-

சன்னவெற் றிலைசுக் கோமஞ்
சாற்றுமா விலிங்கு நொச்சி
துன்னிய வக்கரா காரஞ்
சூழ்முருங் கையு மெருக்கும்

தின்னுஞ்சிற் றரத்தை கண்ட
திப்பிலி நறுக்கி வாங்கிப்
பண்ணுமிச் சுரசத் தாமை
பற்பமுங் கலந்து வாரே.

(477-317)

ஆமசன்னியின் குறிகுணம்:-

முலையுண்ணா தழுது பார்க்கு
முகமது வேற தாகும்
பலபல வலிப்புண் டாகும்
பாலகன் குரலுங் கம்மும்
மலமது கட்டி மெய்யில்
வந்திடுஞ் சுரமு மீதே
அலமது வல்ல மின்னே
வாமத்தின் சந்நி தானே.

(476-136)

(கடுக்காய்) குடிநீர்:- 1

கடுக்காய் கடுகு ரோகணியும்
கடிய சிவதை திரிகடுகு
முடுக்கா யிடித்துக் காய்ச்சியதை
மூரிக் குழவிக் கீந்திடவே
....
....
....
ஆம சன்னி யகன்றிடுமே.

(476-136), (477-315).

குடிநீர்:- 2

சாரணைக்காய் முக்குரட்டை தன்காய் பொடுதலையும்
பூரணமா முக்கடுகு பூந்துளசி - வாரணியுங்
கொங்கையரே சீரகமுங் கூட்டிக் குடிநீரை
உண்ணவே வாமசன்னி யோடும்.

(476-136), (477-314, 315).

(ஐந்தெண்ணெய்) தைலம்:- 1

கொடிவேலி வேர்ப்பட்டை சங்கம் வேரும்
குருந்தெருக்கு வேர்ப்பட்டை முடக்கத் தானும்
வடிவாக வைத்தெண்ணெய் விட்டுக் காய்ச்சி
வந்தசந்நி யானதற்கு வாகாய்க் கேளு
துடியாக வண்டம்வெள் ளுள்ளித் தைலம்
துருசாக விறக்கியெங்குந் துவாலை செய்யத்
தடிவான வாமசந்நி யோடு மென்று
சாற்றினார் பொதிகைமுனி சாற்றி னாரே.

(477-315), (476-137).

(முட்டைத்) தைலம்:- 2

....
....
கடுக்காய் கன்னிக் கோழிமுட்டை
துய்ய தயிலம் வேப்பெண்ணெய்
அடுக்கா யுள்ளு மேலிடவும்
ஆம சந்நி யகன்றிடுமே.

(477-315), (476-136).

குளிர்சன்னியின் குறிகுணம்:-

குளிர்சன்னி பாலர்க்குக் கூடின் மிகவும்
குளிர்தலுடன் வேர்வை கொடுத்து - நளினமாய்ப்
பின்னருங் காய்ந்து பெருகத் தலைவலித்தே
அன்னநீர் கொள்ளா தறி.

(477-318)

உருண்டை:- 1

ஈந்திடாய் விலாடியுண்டை விரும்பிக் கேளு
இனிதான திரிகடுகு சாதிக் காயும்
ஈந்திடாய் கிராம்பேலம் ரோகணியும் மஞ்சள்
இதன்நாபி சரக்குவகை கழஞ்ச தாக
ஈந்திடாய் கல்வத்தில் பிடியா யிட்டு
இயல்பாகப் பழச் சாற்றில் சாமம்ரண் டாட்டி
ஈந்திடாய்ப் பயிறளவு உண்டை செய்து
எழில்மாசிப் பத்திரியின் கியாழத் தூட்டே

ஊட்டவே ....
உணர்வான குளிர்சந்நி உடன்கெட் டோடும்
நீட்டவே யிந்நூலை முந்நூற் றாக்கி
நிகழ்த்தினேன் குழந்தைபிள்ளை யிரக்கத் தாலே.

(572-36)

(இராமபாணக்) குளிகை:- 2

மஞ்சளும் சாதிக் காயும்
வருந்திரி கடுகுங் கிராம்பு
மிஞ்சிய கடக ரோணி
மிருமர மஞ்சள் நாபி
அஞ்சிய நிம்ப மோர்தான்
சாறுவார்த் தரைத்து ருட்டி
கொஞ்சிய ராம பாணங்
குளிர்சன்னி .... போமே.

(477-318)

கோராம சன்னியின் குறிகுணம்:-

ஓடுமே வாயுமிகும் நாவி பற்றி
வுடலெங்குங் கனகனத்துச் சூடுண் டாகும்
நாடுமே சதைகளெல்லாம் குலுக்கிக் காட்டும்
நல்லவிழி கால்கைகள் பதைப தைக்கும்
தேடுநீ பார்ப்பதற்கு மாந்த மென்று
செப்பவே வாதநீர் கலந்து கொண்டு
பாடுதற்கு வாயில்லை தாளைப் பற்றும்
பருத்தவுடம்பு நெருப்பதுபோல் மிகவும் காயும்
கூடுமே வசைந்தசைந்து வலிக்கும் பாரு
கோராம சந்நிமாந்தக் கொடுமை தானே.

(477-315), (476-137).

(வேப்பம்பட்டை) எண்ணெய்:-

....
கோதில்லா நூறாண்டில் வேப்பம் பட்டை
தடுமையில்லா கார்த்திகையின் கிழங்கு முள்ளி
தருகருடன் தவசிவேர் சிவமூலி வேரும்

படுமைபடா சிற்றண்டம் முசுறண் டங்கள்
பதமான நெய்கள்வகை பலமே தூக்கு
கடுமையுள்ள முட்டிக்காய் சாறு நாழி
கணவேம்பின் கிழாயமது நாழி கூட்டே.

கூட்டுவெள்ளைச் சாரணைவேர் கொத்தான் வேர்தான்
கோதையே யேழுவகை பலமி ரண்டாய்
ஈட்டுநறு விளக்கெண்ணெய் நாழி சேர்த்தே
ஏலஞ்சீ ரகமிரண்டு ரோணி காயம்
தீட்டுவகை பலமிரண்டு பொடித்துப் போட்டு
தீயெரித்து மெழுகாக்கி காசிடையே வாரு
....
மூன்றுநாள் பத்தியமாய் முனைந்து பாரே.

(476-137), (477-316).

சந்திர சன்னிக்குக் குடிநீர்:-

முடக்கொத் தான்நீர் முள்ளியுடன்
முதிர்ந்த சாரணை வெண்ணெச்சில்
அடக்க மான திப்பிலியும்
அசம தாக மிந்துப்பு
கடுக்கா யிருநாழி நீர்விட்டு
கடுகக் காய்ச்சி யுழக்காக்கி
குடிக்க சந்திர சன்னிகளும்
ஏகு மென்றே கூறினரே!

(ஏடு. 822-305)

தாந்திரிக சன்னியின் குறிகுணம்:-

பசியது போலுந் தோணியிடும்
பிரித்தா கத்துடன் முளிக்குமாக
கசிவ தில்லாமலே நோக்கில்
சுருக்கம் போலே பொன்னேற பிரம்ப
அசைவத் துளமே நடுங்கியிடும்
அதிசாரத்துடன் சுவாச மதாய்
தசைவது தலையே நொந்திருக்கும்
தாந்திரிக சன்னி யிதுதானே!

(ஏடு. 316-60)

சேத்துமம் சுவமும் வீங்கும்
சிரப்பசிப் போலே தோனும்
ஏத்தமா பாதம் வீங்கும்
எரைத்திடும் வயறு தானும்
நீத்துமேல் மூச்சு வாங்கும்
நின்னுடல் நடுங்கி நிற்கும்
சாத்திடா தடிக்கு நாக்கும்
தாந்திரிக சன்னி தானே!

(ஏடு. 316-58)

தாந்திரிக சன்னியின் குறிகுணம்:-

வேகமாய்ச் சுரமுண் டாகும்
மேனியும் பதைப்புண் டாகும்
மோகமாய் முலையுண் ணாது
மூர்ச்சையாய்க் கண்ணு றங்கும்
ஆகமே பசலை காட்டி
யரையினிற் குளிர்ந்து காணும்
தாகமே மிகவுண் டாகும்
தாந்திரிக சன்னி யாமே.

(476-138), (477-316)

குடிநீர்:- 1

முத்தக் காசு சந்தனமும்
முவந்த சுக்கு பற்படாகம்
சுத்த விலாமிச்சை யிருவேளை
துலங்குந் திப்பிலி சமபாக
யித்தைக் குடிநீ ராய்க்காய்ச்சி
யிதமாய் குடிக்க வல்லீரா
யிறுந்து பாக சன்னியது
ரோசனை தூரம் தான்போமே.

(ஏடு. 316-58,59)

குடிநீர்:- 2

தண்ணி முட்டான் யிருவேலி
தக்க மதுரம் சிறுக்கீரை
நன்னாரி விலாமிச்சன் நன்னாரி
நல்ல முந்தி ரிகைகனியும்

குன்னாத யிருநாழி நீர்விட்டு
குறுகக் காய்ச்சிக் குடிப்பீராய்
விண்ணா யிதுசன் னியது
தாந்தி ரீக மீளுமதே.

(ஏடு. 822-304)

புகை:-

வாய்த்தவேப் பெண்ணெ வேளை
வளரும் மத்தை கஞ்சா
சேர்த்திடு முருங்கை யோடு
சித்திர மூல வேரும்
காந்துவெள் ளுள்ளி வசம்பு
கம்பளம் மஞ்ஞை யீர்க்கு
போந்தநீ கேளா அண்டம்
புகைக்கத் தாந்தி ரீகம் போமே.

(476-138), (477-317)

தீராத சன்னியின் குறிகுணம்:-

கண்ணை நாக்கை புருவத்தை
காலை கையை வலித்துமிக
விண்ணைப் பார்க்கும் பெருமூச்சு
விட்டுப் பின்னும் வலிப்புண்டாம்
உண்ண முலையு மொவ்வாது
உறங்கா துடலும் மஞ்சளிக்கும்
நண்ணும் தீரா சன்னியென
நவின்றார் முனிவோ ருலகோர்க்கே.

(476-138), (477-319)

தோட சன்னியின் குறிகுணம்:-

மாந்தகணம் பேராமம் ஒன்றாய்க் கூடி
வயிறுவிடுத் தான்உப்பும் வாந்தி பண்ணும்
சேர்ந்தசுரம் கால்கையுங் குளிர்ந்தி ரத்தம்
சீதமிக பற்றிநின்று வாயு தள்ளும்
போந்தகன்நா வெந்துபுண்ணாய்த் தோஷ முற்றுப்
போகாமல் சன்னியாய் வலித்து வேர்க்கும்
சாந்தமுடன் இதுதீர மாதம் ஒன்று
தப்பினால் நோயாறு திங்கள் முற்றே.

(476-138), (477-319,320).

(கஸ்தூரி) மாத்திரை:-

கஸ்தூரி ஒன்றுக்கமழ் ஞாழல் இரண்டு
சித்தாவின் கோரோசினை மூன்று - முத்தான
மெல்லியர்தன் முலைப்பால் விட்டரைத்துக் குன்றிஎடை
சொல் உருண்டை செய்வாய் துணிந்து.

துணிந்துண்டை வைத்திட்டால் தோஷசன்னி...
.... தணிந்தோடும்
முத்தாரம் பூண்டமுகிழ்முலையா யிப்பேர்
கஸ்தூரி மாத்திரையாங் காண்.

(476-133, 134)

மாந்த சன்னியின் குறிகுணம்:-

பத்தியந் தாழ்வால் மாந்தம்
பகைசெயும் விதங்கள் மெத்த
சுற்றிய மயக்க முண்டாய்ச்
சொல்லொணாச் சந்நி யெய்தும்
முற்றிய சுரமுந் தாக
முதிர்ந்திடு நாவின் முள்ளு
புத்தியுங் கலங்கிக் கண்ணும்
போதவே தாமுந் தானே.

மாந்தமே கோபித் தாற்கால்
வயிறுபோம் உப்பிக் கொள்ளும்
காந்தல்போல் மேனி தானும்
கருகியே வெருவிச் சோரும்
சேர்ந்ததோர் பச்சை வெள்ளைச்
சிறந்துமென் மலமுந் தீயும்
வாந்தியே பண்ணுங் கண்டாய்
வலிப்புடன் சன்னி தானே.

உருக்குஞ் சந்நி மாந்தகுணம்
ஓயா தலறும் வாய்பிதற்றும்
ஒருகண் திறந்து மொருகண்ணை
யுருட்டி விழித்துப் பார்த்தழுகு
துருக்கு மூசி போல்கழுத்து
துவள நொந்தே யுடலமெலாம்

பெருக்க நரம்புந் தான்நெறித்துப்
பிழியும் பாசி போல்வழியே.

(476-132, 133), (477-73)

(வேளை வேர்ச்) சுரசம்:- 1

ஓடும் வேளைவே ருத்தாம ணியின்வேர்
மூடு மாவிலிங்கை முருங்கைப் பட்டை
யோடு நால்வகைக் கோர்பல மேரசத்
தோடு வாங்கிமு ரித்துச்சூ டாற்றிடே

ஆற்றி டாய்பி னரிசியின் திப்பிலி
கோற்றி டாய்மிள கோடுசுக் கானதூ
ளேற்றி டாய்நல லோகமி ழைத்துடன்
வார்த்தி டாய்சந்நி மாந்தம்போம் பாரிதே

(476-133), (477-73-74).

(வெற்றிலைச்) சுரசம்:-

செப்பு வெற்றிலை முயிறுதன் முட்டைசிற் றரத்தை
வெப்பு சுக்குடன் முருங்கைமா விலிங்கமுஞ் சுரசம்
ஒப்பில் லாதகத் தூரிசேர்த் துட்கொடு

(477-73)

(உள்ளுக்கும் துவாலைக்கும் பூண்டாதிச்) சாறு:-

சிறுகளா இலையும் வெள்ளுள்ளி
சேர்ந்த வசம்பு மோமமுடன்
அறிவா யிடித்து நீர்வாங்கி
அரிய துவலையிட் டுள்ளுக்கும்
நெறியாய்க் கொடுக்க நாள்மூன்று
நிகழ்பதி னெட்டு மாந்தசந்நி
நெறிபட் டோடு நோயெல்லாம்
சிரசு முதல்தோ டமும்போமே.

(476-133), (477-74).

வேளைக் குடிநீர்:-

நல்வேளை யோர்பிடியும் நாட்டமாய்க் கொண்டுவந்து
செல்லவே மூன்றறுப்பாய்ச் செய்ததனை - வல்ல
கனலதனிற் சட்டியைக் காயவைத் துப்பு
புனிதமா யோர்சேரைப் போடு.

போட்டதொரு வுப்பதுவுஞ் சாம்ப லாகப்
புகட்டியே வறுத்துநீ துடைத்துக் கொட்டிக்
காட்டவே வசம்பதனைத் தட்டிப் போட்டுக்
கருகியே தீப்பற்றி வேகும் போதே
ஆட்டவே முன்னறுத்த வேளை தன்னை
அதிலிட்டுப் பொன்னிறமாய் வறுத்துக் கொள்ளு
நாட்டவே யரைசிரங்கை நீர்தெ ளித்துத்
தானதுவுஞ் சுண்டுமட்டும் வறுத்துக் கேளே.

வறுத்தமறு படிகொஞ்ச நீர்தெ ளித்து
மருவியது சுண்டுமட்டும் வறுத்துக் கொள்ளு
வறுத்துமே யின்னமொரு படிதான் நீரை
வார்க்குமுன்னே யோமங்கா செடைதான் போடு
வறுத்துப் பொரியும்போது சலத்தை வார்த்து
மகத்தான கணபதிக்குப் பூசை செய்து
வறுத்துநீ யெட்டொன்றாய் வற்றக் காச்சி
வரவிறக்கிக் கியாழமொரு சங்கு போடே.
போடவே மாந்தத்தின் பொல்லாக் கழிச்சலுமே
ஏடலில் மாந்தசந்தி யென்கேயோ - ஓடிவிடும்

(477-326)

மாத்திரை:-

தோடசன்னிக்கு வரும் கத்தூரி மாத்திரை இதற்கும் பொருந்தும்.

மேலுக்குப் பூச தைலம்:-

....
....
.... மேனி .....
லப்பு வாயுள்ளி யண்டத்தின் தயிலமா ரணங்கே.

(477-73)

புகை:-

கஞ்சா வேரு மூமத்தை
கடிய தராவின் தன்வேரும்
பஞ்சா யிலைகள் வேப்பெண்ணெய்
பைய வறுத்துப் பொடியாக்கித்
துஞ்சா நெருப்புப் புகைகாட்டத்
தோற்றும் சந்நி அத்தனையும்

மஞ்சார் கழலாய் அடிதொழுது
 மாய்ந்தே போகுங் கண்டாயே.

(476-133), (477-73).

மாந்தகண சன்னியின் குறிகுணம்:-

மாந்த கணசந்நி மன்னிலோ மாந்தமும்
நேர்ந்த கணமுஞ் சிறந்துடலில் - வாய்ந்துகாய்
வாகிச் சிறுகூடாய் வந்துதரத் தேதங்கி
சோகித் தயருமெனச் சொல்.

(477-314)

(கோரோசினை) மாத்திரை:- 1

சீர்சிறந்த மாசிக்காய் திப்பிலிகோ ரோசனையும்
கார்சிறந்த கோட்புங் கருங்சீரம் - பேர்சிறந்த
அக்கரா கார மரைத்துமுலைப் பாலில்
இக்கணமே தீரு மிது.

(476-134), (477-314).

(ஏலாதி) மாத்திரை:- 2

ஏலாதி யுண்டைக்கு நல்லேல
 மிலவங்கம் எழில்மதுர மிருவேலிவேர்
இடுசங்கு நன்னாரி முந்திரிகை
 பேரீந் திலாமிச்சை கோரோசனை
தாளிச பத்திரி நிலப்பனை
 சடாமாஞ்சி சந்தனந் தேவதாரம்
தன்னுடன் திப்பிலி யிலுப்பையின்
 பூவதுந் தனித்தனிக் கழஞ்சாகவே
மேலான கடகரோ கணிகாஞ்
 சொக்குமதை மீறுநீர் வார்த்திவைகளை
விழுதா யரைத்துண்டை குன்றியள
 வாகவே வெய்யிற்ப டாதவகைசெய்
பாலான மொழிமங்கை பால்தனி
 லேகொடு பார்மாந்த கணமகலுமே.

(476-134), (477-314).

வாத சன்னியின் குணம்:-

கையுங் காலு மொரு.......
 கனக்கத் திமிர்த்து சரவாக்கி

மெய்யு முறவே மெலிந்துவரும்
  வெதுப்பும் நாவும் தடுமாறும்
செய்யுங் குணத்தை நாடியறி
  செய்யுஞ் சன்னி வாதமென
உய்யும் படியாக வகையாக
  உலகோ ரறிய வுரைத்தோமே.

மூச்சும் வாங்கி னாவரண்டு
  மூக்கும் கண்ணுஞ் சுளிக்கலுமே
பேச்சு முட்டாய் வெயர்வரும்பிப்
  பெருக்கு முழலை தவனமுமாய்க்
காய்ச்சல் கழிச்சல் குளிருடனே
  கதித்துப் பிரந்தாள் கைத்திடுகில்
மாச்சு மரண முண்டென்னு
  மரண வாத காசமிதே.

(ஏடு. 42-250)

மருந்து:-

செவ்வியந் திப்பிலி யதிமதுரந்
  தீரும் கருவேம்பு மரமஞ்சள்
ஒவ்வாச் சங்கின் வேருடனே
  யுகந்த சமனாய் நிறைகொண்டு
அவ்வா யிதற்கு சரிகஞ்சா
வதுக்கு ரட்டி சக்கரையும்
பவ்வ நேராய் மத்திச்சு
  பாங்காய் களஞ்சு கொண்டிடவே.

(ஏடு. 42-250)

விஷ சன்னி குறிகுணம்:-

விடமான சந்நியது மேவினால் நஞ்சு
திடமாக யேறல்போற் சேத்மம் - உடன்றுதலை
மீதேறிப் பின்கழுத்தில் மேனியுடன் காய்ந்துகுளிர்
மீதாக முண்டாகு மே.

(477-317)

(ஏலாதி) மாத்திரை:-

ஈத்திட்டா லேலாதி யுண்டை கேளா
  யினிதான திரிகடுகு காயும்

ஈந்திட்ட கிராம்பேலம் ரோணி மஞ்ச
ளெழில்நாபி சரக்குவகை கழஞ்ச தாக
ஈந்திட்ட கல்வத்தில் பொடியாய்ச் செய்திங்
கிருசாமம் பழச்சாறு தன்னா லாட்டி
ஈந்திட்ட பயற்றளவி லுண்டை செய்திங்
கினிமாசிப் பத்திரியின் கியாழத் தூட்டே
ஊட்டவே விடசந்நி ....
.... யூர்விட் டோடும்.

விஷதோஷ சன்னிக்கு கத்தூரி மாத்திரை:-

எய்தாமல் கத்தூரி கழஞ்ச தொன்றாம்
இதமான குங்குமப்பூ கழஞ்சி ரண்டாம்
எய்தாமல் ரோசனையுங் கழஞ்சு மூன்றாம்
இவைமூன்றுங் கல்வத்தி லிட்டுக் கொண்டே
எய்தாமல் அமுர்தமெனு முலைப்பால் விட்டே
இனிதான சாமமொன் றரைத்துக் கொண்டே
எய்தாமற் குன்றிபோ னிழலு லர்த்தி
எடுத்துநீ செப்புதனி லடைத்தி டாயே.

அடைத்திட்ட மாத்திரைதா னொன்றெ டுத்தே
யந்செரைக்கு முலைப்பால்விட் டிழைத்துக் கொண்டு
விடைத்திட்ட முனைநாவில் தீட்டிட் டாக்கால்
விடதோட சந்நி .... வீறிட் டோடும்.

அடி தள்ளல்

வேறுபெயர்:-

அண்டு தள்ளுகை, குதப்பிதுக்கம், அண்டி தள்ளல்.

இயல்:-

உடல் வன்மை குறைந்த நிலையில் குதப்பகுதி ஆசனவாய்க்கு வெளியே பிதுங்கி (துருத்திக்) கொண்டு காணல்.

நோய் வரும் வழி:-

நாட்பட்ட கழிச்சல், குருதிக் கழிச்சல், சீதக்கழிச்சல் ஆகியவற்றாலும் மலச்சிக்கல் இருக்கின்ற போது மலத்தைக் கழிப்பதற்காக மிகுந்த சிரமத்துடன் குழந்தை முக்குவதாலும் இந்நோய் வரும். குழந்தைக்குப் போதிய சத்தின்மை, நாட்பட்ட இருமல், இரைப்பு, உணவில் அதிகக் காரம் சேர்த்தல், ஆசனப் பகுதியில் இருக்க வேண்டிய அளவு கொழுப்புச் சத்தின்மை, மலம் கழிப்பதில் ஒழுங்கின்மை, அடிக்கடி மலம் கழித்தல் ஆகிய காரணங்களாலும் இந்நோய் வரும். உடல் வன்மையைக் குறைக்கின்ற வீரியமிக்க மருந்துகள், கழிச்சல் உண்டாகும் மருந்துகளை அடிக்கடி உட்கொள்வதாலும் கக்குவான், மூலகணம், முக்குக்கணம் ஆகிய நோய்களின் தொடர் நோயாகவும் இந்நோய் வரலாம்.

குறிகுணம்:-

9 மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அடிதள்ளல் நோய் பெரும்பாலும் வரும்.

அடிதள்ளல் நோயை இரண்டு வகையாகப் பகுக்கலாம். 2 அங்குலத்திற்கு மேல் வெளித்தள்ளல் காணின் அதனை 'முழுமையான அடிதள்ளல்' என்றும் 2 அங்குலத்திற்குக் கீழ் சிறிதளவாக வெளித்தள்ளல் ஏற்படின் அதனைப் 'பகுதி அடிதள்ளல்' என்றும் கூறுவர். ஆசனமும் சில வேளை ஆசனத்தின் உள்பகுதியும் வெளிப்பிதுங்கி இருக்கும். இரத்தம் வெளிர்நிறமாகவோ கருஞ்சிவப்பு நிறமாகவோ கசியும். மலத்திலும் இரத்தம் வெளியேறும். ஆசனத்தின் வெளிப்பிதுங்கிய பகுதி வீங்கிக் கொள்ளும்.

மலம் கழிக்கும் போது ஏற்படும் அடிதள்ளல் மலங்கழிந்த பிறகு உட்சென்று விடும். அவ்வாறு செல்லாவிட்டாலும் கையினால் அழுத்தி உள்ளே செலுத்தி விடலாம்.

சில சமயங்களில் அடிதள்ளலானது 2, 3 நாட்களுக்கும் அப்படியே இருப்பதுண்டு. அவ்வாறிருக்கும்போது உறுத்தலும் வலியும் ஏற்படும்.

மருத்துவம்:-:-

இந்நோய் வருவதற்கு முதற்காரணமான கழிச்சல், மலச்சிக்கல் இவை வராமல் தடுப்பதற்கும் நோய் வந்த காலத்து தீர்ப்பதற்கும் உரிய உணவுகளையும் மருந்துகளையும் வழங்குதல் வேண்டும்.

கழிச்சல் வராது தடுக்க குழந்தைகளுக்கு மந்தத்தை உண்டாக்கும் பொருட்கள், எண்ணெய் பண்டங்கள், காரமான உணவு, கெட்டுப் போன உணவு வகைகள் இவற்றைத் தவிர்த்து எளிதில் செரிக்கக் கூடிய தும் உடலுக்கு வன்மை தருவதுமான உணவுப் பொருட்களை வழங்கு தல் வேண்டும்.

மலச்சிக்கல் வராது தடுக்க மலத்தை எளிதில் கழிக்கக் கூடியதும் உடலுக்கு வன்மை தருவதுமான கீரை வகைகள், காய்கறிகள், பழவகை கள் போன்றவற்றை அளித்தல் வேண்டும்.

கழிச்சலால் வந்த அடிதள்ளல் நோய்க்கு மலத்தைக் கட்டுவதும் துவர்ப்பிச் செய்கையுடையதுமான உணவுகளையும் மருந்துகளையும் வழங்குதல் வேண்டும்.

அடிதள்ளல் நோயுற்றோர்க்கு அடிதள்ளிய பகுதி தன் இயல்பான நிலைக்குச் செல்ல துவர்ப்பிச் செய்கையுள்ள குடிநீரால் கழுவ வேண்டும்.

முக்குக்குணம், மூலகணம், கக்குவான் ஆகிய நோய்களின் துணை நோயாக அடிதள்ளல் வரின் அதற்கு மருத்துவம் செய்யும்போது மேற் கண்ட துணை நோய்களுக்குரிய மருந்துகளையும் முறையாக வழங்கி நிவர்த்தி செய்ய வேண்டும்.:-

மருந்துகள்:-

அடிதள்ளியிருக்கும் பாகத்தைத் துவர்ப்பிச் செய்கையுடையதும் குளிர்ச்சியையுண்டாக்குவதுமான திரிபலாக் குடிநீர், கடுக்காய்த் தோல் குடிநீர், காட்டாத்திப்பூக் குடிநீர், மாசிக்காய்க் குடிநீர் ஆகிய ஒன்றைக்

கொண்டு தூய்மை செய்யலாம். மாசிக்காய் சூரணம் 250-500 மி.கி. எடுத்து தயிரில் கலந்து கொடுக்கலாம்.

வல்லாரை நெய், தண்ணீர் விட்டான் கிழங்கு நெய் இவற்றை அளவ றிந்து கொடுக்கலாம்.

கணத்தெண்ணெயை அளவறிந்து கொடுக்கலாம். பொன் செந்தூ ரத்தை 1.5 மி.கி. அளவு தேனில் கொடுக்கலாம்.

கற்கம்:- 1

இளந்தென்னம்பூவையும் கருஞ்சீரகத்தையும் தேவையான அள வெடுத்து ஒன்றாகச் சேர்த்தரைத்துக் கொள்க. அதனைப் பசுவின் பாலில் கரைத்து மூன்று நேரம் கொடுக்க குணமாகும்.

கற்கம்:- 2

கரிசலாங்கண்ணியையும் பழம்புளியையும் ஓரெடையாய் எடுத்து அரைத்து புன்னைக் காயளவு எட்டுநாள் கொடுக்க குணமாகும். (கோஷாயி சுவாமிகள், அனுபவ வைத்தியம், பிரம்ம ரகசியம்.)

கற்கம்:- 3

அதிமதுரம், சீரகம், ஏலம், பெருமரத்துப்பட்டை இவற்றை ஓர் நிறை யாய் எடுத்து கருவேலம்பட்டைக் குடிநீரில் அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கத் தீரும்.

கற்கம்:- 4

அதிவிடையம், காசுக்கட்டி, இலவங்கம், இலவம்பிசின் இவற்றைச் சமஅளவெடுத்து பொடித்துக் கொள்க. ஒரு நாள் சென்ற எருமைத் தயிரை வடிகட்டி, எலுமிச்சங்காயளவு தயிரில் முன் பொடியைச் சேர்த்து அரைத்து மூன்று புளியங்கொட்டை அளவு பிரித்து ஒரு பங்கைக் காலை யில் கொடுக்கவும். பகலில் ஒரு உருண்டை, அந்திக்கு ஒரு உருண்டை. இவ்வாறு மூன்று நாள் கொடுக்கவும். அடிதள்ளல் குணமாகும்.

சூரணம்:- 1

சுத்தி செய்த கல்நாரை இடித்துப் பொடித்து துணியில் வடிகட்டிக் கொள்க. 50-150 மி.கி. அளவு சூரணத்தைப் பசு வெண்ணெயில் குழப்பி கொடுக்கவும்.

விழுங்க முடியாத குழந்தைகளுக்கு வெந்நீரை நன்கு கொதிக்க வைத்து அதில் 4.4 கி. வெண்ணெயை விட்டு உருக்கிக் கொள்க. உருகின நேரத்தில் சூரணத்தைப் போட்டு சங்கில் புகட்டவும்; குணமாகும்.

(வெந்தய) இளகம்:- 1

வெந்தயம் 35 கி. எடுத்து 1.3 லி. பசுவின் பாலில் ஊறப்போட்டு அரைத்து வெல்லம், நெய் வகைக்கு 35 கி. சேர்த்து இலேகியமாய்க் கிண்டிக் கொடுக்கவும். நோய் குறையும்.

(வெந்தய) இளகம்:- 2

சட்டியைக் காய வைத்து அசமதாகம் (ஓமம்) போட்டு புன்வறுவலாய் வறுத்து எடுத்துக் கொள்க. அதனைச் சூரணித்துக் கொள்க. அந்த சட்டியிலே நல்ல வெல்லம் போட்டு உருகி வருகின்ற பதத்தில் இந்த அசமதாகத்தைப் போட்டு இலேகியமாய் செய்து இளஞ்சூட்டிலே சாப்பிட கொடுக்க வேண்டும். அடிதள்ளல் நீங்கும்.

இளகம்:- 3

சீரகம், அதிவிடையம், கடுக்காய், சுக்கு, பரங்கிப்பட்டை, கசகசா, சந்தனத்தூள், சாதிபத்திரி, நெல்லிவற்றல், சிற்றாமுட்டி, செம்பருத்தி, வில்வம், இலாமிச்சு, இவற்றின் வேர் வகைக்கு 35 கி., கற்கண்டு 70 கி. எடுத்து பொடித்து 175 கி. ஆவின் நெய்யிற் போட்டு இலேகியம் செய்து 2 கி. அளவெடுத்து ஏழு நாட்கள் கொடுக்கத் தீரும்.

(வெந்தயக்) களி:-

35 கி. வெந்தயத்தைப் பசுவின்பால் விட்டரைத்து 1.3 லிட்டர் பசும்பாலில் கலந்து அடுப்பேற்றிச் சிறுக எரிக்க. அதில் 70 கி. கரும்பு வெல்லம் கூட்டி 70 கி. பசுவின் நெய் விட்டு கருகாமலும் கம்பி நாற்றமுண்டாகாமலும் களியாய்க் கிண்டி பக்குவத்துடன் இறக்கிக் கொள்க. நோயின் வன்மைக்குத் தக்க அளவும் தக்க நாளளவும் அறிந்து இருவேளையும் கொடுத்தால் அடி தள்ளல் குணமாகும்.

பூண்டெண்ணெய்:- 1

ஒருதலை வெள்ளைப்பூண்டு, சுட்ட வசம்பு, வீழியிலை, பொடுதலை, சிறுபுள்ளடி ஆகிய இவ்வைந்து பொருட்களையும் வகைக்கு 35 கி. வீதமெடுத்துக் கொள்க. வீழியிலை, பொடுதலை, சிறுபுள்ளடியிலை ஆகிய இம்மூன்றையும் குறுக அரிந்து சிவக்க வறுத்து அதில் வெள்

ளைப் பூண்டையும் வசம்பையும் நறுக்கிப் போடுக. அதில் 350 கி. சிற்றா மணக்கெண்ணெய் சேர்த்துப் பக்குவமாகக் காய்ச்சிப் பதமாக வடித்துக் கொள்க. அதைக் காலையில் மட்டும் 5-10 மி.லி. அளவு கொடுக்க அடி தள்ளின நோய் நீங்கும்.

எண்ணெய்:- 2

குமரி எனும் கற்றாழைச் சாறு, தாய்ப்பால் இவற்றை வகைக்கு 325 மி.லி., எலுமிச்சம்பழச்சாறு 975 மி.லி., விளக்கெண்ணெய் 1.3 லி., வில்வம், விலாமிச்சு, விஷ்ணுகிரந்தி, முத்தக்காசு, ஓரிலைத் தாமரை, முருங்கை வித்து, துளசி வித்து, கோங்கிலவம் பிசின், ஆவா ரைப் பிசின், கோஷ்டம், அதிமதுரம், அக்கிராகாரம், தாளிசபத்திரி வகைக்கு 35 கி. எடுத்து வறுத்து இடித்துக் கலவையில் போட்டு காய்ச்சி வடிக்க. 5-10 மி.லி. மூன்று நாள் காலையில் கொடுத்து மாலையில், கிண்டந்தண்டைக் கண்டம் கண்டமாய் நறுக்கி விறகாகப் பயன்படுத்தி ஊதி 325 மி.லி தண்ணீராகச் சுண்டவைத்து அதில் சீரகத்தைப் பொரித் துப்போட்டு வற்றவைத்து 3 நாள் கொடுக்கத் தீரும்.

(கோரக்கர்) மாத்திரை:-

கஞ்சாவை எடுத்து நீர் விட்டு நன்றாகக் கசக்கிக் கழுவ வேண்டும். இப்படி ஏழு முறை கழுவி அதில் 25 மி.கி. எடுத்து மிளகும் பூண்டுத் திரியும் வகைக்கு 21 வீதமெடுத்து இம்மூன்று பொருட்களையும் குழிக்கல் லிலிட்டு பருத்திச்சாறு விட்டரைத்துக் கொள்க. அரைத்ததனை 130 மி.கி. அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக் கொள்க. அதனை வேளைக்கு 1 மாத்திரை வீதம் காலை அல்லது மாலையில் பருத்தியிலைச் சாற்றினில் மாதுளம் பிஞ்சின் சதை வெதுப்பிய சாற்றில் இழைத்து மூன்று நாட்களுக்குக் கொடுக்க அடிதள்ளின நோய் நீங்கும்.

பக்குவம்:-

இஞ்சியைத் தோல் நீக்கிவிட்டு துளையிட்டுக் கொள்ள வேண்டும். 4 கி. பெருங்காயத்தை அந்தத் துளையில் வைத்து இஞ்சித் தூளால் மூடி தயிரில் வேக வைத்து அரைத்து மோரில் உண்ண வேண்டும். இதைச் செய்ய அடிதள்ளி இரத்தங் காணுதல் நீங்கும்.

மருந்து:- 1

ஏழு தடவை கழுவின கற்றாழஞ்சோறு, வெந்தயம், எலுமிச்சம் பழச்சாறு இவற்றை ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

மருந்து:- 2

பழம்பாசி சமூலத்தை வெள்ளாட்டுப் பாலில் போட்டுக் காய்ச்சி வெந்தபின் வடித்து அதிலொரு எலுமிச்சம்பழம் பிழிந்து கொடுக்கத் தீரும்.

மருந்து:- 3

பேய்ப்பீர்க்கிலைச் சாறு, நல்லெண்ணெய் இவற்றைச் சம அளவெடுக்க. 165 (அல்) 325 மி.லி. தயிரில் கலந்து கொடுக்கவும். இவ்வாறு மூன்று நாட்கள் கொடுக்கத் தீரும்.

மருந்து:- 4

வெள்ளை வெங்காயத்தை இலையில் சுருட்டி உமி காந்தலில் வைத்தெடுத்துத் தோலுரித்துக் கொள்க. வெல்லத்தை அதனுடன் பிசைந்து உருட்டி விழுங்கவும். மூன்று நாள் அந்தி, சந்தி விழுங்கத் தீரும்.

வெளிமருந்து:- 1

முட்டைப் பாசியையும் உள்ளியையும் சமமாய் எடுத்து அரைத்து அடையாகத் தட்டிக் கொள்ளவேண்டும். அதனை நெய்யிலிட்டு வேக வைத்தெடுத்து அண்டியிலே வைத்து அழுத்தமாகக் கட்டக் கீழே தள்ளின அண்டி உள்ளே தன் இடத்தை அடையும்.

வெளிமருந்து:- 2

கற்றாழை மடலை நேர் குறுக்கில் இரண்டாக வெட்டி ஓரத்திருக்கும் முள்ளை நீக்கிக் கும்பிச் சாம்பலில் வெதுப்பிக் கொள்க. ஒரு புறத்துத் தோலை நீக்கி சிற்றாமணக்கு நெய் தடவி, மாசிக்காய் அல்லது கடுக்காயின் நுண்ணிய பொடியைத் தூவிக் கொள்க. அதனை எருவாயில் வைத்துக்கட்ட வெளிப்பட்டது சுருங்கி உள்ளே சென்றுவிடும். இவ்வாறு 3 அல்லது 5 நாள் கட்டவும்.

வெளிமருந்து:- 3

வறட்சுண்டி எனும் ஆடு தீண்டாப்பாளை இலையை அரைத்து அடி தள்ளல் மேல் தடவ அண்டி உள்ளே சென்றுவிடும்.

வெளிமருந்து:- 4

புளியாரை சமூலம், இலந்தையிலை அல்லது பழம், சுக்கு சமன் கூட்டி தயிரில் அரைத்து அடிபுறப்பட்டதில் நிறைய தடவி மாட்டுத்தோல் கட்டி வைக்க உள்ளே அடங்கும்.

ஒற்றடம்:-

துத்திக்கீரையைச் சிற்றாமணக்கு நெய்யிலிட்டு வதக்கி ஒற்றடமிட்டு வைத்துக் கட்டலாம்.

உணவு:-

இட்லியை வெண்ணெய் அல்லது நெய்யில் தொய்த்து கொடுக்கவும். ஆட்டிறைச்சிக் குடிநீர் கொடுக்கவும். கொழுப்பு அதிகமாக உள்ள பொருட்களைக் கொடுக்கவும். துவரம் பருப்பு, பச்சைப் பருப்பு இவற்றை வேகவைத்து சாதத்தில் கலந்து நெய் சேர்த்து கொடுக்கலாம். எளிதில் செரிக்கக்கூடிய ஆவியில் வெந்த இட்லி, இடியாப்பம் கொடுக்கலாம். அவல் கஞ்சி, குழைய வேகவைத்த சோற்றில் புளிக்காத தயிர் விட்டு கொடுக்கலாம். அவரை, பீர்க்கங்காய் போன்ற காய்கறிகள், பழவகைகளைக் கொடுக்கலாம்.

மலச்சிக்கலால் வந்த அடிதள்ளலுக்கு மலம் இளகக் கூடிய இனிப்புச் சுவை கூடிய பழவகைகளான மலைவாழைப்பழம், கற்பூர வாழைப்பழம், பேயன்பழம், செவ்வாழை, காஷ்மீர் ஆப்பிள் போன்றவை, மணத்தக்காளிக் கீரை, வெந்தயக்கீரை, பசலைக்கீரை போன்ற கீரை வகைகள், வாழைத்தண்டு, பிஞ்சு வெண்டைக்காய் ஆகிய காய்கறிகளைக் கொடுக்கலாம்.

கழிச்சலால் வந்த அடிதள்ளலுக்கு வாழைப்பூ, அத்திக்காய், மாதுளம்பழம், அரரூட்டு மாவுக்கஞ்சி, அரரூட்டு மாவு பிஸ்கட், புளிக்காத தயிர், மோர், கலந்த சாதம், பால் சேர்க்காத டீ டிக்காஷன் போன்ற உணவு வகைகளைக் கொடுக்கலாம்.

அடிதள்ளல் - பாடல்

(வெந்தயக்) களி:-

வெந்தயமோர் பலமதைத்தான் படியா வின்பால்
வெந்திறக்கி மேன்மையதாய் வெல்லங் கூட்டிக்
கந்தமலர்ப் பூங்குழலாய் பசுவின் நெய்யால்
கருகாமல் கும்பாமல் களியாய்க் கிண்டி
உந்திவயிற் றெரிகடுப்போ டுதிரந் தானும்
ஓடும்அடி புறப்பட்ட துள்ளே வாங்கும்
அந்திசந்தி இருபோதுட் கொள்வீ ரானால்
அதிசார வகையனைத்தும் அகலுந் தானே.

(477-177)

பூண்டெண்ணெய்:- 1

ஒருதலை வெள்ளைப் பூண்டு
ஒன்றது வசம்பு நேராய்
விருதுடன் நறுக்கி மேலும்
வீழியின் இலையும் நல்ல

திருபொடு தலையும் நீண்ட
சிறியபுள் ளடிவ கைக்கு
ஒருபிடி பாண்டத் திட்டங்
குடனதை வறுத்தி டாயே.

வறுத்துபொன் னிறம தாக
மருவுமுன் மருந்து கூட்டிக்
கறுத்திடும் படிகால் எண்ணெய்
கலந்துகாய்ச் சிறக்கிக் கொண்டே
அறுத்தமுப் பொழுது வார்க்க
அடிஉள்ளே வாங்கு மற்ற
வெறுத்திடு கணங்க ளெல்லாம்
வீறிட்டே ஓடிப் போமே

(476-100) (477-163)

கோரக்கர் மாத்திரை:-

கோரக்கர் மூலியொரு துட்டு தானும்
குளிர்நீரா லேமுதரங் கழுவிப் போட்டு
தாரக்க மிளகிருபத் தொன்றும் பூண்டு
தானிருபத் தொன்றுகுழிக் கல்லி லிட்டே
ஆரக்க வரைசெய்து குன்றியள வுருட்டி
அரிதான பருத்தியிலைச் சாற்றி லாதல்
வேரக்க மாதளம்பிஞ் சதைவெ துப்பி
விடுசாற்றி லிடஅடிதள் ளினது போமே.

(476-100) (477-163)

பக்குவம்:-

இஞ்சிமேற் புறணி சீவி
எழிலுடன் துவார மிட்டு
வஞ்சியே பெருங்கா யந்தான்
வராகனொன் றதற்குள் வைத்துத்
தஞ்சியே மேலே மூடித்
தயிரினில் வேக வைத்தே
அஞ்சிய பெருகு நீரில்
அரைத்துண்ணத் தீரு மன்றே.

(477-163)

பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு - I

முதன்மை நூற்பட்டியல்

அ. ஓலைச்சுவடிகள்

1. *அகத்தியர் பிள்ளைப்பிணி வாகடம்*
2. *குழந்தைகள் மருத்துவ நூல்*
3. *தெட்சிணாமூர்த்தி வாலைவாகடம்*
4. *புலத்தியர் வைத்தியம்*
5. *பிள்ளைப்பிணி வாகடம்*
6. *பிள்ளைப்பிணி வாகடம் (வேறு)*
7. *அகத்தியர் வாலை வாகடம்*
8. ★ *வாலாரிஷ்ட வைத்தியம்*
9. ★ *பிள்ளைப்பிணி கெற்ப உற்பத்தி*
10. ★ *பிள்ளைப்பிணிக்கு வாகடம்*

குறிப்பு:- **இந்நூற் கருத்துகள் பெறப்பட்ட நூற்கலாதலால் முதன்மை நூற்பட்டியலென்று குறிக்கப்பெற்றது.**

★ இக்குறியிட்ட சுவடிகள் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள், நூலகச் சுவடிகள், பிற நம் இயக்ககச் சுவடிகள்.

11. வைத்திய அட்டவணை

12. பாலவாகடம்

13. அகத்தியர் பாலவாகடச் சீவிகை 200

14. பிள்ளைகள் தோஷம்

15. அகத்தியர் பாலவாகடம்

16. மாந்த நிதானம்

ஆ. கையெழுத்துப்படிகள்

1. பாலவாகடம் 200

2. பால வைத்திய போதினி

இ. நூற்கள்

1. பாலவாகடமெனும் சிமிட்டு ரத்தினச் சுருக்கம்.

2. பாலவாகடம், மரு. பொன். குருசிரோன்மணி.

3. பாலவாகடத்திரட்டு வைத்தியம் 1200, கந்தசாமி முதலியார்.

4. பாலவாகடம் உரைநடை.

பின்னிணைப்பு - II

துணை நூற் பட்டியல்:

1. குணபாடம், பொருட்பண்பு நூல் (பாகம்-1) சித்த மருத்துவ வாரியம், சென்னை.
2. குணபாடம், தாதுசீவ வகுப்பு, (பாகம் 2 - 3) ஆர். தியாகராஜன், இந்திய மருத்துவத்துறை, 1981.
3. சித்தமருத்துவம் (பொது), சித்த மருத்துவ வாரியம், சென்னை.
4. தன்வந்திரி பாலவாகடம், குருசாமி நாயுடு, குயப்பேட்டை, சென்னை, 1903.
5. தன்வந்திரி குழந்தை வாகடம், க.லலிதாம்பிகா, உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.
6. ஆவியளிக்கும் அமுத முறைச் சுருக்கம், அருள்மிகு தண்டாயுத பாணிச் சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட் டுக்குழு, 1975.
7. சித்த மருத்துவாங்கச் சுருக்கம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம், சென்னை.

8. நோய் நாடல் நோய் முதல் நாடல், திரட்டு பாகம் 1 & 2, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்ககம், சென்னை.

9. Tamil English Dictionary Vol- 1 T.V.Sambasivam Pillai. The Research Institute of Siddhars Science, Madras, 1931.

10. Tamil English Dictionary, Vol-2. T.V.Sambasivam Pillai. The Research Institute of Siddhars Science Madras, 1931.

11. Tamil English Dictionary, Vol-3. T.V.Sambasivam Pillai. The Research Institute of Siddhars Science Madras, 1931.

12. Tamil English Dictionary, Vol-4. T.V.Sambasivam Pillai. The Endowonment of G.D.Naidu, Coimbatore, 1977

13. " " " 1978.

14. கழகத் தமிழகராதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

15. மருத்துவ அகராதி இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்ககம், சென்னை, 1992.

பின்னிணைப்பு - III

நோய்கள் - அகர முதலி

(எண், பக்க எண்)

அ

அக்கரம் - 1
அச்சரம் - 1
அடித்தள்ளல் - 396
அட்சர மாந்த சுரம் - 285
அண்டி தள்ளல் - 396
அண்டு தள்ளுகை - 396
அத்தி (என்பு) சுரம் - 257
அரச நோய் - 168
அலத்திடு சன்னி - 359
அழகுக் காமாலை - 210
அழலிருமல் - 112
அழலைய இருமல் - 112
அழலைய காமாலை - 209
அழல் காமாலை - 209
அழல் செரியாமை
அழல் வாந்தி - 42
அழல் விக்கல் - 59
அனல் - 238
அனல் சுரம் - 259
அன்னபானாதிச் சுரம் - 260

ஆ

ஆமசன்னி - 360
ஆமசுரம் - 260
ஆமசுர மாறல் - 262
ஆறுமாத சுரம் - 296

இ

இக்மா - 58
இரத்த சுரம் - 290
இரவில் காணும் சுரம் - 291
இருமல் - 111
இரைப்பு - 194
இழுப்பு - 194
இழுப்பு (சுவாச) இருமல் - 112

இளைப்பக்கரம் - 8
இளைப்பு - 168

ஈ

ஈளை - 168

உ

உடம்பு வலிக்காய்ச்சல் - 262
உட்சுரம் - 262
உதட்டக்கரம் - 9
உள் அச்சரம் - 9

ஊ

ஊண் சுரம் - 269
ஊதுகாமாலை - 217

எ

எரிசன்னி - 361
எரு(மல) வாந்தி - 43

ஐ

ஐய இருமல் - 112
ஐய காமாலை - 209
ஐய செரியாமை - 74
ஐய சுரம் (சிலேற்பன சுரம்) - 269
ஐய வாந்தி - 42
ஐய விக்கல் - 59

ஒ

ஒருநாள் விட்டொருநாள் வரும் மாறல் சுரம் - 289

க

கக்குவான் - 152
கக்ஷயம் - 168
கடவாயக்கரம் - 10
கண (கணை) சுரம் - 266
கண்ணோறு வாந்தி - 43
கப சன்னி - 361
கபநோய் - 168
கபம் - 107
கபாலியச்சரம் - 11

காங்கை - 238
காந்தல் - 238
காமாலை 207
காமிலா - 207
காய்ச்சல் - 238

கிருமிசன்னி - 362

கிரிநோய் - 91

குடற்கிருமிகள் - 91
குண்டியச்சரம் - 11
குதப்பிதுக்கம் - 396
கும்ப காமாலை - 210
குமரி அச்சரம் - 13
குருதி (இரத்த) வாந்தி - 43
குருதி வாந்தி இருமல் - 112
குளிர் (மந்தார) இருமல் - 112
குளிர் சன்னி - 362
குளிர் சன்னி சுரம் - 274
குளிர் சுரம் - 272
குளிர் தொந்த சுரம் - 275
குளிர் பித்த சுரம் - 282
குளிர் வாத சுரம் - 293
குன்ம காமாலை - 210

கொக்கிப் புழு - 100

கோரோம சன்னி - 363
கோழைக்கட்டு - 105

ச

சந்திர சன்னி - 364
சர்த்தி - 40
சன்னி - 348
சன்னி சுரம் - 275
சன்னி தோஷ சுரம் - 277
சன்னி வாத சுரம் - 278

சாட்டைப் புழு - 99

சிங்நவு அச்சரம் - 13
சிலேத்தும சன்னி - 364

சுரம் - 238
சுரமிருமல் - 112
சுவாசகாசம் - 194

சூசாவைஷ - 168
சூடு - 238
சூலியச்சரம் என்னும்
மூலி அச்சரம் - 14

செங்கமலக் காமாலை - 210
செரியா விக்கல் - 60

சோதியக்கரம் - 14

தா

தாந்திரிக சன்னி - 364
தாப (வெப்ப) சுரம் - 281

தீராத ஆம சுரம் - 260
தீராத சன்னி (அசாத்திய சன்னி) - 366

தொண்டை அடைப்பான் - 166
தொந்த அச்சரம் - 14
தொந்த மாந்த சுரம் - 286
தோஷ சுரம் - 278
தோட சன்னி - 366

ந

நடுக்கல் சுரம் - 275
நமர் நோய் - 348
நளிர்சுரம் - 275

நாக்குப் பூச்சி - 90
நாட்பட்ட மாந்த சுரம் - 285
நாய்பட்டைப் பூச்சி - 99
நான்காம் முறைக் காய்ச்சல் - 289

(நீலி) நீதியச்சரம் - 15

நூல் பூச்சி - 99

ப

பக்க மந்தார இருமல் - 112
பட்டைப் புச்சிகள் - 97
பம்மல் நோய் - 238
பயித்திய சுரம் - 283
பழஞ்சுரம் - 297

பால்சுரம் - 287

பிடரிக் காய்ச்சல் - 283
பித்த குளிர் சுரம் - 282
பித்த சன்னி - 367
பித்த சுரம் - 280
பித்த தோட சுரம் - 282
பித்த நோய் - 207
பில்லி அச்சரம் - 15
பிறப்பிலும் இறப்பிலும்
தொடரும் நோய் - 238

புழு வாந்தி - 42

பெருங்காமாலை - 210

பொருமல் - 73

ம

மசரைப் புழுநோய் - 95
மஞ்சட் காமாலை - 207
மஞ்சள் நோய் - 207
மண்டைக் குடைச்சல் - 368
மண்டைச்சன்னி - 368

மாங்கிஷ (மாமிச) சுரம் - 290
மாந்த கணச் சன்னி - 371
மாந்த கண சுரம் - 286
மாந்த சன்னி - 368
மாந்த சுரம் - 283
மாறல் குளிர் சுரம் - 288
மாறல் சுரம் - 288

முக சன்னி - 368
முகவாத சன்னி - 373
முக்குற்ற இருமல் - 112
முக்குற்ற காமாலை - 209
முக்குற்றச் செரியாமை - 74
முக்குற்ற சுரம் - 292
முக்குற்ற நோய் - 348
முக்குற்ற வாந்தி - 42
முக்குற்ற விக்கல் - 59
முத்தோட சுரம் - 279
முப்பிணி நோய் - 348

மூக்கடைப்பு இருமல் - 112
மூன்றாம் முறை குளிர்சுரம் - 289

ய

யஷ்மா - 168

ரா

ராஜ்யஷ்மா - 168

வ

வட்டப் புழுக்கள் - 99
வட்டப் பூச்சிகள் - 97
வமனம் - 40
வளி அழல் இருமல் - 112
வளி இருமல் - 112
வளி ஐய காமாலை - 209
வளிக் காமாலை - 208
வளிச் செரியாமை - 73
வளி வாந்தி - 41
வளி விக்கல் - 59
வறட் காமாலை - 217

வாத சன்னி - 371
வாத சுரம் - 291
வாத பித்த சுரம் - 292
வாந்தி - 40
வாந்தி சுரம் - 293
வாயாலெடுத்தல் - 40
வாய் வேக்காடு - 1
வாய் வேக்காளம் - 1

விக்கல் - 58
விஷசுரம் - 293
விட சன்னி - 373
விடதோட சன்னி - 374
விடாச்சுரம் - 295

வீழி அச்சரம் - 16

வெப்பு நோய் - 238
வெம்மை - 238
வெறுப்பு வாந்தி - 42

பின்னிணைப்பு - IV

மருந்து பொருட்கள் - அகர முதலி

அ

அகத்தி
அகில்
அக்கமணி
அக்கிரா
அசமதாகம்
அசமோதம்
அடைக்காய்
அட்டுப்பு
அணில்
அண்டத்தைலம்
அதிமதுரம்
அதிவிடயம்
அத்தி
அபின்
அப்பம்
அப்பிரகம்
அமுக்கரா
அம்பர்
அம்மான் பச்சரிசி
அயம்
அரக்கு
அரசு
அரத்தை
அரப்பொடி
அரளி
அரிசி
அரிசித்திப்பிலி
அரிசியாறு
அருகன்
அலரி
அல்லிக்கிழங்கு
அவுரி
அழிஞ்சில்

ஆ

ஆகாசத்தாமரை
ஆடாதோடை
ஆடு தின்னாப்பாளை
ஆட்டு நெய்
ஆட்டுப்பால்
ஆதளம்பால்
ஆதொண்டை

ஆமணக்கு
ஆமணக்கெண்ணெய்
ஆமையோடு
ஆரை
ஆயிலியம்
ஆலங்குமிழ்
ஆலமரத்துப் புல்லுருவி
ஆலின் விழுது
ஆவரை
ஆவாரம் பட்டை
ஆவின் வெண்ணெய்
ஆற்று மணல்
ஆற்றுத் தும்மட்டி
ஆனைத் திப்பிலி
ஆனை நெருஞ்சில்
ஆனைப் பனங்காய்
ஆனைவணங்கி

இ

இசங்கு
இஞ்சி
இண்டு
இந்துப்பு
இம்பூரல்
இரசம்
இருசீரகம்
இரும்புப்பொடி
இருவி
இருவேலி
இலந்தை
இலவங்கம்
இலாமிச்சம் வேர்
இலுப்பைக் கட்டி
இலைக்கள்ளி
இளநீர்
இன்புறா

ஈ

ஈத்தின்னி வௌவால்
ஈயக்கொழுந்து
ஈரவெங்காயச் சாறு
ஈருள்ளி

உ

உடும்பு
உத்தமதாளி
உத்தாமணி
உப்பிலாங் கொடி
உப்பு
உருத்திராட்சம்
உலங்காரை (உத்திராட்சம்)
உவர்மண்
உழிஞை
உளுந்து
உள்ளி

ஊ

ஊமத்தை

எ

எண்ணெய்
எருக்கு
எருமுட்டை பீநாறி
எருமைத்தயிர்
எருமை நீர்
எருமை நெய்
எருமை மோர்
எலிச்செவிக்கீரை
எலிப்புழுக்கை
எலியால்
எலுமிச்சம்பழம்
எழுத்தாணிப் பூடு

ஏ

ஏரண்டைத்தைலம்
ஏலம்

ஐ

ஐந்து நிறச் சோறு
ஐந்துநிற மலர்கள்
ஐந்துப்பு

ஒ

ஒடுவடக்கி
ஒட்டகப்பால்
ஒதி

ஓ

ஓணான்
ஓதி
ஓமம்
ஓமவள்ளி
ஓரிதழ்த் தாமரை
ஓரிலைத் தாமரை

க

கசகசா
கச்சோலம்
கஞ்சா
கஞ்சாங் கோரை
கடற்பாசி
கடுகு
கடுகுரோகணி
கடுக்காய்
கட்டுக்கொடி
கணப்பூண்டு
கண்டங்கத்திரி
கண்டதிப்பிலி
கண்டு பாரங்கி
கண்வாய்ச் சிப்பி
கதம்பை
கத்தரி
கஸ்தூரி
கஸ்தூரி மஞ்சள்
கந்தகம்
கம்பிப்பிசின்
கம்மாரு வெற்றிலை
கரந்தை
கரிசலாங்கண்ணி
கரிசாலை
கரிப்பான்
கரியுப்பு
கருங்காலி
கருங்குறுவை அரிசி
கருங்கோழி
கருஞ்சீரகம்
கருடக் கிழங்கு
கருடப்பச்சை
கருநாபி
கருநெல்லி
கருநொச்சி
கருந்துளசி
கருப்புக்கட்டி
கருப்பு நெல்லரிசி
கருமுள்ளி
கருவேம்பு
கருவேலம்
கரையான்
கலக்கொழிஞ்சி
கலப்பைக் கிழங்கு
கலியாண பூசணி
கலியாண முருக்கு
கலைமான் கொம்பு

கல்நார்
கல்மதம்
கல்லாலம்
கல்லுப்பு
கவிழ்தும்பை
கழற்சி
கழுதைப்பால்
கழுதை நீர்
கழுதை விட்டை
கழுநீர்
களிப்பாக்கு
கள்ளிப்பால்
கறிமஞ்சள்
கறிமுள்ளி
கறியுப்பு
கற்கடக சிங்கி
கற்கண்டு
கற்பூரம்
கற்பூரவள்ளி
கற்றாழை

காக்கட்டான்
காக்கணான்
காக்கிணம்
காசுக்கட்டி
காடி
காட்டாத்தி
காட்டாமணக்கு
காட்டாமணக்கெண்ணெய்
காட்டு அவரை
காட்டுக் கருவாப்பட்டை
காட்டுத் துளசி
காட்டு நத்தை
காட்டுமல்லி
காட்டு மிளகு
காட்டு முல்லை
காட்டெருமைப்பால்
காண்டாமிருகத்தின் கொம்பு
காந்தம்
காப்பிக்கொட்டை
காய்ச்சுப்பால்
கார்கோல்
கார்போகரிசி
காவட்டம் புல்
காவேளை
கிச்சிலிக் கிழங்கு
கிடார நாரத்தை
கிட்டம்
கிராம்பு
கிளா
கிளுவை

கீரைகள்
கீழா நெல்லி

குங்கிலியம்
குங்குமப்பூ
குடசப்பாலை
குட்டிக்களா
குட்டிக்குமிழ்
குட்டித் தக்காளி
குட்டி விளா
குடோரி
குதம்பை
குதிரை லத்தி
குதிரை வாலி
குப்பைக்கீரை
குப்பைமேனி
குமரி
கும்மட்டி
குரோசாணி ஓமம்
குரும்பை
குருவிச்சை

குருவேர்
குழம்புப்பால்
குழிமீட்டான்
குழியானை
குறிஞ்சான்
குன்றி

கூகைநீறு
கூத்தன் குதம்பை
கூவிளைவேர்
கெருடப்பச்சை
கெளுத்தி மீன்

கேழ்வரகு

கையாந்தகரை

கொடிக்கள்ளி
கொடிவேலி
கொடுப்பை
கொட்டைக்கரந்தை
கொட்டைப்பாக்கு
கொட்டைப்பூடு
கொத்தமல்லி
கொம்பரக்கு
கொம்பு கள்ளி வேர்
கொம்புப் பாகல்
கொழிஞ்சி
கொள்ளு
கொள்ளுக்காய் நாரத்தை
கொன்றை

கோடகசாலை
கோட்டம்
கோதுமை
கோமியம்
கோரோசினை
கோரைக்கிழங்கு

கோவை
கோழி
கோழியாவாரை
கோழி முட்டை

ச

சங்கங்குப்பி
சங்கன் இலை
சங்கு
சடாமாஞ்சில்
சடைச்சி
சண்பகப்பூ
சதகுப்பை
சதுரக்கள்ளி
சத்திச்சாரணை
சத்திச்சாரம்
சந்தம்
சந்தனம்
சயந்த லவணம்
சமத்தாரம்
சம்பங்கிப்பூ
சரக்கொன்றை
சரக்கொன்றைப்புளி
சரளதேவதாரு
சர்க்கரை
சமுத்திரசோகி
சன்னராஷ்டம்
சன்னலவங்கப்பட்டை

சாட்டரணை
சாதிக்காய்
சாதிக்கோட்டம்
சாதிபத்திரி
சாதிலிங்கம்
சாத்திரபேதி
சாமையரிசி
சாம்பிராணி

சாம்பிராணிப்பூ
சாரணை
சாறடை

சிகைக்காய்
சித்தரத்தை
சித்திரமூலம்
சிப்பி
சிருங்கி
சிலந்தி நாயகன்
சிலாசத்து
சிவதை
சிவந்த நாயுருவி
சிவப்பவரை
சிவனார் வேம்பு
சிறு அம்மான் பச்சரிசி
சிறுகண்டங் கத்திரி
சிறுகளா
சிறுகாஞ்சோறி
சிறுகீரை
சிறுகுறிஞ்சா
சிறுசுண்டை
சிறு திப்பிலி
சிறு தேக்கு
சிறு நாகப்பூ
சிறு நெருஞ்சி
சிறு பயற்றம் பருப்பு
சிறுபாலை
சிறுபீளை
சிறு புள்ளடி
சிறுவழுதலை
சிற்றகத்தி
சிற்றரத்தை
சிற்றாமணக்கெண்ணெய்
சிற்றாவரை
சின்னமாசிக்காய்
சின்னமான் பச்சரிசி
சின்னி

சீதா செங்கழுநீர்
சீந்தில்
சீரகம்
சீனக்காரம்
சீனப்பாகு

சுக்கு
சுண்ணாம்பு
சுண்டை
சுரண்டை
சுரை

சூடன்
சூதம்

செங்கத்தாரி
செங்கல் தூள்
செங்கழுநீர்
செங்கொன்றை
செண்பகப்பூ
செந்தூரம்
செந்தொட்டி
செப்பு நெருஞ்சி
செம்பருத்தி
செம்பு
செம்பொன்னெரிஞ்சி
செம்முள்ளி
செருப்படி
செவியம்
செவ்வள்ளி
செவ்விளநீர்

சோம்பு
சோளச்சக்கை
சோளம்
சோற்றுப்பு

த

தகரை
தக்கோலம்
தண்டுக்கீரை
தண்ணீர் விட்டான் கிழங்கு
தரா
தருப்பை
தலைச்சுருளி
தலை மயிர்
தவசு முருங்கை
தவனகம்
தவனம்

தாமரை
தாமிரம்
தாம்பூலம்
தாய்ப்பால்
தாழை
தாளகம்
தாளி
தாளிசபத்திரி
தான்றி

திப்பிலி
திப்பிலி மூலம்
திரட்டுப்பால்
திராட்சை
திராய்
திரிகடுகு
திரிசாதம்
திரிசாதி
திரிபலை
திரிபுரத்தானிலை
திருகுக்கள்ளி
திருநீற்றுப்பச்சை

தீமுறுகற்பாடாணம்

துத்தம்
துத்தி
தும்பராட்டகம்
தும்பை
தும்மட்டி
துரிஞ்சி
துருசு
துளசி
துள்ளி
துவரம் பருப்பு

தூதுவளை
தூதுளம்பழம்

தெற்றி
தென்னை
தேக்கரைப் பொடி
தேசாவரம்
தேசி
தேற்றான்
தேள் கொடுக்கு
தேவதாரம்
தேவதாரு
தேன்

தைவேளை
தொய்யில் வேர்
தொட்டால் வாடி

ந

நஞ்சறுப்பான்
நண்டு
நண்டுவளைத் தண்ணீர்
நத்தை
நத்தைச் சூரி

நரிப்பயறு
நரி வெங்காயம்
நல்லகாவேளை
நல்ல துளசி
நல்லெண்ணெய்
நல்வேளை
நவச்சாரம்
நவரை
நறளை
நறுக்கு மூலம்
நறுந்தாளி
நறுவிலி
நற்சீரகம்
நற்பவளம்
நன்னாரி

நாட்டுச் சர்க்கரை
நாணல்
நாபி
நாயுருவி
நாய்த்துளசி
நாய்ப்பாகல்
நாய்விறகு
நாய்வேளை
நாரத்தை
நாரி
நாவல்

நிம்பக்காய்
நிலஆவரை
நிலக்குமிழ்
நிலப்பனை
நிலவாகை
நிலவிளா
நிலவேம்பு
நிலவேர்
நிலையுகரம் பட்டை

நீரடி முத்து
நீராகாரம்
நீருள்ளி
நீர்ச்சுண்டி
நீர்ப்பூலா
நீர்முள்ளி
நீர் வள்ளி
நீலி

நுணா

நெபுட்டி வேலி
நெய்
நெய்க்கொட்டான் பழம்
நெய்தல்
நெருஞ்சில்
நெல்லிக்காய்
நெல்லி முள்ளி
நெற்பொரி

நேர்வாளம்

நொச்சி

ப

பங்கம்பாளை
பசுநீர்
பசுநெய்
பசுந் தயிர்
பசுவின் பால்
பசுவின் மோர்
பசு வெண்ணெய்
பச்சரிசி
பச்சைக் கடுக்காய்
பச்சைக் கற்பூரம்
பச்சைக் காய்கறி
பஞ்ச தாரை

பஞ்ச தீபாக்கினி
பஞ்சு
படர்ந்த கள்ளி
படிகாரம்
பண்ணைக்கீரை
பண்ணை வேர்
பயிர்க் காலி
பயிறு விதைகள்
பரங்கிச் சக்கை
பருத்தி
பருப்பு
பலகரை
பலகாரம்
பலா
பலாசு
பவழம்
பழங்கிட்டம்
பழந்தண்ணீர்
பழம் பாசி
பழைய தோல்
பற்பாடகம்
பனங்கள்
பனங்கிழங்கு
பனஞ்சர்க்கரை
பனையின் சாறு
பனைவெல்லம்
பன்னீர்
பன்னீர்ப்பூ
பன்னீர்ப் பூடு

பாகல்
பாக்கு
பாடாவரை
பாதாம்
பாதிரி
பாட்பார முள்ளி

பாம்பு
பாலரசு
பாலை
பால்
பாவட்டை
பாற்சொற்றி
பானல்

பிச்சிச்சாறு
பிரண்டை
பிரமி
பிரமிய வழுக்கை
பிராய்

பீநாறி

புகையிலை
புகையூறல்
புங்கு
புங்கெண்ணெய்
புண்ணாக்கு நீர்
புதினா
புரசன்
புழுங்கல் அரிசி
புளி
புளியடலை
புளியரணைக் கிழங்கு
புளியன் விதை
புளியாரை
புற்றுச்சோறு
புனுகு
புன்னை

பூண்டு
பூத கரப்பான் பட்டை
பூநாகம்
பூநீறு

பூலா
பூவந்தி
பூவரசு
பூவன் குறத்தி
பூனைக் கோட்டம்

பெருங்களர்வா
பெருங்காஞ்சோறி
பெருங்காயம்
பெருஞ்சீரகம்
பெருந்தும்பை
பெருமரத்துப்பட்டை

பேதியுப்பு
பேய்ப்பாச் சொற்றி
பேய்ப்புடல்
பேய்ப்பீர்க்கு
பேரரத்தை
பேராமுட்டி
பேரீந்து

பொட்டிலுப்பு
பொடுதலை
பொரி
பொரித்த வெண்காரம்
பொற்றலைக் கையாந்தகரை
பொன்
பொன்முசுட்டை
பொன்னாங்காணி
பொன்னெருஞ்சில்
போஸ்தக்காய்

ம

மகிழம்பூ
மக்காச்சோளம்
மசரைமீன்
மஞ்சள்
மஞ்சணாத்தி
மஞ்சாடி
மஞ்சிட்டி
மணலிக்கீரை
மணித்தக்காளி
மணித்துளசி
மண்டூரம்
மண்புழு
மதனகாமப்பூ
மது
மயிலிறகு
மரமஞ்சள்
மருக்காரை
மருக்கொழுந்து
மருதம் சமூலம்
மருள்கிழங்கு
மலேசிய சாம்பிராணி
மலைதாங்கி வேர்த்தோல்
மல்லி
மனுப்பாலை வேர்
மனோசிலை

மா
மாசிக்காய்
மாசிபத்திரி
மாட்டுத்தோல்
மாதுளம்
மாந்தஎண்ணெய்
மாமரத்துப் புல்லுருவி
மாவிலிங்கை
மான்கொம்பு
மான் கொழுப்பு

மிதிபாகல்
மிருதார் சிங்கி
மிளகரணை
மிளகாய்ச் செடியிலை

மிளகு
மிளகுக் கொழுஞ்சி
மிளகுத் தக்காளி

மீன்

முசுமுசுக்கை
முசுறுமுட்டை
முடக்கறுத்தான்
முடக்கொத்தான்
முட்காவேளை
முட்சங்கம் வேர்
முட்டை
முட்டைப்பாசி
முதலைக் கண்டம்
முதியார் கூந்தல்
முத்தக்காசு
முத்திருக்கஞ்செவி
முத்து
முத்துச்சிப்பி
முந்திரி
முப்பால்
முயல்
முருக்கன் விதை
முருக்கு
முருங்கை
முருவல்வேர்
முள்ளலி
முள்சங்கன்
முள்ளி
முள்ளிக்கத்திரி
முள்ளிக்கள்ளி
முள்ளிலவம்பட்டை
முள்ளுக்குட்டி பிரா
முன்னை

மூக்கத்தாரி
மூக்கரைச் சாரணை
மூக்கிரட்டை
மூக்கொற்றி
மூங்கிலரிசி
மூங்கிலுப்பு
மூங்கில்தோல்

மைசாட்சி (மைசாடிதம்)

மோதகம்
மோர்

ய

யவாட்சாரம்

யானைத்திப்பிலி

ரு

ருத்திராட்சம்

ரொட்டி

லி

லிங்கம்

வ

வங்காளப்பச்சை
வசம்பு
வஞ்சி
வடகயிறு சுட்டசாம்பல்

வடலிபட்டை
வட்டக்கிலுகிலுப்பை
வட்டத்திருப்பி
வயல்நத்தை
வரகரிசி

வரட்டி
வலம்புரிக்காய்
வல்லாரை
வழுதலை
வரப்பு நண்டு
வறட் சுண்டி
வறட்டு மஞ்சள்
வறட்பூலா

வாகை
வாசகண்டதாரி
வாசப்புல்
வாதமடக்கி
வாதுமை எண்ணெய்
வாய்விடங்கம்
வாய்விளங்கம்
வாலுளுவை யரிசி
வாலேந்திர போளம்
வால்மிளகு
வாழைச்சமூலம்
வாளம்

விஷமுட்டி
விடதாரி
விட்டுணுகாந்தி
விரலி மஞ்சள்
விரிசந்தோல்
விருசம்பட்டை (நறுவிலி)
விலாமிச்சம் வேர்
விலாம்பிசின் (வெளிச்சிப் பிசின்)
வில்வம்
விழுதி
விளக்கெண்ணெய்
விளா
விளாங்காய்
விளாத்தி
விளாம்பழம்
விளாம்பிசின்
விளாவரிசி

வீழி

வெங்காயம்
வெங்காரம்
வெடியுப்பு
வெட்டிவேர்
வெட்பாலை யரிசி
வெட்பூலா
வெண்கடுகு
வெண்காரம்
வெண்ணெய்
வெண்ணொச்சி
வெண்பொரி
வெதுப்படக்கி
வெந்தயம்
வெந்தோன்றி
வெந்நீர்
வெருகங்கிழங்கு
வெல்லம்
வெள்வெங்காயம்
வெள்ளரிக்காய்
வெள்ளருகுச் சம்பா
வெள்ளாட்டின் சிறுநீர்
வெள்ளாட்டுப்பால்
வெள்ளாட்டுப் புழுக்கை
வெள்ளி
வெள்ளீயம்
வெள்ளுள்ளி
வெள்ளுள்ளித் தைலம்
வெள்ளெருக்கு
வெள்ளலி
வெள்ளைக்கருடன்
வெள்ளைக் காக்கணான்

வெள்ளைச் சாரணைவேர்
வெள்ளைச் சாறுவளை
வெள்ளைப்பூண்டு
வெற்றிலை
வெற்றிவேர்

வேப்பெண்ணெய்
வேம்பு

வேர்க்கொம்பு
வேர்ப்பலா
வேலிப்பருத்தி
வேல்

வைக்கோல்

வௌவால்

பின்னிணைப்பு - V

பாடல் முதற்குறிப் பகர முதலி

(எண், பக்க எண்)

அ

அகன்றுபோ - 333
அக்கர - 29
அக்கரஞ் - 23
அச்சரத்தின் - 30
அச்சரமென் - 17
அஞ்சனவேர் - 300, 309
அடுத்திட்ட - 67
அடைத்திட்ட - 55, 332, 395
அதிக - 37
அதிகமாய் - 341
அதிமதுர - 322
அதிமதுரம் - 27
அதிசாரக் - 309
அத்தி - 310
அத்திக்காயின் - 326
அத்திக்காய் - 24
அரிய - 304, 346
அரியரோ - 343
அருவினார் - 304
அரைத்த - 190
அரைத்ததைக் - 316
அறியக் - 31
அறையிறேன் - 86
அனலெனப் - 339
அன்றிடுங் - 27

ஆ

ஆக்கி - 150
ஆச்சப்பா - 147
ஆடாதோடை - 300
ஆடுதின்னாப் - 305
ஆட்டிய - 302
ஆட்டியே - 305, 308
ஆண்மையாய்ச் - 142
ஆண்மையில்லாத் - 230
ஆமணக் - 311
ஆதிமறை - 379
ஆமசுரத்தின் - 313
ஆமசுரத்தின் மிகுகுணம் - 313

ஆமெனவே - 303
ஆமென்ற - 230, 307
ஆர்க்குங் - 313
ஆலா - 51
ஆலாவரை - 299
ஆவாரை - 322
ஆவின்நெய் - 104
ஆற்றி - 391

இ

இஞ்சிமேற் - 403
இடநாழிகை - 305, 327
இடர்தீரு - 145
இடுமே - 82, 343
இம்பூரல் - 21
இருமலு - 25
இலந்தை - 299
இலந்தையிலை - 329
இளநீர் - 26
இறக்கியே - 108, 189
இறக்கியே கொடுத்துவிட - 108

ஈ

ஈத்திட்டா - 394
ஈந்திட்டாய் - 71, 344, 385
ஈந்திட்டா - 305
ஈந்திட்டால் - 327

உ

உச்சித - 341
உடலுங் - 29
உண்டதோ - 81
உண்டாகி - 229
உண்டைசெய்து - 308
உதட்டைக் - 315
உத்தம - 87
உந்திதனைப் - 320
உருக்குஞ் - 390
உரைக்கவே - 228, 235
உரைத்திடுமே - 151
உலகி - 18
உழக்குடனே - 333
உள்ளியைத் - 314, 327
உள்ளேதான் - 311
உற்றபுளி - 316
உற்றார் - 103

ஊ

ஊட்டவே - 72, 306, 337, 345, 386, 395
ஊது - 236
ஊறியதோர் - 303

எ

எடுத்ததனைச் - 19
எட்டுத் - 70
எட்டொன் - 38
எண்ணவே - 332
எய்தாமல் - 55, 332, 395
எய்தியதோர் - 81
என்னவென்றா - 53

ஏ

ஏகநாயகன்றன் - 84, 301, 328
ஏலாதி - 323, 393
ஏறாது - 331

ஐ

ஐயசுரத்தின் - 325

ஒ

ஒட்டாது - 342
ஒப்பான - 142
ஒருதலை - 403
ஒன்றான - 18

ஓ

ஓடவே - 336
ஓடுமே - 386
ஓடும் - 192, 391
ஓமமுடன் - 83

க

கஞ்சா - 392
கடுக்காய் - 55, 384, 385
கடுகு - 344
கடுக்காய்தான் - 336
கடந்தே - 192
கடவாயக் - 28
கட்டாக - 191
கண்டங் - 145, 190
கண்டவட்டத் - 187
கண்ணுடன் - 227
கண்ணை - 389
கண்பச்சென் - 236
கதிப்பித்துக் - 67
கபாலியது - 29
கரிசாலை - 235
கரிசலாங் - 188
கருஞ்சீ - 22
கருத்தச் - 317
கருநொச்சி - 85, 110
கருவான - 19
கருவென்ன - 34, 37
கரைத்து வார்த் - 334
கற்கடக - 188
கற்பூரம் - 324
கற்பூரம் கெந்தி - 341
கற்றாழஞ் - 144, 301, 311, 318, 329
கற்றாளஞ் - 313
கஸ்தூரி - 390
கணப்பானக் - 236
கன்னார் - 310

காசமா - 141
காச்சு - 32
காடிச் - 51
காண - 320
காணவே - 143, 319
காதுங் - 37
காதுட - 237
காத்திடும் - 150
காய்ந்திடும் - 101
காமாலை - 231
காய்ச்சி - 319, 320
காய்ச்சியதோர் - 234
காய்ச்சியே - 318
காரிவிரை - 54, 146, 300
காரியசுவங் - 54
காரைவேரும் - 191

கிட்டமுட - 233
கிட்டமுடன் 237
கிரிகையது - 38
கிளைபெரு - 101

கீரிப் - 102
கீழ்மே - 26

குட்டிவிளா - 167
குணத்தொடு - 232

குணமாகத் - 100
குணமான - 231, 321
குண்டியக் - 227
குண்டியது - 30
குப்பை - 108
குப்பைமேனிச் - 83, 193
குமரியது - 31
குரும்பையின் - 23
குருவிச் - 191, 318
குளிர்சன்னி - 385
குளிர்ச்சுரமே - 326
குளிர்ந்துபின் - 340

கூட்டங்கண் - 383
கூட்டடா - 20
கூட்டப்பா - 293
கூட்டவே - 378
கூட்டியே - 234, 321, 337
கூட்டுமுன் - 104
கூட்டுமோ - 21
கூட்டு வெள்ளைச் - 387
கூறும் - 377

கேளப்பா - 20, 337, 340, 344
கேளுங் - 102
கேளும் - 102
கேளென்ற - 231

கைதான் - 227
கையாந் - 146
கையுங் - 393

கொக்கரித்துத் - 167
கொஞ்சியும் - 101
கொடிவேலி - 385
கொடுத்திடவே - 335
கொண்டகரிப் - 31
கொண்டிடும் - 82
கொண்டெழும் - 86
கொள்ளவே - 237, 323
கொள்ளவே - 310
கொள்ளும் - 191
கொள்ளுவா - 234

கோட்டமுட - 52
கோதில்லா - 386
கோபமாஞ் - 68
கோரக்கர் - 403
கோரோ - 343
கோலதி - 36

ச

சங்கு - 83
சங்குடனே - 316
சட்டிக்கம்பி - 21
சந்தம்சித் - 28
சயித்தியமா - 81
சந்திக்கும் - 333
சன்னவெற் - 383

சாத்திரபேதி - 310
சாந்தமாம் - 320
சாப்பிடவே - 109, 377
சாரணைக்காய் - 384
சார்வான - 189
சாற்றவே - 140
சாற்றிடு - 35
சாற்றியதோ - 143
சாற்றினா - 233

சிக்கிக் - 329
சிக்கிக் கழியும் - 329
சிங்கி - 187
சிங்கியுடன் - 309

சிங்ஙவு - 32
சித்தரத்தை - 344
சிறுகளா - 391
சிறுதேக்கு - 187
சினையே - 22

சீதசுர - 325
சீதேவிப் - 315
சீந்தித் - 335
சீராக - 139
சீராரும் - 317
சீராரும் பூசனிச் - 148
சீருருக் - 32
சீர்கொண்ட - 86
சீர்சிறந்த - 393
சீறிங்கொடை - 306

சுக்கான - 189
சுக்கு - 235
சுக்குநீர் - 346
சுக்கொடு - 82
சுண்டைவேர் - 30
சுத்தி - 232
சுரமது - 328, 331, 346
சுரமுண்டாம் - 34
சுரூபமாய் - 139

சூட்டிட்டுக் - 140
சூரணத்தில் - 189
சூலியது - 33

செப்பினதோர் - 190
செப்பு - 391
செய்யவே - 143, 334, 336, 383
செய்வா - 192
செவ்வியந் - 394

சேத்துமம் - 388
சேந்த - 52
சேர்ந்த - 69
சேர்த்தொன்றாய்க் - 149
சேரும்காய் - 167
சேர்க்கவே - 318
சேர்த்திடுவாய் - 20

சொல்லிடு - 303, 322
சொல்லுங் - 190
சொன்னார் - 324

சோதியது - 34
சோபமாந்த - 68
சோருஞ் - 103
சோறுட - 51

த

தங்கிய - 69, 309
தங்கிய ஆல் - 299
தண்ணி - 388
தயவான - 317
தலையில் - 18
தவிர்த்திடவே - 234

தாமென்ற - 229
தாமேரச - 55
தாமேரசச் - 87, 323
தாரமுட - 342
தாழங் - 39
தானான - 68, 141, 231, 307, 339

திட்டான - 376
திண்ணச் - 54, 84
திப்பிலி - 22, 300
திப்பிலியும் - 70
திரிகடுகு - 56, 150
திரிபலை - 233

திரிபுரத் - 31
தினமான - 57

தீருகின்ற - 330

துணிந்துண்டை - 390
துய்க்குமனந் - 229

தூக்கிந் - 337
தூக்கியே - 299
தூதுவே - 167
தூதுவேளை - 330
தூவு - 302

தெங்குதா - 35
தெரிந்த - 149
தென்னையின் - 28, 36

தேங்காய் - 25, 193
தேங்காய்ப் - 148
தேறவே - 149
தேற்றான் - 70, 146

தோடைச் - 148, 193
தோசைப் - 347

ந

நடுக்க - 340
நயந்து கேள் - 56, 323
நல்குவீர் - 314, 382
நல்லதோர் - 28
நல்வேளை - 391
நவின்றசுர - 312
நறுவேளை - 311
நன்றான - 38

நாக்குவாய் - 24
நாட்டி - 107
நாட்டு - 145, 325
நாவி - 346
நாவுஞ் - 30

நித்தமும் - 102
நிறுத்துமே - 315, 382
நிறமுந் - 38

நீடு - 54, 70
நீதிநா - 36
நீறுடனே - 20

நெல்லியுடன் - 335, 345
நெடு - 70

நொந்தே - 32

ப

பசியது - 387
பச்சைச் - 304, 326
பச்சைமீ - 347
பச்சையுங் - 24
பஞ்ச - 311
பதனமாய் - 315, 382
பத்தியத் - 376
பத்தியந் - 390
பரிவாம் - 311
பருகவே - 227
பருகிடில்ஓர் - 304
பருத்திப் - 71
பருத்திவிதைப் - 53
பருத்திவிரைப் - 53
பலமே - 302
பழம்பாசி - 321

பாடுவோம் - 298
பாரப்பா - 18, 308

பாரில் - 311
பாரேந் - 307, 332
பாலெண்ணெய் - 347

பிசினு - 338
பிள்ளைக்குத் - 318
பிறகு - 314
பின்புகேள் - 72

புண்ணொடு - 33
புதுமையாய் - 141
புளிநுணா - 338
புள்ளடி - 303, 322

பூசிடும் - 24
பூட்டுகிறேன் - 54
பூவர - 337

பேசுங் - 71
பேசும் - 53
பேரான - 230

பொடித்திதனை - 308

போமப்பா - 342, 378
போமென்ற - 236, 312
போமே - 345
போமேய் - 335
போவதற்கு - 100
போகவே - 53, 71
போக்கிடுங் - 36
போடப்பா - 378
போட்டதொரு - 392

ம

மசரிநோய் - 104
மஞ்சடை - 102
மஞ்சணத்திப் - 85
மஞ்சளா - 228
மஞ்சளும் - 327, 386
மணித்தக் - 22
மணித்தக்கா - 236
மணித்தக்காளி - 144
மதித்தோர் - 67
மந்தத்தால் - 334
மந்தார - 141
மலமது - 333
மலமுஞ் - 315
மலையின் முனி - 56, 150
மல்லியொடு - 339
மறுக்குமே - 82

மாங்கிஷந் - 343
மாந்த - 144, 334, 393
மாந்தகணம் - 389
மாந்தமே - 390
மார்க்கமாய் - 140
மாலான - 378
மாலைசேர் - 237
மாலையா - 228
மாறுகின்ற - 19
மான்விழி - 103

மிளகுபோ - 312, 338

முடக்கொத் - 387
முத்தக் - 388
முத்தஞ் - 302
முருவிலி - 69
முலையுண்ணா - 384
முனிவோர் - 319
முனிவோர்சிற் - 319

மூக்குநீர் - 27
மூச்சும் - 394

மெய்யில் - 325
மெழுகுப் - 23

மேனி - 392

யி

யிதுவே - 146

யேலம் - 86

வ

வகுக்குங்கால் - 56, 151
வகை - 72
வகைக்கொரு - 317
வசம்புடனே - 57
வடித்தயில - 379
வட்டத் - 147
வண்மையாய்க் - 142
வல்ல - 300
வழங்குங்கால் - 306
வழுதலை - 326
வறுத்தமறு - 392
வறுத்துபொன் - 403
வன்னமென்ற - 52

வாங்கியே - 23, 109, 330, 377
வாய்க்கவே - 107, 232
வாய்க்குள் - 35
வாய்த்தவேப் - 389
வாந்தினைக் - 52
வாரப்பா - 379
வாருமே - 68
வார்க்கவே - 108
வார்செறி - 167
வாறான - 228

விடமான - 394
விடுமே - 149, 317
விட்டி - 150
விட்டிடவே - 187
விட்டிடுஞ் - 84
விட்டுணுவின் - 299
விட்டுத் - 25
விபரமாய் - 230
வில்லைப் - 321
விளங்களிஞ்சி - 307
விளம்புவேன் - 20

வெந்தயமோர் - 402
வெந்தவித் - 317
வெற்றிலைப் - 82

வைத்திடு - 26, 33

வேகமாய்ச் - 388
வேப்பெண்ணெய் - 109, 330, 377
வேலிப் - 147
வேறுசிறு - 322